Bible Streams (TAMIL)

# பைபிள் நீரோடைகள்



தேவனோடுள்ள உறவுக்கும்
அவருக்கான உழைப்புக்கும்
புத்துயிரூட்டும் அருட்செய்திகள்

R. ஸ்டான்லி

# பைபிள் நீரோடைகள்

**தேவனுடனுள்ள உறவுக்கும்**
**அவருக்கான உழைப்புக்கும்**
**புத்துயிரூட்டும் அருட்செய்திகள்**


**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

R. Stanley
13 Church Colony
Vellore 632 006, India
*<stanleyonbible@hotmail.com>*



**BIBLE STREAMS** (Tamil)



Copyright 2021 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006
Tamilnadu, India
*00 91 98437 07600*
*00 91 98430 11943*



முதல் பதிப்பு: ஜூலை 2021

ஆங்கிலத்திலும் உண்டு.

*தட்டெழுத்து & பக்க வடிவமைப்பு:*
K. குணசேகரன்
ஓய்வு பெற்ற மிஷனரி
ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM)

*அச்சுப்பிழை திருத்தம்:*
லினெட்டா சம்பத்குமார், M. மரியஜோசப்,
S. கனிஷ்டன், ஜெசிந்தா ஆபிரகாம்,
மனோரம்யா வில்சன்

*அச்சடிப்பு:* New Shenbagam Offset, Sivakasi


இப்புத்தகத்தைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ முழுமையாக stanleyonbible.com என்ற ஆசிரியரது இணையதளத்திலிருந்து இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

# அர்ப்பணிப்பு

## Rev. J. டேவிட் பாசன்

(1930-2020)

அவர்களது நினைவுக்கு!



இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்ததொரு தலைசிறந்த திருமறைப் போதகராகிய இவரை நான் 1992இல் சந்தித்தது முதல் அவருடன் ஏற்பட்ட நட்பும் ஐக்கியமும் எனது திருமறைப் போதகப்பணியை வெகுவாய் ஊக்குவித்துள்ளன. *Bible Treasures* என்ற எனது 832-பக்க நூலை இவர் தனது வெளியிட்டாளர் மூலம் இங்கிலாந்திலேயே மறு பதிப்பு செய்தார். ஆசிய எழுத்தாளர் ஒருவரைப் பாராட்டியதொரு அபூர்வ ஆங்கிலேயர்!

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | பைபிள் நீரோடைகள் | ... | 7 |
| 1. | ''காதுள்ளவன் கேட்கட்டும்!'' | ... | 16 |
| 2. | நடுங்கும் கிறிஸ்தவன் | ... | 51 |
| 3. | நான் மாய்மாலக்காரனா? | ... | 74 |
| 4. | இருதய அறுவை சிகிச்சை | ... | 91 |
| 5. | எனது பலவீனங்கள் | ... | 110 |
| 6. | பிறந்த நாள் பாக்கியம் | ... | 129 |
| 7. | யார் குருடன்? | ... | 149 |
| 8. | ''20/20 கண் பார்வை'' | ... | 156 |
| 9. | பொன் விழா | ... | 169 |
| 10. | ஊழியங்களில் பொருளாதார நெருக்கடி | ... | 185 |
| 11. | தேவ மனிதரே இன்றையத் தேவை! | ... | 211 |
| 12. | பில்லி கிரஹாம்: ஒரு தேவ மனிதன் | ... | 215 |
| 13. | கிரஹாம் ஸ்டெயின்ஸ்: மரித்தும் பேசுகிறார்! | ... | 229 |
| 14. | அடுத்தது யாரோ? | ... | 251 |
| 15. | திருச்சபையின் இன்றையத் தேவை | ... | 269 |
| 16. | புத்தாண்டுத் தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும் | ... | 273 |
| 17. | இருமொழி வேதாகமங்கள் | ... | 293 |
| 18. | உயிர்த்தெழுந்தார்! உன்னதமேறினார்! இடையில்? | ... | 313 |
| 19. | முதலாம் வருகையும் இரண்டாம் வருகையும் | ... | 335 |
| 20. | உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா? | ... | 355 |

# பைபிள் நீரோடைகள்

கிறிஸ்தவ வாழ்வு என்பது தேங்கிய தண்ணீருள்ள குளமோ குட்டையோ அல்ல. மாறாக, அது ஒரு நதி. அது ஒரு நீரோடை. அது ஓர் ஊற்று. அது உயிர் என்பதால் அசையாது நிற்காது. ஒருவர் சொன்னது: ''இன்றையக் கிறிஸ்தவர்கள் மூன்று கட்டங்கள் வழியே செல்கின்றனர்: இரட்சிப்பு, திருப்தி, தேக்கம்.'' Salvation, Satisfaction and Stagnation! முன்சென்றுகொண்டேயிருப்பது கிறிஸ்தவ வாழ்வில் அடிப்படையானது. அது பைபிளில் பல இடங்களில் ஓடும் தண்ணீர் எனச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு கட்டுரையும் உங்களை நகர்த்திவிடும். நீங்கள் சவால் பெற்றுச் செயலாற்ற உந்தப்படுவீர்கள். இன்னும் ஆழமாய்ப் போகவும், உயரங்களை எட்டவும் அகத்தூண்டுதலடைவீர்கள். நாற்றமெடுக்கும் அத்தனையையும் வாழ்விலிருந்து அகற்றிவிட உணர்த்தப்படுவீர்கள். இன்னும் விரைவாய் ஓடும்படி பளுவானவற்றைத் தூக்கியெறிந்துவிடுவீர்கள். இறையரசிற்காய் இன்னும் செய்யப்படவேண்டியதைவிட நீங்கள் இதுவரை செய்துள்ளது மிக மிகச் சொற்பம் என்பதை உணருவீர்கள்.



அடுத்து வரும் அத்தியாயங்களை வாசிக்குமுன், நதிகள் மற்றும் நீரோடைகள் குறித்த சில திருமறைப் பகுதிகளை ஓர் ஆயத்தமாய்க் கவனிப்போம் —

☐ எனக்கு அதிகப் பிரியமான வசனங்களில் ஒன்று சங்கீதம் 46:4,5, ''ஒரு நதி உண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனது நகரையும், உன்னதமானவர் தங்கியிருக்கும் புனிதத்தலத்தையும் மகிழ்விக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையில் தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.'' துக்கம் நிறைந்த இவ்வுலகில் தமது மக்களை ஆனந்தமாய்க் காத்துக்கொள்ளும் தேவனது நிலையான பிரசன்னத்தையே இங்கு நதியும் நீர்க்கால்களும் குறிப்பிடுகின்றன. பாடுகள் மற்றும் சோதனைகளினால் அவர்கள் அசைந்துவிடாது அவர்களை அவர் காத்துக்கொள்கிறார் (வச 5அ). ஒவ்வொரு நாளின் ''அதிகாலையும்'' இறைமக்களுக்குப் புதியதும் போதுமானதுமான கிருபையைச் சகாயமாய்க் கொண்டுவருகிறது (வச 5ஆ). நீதியின் சூரியனானவரது கதிரொளி அவர்களது வாழ்விலிருந்து துக்கமெனும் இருட்டை விரட்டிவிடுகிறது. அவர்கள் முன்சென்றுகொண்டே இருப்பர், வளர்ந்து கொண்டே இருப்பர்! தேவனது ஆரோக்கியச் செட்டைகள் அவர்கள் மீது விரிக்கப்பட்டிருக்கும்! (மல் 4:2).

☐ பைபிளின் முதல் பக்கங்களிலேயே ஒரு நதி குறித்து வாசிக்கிறோம். தேவனே அமைத்திருந்த தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஏதேனிலிருந்த நதியே அது (ஆதி 2:8,10). அது நான்கு பெரிய ஆறுகளாய்ப் பிரிந்தது. அவற்றின் பெயர்: பைசோன், கீகோன், இதெக்கேல், ஐபிராத்து. முதலாம் ஆறு பாய்ந்தோடும் நாட்டில் ''பசும்பொன்'' விளைந்தது; அங்கு ''வண்ண மணிக்கற்களும்'' உண்டு (வச 11,12). பைபிளின் இறுதிப்பக்கங்களில் இன்னொரு நதியைப் பார்க்கிறோம். அது ''பளிங்குபோல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி'' எனப்படுகிறது (வெளி 22:1). அது தேவனானவரும் ஆட்டுக்குட்டியானவரும் அமர்ந்திருக்கும் சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. ஏதேன் தோட்டத்தில் இருந்தது போலவே, இந்த நதியின் இரு கரைகளிலும் மாதந்தோறும் பன்னிரு விதமான கனி

களைத் தரும் ''வாழ்வு தரும் மரம்'' இருக்கிறது. அம்மரத்தின் இலைகளும் மக்களது ஆரோக்கியத்திற்கு உதவும் (வச 2). அறிவு தரும் மரத்திலிருந்து பறிப்பதற்குப் பதிலாக வாழ்வு தரும் மரத்திலிருந்து மனிதன் பறித்திருப்பானானால்! விலக்கப்படாததை விலக்கிவிட்டு, விலக்கப்பட்டதில் விழுந்துவிட்டானே! இந்நதியின் தண்ணீர் ''ஜீவத் தண்ணீர்'' என்றழைக்கப்படுகிறது (வச 17). இந்நதியில் பருகுவதற்கான திறந்த அழைப்பை ஏற்றுக்கொள்வோர் பாக்கியசாலிகள் (வச 17).

☐ வாழ்வின் சிற்றின்பங்களையும் துராசைகளையும் நாடியலையும் மனுக்குலத்தின் தாகத்தினைச் சமாரியப் பெண்மணியின் சரிதை சுட்டிக்காட்டுகிறது (யோ 4). மக்களுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பதோடு நிறுத்தாது, நித்திய வாழ்வுக்கு வழிநடத்தும் நீரூற்று ஒன்றையே அவர்களது உள்ளத்தில் வைத்துவிடும் இயேசுவிடம் அவர்கள் வரும்வரை இந்தத் தாகம் தணியாது (வச 13,14). துர்ப்பாக்கியமாக, மலையிலிருந்து ஓடிவரும் ''லீபனோனின் உறைபனி நீரை'' மறந்துவிட்டு, ''அந்நிய தண்ணீர்களை'' இறைமக்களாகிய நாம் தேடிச் சென்றுவிடுகிறோம் (எரே 18:14). இதனை ''மிகவும் திடுக்கிடும் செயல்'' என்றழைக்கிறார் கர்த்தர் (வச 13ஆ). இறையாசனத்தின்முன் அமர்ந்திருந்து நமது காரியங்களுக்காய் அவர் சித்தம் அறிய நாடாது, ''நமது சொந்த விருப்பங்களைச்'' சார்ந்திருப்பதையே இது குறிப்பிடுகிறது (வச 12). மாற்றுக்களாலேயே இன்றையக் கிறிஸ்தவம் நிறைந்திருக்கிறது. தனித்து ஜெபிப்பதைவிட ஜெபக்கூடுகைகள். நேரமெடுத்துக் கிரமமாய்த் திருமறையைத் தியானித்துப் படிப்பதைவிட கூட்டம் கூட்டம் என்று அலைதல். ஆத்துமாதாயத்திலும் நற்செய்தியறிவிப்பிலும் நேரடி ஈடுபாடு கொள்ளாது இறைப்பணிக்குக் காணிக்கை கொடுத்துவிடுதல். நமது வளர்ச்சி தடைப்பட்டுக் கிடப்பதில் ஆச்சரியமென்ன? தேவ வசனத்திலிருந்து புதிய வெளிப்பாடுகள் வருவது நின்றுபோயிற்று. தூயாவியானவரின் நடத்துதல் தெளிவாக இல்லை. கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியை இழந்துவிட்டோம். ஆரம்பகாலத் தாகத்துடன் தேவனிடம் திரும்பிவருவதொன்றே ஜீவ நதியுடன் மறுபடி இணைக்கப்பட ஒரே வழி.



☐ அது யூதர்களின் கூடாரப் பண்டிகைக் காலம் (யோ 7:2). அதற்கு ஏழு நாள் கொண்டாட்டம் உண்டு (லேவி 23:34-36). பண்டிகை பாதி முடிந்திருந்த வேளையில் வேண்டுமென்றே இயேசுவானவர் தேவாலயத்திற்குள் நுழைந்தார் (யோ 7:14). தமது பிதாவானவரின் உபதேசத்தைப் பண்டிகைக் கொண்டாட்டத்தினருக்குப் போதிக்கத் தொடங்கினார் (வச 16). யூதருக்கோ அது செரிக்க முடியாத உபதேசமாயிருந்தது. ஏழாம் நாளாகிய பண்டிகையின் கடைசி நாள்தான் ''பிரதான நாள்'' எனப்பட்டது (வச 37). புதிய உடன்படிக்கையின் மகிமையான சத்தியமொன்றை எடுத்துரைக்க இதுவே பொருத்தமான நேரம். இயேசு ''எழுந்து'' நின்றார், மற்றும் ''சத்தமிட்டுக்'' கூறினார் என்று யோவான் பதிவிடுகிறார். அவர் கூறிய செய்தி இதோ: ''தாகமாயிருப்பவன் என்னிடம் வந்து பருகட்டும். என்னிடம் விசுவாசமாயிருக்கிறவனது உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்'' (வச 37,38). பரிசுத்த ஆவியானவரையே அவர் இங்கு குறிப்பிட்டார் (வச 39). விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவரது வாழ்விலும் ஒரே முறை நடைபெறும் சம்பவமாக அல்ல, தொடர்ந்தேர்ச்சியான அனுபவமாகவே இதனைப் புரிந்துகொள்ளவேண்டும். ''ஆவியினால் நிறைந்துகொண்டேயிருங்கள்'' என்பதே எபேசியர் 5:18இன் சரியான மொழியாக்கம்.

☐ இயேசுவானவரிடம் நாம் நெருங்கி நெருங்கி வந்து, தூயாவியானவரை அதிகமதிகமாய்ப் பருகிக்கொண்டிருந்தால் நமது இதயத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டுப் பாய்ந்துகொண்டேயிருக்கும். எதற்காக? வெற்று அறிவு மற்றும் வறட்டு மார்க்கம் எனும் பாலைவனத்தில் வாடும் நமது சகமனிதரின் வறண்ட இதயங்களைச் செழிப்பிக்கவே. இறுதிக்கால அருள்மாரியை முன்னுரைத்த தீர்க்கன் யோவேல் தனது புத்தக முடிவில் குறிப்பிடுவது: ''அந்நாளில் மலைகள் இனிய, புதிய இரசத்தைப் பொழியும்; குன்றுகளிலிருந்து பால் வழிந்தோடும்; யூதாவின் நீரோடைகளிலெல்லாம் தண்ணீர் நிரம்பி வழியும்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து நீரூற்று ஒன்று கிளம்பும்'' (யோவேல் 3:18). புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவ வாழ்க்கையை இது எவ்வளவு அழகாய் வர்ணிக்கிறது! ''மான்கள் நீரோடைகளுக்காக ஏங்கித்

தவிப்பதுபோல'' ஜீவனுள்ள தேவன்மீது நாம் தாகமாயிருக்கவேண்டும் (சங் 42:1,2). இறைப்பிரசன்னத்திற்கு வந்துவிடத் துடிக்கவேண்டும் (வச 2). இன்னொரு திருவாக்கைப் பார்ப்போம்: ஏசா 44:3,4, ''தாக முள்ளவன்மீது தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மீது ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததிமீது என் ஆவியையும், உன் வழித்தோன்றல் கள்மீது என் ஆசீர்வாதத்தையும் பொழிவேன்; அவர்கள் நீரோடை அருகிலுள்ள புல்லைப் போலவும் நாணல்களைப் போலவும் செழித்து வளருவர்.''

☐ நமது தியானப் பழக்கங்களில் அதிமுக்கியமானது திருவச னத்துடன் அவசரப்படாது நேரம் செலவழிப்பதே. பைபிளில் தியானக் கருத்து நிறைந்த புத்தகம் சங்கீதங்கள்தான். முதலாம் சங்கீதமே எவ்விதத் திருவாக்குடன் தொடங்குகிறது பாருங்கள்: ''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதில் தியானமாயிருப் பவன் பாக்கியவான். அவன் நீரோடைகள் ஓரம் நடப்பட்டு, பருவ காலத்தில் கனி தந்து, என்றும் பசுமையாயிருக்கும் மரம் போலிருப் பான்; அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான்'' (சங் 1:1-3). வீணான தொலைபேசி உரையாடல்களிலும் ஒரு காசும் பெறாத வாட்ஸ்அப் செய்திகளிலும் நேரம் வீணடிப்பதை நிறுத்தாவிட்டால் இது சாத்தியமாகாது (வச 1).

நீங்கள் ஒருவேளை ஆன்மீக வறட்சி மற்றும் உற்சாகமின்மை என்ற நிலையில் இருக்கலாம். விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் நீங்கள் உரிமை கொண்டாடக்கூடிய சில இறைவாக்குகள் இதோ —

- சங்கீதம் 107:35, ''ஆண்டவர் பாலை நிலத்தை நீர்த்தடாகமாக மாற்றுகிறார்; வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகச் செய்கிறார்.''

- தேவ பயம் முழுவதுமாய் அகன்று பாறைபோல் உங்கள் இருதயம் கடினப்பட்டுப் போய்விட்டதாக நீங்கள் உணரலாம். நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள்; ஏனெனில், ''தேவன் பாறையைத் தண்ணீர்த் தடாகம் ஆக்குகிறார்; கற்பாறையை வற்றாத நீரூற்றுகளாக மாற்று கிறார்'' (சங் 114:7,8; 105:41).



- ஏசாயா 41:18, ''உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும் பள்ளத் தாக்குகளின் நடுவில் ஊற்றுக்களையும் திறந்து, பாலைவனத் தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலத்தை நீர்க்கேணிகளும் ஆக்குவேன்.''

- ஏசாயா 35:6ஆ,7, ''பாலை நிலத்தில் நீரூற்றுகள் பீறிட்டு எழும்; வறண்ட நிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும். கனல் கக்கும் மணல் பரப்பு நீர்த் தடாகம் ஆகும்.''

எழுப்புதல் மற்றும் ஆதிநிலையேகுதலுக்கடுத்த ஆசீர்வாதங் களைத் திருமறையானது நதிகள், நீரோடைகள், நீரூற்றுகள் போன்ற வற்றின் மூலமாகவே சித்தரிக்கிறது —

1) நீங்கள் இரட்சிப்பின் **சந்தோஷத்தை** இழந்திருக்கிறீர்களா? தாவீதுடன் சேர்ந்து நீங்கள் பாடவேண்டியது: ''தேவரீர் மண்ணுலகை விசாரித்து, அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவ நதி யினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர் ... ஆண்டினை உமது நலத்தால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகின்றன; பாலை நிலத்தில் மேய்ச்சல் நிலங்கள் செழுமை பொங்குகின்றன; குன்றுகள் *அக்களிப்பை* இடைக்கச்சையாய் அணிந்துள்ளன. புல் வெளிகள் மந்தைகளை ஆடையெனக் கொண்டுள்ளன; பள்ளத்தாக்கு கள் தானியங்களால் தங்களைப் போர்த்திக்கொண்டுள்ளன; அவற்றில் எங்கும் *ஆரவாரம்!* எம்மருங்கும் இன்னிசை!'' (சங் 65:9-13; எரே 31:9).

2) **சமாதானத்தை** இழந்துவிட்டீர்களா? தேவனுக்கு எங்கே வேண்டுமென்றே கீழ்ப்படியாது போனீர்கள் என்று கண்டுபிடியுங்கள். ஆண்டவர் தரும் வாக்கு இதோ: ''ஆ, என் கற்பனைகளைக் கவனித் தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் *சமாதானம்* நதி போலவும், உன் நீதி கடலின் அலைகள் போலவும் இருக்கும்'' (ஏசா 48:18). இன்னும் பாருங்கள்: ''கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் *சமாதானத்தை* ஒரு நதி போலவும் பிறவினத்தாரின்

செல்வத்தைப் புரண்டு ஓடும் ஆறு போலவும் அவளிடம் பாயச் செய்வேன்'' (66:12). நம்மெல்லாருக்கும் பிரியமான 23ஆம் சங்கீதம் நமது நல் மேய்ப்பர் நம்மை ''அமர்ந்த தண்ணீர்கள்'' அருகில் கொண்டு போகிறார் என்கிறது. இது தேங்கிய தண்ணீர் அல்ல; மாறாக, தெளிந்த, அமைதியான, கலங்குதல் இல்லாத தண்ணீர். பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் ஆடுகள் தண்ணீர் குடிக்காது!

3) உங்கள் வாழ்வில் கர்த்தரது **நடத்துதல்** இல்லாது போய்விட்டது என உணருகிறீர்களா? தமது மக்களுக்கு அவர் தரும் வாக்கு இதோ: ''அவர்கள் பசியடையார்; தாகமுறார்; வெப்பக் காற்றோ, வெயிலோ அவர்களை வாட்டுவதில்லை. ஏனெனில், அவர்கள்மீது கருணை காட்டுபவர் அவர்களை நடத்திச் செல்வார்; அவர் அவர்களை நீரூற்றுகள் அருகில் *வழிநடத்துவார்''* (ஏசா 49;10).

4) ஆன்மீகப் **பஞ்சம்** உங்களை வாட்டுகிறதா? உங்கள் பலம் குறைந்துகொண்டே போகிறது என்று உணருகிறீர்களா? தேவன் உங்களுக்காய் என்ன செய்ய முடியும் என்பதை விசுவாசித்து அவர்மீது நம்பிக்கையாயிருங்கள். தேவனது பிள்ளைகளைக் குறித்துத் தாவீது சொன்னது: ''உமது இல்லத்தின் *செழுமையால்* அவர்கள் நிறைவு பெறுகின்றனர்; உமது பேரின்ப நீரோடையில் அவர்களது தாகத்தைத் தணிக்கிறீர். ஏனெனில், வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது; உமது ஒளியால் யாமும் ஒளி பெறுகின்றோம்'' (சங் 36:8,9).

5) உங்கள் வாழ்வு **கனியற்றிருக்கிறது** என்று கவலைப்படுகிறீர்களா? உங்களது ஊழிய முயற்சிகள் பயனற்றிருக்கின்றன என்ற விரக்தி உங்களை வாட்டுகிறதா? கனியற்ற காலங்கள் எனத் தோன்றும் வேளைகளில் என்னை உற்சாகப்படுத்திய ஓர் இறைவாக்கு இதோ: எரே 17:7,8, ''கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தரையே தனது நம்பிக்கையாய்க் கொண்டுள்ள மனிதன் பாக்கியவான். அவன் தண்ணீர் அருகே நடப்பட்டதும், கால்வாய் ஓரமாய்த் தன் வேர்களை விடுகிற



தும், வெப்பத்தைக் காணாது இலைகள் பச்சையாயிருக்கிறதும், மழை பொய்த்துப்போன ஆண்டிலும் கவலையின்றித் தவறாது *கனி* கொடுக்கும் மரம் போல இருப்பான்.''

6) உங்கள் வாழ்விலும் ஊழியத்திலும் ஏற்பட்டுள்ள **தோல்விகளால்** மனம் துவண்டுபோயிருக்கிறீர்களா? கானான் என்பது பரலோகத்தையே குறிக்கிறது என்று கருதுவதுண்டு. இல்லவே இல்லை! அது இப்பூவுலகில் வெற்றியாய் வாழ்வதையே சித்தரிக்கிறது. கானான் நாட்டில் யுத்தங்களும் போராட்டங்களும் இல்லையா? அப்படியொன்றும் பரலோகில் கிடையாதே! கானானை மோசே எவ்விதம் விளக்கினார் பாருங்கள்: உபா 8:7,8, ''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை வளமிகு நாட்டுக்கு அழைத்துச் செல்கிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படும் ஆறுகளும், ஊற்றுகளும், ஏரிகளும் நிறைந்த நாடு அது. *கோதுமையும், பார்லியும், திராட்சைச் செடிகளும், மாதளம் மரங்களும்* நிறைந்த நாடு; அது *ஒலிவ எண்ணெயும், தேனும்* நிறைந்த நாடு.'' தேவனது பிள்ளைகளுக்கு எந்தத் தோல்வியும் இறுதியானதல்ல. உங்கள் தோல்விகளிலிருந்து பாடங்கள் கற்றுக்கொண்டு, எழுந்து முன்செல்லுங்கள்.

7) **இருள் நிறைந்த கடந்த காலம்** உங்கள் மனதை வாட்டு கிறதா? தொய்ந்துகொண்டிருக்கும் உங்கள் இருதயத்தை உயிர்ப்பிக்க வரும் தெளிவான இறைவார்த்தை இதோ: ஏசா 43:18-21, ''முன்பு நடந்தவற்றை மறந்துவிடுங்கள்; முற்கால நிகழ்வுகளைச் சிந்திக்காதிருங்கள்; இதோ, நான் புதிய காரியம் ஒன்று செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றுகிறது; நீங்கள் அதைக் கவனிக்கவில்லையா? பாலை நிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன்; பாழ் வெளியில் நீரோடைகளைத் தோன்றச்செய்வேன் ... நான் தெரிந்துகொண்ட என் மக்களது தாகம் தீரும். இந்த மக்களை எனக்கென்று உருவாக்கினேன்; இவர்கள் என் துதி பாடுவர்!'' ஆம், நமக்காக மலையிலிருந்து ''எண்ணெய் ஆறாய்ப்'' பாயச் செய்ய சர்வ வல்ல தேவனால் முடியும் (யோபு 29:5,6).

பிரியமானவர்களே, நமது சின்னச் சின்ன ஆசைகளைத் தூக்கி யெறிந்துவிட்டு, தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்ப் போம், அவருக்காய்ப் பெரிய காரியங்களைச் செய்ய முயன்றிடு வோம்! காலேப் தாத்தாவும், அவரது மகள் அக்சாள் அக்காவும் நமக்கு முன் சவால்நிறை எடுத்துக்காட்டுகளாய் நிற்கின்றனர். ''இந்த மலை நாட்டை எனக்குத் தாரும்'' என்று யோசுவாவிடம் காலேப் கேட்டார் (யோசு 14:12). ''எனக்கு நீரூற்றுகளைத் தாரும்'' என்று காலேபிடம் அக்சாள் கேட்டார் (15:19).

கிறிஸ்தவ வாழ்வில் தேக்கம் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் திருப்தியே என்று முன்னர் குறிப்பிட்டேன். தீர்க்கன் எசேக்கியேலுக்குக் கிடைத்த தரிசனம் நாம் முன்சென்றுகொண்டே இருக்கவேண்டும் என்பதற்கு நம்மைக் கட்டாயப்படுத்தி இழுக்கும் அழைப்பாகும். ஆலயத்திலிருந்து புறப்பட்டு வந்த நதி ஒன்றை அவர் பார்த்ததை எசேக்கியேல் 47இல் வாசிக்கிறோம். முதலாவது அவர் ''கணுக்கால்'' அளவு தண்ணீருக்குள் அழைத்துச் செல்லப்பட்டார் (வச 3). மேலும் ஆயிரம் முழம் முன்சென்றபோது தண்ணீர் ''முழங்கால்'' அளவுக்கு இருந்தது (வச 4). அடுத்த ஆயிரம் முழத்தில் தண்ணீர் ''இடுப்பளவு'' இருந்தது (வச 4). அடுத்து ஆயிரம் முழம் கடந்து சென்றபோது, அவரால் நடக்க முடியவில்லை, ''நீந்த'' வேண்டியிருந்தது (வச 5). நம்மில் பெரும்பாலானோர் கணுக்காலளவிலேயே திருப்தியடைந்து விடுகிறோம். அங்கே நின்றுவிடாதீர்கள்; முழங்காலளவிற்கும், இடுப்பள விற்கும், நீச்சலாழத்திற்கும் கடந்து செல்லுங்கள்! இந்த நதியானது உங்கள் வாழ்விலுள்ள உப்புத் தண்ணீரைத் தித்திப்பாய் மாற்றி விடும். உங்களது கூடைகளை மீன்களாலும் பழங்களாலும் நிரப்பி விடும் (வச 9-12).

இப்புத்தகத்திலுள்ள 20 அத்தியாயங்களும் ஒரே கருத்தை மைய மாய்க் கொண்டு அதனை விளக்குபவை அல்ல, மாறாக, ஒவ்வொரு அத்தியாயமும் தேவனோடுள்ள உங்கள் நடையிலும், அவருக்கான உங்கள் பணியிலும் உங்களை உயிர்ப்பித்து, புதுப்பித்து, உங்களுக்கு மெருகேற்றும். மொத்தத்தில் தேவ நதியின் நீரோடைகளில் நீங்கள் நீராடி, புதுப் பொலிவுடன் வெளிவருவீர்கள். எனவேதான் இப்புத்த கத்திற்குத் தரப்பட்டுள்ள தலைப்பு, *பைபிள் நீரோடைகள்!*



# 1

# ''காதுள்ளவன் கேட்கட்டும்!''

"Ears to hear"

திருவிவிலியம் கிறிஸ்துவை மையமாய்க்கொண்டது (Christo-centric). நாம் கிறிஸ்துவை மையமாய்க் கொண்டு வாழவேண்டும் என் பதே அது தரும் செய்தி (கொலோ 1:18). கிறிஸ்துவை மையமாய்க் கொள்ளவேண்டும் என்ற பிரசங்கங்கள் நமது காதுகளில் ஒலித்தபோது, அவை நமக்குப் புரியவுமில்லை, நாம் அதற்கான முயற்சி எடுக்கவு மில்லை. இப்பொழுதோ (2020), நாம் கரோனாவை மையப்படுத்திய வர்களான பின்னர், கிறிஸ்துவை மையப்படுத்துவது என்றால் என்ன என்று புரிந்துவிட்டதல்லவா? சிந்தனைகள், சொற்கள், செயல்கள் யாவுமே கரோனா, கரோனா! நமக்கு இன்றிருக்கும் கரோனா-சிந்தை போல என்றும் கிறிஸ்து-சிந்தை இருக்குமானால் ...!

கிறிஸ்து தம்மைத் திராட்சைச்செடிக்கும், நம்மைக் கொடிகளுக்கும் ஒப்புமைப்படுத்தியதுபோல வேறெதுவும் கிறிஸ்துவை மையமாய்க் கொள்ளுதலைச் சித்தரிக்க முடியாது (யோ 15). இந்த அத்தியாயத் தில்தான் நாம் அவரது ''தொண்டர்'' என்றல்ல, ''தோழர்'' என்ற நெருக்கவுறவை வெளிப்படுத்துகிறார் (வச 15). இவ்வத்தியாயம்

முழுவதிலும் நாம் அவரோடு ‘‘ஒட்டியிருக்க’’ வேண்டும் என அழைப்பு விடுக்கிறார் (வச 4,5,6,7,10). அவருடன் நாம் ஒட்டியிருப்பது என்றால் அவரது ‘‘வார்த்தைகள்’’ நம்மில் ஒன்றித்துவிடுவதாம் (வச 7). அவரது வார்த்தைகள் நம்மில் ஒன்றித்திருப்பது என்றால் நாம் அவற்றிலேயே ஊறிக்கிடப்பதாம். திருப்பாடகனின் வார்த்தைகளில் சொன்னால், ‘‘ஆண்டவரே, உமது வேதத்தில் நான் எவ்வளவு காதல் கொண்டுள்ளேன்! நாள் முழுவதும் அதுவே என் சிந்தனை’’ (சங் 119:97). அல்லது, யோபுவின் வார்த்தைகளில், ‘‘சாப்பிடுகிறேனோ இல்லையோ, உன்னதரின் உதடுகள் உதிர்ப்பவையே எனக்கு உணவு’’ (யோபு 23:12).

இயேசுவானவர் பேசிய அத்தனையும் நூற்றுக்கு நூறு சத்தியம். மனுவுடலில் வந்த திருவார்த்தையாகிய அவர் சத்தியத்தினால் நிறைந்திருந்தார் (யோ 1:14,17). ‘‘நானே சத்தியம்’’ என்றார் (14:6). அவரது பேச்சில் அவரை மடக்க முயன்றவர்களும் சொன்னது: ‘‘போதகரே, நீர் சத்தியமுள்ளவர் என்றறிவோம்; இறைநெறியைச் சத்தியமாய்க் கற்பிக்கிறீர்’’ (மத் 22:15,16). அவர் தமது பூவுலகப் பணிக்காலத்தில் பிரசங்கித்தவற்றிலும் போதித்தவற்றிலும், இது அதைவிட முக்கியம், இது அவ்வளவு முக்கியமல்ல என்றெல்லாம் பிரிக்கவே முடியாது (மத் 5:17-19). ஆனாலும், அவர் கூறிய சில காரியங்களுக்கு, ‘‘மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ என்று கூட்டிக் கொண்டார். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தி நூல்களில் இதோ சில எடுத்துக்காட்டுகள் (மத் 11:11; மாற் 11:23; லூக் 13:35). யோவான் எழுதிய சுவிசேஷத்திலோ, ‘‘மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ என்று இன்னும் அழுத்தம் தருகிறார் (யோ 1:51; 5:19; முதலியன). வேதாகமச் சொல்லகராதி ஒன்றின் உதவிகொண்டு இவ்வித வசனங்களையெல்லாம் வரிசைப்படுத்தித் தியானியுங்கள். பெரும் பயனடைவீர்கள்.

‘‘மெய்யாகவே, மெய்யாகவே’’ என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியதோடு, இன்னும் கூடுதல் அழுத்தத்திற்காய் ஆண்டவர் கூறிய இன்னொரு சொற்றொடர்: ***‘‘கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்.’’*** இதை ஒரு கூற்றிற்கு முன்னதாக அல்லது அதையடுத்துச் சொல்லுவார். பைபிளில் ஏழு இடங்களில் இதனை அதிகாரத்துடன் கூறியுள்ளார். இவற்றையே இங்கு நமது தியானத்திற்காய் எடுத்துக் கொண்டுள்ளேன். இக்கடைசிக் காலத்தில் தமது மகன் மூலமாய்த் தேவன் நம்முடன் பேசுகிறார் (எபி 1:1,2). அவரது செய்தியை உன்னிப்பாய்க் கவனிப்போம். இந்த வியாக்கியானக் கட்டுரையை (expository article) ஒரேயடியாய் வாசிப்பதற்குப் பதிலாகப் பகுதி பகுதியாக இடைவேளை விட்டு நிதானமாய்த் தியானிக்க உங்களை அறிவுறுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள சத்தியங்களில் சில உங்களுக்குத் துவக்கப் பாடங்கள் போலத் தோன்றலாம். அப்படி நினைத்துக் கடந்துசென்று விடாதீர்கள்; ஏனெனில் அடித்தளங்களும் ஆடும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் (சங் 11:3).

## 1) மாற்கு 7:16 தனிவாழ்வில் தூய்மை

*‘‘கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!’’*

இயேசுவின் இவ்வார்த்தைகள் எச்சூழலில் சொல்லப்பட்டவை என்றறிய வசனங்கள் 14-23ஐ வாசியுங்கள். மனிதனின் இருதயத்திற்கும் வயிற்றிற்கும் உள்ள வேறுபாட்டினை அவர் குறிப்பிட்டுக்கொண்டிருந்தார். ‘‘வெளியேயிருந்து மனிதனுக்குள் செல்வது எதுவும் அவனைத் தீட்டுப்படுத்தாது; அவனது உள்ளிலிருந்து வெளிவருபவையே அவனைத் தீட்டுப்படுத்தும்’’ (வச 15). மனிதனின் உள்ளத்திலிருந்து வெளிவரும் காரியங்களைத் ‘‘தீயவை’’ என்று ஆண்டவர் வரிசைப் படுத்துகிறார்: வச 21,22, ‘‘தீய எண்ணங்கள், விபசாரங்கள், வேசித்தனங்கள், கொலைகள், களவுகள், பொருளாசை, துஷ்டத்தனங்கள், வஞ்சகம், காமவெறி, பொறாமை, தூஷணம், பெருமை மற்றும் மதிகேடு.’’ தற்பரிசோதனைக்குத் தகுந்த பட்டியலிது. கரோனா நச்சுக் கிருமியிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்வதுபோல் இப்பாவங்களிலிருந்தும் நாம் நம்மைத் தூரப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தனிவாழ்வில் தூய்மை காக்க இவ்வசனப்பகுதியில் நமக்கு அழைப்பு வருகிறது. ‘‘வயிறு’’ என்பது உடலுக்கடுத்தது; ‘‘உள்ளம்’’ என்பதோ

ஆன்மீகத்துக்குரியது. இச்சந்தர்ப்பத்தில் ஆச்சாரங்கள் மற்றும் பாரம் பரியங்கள் குறித்து ஆண்டவர் பேசிக்கொண்டிருந்தார் (வச 1-9). கை கழுவாது அவரது சீடர் சாப்பிட்டதைத் தவறெனப் பரிசேயர் குற்றம் சாட்டினர் (வச 2). கடைத்தெருவிலிருந்து திரும்பி வந்ததும் பரிசேயர் தங்களது கரங்கள், கால்களை மட்டுமல்ல, உட்காரும் கட்டில்களையும் கழுவுவர் (வச 4). இன்றையக் கிறிஸ்தவம் இங்கு படம் பிடித்துக் காட்டப்படுகிறது. உள்ளில் ஆரோக்கியம் என்பதைவிட ஆச்சாரங்களும் ஆசரிப்புகளுமே முக்கியத்துவம் பெறுகின்றன. ஆராதிப்பதிலும் உள் ளத்தைவிட உதடுகளே பெரும்பங்கு வகிக்கின்றன. இதைக் குறித்த தேவனது சலிப்பை ஆண்டவர் சுட்டிக் காட்டினார்: ''இவர்களது வாய் தான் என்னைப் போற்றுகிறது; இவர்களது வாழ்க்கையோ என்னைத் தூற்றுகிறது'' (வச 6). இதற்குக் காரணம் என்னவெனில், நமக்குத் ''திருக்கட்டளைகள்'' மற்றும் ''திருவசனம்'' என்பவற்றைவிடச் சடங்கு களும் சம்பிரதாயங்களுமே முக்கியமாகிவிட்டன (வச 7,9,13). சர்வ வல்லவரின் வார்த்தைகளைவிட நமது சபைப்பிரிவு மற்றும் நமது சபையின் உபதேசங்களுக்கும் சட்டங்களுக்குமே அதிக மதிப்பு கொடுக் கிறோம். பிரியமானவர்களே, ஒன்றை நினைவில் வையுங்கள்: திரு மறைக்கு அதிகாரம் தருவது திருச்சபை அல்ல; திருமறைதான் திருச் சபைக்கு அதிகாரம் தருகிறது. இதில் தடுமாறினதுதான் நம்மைத் தடம்புரளச் செய்துவிட்டது.

இவ்வித மார்க்கபக்தியை மாய்மாலம் என்றழைக்கிறார் இயேசு (வச 7). பாத்திரங்கள் மற்றும் கல்லறைகளை எடுத்துக்காட்டி, மாய்மாலத்தை அவர் விளக்கினார் (மத் 23:25-28). பாத்திரங்களைக் கழுவுவது அடிப்படையான சுகாதாரம்தான். ஆனால் அவற்றின் உட்புறத்தைக் கழுவாது வெளிப்புறத்தை மட்டும் துலக்குவதையே இயேசு கடிந்து கொண்டார். வெளிப்படையான காரியங்களை வற்புறுத்தி உள்ளான வற்றைக் கவனியாதுவிடும் மார்க்கமே இங்கு கண்டிக்கப்படுகிறது. அதாவது, உள்ளான நிலை அல்ல, வெளித் தோற்றமே நமக்கு முக்கியமாகிவிடுகிறது. நம்மைப்பற்றி தேவனுக்குத் தெரிவது என்ன என்பதைவிட நம்மைப்பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதே



நமக்குப் பெரியதாய்த் தோன்றுகிறது. கல்லறைகளுக்கு வெள்ளை யடிப்பது யூதர்களது பழக்கம். வெளியே அலங்காரம், உள்ளேயோ அலங்கோலம் என்பதனையே இயேசு இங்கு சுட்டிக்காட்டுகிறார். இதுதான் நமது வாழ்க்கை என்றால் நாமும் ''வெளிவேடக்காரர்தானே?'' விபசாரக்காரருக்கோ, திருடருக்கோ, கொலையாளிகளுக்கோ ''ஐயோ'' என்று இயேசு எங்கும் கூறியதாய்த் தெரியவில்லை. ஆனால் மத்தேயு 23ஆம் அத்தியாயத்தில் மட்டும் ஏழு தடவை மாய்மாலக்காரருக்கு ''ஐயோ'' என்று ஓலமிட்டார் (வச 13,14,15,23,25,27,29). ''மறைநூல் அறிஞர் மற்றும் பரிசேயரே'' அவர்கள். ஆண்டவர் அவர்களைக் ''குருட்டு வழிகாட்டிகள்'' என்றழைத்தார் (வச 16). ஆம், சராசரிக் கிறிஸ்தவர்களைவிடப் பிரசங்கிமாருக்கும் தலைவர்களுக்கும்தான் மாய்மாலம் என்பது எளிது. கவனம்!

*பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை,*
*யாரும் காணா உள் அலங்கோலத்தை,*
*மனம் நொந்து மருளுகின்றேன்,*
*பரிசுத்தம் கெஞ்சுகின்றேன்.*

தனிவாழ்வில் பரிசுத்தம் என்பதற்கு மாய்மாலம் பெரும் பாதகம் விளைவிக்கும். மாய்மாலம் என்றால் அது நாம் நினைப்பதற்கும் பேசு வதற்குமுள்ள வேறுபாடு; அது நாம் பேசுவதற்கும் செய்வதற்குமுள்ள வேறுபாடு; அது நாம் கொடுக்கும் தகவலுக்கும் கேட்போர் மனதில் ஏற்படுத்தும் தாக்கத்திற்குமுள்ள வேறுபாடு; அது நமது வார்த்தைக்கும் வாழ்க்கைக்குமுள்ள வேறுபாடு; அது பிரசங்கத்திற்கும் நடத்தைக் குமுள்ள வேறுபாடு; அது பிரசங்கபீடத்தில் நிற்கும்போது மக்கள் மனதில் ஏற்படுத்தும் அபிப்பிராயத்திற்கும் வீடு திரும்பியபின் நடந்துகொள்ளும் விதத்திற்குமுள்ள வேறுபாடு. மாய்மாலத்தை விளக்க நீதிமொழிகள் 26:22-26, எரேமியா 9:8 மற்றும் எசேக்கியேல் 33:31 ஆகிய வசனங்களுக்கு நிகரில்லை. விழுந்துபோன மனுக்குலத்தைச் சேர்ந்த நாம் யாவரும் இயல்பின்படி மாய்மாலக்காரர்தான். நாம் நினைப்பதும் பேசுவதும், அல்லது பேசுவதும் செய்வதும், அல்லது

விரும்புவதும் வெளிக்காட்டுவதும் நூறு சதவீதம் ஒன்றாயிருக்கிற தென்று எவரும் மார்தட்ட முடியாது (ரோ 3:4). பரிசுத்தத்தில் நாம் வளரவேண்டுமானால் இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு விடாது நெடுகவே முயன்றுகொண்டிருக்கவேண்டும். இது வாழ்காலம் முழுவதும் மேற்கொள்ளவேண்டிய பயிற்சி. ''விண்ணிலிருந்து வரும் ஞானம் முதலாவது தூயது ... அது மாய்மாலமற்றது'' (யாக் 3:17). தங்களது கண்ணிலிருக்கும் மரக்கட்டையைக் கவனியாது பிறரது கண்களிலிருக்கும் மரத்தூளிலேயே கவனமாயிருப்பர் மாய்மாலக்காரர் (மத் 7:5).

## 2) லூக்கா 8:8ஆ திருவசனத்திற்குப் பிரதிபலிப்பு

*''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!''*

விதைக்கிறவன் உவமையைச் சொன்ன வேளையில் துல்லியமான இவ்வார்த்தைகளை இயேசு கூறினார் (வச 4-15). இதே உவமையை மத்தேயு 13இலும் காண்கிறோம். இவ்வுவமையைச் சொன்னபின், ''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்'' என்று இயேசு ''சத்த மிட்டுக்'' கூறினார் என்று வாசிக்கிறோம் (லூக் 8:8ஆ). அவர் தரும் அழுத்தம் எவ்வளவென்று பாருங்கள். திருவசனத்திற்குச் சரியான பிரதிபலிப்பு தரவே இங்கு நமக்கு அழைப்பு. இவ்வுவமையின் முடிவில் அவர் சொன்னது, ''நீங்கள் எவ்விதம் கேட்கிறீர்கள் என்று கவன மாயிருங்கள்'' (வச 18அ). இச்சத்தியத்தை இயேசு எவ்வளவு முக்கியத்துவப்படுத்துகிறாரென்று அடுத்துவரும் சம்பவத்தைப் பார்த்துப் புரிந்துகொள்ளுங்கள். ''அப்பொழுது அவரது அம்மாவும் தம்பிமாரும் அவரிடம் வந்தனர்; கூட்டம் அதிகமாயிருந்ததால் அவரை அவர்களால் நெருங்க முடியவில்லை. அப்பொழுது, 'உமது தாயாரும், உமது சகோதரரும் உம்மைப் பார்க்க வெளியே நிற்கின்றனர்' என்று அவருக்கு அறிவித்தார்கள். அதற்கு அவர், 'தேவ வசனம் கேட்டு, அதன்படிச் செய்பவரே எனக்குத் தாயார், எனக்குச் சகோதரர்' என்றார்'' (வச 19-21). திருவசனத்தை வாசிக்கும்போதும் கேட்கும்போதும் பெரிதளவில் பயனடைவது எங்ஙனம் என்று இவ்வுவமையிலுள்ள



நான்கு வகை நிலங்களைக் கவனித்துப்பார்த்துக் கற்றுக்கொள்வோம். இவ்வுவமையின்மீது நூற்றுக்கணக்கில் பிரசங்கங்கள் ஏற்கனவே கேட்டிருப்போம். ஆனாலும், நன்கு தெரிந்த வசனப்பகுதிகளையும் புத்தார்வத்துடன் உற்று நோக்கினால் மறுரூபமடைவோம்.

***(a) வழியோர நிலம்*** (லூக் 8:5,12). வழியோரம் விழுந்த விதை கள் மண்ணினால் மூடப்படாததே இங்கு பிரச்னை. பாதசாரிகளால் அவை மிதிபட்டன. மூன்றாவதாக, வானத்துப் பறவைகள் அவற்றைப் பொறுக்கிவிட்டன. இவ்வித நிலத்தைக் குறித்துப் புரிந்துகொள்ளும் நான் செய்வதென்னவென்றால், எனது தனித்தியானத்தின்போது திருமறையிலிருந்து தேவன் எனக்குத் தரும் அகத்தூண்டுதலான கருத்துக்களை உடனுக்குடன் எழுதிவைத்துவிடுகிறேன். எழுதுவ தற்கான கையேடு இல்லாது நான் பைபிளைத் தியானிப்பதுமில்லை, ஆராய்வதுமில்லை. காலையில் கிடைத்த கருத்துக்களை மாலையில் எழுதிக்கொள்ளலாம் என்று தள்ளிப்போட்டால் அவற்றில் அநேகத்தை மறந்துவிடுகிறேன். உங்களில் பெரும்பாலரது ஞாபக சக்தி என்னைப் போன்று சராசரியானதே. இவ்விதம் எனது கையேட்டில் எழுதிவைத் துள்ள குறிப்புகளிலிருந்தே எனது பிரசங்கங்களும் கட்டுரைகளும் உருவெடுக்கின்றன. இக்கட்டுரையும் அப்படி வந்ததுதான். மாதக் கடைசியில் அல்லது ஆண்டின் இறுதியில் அவற்றைத் திரும்பப் பார்ப்பதினால் கிட்டும் பயன்கள் கொஞ்சநஞ்சமல்ல. அதிலிருக்கும் அபிஷேக அகத்தூண்டல் மறுக்க முடியாததாயிருக்கும். ''கேட்டு மறக் கிறவர்கள்'' என்றாகிவிடாதிருக்க இது ஒன்றே வழி (யாக் 1:25). கையேட்டில் எழுதிவைக்குமுன் எனது காதுகளில் விழும் மனித சத் தங்களை விதைகளை மிதித்துவிட்ட பாதசாரிகளுக்கு ஒப்பிடுவேன். வானத்துப் பறவைகளைப் ''பிசாசுக்கு'' இயேசு ஒப்பிட்டார். ''பிசாசு வந்து அவன் இருதயத்திலிருந்து வசனத்தை *எடுத்துவிடுகிறான்''* என்றார் (லூக் 8:5,12). மத்தேயுவில் ''பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் *பறித்துக்கொள்ளுகிறான்''* என் றிருக்கிறது (மத் 13:19). எவ்வளவு கவனமாயிருக்கவேண்டும், பாருங்

கள்! வசனங்களை ''மனனம்'' செய்வதைச் சோதனைக்காரனுக்கு எதிராய் இருதயத்தில் ''மறைத்து'' வைப்பது என்கிறார் சங்கீதக்காரன் (சங் 119:11; உபா 11:18; மத் 4:4,7,10).

***(b) பாறை நிலம்*** (லூக் 8:6,13). திருவசனம் கேட்டவுடன் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வோரையே பாறை நிலம் குறிக்கும் (மத் 13:20). அவர்கள் ''மகிழ்ச்சியுடன்'' திருவசனத்தை ஏற்றுக்கொள்வர் என்றார் இயேசு. செய்தியானது அவர்களைப் பெரிதும் பரவசப்படுத்தும். அச்செய்தியில் நிறைய கவர்ச்சி இருந்திருக்கும். முளைத்த வேகத்திலேயே செடி வாடிப்போகிறது. போதுமான ''மண்'' இல்லாததால் வேர்விட வழியில்லை என்கிறார் மத்தேயு (மத் 13:5,6). தேவையான ''ஈரம்'' இல்லை என்கிறார் லூக்கா (லூக் 8:6). இது கிரமமான பின்தொடர் ஊழியம் இல்லாமையைக் குறிக்கிறது (1 கொரி 3:6). இது உள்ளுணர்வு இல்லாத மேல்மட்ட மாற்றம். மனந்திரும்புதல் இல்லாத விசுவாசம். பிரபலமானதும் கவர்ச்சிகரமானதுமான சுகபோக வாழ்வு உபதேசம் அதனைக் கேட்போருக்கு வழங்குவது இதுவே. இயேசுவை ''விசுவாசிக்க'' மட்டுமல்ல, அவருக்காய்ப் ''பாடுபடவும்'' நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்ற முழுச் சத்தியம் தெளிவாக அறிவிக்கப்படுவதில்லை (பிலி 1:29). ''சோதனை, உபத்திரவம், துன்பம்'' ஆகியவற்றை இவர்கள் தாக்குப்பிடிக்க முடியாது விழுந்துவிடுவார்கள் (மத் 13:21; லூக் 8:13). மக்களுக்கு ''வேண்டியதை'' விட்டுவிட்டு, அவர்கள் ''விரும்புவதைப்'' பிரசங்கித்துவிடாதபடி ஊழியர்களாகிய நாம் அதிகக் கவனமாயிருக்கவேண்டும். பொய்யான நம்பிக்கை கொடுத்தால் அவர்கள் பின்வாங்கிப்போவதற்கு நாமே பொறுப்பாளிகள். ''நீங்கள் *எப்படிக்* கேட்கிறீர்கள் என்பதைக் குறித்துக் கவனமாயிருங்கள்'' என்றார் இயேசு. ''நீங்கள் *என்ன* பிரசங்கிக்கிறீர்கள் என்று கவனமாயிருங்கள்'' என்பதும் சரிதானே?

***(C) முட்புதர் நிலம்*** (லூக் 8:7,14). ''பல்வேறு கவலைகள், செல்வப்பெருக்கு, சிற்றின்பங்கள்'' போன்றவற்றால் ''நெருக்கப்பட்டுப்'' பயனற்றவர்களாய்ப் போவோரை இவ்வகை நிலம் குறிப்பிடுகிறது (மத் 13:22; லூக் 8:14). இச்செடி சாகாது; பச்சையாகவே இருக்கும்; ஆனால் காய்க்காது! இப்படிப்பட்டவர்கள் உயிருடன் இருப்பார்கள்; ஆனால் வளர்ந்து முதிர்ச்சியடையமாட்டார்கள் (2 பேது 1:5-8). இறையரசுக்கடுத்தவற்றைவிட இவ்வுலகிற்கடுத்தவையே அவர்களைப் பிடித்துக்கொள்ளும். தமது மலைப்பிரசங்கத்தில் இதனையே இயேசு கண்டித்தார் (மத் 6:24-34). நமது பொருளாதார மற்றும் உடலுக்கடுத்த தேவைகளைக்குறித்த அளவுக்குமீறிய கவலை நம்மை இரு தலைவர்களுக்கு வேலைக்காரராக்கிவிடும் (வச 24). ஆஸ்தி ஆசையும் ஆன்மீக ஆரோக்கியமும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவை (1 தீமோ 6:6-11). கனியற்ற கிறிஸ்தவன் என்பது ஒரு முரண்பாடு (யோ 15:16). பழமில்லாத பச்சிலைத் தோற்றம் தேவனது கோபத்தினால் பொசுங்கிப்போகும் (மத் 21:19; எபி 6:7,8). கனிநிறை வாழ்வு என்றால் விதைகளைக் கொண்டுள்ள பழங்களை விளைவிப்பதாம்.

***(d) நல்ல நிலம்*** (லூக் 8:8அ,15). ''நூறு மடங்கு, அறுபது மடங்கு மற்றும் முப்பது மடங்கு'' விளைச்சல் என்கிறார் மத்தேயு (மத் 13:8,23). ''நூறு மடங்கு'' விளைச்சல் என்கிறார் லூக்கா (லூக் 8:8அ). ஒருவர் ''நூறு மடங்கு'' என்று தொடங்குகிறார்; அடுத்தவர் ''நூறு மடங்கு'' என்று மட்டும் சொல்கிறார்! என்னே எதிர்பார்ப்பு! ''உணர்ந்து புரிதல், உண்மையுள்ள நல்ல இதயம், பொறுமை'' ஆகியவையே அமோக விளைச்சலுக்குக் காரணங்களாய்த் தரப்பட்டுள்ளன (மத் 13:23; லூக் 8:15). ''உடனுக்குடன்'' நடந்துவிடவேண்டும் என்ற மனப்பான்மை கூடாது. எல்லாமே உடனுக்குடன் வேண்டும், பயன்கள் உடனே கிட்டிவிடவேண்டும் எனும் போக்கிலுள்ள உலகில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய கடினமான சத்தியமிது. கணினிகள் வைத்துப் பரலோகம் செயல்படுவதில்லை. ஆண்டவருக்கு ஆத்திரமேது? ஆன்மீகக் காரியங்கள் என்று வரும்போது நவீனத் தொழில்நுட்பக் கலைக்கு அடிமையாகிவிட்ட நாம் கற்ற பல காரியங்களைக் களையவேண்டும். திருமறை ஆராய்ச்சிக்கு கணினியுலகு எவ்வளவு கைகொடுத்திருக்கிறதென்பதை நான் மறுக்கமாட்டேன். ஆனால், வாரம் முழுவதும்

இறைப்பிரசன்னத்தில் இறைவார்த்தையுடன் காத்திராமல் ஞாயிறு பிரசங்கத்திற்காகச் சனி மாலையில் கூகிளை உருட்டுவதற்கு நான் எதிரிதான்.

பிரசங்கிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் தேவையான படிப்பினைகள் விதைக்கிறவன் உவமையில் உண்டு என்று மேற்கண்ட பத்திகளில் கவனித்தோம். ''வசனமே விதை'' (லூக் 8:11). நல்ல விதை விதைத்தால் கதிர்கள் கொத்துகொத்தாயிருக்கும். விதை சரியில்லை யென்றால் விளைச்சல் பிரமாதமாயிருக்காது. கலப்படமான சுவிசேஷம் (2 கொரி 2:17) அல்லது வேறொரு சுவிசேஷம் (11:4) வேண்டவே வேண்டாம். கதைகளை அல்ல, ''வசனத்தை'' பிரசங்கியுங்கள் (2 தீமோ 4:2-4). நாகரீகமுள்ளவனோ நாகரீகமற்றவனோ, அறிவாளியோ அறிவிலியோ, கேம்பிரிட்ஜ் மாணவனோ ஆதிவாசி வேட்டைக்காரனோ, எவருக்கும் கிறிஸ்துவின் ''சுவிசேஷமே'' மீட்பளிக்கும் வல்லமை (ரோ 1:14,16). தத்துவங்கள் எவரையும் இரட்சிப்பதில்லை (கொலோ 2:8). மனிதரின் இதயமாம் நிலத்தில் அறிவெனும் முத்துக்களை விதைத்துப் பயனென்ன? செடி முளைக்காதே! வித்துக்கள் வேண்டுமே! சுவிசேஷம் எனும் வித்தில்தான் ''உயிர்'' உண்டு (யாக் 1:21). அதுவே ஜீவனுள்ள தேவனது வசனம்.

## 3) மாற்கு 4:23 ஒளிரும் வாழ்வு

*''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!''*

விளக்கைக் கொளுத்தி கூடையால் மூடக்கூடாது, கட்டிலின் கீழ் வைக்கக்கூடாது; அதை விளக்கேந்தியின்மீது வைக்கவேண்டும் என்று இயேசு பேசிக்கொண்டிருந்தார் (வச 21). இது போன்றதொரு எடுத்துக் காட்டை அவர் மலைப்பிரசங்கத்திலும் கூறினார்: மத் 5:14-16, ''நீங் கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள். மலைமீது இருக்கும் நகர் மறை வாயிருக்க முடியாது. எவரும் விளக்கைக் கொளுத்தி கூடையால் அதனை மூடுவதில்லை; மாறாக விளக்குத்தண்டின்மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் பிரகாசிக்கட்டும்! அப்பொழுது



அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்தந்தையைப் போற்றிப் புகழ்வர்.'' எனவே, இங்கு ஒளிரும் வாழ்வுக்காய் அழைப்பு வருகிறது.

இயேசுவே உண்மையான ஒளியானவர். அவரை விசுவாசித்துள்ள நாம் அவரிடமிருந்து ஒளி பெறுகிறோம் (யோ 1:9). திருமுழுக்கினன் யோவான் போலவே நாம் அந்த ஒளியானவருக்குச் சான்று பகர்ந்து மக்கள் அவரை நம்ப வழிவகுக்கவேண்டும் (வச 6-8). உலகிலுள்ள எவரும் அடிப்படையில் ஆன்மீக இருட்டிலேயே இருக்கின்றனர். கிறிஸ்துவிடம் நபர்கள் திரும்பும்போதுதான் இருள் அகலுகிறது (வச 4,5). ''இருளில்'' இருப்போர்மீது ''சுடரொளி'' உதிக்கவேண்டும் என்பதற்காகவே இயேசுவானவர் தமது சொந்தவூராகிய நாசரேத்திலிருந்து நப்தலிக்கு நகன்றார் (மத் 4:13-15). இதனால்தான் விசுவாசிகளை ''ஒளியின் மக்கள்'' என்றழைக்கிறார் பவுலடியார் (எபே 5:8; 1 தெச 5:5). இறைப்பற்று இல்லாத செயல்பாடுகள் ''இருட்டுச் செயல்கள்'' எனப்படும் (ரோ 13:12; எபே 5:11).

வார்த்தை மூலமாகவும் வாழ்க்கை மூலமாகவும் சாட்சியாயிருப்பதே ஒளிரும் வாழ்க்கை என்பது. இது அல்லது அது என்றல்ல, இரண்டும் ஒருங்கிணையவேண்டும். ''நமது நடக்கையைப் பார்த்தாலே மக்கள் கிறிஸ்துவிடம் வந்துவிடுவர்'' என்று கிறிஸ்தவர்களில் சிலர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். இது முற்றிலும் தவறு, திருமறைக்குச் சற்றும் ஒவ்வாதது. *நான் செய்வதைப்* பார்த்து ஒருவரும் மீட்படைய முடியாது; *இயேசு செய்துள்ளதை* அவர்கள் கேட்கவேண்டும். அதுதான் சுவிசேஷம்: ''இயேசு வந்தார்; இயேசு நமது பாவங்களுக்காய் மாண்டார்; இயேசு மறுபடி உயிர்த்தெழுந்தார்'' (1 கொரி 15:1-4). இச்செய்தியை ஒருவன் கேட்டு, அதனை விசுவாசித்து, அதனைத் தனது வாயால் சொல்லும்போதுதான் அவன் இரட்சிக்கப்படுகிறான் (ரோ 10:8-10). இறைவார்த்தையைக் ''கேட்பதாலேயே'' விசுவாசம் வருகிறது; ஒரு கிறிஸ்தவனின் நெறிநிறைந்த வாழ்க்கையைப் பார்ப்பதால் மட்டுமல்ல (வச 15-17). கிறிஸ்தவர்களது நெறிநிறைந்த வாழ்க்கையை மக்கள் காணும்போது, அவர்கள் பறைசாற்றும் செய்தியை அவர்கள் நம்ப அது

எளிதாக்குகிறது. மத்தேயு 5:16இல் இயேசு போதித்தது அதுவே. நமது நடை, உடை, பாவனை ஆகியவை கிறிஸ்தவரல்லாத நமது அயலகத்தாரைக் கவரும்போது, சுவிசேஷத்தின்மீது அவர்களுக்கு ஆர்வம் எழுகிறது. பிற மதத்தினர் நடுவிலும் நேர்த்தியாக, நேர்மையாக வாழ்பவர் இல்லாமலில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதே வேளையில், கிறிஸ்தவர்களிடம் ஏதாவது குற்றங்கள் காணப்பட்டால் அவர்கள் அதனைப் பெரிதுபடுத்துவர். இதை மனதிற்கொண்டுதான், எங்கும் சிதறியிருந்த கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு எழுதியது: ''பிற இனத்தினர் நடுவில் நன்னடத்தையுடையவராய் இருங்கள். அவர்கள் உங்களைத் தீயவர்கள் என்று பழித்துரைப்பினும், உங்கள் நற்செயல்களைக் கண்டு, கடவுள் சந்திக்க வரும் நாளில் அவரைப் போற்றிப் புகழ்வர்'' (1 பேது 2:12).

விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ''சுவிசேஷமே'' மீட்பளிக்கும் கடவுளின் வல்லமை (ரோ 1:16). இக்கூற்றைத் தொடர்ந்து பவுல் இரு மக்களினத்திற்குச் சுவிசேஷம் அறிவிக்கும் கடமை தன்மீது உள்ளது என்று எழுதுகிறார்: ''முதலில் யூதர், அடுத்து கிரேக்கர்'' (வச 16ஆ). யேகோவா தேவனைத் தொழுதுவந்த யூதரை இன்றையப் ''பெயர்க் கிறிஸ்தவருக்கு'' நாம் ஒப்பிடலாம். ''கிறிஸ்தவரல்லாதோரைக்'' கிரேக்கர் குறிக்கின்றனர். மறுபடி பிறந்த கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் தனியாள் ஆத்துமாதாயத்திலும் அயலக நற்செய்தியறிவிப்பிலும் நேரடியாய்ப் பங்கேற்கவேண்டும். இது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, கட்டாயக் கடமை. மேலே குறிப்பிட்ட இருதிறத்தாருக்கும் நாம் ''கடனாளிகள்'' (வச 14). இம்முயற்சியில் எவ்விதத் தளர்வும் கூடாது. ''என்னால் முடிந்த அளவு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் ஆர்வம் கொண்டுள்ளேன்'' என்கிறார் பவுல் (வச 15). ''நான் நற்செய்தியை அறிவிக்காவிடில், ஐயோ, எனக்குக் கேடு!'' என்றும் சொல்லிவிடுகிறார் (1 கொரி 9:16). இந்திய மிஷனரிச் சங்கம் (IMS) மற்றும் சுதேச மிஷனரிச் சங்கம் (NMS) ஆகிய இரு இயக்கங்களையும் நிறுவிய பேராயர் V. S. அசரியா அவர்கள் (1874-1945) தனது சபையினரைத் தலையில் பைபிளை வைத்துக்கொண்டு மேற்கண்ட பவுலின் வாசகத்தை உரக்கக் கூறச் சொல்வாராம்!



திறந்தவெளி நற்செய்தியறிவிப்பு, பேரின்பப் பெருவிழாக்கள் போன்றவற்றிற்கு அரசு தடை விதிக்கலாம். தனி நபர்களுக்கு நற்செய்தி பகிர்வதை யாரால் நிறுத்த முடியும்? ஆதிச்சபைக்குள் ''தினந்தோறும்'' புதிய ஆத்துமாக்களைக் கொண்டுவந்தது நட்பு வாயிலாக நற்செய்திப் பகிர்வுதான் (Friendship Evangelism) (அப் 2:47). நாட்டின் பல பகுதிகளில் நான் செய்தியளித்த மிஷனரிக் கன்வென்ஷன்களில் பாஸ்டர்மாருக்கு நான் விடுத்த ஒரு சவால்: ''ஒரு மாதத்திற்கு ஆலயத்தை மூடுங்கள்; திரும்பத் திறக்கும்போது, கிறிஸ்தவரல்லாத ஒரு நபரையாவது இந்த 30-நாள் அடைப்பின்போது ஆதாயம்பண்ணிக்கொண்டு வராதோருக்கு அனுமதியில்லை என்று அறிவியுங்கள்!'' கரோனா கொள்ளைநோயின் காரணமாக எத்தனையோ மாதங்கள் நமது ஆலயங்கள் மூடப்பட்டுள்ளன. தொலைக்காட்சி ஆராதனைகளில் சபையாருக்கு இவ்வித ஊக்குவிப்பு கொடுக்கும் ஆயர்கள் எத்தனை பேர்? இங்குதான் நமது தோல்வி. கிறிஸ்தவரல்லாத நமது தொடர்புகளோடு ஒவ்வொருவரும் தினமும் கைபேசியில் எவ்வளவு நேரம் செலவிடுகிறோம்! இன்றையச் சூழலில் ஒவ்வொருவரையும் பயமும் திகிலும் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கின்றன. சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள இதுதான் சாதகமான வேளையல்ல என்றால் எப்பொழுதுதான் அது சாத்தியம்? இப்பொழுது இல்லையேல் எப்பொழுது? கிறிஸ்தவ நண்பரே, நீங்கள் இதனைச் செய்யாவிடில் யார் செய்வார்? If not now, when? If not you, who?

''கூடைக்கு'' அடியிலோ, ''கட்டிலுக்குக்'' கீழேயோ விளக்கை வைப்பதில் என்ன பயன் என்றார் இயேசு (மாற் 4:21). இவையிரண்டும் வீட்டுச் சாமான்கள். மத்தேயுவிலுள்ள இதுபோன்ற வசனப் பகுதியில் ''வீட்டிலுள்ள'' யாவருக்கும் அது வெளிச்சம் கொடுக்கவேண்டும் என்றார் அவர் (மத் 5:15). நமது சொந்தக் குடும்பத்தினருக்கு நாம் சாட்சியாயிருப்பதே நமது முதல் பொறுப்பு என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. தெருமுனையிலிருந்தோ, பிரசங்கபீடத்திலிருந்தோ பிரசங்கிப்பது வீட்டில் பிரகாசிப்பதைவிட எளிது. இச்சவாலை நாம் ஏற்று நம்மால் முடிந்த அளவு முயற்சிக்கவேண்டும். காம் போன்ற ஒரு மக

னைப் பேழைக்குள் அழைத்துச்செல்வதும், மூன்று மகன்களையும் மருமகள்களையும் வெளியே செல்ல முடியாது ஓராண்டு பேழைக்குள் வைத்துச் சமாளிப்பதும் 600-வயது நோவா தாத்தாவுக்கு எளிதாகவா இருந்திருக்கும்? முழு ஊரடங்கு! (ஆதி 5:32; 6:10,18; 7:6,7; 8:13; 9:22). நம்மால் இயன்றதையெல்லாம் செய்துவிட்டு மீதியைத் தேவனது கரத்தில் விட்டுவிடவே அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். உடன் பிரசங்கிமாருக்கு எனது ஆலோசனை: ''தேவனுக்கு அடுத்து, ஊழியத்திற்காய்க் குடும்பத்தையோ, குடும்பத்திற்காய் ஊழியத்தையோ பலியாக்காதீர்!'' இரண்டையும் சமநிலைப்படுத்துவதற்கான கிருபையையும் ஞானத்தையும் அவர் உங்களுக்கு அருளுவாராக! நமது குடும்பத்திற்கு நாம் ஆசீர்வாதமாய் இருப்பதோடு, நமது ''நகர்'' மற்றும் ''உலகு'' ஆகியவையும் ஆசீர்வதிக்கப்பட நாம் ஒரு வாய்க்காலாய் இருக்கவேண்டும் (மத் 5:14,15). இது ஒன்றன்பின் ஒன்று என்றில்லாது, ஒன்றுபோல் நிறைவேற்றப்படவேண்டும். ''முதலாவது'' எருசலேமிலும் ''பின்னர்'' யூதேயாவிலும் சமாரியாவிலும் உலகெங்கிலும் சாட்சியாயிருக்க வேண்டும் என்றா இயேசு தமது சீடருக்குக் கட்டளையிட்டார்? இல்லை. அவர் சொன்னது: ''எருசலேமிலும் யூதேயாவிலும் சமாரியாவிலும் உலகெங்கிலும் சாட்சியாயிருங்கள்'' (அப் 1:8). King James Version என்ற பழைய மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் “First in Jerusalem and then in Judea ...” என்றில்லாது, “Both in Jerusalem and in Judea ...” என்றுள்ளது. அக்காலத்து ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய மிஷனரிகள் தங்களது நாடுகள் முழுவதும் நற்செய்திமயமாகும்வரை அங்கேயே காத்திருந்திருப்பார்களெனில், இந்தியாவையும் சேர்த்து வேறு எந்த நாடும் அவர்கள் மூலம் சுவிசேஷத்தின் இத்தனை ஆசிகளைப் பெற்றிருக்காது.

பிரகாசமான வாழ்வு குறித்துப் பேசும்போது நாம் திருமுழுக்கினர் யோவானைக் குறிப்பிடாது இருக்க முடியாது. அவரைப் பற்றிய இயேசுவின் சான்று இதோ: ''அவன் சத்தியத்திற்குச் சான்று பகர்ந்தான் ... அவன் எரிந்து பிரகாசிக்கும் விளக்காயிருந்தான்'' (யோ 5:33ஆ,35அ). நமது பிரச்னை என்னவெனில், நாமும் இயேசுவுக்காய்ப் பிரகாசிக்க



விரும்புகிறோம், அவருக்காய் எரிந்துவிடவோ மனமில்லை! மின்விளக்காய்த்தான் இருக்க ஆசை; தேவனோ எரிந்து கரையும் மெழுகுவர்த்திகளைத் தேடியலைகிறார். நாம் சிறுகவேண்டும், அப்பொழுதுதான் இயேசு பெருக முடியும் (3:30). நண்பரே, நீங்கள் ஒருவேளை எரியாது, வெறுமனே புகைந்துகொண்டிருக்கலாம். உங்களுக்கு வரும் இறைச் செய்தி இதோ: ''மங்கி எரியும் திரியை இயேசு அணைக்கமாட்டார்'' (ஏசா 42:3). நொறுங்கிய இதயத்துடனும் நசுங்கிய மனதுடனும் அவர்முன் முழங்காலிடுங்கள். தமது பிரசன்னத்தினால் அவர் உங்களுக்குப் புத்துயிரூட்டி, இயேசுவுக்காய் உங்களை இயேசுப்பிரகாசமாய் மாற்றுவார் (ஏசா 57:15; சங் 67:1,2). தானியேல் 12:3இலுள்ள திருவாக்கு உங்களுக்கே: ''ஞானிகள் வானத்தின் பேரொளி போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் நட்சத்திரங்கள் போலவும், என்றும் முடிவில்லாது ஒளிவீசித் திகழ்வர்!'' சூப்பர் ஸ்டார்!

## 4) லூக்கா 14:35ஆ அனலைத் தக்கவைத்தல்

*''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!''*

''சிலுவை சுமத்தல்'' மற்றும் ''செலவு கணக்கிடல்'' ஆகியவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் திடமான இவ்வார்த்தைகளை இயேசு கூறினார் (லூக் 14:25-35). உப்புத்தன்மையை இழக்கும் உப்பை எடுத்துக்காட்டி இப்போதனையை நிறைவு செய்தார் (வச 34,35). அதனை முடிக்கும்போது, ''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்'' என்றார் (வச 35இ). எனவே முடிவுவரை அனலைக் காத்துக்கொள்ளல் என்பதே இங்கு கருத்து. ஊக்கமது கைவிடேல்!

பேதுரு மற்றும் அந்திரேயாவில் தொடங்கி எத்தனையோ தனிநபர்களை இயேசு அழைத்தார் (மத் 4:18). ஆனால் அவர் ஒருபோதும் கவர்ச்சிகளை வாக்களித்து மக்களை வசப்படுத்தவில்லை. மேற்கண்ட இருவரை அழைக்கும்போதும் அவர்களுக்கு ஒரு வேலையை, ஒரு கடமையை, ஒரு பொறுப்பைத்தான் கொடுத்தார்: ''உங்களை மனிதரைப் பிடிப்போர் ஆக்குவேன்'' (வச 19). வேறு விதமாய்ச் சொன்னால், ''உங்களை *ஆசீர்வதிப்பேன்''* என்று வாக்குப்பண்ணாது, ''உங்களை

*ஆசீர்வாதமாக்குவேன்''* என்று பொறுப்பாளிகளாக்கினார். நவீன காலச் சீடத்துவம் இங்குதான் திசைமாறிவிட்டது. நாம் தியானிக்கும் இவ் வசனப்பகுதியாகிய லூக்கா 14:25-35இல் இயேசு மும்முறை ''அவன் எனக்குச் சீடனாயிருக்க முடியாது'' என்கிறார் (வச 26,27,33). அவர் எதிர்மறைச் சிந்தை கொண்டிருந்தார் என்று சொல்லுவோமா? இல்லவே இல்லை, இதுதான் நேரான நேர்மறை! Positively positive! தமது நிபந்த னைகள்மீது அவர் சர்க்கரை தூவ விரும்பவில்லை. விளையாட்டுப் பிள்ளைகளைக் கவரும் பஞ்சு மிட்டாயா இது? கிரயம் மிகுந்த சீடத் துவத்திற்கான அழைப்பு இது. சுவிசேஷப் புத்தகங்களின் ஆசிரியர்கள் நால்வரில் லூக்கா மட்டுமே ''சீடனாயிருக்க முடியாது'' எனும் கடுஞ் சொற்றொடரை எழுதியுள்ளார். மிஷனரிப் பயணங்களில் பவுலுடன் இருந்த அவருக்குப் பாதை எவ்வளவு கடினம் என்று தெரிந்திருக்கும். காற்றிலசையும் நாணல்களல்ல, துணிந்த கட்டைகளே இன்றையத் தேவை! வாருங்கள், *இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்!* மனித னுக்குத் தேவன் முதலாவது கொடுத்தது களப்பணி; சாத்தான் முதலா வது கொடுப்பதோ கவர்ச்சி (ஆதி 1:28; 2:15; 3:4,5). இப்போக்கு இன்றைய விளம்பர உலகில் உச்சம் எட்டியுள்ளது.

நாம் படித்துக்கொண்டிருக்கும் வசனப்பகுதியில் இயேசுவானவர் தமக்குச் சீடராக விரும்புவோருக்கு மூன்று நிபந்தனைகளை முன் வைக்கிறார். அவற்றைச் சொன்ன சூழல் சுவாரஸ்யமாயிருக்கிறது. ''பெருந்திரளான மக்கள்'' அவரோடு சென்றுகொண்டிருக்கும்போது, அவர்களிடம் அவர் திரும்பிப் பார்த்து இக்காரியங்களைச் சொன்னார் (லூக் 14:25). ஆள் குறைப்பதில் ஆண்டவர் கைதேர்ந்தவர்! எகிப்தை விட்டு வெளியேறிய 30,00,000 பேரில் கானானுக்குள் நுழைய முடிந்தது இருவர் மட்டுமே. கிதியோனின் 32,000 பேரை 300 பேராய் ஆண்டவர் குறைத்தார் (நியா 7:2-6). இயேசுவின் பின்னால் சென்று கொண்டிருந்த ஆயிரங்களில் மேலறைக்குச் சென்றது 120 பேர்தான் (அப் 1:15). அழைக்கப்பட்டோர் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டோரோ சிலர். ஒன்றன்பின் ஒன்றாக ஆண்டவர் இம்மூன்று நிபந்தனைகளைக் கூறிய பின்னர், பெருங்கூட்டம் அவரை விட்டுக் கழன்றுவிட்டனர் என்றே நான் எண்ணுகிறேன். அவரது போதகப்பணியில் இது நெடுகவே



நடந்ததுதான் (யோ 6:60,66). நாம் இன்று ''சீடர்கள்'' என்ற பெயரைவிட ''விசுவாசிகள்'' என்பதையே அதிகம் பயன்படுத்துகிறோம். நடபடிகள் புத்தகத்தில் காண்கிறபடி, ஆதிச்சபையிலோ, ''விசுவாசிகள்'' என்பதை விடச் ''சீடர்கள்'' என்றே அவரைப் பின்பற்றுகிறவர்கள் பெரும்பாலும் அழைக்கப்பட்டனர். நான் எண்ணிப்பார்த்ததில் 10:1 என்றுதான் விகிதம் வருகிறது! பொதுவாகச் சொல்லப்படும் ஒரு காரியம்: ''ரஷ்யாவில் ஒருவன் இரட்சிக்கப்பட்டால், அவன் இரத்தசாட்சி; கொரியாவில் ஒரு வன் இரட்சிக்கப்பட்டால், அவன் ஒரு மிஷனரி; இந்தியாவில் ஒருவன் இரட்சிக்கப்பட்டாலோ அவன் ஒரு விசுவாசி, அவ்வளவுதான்!'' சீடத் துவத்திற்காய் இயேசுவானவர் விதித்துள்ள நிபந்தனைகளைச் சற்று விபரமாய்ப் பார்ப்போம் —

***(a) குடும்பப் பிணைப்புகள்:*** ''என்னிடம் வருபவன் தனது தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள் ஆகியோ ரையும், ஏன், தனது உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவன் எனக்குச் சீடனாயிருக்க முடியாது'' (லூக் 14:26). பேதுருவும் அந்திரேயாவும் தங்கள் ''வலைகளை'' விட்டுவிட்டு வந்தனர் (மத் 4:20). யாக்கோபும் யோவானும் தங்கள் ''படகையும் தந்தையையும்'' விட்டுவிட்டு வந்தனர் (வச 22). இவர்கள்தான் சீடர் வரிசையில் முதலாவது இணைந்தவர்கள். மத்தேயு தனது ''சுங்கத்துறை அலு வலகம்'' மற்றும் ''எல்லாவற்றையும்'' விட்டுவிட்டு வந்தார் (மத் 9:9; லூக் 5:27,28). இவர்களெல்லாரும் முழுநேரமாய் இயேசுவுக்குத் தொண்டாற்ற அழைக்கப்பட்டவர்கள். கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இவ்வித அழைப்பு கிடையாது. ஆனால், ஆண்டவர் விதித்த நிபந்தனை முழுநேரப்பணிக்கு அல்ல, ''சீடத்துவத்திற்கு!'' புரிகிறதா? முதலிடம் தேவனுக்கு, அடுத்துதான் குடும்பம். தேவனுக்கான நமது அர்ப்பணிப்பு நமது குடும்பத்திற்கான கடமைகளையும் மிஞ்சுகிறது. பிள்ளைகளும் ''கர்த்தருக்குள்தான்'' தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும் (எபே 6:1).

குடும்பக் காரியங்களுக்குமேல் தேவனுக்கடுத்தவற்றிற்கு முன் னுரிமை கொடுத்துப் பழகாதவர்களுக்கு முழுநேர இறைப்பணிக்கான

அழைப்பு வருமானால் அதற்குக் கீழ்ப்படியச் சிரமப்படுவர். மிஷனரிப் பணிக்காக விண்ணப்பிப்போர் எண்ணிக்கை மிகவும் சரிந்துள்ளது. விண்ணப்பிப்போரிலும் நன்கு படித்தவர் குறைவு. பெற்றோரும் இனத் தாரும் ஆர்வமுள்ள வாலிபர் நங்கையரைத் தடுத்து நிறுத்துவதே முக்கிய காரணம். மருத்துவரில்லாத பகுதிக்கு ஒரு மருத்துவப் பட்டதாரி சென்று பணியாற்ற விரும்பினால், அவனுக்கு உள்ளூரிலேயே மருத்துவமனை கட்டி அவனது கால்களைக் கட்டிப்போடப் பெற்றோர் முயலுகின்றனர்! அல்லது மிஷனரிப்பணி வாசனையேயில்லாத நங்கையை அவன் கழுத்தில் கட்டிவிடுகின்றனர்! கால்களில் கட்டு, கழுத்தில் கட்டு, பாவம் அவன் என்ன செய்வான்? கட்டுகளை விடுதலை நாயகனின் வீர வாள் அறுத்தெறியட்டும்! மத்தேயு 10:34-37இல் இயேசுவின் சமரச மற்ற வார்த்தைகளை வாசித்துப் பாருங்கள். இந்தியாவிலுள்ள தாங்க முடியாத வெப்பம் மற்றும் பரவியிருந்த மலேரியா போன்ற நோய்களின் காரணமாக, வெள்ளைக்கார மிஷனரிகள் பலர் தங்கள் குடும்பங்களை இங்கு கூட்டிவர முடியவில்லை. ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்ற பலரது கதையும் இதுதான். இவர்களில் பலர் ஒருமுறைகூட தங்கள் தாயகம் திரும்பவில்லை! இறையழைப்பிற்கு அவர்கள் தியாக மாய்க் கீழ்ப்படிந்ததாலேயே நாம் இன்று கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தானே நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம்? (ஆதி 12:1-3). நற்செய்தியைக் கேள்விப்படாமலேயே மக்கள் மடிய நாம் விட்டுவிடலாமா? வாலிபரே, நங்கையரே, ''சாவின் நிழலில்'' இறப்பை எதிர்நோக்கி உட்கார்ந்திருப்போரை மீட்டிட நாசரேத்தையும் நாகர் கோவிலையும் விட்டு நப்தலிக்கு இடம்பெயர்வீர் (மத் 4:13-16).

***(b) சிலுவை சுமத்தல்:*** ''தன் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்ற விரும்புபவன் எனக்குச் சீடனாய் இருக்க முடியாது'' (லூக் 14:27). திருமுழுக்குத் தொட்டியிலிருந்து வெளிவரும்போது நாம் பாடியதை நம்மில் பலரும் மறந்துவிட்டோம் —

*இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்;*
*பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்!*
*சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே;*
*பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்!*



நாம் சுமக்க அழைக்கப்பட்டிருப்பது ''கிறிஸ்துவின்'' சிலுவையை அல்ல, ''நமது'' சிலுவை! இதை நெடுகவே ஆண்டவர் வலியுறுத்தி வந்திருக்கிறார் (மத் 10:38; 16:24; மாற் 8:34; 10:21; லூக் 9:23; 14:27). சுமக்கும்படிக் கறுநிறத்தவரான சீமோன் வற்புறுத்தப்பட்டது ஒரே முறை நடந்த சரித்திரச் சம்பவம் (மத் 27:32). அவன் ஓர் அடிமையாய் இருந்திருக்கலாம். நமது சிலுவைகள் எண்ணிலடங்கா. அவற்றில் முக்கியமானவற்றைக் கிறிஸ்து மற்றும் பவுலின் வாழ்க் கையிலிருந்து இங்குச் சுருக்கமாய்த் தியானிப்போம் —

■ ''தவறாய்ப் புரிந்துகொள்ளப்படல்'' எனும் சிலுவையை (Cross of Misunderstanding) உண்மையான கிறிஸ்தவன் எவனும் தவிர்க்க முடியாது. ''இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்; மூன்றே நாளில் இதைக் கட்டியெழுப்புவேன்'' என்றார் இயேசு (யோ 2:19). அவர் தமது சொந்த உடலாம் ஆலயத்தைக் குறித்தே பேசினார்; யூதரோ எருசலேம் தேவாலயத்தைக் குறித்துப் பேசியதாய்த் தவறாய்ப் புரிந்துகொண்டனர் (வச 20,21). இது அவருக்கெதிரான குற்றச்சாட்டாகவும் கேலியாகவும் உருவெடுத்தது (மத் 26:60,61; 27:40). பரிசேயரது புளித்த மாவு குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி அவர் தமது சீடரிடம் சொன்ன போது, கட்டுச்சோறு எடுத்து வராததால் இப்படிச் சொல்கிறார் என்று நினைத்தனர் (மத் 16:6,7). அவரோ பரிசேயர், சதுசேயரது துர்வுப தேசத்தையே மனதில் கொண்டிருந்தார் (வச 12). எவரையும் பாரப் படுத்தக்கூடாது, எவரையும் சாதகமாய்ப் பயன்படுத்தக்கூடாது என்பதில் அப்போஸ்தலன் பவுல் மிகவும் கவனமாயிருந்தார். மக்களோ தங்களை அவர் ''தந்திரமாய்'' வஞ்சித்தார் என நினைத்தனர் (2 கொரி 12:16,17).

■ ''தூற்றப்படுதல்'' எனும் சிலுவைக்கும் (Cross of Scandal) தேவ ஊழியர் எவரும் தப்பமுடியாது. இயேசுவின் கன்னிப்பிறப்பு அதிகம் பரவியிருந்த அரட்டைப் பேச்சு (யோ 8:41). பல்லாண்டுகள் இது அடங்கவில்லை என்றே எண்ணுகிறேன். பவுலும் அவரது ஊழியரும் ''யாருக்கும் தீங்கிழைக்கவில்லை; யாரையும் வஞ்சிக்கவில்லை,'' ஆனாலும் அவர்களை இகழ்ந்தோரும் தாக்கியோரும் அநேகர். அவர் களோ போற்றலையும் தூற்றலையும், புகழலையும் இகழலையும் ஒன்று

போல் பாவிக்கப் பழகியிருந்தனர் (2 கொரி 7:2; 6:8). மாலையிட்டாலும் மண்ணள்ளிப்போட்டாலும் எல்லாம் அவர்களுக்கு ஒன்றுதான்! ''ஓசன்னா'' என்று மக்கள் ஞாயிறன்று ஆர்ப்பரிப்பார்கள்; வெள்ளியன்றோ ''ஒழித்துக்கட்டுங்கள்'' என்று அலறுவார்கள்! இதுதான் உலகு, இதுதான் மார்க்கம்!

■ ''ஒதுக்கப்படுதல்'' அல்லது ''புறக்கணிக்கப்படுதல்'' எனும் சிலுவை (Cross of Rejection) பளு நிறைந்தது. சங்கீதம் 118:22இலுள்ள முதுமொழி இயேசுவில் நிறைவேறிற்று. வேலைக்காரரை மட்டுமல்ல, தோட்டத்தின் சொந்தக்காரரது மகனையே கொன்றுவிட்ட கொடிய குத்தகைக்காரர் உவமையைச் சொன்னபோது ஆண்டவர் இதனை மேற்கோள் காட்டினார். ''கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டிடத்திற்கு மூலைக்கல் ஆயிற்று'' (மத் 21:42). ஏசாயா தீர்க்கதரிசனத்தின்படி இயேசுவே ''மனிதரால் புறக்கணிக்கப்பட்டவர்'' (ஏசா 53:3). இயேசுவிடம் பிலாத்து விசாரணை நடத்திக்கொண்டிருந்தபோது ''இவன் ஒழிக'' என்று மக்கள் கத்தினர் (லூக் 23:18). புறக்கணிக்கப்படுதல் எனும் சிலுவையைக் குறித்துப் பவுலின் அறிக்கையைக் கேளுங்கள்: ''இதுவரை நாங்கள் உலகின் குப்பை என்றும், அனைவரது கழிவுப் பொருள் என்றுமே கருதப்படுகிறோம்'' (1 கொரி 4:13). வேண்டவே வேண்டாம் என்று ஒருவர் ஒதுக்கப்படும்வரை வேண்டும் வேண்டும் என்று அவர் விரும்பப்படமாட்டார். தேவையில்லை என்று தள்ளப்பட்டதே ஒரு நாள் தேவைப்படும்!

■ அடுத்து வருவது ''உடல் பலக்குறைவு'' எனும் சிலுவை (Cross of Physical Weakness). நமதாண்டவர் ''பலக்குறைவினால்'' சிலுவையில் அறையப்பட்டார் (2 கொரி 13:4). இது உடலில் பலக்குறைவு, வேதனை, வலி ஆகியவற்றையே குறிக்கும். இல்லையேல், அவர் ஆன்மீகத்தில் பலக்குறைவாயிருந்தது எப்போ? அவ்விதமே, கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதியது: ''நான் பலக்குறைவுள்ளவனாய் உங்கள் நடுவிலிருந்தேன்'' (1 கொரி 2:3). கலாத்திய நாட்டிலுள்ளோருக்குப் பணியாற்றும்போது அவருக்கு ''உடல்நலக்



குறைவு'' இருந்தது (கலா 4:13). அதை அவர் ''உடலில் ஏற்பட்ட சோதனை'' என்று குறிப்பிடுகிறார் (வச 14). நூறு சதவீதம் சுகம், பலம் உள்ளவர் நம்மில் யாரோ? ஆண்டவரைப் பார்த்து நாம் கதறுகையில், நமது முட்களில் எல்லாவற்றையும் அல்ல, சிலவற்றை மட்டுமே அவர் எடுத்துப்போடுகிறார் (2 கொரி 12:7-10).

■ ''தனிமை'' எனும் சிலுவை (Cross of Loneliness) கொடூரம். இயேசுவுக்கு எப்பொழுது சீடர் அதிகம் தேவைப்பட்டனரோ அப்பொழுது அவர்கள் அயர்ந்து தூங்கிவிட்டனர் (மத் 26:40). எவ்வளவு பரிதாபமாய் அவர் கேட்கிறார் பாருங்கள்: ''ஒரு மணிநேரம்கூட என்னோடு விழித்திருக்க முடியாதா?'' வாள்களோடும் தடிகளோடும் அவர் பிடிக்கப்பட்டபோது ''சீடர் யாவரும் அவரைவிட்டுப் பறந்தனர்'' (வச 56). தன்மீது நார்ப்பட்டுத்துணி மட்டுமே போர்த்திக்கொண்டு அவருடன் வந்துகொண்டிருந்த ஒரு ''வாலிபன்'' துண்டெடு, துணியெடு என்று ஓடியதைப் பார்க்கணுமே! (மாற் 14:51,52). பவுலுக்கும் இதே அனுபவம்தான்: ''நான் முதன்முறை வழக்காடியபோது எவரும் என் பக்கம் இருக்கவில்லை; எல்லாரும் என்னைக் கைவிட்டனர்'' (2 தீமோ 4:16). எத்தனையோ பேர் நம்முடனும் நமக்காகவும் இருக்கும் வேளைகளிலும் தனிமை நம்மை வாட்டலாம். தலைமைப் பொறுப்புகளிலிருக்கும் பலரது அனுபவம் இதுவே. (அனுபவம் பேசுகிறது!) தூக்கம் வராததால் புரண்டுகொண்டிருக்கும்போது அவர்கள் சொல்வது: ''நான் தூக்கமின்றித் தவிக்கிறேன்; கூரைமீது ஒண்டியாய் உட்கார்ந்திருக்கும் குருவிபோல் இருக்கிறேன்'' (சங் 102:7). விதவைகளைப்பற்றிச் சொல்லவே வேண்டாம்!

***(C) உள்ளதையெல்லாம் விடுதல்:*** நாம் தியானித்துக்கொண்டிருக்கும் அத்தியாயத்தின் (லூக் 14) 33ஆம் வசனத்தில் சீடத்துவத்திற்கான தவிர்க்க முடியாத மூன்றாம் நிபந்தனையை ஆண்டவர் முன்வைக்கிறார்: ''தனது உடமையையெல்லாம் விட்டுவிடாத எவனும் எனக்குச் சீடனாயிருக்க முடியாது.'' இரு எடுத்துக்காட்டுகள் மூலம் இதனை விளக்குகிறார்: ஒன்று கோபுரம் கட்டுதல், அடுத்தது போர்

தொடுத்தல் (வச 28-30; 31-32). ‘‘இது என்னால் முடியுமா?’’ என்று கேட்டுக்கொள்ளவேண்டும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். இறைப் பணியில் இறங்குவதற்கு உற்சாகம் மட்டும் போதாது. அரைகுறையாக விடப்பட்ட வேலைகள் கொஞ்சநஞ்சமா? எல்லா விபரங்களும் வசதி களும் கிடைத்த பின்னர்தான் தேவனுக்காய் அடியெடுத்து வைக்க வேண்டும் என்பது இங்கு பொருளல்ல. அப்படியானால் விசுவாசத்திற்கு இடமில்லையே! ‘‘எங்கே போகிறேன்? அங்கே என்ன நடக்கும்?’’ என்றெல்லாம் தெரியாமல்தான் ஆபிரகாம் புறப்பட்டுச் சென்றார் (எபி 11:8). தேவன் எனக்குத் தரும் பணியை முடித்திட எதையும் விட்டுவிட நான் ஆயத்தமா என்பதே கிரயத்தைக் கணக்கிடல் என்பதற்குப் பொருள் (லூக் 14:33). அவர் தரும் வேலையை முடிக்கும்வரை எந்தச் சிரமத் தையும் எவ்விதப் பாடுகளையும் ஏற்க மனமுண்டு என்பதே இது. இவ்வுலகில் எத்தனையோ இழப்புகள் எனக்கு நேரிடலாம்; ஆனால் அவ்வுலகில் பெறப்போகும் பரிசுகளை மனதிற்கொண்டு இடையில் விட்டுவிடாது முன்செல்வேன் (எபி 11:9). முழுமூச்சாய்ப் பிசாசு எனக்கெதிராய்ச் செயல்படுவான்; நானோ எனது திறமை அல்லது வலிமைமீது சார்ந்திராமல் கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்ல மையிலும் பலமடைவேன் என்று திடமாய் நிற்பேன் (எபே 6:10-12). ஆன்மீகப் படைக்கலன்களை ஒருபோதும் களையமாட்டேன்; ஜெபத் தில் விழித்திருப்பேன் (வச 13-18). போராட்டங்கள் இருந்துகொண்டே யிருக்கும்; நானோ முன் வைத்த காலைப் பின்வைக்காது நகர்ந்து கொண்டேயிருக்கவேண்டும். எத்தோல்வியும் முடிவானதல்ல; எனவே விட்டுவிடக்கூடாது. காட்டாறுகளைக் கடக்கும்போதும் காட்டுத்தீ வழியே நடக்கும்போதும் *இயேசு என்னைக் கைவிடமாட்டார்* எனப் பாடிக்கொண்டே முன்செல்வேன் (ஏசா 43:2; சங் 93:3,4).

உப்பு என்பதனை ஓர் எடுத்துக்காட்டாய்க் கொண்டு தனது சிற் றுரையை ஆண்டவர் நிறைவு செய்கிறார் (லூக் 14:34,35). உப்பு அதன் உப்புத்தன்மையை இழந்துவிட்டால் புல் பூண்டு முளைப்பதைத் தடுக்க அதனை நடைபாதையில் பரப்பிவிடுவார்கள். ஒருவரது துவக்க கால அழைப்பை இழந்துவிடுவதையே இது குறிக்கும். மேற்கண்ட பத்தி களில் வியாக்கியானிக்கப்பட்ட மூன்று பகுதிகளில் நாம் கடைசி வரை



ஊக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டும்: (a) உங்களது அழைப்பை இழந்துவிடச் சொந்தபந்தங்களுக்கு இடங்கொடுக்காதீர் கள் (வச 26); (b) உங்கள்மீது தேவன் சுமத்தும் சிலுவைகளைத் தூக்கி யெறிந்துவிடாதீர்கள் (வச 27); (c) இறையரசின் விரிவாக்கத்திற்காக எந்த இழப்பையும் ஏற்கத் தயங்காதீர்கள் (வச 33). பிதாவானவராகிய தேவன் *உங்களுடன்* இருக்கிறார்; குமாரனானவராகிய தேவன் *உங்க ளுக்காக* இருக்கிறார்; ஆவியானவராகிய தேவன் *உங்களுக்குள்* இருக் கிறார்; இவர்கள் மூவரும் நீங்கள் உங்கள் ஓட்டத்தை முடிக்கும்வரை ஊக்கத்தைக் கைவிடாதிருக்க உதவவே இருக்கின்றனர். அல்லேலூயா!

## 5) மத்தேயு 11:15 கடைசிக்கால ஊழியம்

*‘‘கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!’’*

திருமுழுக்கினர் யோவானையும் அவரது ஊழியத்தையும் குறித்துப் பேசியபோது சவால் நிறைந்த இவ்வார்த்தைகளை இயேசு கூறினார். கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாய் யோவான் வந்தார். அவரது மறுவருகைக்கு முன்னோடிகளாய் இருக்கும்படி நாம் திருச் சபையாய் அழைக்கப்பட்டிருக்கிறோம். எனவே கடைசிக்கால ஊழி யத்தில் தெளிவுடன் ஈடுபடுவதற்கான அழைப்பே இங்கு கருத்து. இதன் சூழமைவைப் புரிந்துகொள்ள மத்தேயு 11:2-19ஐயும், அதற்கு இணை யான லூக்கா 7:18-35ஐயும் வாசித்துப்பாருங்கள்.

ஏரோது அவனது சகோதரன் பிலிப்புவின் மனைவியுடன் கொண் டிருந்த தகாத உறவை யோவான் கண்டித்ததால் அவர் சிறையிலடைக் கப்பட்டார் (மத் 14:3,4; லூக் 3:19,20). அவரை மக்கள் ஒரு தீர்க்கதரிசி என்று கணித்திருந்ததால், அவர்களுக்குப் பயந்து, அவரைக் கொலை செய்வதை ஏரோது தள்ளிப்போட்டுக்கொண்டிருந்தான் (மத் 14:5). பழைய ஏற்பாட்டு யோசேப்பு போல, வேறொருவரது பாவத்திற்காய் யோவான் சிறை செல்லவேண்டியதாயிற்று. இது பரவலாக நடப்பது தான். நிரபராதிகளான சிறைவாசிகள் நமது சிறைகளில் ஏராளமாய் இருக்கின்றனர் என்று கிரமமாய்ச் சிறைச்சாலை ஊழியத்திற்குச்

செல்லும் எனது நண்பர்களில் சிலர் என்னிடம் சொல்லியிருக்கின்றனர். ஆம், சிறைச்சாலைக்கு உள்ளேயிருப்பவர்களைவிட வெளியேதான் கொலையாளிகளும், திருடரும், விபச்சாரக்காரரும் அதிகம். சிறைவாசிகள்மீது இயேசுவுக்குக் கருணையிருந்தது. அவர்களைச் சந்திப்பது அவரைச் சந்திப்பதாம் (மத் 25:36இ). எபிரெயர் நிருபம் தரும் அறிவுரை: ''சிறைப்பட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டவர்களாக எண்ணி அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால், துன்புறுத்தப்படுபவர்களை மறவாதீர்கள்'' (எபி 13:3). பிரியமானவர்களே, முடிந்த வேளைகளிலெல்லாம் சிறைச்சாலை ஊழியக்குழுக்களோடு சேர்ந்துகொள்ளுங்கள்; முடிந்த வகைகளிலெல்லாம் அவர்களுக்கு ஆதரவு தாருங்கள். தேவனது புன்முறுவல் உங்கள் மீதிருக்கும் (நீதி 24:11,12).

கம்பி எண்ணிக்கொண்டிருந்த யோவானுக்கு மனதில் ஒரே குழப்பம்: ''இயேசுவுக்கு நான் பிரசங்க மேடை அமைத்துக்கொடுத்தேன்; நானோ சிறையிலடைக்கப்பட்டிருக்கிறேன். 'சிறைப்பட்டோருக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் விடுதலை' அறிவிக்கவே அவர் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளதாய்ச் சொன்னாரே (லூக் 4:18). இதுதான் மேசியாப்பணியின் பிரகடனமா? ஒன்றுமே புரியவில்லையே!'' தனது சீடரில் இருவரை இயேசுவிடம் அனுப்பி, ''வரவிருப்பவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கணுமா?'' என்று கேட்டுவரச் சொன்னார் (மத் 11:2,3). கிறிஸ்துவின் வல்ல செயல்களைக் கேள்விப்பட்ட பின்னர்தான் இவ்விதக் கேள்விகளெல்லாம் எழுந்தன (வச 21)! இப்படிப்பட்ட இருட்டான வேளைகள் நமக்குப் புதிதல்லவே. அவ்வேளைகளில் நமக்குள் அலைமோதும் எண்ணங்கள்: ''எத்தனையோ பேருக்குக் கிறிஸ்துவை அறிமுகம் செய்து அவரோடு சேர்த்துவிடுகிறேன் (யோ 1:36,37). மக்களை ஆழமான மனந்திரும்புதலுக்குள் வழிநடத்தி திருமுழுக்கு கொடுக்கிறேன் (மத் 3:2,5,6). பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறித்தும் அவர்களுக்குப் போதிக்கிறேன் (வச 11). அவர்களது வாழ்க்கை கனிநிறைந்ததாயிருக்கும்படி அவர்களுக்கு அறிவுரைகள் வழங்குகிறேன் (லூக் 3:18). மார்க்கத்



தலைவர்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும் இத்தலைமுறையினருக்குத் தேவனது ஆலோசனையை அறிவிக்கிறேன் (7:30). என்னை முடிந்த அளவு மறைத்துக்கொண்டு கிறிஸ்துவையே உயர்த்துகிறேன் (யோ 3:30). அவரைப் பரலோக மணமகனாய் அறிவித்து, இவ்விதம் அவரது மறுவருகைக்காய் மக்களை ஆயத்தப்படுத்துகிறேன் (வச 29). இதற்கு மேல் நான் என்னதான் செய்ய முடியும்? பின்னை ஏன் எனக்குச் சிறைவாசம்?''

நண்பரே, மனுக்குலச் சரித்திரமாயிருக்கட்டும், திருச்சபைச் சரித்திரமாயிருக்கட்டும், இவ்விதக் கலக்கமான, குழப்பமான சூழலில் திணறும் முதல் நபர் நீங்களல்ல. கிறிஸ்தவ வாழ்விலும் ஊழியப் பாதையிலும் உயரங்களுக்குச் செல்ல விரும்பும் எவரும் செலுத்தவேண்டிய கிரயம் இது. யோவானைப்பற்றி இயேசுவின் சான்று: ''தீர்க்கதரிசியிலும் மேலானவர் ... தீர்க்கதரிசிகளிலெல்லாம் பெரியவர்'' (மத் 11:9,11). தீர்க்கன் மல்கியா முன்னுரைத்தபடி ''வரவேண்டிய எலியா'' இவர்தான் என இயேசு உறுதிப்படுத்தினார் (வச 14; மல் 4:5,6). திருச்சபையின் இறுதிக்கால தீர்க்கதரிசனப்பணியின் வரைபடம் இங்கு நமக்குக் கிடைக்கிறது. திருச்சபை முழுவதும் தீர்க்கதரிசனச் சமுதாயமாய்த் திகழவேண்டும். கடைசி நாட்களுக்கான யோவேலின் தீர்க்கதரிசனமும் இதுவே (அப் 2:16-18). ''குமாரர்கள், குமாரத்திகள், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள்'' இப்படி எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லுவர்! எவ்வயதினரென்றாலும், எப்பாலினத்தவரென்றாலும், எவ்வேலையிலிருப்பவரென்றாலும் உள்ளடக்கம்! உடனே உங்கள் மனதில் எழுவது: ''எல்லாரும் தீர்க்கதரிசிகளா?'' என்ற பவுலின் கேள்விக்கு விளக்கம் என்ன? (1 கொரி 12:29). இதற்கான நேரடிப் பதில் 'எல்லாரும் தீர்க்கதரிசிகளல்ல' என்பதே. இங்கு முக்கியமாகச் சபைத் தலைவர்களது ஊழிய வரங்களைக் குறிப்பிட்டே பவுல் பேசிக்கொண்டிருக்கிறார் (வச 28). எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? இல்லை! ஆனால் எல்லா விசுவாசிகளும் ஒருவருக்காக ஒருவர் சுகமடைய ஜெபிக்கலாம், கர்த்தர் அதனைக் கேட்டு நோயாளியை எழுப்புவார் (யாக் 5:16). விசுவாசிக்கிறவர்களை எத்தனையோ அடையாளங்கள்

தொடரும் (மாற் 16:16-18). எந்த விசுவாசியும் கிறிஸ்துவின் பெயரால் பிசாசுகளைத் துரத்தலாம். இவ்வுபதேசத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள *''தீர்க்கதரிசி-ஆசாரியர்-இராஜா''* என்ற எனது 112-பக்க நூலை வாசியுங்கள்.

பிரசங்க ஊழிய நண்பர்களே, பிரசங்கபீடத்தில் உங்களது வார்த்தைகளில் தீர்க்கதரிசனக் கூர்மை இருக்கும்படி, பிரசங்க ஆயத்தத்தின்போது புதிய அபிஷேகம் நாடித் தேவப் பிரசன்னத்தில் காத்திருங்கள். தீர்க்கதரிசனத் தொனியுடன் கூடிய பிரசங்கங்கள் கேட்போரை உலுக்கும், உடைக்கும், உருக்கும், உருவாக்கும், உந்தித்தள்ளும். இதுதான் ''பரலோகத்தின் பரிசுத்தப் பலவந்தம்'' என்பது (மத் 11:12). கடைசிக் காலப்பணி என்று நாம் குறிப்பிடும் இதில் *முன்னறிவிப்பு* (foretelling) என்பதற்கு அதிக இடமில்லை. ஆமென் என்று முடியும் வெளிப்படுத்தல் புத்தகம் நமக்குக் கிடைத்த பின்னர் முன்னறிவிக்க என்ன இருக்கிறது? கடினமான வேத உபதேசங்களைப் பயமோ பாரபட்சமோ இல்லாது ஓங்கியடித்துப் பேசுவதே இன்றையத் தேவை. தீர்க்கதரிசிகளிலெல்லாம் பெரியவராகிய யோவான் சொன்னதுபோல, 50 சதவீதத்தை எளியவருக்குக் கொடுத்துவிடும்படிச் செல்வந்தருக்கு அறிவுறுத்துங்கள்; லஞ்சம் வாங்கக்கூடாதென்று அதிகாரிகளுக்கு அழுத்திச் சொல்லுங்கள்; அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்யக்கூடாதென்று போலீஸ்காரர்களுக்கு அஞ்சாது கட்டளையிடுங்கள்; இப்படியெல்லாம் நேரடிச் செய்திகள் (forthright messages) வரவேண்டும் (லூக் 3:10-14). திருவசனம் என்பது ஒரு பட்டயம்; அது வெண்ணெய் தடவும் கத்தியல்ல (எபே 6:17)! அது கேட்போரின் மூடல்களைக் கிழித்தெறிந்து தேவனது பார்வைக்குமுன் அவர்களை நிர்வாணமாய் நிற்கச்செய்யும் (எபி 4:12,13). நான் கட்டுரைகள் எழுத உட்காரும்போதெல்லாம் தீர்க்கதரிசன அபிஷேகம் உன்னதத்திலிருந்து வர நாடுகிறேன். சாப்பிடுகிறவர்களுக்குத்தானே ருசி தெரியும்? தலையிலிருந்து புறப்பட்டு வருவதற்கும் இதயத்தின் வழியே புரண்டோடி வருவதற்குமுள்ள வேறுபாட்டினை ஆன்மீகச் சிந்தையுள்ளோர் புரிந்துகொள்வார்கள் (1 கொரி 2:10-14). குடும்பங்களுக்கும் சபைகளுக்கும் சமுதாயங்களுக்கும் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவது தீர்க்கதரிசனப் பணியே



(லூக் 1:17; மல் 4:5,6). நமது பிரசங்கங்களில் தீர்க்கதரிசனக் குரல் இருக்குமானால், உலர்ந்த எலும்புகளும் (dry bones) வீர சேனையாய் (dynamic battalion) எழும்பும் (எசேக் 37:1-10). *''உயிர் பெறுவீர், ஒன்று கூடுவீர், உலர்ந்த எலும்புகளே, நீங்கள் அறியா ஒருவர் உங்கள் நடுவில் வந்து விட்டார்''* என்று எக்காளம் ஊதும்!

தந்திரத் தீர்க்கதரிசிகள் (pseudo-prophets) மற்றும் தலையணைத் தீர்க்கதரிசிகள் (pillow-prophets) மட்டுமே பிரபலமடைவர் (எசேக் 13:1-9). பரமனது பலிபீடத்திலிருந்து கொதிக்கும் செய்திகளைக் கொண்டுவருவோரை உலகம் வரவேற்காது. அது யோவானைப் ''பிசாசு பிடித்தவன்'' என்றும், இயேசுவைக் ''குடிகாரன்'' என்றும் அழைக்கும் (மத் 11:18,19). பரவசப்படுத்தும் அடையாளங்களையே தேடிக் கொண்டிருக்கும் இந்த ''விபசாரமும் பாவமுமுள்ள சந்ததியின்'' நடுவில் கன்னித் திருச்சபை ஒருபோதும் பாராட்டு பெறாது (மத் 12:39; 16:4; மாற் 8:38). எனவேதான் ''நெறிகெட்ட இத்தலைமுறையினரிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்'' என்பதே திருச்சபையின் பிறந்தநாள் செய்தியாயிருந்தது (அப் 2:40). அன்பர்களே, ஒருபோதும் பிரபலம் (popularity) நாடாதீர்கள்; மாறாகச் சமுதாயத்தில் தாக்கம் (impact) ஏற்படுத்த முயலுங்கள். பிசாசானவனின் பெரும்பான்மையினருக்கு டாட்டா சொல்லிவிட்டுப் பிதாவானவரின் சிறுபான்மையினருடன் ஒட்டிக்கொள்ளுங்கள். Shun the devil's majority and join God's minority. சிறுமந்தைக்கல்லவோ இறையரசைக் கொடுக்கப் பிதாவானவர் பிரியமாயிருக்கிறார்? (லூக் 12:32). நீங்கள் சமரசம்பண்ணி ''உலகிற்கு நண்பன்'' என மாற விரும்பினால் ''உன்னதருக்கு எதிரி'' என்றாகிவிடுவீர்கள் (யாக் 4:4). இரண்டிற்கும் இடையில் நிற்க முடியாது. ''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!''

## 6) மத்தேயு 13:43ஆ முடிவுக்காலத்தில் விழிப்பு

*''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!''*

ஆண்டவர் அடிக்கடி சொல்லிவரும் பிடிப்பான இவ்வார்த்தைகளைக் களைகள் பற்றிய உவமையின் முடிவில் கூறினார் (மத் 13:24-30,

36-43). விண்ணரசை விளக்கிட மத்தேயு 13ஆம் அத்தியாயத்தில் ஆண்டவர் சொன்ன ஏழு உவமைகளில் இது இரண்டாவதாகும். இவ் வரிசையில் முதலாவதாகிய விதைக்கிறவன் உவமையை இக்கட்டு ரையில் இரண்டாம் குறிப்பாய்த் தியானித்தோம். இவ்விரு உவமைகள் மட்டுமே ''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்'' எனும் வார்த்தை களுடன் முடிவுறுகின்றன. இப்பொழுது நாம் தியானிக்கவிருக்கும் களைகளைப் பற்றிய உவமையானது ''இந்த யுகத்தின் முடிவைக்'' குறிக்கும் (வச 39,40). எனவே இங்கு முடிவுக்காலத்தில் விழிப்பா யிருக்க நமக்கு ஓர் அழைப்பு வருகிறது.

பணியாட்கள் ''தூங்கும்போது'' வயலின் சொந்தக்காரரின் பகைவன் விதைக்கப்பட்டிருந்த கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான் (மத் 13:25). முடிவுக்காலத்தில் நடைபெறவிருக்கும் விசுவாசத் துரோகத்தை இது முன்னறிவிக்கிறது. முடிவுக்காலத்தின் முதல் அடையாளமாய் இயேசுவானவர் குறிப்பிட் டதே கள்ளத்தீர்க்கர் மூலம் வரும் வஞ்சகமே (24:4,5,11). எபேசு சபை மூப்பர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் கொடுத்த பிரிவுரையில் எப்படி எச்சரித்துள்ளார் பாருங்கள்: அப் 20:29-31, ''நான் உங்களை விட்டுச் சென்ற பின்பு கொடிய ஓநாய்கள் உங்களுக்குள் நுழையும் என்பது எனக்குத் தெரியும். அவை மந்தையைத் தப்பவிடாதவாறு தாக்கும். உங்களிடமிருந்தும் சிலர் தோன்றிச் சீடர்களையும் தங்களிடம் திசை திருப்புமளவிற்குச் சத்தியத்தைத் திரித்துக் கூறுவர். எனவே விழிப் பாயிருங்கள்!'' ஆம், துர்வுபதேசங்கள் வெளியேயிருந்தும் நுழையலாம், உள்ளேயிருந்தும் தலைதூக்கலாம். வெளியிலிருந்து வருவதைவிட உள்ளேயே எழும்புவது அதிக ஆபத்தானது. முழுவதும் தவறாக அல்லது சத்தியத்தின் ஒரு பகுதியை மட்டும் போதிக்கும் பிரபல ஊழியர் ஒருவரால் ஓரிரு நபர்கள் கவரப்பட்டிருக்கலாம். அவர்கள்தான் பரி சேயரின் புளித்த மாவு போல எல்லாவற்றையும் புளிக்கச் செய்துவிடுவர். சபை மேய்ப்பர்கள் கிரமமாக ஆரோக்கிய உபதேசத்தைப் போதித்து மிகுந்த கவனமாயிருப்பதே மந்தையைப் பாதுகாக்க ஒரே வழி (2 தீமோ 4:2-4: தீத் 2:1). ''பயப்படாதே, பயப்படாதே'' என்ற பிரசங்கங்களையே



ஞாயிறுதோறும் பிரசங்கித்துக்கொண்டிருப்பது துர்வுபதேச வெள்ளங் களுக்கு மடையைத் திறந்துவிடும். வரவிருக்கும் ''கர்த்தரது கோபம்'' குறித்த பயபக்தியான செய்திகள் எங்கே? (2 கொரி 5:11). பால் குடிக் கும் பருவத்திலேயே சபையாரை நெடுங்காலம் வைத்திராதிருங்கள். கறியை மென்று பழகட்டும். அப்பொழுதுதான் அவர்கள் நிதானித்துப் பகுத்தறியும் கலையில் தேறுவர் (எபி 5:12-14).

களைகளை உடனே பிடுங்கிவிடட்டுமா என்று இவ்வுவமையில் பணியாளர் நிலக்கிழாரிடம் கேட்டனர். அவரோ அறுவடையின்போது அறுவடையாளர்கள் முதலாவது களைகளைப் பிடுங்கிச் சேர்த்து எரித்தழிக்கும்வரை கோதுமையோடு களைகளும் வளரட்டும், காத் திருப்போம், என்று சொல்லிவிட்டார் (மத் 13:28-30). களைகளைப் ''பொல்லாங்கனின் புத்திரருக்கு'' இயேசு ஒப்பிட்டார் (வச 38). முழுக்க முழுக்க விசுவாசிகள் மட்டுமே இருக்கும் சபை எங்கும் கிடையாது. எல்லாச் சபைகளிலும் பெயர்க் கிறிஸ்தவர்கள் அல்லது பெயர் விசு வாசிகள் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்கள் திருமுழுக்கு பெற்றி ருப்பார்கள், ஆனால் மறுபடி பிறந்திருக்கமாட்டார்கள். அவர்கள் இஸ்ம வேல்கள், ஈசாக்குகள் அல்ல. இயேசுவின் பன்னிருவரிலேயே ''கேட் டின் மகன்'' ஒருவன் இருந்தானே (யோ 17:12). தெரிந்துகொள்ளப்பட்ட இறைமக்கள் நடுவிலும் ''பலவித இனத்தார்'' இருக்கத்தான் செய்வர் (எண் 11:4). ''செம்மறியாடுகளும்'' ''வெள்ளாடுகளும்'' சேர்ந்தே மேயும் (மத் 25:32). சபை அங்கத்தினரிலும் சிலர் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களாய் இருக்க வாய்ப்புண்டு (7:15). பெர்கமு சபை யில் பிலேயாம் கூட்டத்தாரில்லையா? (வெளி 2:14). தியத்தீரா சபை யில் யேசபேல் போன்ற சகோதரிகள் இல்லையா? (வச 20). சில சபை களில் நிசக் கிறிஸ்தவர்களைவிடப் பெயர்க் கிறிஸ்தவர்கள்தான் அதிகம் இருப்பார்கள். இந்நிலையை உடனே மாற்றிவிட முடியாது; ஆனால், இங்குதான் சபைத் தலைவர்களது பொறுப்பு மிக அதிகரிக்கிறது. உண்மையான மனந்திரும்புதல் மற்றும் இதயபூர்வமான விசுவாசம் ஆகியவற்றின் மூலம் அங்கத்தினர் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுடன் உயிருள்ள இணைப்பு ஏற்படுத்திக்கொள்ள அவர்களை வழிநடத்த வேண்டும். குறைமாதக் குழந்தைகளுக்குப் பிரச்னைகள் இல்லா திருக்காது.

களைகள் பற்றிய உவமை மற்றும் இரு உவமைகளை இயேசு கூறிய பின்னர், அவர் மக்களை அனுப்பிவிட்டு, வீட்டிற்குள் சென்றபோது, சீடர்கள் அவரிடம் கேட்டது: ''வயலில் தோன்றிய களைகள் பற்றிய உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறும்'' (மத் 13:36). ஆம், ஒவ்வொரு முறை நாம் பைபிளைத் திறக்கும்போதும் மறக்காது ஏறெடுக்க வேண்டிய ஜெபம்: ''ஆண்டவரே, உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்'' (சங் 119:18). இறைவார்த்தைகளைப் ''புரிந்துகொள்ளும் உணர்வுக்காய்'' (understanding) சங்கீதக்காரன் எத்தனை முறை வேண்டுகிறார் பாருங்கள் (வச 34,73,125,144,169). திருமறைத் தியானத்தில் ''தரித்திருப்பதின்'' (sustained meditation) தேவை இங்குதான் தெளிவாகிறது. துரித வுணவு யுகத்திலிருக்கும் நாம் இக்கலையை மறந்துவிட்டோம். சிரமமெடுத்து வேதத்தை ஆராய்வதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களே ''மறைந்திருக்கும் புதையல்களைத்'' தோண்டியெடுக்க முடியும் (நீதி 2:4,5). ''ஆற்றோரத்தில் கூழாங்கற்கள்தான் கிடைக்கும்; ஆழ்கடலுக்குள் சென்றால்தான் முத்துக்கள் கிடைக்கும்'' என்று நான் அடிக்கடி சொல்லுவேன்! ஆராய்ச்சி வேதங்கள் மற்றும் வேத ஆராய்ச்சி உதவி நூல்களைத் தாராளமாய்ப் பயன்படுத்துங்கள். பாதுகாப்பான ஆராய்ச்சி நூல்களைத் தெரிந்தெடுக்க *"Unless someone guides me"* என்ற எனது 36-பக்க ஆங்கிலக் குறுநூல் உங்களுக்குதவும்.

## 7) வெளிப்படுத்தல் 2 & 3 ஆதிநிலையேகுதல்

*''காதுள்ளவன் கேட்கட்டும்!''* (வெளி 2:7,11,17,29; 3:6,13,22).

சிந்திக்க வைக்கும் இவ்வார்த்தைகளை இயேசுவானவர் இதுவரை பொதுமக்கள் அல்லது தமது சீடர்களுடன் பேசும்போது பயன்படுத்தினார்; அதைத்தான் இக்கட்டுரையின் முதல் ஆறு உப தலைப்புகளில் தியானித்தோம். இப்பொழுது அவர் குறிப்பாகத் திருச்சபை(கள்) நோக்கிப் பேசுகிறார். முதல் ஆறும் அவர் பூவுலகில் இருந்தபோது கூறியவை; இங்கு காணும் ஏழும் அவர் விண்ணுலகிலிருந்து பேசியவை!



மண்ணுலகோ விண்ணுலகோ அதே வார்த்தைகளை நமதாண்டவர் பயன்படுத்துகிறார். வெளிப்படுத்தல் 2 மற்றும் 3ஆம் அத்தியாயங்களில் இவ்வாசகத்தை ஏழு முறை சொல்லுகிறார்! அப்படியானால் இது எவ்வளவு முக்கியமானது என்று பாருங்கள். ஏழு சபைகளில் ஒவ்வொன்றிற்கும் அவர் ஒவ்வொரு விதமாய்ப் பேசுகிறார். ஆனால் அடிப்படையில், அனைத்துமே மனந்திரும்புதல் மற்றும் ஆதிநிலையேகுதலுக்கான அழைப்பே. இவ்வேழு கடிதங்களிலும் ''மனந்திரும்பு'' எனும் பதம் ஆறு முறை வருகிறது (2:5,16,21,22; 3:3,19). ஆங்கில வேதாகமத்தில், சுவிசேஷங்களில், அவர் ''காதுகள்'' (ears) உள்ளவன் என்கிறார்; இங்கு வெளிப்படுத்தலிலோ ''காது'' (ear) உள்ளவன் என்கிறார். தமிழ் வேதாகமத்தில், சுவிசேஷங்களில், அவர் ''கேட்கிறதற்குக் காதுள்ளவன்'' என்கிறார்; இங்கு வெளிப்படுத்தலிலோ ''காதுள்ளவன்'' என்று மட்டும் சொல்கிறார். வார்த்தைக்கு வார்த்தை தெய்வீக அகத்தூண்டுதலாலேயே திருமறை எழுதப்பட்டுள்ளது (verbal inspiration) என்பதை ஆணித்தரமாய் விசுவாசிக்கும் நான் இவ்வேறுபாட்டினை எப்படிப் புரிந்துகொள்கிறேன் என்றால், வர வர அவரது வார்த்தைகளின் அழுத்தம் கூடுகிறது என்பதே. நமது நடைமுறை சபை வாழ்விற்குப் பயனுள்ள பொதுவான படிப்பினைகளை இப்பகுதியில் முன்வைக்கிறேன் —

**(a)** எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா ஆகிய இவ்வேழு சபைகளும் ஆவியானவரது வருகைக்கும் ஆண்டவரது வருகைக்கும் இடைப்பட்ட காலத்திலுள்ள திருச்சபை யுகம் முழுவதையும் குறிக்கும். ஒரு சரிவு என்பதைத்தான் நெடுகவே பார்க்க முடிகிறது. முதலாம் சபையின் (எபேசு) காலத்தில் ஏழு பொன் குத்துவிளக்குகளின் ''நடுவில்'' கிறிஸ்துவைப் பார்க்கிறோம் (வெளி 2:1). ஏழாவது சபையின் (லவோதிக்கேயா) காலத்திற்கு வரும்போதோ, அவர் வெளியே ''கதவருகில்'' நின்றுகொண்டிருக்கிறார் (3:20). முதல் காலக்கட்டத்தில் அவர் சபைகளின் நடுவில் ''நடந்துகொண்டிருக்கிறார்;'' அதாவது, முழு விடுதலையோடு செயலாற்றிக்

கொண்டிருக்கிறார். இப்பொழுதோ அவர் வெளியே பொறுமையாய் ''நின்றுகொண்டிருக்கிறார்!'' திருச்சபையின் கவனமே தனது ''கர்த்தர்'' பக்கம் இல்லை. ஆனாலும் அது ஏராளம் பணம் செலவழித்துத் தனது திட்டங்கள் மற்றும் கூட்டங்களில் தீவிர உற்சாகம் காட்டிக்கொண்டி ருக்கிறது; ஆவியின் அனலோ கிடையாது; விறுவிறுப்பு, ஆனால் வெதுவெதுப்பு! (வச 16,17). எழுப்புதல் பிரசங்கங்களில், நம்மைப் பார்த்து, ''நாம் எங்கே இருக்கிறோம்?'' என்ற கேள்வி கேட்கப்படும்; ஆனால், ''கிறிஸ்து எங்கே இருக்கிறார்?'' என்பதுதான் சரியான கேள்வி!

**(b)** இவ்வேழு சபைகளும் இன்றிருக்கும் எல்லாச் சபைகளையும் குறிக்கும். ஏழு சபைகளில் ஐந்து கடூரமாய்க் கண்டிக்கப்பட்டன; இரண்டுதான் பாராட்டப்பட்டன. அவை சிமிர்னாவிலும் பிலதெல்பி யாவிலுமிருந்த சபைகள். அவையிரண்டும் மிஷனரிச் சிந்தையுள்ளவை (வெளி 2:9,10; 3:7,8). கன்னியரில் ஐவர் அல்ல, பத்து பேருமே தூங்கி விட்டனர் (மத் 25:5). பெரும்பாலான நமது சபைகள் தூங்கிக்கொண் டுதான் இருக்கின்றன என்பதை யார்தான் மறுக்க முடியும்? தூக்கம், உறக்கம், குறட்டை! ''நள்ளிரவுக் குரல்'' மற்றும் ''திரிகளைத் தூண்டு தல்'' ஆகிய இரண்டும் கடைசிக்கால எழுப்புதலைக் குறிக்கின்றன (வச 6,7). எந்தச் சபையையும் (Church) எந்தச் சபைப்பிரிவையும் (denomination) இனி இது தேறாது என்று நமதாண்டவர் விட்டுவிட்டுப் போகவில்லை என்பதே ஊக்கம் தரும் செய்தி! லவோதிக்கேயா சபை யைக்கூட அவர் ''நேசிக்கிறார்!'' ''நான் யார்மீது அன்பு செலுத்து கிறேனோ அவர்களைக் கடிந்து தண்டித்துத் திருத்துகிறேன்'' என்று இந்த ஒரு சபைக்குத்தான் எழுதினார் (வெளி 3:19). நான் சமரசம் பண்ணுகிறேன் என்று சபைப்பித்தர்கள் என்மீது சாடுவர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் ''தேவனது உறுதியான அடித்தளத்தின் மீது'' நிற்கிறேன்; இதோ, அதன் முத்திரை: ''கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்'' என்பதும் ''கிறிஸ்துவின் பெயரை அறிக்கையிடும் எவரும் தீயதை விட்டு விலகட்டும்'' என்பதுமே (2 தீமோ 2:19). தேவனது ''பெரிய வீட்டில்'' பொற்பாத்திரங்களும் வெள்ளிப்பாத்திரங்களும் மட்



டுமல்ல, மரப்பாத்திரங்களும் மண்பாத்திரங்களும் உண்டு; அவற்றில் சாப்பாட்டு மேசையில் பயன்படுத்தக்கூடியவை சில, சமையலறையில் பயன்படுத்தக்கூடியவை சில (வச 20). அவை பயன்பாட்டிற்காய் கழுவப்பட்டுச் சுத்தமாயிருக்கவேண்டும் என்பதே முக்கியம் (வச 21). பொற்பாத்திரங்களை விறகு அடுப்பில் வைக்க முடியாது; மண்சட்டி கள் சாப்பாட்டு மேசைக்குப் பொருத்தமாயிராது.

**(C)** ''வெற்றி பெறவேண்டும்'' என்ற அழைப்பு ஒவ்வொரு சபைக்கும் வருகிறது. இதன் பொருள் என்னவெனில், எல்லாச் சபைகளிலும் வெவ்வேறு பகுதிகளில் தோல்விகள் காணப்படுகின்றன! ''தனி நபர்கள்'' ஒவ்வொருவரும் வெற்றிபெறவேண்டுமென்று இயேசு அழைக்கிறார். திரும்பத் திரும்ப அவர் சொல்வது, ''ஜெயங்கொள்ளு கிறவன் எவனோ ...'' ஒவ்வொரு சபையின் ஆரோக்கியமும் முடிவாகத் தனிநபர்களது ஆரோக்கியத்தைப் பொறுத்ததே. கதவைத் தட்டி நிற்கும் கிறிஸ்து யாராவது ''ஒருவன்'' கதவைத் திறக்க எதிர்பார்க்கிறார் (வெளி 3:20). ஒரு சங்கிலியின் பலத்தை நிர்ணயிப்பது நெளிந்துவிட்ட வளை யம்தானே? ஒரு சில அங்கத்தினருக்குக் கட்சி வெறி இருந்ததால், கொரிந்து சபை முழுவதையும் ''மாம்சீக'' சபை என்று பவுல் அழைத் தாரன்றோ? (1 கொரி 3:1-4). ஆன்மீக வாழ்வில் பலங்குன்றியவர் களுக்கு அதிகக் கவனிப்பும் பராமரிப்பும் தேவை (12:23-25). கிறிஸ்து வின் உடலாம் சபையில் முக்கியமற்ற உறுப்பினர் எவரும் கிடையாது. இது மட்டும் நமக்குப் புரிந்துவிட்டால் நமது சபை வாழ்வில் எவ்வளவு புரட்சிகரமான மறுமலர்ச்சி உண்டாகும் தெரியுமா?

**(d)** ஒவ்வொரு சபைக்கும் வரும் செய்தி இயேசுவிடமிருந்து, ஆனால் அதனைத் தொனிக்கும் சத்தம் பரிசுத்த ஆவியானவரது (வெளி 2:1-7; 8-11; 12-17; முதலியன). பிதாவாகிய தேவன் பரலோகிலி ருக்கிறார்; குமாரனாகிய தேவன் பரலோகில் பிதாவின் வலது பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்; இன்று முழு ஆள்தத்துவத்துடன் பூவுலகில் இருப்பவர் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் மட்டுமே. அவர்தான் பரலோக மணமகனாகிய இயேசுவுக்குத் திருச்சபையாகிய மண

மகளை அலங்காரம் பண்ணிக்கொண்டிருக்கிறார். ஆதியாகமம் முதல் மல்கியா வரையுள்ளதைப் பிதாவானவரின் யுகம் எனலாம்; மத்தேயு முதல் யோவான் வரையுள்ளதைக் குமாரனானவரின் யுகம் எனலாம்; நடபடிகள் முதல் வெளிப்படுத்தல் வரையுள்ளதை ஆவியானவரின் யுகம் எனலாம். எனவேதான் விவிலியத்தின் கடைசிப் பக்கம் ''ஆவியானவரும் மணமகளும்'' என்று முடிவடைகிறது (வெளி 22:17). இப்படியிருக்க, திரித்துவ தெய்வத்தில் பரிசுத்த ஆவியானவர் மூன்றாவதாகச் சொல்லப் பட்டிருந்தாலும் அவரை ''மூன்றாவது'' நபர்போல் நடத்தக்கூடாது! அவர் பிதாவானவருக்கும் குமாரனானவருக்கும் சரிசமமானவர். நமது வாழ்வு தேவனை மகிமைப்படுத்துவதாகவும், கிறிஸ்துவை மையப் படுத்தியதாகவும், ஆவியானவரால் வழிநடத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும். God-honouring, Christ-centred and Spirit-guided! இப்பொருள் சமநிலையில் விளக்கப்பட்டுள்ள *''பைபிள் வல்லமை''* *(Bible Power)* எனும் எனது 356-பக்க நூலை வாசியுங்கள்.

**(e)** ஏழு சபைகளில் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஜெயங் கொள்வோருக்கு வாக்களிக்கப்பட்ட பரிசுகள் எல்லாச் சபைகளுக்கும் உரியவையே. ''வாழ்வு மரம், இரண்டாம் இறப்பின்மை, மறைவான மன்னா, மக்களினங்கள்மீது ஆளுகை, வெண்ணாடை, புதிய பெயர், விண்ணக அரியணை!'' கிறிஸ்தவ நண்பா, மகிழ் கொண்டாடு! கும்மாளம் போடு! *குதூகலம் நிறைந்த நன்னாள் நடுவானில் மின்னிடுமே!*

**(f)** ஏழு சபைகளில் ஒவ்வொன்றிற்கும் வரும் செய்தி மற்ற சபைகளுக்கு வருபவற்றைவிட வித்தியாசமானது. ஆனால் எல்லாச் சபைகளுக்கும் சேர்த்துக் கொடுக்கப்பட்ட பொதுவான செய்தி என்னவென்று கவனித்திருக்கிறீர்களா? ''பயப்படாதே! முதலும் நானே, முடிவும் நானே!'' (வெளி 1:17). சாதகச் சிந்தை கொள்ளுங்கள்! ''உங் களில் நற்செயலைத் தொடங்கியவர் அதனை இயேசு கிறிஸ்துவின் நாள்வரை நிறைவுறச் செய்வார்'' என்று நிச்சயித்திருங்கள் (பிலி 1:5).



## முடிவுரை

*''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கட்டும்!''* பைபிளில் ஆண்ட வராகிய இயேசு இவ்வார்த்தைகளைப் பதின்மூன்று முறை கூறியுள் ளார். இவை ஏழுவித அழைப்பைத் தருகின்றன —

*தனிவாழ்வில் தூய்மைக்கு* நம்மை இயேசு அழைக்கிறார். *திருவசனத்திற்குச் சரியான பிரதிபலிப்பு* கொடுக்க நம்மை இயேசு அழைக்கிறார். *ஒளிரும் வாழ்வுக்கு* நம்மை இயேசு அழைக்கிறார். *அனலைத் தக்கவைத்துக்கொள்ள* நம்மை இயேசு அழைக்கிறார். *கடைசிக் கால ஊழியத்திற்கு* நம்மை இயேசு அழைக்கிறார். *முடிவுக் காலத்தில் விழித்திருக்க* நம்மை இயேசு அழைக்கிறார். *மனந்திரும்பு தலுக்கும் ஆதிநிலையேகுதலுக்கும்* நம்மை இயேசு அழைக்கிறார். இன்று அவர் சத்தம் நமது காதுகளில் விழுந்தால், நமது இருதயத்தைக் கடினப்படுத்தாதிருப்போம்!

# 2

# நடுங்கும் கிறிஸ்தவன்

The Trembling Christian

‘‘தெய்வ பயம்’’ எனும் கருத்து திருமறையெங்கும் ஓர் இழைபோல் ஓடுகிறது. இவ்விரு சொற்கள் பைபிளில் ஏறத்தாழ 100 முறை வருகின்றன. நமது முன்னோர்கள் போல நாம் அவ்வளவாய்த் தேவனுக்குப் பயப்படுவதில்லை. சமுதாயத்திலும் சபையிலும் உள்ள அனைத்துக் கேடுகளுக்கும் முக்கியக் காரணம் தெய்வ பயம் இல்லாது போனதுதான். ‘‘தெய்வ பயம்’’ எனும் பதங்கள் பைபிளில் முதன் முதலாக ஆபிரகாமின் உதடுகளிலிருந்தே வருகின்றன. கேரார் எனுமிடத்தில் ஆபிரகாம் வசித்துவந்தபோது, சாராள் தனது சகோதரி என்று அங்குள்ளோரிடம் பொய் சொன்னார். அவளது அழகினால் கவரப்பட்ட மன்னன் அம்மாதுவைத் தனக்கென அழைத்துவரச் செய்தார். தேவனோ அம்மன்னனுக்குக் கனவில் தோன்றி, அவள் ஆபிரகாமின் மனைவி என்று எச்சரித்தார். ஆபிரகாமை அம்மன்னன் அழைத்து, ‘‘ஏன் இவ்விதம் செய்தீர்?’’ என வினவியபோது, ‘‘இவ்விடத்தில் **தெய்வ பயம்** இல்லையென்றும், என் மனைவியின் பொருட்டு என்னைக் கொன்றுவிடுவார்கள் என்றும் நினைத்தேன்’’ என்று ஆபிரகாம் பதிலளித்தார் (ஆதி 20:11).



மனிதனது பாவ சுபாவம் குறித்து விவிலியத்தில் கூறப்பட்டுள்ள பகுதிகளில் மிகக் கசப்பானது ரோமர் 3:9-18தான். பழைய ஏற்பாட்டிலுள்ள பல வசனங்கள் இதில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. மனிதனது இவ்விதத் தீய வழிகளுக்கு முக்கிய காரணம், ‘‘அவர்களுக்குத் **தெய்வ பயம்** இல்லை’’ என்பதே (வச 18; சங் 36:1). தெய்வ பயம் இழக்கப்படுவதையே வேர் எனலாம்; பாவம் என்பது அதின் கனியாகும். பரிசுத்தம், தொழுகை, திருவசனத் தியானம், திருப்பணி மற்றும் தலைமைத்துவம் குறித்து நிறையப் பிரசங்கங்களும் போதனைகளும் உண்டு. ஆனால் இப்பகுதிகளை மேலோட்டமாய்ப் பார்த்தாலும், இவையெல்லாம் தரக்குறைவாகவே இருக்கின்றன என்றே நாம் உணர்த்தப்படுவோம். தெய்வ பயத்தை நாம் தொலைத்துவிட்டதே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம். தெய்வ பயத்துடன் நடுங்கும் கிறிஸ்தவனே வெற்றியுள்ள கிறிஸ்தவன் என்பதை அடுத்து வரும் பத்திகளில் காண்போம். The Trembling Christian is the Triumphant Christian!

### 1. பரிசுத்தம்

தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடித் தெய்வ பயம் நம்மைத் தடுக்கிறது. இதற்கு பைபிளில் பழங்கால எடுத்துக்காட்டுகளில் ஒன்று எகிப்திய மருத்துவச்சிகளாகும். வேலை வாங்கும் அதிகாரிகள் எவ்வளவுதான் இஸ்ரவேலரை ஒடுக்கினாலும், எண்ணிக்கையிலும் பலத்திலும் அவர்கள் அளவுக்குமீறிப் பெருகிக்கொண்டேயிருந்தனர். எனவே சிப்பிராள், பூவாள் என்ற தலைமைத் தாதிகளை மன்னர் அழைத்து, பிரசவத்தின்போதே ஆண் பிள்ளை என்றால் கொன்றுவிடச் சொன்னார் (யாத் 1:8-16). இப்பெண்மணிகளோ ‘‘**தேவனுக்குப் பயந்திருந்ததால்**’’ அரசக் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை (வச 17). தேவனுக்கு அவர்கள் இவ்விதம் பயந்து செயல்பட்டதால் அவர்களது குடும்பங்களை அவர் தழைக்கச் செய்தார் (வச 21).

இதைக் குறித்த திருமறைப் போதனை மிகவும் தெளிவு: நீதி 16:6, ‘‘**கர்த்தருக்குப் பயப்படுவதினால்** மனிதர் தீயதை விட்டு விலகுவர்.’’ நீதிமொழிகள் புத்தகம் ஞானப் புத்தகம் என்றழைக்கப்படும்.

அதின் துவக்க வசனமொன்றைக் கவனியுங்கள்: 1:7, **''கர்த்தருக்குப் பயப்படுதலே** ஞானத்தின் ஆரம்பம்!'' தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் வருவது: ''தீயதை வெறுப்பதே **கர்த்தருக்குப் பயப்படும் பயம்''** (8:13அ). இப்புத்தகத்தில் ''கர்த்தருக்குப் பயப்படும் பயம்'' என்பது 14 முறை வருகிறது. இது இல்லாவிடில் உடனே வருவது ''பெருமையும் அகந்தையும்தான்'' (வச 13ஆ). பெருமையும் அகந்தையுமுள்ளவன் தேவனுக்குமுன் நடுங்கமாட்டான். மன்னன் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு மரணப்படுக்கையிலிருந்து தேவன் அவரை எழுப்பியபோது, அவர் தேவனிடம் வாக்குப்பண்ணியது: ''எனது ஆன்மாவிற்கு வந்திருந்த கசப்பை நினைத்துச் **சாந்தமாக, நிதானமாக,** என் வாழ்காலமெல்லாம் நடந்துகொள்வேன்.'' I will walk softly all my life. (ஏசா 38:1-5,15). தேவப்பிள்ளைகளாகிய நாம் தாழ்மையுடனும் நொறுங்குண்ட இருதயத்துடனும் தேவனுக்குமுன் நடுக்கத்துடன் நடந்துகொள்ளாவிடில், பாக்கியமான அந்நிலைக்குள் நம்மை எப்படிக் கொண்டுவரவேண்டும் என்று தேவனுக்குத் தெரியும்! நமது தந்தை என்ற உரிமையுடன் ''அவரது பரிசுத்தத்தில் நாம் பங்குகொள்ளும்படி'' தேவன் நம்மைத் தண்டிக்கிறார். அவரது இவ்வித இடைபாடுகள் அவருக்குமுன் நாம் **''அஞ்சி, அடங்கி''** நடக்கவே வழிவகுக்கவேண்டும் (எபி 12:9,10).

தேவனது *நியாயத்தீர்ப்பு* குறித்த பயம் நமக்கு இல்லாமல் போனதாலேயே நாம் பாவத்தில் துணிந்து தொடர்கிறோம். பிரசங்கி 8:11, ''தீயச் செயல்களுக்குத் தகுந்த தண்டனை விரைவில் அளிக்கப்படாததால், பொல்லாதவற்றைச் செய்வதற்கு மக்களது இருதயம் துணிகரம் கொண்டிருக்கிறது.'' பிரியமானவர்களே, தேவன் தாமதிப்பதால் அவர் தீயதை ஆமோதிக்கிறார் என்று தப்புக்கணக்கு போடாதிருப்போம். பவுலடியார் விடும் சவால் இதோ: ரோமர் 2:4, ''நீ மனந்திரும்பவேண்டுமென்றே தேவன் உன்னிடம் தயவு காட்டுகிறார் என்று உணராமல், அவரது தயவு, பொறுமை, நீடிய சாந்தம் ஆகியவற்றின் பெருக்கத்தை அவமதிக்கிறாயா?'' தேவனது இறுதியான நியாயத்தீர்ப்பானது அவிசுவாசிகளுக்குத்தான் என்று நாம் தவறாய் நினைத்திருக்கிறோம். ''**நாம் எல்லாரும்** கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்னர் நிற்கவேண்டும்'' என்று சற்றும் ஐயமின்றித் திருமறை நமக்குப் போதிக்கிறது (2 கொரி 5:10). ''**ஆண்டவருக்குமுன் அச்சம்**'' என்ற இதனை மனதிற்கொண்டே, அவரோடு ஒப்புரவாகும்படி மக்களை அப்போஸ்தலர் மன்றாடிக் கேட்டனர் (வச 11,20). தேவனது எதிர்கால நியாயத்தீர்ப்பு குறித்துப் பவுல் பேசியபோது, பேலிக்ஸ் போன்ற புறவின ஆட்சியரும் **நடுநடுங்கிப்போனார்** (அப் 24:25). நீதிமொழிகள் புத்தகத்தில் 29ஆம் அத்தியாயத்திலுள்ள முதலாம் வசனத்தைவிட வேறே எதுவும் நமது செவிட்டுக் காதுகளுக்குள் உரக்கக் கத்த முடியாது: ''அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்!''

தேவன் நம்முடன் செய்துள்ள புதிய உடன்படிக்கையில் தமது பரிசுத்தம் மற்றும் நீதியின் தரத்தைத் தளர்த்திவிடவில்லை. மாறாக, அவரது புனிதக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நமக்கு உதவியாகப் புதிய இருதயத்தையும் புதிய ஆவியையும் நமக்குத் தந்து ஆசீர்வதித்துள்ளார். இதோ, அவரது வாக்கு: ''அவர்கள் என்னை விட்டு விலகிச் செல்லாதபடி, எனக்குப் பயப்படும் **பயத்தை** அவர்கள் இருதயத்தில் வைப்பேன்'' (எரே 32:40; எசேக் 36:26,27). மேலும் அவர் சொல்வது: ''அவர்களது அக்கிரமத்தை மன்னிப்பேன்; அவர்கள் பாவத்தை இனி நினைவில் வைக்கமாட்டேன்'' (எரே 31:34ஆ). தேவனது இந்தக் ''கிருபையைச்'' சாதகமாக்கிக்கொண்டு, நாம் அவருக்குமுன் காட்டவேண்டிய பய பக்தியை இழந்துவிடுகிறோம். ஆனால் திருப்பாடகனோ தேவனது மன்னிக்கும் அன்பினைத் தெளிவாகப் புரிந்திருந்தார்: சங்கீதம் 130:4, ''கர்த்தாவே, உமக்குப் **பயப்படும்படி** உம்மிடம் மன்னிப்பு உண்டு!''

நமது வாழ்வில் தெய்வ பயம் எப்பொழுதும் கூடிக்கொண்டே இருக்க வேண்டும். ''தனது பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' என்ற நீதிமொழிகள் 28:13ஆம் வசனம் நமக்கு நன்றாய்த் தெரியும். அறிக்கை செய்த பாவங்களை விட்டுவிடுவது எப்படி என்று நமக்குப்

போதிக்கும் அடுத்த வசனத்தைக் கவனிக்கத் தவறிவிடுகிறோம்: ''எப்பொழுதும் **பயந்திருக்கிறவன்** பாக்கியவான்; தனது இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்'' (வச 14). தேவனுக்குமுன் எப்பொழுதும் நடுங்கி வாழ்வதின் பாக்கியம்தான் என்னே! தேவனது அனைத்துக் குணாதிசயங்களிலும் நமது மனதில் தலையோங்கி நிற்கவேண்டியது அவரது பரிசுத்தமே. முன்னறிவிப்புகள், அற்புதங்கள் போன்றவையெல்லாம் பிற மார்க்கங்களிலும் உண்டு. ஆனால், திருவிவிலியத்தின் தேவன் மட்டுமே முற்றிலும் பரிசுத்தமானவர்! ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்ற விண்ணகப் பாடலைக் கேட்ட மாத்திரத்தில் தீர்க்கன் ஏசாயா எவ்விதம் **நடுங்கினார்** என்பதைக் கவனியுங்கள். தேவாலய வாசல் நிலைகளின் அடித்தளங்களே ஆடிப்போயின! (ஏசா 6:3-5). தேவனது பரிசுத்தத்தைக் குறித்த நமது அறிவின் அளவுக்குத் தக்கபடியே நாம் அவருக்குப் பயப்படும் பயமும் இருக்கும்.

பின்மாற்றத்திற்கு மாற்றுமருந்து தெய்வ பயமே. எபிரெயர் நிருப ஆக்கியோன் நமக்கு அறிவுறுத்துவது: ''அவரது இளைப்பாறுதலில் நுழைவதற்கான வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறபடியால், உங்களில் ஒருவனும் அதை அடையாது பின்வாங்கிப்போனவன் என்று ஆகிவிடாதபடிப் **பயந்திருப்போம்**'' (எபி 4:1). ''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்; ஒருவன் பின்வாங்கிப்போனால் அவன்மீது என் ஆன்மா பிரியமாயிராது'' என்ற திருவார்த்தையை நமக்கு நினைவுபடுத்தி, அவர் மேலும் நம்மை எச்சரிப்பது: ''ஜீவனுள்ள தேவனது கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே!'' (10:31,38). நீங்கள் ஒருவேளை பின்மாற்றம் அடைந்திருந்தால், உங்கள் மனவருத்தம் போதுமான அளவு ஆழ்ந்ததாகவும், உங்கள் மனந்திரும்புதல் போதுமான அளவு நிசமானதாகவும் இருக்கின்றனவா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் ''நேர்மை காட்ட எத்துணை ஆவல்! எத்துணை உள்ளக் கொதிப்பு! எத்துணை **அச்சம்!** எத்துணை ஏக்கம்! எத்துணை ஆர்வம்!'' என்பவையெல்லாம் உங்களுடையதாகும் (2 கொரி 7:9-11). பிலிப்பியர் நிருபம் என்பது மகிழ்ச்சி குறித்த கடிதம்



என்பது நமக்குத் தெரியும். அந்த நிருபத்தில்தானே ஆசிரியர் நமக்குத் தரும் அழைப்பைக் கவனியுங்கள்: ''அதிக **பயத்துடனும், நடுக்கத்துடனும்** உங்கள் இரட்சிப்பு பூரணப்பட முயற்சியெடுங்கள்'' (பிலி 2:12). இரட்சிப்பு என்பது செயல்களினால் அல்ல, ஆனால் செயல்களுக்காக! Not *of* works, but *for* works. (எபே 2:8-10). அதற்கேற்ற செயல்கள் வாயிலாக வெளிக்காட்டப்படாத விசுவாசம் செத்தது (யாக் 2:17,20). சோதனையொன்றை எதிர்கொள்ளும்போது, அதில் நீங்கள் விழுந்துவிட்டால் ''மக்கள்'' என்ன நினைப்பார்கள் என்று சிந்திக்காதீர்கள்; மாறாக, அதைத் ''தேவன்'' எப்படிப் பார்ப்பார் என எண்ணிப் பாருங்கள். மனிதருக்குப் பயப்படும் பயமானது ஒரு ''கண்ணி;'' **கர்த்தருக்குப் பயப்படுதலோ** நமக்குப் ''பாதுகாப்பு'' (நீதி 29:25). இப்படித்தான் கவர்ச்சி நிறைந்த ஒரு சோதனையை யோசேப்பு வென்றார் (ஆதி 39:9). திருமறையிலுள்ள புத்தகங்களில் முதலாவது எழுதப்பட்டது யோபுவின் சரித்திரம்தான். அதின் துவக்க வாக்கியம் இதோ: ''அவர் தேவனுக்குப் **பயந்து**, தீயதை விட்டு விலகுகிறவராயிருந்தார்'' (யோபு 1:1).

## 2. தொழுகை

சர்வ வல்லவரைத் தொழுதுகொள்வதில் இன்று ஏற்பட்டுள்ள எழுச்சியில் மகிழும் அதே வேளையில், ஆராதனைக்கடுத்த காரியங்களில் காணப்படும் பயபக்தியிழப்பு என்னைப் புலம்பச் செய்கிறது. தரக்குறைவான மாற்றுக்களைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்வதில் பிசாசுக்கு நிகர் யார்? தேவனது மகிமையையும் மாட்சிமையையும் அவன் நமக்கு மறைத்துவிடுகிறான். ஆனால் தேவனது உன்னதத்தை உணர்ந்தவர்களாய் அவருக்குமுன் நடுங்கவேண்டும் என்பதே திரும்பத் திரும்பத் திருமறை தரும் அழைப்பு. சங்கீதம் 99:1-3, ''ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; மக்களினத்தார் **நடுங்கி** நிற்பார்களாக! அவர் கேரூபீன்கள் நடுவில் வீற்றிருக்கிறார்; மண்ணுலகு **நடுங்குவதாக!** ... மகத்துவமும் பயங்கரமுமான அவரது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக!'' சங்கீதம் 114:7, ''பூவுலகே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபின்

தேவனுக்கு முன்பாகவும் அதிர்ந்திடு!'' தேவனே நம்மிடம் விடும் சவாலைக் கவனியுங்கள்: எரேமியா 5:22, ''எனக்குப் **பயப்படாதிருப் பீர்களோ?** எனக்குமுன் **அதிராதிருப்பீர்களோ?**'' இரைக்காய்த் துடித்துக்கொண்டிருந்த சிங்கங்களிடமிருந்து அற்புதமாய்த் தானியேல் காப்பாற்றப்பட்டபோது, தரியு மன்னன் எழுதியது: ''எனது ஆட்சிக் குட்பட்ட நாடு முழுவதிலுமுள்ள மக்கள் தானியேலின் தேவனுக்கு **அஞ்சி நடுங்கவேண்டும்**; இது எனது ஆணை!''

தெய்வ பயம் என்பது ஒரு மகிழ்ச்சிக்கொல்லி அல்ல. சொல்லப் போனால், கர்த்தருக்குப் பயப்படுதலே மட்டரகமான சந்தோஷத்திற்கு எதிரான ஜொலிக்கும் மகிழ்ச்சியினால் நம்மை நிரப்பும். ''**பயத்து டனே** கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே **களிகூருங்கள்**'' என்று மேசியாவைக் குறித்த முதலாம் சங்கீதமே நமக்கு அழைப்பு விடுக்கிறது (சங் 2:11). அடிக்கடி குறிப்பிடப்படும் ஸ்தோத்திரச் சங்கீதங்களில் ஒன்று தரும் அழைப்பு இதோ: ''பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூவுலகவாசிகளே, நீங்கள் யாவரும் அவ ருக்குமுன் **நடுங்குங்கள்**'' (சங் 96:9). தாவீதின் கூடாரத்திற்குள் வைக்கப்படும்படி உடன்படிக்கைப்பெட்டி கொண்டுவரப்பட்டபோது, இராகத் தலைவனாகிய ஆசாப்பிடம் தாவீது கொடுத்த சங்கீதம் கர்த்த ருக்குத் துதிபாட நேர்த்தியானது. அதனை 1 நாளாகமம் 16:7-36இல் வாசிக்கிறோம். கலப்படமற்ற தொழுகையின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ள இந்த 30 வசனங்களையும் கவனமாய் வாசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடன் தேவனைத் தொழுதுகொள்ளக் காணிக்கையுடன் நாம் செல்லும்போது, ''பூவுலக மக்களே, நீங்கள் யாவரும் அவருக்குமுன் **நடுங்குங்கள்**'' என்று இச்சங்கீதத்தில் தாவீது நம்மை அழைக்கிறார் (வச 29,30). கர்த்தருக்குமுன் நடனமாடுவதும், அதே வேளையில் அவருக்குமுன் **நடுங்குவதும்** தாவீதுக்கு வாடிக்கை (2 சாமு 6:14). நடனம் மற்றும் நடுக்கம் ஆகிய இரண்டையும் சமநிலைப்படுத்துவதே தேவனுக்கு ஏற்புடைய தொழுகை என்பதைப் பாடல் நடத்துவோர் மனதிற்கொள்ளவேண்டும். இல்லையேல் நமது வண்டி சரிந்துவிடும்.



முற்காலத்து ஆலயங்களின் மேற்கூரை மிகவுயரமாயிருந்ததற்குக் காரணம் உள்ளே வருவோருக்கு உன்னத உணர்வு வரவேண்டும் என்பதே! (ஏசா 6:1).

எழுப்புதல் காலங்களில் ஆவியானவரது அருள்மாரி திரளாய் ஊற் றப்படும் வேளைகளில் மக்களது தொழுகைக்குப் புதுப் பரிமாணம் கிடைக்கும். நாம் ஆவியானவரால் நிறைந்திருக்கும்போதுதான் இருத யத்தில் நாம் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணமுடியும். அவ்வேளை யில்தான் சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள் ஆகியவை பொங்கிவரும் (எபே 5:18-20). இங்கேயும் தேவனுக்கு முன்பாகத் தேவ பக்தியை இழந்து வெறும் பரவசத்திற்குள் மூழ்கிவிடாதபடிக் கவன மாயிருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவருக்கு ஏசாயா 11:2இல் ஏழு பெயர்கள் தரப்பட்டுள்ளன: ''ஞானம் அருளும் ஆவி, உணர்வு அருளும் ஆவி, ஆலோசனை அருளும் ஆவி, பலம் அருளும் ஆவி, அறிவு அருளும் ஆவி, **கர்த்தருக்குப் பயப்படும் பயம்** அருளும் ஆவி, கர்த்தருடைய ஆவி.'' வெளிப்படுத்தல் வரங்கள் மற்றும் வல்லமை வரங்கள் மூலம் வெளிப்படும் ஞானம், அறிவு, பலம் என்பவற்றிலேயே நமக்கு ஆர்வம் அதிகம். தெரிந்தோ தெரியாமலோ ''**கர்த்தருக்குப் பயப்படுகிற பயம்**'' என்பதை இப்பெயர்ப் பட்டியலில் கவனிக்கத் தவறிவிடுகிறோம். அது பட்டியலின் கடைசிப் பகுதியில் வருகிறது என்பதாலோ? கூடவே கூடாது. தீர்க்கதரிசன வரமானாலும், அற்புதங் களைச் செய்யும் வரமானாலும், இவையெல்லாம் தெய்வ பயத்திற்குள் நம்மை நடத்துவதற்காகவே அருளப்படுகின்றன. தேவப் பிரசன்னத்தை நாம் திட்டமாய் உணரச்செய்வதே ஆவியானவரது வரங்களின் முக்கிய நோக்கமாகும் (சங் 68:18; எபே 4:8). ''முரட்டாட்டம்'' நிறைந்துள்ள நம்மைத் தேவனது பிரசன்னத்தில் **பயபக்தியுடன்** முழங்காலிடச் செய்வதே வரங்களின் நோக்கம் (1 கொரி 14:24,25).

எக்காலத்தையும்விட இந்நாட்களில் ''எழுப்புதல்'' எனும் வார்த்தை அடிக்கடி உச்சரிக்கப்படுகிறது. நமது மன்னாதி மன்னரின் மறுவரு கைக்கு முன்னர் இறுதிக்கால எழுப்புதல் ஒன்று வெடித்துக் கிளம்ப

விருக்கிறது என்ற குதூகல எதிர்பார்ப்பை எனது வேத ஆராய்ச்சி எனக்குள் ஆணித்தரமாய்ப் பதித்துள்ளது. ஆனால் எழுப்புதல் என்றால் என்ன, அதன் நோக்கம் என்ன என்பதை நாம் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளாதிருப்பதுதான் வருத்தம். எழுப்புதலுக்கான ஜெபமாய் அமைந் துள்ள ஏசாயா 64ஆம் அத்தியாயம் நமக்கு மனத்தெளிவைத் தரும். எழுப்புதலுக்காய் மன்றாடும்போதெல்லாம் இவ்வத்தியாயம் முழு வதையும் ஒரு ஜெபமாய் ஏறெடுக்க உங்களை ஊக்குவிக்கிறேன். எழுப்புதலின்போது வல்லமையாய்த் தேவன் இறங்கும்போது அவரது பிரசன்னத்தில் மலைகளும் ''அதிர்ந்து உருகும்'' (ஏசா 64:1,3). மக்க ளினங்கள் அவருக்குமுன் **''நடுங்கும்''** (வச 1). இதன் பொருள் என்னவெனில், கேள்விப்படாதவை எல்லாம் நடக்கும் (வச 4). நம்மி லுள்ள குப்பைக்கூளங்களெல்லாம் சாம்பலாகும் (வச 2). பயபக்தி யோடுள்ள நடுக்கமும் மகிழ்ச்சியும் நமது தொழுகைக்குள் திரும்பவும் வரும் (வச 5அ,11). இனி நமது சுயநீதியைச் சார்ந்திருக்கவே மாட் டோம் (வச 6அ). குயவன் கையிலுள்ள களிமண் போல நம்மை நாமே தேவனிடம் ஒப்படைத்துவிடுவோம் (வச 8). பிரியமானவர்களே, துதி ஆராதனைக் கூடுகைகளில் நம்மை நாமே குலுக்கிக்கொண்டு, இது தான் பயபக்தி என்று நினைக்கும் வஞ்சகத்திலிருந்து தப்பித்துக் கொள்வோம்! திரையுலகப் பாணியை எள்ளளவும் கூடுகைகளில் கொண்டுவர வேண்டாமென்று பாடல் மற்றும் ஆராதனை நடத்து வோரை வருந்திக் கேட்கிறேன். இது தேவனுக்கு அருவருப்பு. நமது சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏசாயா மற்றும் எரேமியா தீர்க்கதரிசிகளின் பரிசுத்த கோபத்தைக் கிளறிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. நாச ரேத்துத் தச்சனைப்பற்றிப் பாடும்போது, ஒவ்வொரு கவிக்கும் உடை மாற்றமா? இது ''வேறொரு இயேசுவோ?'' என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது (2 கொரி 11:4). நாம் நமது நேசரை உயர்த்துகிறோமா, அல்லது வெறுமனே நமது நேயரை உற்சாகப்படுத்துகிறோமா? நொறுங்கிக் கிடக்கும் நமது பலிபீடங்களே நம்மை **நொறுக்கட்டும்!** (ஏசா 64:11). அதுவே எழுப்புதலுக்கு நேர்ப் பாதை (57:15).



தேவனாகிய கர்த்தரை ''எங்கள் பிதாவே'' என்றழைக்க இயேசு நமக்குக் கற்பித்துள்ளார் (மத் 6:9; யோ 20:17). தேவனை ''அப்பா, பிதாவே'' என்று கூப்பிடப் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் துணை புரிகிறார் (ரோ 8:15). தேவனோடு நமக்குக் கிடைத்துள்ள இந்த நேசமும் நெருக்கமும் அவர்முன் நமக்கு இருக்கவேண்டிய நடுக்கத்தைக் குறைத்துவிடக்கூடாது. தேவனது சவாலைக் கேளுங்கள்: ''நான் தந்தை என்றால் எனக்குரிய மதிப்பு எங்கே? நான் தலைவர் என்றால் எனக்குரிய **பயம்** எங்கே?'' (மல் 1:6). இவ்விரு கேள்விகளும் ''ஆச்சாரியர்களைப்'' பார்த்துக் கேட்கப்பட்டவை என்பதைக் கவனிக்கிறீர்களா? ''ரெவரண் டுகள்'' என்றழைக்கப்படும் நம்மிடமிருந்து ''பரிசுத்தமும் பயங்கரமு மானவர்'' (Holy and Reverend) என்ற தேவனுக்குரிய பயபக்தி புகை யாய் மறைந்துவிட்டதே (சங் 111:9). நமக்குள் தங்கியிருக்கும் தூயா வியானவர் மூலமாகப் பிதாவானவரும் குமாரனானவரும் நமக்குள் குடிகொண்டிருக்கின்றனர் என்பது உண்மை (யோ 14:23,17). அதே வேளையில், ''தேவன் விண்ணுலகில் இருக்கிறார்; நாமோ மண்ணு லகில்தான் இருக்கிறோம்'' என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எனவே **நடுக்கத்தோடும் பயபக்தியோடும்** அவரிடம் செல்ல வேண்டும். துதிக்கையிலும் ஜெபிக்கையிலும் நமது வார்த்தைகள் ஏனோதானோ என்றிருக்கக்கூடாது (பிர 5:1,2). இயேசுவானவர் மட்டுமே பிதாவாகிய தேவனானவர் பெற்றெடுத்த ஒரே மகன். ஆனா லும், நாம் தியானித்துக்கொண்டிருக்கும் கருப்பொருளுக்கு அதிசிறந்த எடுத்துக்காட்டாகக் குமாரனானவரை எபிரெய நிருப ஆக்கியோன் நமக்குமுன் நிறுத்துவதைக் கவனியுங்கள்: எபி 5:7, ''கிறிஸ்துவானவர் மனுவுடலில் இருந்த நாட்களில், தம்மை இறப்பிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி, உரத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண் ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கிருந்த **பயபக்தியினால்** கேட்கப்பட்டார்.'' ஆபிரகாம் ஏறெடுத்தது போன்ற மன்றாட்டு ஜெபங் கள் பயபக்தியினால் நிறைந்திருக்கவேண்டும் (ஆதி 18:27). தேவன் அவரை உயர்த்துமுன் அவர் தேவனுக்குமுன் ''முகங்குப்புற விழுந்தார்.'' தேவனால் உயர்த்தப்பட்ட பின்னரும் தன்னைத் ''தூசி'' என்றும் ''சாம்பல்'' என்றும் அழைத்துக்கொண்டார் (17:3-6; 18:1,2,27).

## 3. திருவசனத் தியானம்

பைபிள் என்பது வெறுமனே ஒரு புத்தகம் அல்ல. அது தேவனது அச்சடிக்கப்பட்ட வார்த்தை. நாம் அதனை வாசிக்கும்போது, தேவனே நம்முடன் பேசுகிறார். பைபிள் வாசிப்பதென்றால் தேவ சத்தம் கேட்பதாம். ஒரு மணி நேரம் நான் பைபிள் வாசித்தால், அறுபது நிமிடங்கள் அவர் என்னுடன் பேசக் கேட்கிறேன் என்று பொருள்! பேசியது மோசேயோ பவுலோ, யோபுவோ அவரது நண்பரோ, அது தாவீதின் சங்கீதங்களோ சாலொமோனின் நீதிமொழிகளோ, என்னைப் பொருத்தமட்டில், அது திருவசனம்தான்; ஏனெனில், தேவன் தமது அநாதி ஞானத்தின்படி இவையெல்லாவற்றையும் பைபிளில் ''வேத ஆகமங்கள்'' அல்லது ''வேத எழுத்துக்கள்'' அல்லது ''வேத வாக்கியங்கள்'' என்று சேர்த்துள்ளார் (ரோ 16:25; 2 தீமோ 3:15,16). நான் சொல்லும் இக்காரியம் இறையியல் உலகில் ஒரு விவாதப் பொருளாயிருந்தாலும், வார்த்தைக்கு வார்த்தை தெய்வீக அகத்தூண்டுதலாலேயே பைபிள் எழுதப்பட்டுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேன். I believe in the verbal inspiration of the Bible.

திருப்பாடகனின் சாட்சியே நமதாயிருக்கவேண்டும்: ''என் இருதயம் உமது வசனத்திற்குப் **பயப்படுகிறது**'' (சங் 119:161). பத்துக் கட்டளைகளைத் தேவன் கொடுத்த வேளையில் மக்கள் அதைக் கேட்டு ''**நடுங்கினார்கள்**'' (யாத் 20:18,19). சீனாய் மலையிலிருந்து கேட்ட சத்தத்திற்கே மக்கள் நடுங்கினார்கள் என்றால், சீயோன் மலையிலிருந்து தேவன் பேசுவதைக் கேட்கும் நாம் எவ்வளவு பயபக்தியுடன் கேட்க வேண்டும்! (எபி 12:21-25). இக்குறிப்பினைத் திருச்சபையின் முதல் இரத்தசாட்சியானவர் அழுத்திக் கூறுகிறார்: ''கர்த்தர் பேசிய சத்தம் கேட்ட மோசே **நடுக்கமடைந்தார்**'' (அப் 7:31,32). தன்னுடன் தேவன் பேசியபோது தனக்கு ஏற்பட்ட உணர்வுகளை, இதோ, தீர்க்கன் ஆபகூக் அறிவிக்கிறார்: ''நான் கேட்டபோது என் குடல் குழம்பிற்று; அச்சத்தோடு என் உதடுகள் **துடித்தன**; என் எலும்புகளில் **உலுக்கம்** உண்டாயிற்று; என் உடலில் **நடுங்கினேன்**'' (ஆப 3:16). எஸ்றா ஒரு



திருமறைப் போதகர். தேவனது வீட்டைத் திரும்பக் கட்டும் பணியில் ஒரு சீர்திருத்தவாதியாக ஆண்டவர் அவரைப் பயன்படுத்தினார். அது எளிதான வேலை அல்லவே. தேவனது வார்த்தைகளுக்கு ''**நடுங்குகிறவர்களை**'' மட்டுமே அவர் தனது குழுவில் சேர்த்துக்கொண்டார் (எஸ்றா 7:6அ,10; 9:4). திறனும் திறமையும் உள்ளவர்களை அல்ல, தமது வசனத்திற்கு ''**நடுங்குகிறவர்களையே**'' தேவனது கண்கள் தேடுகின்றன (ஏசா 66:2ஆ). படித்த மேதைகள் போல பைபிளைத் திறக்கிறவர்களைத் தேவன் மதிப்பதில்லை. குழந்தையுள்ளமே தேவை என்கிறார் (28:9,10). சிறுவர்களே ''**தாழ்மையின்**'' சித்திரங்கள் (மத் 18:4).

தேவனது அநாதிக் கிருபையினாலேயே நமது ஆண்டவருக்குத் தாயாராகும்படி மரியாள் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். தனது அறிவிப்புக்குத் தூதன் கொடுத்த முன்னுரை இச்சத்தியத்தை அடிக்கோடிடுகிறது: ''கிருபை பெற்றவளே, வாழ்க! கர்த்தர் உன்னுடன் இருக்கிறார். பெண்களுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்'' (லூக் 1:28). ஆனாலும், திருவசனத்திற்கு அவர்கள் **பயபக்தியுடன்** தன்னை அர்ப்பணித்ததே அவர்களை உயர்த்திற்று. தேவதூதன் சொன்னது மரியாளுக்கு முழுவதும் புரியாவிட்டாலும், அவர்களது பதிலைப் பாருங்கள்: ''இதோ, நான் ஆண்டவருக்கு **அடிமை!** உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்!'' (வச 38). தியானிக்கவோ, மனனம் செய்யவோ, ஆராயவோ பைபிளைத் திறக்கும்போதெல்லாம் சின்ன சாமுவேலின் ஜெபம் தானாகவே நமது வாயிலிருந்து ஏறெடுக்கப்படவேண்டும்: ''கர்த்தாவே, சொல்லும், உமது **அடியேன்** கேட்கிறேன்'' (1 சாமு 3:9,10). அப்போஸ்தலன் யோவானைப் போலவே தானியேலுக்கும் இறுதிக் காலத்தைக் குறித்த அசாதாரண வெளிப்பாடுகள் கொடுக்கப்பட்டன. திருவார்த்தை குறித்த அவரது மனப்பான்மை அபாரம். தேவனது வார்த்தைகளின் சத்தம் அவர் காதுகளில் விழுந்தபோது, அவரது முழங்கால்களும் உள்ளங்கைகளும் ''**நடுங்கின**'' (தானி 10:9,10). அப்போஸ்தலன் பக்த்சிங் அவர்கள் (1903-2000) முழங்காலில் நின்று பைபிள் வாசிப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்தியப் படையில் உயர்

அதிகாரி ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வருமானால், இளநிலையிலுள்ளவர்கள் எழுந்து நின்று பதிலளிக்கவேண்டுமாம்! முழங்காலில் நின்று வேதத்தைத் தியானிக்கும்படிப் புது விசுவாசி களுக்குப் போதித்து வந்திருக்கிறேன். இந்தப் பயபக்தி குறையுமானால் நமது தலையறிவு பெருகும்; இதயமோ வதங்கும்.

**பயபக்தியுடன்** நாம் பைபிள் வாசித்தால் நமது இருதயம் இன்னும் அதிகமாய் **நொறுங்கிய** நிலையடையும். நமது வாழ்க்கையில் பகுதி பகுதியாக, படிப்படியாக, ஆண்டவர் நம்மை நொறுக்குகிறார். நொறுக் கப்படுதலின் பூரண அளவை எவரும் ஒரே நாளில் எட்டிவிடுவதில்லை. நமது இருதயத்திலிருக்கும் பாறை போன்ற பகுதிகளை உடைத்து நொறுக்கும் சம்மட்டி திருவசனமே (எரே 23:29அ). நமது இருதயம் எவ்வளவு ''கடினமாயிருக்கிறது'' என்பது நமக்குத் தெரியாததுதான் பிரச்னை (ரோ 2:5அ). நாம் முழுவதும் நம்மைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து நொறுங்குண்ட இருதயத்துடன் அவருக்குமுன் நடந்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொள்வோம். எனவேதான் அவர் நம்மிடம் சவாலிட்டுக் கேட்பது: ''எல்லாவற்றையும்விட இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது; அதனைப் புரிந்து கொள்பவன் உண்டோ?'' (எரே 17:9). அப்பட்டமாய்க் காட்டும் கருவி (scanner) போன்றதும், அறுவை சிகிச்சைக் கத்தி (scalpel) போன்றது மான தேவ வசனமே நமது இதயத்தை வெட்ட வெளிச்சமாக்கும் (யாக் 1:23, 24; எபி 4:12,13). அடக்க முடியாத கண்ணீரால் தங்களது வேதப் புத்தகத்தின் பக்கங்களை நனைத்துவிட்ட பரிசுத்தவான்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோம். தனிப்பட்ட முறையில், பெருமைக் காரனாகிய என்னைத் திருவசனம்போல் எதுவும் நொறுக்குவதில்லை.

தேவனுடைய வார்த்தைக்குமுன் நடுங்குவதென்றால் வெறுமனே நமது பரவச உணர்வுகளைக் கிளறிவிடுவதல்ல. அதற்குக் கீழ்ப்படிய ஆயத்தம் மற்றும் விருப்பம் என்பதை வெளிப்படுத்துவதாகவே அது இருக்கவேண்டும். பிசாசுகளும் விசுவாசித்து ''நடுங்குகின்றன;'' ஆனால் அவை தேவனுக்குக் கீழ்ப்படிவதில்லை (யாக் 2:19). இறை



வார்த்தைக்கு எதிராய்ச் செயல்படுவதுதானே அவைகளின் முக்கிய வேலை? தேவனுடைய வார்த்தையை அவை விசுவாசிக்கின்றன; ஆனால் தங்கள் வசதிக்கேற்ப அதனைத் திருக்கிப் புரட்டுகின்றன. அப்படித்தானே ஆதாமையும் ஆண்டவரையும் சாத்தான் சோதித்தான்? (ஆதி 3:1-5; மத் 4:6,7). கீழ்ப்படிதலுள்ள இருதயம் இல்லாது மேலெ முந்தவாறு பைபிளை மதிக்கிறவர்களாகிவிடாதபடிப் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், பைபிளைக் கும்பிடுகிறவர்கள் (Bibliolatry) என்றாகிவிடுவோம்! **''சாந்தத்தோடு''** (அதாவது பயபக்தியுடன்) திருவசனத்தை ஏற்றுக்கொள்ள அப்போஸ்தலன் யாக்கோபு நம்மை அழைக்கிறார் (யாக் 1:21). இது கீழ்ப்படிவதற்கான விருப்பத்துடன் இணைந்து செல்லவேண்டும்; மற்றபடி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வோம் (வச 22). பரிசுத்த நடுக்கம் இல்லாது போகுமானால், ''ஊன்றப்பட்ட'' வசன விதையானது வேர் விட்டு முளைக்க முடியாதபடி நமது இருதயம் பாறையாய்க் கடினமாகிவிடும் (மத் 13:20,21). விதைக் கிறவன் உவமையில் பாறை குறித்து ஆண்டவர் பேசுகையில் ''சீக்கிரம்'' மற்றும் ''சந்தோஷம்'' எனும் சொற்களைப் பயன்படுத்துகிறார் பாருங்கள் (வச 5,20). இவர்கள்தான் நமது ஆலய இருக்கைகளை நிரப்பும் பிரசங்க ரசிகர்கள்!

தேவனானவர் நமது பாசமுள்ள அப்பா; அதே வேளையில் அவர் ''பட்சிக்கும் அக்கினி.'' பத்துக் கட்டளைகள் கொடுக்கப்பட்டபோது, ''இடி முழக்கங்கள், மின்னல்கள், எக்காள சத்தம், புகைக்காடான மலை'' ஆகியவற்றைக் கண்ட, கேட்ட, இஸ்ரவேலர் **நடுநடுங்கிப்போனார் கள்** (யாத் 20:18,19). ஆனாலும் அவர்கள் கீழ்ப்படியாது, அழிந்து போனார்கள். இதனைச் சுட்டிக்காட்டி எபிரெய நிருப ஆக்கியோன் நமக்கு விடும் எச்சரிப்பு: ''பர்வதத்திலிருந்து வந்த சத்தத்திற்குக் கீழ்ப்படியாத வர்களே அழிந்துபோயிருக்க, பரலோகத்திலிருந்து இன்று வரும் சத்தத்திற்கு நாம் காதடைத்தால் எப்படித் தப்ப முடியும்?'' (எபி 12:25). இந்தச் சூழமைவில்தான் நிருப ஆக்கியோன் தேவனைப் ''பட்சிக்கும் அக்கினியாய்ச்'' சித்தரித்து, **''பயமும் பக்தியும்''** நிறைந்துள்ள கீழ்ப் படிதலுக்கு நம்மை அழைக்கிறார் (வச 28,29).

## 4. திருப்பணி

நிறுவனம் சார்ந்த ஊழியங்களோ, சாராதவையோ, அவற்றில் பெரும்பாலானவை இன்று வணிகமயமாகி வருவது நம்மைப் பெரிதும் வருத்துகிறது. தீர்க்கன் எரேமியாவின் நாட்கள் திரும்புகின்றனவோ என்னவோ? அவருடன் தேவன் தமது இதய வேதனையை எப்படிப் பகிர்ந்துகொள்கிறார் பாருங்கள்: ''சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமன்றி, தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர் வரை ஒவ்வொருவரும் பொய்யர். சமாதானம் இல்லாதிருந்தும், சமாதானம், சமாதானம் என்று சொல்லி என் மக்களின் காயங்களை மேலோட்டமாகவே குணப்படுத்துகிறார்கள்'' (எரே 6:13,14). மக்களுக்கு ஊழியம் செய்ய வருமுன் பிரசங்கிமாரும் சபை மேய்ப்பரும் காலைதோறும் தேவப் பிரசன்னத்தில் **நடுங்கி** நிற்கத் தவறுவதன் விளைவே இது. என்னை உண்மையுள்ளவன் என்று ''கண்டதால்'' அல்ல, உண்மையுள்ளவன் என்று ''கருதியதாலேயே'' தேவன் என்னைத் தெரிந்துகொண்டார் (1 தீமோ 1:12). அவருக்குமுன் எனது **பயபக்தியை** இழந்துவிடாதபடி இதனை எப்பொழுதும் மனதிற்கொண்டுள்ளேன். ஏசாயா 10:15ஐ வாசிக்கும்போதெல்லாம், எனது குருட்டுத்தனத்தையும் மூடத்தனத்தையும் உணர்ந்து தலை குனிகிறேன்: ''கோடரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய்ப் *பெருமிதம்* கொள்ளலாமோ? வாளானது தன்னைக் கையாளுகிறவனுக்கு விரோதமாய்க் *கர்வம்* கொள்ளலாமோ? இப்படியெல்லாம் செய்தால், தடியானது தன்னைப் பிடித்திருக்கிறவனை மிரட்டினது போலவும், கோலானது நான் மரக்கட்டை அல்ல என்று எழும்பினது போலவும் இருக்குமே!'' ஒரே சத்தியத்தை நமக்குள் புகுத்த நான்கு எடுத்துக்காட்டுகள்!

எனது பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் வகுப்பிலுள்ள ஏறத்தாழ 40 மாணவர்களில் நான் ஒருவன். ஒரு சிலருடன், ஏன் என்னையும் ஆண்டவர் தெரிந்துகொண்டாரென்று எனக்குப் புரியவில்லை. இந்தியாவில் ஆயிரக்கணக்கான சபைப் போதகர்களும் பிரசங்கிமாரும் உண்டு. ஆரோக்கிய உபதேசத்தைப் போதிக்கும்படி ஒரு சிலருடன் ஏன் என்



னையும் ஆண்டவர் ஒரு திருமறைப் போதகனாய்த் தெரிந்துகொண்டாரென்று எனக்குத் தெரியவில்லை. நான் இலக்கியப் பட்டம் அல்ல, பொறியியல் பட்டம் பெற்றவன். பொறியியலரின் மொழி கணிதம் தானே? பின்னை ஏன் அவருக்காக எழுதும்படி எம்பெருமான் என்னைத் தெரிந்துகொண்டாரோ? நான் இறையியல் கல்லூரியில் பயிலாதவன்; ஆனால் இறையியலர்களும் வேதாகமக் கல்லூரி மாணவர்களும் எனது எழுத்துக்களை விரும்பிப் படிக்கிறார்கள். ஏன், ஆண்டவரே? ஏன், ஆண்டவரே? ஏன், ஆண்டவரே? அவரோ அமைதி காத்து எனது கவனத்தை ரோமர் 11:20க்குத் திருப்புகிறார்: ''மேட்டிமைச் சிந்தையாயிராமல் **பயந்திரு!**'' எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் நான் இருப்பது தேவ கிருபையினாலேயே; நான் இயங்குவதும் தேவ கிருபையினாலேயே! (1 கொரி 15:10). பவுலடியாருடன் சேர்ந்து அடியேனது அறிக்கை: ''நான் என்னால் தகுதியானவன் அல்ல; என்னுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது'' (2 கொரி 3:5). நான் இவ்வுணர்வுடன் அடிக்கடி தேவனிடம் சென்று எனது கண்ணீரால் அவரது பாதங்களைக் கழுவுகிறேன்! அவரைத் துதிக்கப் போதுமான வார்த்தைகள் கிடைக்காது தவிக்கிறேன். இயேசுவானவருக்குத் திருமுழுக்கு கொடுக்கும்போது யோவான் எவ்வளவாய் நடுங்கியிருப்பார், அவரது கரங்கள் எவ்வளவாய் உதறியிருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கிறேன் (மத் 3:11-16; மாற் 1:7; லூக் 3:16; யோ 1:27).

தேவனுக்கு ஊழியம் செய்வதால் நாம் அவருக்கு ஏதோ உபகாரம் செய்கிறோம் என்று நினைத்துவிடக்கூடாது. அவரது ''கட்டிடத்தில்,'' மற்றும் அவரது ''களத்தில்'' பணியாற்ற அவரது ''உடன் வேலையாட்களாய்'' அழைக்கப்பட்டுள்ளது நமக்குத்தான் உயர்வு (1 கொரி 3:9). ''களம்'' என்பது சபை நிறுவும் பணியையும், ''கட்டிடம்'' என்பது சபையை நிறைவாக்கும் பணியையும் குறிக்கும். (Planting of Churches and Perfecting of Churches). முதல் வகை ஊழியர் விவசாயிகள் மற்றும் மீனவர் என்றும், அடுத்த வகையினர் கட்டியெழுப்புவோர் மற்றும் மேய்ப்பர் என்றும் பணியாற்றுவர். அடுத்த வசனத்திலேயே பவுல், ''தேவனது கிருபையினால்தான்'' அவர் தலைமைக் கட்டிட

வியலரானார் எனக் கூறுகிறார் (வச 10). ''அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன்'' என்று தன்னை அழைத்துக்கொண்ட பவுலைவிடப் பெரிய அப்போஸ்தலன் யாரென்று எனக்குத் தெரியவில்லை (15:9). அவரது சாட்சியே வேறெதையும்விட எனக்குப் பெரிதும் சவாலிடுகிறது. கொரிந்து விசுவாசிகளுக்கு அவர் எழுதியதைக் கவனியுங்கள்: ''நான் பலக்குறைவுடனும், **பயத்துடனும்**, மிகுந்த **நடுக்கத்துடனும்** உங்களோடு இருந்தேன்'' (2:3). எனது கதையும் இதுதான் என்று உண்மையாய்ச் சொல்லுகிறேன். பிரசங்க ஆயத்தத்தின்போதும், பிரசங்கபீடம் ஏறுமுன்னரும் நான் பலமுறை கழிவறைக்குச் செல்லவேண்டியதிருக்கும். 1983ஆம் ஆண்டு உலகெங்கிலுமிருந்து ஹாலந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் 5000 சுவிசேஷ ஊழியர் கூடிவந்திருந்த மாநாட்டில் பண்டிதர் பில்லி கிரஹாம் (1918-2018) அவர்கள் பிரசங்கிக்கும் முன்னரும் பிரசங்கிக்கும்போதும் நடுக்கத்தினால் அவரது உள்ளங்கைகள் எவ்விதம் வியர்க்கும் என்று காட்டியபோது, யாவரும் எழுந்து நின்று எழுப்பிய கரவொலியைக் கேட்கவேண்டுமே! சபைச் சரித்திரத்திலேயே மிகப் பெரிய சுவிசேஷகர் எனப்பட்டவரிடமிருந்து இவ்வித நிசமான சாட்சி வருவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? இதுதான் தேவனுக்குமுன் நடுங்கி வாழ்வதின் பாக்கியம்! பிரசங்கபீடத்தில் மட்டுமல்ல, தனி நபர்களோடு இடைபடும்போதும் இவ்விதப் **பயபக்தி** நம்மில் காணப்படவேண்டும் (1 பேது 3:15; யூதா 22,23). சாந்தம்! வணக்கம்! இரக்கம்! பயம்! எடுத்துக்காட்டுகள்: (அ) நமது விசுவாசத்தைக் குறித்து வினவப்படும்போது (1 பேது 3:15), (ஆ) பின்வாங்கிப்போனோரைத் திருத்திக்கொண்டுவரும்போது (யூதா 22,23), (இ) குற்றத்தில் அகப்பட்டோரைச் சீர்ப்படுத்தும்போது (கலா 6:1).

ஆசாரியன் ஏலி என்றதும் அவரது குறைபாடுகள்தான் நமது நினைவுக்கு வரும். அவபக்தியான செயல்கள் செய்யாதவாறு தனது மகன்களை அவர் தக்கபடி தடுக்காதது தவிர்த்து, அவரிடம் நற்காரியங்கள் பல காணப்பட்டன. தனது இதய பாரத்தைத் தேவனிடம் அன்னாள் கொட்டியபோது அவர்களைத் தேற்றி அனுப்பிவைத்தது ஏலி



தாத்தாதான் (1 சாமு 1:17). ஜெபத்தின் அரிச்சுவடுகளைச் சின்ன சாமுவேலுக்குக் கற்றுக்கொடுத்ததும் அவரே (3:9). அவரது சரிதையில் என்னை வெகுவாய்க் கவர்வது 1 சாமுவேல் 4:18தான். பெலிஸ்தியர் முன் இஸ்ரவேலர் படுதோல்வியடைந்தனர் என்றும் அவரது இரு மகன்களும் போர்க்களத்தில் கொல்லப்பட்டனர் என்றும் ஒருவன் அவருக்குச் செய்தியறிவித்தான். ஆனாலும், கர்த்தருடைய பெட்டி பிடிபட்டுப்போயிற்று என்று கேட்ட மாத்திரத்தில் அவர் அப்படியே விழுந்து உயிர் நீத்தார். கர்த்தருடைய பெட்டிக்காக அவருடைய இருதயம் ''**தத்தளித்துக்கொண்டு**'' இருந்ததாம். His heart was “trembling” for the Ark of God. (வச 13). இறைப்பணிக்கடுத்த காரியங்களில் இவ்விதப் பயபக்தியே ஊழியராகிய நம்மிடம் காணப்படவேண்டும். தேவனுடைய பெட்டி எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டபோது தாவீதுக்கு இருந்த பயபக்தியான நடுக்கம் குறித்துப் பின்னர் 2 சாமுவேல் 6:9இல் வாசிக்கிறோம். உடன்படிக்கைப்பெட்டி என்பது இறைப்பிரசன்னத்தைக் குறிப்பதாய் இருந்தது. பிரியமானவர்களே, நாம் பிரசங்கபீடம் ஏறும்போதெல்லாம் ஆசாரியன் சகரியாவிடம் தூதன் காபிரியேல் சொன்னது நமது மனதிலிருக்கவேண்டும்: ''நான் **தேவ சந்நிதானத்தில்** நிற்கும் காபிரியேல்!'' (லூக் 1:19அ). நமக்கு முன்பாக இருக்கைகளில் உட்கார்ந்திருக்கும் சபையாரைவிடப் பிரசங்கபீடத்தில் நம்முடன் நிற்கும் சர்வ வல்லவரைக் குறித்த நினைவே மேலோங்கி நிற்கவேண்டும். பவுலின் வல்லமை நிறைந்த பிரசங்கப்பணியின் இரகசியம் இதுவே (2 தீமோ 3:17அ).

பிரசங்கிமாருக்கும் சபை மேய்ப்பருக்கும் பிரம்மாண்டமான கட்டிடங்கள் இன்று அந்தஸ்து அடையாளங்களாய் (status symbols) கருதப்படுகின்றன. பிரியமானவர்களே, இவ்விதக் கட்டிடங்களை எழுப்பிட நமக்கிருக்கும் ''ஞானம்'' அல்லது ''பலம்'' அல்லது ''செல்வம்'' என்பதில் அல்ல, கர்த்தரிலேயே நாம் பெருமிதம் கொள்ளவேண்டும் (எரே 9:23.24; 1 கொரி 1:31). சாலமோன் கட்டிய தேவாலயம் எப்பேர்ப்பட்டது! ஆனால், அதற்கான பிரதிஷ்டை ஜெபத்தில் அவர் சொல்லிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''இஸ்ரவேலின் தேவனாகிய

கர்த்தாவே, இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டியுள்ள இந்த ஆலயம் உம்மைக் கொள்ள முடியுமோ?'' (2 நாளா 6:18). இந்த ஜெபத்தை ஏறெடுக்கையில் அவரது உடற்பாவனையைப் பாருங்கள்: ''இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் முன்பாக அவர் **முழங்காற்படியிட்டு**, தன் கைகளை வானத்தை நோக்கி விரித்தார்'' (வச 13ஆ). இறையரசிற்காய்ப் பெரிய திட்டங்களை மேற்கொள்ளும்போது, தேவ ஊழியராகிய நம்மைப் பார்த்துத் தேவன் விடும் திட்டமான சவால்: ''விண்ணகம் எனது அரியணை; மண்ணகம் எனது கால்மணை. அவ்வாறிருக்க, எத்தகைய ஆலயத்தை நீங்கள் எனக்காய்க் கட்டவிருக்கிறீர்கள்? எத்தகைய இடத்தில் நான் ஓய்வெடுப்பேன்? இவையனைத்தையும் என் கைகளே உண்டாக்கின; இவை யாவும் என்னால் உருவாகின, என்கிறார் ஆண்டவர். ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் **நொறுங்குண்டு**, என் வசனத்திற்கு **நடுங்குகிறவனையே** நோக்கிப் பார்ப்பேன்'' (ஏசா 66:1,2). மன்னன் நேபுகாத்நேச்சாரின் வாயிலிருந்து, ''இது எனது வலிமையின் ஆற்றல், எனது மாட்சியின் மகுடமாய் நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?'' என்ற வார்த்தைகள் வந்த அதே நொடியில் அவருக்கு நிலைகுலையும் நியாயத்தீர்ப்பைத் தேவன் அறிவித்தார் (தானி 4:30,31). ''நமக்குப் பெயர்ப்புகழ்'' வேண்டும் என்ற இரகசிய ஆசை கொண்ட இந்தப் பாபேலின் ஆவி கிறிஸ்தவத்திற்குள் திரும்பி வருவதைக் கண்டு பதறுகிறேன் (ஆதி 11:4).

ஒரு பிரமாதமான பிரசங்கம் செய்த பின்னர் அல்லது வல்லமையான சுகமளிப்பு ஜெபம் ஏறெடுத்த பின்னர் மக்களிடமிருந்து வரும் பாராட்டுதான் ஊழியருக்குப் பேராபத்து. லீஸ்திரா நகரில் அப்போஸ்தலரது ஊழியத்தில் நிகழ்ந்தது நமக்கு அரிய படிப்பினை (அப் 14). பர்னபாவுக்கும் பவுலுக்கும் மாலையணிவித்து, எருதுகளைப் பலியிட்டு, அவர்களைக் கும்பிடச் சிலைவணக்கப் பூசாரிகளும் மக்களும் ஆயத்தம் பண்ணியபோது, அவர்கள் தங்கள் ''ஆடைகளைக் கிழித்துக்கொண்டு'' அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள் (வச 13,14). ஏற்கனவே அவர்களுக்கிருந்தது ஓரிரு ஆடைகள்தான்! (2 கொரி 11:27ஆ). பிரியமானவர்களே, மக்களிடமிருந்து வரும் புகழாரங்களைத் தேவனுக்கே



கொடுத்துவிடுவோம். தேவன் தமது மாட்சிமையை எவருடனும் பகிர்ந்துகொள்ள மாட்டார். தனது சொற்பொழிவைக் கேட்டு மக்கள் கைதட்டியபோது, அப்புகழைத் தேவனுக்குக் கடத்திவிடாததால், ஏரோது போன்ற கிறிஸ்தவனல்லாத மன்னனுக்கே நிகழ்ந்ததை நாமறிவோமே (அப் 12:21-23). தேவன்மீதுள்ள பயபக்தியால் ஊழியர் அலங்கரிக்கப்பட்டிருப்பார்களென்றால், அதே மனப்பான்மையைச் சபையாரும் பெற்று, ''கர்த்தருக்கேற்ற **பயத்துடன்**'' வளர்ந்து பெருகுவர் (அப் 9:31). ''தலையிலிருந்துதானே'' நறுமணத் தைலம் ஆடைகளில் வழியும்? (சங் 133:2). பிரிய பிரசங்க நண்பர்களே, ''வெகு **மனத்தாழ்மையுடனும்** மிகுந்த **கண்ணீருடனும்** கர்த்தரைச் சேவிக்கிறோம்'' என்று நமது ஊழியத்தின் எந்தக் காலக்கட்டத்திலும் நம்மால் சொல்ல முடிய வேண்டும் (அப் 20:19).

## 5. தலைமைத்துவம்

தலைமைத்துவத்தின் அடிப்படைத் தத்துவத்தை நமதாண்டவர் தமது சீடருக்குக் கச்சிதமாய் மாற்கு 10:43,44இல் சொல்லிக்கொடுத்தார்: ''உங்களுக்குள் பெரியவனாய் இருக்க விரும்புகிறவன் உங்களது தொண்டனாய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையாய் இருக்க விரும்புகிறவன் அனைவருக்கும் *பணியாளனாய்* இருக்கட்டும்.'' வெளியுலகத் தலைமைத்துவப் பாணிக்கு எதிரிடையாய் இப்படிச் சொன்னார் (வச 42). ''தொண்டன்'' அல்லது ''பணியாளன்'' அல்லது ''அடிமை'' என்பவன் அவனது **பயபக்தியினாலேயே** அறியப்படுவான். இல்லத்தரசன் அல்லது இல்லத்தரசிக்கு முன்பாக ஒரு வேலைக்காரனோ ஓர் அடிமையோ எப்படி நிற்பான் என்று நாமறிவோமே! இந்தப் பண்பு இல்லாது நமக்கு எவ்வளவு படிப்பு இருந்தாலும் அது ஒரு காசும் பெறாது. Any qualification without this quality is waste! அடிமைப் பழக்கம் நிலவி வந்த காலத்தில் ''வேலைக்காரர்'' மற்றும் ''அடிமைகள்'' என்ற சொற்கள் வழக்கத்திலிருந்தன. எனவேதான், அதிகாரிகளும் அடிமைகளும் ஒருவரோடொருவர் பண்புடனும் பணிவுடனும் நடந்துகொள்ளவேண்டுமென்று பவுல் அறிவுறுத்தினார். அவர் எழுதியது:

''வேலைக்காரரே, உங்கள் தலைவர்களுக்குப் **பயத்துடனும், நடுக்கத்துடனும்** கீழ்ப்படியுங்கள் ... தலைவர்களே, உங்களுக்கும் தலைவரானவர் விண்ணகத்தில் இருக்கிறார் என்பதை நினைவிற்கொண்டு மிரட்டல்களை விட்டுவிடுங்கள்'' (எபே 6:5,9). தனது இறுதி வார்த்தைகளில் தாவீது சொன்னது: ''மானிடரை ஆளுபவன் நீதியோடும் **தெய்வ பயத்தோடும்** ஆளவேண்டும்'' (2 சாமு 23:3ஆ). ஒருவருக்கொருவர் பணிந்து நடப்பது திருவிவிலியக் கிறிஸ்தவத்திற்கே உரியது (எபே 5:21). தலைவர்கள் தங்களுக்கடியில் பணியாற்றுகிறவர்களைத் தங்களிலும் உயர்வாகக் கருதவேண்டும்; அப்படியே அடுத்தவர்களும் நடந்துகொள்ளவேண்டும் (பிலி 2:3). தனது உடன் ஊழியன் தீத்துவைக் கொரிந்து விசுவாசிகள் ''**பயத்துடனும் நடுக்கத்துடனும்**'' ஏற்றுக்கொண்டதைப் பவுலடியார் அகமகிழ்ந்து பாராட்டினார் (2 கொரி 7:15).

அக்காலத்து அரசர்கள் தேவனுக்குப் ''**பயந்து,**'' தங்களது குடிமக்களுக்குமேல் அகந்தையுடன் தங்கள் இருதயத்தை உயர்த்தாதிருப்பதற்காக, இறைத் தத்துவங்களைக் கற்றுக்கொள்ளும்படி, தவறாது தேவனுடைய புத்தகத்தை வாசித்து வரும்படி அறிவுறுத்தப்பட்டார்கள் (உபா 17:18-20). யூதாவிலுள்ள ஒவ்வொரு நகருக்கும் நீதிபதிகளை மன்னன் யோசபாத் நியமித்தார் (2 நாளா 19:5). அவர்களுக்கு அவர் சொன்ன முதல் காரியம்: நீங்கள் செய்யும் காரியங்கள் அனைத்திலும் ''கர்த்தருக்குப் பயப்படுகிற **பயம்** உங்களிடம் இருக்கட்டும்'' (வச 7). ''நீங்கள் கர்த்தருக்குப் **பயந்து**, உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் நடந்து செயல்படுங்கள்'' என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார் (வச 9). ஒருவருக்கொருவர் மதிப்புடனும் பணிவுடனும் நடந்துகொள்ளவேண்டும் என்ற தத்துவத்தை அடகு வைத்துவிட்டதே சபைகளிலும் சங்கங்களிலுமுள்ள தலைமைத்துவப் பிரச்னைகளுக்கு முக்கிய காரணம். நிறுவனங்களின் அமைப்பை மாற்றிப் பயனில்லை; இருதயம் மாறவேண்டும். லூக்கா 18இல் நாம் சந்திக்கிற அநீதியுள்ள நீதிபதி ''தேவனுக்குப் **பயப்படாதவன்**,'' அதே வேளையில் ''மனிதரையும் **மதியாதவன்**'' (வச 4). கிறிஸ்தவ வட்டாரங்களில் நமது



தலைவர்களில் பெரும்பாலானோர் இவனைப் போன்றவர்கள்தான். தந்தையுள்ளமும் தாய்ப்பாசமும் கொண்ட தலைவர்களே அதிகாரத் தோரணை நிறைந்தவர்களைவிட அதிகம் சாதிப்பர் (1 தெச 2:7,11). நட்புள்ளம் கொண்ட தலைவர்கள் மறைந்துவருகின்றனர் (யோ 15:15).

எருசலேமின் ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதில் எஸ்றா ஐயாவும், அதன் மதில்களைத் திரும்பக் கட்டுவதில் நெகேமியா ஐயாவும் தலைவர்களாய்ச் செயலாற்றினர். இவ்விரு சீர்திருத்தச் செம்மல்களின் புத்தகங்கள் தலைமைத்துவம் குறித்து நமக்குத் தரும் படிப்பினைகள் காலத்தால் அழியாதவை. திருவசனத் தியானம் என்ற நமது மூன்றாம் குறிப்பில் எஸ்றா அவர்களைக் கவனித்தோம். அடுத்து, தன்னலமின்மையைத் தனது குணமாய்க் கொண்ட நெகேமியா அவர்களைச் சந்திக்கிறோம். இவருக்கு முந்தி இருந்த ஆளுநர்கள் மக்கள்மீது தாங்க முடியாத பளு சுமத்தி, அவர்களிடமிருந்து பொருளையும் பணத்தையும் பறித்தார்கள். மக்கள் அந்த நுகத்தினால் அழுந்திக்கொண்டிருந்தனர். நெகேமியாவோ முற்றிலும் வித்தியாசமாய்ச் செயல்பட்டார். ''**தேவனுக்குப் பயந்ததாலேயே**'' முந்தைய அதிகாரிகள்போல் அவர் நடந்துகொள்ளவில்லை என்று அறிக்கையிட்டார் (நெகே 5:15). பிரியமான எஸ்றாவையும் நெகேமியாவையும் நமது தலைவர்கள் காப்பியடித்தால், நமது சபைகளுக்கும் சங்கங்களுக்கும் எவ்வளவு விமோசனம் கிடைக்கும்! மூச்சடைக்கும் நமது சூழலில் இத்தென்றல் வீசாதா? தலைவர்களை அகந்தையும் அசட்டையும் ஆட்கொள்ளும்போது, அவர்கள் எப்படியாவது மனந்திரும்பிவிடவேண்டுமென்று ஆண்டவர் பொறுமையாய்ப் போதுமான தருணம் கொடுக்கிறார். அவர்கள் திருந்தாவிட்டால் அவர்கள் பிடித்திருக்கும் செங்கோலைப் பிடுங்கி அதைக்கொண்டே அவர்கள் தலையில் செம அடி கொடுப்பார் (ஏசா 3:16,17). அவர்களுக்குப் புத்தி தெளிந்ததும், மன்னன் எசேக்கியாவுக்குச் செய்ததுபோல் அவர்களுக்குத் தலைமைத்துவ ஆண்டுகளைக் கூட்டிக்கொடுப்பார் (ஏசா 38). இவ்வனுபவத்தைத் தொடர்ந்து எசேக்கியா அறிக்கையிட்டதைக் கேளுங்கள்: ''என் வாழ்வின் ஆண்டுகளிலெல்லாம் எனது ஆத்துமாவின் கசப்பை நினைத்து **(மென்மை**

யாய்) நடந்துகொள்வேன்'' (வச 15). ஆங்கில வேதாகமத்தில், "I will walk softly" என்றிருக்கிறது. பெருமை அகன்றது, மென்மை வந்தது! தலைவர்களாயிருக்கும் நாம் யாவரும் இப்பொழுதே எடுக்கவேண்டிய தீர்மானம்: ''பெருமையையும் அகந்தையையும் நான் வெறுத்தொழிப்பேன்'' (நீதி 8:13). மக்களை நடத்திச்செல்ல எழுந்திருக்குமுன் தேவனுக்குமுன் விழுந்து கிடப்போம். வேறுவழியில்லை. ஏறவேண்டுமானால் இறங்கவேண்டும்! எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்படுமுன் நமதாண்டவர் எல்லாருக்கும் கீழாகத் தம்மைத் தாழ்த்தினார் (பிலி 2:5-9).

### முடிவுரை

நாம் நடுங்கும் கிறிஸ்தவர்களாக வாழவேண்டிய பகுதிகள் இன்னும் பலவுண்டு; அவை இச்செய்திக் கட்டுரையில் இடம் பெறவில்லை. நாம் எப்பொழுதும் தக்க வைத்துக்கொள்ளவேண்டியது இவ்வித நொறுங்குண்ட நிலையையே (சங் 51:17). நமது வாழ்க்கைப் பயணம் முழுவதும் ''**பயத்துடன்**'' நடந்து கொள்ளும்படி அப்போஸ்தலன் பேதுரு நமக்குப் போதிக்கிறார் (1 பேது 1:17). இதனை ஆமோதிப்பது போன்று மன்னன் சாலொமோன் என்றோ எழுதி வைத்ததைக் கவனியுங்கள்: ''தேவனுக்கு **அஞ்சி** அவருக்குமுன் **பயந்திருப்பவர்களே** நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்'' (பிர 8:12ஆ). ''கர்த்தருக்குப் **பயப்படுதல்** வாழ்நாட்களைக் கூட்டும்'' (நீதி 10:27). இது வாழ்க்கையானது ''எவ்வளவு'' நீடிக்கும் என்பதல்ல, ''எப்படி'' இருக்கும் என்பதையே குறிக்கும் (வச 28அ). நம்மோடுள்ள தேவனது இடைபாடுகள் அனைத்தும் நாம் அவரைப்போல் பரிசுத்தமுள்ளவர்களாய் மாறவேண்டும் என்ற இறுதியான இலக்கை நோக்கியவையே. நாம் ''**தெய்வ பயத்துடன்**'' நடந்துகொண்டால்தான் பரிசுத்தத்தில் பூரணமாகுவதற்கு நமது பங்கை நாம் நிறைவேற்ற முடியும் (2 கொரி 7:1). தேவனுக்குப் ''**பயந்திருக்கிறவர்களுக்கென்று**'' விண்ணக வளாகங்களில் ஞாபகப் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது (மல் 3:16ஆ). கிறிஸ்து தமது மறுவருகையின்போது, தமது நாமத்திற்குப் ''**பயப்படுகிறவர்கள்**'' மீது நீதியின் உதய சூரியனாய்ப் பிரகாசிப்பார்! (4:2).



# 3

## நான் மாய்மாலக்காரனா?

Am I a Hypocrite?

பாவங்களிலெல்லாம் படுமோசமானது மாய்மாலம் எனினும் அது கண்டிக்கப்படுவதேயில்லை. மாய்மாலத்தைப்போல் பரிசுத்தத்திற்குத் தடையாயிருப்பது எதுவுமில்லை. எல்லாப் பாவங்களையும், அதிலும் குறிப்பாய்த் தமது நாட்களில் பெருகியிருந்தவற்றையும், இயேசுவானவர் கண்டித்துணர்த்திவந்தார். ஆனால், மாய்மாலக்காரருக்கு மட்டுந்தான் ***''ஐயோ''*** என்று கூறினார் (மத் 23). கொலைகாரருக்கோ, திருடருக்கோ, விபசாரக்காரருக்கோ ''ஐயோ'' என்று அவர் சொல்லவேயில்லை!

கிரேக்கர்களின் நாடகத்துறையில் ''நடிகன்'' (actor) என்பதற்கான பதமே ''மாய்மாலக்காரன்'' (hypocrite) என்பதாகும். ஆம், தங்களது உண்மையான ரூபத்தைக் காட்டாமல் வேறு வேடம் பூண்டுகொள்வோரே மாய்மாலக்காரர். அவர்களை ''வெளிவேடக்காரர்'' என்று *திருவிவிலியம்* என்ற பொது மொழிபெயர்ப்பு வேதாகமம் அழைக்கிறது. நடிகர்கள் தங்களது குரல் மட்டும் வெளியே கேட்பதற்காக ஒலி பெருக்கிக் கருவியொன்றை உள்ளே மறைத்து வைத்துக்கொண்டு, முகக்கவசம் அணிந்திருப்பார்கள். எனவே, வேறுவிதத் தோற்றம் காட்டுபவனே மாய்மாலக்காரன் எனக் கொள்ளலாம்.

## மாய்மாலம் எனும் நஞ்சு

சாத்தான்தான் மாய்மாலம் பண்ணுவதில் வித்தகன். பைபிளில் எழுதப்பட்டுள்ள முதல் மாய்மால வார்த்தைகள் அவனது ஊத்தை வாயிலிருந்தே வந்தன. நமது ஆதிப் பெற்றோரின் நலம் நாடுவோன் போல் நடித்து அவர்களைக் குழியில் தள்ளிவிட்டான் (ஆதி 3:1-5). மனிதர் மூலம் வெளிப்படும் மாய்மாலம் அத்தனைக்கும் மூல காரணம் அவன்தான். எனவேதான் ஆண்டவராகிய இயேசு அவனை ''ஆதி முதல்'' பொய்க்குப் ''பிதாவானவன்'' என்றழைத்தார் (யோ 8:44). பழைய பாம்பாகிய அவன் தனது நஞ்சை ஆதாம், ஏவாளின் நரம்பு நாளங்களுக்குள் செலுத்தினான்; எனவே அவர்கள் மனுக்குலச் சரித்திரத்தில் மாய்மாலம் பண்ணிய முதலாம் நபர்கள் ஆனார்கள். தங்களது கீழ்ப்படியாமைக்கு அடுத்தவர்மீது பழிசுமத்தும்படி அவர்கள் தேவனுக்குக் கொடுத்த பதில்களைப் பாருங்கள் (ஆதி 3:8-13). ஆம், அவிசுவாசத்தையும் கீழ்ப்படியாமையையும் மறைப்பதற்காய்ச் சொல்லப்பட்ட முதலாம் பாவம் மாய்மாலந்தான். கசப்பான நீரூற்றிலிருந்து நன்னீர் சுரக்குமா? (யாக் 3:11,12). எனவேதான், நமது முதல் பெற்றோரின் முதல் மகன் தனது தம்பியைக் கொலை செய்த பின்னர் தேவனுக்குப் பதில் சொல்லும்போது மாய்மாலமாய்ப் பேசினான் (ஆதி 4:9). அன்று முதல் ஒவ்வொரு ஆடவனும் பெண்மணியும் மாய்மாலக்காரர்தான். இதனை அப்போஸ்தலன் பவுல் கச்சிதமாய் ரோமர் 3:4இல் எழுதியுள்ளார்: ''தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனிதனும் பொய்யன் என்றும் சொல்லுவோமாக!'' இதன் பொருள் என்னவெனில், தேவனது பரிபூரணமான உண்மைத்துவத்துடன் ஒப்பிடுகையில், நம்மெல்லாருக்குள்ளும் அங்குமிங்கும் கொஞ்சமாவது மாய்மாலம் ஒட்டிக்கொண்டுதானிருக்கும்.

## தொன்றுதொட்ட பாவம்

விவிலியத்தில் முதலாவது எழுதப்பட்டது யோபு புத்தகம்தான். பழைய ஏற்பாட்டைப் பொருத்தவரை இப்புத்தகத்தில்தான் ''மாய்மாலக்காரன்'' எனும் சொல் அதிகத் தடவை (8) வருகிறது. யோபுவின்



நான்கு நண்பர்களின் கூற்றுக்கள் இதோ: பில்தாத், ''மாய்மாலக்காரரின் நம்பிக்கை அழிந்துபோகும்'' (யோபு 8:13); எலிப்பாஸ், ''மாய்மாலக்காரரின் கூட்டம் வெறுமையாய்ப் போகும்'' (15:34); சோப்பார், ''மாய்மாலக்காரனின் சந்தோஷம் ஒரு நிமிடம் மட்டுமே நிற்கும்'' (20:4); எலிகூ, ''மாயக்காரன் ஆளக்கூடாது'' (34:29). மாய்மாலத்தின் கொடூரத்தை யோபுவும் நான்கு முறை குறிப்பிடுகிறார் (13:16; 17:8; 27:8; 36:13).

## தேவனது கண்டிப்பான பார்வை

வெளிவேடக்காரரின் எண்ணிக்கை சமூகவுலகில் மட்டுமல்ல, சபைக்குள்ளும் இதுவரையில்லாத அளவு பெருகிவருகிறது. ''சீயோனில்'' உள்ள மாயக்காரரை எரித்து அழிக்கவிருக்கும் நித்திய ஜுவாலை குறித்து ஏசாயா பேசினார் (ஏசா 33:14). பன்னிருவரது பொருளாளர் நெடுகவே மாய்மாலக்காரனாயிருந்தவர் (யோ 12:4-6). தனது தலைவரைக் காட்டிக்கொடுத்தபோது தனது மாய்மாலத்தையே காட்டிக்கொடுத்துவிட்டார் (லூக் 22:48). அவரது மாய்மால முத்தம் அவரது நித்திய அழிவை நிர்ணயித்துவிட்டது. நண்பரது அடிகள் உண்மையானவை; எதிரியின் முத்தங்களோ வஞ்சகமானவை (நீதி 27:6). ''மாய்மால'' முத்தங்களைக் குறித்துக் கவனமாயிருக்கவேண்டும் என்பதற்காகவே, ''பரிசுத்த'' முத்தத்துடன் ஒருவரையொருவர் வாழ்த்தவேண்டுமென்று பவுலடியார் அறிவுறுத்தினார் (ரோ 16:16; 1 கொரி 16:20; 2 கொரி 13:12; 1 தெச 5:26). ஆதிச்சபையில் நியாயந்தீர்க்கப்பட்ட முதல் பாவம் மாய்மாலமே என்பதில் ஆச்சரியமில்லையே. தங்களுக்குக் கிடைத்த நிலக்கிரயத்தில் ஒரு பகுதியை வைத்துக்கொண்டதால் அல்ல; தேவ ஊழியருக்குப் பொய்த்தகவல் கொடுத்ததாலேயே அனனியா-சப்பீராள் தம்பதியர்மீது அடி விழுந்தது (அப் 5:1-10). மாய்மாலம் என்றால் ''சாத்தானுடன் உடன்பாடு'' என்றே பொருள் (வச 3). நம்மீது தேவன் அசாதாரண இரக்கம் கொண்டுள்ளார்; எனவேதான் நமது சபைகளில் அனுதின அடக்க ஆராதனைகள் இல்லை. பொதுவாகவே, மூத்தோராகிய நாம் வாலிபரை மாய்மாலத்தில் மிஞ்சி

விடுவோம். எனவேதான், பிரேதங்களை அடக்கம்பண்ணியது ''வாலிபர்தான்'' (வச 6,10)! நமக்குள் ''பரிசுத்த பயபக்தியை'' திரும்பக் கொண்டுவருவது இவ்வித நிகழ்வுகள்தான் என்றால் அவற்றை நமது நடுவில் அனுமதிக்கத் தேவன் தயங்கமாட்டார் (வச 11).

### மாய்மாலமும் உண்மையும் (Hypocrisy vs. Honesty)

நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாழும் மூன்று நபர்களை எழுப்புதல் வீரர் லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்: (1) நாம் யாரென்று நாம் நினைக்கும் நபர்; அதுதான் பெருமை, (2) நாம் யாரென்று பிறர் நினைக்கும் நபர்; அதுதான் மாய்மாலம், (3) நாம் யாரென்று தேவன் அறிந்திருக்கும் நபர்; அதுதான் உண்மை. முதலாமவர் என்ற நபரையும், இரண்டாமவர் என்ற நபரையும், மூன்றாமவர் என்ற நபரைப்போல மாற்றிட நாம் இடையறாது முயன்ற வண்ணம் இருக்கவேண்டும். இயல்பானதும் செயற்கையானதும் கலந்த இரட்டை நபர்தான் மாய்மாலக்காரன். மாய்மாலமானது உண்மைக்கு எதிரானது. மாய்மாலமாயிருப்பதைக் குறைத்துக்கொண்டும், உண்மையாயிருப்பதைக் கூட்டிக்கொண்டும் இருப்பதே பரிசுத்தத்தில் வளருவதாம். ஆண்டவரை எவ்வளவுதான் நேசித்தாலும், அவரது வார்த்தையை எவ்வளவுதான் ருசித்தாலும், மாய்மாலத்தைப் புறந்தள்ளாவிடில் அவருக்குள் நாம் வளர முடியாது (1 பேது 2:1-3). ''கர்த்தரது மலையில் ஏறுதல்'' என்பது பரிசுத்தத்தில் உயர்வதைச் சித்தரிக்கிறது (சங் 24:3,4). ''மனமார உண்மை பேசுதல்'' என்பது மலையில் ஏறுவதற்கானதொரு நிபந்தனையாகும் (சங் 15:1,2).

### இதயமே பிரதானம்!

மாய்மாலம் என்பது ஓர் இருதய நோய். அதை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. எனவேதான் தேவன் நம்மீது வீசும் சவால்: ''எல்லாவற்றையும்விட இருதயமே கேடும் வஞ்சகமும் நிறைந்தது; அதனை யார்தான் புரிந்துகொள்வாரோ?'' (எரே 17:9). வஞ்சகத்தின் பிறப்பிடம் இருதயம் (மாற் 7:21,22). அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாம் (கலா 6:3).



எனவேதான், ''எவனது ஆவியில் கபடு இல்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்'' என்றார் தாவீது (சங் 32:2). மாய்மாலம் அவருக்குச் சற்றும் பிடிக்காது என்பது கவனிக்கத்தக்கது. தேவனிடம் அவர் சொல்வது: ''கபடு செய்கிறவன் என் வீட்டிற்குள் இருப்பதில்லை; பொய் சொல்லுகிறவன் என் கண்முன் தொடர்ந்து நிற்பதில்லை'' (சங் 101:7). சிந்தனைக்கும் சொல்லுக்குமுள்ள முரண்பாடுதான் மாய்மாலம்; அப்படியே, அது சொல்லுக்கும் செயலுக்குமுள்ள முரண்பாடு. ''தேவ சமாதானத்தை'' அனுபவித்து, ''சமாதானத்தின் தேவனை'' நம்முடன் கொண்டிருப்பதற்கு முதல் நிபந்தனை ''உண்மையுள்ளது'' எதுவோ அதனைச் சிந்தித்துக்கொண்டிருப்பதே (பிலி 4:7-9).

### பரிசேயத்துவம்

''மாய்மாலம்'' எனும் பதத்தை நமதாண்டவர் முதலாவது பயன்படுத்தியது மார்க்கச் செயல்களைப்பற்றிப் பேசியபோதுதான். அவர் சொன்னது: ''நீங்கள் ஜெபம்பண்ணும்போது மாயக்காரர் போல இராதேயுங்கள் ... நீங்கள் உபவாசிக்கும்போது மாயக்காரர் போல இராதேயுங்கள் ... நீங்கள் தர்மம் செய்யும்போது மாயக்காரர் போல இராதேயுங்கள்'' (மத் 6:5,16,2). ''பரிசேயத்துவம்'' மற்றும் ''மாய்மாலம்'' ஆகிய இரு வார்த்தைகளும் சுவிசேஷப் புத்தகங்களில் ஒன்றுக்கொன்று இணையாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி, நடிப்பவனே (pretender) மாய்மாலக்காரன். ''பரிசேயரது புளித்த மாவை'' இயேசுவானவர் ''மாய்மாலம்'' என்றழைத்தார் (லூக் 12:1ஆ). அவர்களது போதனையையே இங்கு கருத்தில் கொண்டிருந்தார். மாய்மாலம் என்பது கரோனாவைவிடக் கொடிய நோய்; அது சமூகவுலகின் அத்தனைப் பகுதிகளையும், திருச்சபையை இன்னும் கூடுதலாகவும், பாதித்துள்ளது. லூத்தரன் மாய்மாலம், ஆங்கிலிக்கன் மாய்மாலம், மெதடிஸ்ட் மாய்மாலம், பாப்திஸ்ட் மாய்மாலம், பெந்தேகொஸ்தே மாய்மாலம் என்றெல்லாம் உண்டு! தேவனுக்குமுன் யாவும் நிர்வாணமாயிருக்கிறது, அவரது பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை எனும் முக்கிய சத்தியத்தை நாம் மறந்துவிட்டதாலேயே

இந்நிலை (எபி 4:13). திருச்சபையின் தலையானவர் என்ற நிலையில் கிறிஸ்து ஏழு சபைகளுக்குப் பல்வேறு செய்திகள் அனுப்பினார் (வெளி 2-3). ஆனாலும், அனைத்துச் சபைகளுக்கும் பொதுவான ஒன்று இதோ: ''உள்ளங்களையும் இதயங்களையும் துருவி ஆராய்கிறவர் நானே என்பதை எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்'' (2:23). ''தீச்சுடர்'' போன்ற ''ஏழு கண்கள்'' கொண்டவர் அவர் (5:6; 2:18; சக 4:10).

### லகாய் ரோயி (El-Roi)

எழுப்புதல் என்பதே உலகெங்கும் ஜெபக்கூடுகைகளில் பேசப் படும் முக்கியப் பொருளாகும். புத்துயிரடைதல் (Revival) மற்றும் ஆதிநிலையேகுதல் (Restoration) என்பவற்றிற்கான இறைச்செய்தி சகரியா 8ஆம் அத்தியாயம்தான். தேவன் சொல்வது: ''இந்நாட்களில் எருசலேமுக்கும் யூதாவுக்கும் நல்லது செய்யும்படித் திரும்பவும் நினைத்துள்ளேன்; பயப்படாதேயுங்கள்'' (வச 15). அடுத்து வரும் இரு வசனங்களில் நாம் செய்யவேண்டிய நான்கு முக்கியக் காரியங்களைத் தேவன் வரிசைப்படுத்துகிறார்: முதலாவது, ''பிறருடன் உண்மை பேசுங்கள்.'' நான்காவது, பொய்யாணையில் பிரியப்படாதேயுங்கள்.'' பிரியமானவர்களே, நமது ஊழியங்களுக்கு நாம் அழகான பெயர்கள் கொடுத்துள்ளோம்: இயேசு அழைக்கிறார்! இயேசு விடுவிக்கிறார்! இயேசு ஜீவிக்கிறார்! இயேசு நேசிக்கிறார்! இப்படிப் பல. புதிதாய் நீங்கள் ஓர் ஊழியம் தொடங்க விரும்பினால் இதோவொரு பெயர்: ''இயேசு கவனிக்கிறார்!'' (Jesus Watches!) இதிலும் சிறந்த இன்னொரு பெயர்: ''இயேசு கதறுகிறார்!'' அல்லது ''இயேசு அழுகிறார்!'' (Jesus Weeps!). இறைவெளிப்பாடுகளில் மிகப் பழமையானதொன்று சகோதரி ஆகாருக்குக் கிடைத்தது: ''லகாய் ரோயி'' (El-Roi) = ''நீர்-என்னைக்-காண்கிற-தேவன்!'' (ஆதி 16:13). வெட்கக்கேடான மாய்மாலத்திலிருந்து நாம் விடுவிக்கப்பட வேண்டுமானால் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் இந்த வெளிப்பாடு கிடைக்கவேண்டும். இவ்வரிகளை எழுதிக்கொண்டிருக்கும்போது, 1996இல் எனக்கு நடந்த இருதய அறுவை சிகிச்சை எனது நினைவுக்கு வருகிறது. எனது இருதயத்தை



நான் பார்த்ததில்லை; எனது அறுவை சிகிச்சை நிபுணர் அதனைக் கையிலெடுத்துப் பார்த்திருக்கிறார். அப்படியே கீலேயாத்தின் பரம வைத்தியரும்! (எரே 8:22). பைபிள்தான் அவரது ஸ்கேனர் (scanner) மற்றும் கத்தி (scalpel). இரத்தக்குழாய்களிலுள்ள பல்வேறு அடைப்புகளை அவர் நேர்த்தியாய் அகற்றிவிடுவார்; அப்பொழுது கிறிஸ்துவின் ஜீவ இரத்தம் தடையின்றி ஓடத் துவங்கும்.

### பத்து ஐயோக்கள்

பேச விரும்பப்படாத, ஆனால் உலகெங்கும் பரவியுள்ள, மாய்மாலம் எனும் பொருள் குறித்துச் சிந்திக்கையில், மத்தேயு 23 மற்றும் லூக்கா 11 ஆகிய அத்தியாயங்களைக் கவனியாது இருக்க முடியாது. மாய்மாலக்காரர்மீது இயேசுவானவர் அள்ளியெறிந்த 10 ''ஐயோக்கள்'' இங்கு காணப்படுகின்றன. ''வேதபாரகர்'' மற்றும் ''பரிசேயர்'' மீதுதான் இவை வீசப்பட்டன. யூதரது நியாயப்பிரமாணத்தை நகலெடுத்து, வியாக்கியானித்து, மக்களுக்குப் போதித்தவர்களே வேதபாரகர். நியாயப்பிரமாணத்தை எழுத்தின்படிக் கைக்கொள்வதில் தீவிரம் காட்டி, ஆனால் அதன் ஆன்மீகக் கருத்தை நழுவவிட்டதொரு கட்சியினரே பாலஸ்தீனத்திலிருந்த பரிசேயர். மார்க்கவுலகின் தலைவர்கள் என்றிருந்த இவ்விரு கூட்டத்தினருக்கு நமதாண்டவர் கூறிய 10 ஐயோக்கள் இதோ —

(1) உன்னதமான காரியங்களைப் பிரசங்கித்து, இவ்விதம் மக்களை அதிகம் செய்யச் சொல்லி, ஆனால் ஒரு சொட்டுகூட அப்பியாசிக்காத பிரசங்கிமாருக்கு ஐயோ! (மத் 23:1-5; லூக் 11:46).

(2) மேன்மையான ஆசனங்கள், பட்டங்கள், வந்தனங்கள் போன்றவற்றிற்காய் அலைவோருக்கு ஐயோ! (மத் 23:6-12; லூக் 11:43).

(3) தங்களுக்கு அவை நன்றாய்த் தெரிந்திருந்தும் இறையரசின் ஆசிகளையும், சிலாக்கியங்களையும் மக்களை அனுபவிக்கவிடாது தடுப்போருக்கு ... மக்களது உரிமைகளை மறைப்போருக்கு ஐயோ! (மத் 23:13; லூக் 11:52).

(4) நீண்ட ஜெபங்களைப் பண்ணி எளியோரையும் விதவை களையும் ஏமாற்றுவோருக்கு ... நாதியற்றோர், உதவியற்றோரை வசப்படுத்துவோருக்கு ஐயோ! (மத் 23:14).

(5) விறுவிறுப்பாய்த் தங்கள் குழுக்களுக்கும் சபைகளுக்கும் நிறைய ஆள் சேர்த்து, ஆனால் அவர்களைக் கட்டியெழுப்பத் தங்களைப் போதுமான அளவு வார்க்காதோருக்கு ஐயோ! சேரு கிறவர்கள் நமது தீய வழிகளைத்தான் கற்கின்றனர் (மத் 23:15).

(6) அர்த்தமற்ற, மதியீனச் சடங்காச்சாரங்களையும் பாரம்பரியங் களையும் மக்களுக்குப் போதித்து அவர்களை அடிமைகளாக்கு வோருக்கு ஐயோ! (மத் 23:16-22).

(7) நியாயப்பிரமாணத்தின் எழுத்தைப் பிடித்துக்கொண்டு அதன் உட்கருத்தை விட்டுவிடுவோருக்கு ... எளியோரைப் பரா மரிக்காதோருக்கு ஐயோ! (மத் 23:23,24; லூக் 11:41,42).

(8) உள்ளில் பரிசுத்தமில்லாது உலகில் பக்திப் பூனைகளாய் நடிப்போருக்கு ஐயோ! (மத் 23:25,26; லூக் 11:39,40).

(9) பொது வாழ்வில் அலங்காரம், ஆனால் தனி வாழ்வில் அலங் கோலமாயிருப்போருக்கு ஐயோ! (மத் 23:27,28; லூக் 11:44). பெயருக்கு உயிர், ஆனால் மூளைச் சாவு! (வெளி 3:2).

(10) உள்ள நிலையைக் கூறி வெளிப்படுத்தும் உண்மையான தீர்க்கதரிசிகளை வெறுத்துத்தள்ளி அவர்களைக் கொல்லு வோருக்கு ஐயோ! (மத் 23:29-39; லூக் 11:47-51).

இந்த 10 ஐயோக்களையும் கூறிவிட்டு இறுதியாக ஆண்டவர் சொன் னதைக் கவனித்திருக்கிறீர்களா? ''இவையெல்லாம் இத்தலைமுறை யினர்மீது வரும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 23:36).

## பிரசங்கபீட மாய்மாலம்

இயேசுவின் காலத்திலிருந்த வேதபாரகர்களும் பரிசேயர்களும் இன்றையச் சபையிலுள்ள பிரசங்கிமார், பாஸ்டர்மார் மற்றும் தலை



வர்களுக்கு ஒப்புமை. நாம் மக்களுக்கு உபதேசிப்போம், நமக்கு உபதேசிக்கமாட்டோம். 'ஊருக்கு உபதேசம்' எனும் இந்தப் பிரசங்கபீட மாய்மாலம் இன்று சர்வ சாதாரணம் (ரோ 2:17-23). இதனைக் கிறிஸ் தவரல்லாத சமுதாயம் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு கிறிஸ்தவர் களைப் பழிக்கிறது (வச 24). ''நான்-செய்வதை-அல்ல-நான்-சொல்வதை-செய்'' ("Do-what-I-say-and-not-what-I-do") எனும் இப்போக்கிலிருந்து பிரசங்கிமாராகிய நாம் மனந்திரும்பியே ஆக வேண்டும் (மத் 23:2-4). மாய்மாலக்காரன் பிரசங்கிப்பது முழம்; அப் பியாசிப்பதோ அங்குலம்தான்! பைபிளை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, திருடர்களோடும் விபசாரக்காரரோடும் மறு கை கோர்த்து நடப்பதை ஆண்டவர் அருவருக்கிறார் (சங் 50:16-21). குளிர்ந்துபோன பிரசங்கிமார் துணிந்த பாவிகளையே பிரசவிப்பர். தமது வசனத்துக்கு நடுங்கும் பிரசங்கிகளையே தேவன் அபிஷேகிக்கிறார் (ஏசா 66:1,2). பட்டப் பைத்தியம் நம்மை ஆன்மீகக் குருடர்களாக்கிவிட்டது (மத் 23:6,7). நம்மில் அநேகர் குருடருக்கு குருட்டு வழிகாட்டிகள் என் றாகிவிட்டோம் (வச 16-22). நமக்கிருப்பது கூச்சப்பார்வைதான்! தேவதூதன்போல் பேசுவோம்; இதயமோ பிசாசின் பிடியில்! மக்கள்மீது ஐயோக்களை அள்ளிவீசுவது எளிது (ஏசா 5). ''எனக்கு ஐயோ!'' என்று சொல்லும் நிலைக்கு நாம் வரவேண்டும் (ஏசா 6). அப்பொழுதுதான் விண்ணக அக்கினியினால் நமது மாய்மால நாவு சுத்தமாக்கப்படும்! ''குழாய்க்குப் பெயிண்ட் அடிப்பதால் தண்ணீர் சுத்தமாகிவிடாது'' என்றார் D. L. மூடி (1837-1899). "Whitewashing the pump won't make the water pure!" பிரசங்கபீடங்களிலிருந்து மாய்மாலம் அகற் றப்படும்போது, சபையார் வெறும் பிரசங்க ரசிகர்களாய் அமர்ந்திருக் கமாட்டார்கள் (எசேக் 33:31). இன்னொரு காரியம்: நமது ஊழிய அறிக்கைகளில் பாதிகூட உண்மை கிடையாது; மிகைப்படுத்துதலே நமது கலாச்சாரமாகிவிட்டது.

## மாய்மாலத் தலைவர்கள்

தலைமைத்துவத் தகுதியை மாய்மாலம் தகர்க்கிறது. கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்வதுபோல் அமத்சியா இராஜா

தோற்றமளித்தார்; ஆனால் அவர் ''முழு மனதுடன்'' அப்படிச் செய்ய வில்லை (2 நாளா 25:2,14,27). யோனா ஒரு மாய்மாலத் தீர்க்கதரிசி. கருணையுள்ளம் இல்லாது தீர்க்கதரிசனம் உரைத்தார் (யோனா 4:2,9-11). தற்பெருமையும் நாட்டுவெறியும் அவரது தலையில் நிறைந்திருந்தன (4:2அ). ''மாயக்காரன் ஆளக்கூடாது; மக்கள் சிக்கிக் கொள்வர்'' என்பது யோபுவின் நண்பர் ஒருவரின் கூற்று (யோபு 34:29). தனது அரசுப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபோது, அடுத்த வரிசை யினனாகிய தனது மகன் சாலொமோனுக்குத் தாவீது சொன்னது: ''என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் தந்தையின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவித்திடு; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற் றங்களையெல்லாம் அறிகிறார்'' (1 நாளா 28:9). தலைவர்கள், அதிலும் குறிப்பாய்ப் பிரசங்கிமார், தங்களது வாழ்விலிருந்து மாய்மாலம் எனும் களையை அகற்றிவிட நெடுகவே முயற்சியெடுத்துவரவேண்டும் (மல் 2:6,7). நமது பிரதான போதகராகிய இயேசுவின் வாயில் கபடம், வஞ்சகம், எதுவுமிருந்ததில்லை (ஏசா 53:9; 1 பேது 2:22). ''இரட்டை நாக்கு'' என்பது ஊழிய உதவிக்காரர்களுக்குக்கூட இருக்கக்கூடாதென்று பவுல் குறிப்பாய்ச் சொன்னார் (1 தீமோ 3:8). நாம் நிச்சயித்து நிலைத் திருக்கும் காரியங்களில் நமது வசதிக்கேற்ப சமரசம் செய்துகொள்ளும் மாய்மாலச் சிந்தனை நமது கமிட்டிக் கூடுகைகளைச் சீரழித்துவருகிறது. மாய்மாலக்காரருக்கு இறைநடத்துதல் கிட்டாது; மேலிருந்து நடத்து தல் வராததால், தெளிவான தீர்மானங்கள் எடுக்க முடியாமல், இராட் டினத்தில் சுற்றிக்கொண்டேயிருப்பார்கள் (நீதி 11:3).

## பவுலின் உண்மைத்துவம், உத்தமம்

தங்களது உத்தமத்திற்குப் பெயர் பெற்றிருந்த தேவ மனிதர் மூலம் சவால் பெறுவோம்: ஆபிரகாம் (நெகே 9:8), மோசே (எண் 12:7: எபி 3:5), தாவீது (1 சாமு 22:14), எசேக்கியா (2 நாளா 31:20,21), தானியேல் (தானி 6:4), பவுல் (1 கொரி 4:2-4; 1 தீமோ 1:12), தீமோத்தேயு (1 கொரி 4:17), தீகிக்கு (எபே 6:21), எப்பாப்பிரா (கொலோ 1:7), ஒநேசிமு



(கொலோ 4:9), சில்வான் (1 பேது 5:12), அந்திப்பா (வெளி 2:13). இப்பன்னிருவர் பட்டியலில் தேவன் என் பெயரையும் சேர்க்க முடியுமா? சந்தேகந்தான்! இவ்வித மனிதரில், முழுக்க முழுக்க உண்மையும் உத்தமமுமாய் நடந்து, மாய்மாலத்தை அறவே வாழ்வில் ஒழிக்க இடையறாது முயன்றது அப்போஸ்தலன் பவுல்தான். கமாலியேலைப் போன்று இவரும் பரிசேயக் குருட்டுத்தனத்திலிருந்து சுகம் பெற்றார் (அப் 9:17,18; 5:34). எப்பகுதிகளிலெல்லாம் அவர் உண்மையும் உத்தமமுமாயிருந்தாரென்று இதோ பார்ப்போம் —

■ தனது *போராட்டங்கள்* குறித்து அவர் உண்மையுள்ளவராயிருந் தார் (ரோ 7:13-24). உண்மையுள்ள மனிதன் தனது நற்குணத்தைப் பிரசித்தப்படுத்தமாட்டான் (நீதி 20:6). அவரது ஆன்மீகப் பிரச்னைகள் மட்டுமல்ல, மன உளைச்சல்கள் மற்றும் போராட்டங்களையும் பவுல் வெளிப்படையாய்ப் பகிர்ந்துகொண்டார் (பிலி 2:27; 2 கொரி 1:8-10). ■ தனது *பலக்குறைவுகள்* குறித்து அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (2 கொரி 12:7-10; 1 கொரி 2:3). ■ தனது *சவால்கள்* மற்றும் சாட்சிகள் குறித்து அவர் உண்மையுள்ளவராயிருந்தார்: (அ) ஜெப வாழ்வு (ரோ 9:1-3; 10:1,2), (ஆ) கடிதத் தொடர்பு (2 கொரி 10:9-11), (இ) பயணத் திட்டங்கள் (ரோ 1:12; 15:32; அப் 16:6-10), (ஈ) இடர்பாடுகள், உபத்திரவங்கள், பாடுகள் (2 கொரி 11:22-33), (உ) சோர்பற்ற உழைப்பு (1 கொரி 15:10). ■ தனது *சகவுறவுகளில்* அவர் உண்மையும் உத்தம முமாயிருந்தார் (2 கொரி 6:11; 7:2,3). ■ *பணக்காரியங்களில்* அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (2 கொரி 8:18-23; அப் 20:30-35). பணம் திரட்ட அவர் மேற்கொண்ட ஒரே திட்டம் எளியவர்களுக்காகவே (அப் 24:17; ரோ 15:25,26,31). பல வேளைகளில் பணக்காரியங்களில் தனது நியாயமான உரிமைகளைக்கூட அவர் தியாகம்பண்ணினார் (1 கொரி 9:11,12). வரி செலுத்துதல் குறித்துப் பேசுகையில் ''மனச் சாட்சியை'' அவர் குறிப்பிட்டார் (ரோ 13:5-8). ■ *பிரசங்கிப்பதில்* அவர் உண்மையும் உத்தமமுமாயிருந்தார் (2 கொரி 2:17). அடுத்த வரிசைப் போதகர்களுக்காய் ''உண்மையுள்ள'' மனிதரைத் தேடும்படித் தீமோத் தேயுவைப் பவுல் பணித்தார் (2 தீமோ 2:2). ■ *ஊழிய அறிக்கைகளில்*

அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (ரோ 15:17-19). ■ தனக்குத் *தெரியாதவை* குறித்து அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (1 கொரி 13:9; 2 கொரி 12:1-4). ■ தனது *கடந்த காலம்* குறித்துப் பேசும்போதும் அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (1 தீமோ 1:12-16; 1 கொரி 15:7-9).

பவுலுடன் என்னை நான் ஒப்பிட்டால், மாய்மாலத்திலா, உண்மையிலா, எதில் எனக்கு மதிப்பெண்கள் கூடுதல் கிடைக்கும் என்று சொல்லத் தெரியவில்லை. உத்தமம் (honesty) எனும் துறையில் பவுலைப் போன்று முனைவர் பட்டம் பெற்றவர்தான் பேதுரு-பர்னபா போன்ற அப்போஸ்தலரை மாய்மாலத்திற்காய் எதிர்க்க முடியும் (கலா 2:11-14). பிரசங்கிமாரை வாய்க்கு வந்தவாறு கண்டனம் செய்துவிடாது எச்சரிக்கையாயிருங்கள்! ''மாயக்காரனே! முதலாவது உனது கண்ணிலிருக்கும் மரக்கட்டையை எடுத்துப்போடு; பின்னர் உனது சகோதரன் கண்ணிலிருக்கும் மரத்தூளை எடுத்துவிட உனக்குப் பார்வை தெளிவாயிருக்கும்'' (மத் 7:5). ''தேவனுக்கு முன்பாக வெளிப்படையாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளிப்படையாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்'' என்று சொல்லக்கூடிய அளவு பவுலும் அவரது உடன் ஊழியரும் மாய்மாலத்தை வெறுத்தொழித்தனர் (2 கொரி 5:11). ''இருதய நிலை'' குறித்து அல்லாது, ''வெளித்தோற்றத்தில்'' பெருமிதம் கொள்வதற்கு அவர் பரம எதிரி (வச 12). பிரியமானவர்களே, தேவன் ஒளியில் இருப்பது போல, நாமும் ஒளியில் நடந்துகொள்வோம்; அப்பொழுதுதான் இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவிக்கொண்டேயிருக்கும் (1 யோ 1:7). 8

### மாய்மாலமான சகவுறவுகள்

மாய்மாலமே நமது சகவுறவுப் பிரச்னைகள் பெரும்பாலானவற்றிற்கு முக்கியக் காரணம். அதிலும் குறிப்பாக, மாய்மாலமான வார்த்தைகள். இரகசியமாய் வைக்கப்படவேண்டிய காரியங்களைப் பரப்பி, நபர்களைப் புறங்கூறிய பின்னர், ''ஜெபிப்பதற்காகத்தான் சொல்கிறேன்'' என்று நமது மாய்மாலத்தைத் திருமுழுக்காட்டிவிடுகிறோம். பிரியமானவர்களே, நாம் பகிர்ந்துகொள்ளும் தகவலைவிட (information) கேட்டவர்



மனதில் நாம் ஏற்படுத்தும் தாக்கத்திற்குத்தான் (impression) நமக்குக் கூடுதல் பொறுப்புண்டு. தனக்கு நெருக்கமாயிருந்த நண்பன் மாய்மாலத்தினால் திடீரென்று தனக்கு விரோதமாய் எழும்பியதைக் குறித்துத் தாவீதின் கூற்று: ''அவன் பேச்சு வெண்ணெயிலும் மிருதுவாயிருந்தது; அவன் உள்ளத்திலோ போர்வெறி; அவன் சொற்கள் எண்ணெயிலும் மென்மையாயிருந்தன; அவையோ உருவிய வாள்கள்'' (சங்கீதம் 55:12-14,21; எரேமியா 9:3,8ஐ ஒப்பிடுக). இன்னொரு வேளையில் தாவீது கண்டுபிடித்தது: ''அவர்களது வாயில் ஆசிமொழி; அவர்களது உள்ளத்திலோ சாபமொழி'' (சங் 62:4ஆ; 28:3). வெளிவேடக்காரரோடு ஒட்டவே கூடாது என்று தாவீது தீர்மானித்தார் (26:4ஆ). ஆனால் இங்கு பிரச்னை என்னவென்றால், நமது கூட்டாளிகளின் மாய்மாலத்தைக் கண்டுபிடிக்கும்போது ஏற்கனவே பிந்தியிருக்கும்! தேவனானவர் இருதயங்களை அறிந்திருக்கிறார்; நாமோ வெளித்தோற்றத்தைத்தான் பார்க்கிறோம். இக்காரியத்தில் சாமுவேல் போன்ற தீர்க்கதரிசியே தடுமாறினார் பாருங்கள் (1 சாமு 16:6,7). இதற்காகத்தான் நிதானிக்கும் ஆவியினால் (spirit of discernment) தேவன் நம்மை நிரப்பவேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும் (ஏசா 11:2; 1 கொரி 12:10). மாய்மால உதடுகளை வெள்ளி முலாம் பூசப்பட்ட மண் சட்டிக்கு சாலொமோன் ஒப்பிடுகிறார் (நீதி 26:23).

### கைகுலுக்கலும் கட்டித்தழுவலும்

மாய்மாலக்காரர் பொதுவாக முக்கிய நபர்களாகவே இருப்பர். உண்மையுள்ளோரைவிட அவர்களது எண்ணிக்கை அதிகமாகவே இருக்கும். நமது பிரச்னைகள் பல நெடுநாட்களாக தீர்க்கப்படாதிருப்பதற்கு முக்கியக் காரணம் இதுவே. வழக்கு மன்றங்களும் இவற்றிற்குத் தீர்வு காண முடியாது. அப்போஸ்தலன் யாக்கோபின் கேள்வி: ''உங்களுக்குள் யுத்தங்களும் சண்டைகளும் எதனால் வருகின்றன?'' (யாக் 4:1அ). அதற்கான பதில்: ''வைராக்கியமும் விரோதமும் எங்கு உண்டோ, அங்கு கலகமும் அனைத்துத் தீயச் செயல்களும் உண்டு'' (3:16). அதற்கு மாற்று மருந்து: ''விண்ணிலிருந்து வரும் ஞானம் மாயமற்றது''

(வச 17). ''மாயமற்ற அன்பு'' என்பதனைப் பவுலடியார் வலியுறுத்துகிறார் (ரோ 12:9; 2 கொரி 6:6). முகத்துதி பேசுவோர் பெரும்பாலும் பிரிவினைக்காரராகவே இருப்பர் (ரோ 16:17,18). அன்புள்ளம் இல்லாத கைகுலுக்கல்களும் கட்டித் தழுவல்களும் பேராபத்து. இராஜா யெகூவை யோனதாப் வாழ்த்தியபோது, இராஜா கேட்டது, ''என் இதயம் உன் இதயத்தோடு செம்மையாய் இருப்பது போல உன் இதயமும் செம்மையாய் இருக்கிறதா?'' அதற்கு ஆம், என்று பதில் வந்தபோதுதான், யெஹூ சொன்னது: ''அப்படி இருக்கிறதென்றால் கை கொடு!'' பின்னர் அவர்களிருவரும் சேர்ந்து இராஜாவின் இரதத்தில் ஏறிச் சென்றனர் (2 இரா 10:15,16). என்னே சித்திரம்!

## மாய்மால ஆராதனை

இச்செய்தியின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளபடி, மார்க்கம் சார்ந்த செயல்பாடுகளைப்பற்றிப் பேசும்போதுதான் ''மாய்மாலக்காரன்'' எனும் பதம் முதன்முதலாக இயேசுவின் வாயிலிருந்து வந்தது (மத் 6). உள்ளான பக்தி இல்லாமல் வெளிப்படையான மார்க்கப் பகட்டுதான் இன்றையக் கிறிஸ்தவத்தின் அடையாளமாகிவிட்டது. நம்மிடம் தேவ பக்தியின் வேடம் உண்டு; அதன் சாராம்சமோ வல்லமையோ கிடையாது (2 தீமோ 3:5). நமது இதயங்கள் தேவனோடு இல்லாத நிலையில், நமது பாடல் சத்தம், கீதவாத்திய இசை, கணிசமான காணிக்கை, பெருங்கூட்டம் போன்றவையெல்லாம் அவருக்கு அருவருப்புதான் (ஆமோ 5:21-24). நாம் இப்படித்தான் தேவனை ஆராதிக்கிறோமென்றால் நம்மைத்தான் ''மாயக்காரர்'' என்றழைக்கிறார் இயேசு (மத் 15:7,8). மாய்மாலமாய்ப் பாடுவதில் நாம் தேறினவர்கள். *''ஜெபமே ஜீவன்''* என்று பாடுவோம்; ஆனால் ஜெபத்தை மறப்பது சகஜம்! *''ஆயிரம் நாவுகள் போதாதையா''* என்று பாடுவோம்; ஆனால் ஒரு முறைகூட சாட்சி பகர வாய் திறக்கமாட்டோம்! *''யுத்தம் செய்ய வாரும், கிறிஸ்து வீரரே''* என்று பாடுவோம்; ஆனால் யாராவது நம்மைத் தள்ளிவிட வேண்டும்! *''இயேசுவுக்கே ஒப்புவித்தேன், யாவையும் தாராளமாய்''* என்று பாடுவோம்; ஆனால் பத்திலொன்று கொடுத்துவிட்டாலே பரம



திருப்தி! நாம் உபவாசிப்பது குறித்தும் தேவன் நமக்குச் சவாலிடுகிறார்: ''நீங்கள் உபவாசம் பண்ணியபோது எனக்கென்றுதானா உபவாசம் பண்ணினீர்கள்?'' (சக 7:5). தன்னல மார்க்கம் (வச 6)! நவநாகரீக உடையணிந்து, இருக்கும் நகை நட்டு எல்லாம் போட்டுக்கொண்டு, உடையலங்காரப் போட்டிக்குச் செல்வது போலவே ஆலயம் செல்கிறோம்; உள்ளலங்காரம் எங்கே? (1 பேது 3:3,4).

## தங்கமா, வெண்கலமா?

ஆன்மீகப் போர்க்கலன்களில் முதல் ஆயுதமாகிய ''சத்தியம்'' எனும் பெல்ட்டை நாம் மாட்டிக்கொள்ளவில்லை என்று நன்கறிந்துள்ள பிசாசு நமது ஆராதனைக் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பார்த்துக் கை தட்டிச் சிரிக்கிறான் (எபே 6:14). யுத்தங்கள் பலவற்றில் நாம் தோல்வியடைவது இதனாலேயே. தாவீதுக்கும் சாலொமோனுக்கும் நூற்றுக் கணக்கில் ''தங்கக்'' கேடயங்கள் இருந்தன (1 நாளா 18:7; 1 இரா 10:17). யுத்தக்களத்தில் சூரியக் கதிர்களை எதிரிகளின் முகங்களில் பிரதிபலித்து அவர்களைக் குருடாக்குவதற்காகவே இவை பயன்படுத்தப்பட்டன. எகிப்தின் அரசன் இவற்றையெல்லாம் எடுத்துச் சென்றுவிட்டபோது, அதற்குப் பதிலாக இராஜா ரெகொபெயாம் ''வெண்கலக்'' கேடயங்கள் தயாரித்தார் (2 நாளா 12:9,10). இதுதான் நமது நிலை. வெண்கலத்தைத் தங்கத்திற்குப் பதிலாக்கிவிட்டோம். கர்த்தரது முகப்பிரகாச மகிமையை நாம் பிரதிபலிக்கும்போதுதான் எதிரியை முறியடிக்க முடியும் (2 கொரி 3:18). நாம் சாத்தானை ஏமாற்றிவிட முடியாது! மாய்மாலத்தில் வித்தகனான அவன் யுத்தக்களத்தில் யாரெல்லாம் மாய்மாலக்காரர் என்று எளிதில் அடையாளங்கண்டுவிடுவான். பாம்பறியும் பாம்புத் தடம்!

## ஆடுகள் போன்ற ஓநாய்கள்

துர்வுபதேசிகள் மாய்மாலத்திற்குப் பேர்போனவர்கள். ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு வரும் ஓநாய்களை ஆடுகள் எளிதில் அடையாளம் காண முடிவதில்லை (மத் 7:15). மேய்ப்பர்கள்தான் ஆடுகளைக் கவனமாய்ப் பாதுகாக்கவேண்டும் (அப் 20:28,29). இந்த

ஓநாய்கள் எப்பொழுதும் காடுகளிலிருந்தே வரும் என்று சொல்ல முடியாது; சபைக்குள்ளிருந்தே எழுந்து வரலாம் (வச 30). இவ்விதச் சாதகக்கூற்றை நான் எனக்கே ஓர் எச்சரிப்பாய் எடுத்துக்கொள்கிறேன். எப்படியென்று விளக்குகிறேன், கவனியுங்கள். ஆரோக்கிய உபதேசம் கொடுக்கும் ஒரு திருமறைப் போதகன் என்று நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நான் அறியப்பட்டுள்ளேன். நான் என்னையும் எனது உபதேசத் தையும் குறித்துக் கவனமுள்ளவனாயிராவிடில், நான் என்னையும் என்னைக் கேட்கிறவர்களையும் காப்பாற்ற முடியாது (1 தீமோ 4:16). நான் கவலையீனமாயிருந்தால், சாத்தானது ''ஒளியின் தூதர்'' என்ற வரிசையில் நானும் ஒருவனாகி எனது பிரிய சீடர்களை ஏமாற்றிவிடும் நிலை ஏற்படும் (2 கொரி 11:13-15). ஆதி விசுவாசத்திலிருந்து விலகி, பிசாசின் உபதேசங்களினால் வஞ்சிக்கப்பட்டு, ''மனச்சாட்சியில் சூடு பட்ட பொய்யனாய் மாயத்தினால்'' உபதேசிக்கத் தொடங்கிவிடுவேன் (1 தீமோ 4:1,2). ''மாயமான தாழ்மை'' எனது முகமூடியாகிவிடும் (கொலோ 2:18,19). பிரசங்கிமாராகிய எனது நண்பரே, பகட்டு ஊழியப் பாணிகளுக்குத் தப்பித்துக்கொள்வோம்! இவையெல்லாம் பஞ்சு மிட்டாய்தான்! வஞ்சிக்கிறவர்களும் வஞ்சிக்கப்படுவர் என்பதை நினைவிற்கொள்வோம் (2 தீமோ 3:13). ''மாயமற்ற'' விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டுமென்று திரும்பத் திரும்பத் தீமோத் தேயுவுக்குப் பவுல் நினைப்பூட்டினார் (1 தீமோ 1:5; 2 தீமோ 1:4).

## முடிவுரை

என்றும் எங்கும் மாய்மாலம் பெருகியவண்ணமிருக்கின்றது. திரையுலகானது நம்மை மாய்மாலத்தில் தேறினவர்களாக்கிவிட்டது. நிழல் ஹீரோக்களையே (reel heroes) நிஜ ஹீரோக்கள் (real heroes) என்று கருதிவிட்டோம். புகைப்படங்கள் நிஜமானவையல்ல. இயங்கு படத்திற்குத்தான் (animation) கிராக்கி. விலையாயிருக்கட்டும், நோக்க மாயிருக்கட்டும், எல்லாமே விளம்பரங்களில் மறைபொருள்தான்! Hidden cost, hidden agenda! முன்னேறிய நாடுகளில் நாகரீக மாய் மாலம், பின்தங்கிய நாடுகளில் பழங்கால மாய்மாலம்! நாடுகளின்



தலைவர்களில் பலர் ஏரோது போன்ற மாய்மாலக்காரர்தான் (மத் 2,7,8,12). மோட்சம் ஒன்றுதான் மாய்மாலக்காரர் இல்லாத இடம்! அவர்களுக்கு அங்கு அனுமதி கிடையாது (வெளி 22:15). ''மாயக் காரரின் பங்கு'' என்று நரகத்திற்கு இயேசு பெயர் சூட்டினார் (மத் 24:51). தனது காலத்திலேயே தாவீது எவ்விதம் புலம்பினார் பாருங்கள்: ''இரட்சியும், கர்த்தாவே, பக்தியுள்ளவன் இல்லாது போகிறான்; உண் மையுள்ளோர் மனிதர் நடுவில் குறைந்துவிட்டார்கள். அவரவர் தங்கள் தோழருடன் பொய் பேசுகின்றனர்; தேனொழுகும் உதடுகளால் இரு மனத்தோடு பேசுகின்றனர்'' (சங் 12:1,2). இந்நிலைக்குத் தப்பி வெளிவர வழியே இல்லையா? வழியுண்டு! தேவனது சர்வ வியாபகம் (Omnipresence) மற்றும் அவரது சர்வ ஞானம் (Omniscience) என்ப வற்றை முழுக்க முழுக்க உணர்ந்தவனாய் நான் அவரது கதிரொளிக் கண்களுக்குமுன் தாழ்மையுடன் உட்காரவேண்டும். எனது இரகசியங் களை இயேசு கிறிஸ்து மூலம் அவர் நியாயந்தீர்க்கவிருக்கும் நாள் நெருங்கி வந்துகொண்டிருப்பதால், நான் அவருக்கு முன்பாக நடுங்கி நிற்கவேண்டும் (ரோ 2:16). தனி வாழ்வோ, குடும்ப வாழ்வோ, பொது வாழ்வோ, எங்கும், என்றும், எதிலும் மாய்மாலத்தை நான் அறவே ஒழித்துவிட்டு மோசே போலவும் மேசியா போலவும் எல்லாவற்றிலும் உண்மையும் உத்தமமுமாய் வாழ்ந்திடத் தேவன் எதிர்பார்க்கிறார் (எண் 12:7ஆ; எபி 3:1-7). எனது பாவங்கள் நியாயத்தீர்ப்பிற்கு என்னைத் தொடராதபடி, இப்பொழுதே அவை அறிக்கையிடப்பட்டு, விட்டு விடப்படவேண்டும்; அப்பொழுது முழுமையாய்ச் சுத்தமாக்கப்படு வேன் (1 தீமோ 5:24; 1 கொரி 11:31,32).

தலைப்புக் கேள்விக்கு மறுபடி வருவோம்: *''நான் மாய்மாலக் காரனா?''* ''இல்லை'' என்று நான் பதிலளித்தால், நான் மாய்மாலக் காரன்தான்!

# 4

# இருதய அறுவை சிகிச்சை

Open Heart Surgery

எனது 50ஆம் வயதில், 1996ஆம் ஆண்டு, எனக்கு ஏற்பட்ட சுகக்கேட்டிலிருந்து தேவன் என்னை விடுவித்து எனது வாழ்நாட்களைக் கூட்டிக் கொடுத்துள்ளார். திருப்பணியில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த காலத்தில் எனக்கு இருதயக் கோளாறு இருக்கிறதெனத் திடீரென்று கண்டுபிடிக்கப்பட்டது. வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் (CMC) ஏப்ரல் 23 அன்று எனக்கு இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. எனது தமனிகளில் மூன்று அபாயகரமான அடைப்புகள் இருந்தது கண்டறியப்பட்டது. எனது மருத்துவர் Dr. ஜேக்கப் ஜோஸ் அவர்களது பரிசோதனையை அடுத்து, இருதய அறுவை சிகிச்சை நிபுணர் Dr. ராய் கொருல்லா அவர்களால் 7-மணி நேர அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து முடிந்தது. அறுவை சிகிச்சைக்கு அடுத்த நாட்களில் பல பிரச்னைகள் எழுந்தன. ஆனால் ஆண்டவர் பத்திரமாய் என்னை வெளிக்கொண்டுவந்தார். 2021 ஏப்ரல் 23 அன்று எனது இருதய அறுவை சிகிச்சையின் வெள்ளி விழாவைக் கொண்டாடினேன். தேவனது இரக்கங்களைக் கண்ணீருடன் நினைவுகூர்ந்து இக்கட்டுரையை எழுதுகிறேன். 75ஆம் வயதிற்குள் (2021) வந்துள்ள நான் தேவ



கிருபையால் நீட்டித் தரப்பட்ட நாட்களிலே வாழ்ந்துகொண்டிருக் கிறேன். மன்னன் எசேக்கியாவுடன் சேர்ந்து நான் அறிக்கையிடுவது: ''இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது; தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர்; என் பாவங் களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டீர் ... நான் என்ன சொல்லுவேன்? அவர் எனக்கு வாக்கு அருளினார்; அப்படியே செய்தார்; என் ஆயுளின் ஆண்டுகளிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து (மிருதுவாய், கவனமாய்) நடந்துகொள்வேன்'' (ஏசா 38:17,15).

## குடும்பத்தினரும் நண்பர்களும்

''மரண இருளின் பள்ளத்தாக்கின்'' வழியே நான் நடந்துபோகையில் தோளோடு தோள் கொடுத்து என்னுடன் நின்ற எனது குடும்பத்தின ருக்கும் நண்பர்களுக்கும் நான் போதுமான அளவு நன்றி சொல்ல முடியாது (சங் 23:4). அவர்களே என்னைத் தேற்றிய தேவனது கோலும் தடியுமாயிருந்தனர். இக்காலக்கட்டத்தில்தான் என்றுமே இல்லாத அளவு நீதிமொழிகள் 17:17இன் பொருளைத் தெளிவாய்ப் புரிந்துகொண்டேன்: ''சிநேகிதன் எல்லா வேளைகளிலும் சிநேகிப்பான்; இன்னல் வேளை யில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்.'' நான் ஒத்துப்போக முடி யாத உபதேசத்தைக் கொண்டுள்ள பிரசங்கிமார் பலருங்கூட எனக்காய்க் கண்ணீருடன் ஜெபித்தார்கள். ஆம், மக்களின் முக்கியத்துவத்தை நாம் கடுமையான சூழல்களில்தான் புரிந்துகொள்கிறோம். 13 முதல் 15 ஆண்டுகள் ஏதும் பிரச்னையில்லாது இருக்கலாம் என்ற உத்திரவா தத்தை மட்டுமே மருத்துவமனையிலிருந்து என்னை அனுப்பிவைக்கும் போது மருத்துவர்கள் கொடுத்தார்கள். ஆனால் தேவனது கரத்தின் கீழ் இன்று கூடுதல் 10 ஆண்டுகள் உயிர் வாழ்கிறேன்! போனஸ்! எனது இருதய மருத்துவருக்கும், அறுவை சிகிச்சை நிபுணருக்கும் ஏப்ரல் 23 தோறும் நன்றி கூறுகிறேன். சில சமயங்களில் நான் கூப்பிடும் முன்னரே அவர்கள் என்னுடன் பேசிவிடுகின்றனர்! 1996 முதல் இவர்களிருவரும் எங்கள் குடும்ப நண்பர்களாகிவிட்டனர். Dr. ஜோஸ் அவர்கள் திருச்சி

St. Joseph's கல்லூரியில் மாணவனாயிருக்கையில் 1970ஆம் ஆண்டு நான் அவரைக் கிறிஸ்துவுக்குள் நடத்தியதை எனக்கு நினைவு படுத்தினார். *Bible Treasures* என்ற எனது 832-பக்க நூலை Dr. ராய் அவர்கள் 2013ஆம் ஆண்டு CMC மருத்துவமனை வளாகத்திலேயே வெளியிட்டார். மருந்துகள் தவிர்த்து நான்கு காரியங்கள் அத்தியா வசியமென எனது அன்புக்குரிய இம்மருத்துவர்கள் வலியுறுத்தினர்: (1) உணவு வகைகளில் கட்டுப்பாடு, (2) கிரமமான உடற்பயிற்சி, (3) வாழ்க்கை முறையில் மாற்றம், (4) அவ்வப்போது மருத்துவப் பரி சோதனை. இவற்றை என்னால் முடிந்த அளவு கவனமாய்க் கடைப் பிடிக்கிறேன். நமது ஆன்மீக இதய ஆரோக்கியத்திற்கும் இவை நான் கும் இன்றியமையாதவை. இக்கட்டுரையின் கருப்பொருள் இதுவே.

## கொழுத்த இருதயம்

எனக்கிருந்தது இரத்த அழுத்தமோ, சர்க்கரை வியாதியோ அல்ல; ஆனால் அதிகக் கொழுப்புச் சத்து (Cholesterol). ''கொழுப்பு'' என்ற பதத்திற்குத் ''திமிர்'' என்ற இணைச்சொல்லும் உண்டு. எனது இரத்தத்திலேயே அது உண்டு என்று உங்களில் பலருக்கும் தெரியும்! இதன் அர்த்தத்தில்தான் பல இடங்களில் பைபிள் இச்சொல்லைப் பயன்படுத்துகிறது. இறப்பதற்குச் சற்று முன்னர் மோசே தனது பாடலில் புலம்பியது: ''யெஷுரன் கொழுத்துப்போய் உதைத்தான்; கொழுத்து, பருத்து, முரடனானபோது, தன்னைப் படைத்த தேவனை விட்டு, தனது இரட்சிப்பின் கன்மலையானவரை அசட்டைபண்ணினான்'' (உபா 32:15). ''யெஷுரன்'' என்பது செய்யுளில் இஸ்ரவேல் என்பதற்குப் பயன்படுத்தும் பெயர். ஆசீர்வாதங்களும், சாதனைகளும், வெற்றிகளும், விரிவாக்கங்களும் பெருகிவிடுவதால் நம்மில் பலரும் இந்நிலையைத் தானே அடைந்துவிடுகிறோம்? (எரே 12:2,3அ). ''செருக்குற்றோரின் இருதயம் கொழுப்பேறிப்போயிற்று; நானோ உமது வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்'' என்று சங்கீதக்காரன் பாடினார் (சங் 119:69,70). ஆம், நம்மில் எத்தனை பேர் வேதத்தின் மீதிருந்த ஆதிப் பிரியத்தை இழந்துவிட்டோம்! (லூக் 8:15). அளவுக்குமீறிப் பிர



சங்கங்களைக் கேட்டுக்கொண்டேயிருப்பதும் தேவனது குரலுக்கு நம்மைக் கீழ்ப்படியாது மழுங்கிவிடச் செய்கிறது (ஏசா 6:9,10). இரு தயம் கொழுத்துப்போகும்போது எளியோர் மற்றும் தேவையிலிருப் போர் மீதிருக்கவேண்டிய கரிசனையும் மறைந்துபோகிறது (1 யோ 3:17). தீர்க்கன் எரேமியா மூலம் ஆண்டவர் கொடுத்த எச்சரிப்பு இதுவே (எரே 5:28).

## இருதயமே ஊற்று!

இருதயமானது உடலுறுப்புகளில் அதிமுக்கியமானது. உடல், மனது, ஆன்மா ஆகியவற்றை உள்ளடக்கிய நமது மானிடத்தை ஆளும் மத்திய அரசு இருதயமே என்ற அர்த்தத்தில்தான் திருமறை இப்பதத்தைப் பயன்படுத்துகிறது. நமது அறிவு, சித்தம், உணர்வுகள் போன்றவற்றை ஒருங்கே கொண்டுள்ள நமது ஆள்தத்துவத்தைக் கட்டுக்குள் வைத் திருப்பதும் நமது இருதயமே. நமது நோக்கங்கள், விருப்பங்கள், சிந்தனைகள், மனச்சாட்சி ஆகிய யாவற்றிற்கும் ஊற்றும் காரணமு மானது இருதயம்தான். நமது உள்ளான மனிதனுக்கு மறுபெயர் இருதயம் எனலாம். மையமான அல்லது தவிர்க்க முடியாத எதையும் இருதயம் எனும் பதம் குறிப்பிடும். நமது வாழ்க்கையின் போக்கை நிர்ணயிப்பது இருதயமே என்பதால்தான் அதனை முழு விழிப்புடன் காவல் காக்க வேண்டுமெனத் திருவிவிலியம் நமக்குப் போதிக்கிறது (நீதி 4:23). ஆதியாகமம் 6:6ஐ விடச் சோகமான வசனம் பைபிளில் கிடையாது: ''மண்ணுலகில் மனிதனைப் படைத்ததற்காய்க் கர்த்தர் மனவருத்தம் அடைந்தார்; அது அவரது இருதயத்திற்கு விசனமாயிருந்தது!'' மனி தனது இருதயத்தின் நினைவுகளின் தோற்றம் எல்லாம், எந்நாளும் பொல்லாதவையாகிவிட்டதே இதற்குக் காரணம்! (வச 5). ''எல்லாம் ... எந்நாளும்'' எனும் வார்த்தைகளைக் கவனியுங்கள். இருதயமே தீயவை யாவற்றிற்கும் ஊற்று என நீதிமொழிகள் புத்தகம் பல காரியங்களைச் சுட்டிக்காட்டுகிறது: சதித் திட்டங்கள் (6:18), இச்சை (6:25), தந்திரம் (7:10), கபடம் (12:20), மதியீனம் (12:23), மனக்கசப்பு (14:10), பின்மாற்றம் (14:14), அகந்தை (16:5), இறுமாப்பு (18:12),

மடமை (19:3) மற்றும் பொறாமை (23:17). இயேசுவானவரின் போதனையைக் கவனிப்போம்: ''இருதயத்திலிருந்து பொல்லாத எண்ணங்களும், கொலைவெறிகளும், விபசாரங்களும், வேசித்தனங் களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்'' (மத் 15:19). ''போப் மற்றும் அவரது சகாக்களின் இருதயங் களைவிட எனது இருதயத்தைக் குறித்தே நான் அதிகம் பயப்படு கிறேன்'' என்று வெளிப்படையாய்ச் சொன்னார் மார்டின் லூத்தர்!

## மாபெரும் இருதய வைத்தியர் (The Great Cordiologist)

எனது வியாதியைக் கண்டுபிடிக்குமுன் இரத்தப் பரிசோதனை, ECG, X-ray, Treadmill போன்ற பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் எனக்குச் செய்யப்பட்டன. ''இருதயம்'' என்பதற்கான கிரேக்கச் சொல் "kardia" ஆகும்; அதிலிருந்துதான் Cardiology என்ற பதம் வருகிறது. பரிசோதனையின் முடிவுகள் அனைத்தையும் சேர்த்துவைத்துப் பார்த்தே மருத்துவர் முடிவாக வியாதியைக் கண்டறிகிறார். வெறும் அறிகுறி களோ அல்லது அறிகுறிகளே இல்லாமையோ நம்மை ஏமாற்றிவிடலாம். என்னைப் பொருத்த அளவில் பெரிதாக அறிகுறி எதுவுமில்லை. நமது கிறிஸ்தவ வாழ்விலும் இப்படித்தான். அவ்வப்போது பரிசோதனை செய்துகொள்ளத் தவறிய மதியீனத்தைப் புரிந்துகொள்ளத் திடீரென்று விழித்துவிடுவோம். தேவனே நமது மகா பெரிய இருதய மருத்துவர்! அவரால் கண்டுபிடிக்க முடியாத உள்ளான நிலை எதுவுமில்லை. வியாதி என்னவென்று கண்டுபிடிப்பதில் அவர் தவறு செய்வதேயில்லை. அவர் கண்டுபிடித்த பின்னர் இன்னொரு மருத்துவரிடம் கலந்தாலோசிக்கத் தேவையே இல்லை. பாதாளமும் படுகுழியுமே அவரது பார்வைக்கு வெட்ட வெளிச்சமாயிருக்க, நமது இருதயம் அவரது பார்வைக்கு மறைவாயிருக்குமோ? (நீதி 15:11). வெள்ளியை உலைக்களமும் பொன்னைப் புடக்குகையும் சோதித்துப் பார்ப்பது போலவே, அவர் நமது இருதயத்தைச் சோதித்தறிகிறார் (17:3). இது சூளை வழியாய்ச் செல்லும் அனுபவம்தான்! அவ்வளவு வேதனையாயிருந்தாலும், அவரது அறுவை சிகிச்சை மேசையின்மீது நிபந்தனையின்றி நாம் நம்மைக்



கிடத்திவிடுவதுதான் பாதுகாப்பு. இதோ அவர் தரும் வாக்கு: ''பணிந் தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கவும், நொறுங்கினவர்களின் இருதயத் தைத் திடப்படுத்தவும் நான் அவர்களுடன் குடியிருக்கிறேன்'' (ஏசா 57:15). அவரது வார்த்தையே அறுவை சிகிச்சை மேசைக்கு மேலே தொங்கும் ஊடுருவும் கதிர் விளக்குகள் (எபி 4:13). அவரது வார்த் தையே ஸ்கேனர் (யாக் 1:23). அவரது வார்த்தையே அறுவை சிகிச்சைக் கத்தி (எபி 4:12). நமது வெளித்தோற்றத்தில் அல்ல, இருதயத்தின் நிலையிலேயே அவருக்குக் கவனம் (1 சாமு 16:7). ஒல்லியாய், விறு விறுப்பாய், ஓடியாடிப் பணியாற்றிக்கொண்டிருந்த ஆறடி ஸ்டான்லிக்கா இருதய நோய் என்பது மக்களுக்கு வியப்புதான்!

## இருதய ஆராய்ச்சிக் கேள்விப் பட்டியல்கள்

1962ஆம் ஆண்டு கல்லூரியில் அப்பொழுதுதான் நுழைந்திருந்த நான் நாசரேத்து ஜெபக்குழுவில் மறுபடி பிறந்தேன். அடிக்கடி தனித்து இருதய ஆராய்ச்சி செய்யும் பழக்கம் இக்குழுவில் அதிகமாயிருந்தது. 1963ஆம் ஆண்டு காரைக்குடி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நான் நிறுவிய ஜெப ஐக்கியத்தில் இப்பழக்கத்தை அறிமுகம் செய்தேன். அக்காலத்தில் அமெரிக்காவிலிருந்து மாதந்தோறும் வெளியாகிவந்த *Herald of His Coming* என்ற எழுப்புதல் பத்திரிகை எங்களுக்குத் தவறா மல் கிடைத்தது. வெறும் இறையியலறிவு என்றில்லாது அனலான அருட்செய்திகளைச் சுமந்து வந்த இப்பத்திரிகையில் பல்வேறு விதமான தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள் காணப்படும். அவற்றை நாங்கள் எங்கள் வேதாகமக் குறிப்பேடுகளில் எழுதிவைத்துக்கொண்டு தனித்தும் கூடியும் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கப் பயன்படுத்துவோம். அப்பொழுதெல்லாம் xerox வசதி கிடையாது. 1971இல் நடந்த ஆசீர் வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) முதலாம் ஆண்டு முகாமிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும், முதல் செய்தியை அடுத்து முகாமியர் ஒவ் வொருவருக்கும் முகாமின் கருப்பொருளைத் தழுவிய தற்பரிசோதனைக் கேள்வித்தாள் ஒன்று வினியோகிக்கப்படும். முதல் செய்தியானது பரிசுத்தத்தைப் பற்றியே இருக்கும். முகாமியர் இக்கேள்வித்தாள்களுடன்

முகாம் நடந்த தோட்டமெங்கும் சிதறிச் சென்று ஆங்காங்கே மரத் தடியில் முழங்காலில் விழுந்து ஒவ்வொரு கேள்வியாய் வாசித்துத் தங்களை ஆராய்ந்துபார்ப்பார்கள். மனந்திரும்புதலின் கண்ணீர் நதி யாய் ஓடும்.

## தேவனே, என்னை ஆராய்ந்துபாரும்!

இருதய ஆராய்ச்சி என்று பேசும்போது, முதலாவது ‘‘நாமே’’ நம்மை ஆராய்ந்துபார்க்கவேண்டும். ‘‘நமது இருதயமே நம்மைக் குற்றவாளி களெனத் தீர்ப்பளிக்குமானால், தேவன் நமது இருதயத்திலும் பெரிய வராயிருந்து, அனைத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நமது இருதயம் நம்மைக் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்காதிருந்தால், நாம் தேவனிடம் தைரியம் கொள்ளலாம்’’ (1 யோ 3:20,21). இது அவ்வளவு சுலபமான பயிற்சியல்ல. எனவேதான், ‘‘தனது பிழைகளை உணருகிறவன் யார்?’’ என்று தாவீது சவாலிட்டார் (சங் 19:12). ‘‘துணி கரமான பாவங்கள்’’ மற்றும் ‘‘பெரும் பாதகங்கள்’’ என்பவற்றைவிட நமது ‘‘மறைவான குற்றங்களே’’ அதிகமாயிருக்கும் (வச 12,13). நமது உடைகளையல்ல, உள்ளத்தையே கிழித்து அவரிடம் திரும்ப தேவன் நம்மை அழைக்கிறார் (யோவேல் 2:12,13). மேலெழுந்தவாறு பார்ப் பதே பரிசுத்தத்தில் வளருவதற்கு பெரும் முட்டுக்கட்டை. நமக்கே தெரிந்த பாவங்களையும் மீறுதல்களையும் தேவனிடம் அறிக்கை செய்த பின்னரே தாவீதைப்போல் நாம் ஜெபிக்கவேண்டியது: ‘‘தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைப் பரிசோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்’’ (சங் 139:23; 26:2). யோபுவும் இதே வகையில்தான் தேவனை நாடினார்: ‘‘என் அக்கிரமங்களும் என் பாவங்களும் எத்தனை? என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும்’’ (யோபு 13:23). *Search me, O God, and know my heart today* என்ற பயபக்தியான பாடலை இயற்றிய Dr. J. எட்வின் ஆர் (1912-1987) அவர்களை 1968ஆம் ஆண்டு சென்னை இம்மானுவேல் மெதடிஸ்டு ஆலய மாலை ஆராதனை யொன்றில் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. Dr. சாம் கமலேசன்



(1930-2021) அவர்கள் அப்பொழுது அச்சபையின் போதகராயிருந்தார். Dr. ஆர் அவர்களிடம் எனது பைபிளைக் கொடுத்துக் கையெழுத்திடச் சொன்னேன். அத்துடன் அவர் எழுதிய வசனக்குறிப்பு என்ன தெரியுமா? 1 யோவான் 1:8, ‘‘நமக்குப் பாவமில்லை என்று சொன்னால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வோம்; நம்மில் உண்மை இல்லை!’’ ஆம், அவர் ஓர் எழுப்புதல் வீரர்தான் (Revivalist); அவர் ஒரு சுவிசேஷகராய் (Evangelist) இருந்திருந்தால் தனது கையெழுத்துக்கடியில் யோவான் 10:10 என்று குறிப்பிட்டிருப்பார்! இப்பாடலை நாங்கள் பாடிய கூடுகை களிலெல்லாம் ஆவியானவரின் அசைவாட்டம் பலமாயிருந்தது.

அனுதினமும் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுவது தவிர்த்து அவ்வப்போது ஒரு சில நாட்களை இருதய ஆராய்ச்சிக்கென்றே கடந்த ஆண்டுகளிலெல்லாம் நான் ஒதுக்கி வைத்திருக்கிறேன். நாம் காலணி களோடு நடந்தாலும் கால் கழுவ வேண்டுமல்லவா? இயேசுவைப் பொருத்தவரை, ‘‘குளித்தல்’’ என்பது நிலையின்படிப் பரிசுத்தமாக்கப் படுதலையும் (positional sanctification), ‘‘கால் கழுவுதல்’’ என்பது நடைமுறையில் சுத்திகரிக்கப்படுவதையும் (practical sanctification) குறிக்கும் (யோ 13:5-10). கிறிஸ்துவே நமக்கு நீதியும் பரிசுத்தமும் ஆகிவிட்டதால் நமக்குத் தேவனுக்குமுன் கிடைத்துள்ள ‘‘நிலையை’’ (standing) ஒன்று எடுத்துக்காட்டுகிறது (1 கொரி 1:31). அடுத்தது, பரிசுத்த ஆவியானவருடன் நாம் ஒத்துழைக்கையில் நெடுகவே நம்மில் நடக்கும் பரிசுத்தமாக்கப்படுதலாகிய நமது ‘‘நடை’’ (state) என்பதைக் குறிக்கிறது. பல்வேறு கோணங்களிலிருந்து நான் என்னை ஆராய்ந்து பார்த்து வந்திருக்கிறேன். இப்பயிற்சிக்காய் நான் எனக்காகவும் கூடு கைகளுக்காகவும் ஆயத்தம்பண்ணிய பட்டியல்கள் எனது நாட்குறிப் பேடுகளில் உண்டு. அவற்றில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து உங்களது இருதய ஆராய்ச்சிக்கு உதவும்படி இங்கு தருகிறேன் —

### (A) ஆதாமின் பாவங்கள் (1994)

1. கீழ்ப்படியாமை (ஆதி 3:6இ,11ஆ,17ஆ)
2. தன்னை மறைத்துக்கொள்ளுதல் (வச 8)

''மரங்களுக்குப்'' பின்னால் அல்ல, சிலுவை ''மரத்திற்குப்'' பின்னால்தான் அடைக்கலம் புகவேண்டும்.

3. நன்றியின்மை (3:12அ)
''நீர் எனக்குத் தந்த மாது ...''
4. பிறர்மீது பழிசுமத்துதல் (வச 12)
5. தலைமைப் பொறுப்பில் தவறுதல் (வச 17அ)
வஞ்சகத்திற்குத் தப்பிக்கொள்ள அவளுக்கு உதவவில்லை (வச 13ஆ)
6. திருப்தியின்மை (2:16,17; 3:17இ, 18,22-24)
7. மாற்றுக்கள் (3:7ஆ)
குற்றவுணர்வின் விளைவு

### (B) இருதய ஆயத்தம் (1991)

1. தொழுகைக்கு (மத் 15:8; 22:37)
2. ஜெபத்திற்கு (சங் 66:18; நீதி 15:8)
3. வேத ஆராய்ச்சிக்கும் போதிப்பதற்கும் (எஸ்றா 7:10)
4. நற்செய்திப்பணிக்கு (ரோ 9:1,2; 10:1)
5. காணிக்கை கொடுக்க (யாத் 25:2; 35:21; 2 கொரி 9:7)
6. நற்செயல்கள் செய்வதற்கு (2 நாளா 12:14; மாற் 7:20-23)
7. சகவுறவுகளுக்கு (சங் 55:21; மத் 18:35)

இதயமற்ற மார்க்கத்திற்கு எச்சரிக்கை!

### (C) கிறிஸ்தவர்களது விக்கிரகங்கள் (1997)

1. நான் பணத்தை விக்கிரகமாக்குகிறேனா? (கொலோ 3:5ஆ)
2. நான் எனது வேலை அல்லது ஊழியத்தை விக்கிரகமாக்குகிறேனா? (ஓசி 14:3)
3. நான் தேவ ஊழியரை விக்கிரகமாக்குகிறேனா? (1 கொரி 3:4-7)



4. நான் எனது குடும்பத்தை விக்கிரகமாக்குகிறேனா? (மத் 10:37; லூக் 14:26)
5. நான் பொழுதுபோக்குகளையும் இன்பங்களையும் விக்கிரகமாக்குகிறேனா? (1 கொரி 7:29-31; 6:12,13)
6. நான் எனது உடலை விக்கிரகமாக்குகிறேனா? (1 தீமோ 4:8; 1 கொரி 9:27)
7. நான் எனது எதிர்காலத்தை விக்கிரகமாக்குகிறேனா? (மத் 6:25,34)

### (D) தேவன் வெறுக்கும் காரியங்கள் (1991)

நீதிமொழிகள் 6:16-19

1. செருக்கான பார்வையை வெறுக்கிறேனா?
2. பொய் பேசும் நாவை வெறுக்கிறேனா?
3. இரத்தம் சிந்தும் கைகளை வெறுக்கிறேனா?
4. பொல்லாத இருதயத்தை வெறுக்கிறேனா?
5. தீயது செய்ய விரையும் கால்களை வெறுக்கிறேனா?
6. பொய்ச் சான்று சொல்வதை வெறுக்கிறேனா?
7. பிரிவினை மனப்பான்மையை வெறுக்கிறேனா?

தேவன் விரும்புவதையே விரும்புங்கள்; அவர் வெறுப்பதையோ வெறுத்திடுங்கள். அவரைப் பிரியப்படுத்தும் வாழ்விற்கான தங்க வாசகம் இதுவே. தேவனது பிரியமின்மையைச் சம்பாதிக்கும் எதனையும் ஏற்காதிருங்கள். அவர் நேசிப்பதை நேசிப்பதைவிட அவர் வெறுப்பதை வெறுப்பதற்கே அதிகம் தைரியம் வேண்டும். இவையிரண்டையும் இயேசுவானவர் கச்சிதமாய்ச் சமநிலைப்படுத்தினார்: ''அவர் நீதியை விரும்பினார்; *அத்துடன்* அக்கிரமத்தை வெறுத்தார்'' (எபி 1:9அ). ஒன்று அடுத்ததற்கு வழிநடத்தலாம்; ஆனால் இரண்டும் வேறு வேறு. ''ஆனந்த தைலத்தின்'' அபிஷேகமே இவ்வித வாழ்வுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம் (வச 9ஆ).

## (E) அன்பிற்கு நிரூபணம் (1999)

1 கொரிந்தியர் 13:4-7

1. நான் பொறுமையுள்ளவனாயிருக்கிறேனா?
2. நான் தயையுள்ளவனாயிருக்கிறேனா?
3. நான் பொறாமையில்லாதவனாயிருக்கிறேனா?
4. நான் பெருமையடிப்பதை வெறுக்கிறேனா?
5. நான் அகங்காரமாயிருப்பதை வெறுக்கிறேனா?
6. நான் கடுகடுவென்றிருப்பதைத் தவிர்க்கிறேனா?
7. நான் தன்னலத்தை வெறுக்கிறேனா?
8. நான் கோபத்தைக் கைவிடுகிறேனா?
9. நான் தாராளமாய் மன்னிக்கிறேனா?
10. நான் தீயதில் மகிழ்வதை எதிர்க்கிறேனா?
11. நான் சகிப்புத்தன்மையுள்ளவனா?
12. நான் சந்தேகப் பார்வையைத் தவிர்க்கிறேனா?
13. நான் எதிர்பார்ப்புகளில் சாதகச் சிந்தையுள்ளவனா?
14. நான் பிரியமற்றவை நடப்பதைச் சகித்துக்கொள்கிறேனா?

''தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைகொண்டிருப்பவன் தேவனில் நிலைகொண்டிருக்கிறான்; தேவனும் அவனில் நிலை கொண்டிருக்கிறார்'' (1 யோ 4:16ஆ).

## (F) நான் பைபிளை நேசிக்கிறேனா? (2016)

1. *யோபுவின் சாட்சி*

   ''தேவனது வாயின் வார்த்தைகளை எனது அடிப்படையான உணவைவிட முக்கியமாய்க் கருதுகிறேன்'' (யோபு 23:12).

2. *எஸ்றாவின் சாட்சி*

   ''தேவனது வார்த்தைக்கு நடுங்குவோர் யாவரும் என்னுடன் கூடிக்கொண்டார்கள்'' (எஸ்றா 9:4).



3. *சங்கீதக்காரனின் சாட்சி*

   ''உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அதுவே என் தியானம்'' (சங் 119:97).

4. *எரேமியாவின் சாட்சி*

   ''உமது வார்த்தைகள் கிடைத்தவுடன் அவற்றை உண்டு விட்டேன்; உமது வார்த்தை எனக்கு மகிழ்ச்சியும் என் இருதயத்திற்கு இன்பமுமாயிருந்தது'' (எரே 15:16).

5. *மரியாளின் சாட்சி*

   ''இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை! உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்!'' (லூக் 1:38)

6. *இயேசுவின் சாட்சி*

   ''புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது; தேவனே, உமது சித்தம் செய்ய இதோ வருகிறேன்'' (எபி 10:7).

7. *பேதுருவின் சாட்சி*

   ''மனிதனின் மேன்மையானது புல்லின் பூவைப் போன்றது; புல் உலரும், பூ உதிரும், கர்த்தருடைய வார்த்தையோ என்றும் நிலைத்திருக்கும்!'' (1 பேது 1:24,25)

## (G) ஆதி அன்புக்கு மாற்றுக்கள் (2013)

வெளிப்படுத்தல் 2:1-7

1. சோம்பலுக்கே இடம் கொடாமல் பல்வேறு வேலைகளில் நான் விறுவிறுப்பாயிருக்கலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக்கொள்ளுகிறேனா? (வச 2)
2. கடின உழைப்பிற்கும் விடா முயற்சிக்கும் நான் என்னை அர்ப்பணித்திருக்கலாம், அது இறையரசிற்காகக்கூட இருக்கலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக்கொள்ளுகிறேனா? (வச 2,3)

3. நான் எவ்வித முறுமுறுப்புமின்றி எல்லாச் சிரமங்களையும் சகித்துக்கொள்ளலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக்கொள்ளுகிறேனா? (வச 2)
4. நான் தீயதைச் சகிக்காதிருக்கலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக்கொள்ளு கிறேனா? (வச 2)
5. நான் துர்வுபதேசங்களையும் கள்ள ஊழியரையும் சரியாய் அடையாளங்கண்டு, அவர்களை ஒதுக்கலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக் கொள்ளுகிறேனா? (வச 2)
6. நான் இயேசுவுக்காய்ப் பாடனுபவிப்பதில் பொறுமையாய், விட்டுவிடாமல் தொடரலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக் கொள்ளுகிறேனா? (வச 3)
7. நெறிகெட்ட செயல்களை முழுப்பகையாய் நான் வெறுக் கலாம்; ஆனாலும் தேவன் மீதிருந்த எனது ஆதி அன்பைத் தக்கவைத்துக்கொள்ளுகிறேனா? (வச 6)

''ஆதி அன்பு'' திரும்ப வருமானால், அதற்கு வாக்களிக்கப்படும் ஆதி ஆசீர்வாதம்: ''பரதீசிலுள்ள வாழ்வு மரம்'' (வச 7).

## (H) நான் விண்ணகச் சிந்தையுள்ளவனா? (2019)

1. எதைக் குறித்து நான் தொடர்ந்து கவலைப்படுகிறேன்? உடலுக்கடுத்த தேவைகளா, இறையரசுக்கடுத்தவையா? (மத் 6:31-33)
2. எதைக் குறித்து நான் பிரதானமாகச் சிந்தித்துக்கொண்டி ருக்கிறேன்? தேவனுக்கடுத்தவையா, மனிதருக்கடுத்த வையா? (மத் 16:23)
3. நான் எனக்காகத்தான் பெரிய அளவில் பணம் சேர்த்து வைக்கிறேனா அல்லது தேவனுக்கு நேராய்ச் செல்வந்தனாயிருக்கிறேனா? (லூக் 12:21)



4. எனது நம்பிக்கை அதிகமாகப் பூவுலகிற்கடுத்தவற்றின் மீதிருக்கிறதா அல்லது பரலோகக் காரியங்கள் மீதிருக்கிறதா? (யோ 3:12)
5. மனித இயல்பின்படியான சிந்தனைக்கு மாறாக ஆன்மீகச் சிந்தையில் வளருகின்றேனா? (1 கொரி 2:14,15)
6. எனது வாழ்வை ஆட்கொள்ளும் தத்துவம் யாது? ''சாப்பிடு-சாவு'' என்பதா அல்லது உயிர்த்தெழுதலின் நம்பிக்கையா? (1 கொரி 15:32,33)
7. மண்ணுலகப் பாடுகளில் மூழ்கிவிடுகிறேனா அல்லது நித்திய மகிமையைப் பாடி மகிழுகிறேனா? (2 கொரி 4:17-5:5)
8. சுகமும் செல்வமும் கிடைப்பதற்காகவே நான் இயேசுவைப் பின்பற்றுகிறேனா அல்லது பரலோகப் பொக்கிஷங்களையும் மகிமையையும் மனதில் கொண்டுள்ளேனா? (பிலி 3:17-21)
9. எனது மனது பூவுலகுக்கடுத்த காரியங்களிலேயே கவனம் செலுத்துகிறதா அல்லது உன்னதத்திற்கடுத்தவற்றில் பதிக்கப்பட்டுள்ளதா? (கொலோ 3:1-3)
10. பிதாவாகிய தேவனது அன்பினால் நான் ஆட்கொள்ளப் பட்டுள்ளேனா அல்லது ஊனியல்பின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் வாழ்வின் பெருமை ஆகியவற்றால் பிடிபட்டிருக்கிறேனா? (1 யோ 2:15-17)

இப்பட்டியலில் சொல்லப்பட்டவற்றில் சில திரும்பத் திரும்ப வருவதுபோல் தோன்றலாம்; ஆனால் மருத்துவத்துறையைப் போலவே ஒரு சில பரிசோதனைகளைத் திரும்பத் திரும்ப செய்வது நலமே.

## (I) நான் தகுதியுள்ள ஊழியக்காரனா? (1989)

1. நான் கேட்பதற்குத் தகுதியுள்ள பிரசங்கியா?
2. நான் பொறுப்பு ஒப்படைக்கத் தகுதியுள்ள மேய்ப்பனா?
3. நான் பின்பற்றுவதற்குத் தகுதியுள்ள தலைவனா?

4. நான் கீழ்ப்படிவதற்குத் தகுதியுள்ள கணவனா?
5. நான் மதிக்கப்படுவதற்குத் தகுதியுள்ள தந்தையா?
6. நான் நம்புவதற்குத் தகுதியுள்ள உக்கிராணக்காரனா?
7. நான் ஆதரிப்பதற்குத் தகுதியுள்ள பணியாளா?
8. நான் இதயம் திறப்பதற்குத் தகுதியுள்ள நண்பனா?
9. நான் எனக்காய்ப் பிறர் பேசுவதற்குத் தகுதியுள்ள கனவானா?
10. நான் வாழ்வதற்குத் தகுதியான மனிதனா?

சபை மேய்ப்பர் ஒவ்வொருவரது அலுவலகம் அல்லது ஜெப அறையின் சுவரில் இப்பட்டியல் தொங்கவிடப்படவேண்டும்.

### (J) ஆண்டவரே, என்னை மன்னியும்! (2003)

1. நான் போதுமான அளவு நல்லவனாக இல்லை.
   I have not been good enough.
2. நான் போதுமான அளவு பக்தியுள்ளவனாக இல்லை.
   I have not been godly enough.
3. நான் போதுமான அளவு தயாளனாக இல்லை.
   I have not been generous enough.
4. நான் போதுமான அளவு கனிவுள்ளவனாக இல்லை.
   I have not been gentle enough.
5. நான் போதுமான அளவு மகிழ்ச்சியுள்ளவனாக இல்லை.
   I have not been glad enough.
6. நான் போதுமான அளவு இரக்கமுள்ளவனாக இல்லை.
   I have not been gracious enough.
7. நான் போதுமான அளவு நன்றியுள்ளவனாக இல்லை.
   I have not been grateful enough.
8. ______________________________
9. ______________________________
10. ______________________________



மேலே தரப்பட்டுள்ள 10 பட்டியல்கள் தவிர்த்து, 25க்கும் கூடுதலான இருதய ஆராய்ச்சிக் கேள்விப்பட்டியல்கள் தயாரித்திருக்கிறேன். அவை 33 ஆண்டுகள் (1971-2003) நான் தலைமைப் பொறுப்பாசிரியராய் நடத்திவந்த *ஆசீர்வாதம் (Blessing)* எனும் பத்திரிகையின் முதல் 333 இதழ்களில் வெளிவந்துள்ளன. ஆசீர்வாத இளைஞர் இயக்கத்துடன் (BYM) தொடர்புகொண்டு இப்பழைய இதழ்களிலுள்ள பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். 2020இல் வெளிவந்த கரோனா கதறல் *(Corona Calls)* என்ற எனது நூலிலும் தற்பரிசோதனை உபகரணம் (Self-testing-kit) என்றொரு பட்டியல் உண்டு.

### கெட்ட குணங்களும் நல்ல குணங்களும் (Vices & Virtues)

ஏழு கொடிய பாவங்கள் (Seven Deadly Sins) மற்றும் ஏழு புனித குணங்கள் (Seven Holy Virtues) என்று உலகெங்கும் தெரிந்துள்ள பட்டியலை நாமறிவோம். கொடிய பாவங்களாவன: (1) பெருமை, (2) பேராசை, (3) துராசை, (4) பொறாமை, (5) பெருந்தீனி, (6) மூர்க்கம், (7) சோம்பேறித்தனம். முற்காலத்துத் திருச்சபை வகையறுத்த புனித குணங்களாவன: (1) விசுவாசம், (2) நம்பிக்கை, (3) அன்பு, (4) நியாயம், (5) புத்தி, (6) தன்னடக்கம், (7) திடகார்த்தம். இதிலுள்ள முதல் மூன்றும் இறையியல் சம்பந்தப்பட்டவை, அவை ஒரு கூட்டாக வருகின்றன (1 கொரி 13:13; கலா 5:5,6; கொலோ 1:4,5; 1 தெச 1:2). அடுத்துள்ள நான்கும் நன்னெறியை அடுத்தவை. தேவப் பிள்ளைகளிடம் காணப்படவேண்டிய குறைந்தது 25 நற்குணங்களைப் புதிய ஏற்பாடு சுட்டிக்காட்டியுள்ளது: மகிழ்ச்சி (ரோ 5:2,3,11), கீழ்ப்படிதல் (1 பேது 1:2), பரிசுத்தம் (1 பேது 1:15,16), கற்பு (2 கொரி 6:6), கனிவுள்ளம் (எபே 4:32), திருப்தி (பிலி 4:11,12), சமாதானம் (பிலி 4:7), பரிவுணர்வு (கொலோ 3:12), நன்றியுணர்வு (1 தெச 5:18), இரக்கம் (2 கொரி 6:6), உபசரிப்பு (ரோ 12:13), சாந்தகுணம் (1 தீமோ 6:11), தயாளம் (2 கொரி 9:11,13), சுமூகவுறவு (ரோ 12:18), உண்மை (எபே 4:15,25), தாழ்மை (பிலி 2:3), தேவ பயம் (2 கொரி 5:11), தைரியம் (2 கொரி 5:7,8), மென்மைக்குணம் (யாக் 1:21), மன்னிப்பு

(கொலோ 3:13), பொறுமை (1 கொரி 13:4), சகிப்பு (பிலி 4:5), தன்னடக்கம் (கலா 5:23), தரித்திருப்பு (ரோ 5:3,4) மற்றும் துணிவு (பிலி 1:20). இந்தத் தீய குணங்கள் மற்றும் நல்ல குணங்கள் ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்த்து உங்கள் இருதயத்தை ஆராய்ந்திடுங்கள். நமது இருதயப் பிரச்னையை எவ்வளவு சீக்கிரம் சரி செய்கிறோமோ அவ்வளவு மேல். பிந்தினால் மாரடைப்பு (heart failure) ஏற்படும் (பிர 12:6). நெஞ்சு வலி (anginal pain) வரும்வரை காத்திராதீர் (எரே 4:19).

## **குற்றவுணர்வு** (condemnation) **வேண்டாம்!**

இவ்வித இருதய ஆராய்ச்சிப் பயிற்சிகளை மேற்கொள்ளும்போது குற்றவுணர்வு வருவது இயல்புதான். ஆனாலும் ''கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்வோருக்குத் தண்டனைத் தீர்ப்பு இல்லை'' என்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளவேண்டும் (ரோ 8:1). பிசாசு குற்றவுணர்வடையச் செய்கிறான்; பரிசுத்த ஆவியானவரோ நம்மைப் பாவவுணர்வடையச் செய்கிறார். சாத்தான் தரும் குற்றவுணர்வையும் (condemnation) பரிசுத்த ஆவியானவர் அருளும் பாவவுணர்வையும் (conviction) வேறுபடுத்திப் பார்க்க நமக்குத் தெரியவேண்டும். பாவவுணர்வு தரும் தூயாவியானவர் நம்மைப் பாவ அறிக்கைக்கும் கழுவப்படுதலுக்கும் நடத்துகிறார். அறிக்கையிடப்படும் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; மன்னிக்கப்படும் பாவங்கள் மறக்கப்படுகின்றன (எபி 8:12; எரே 31:34ஆ). சரியாய்ச் சொன்னால், மறுபிறப்பின்போது தேவன் நமது இருதயத்தை வெறுமனே பழுதுபார்க்காது, அதனை எடுத்துவிட்டுப் புதிய இருதயம் ஒன்றைப் பொருத்திவிடுகிறார் (எசே 11:19; 18:31; 36:26). மாற்று இருதய அறுவை சிகிச்சை! Heart Transplantation! இந்தப் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைக் குறிக்கும் வகையில்தான் தேவனை நோக்கிய தாவீதின் வேண்டுதல் தீர்க்கதரிசனமாய் அமைந்துள்ளது: ''தேவனே, சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்!'' (சங் 51:10). பரிசுத்தம் என்றால் பாவம், பாவம் என்றே நினைத்துக்கொண்டிருப்பதல்ல; மாறாக, அது கிறிஸ்து, கிறிஸ்து என்றே இருப்பதாகும்! Not sin-consciousness but Son-consciousness! அதுதான் சுத்த மனசாட்சி (எபி 9:13,14; 10:19-22). கிறிஸ்துவுக்குள்! கிறிஸ்துவுடன்! கிறிஸ்து மூலம்! *''எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே!''* என்று பாடுவோம்.



## ஏப்ரல் 23

1996 ஏப்ரல் 23 செவ்வாயன்று காலையில் அறுவை சிகிச்சையறைக்கு நான் எடுத்துச்செல்லப்பட்ட வேளையில், நான் அசாதாரணமாக அமரிக்கையாய் இருந்தேன். பொதுவாக நான் அதிகம் பதறுபவன். அந்நாட்களில் இருதய அறுவை சிகிச்சை பல வெற்றிகரமாய் நடந்து முடிவதில்லை. நான் அன்று பதட்டமில்லாமல் இருந்ததற்குக் காரணங்கள்: (1) எந்த விபரீதச் சூழலையும் சமாளித்துக்கொள்ளுமளவு எனது மனைவியும் மகளும் தனித்தியங்குத் திறனும், புத்திக்கூர்மையும், மனத்திடமும் கொண்டவர்கள்; (2) ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) பிரதமத் தலைவனாய் நான் இருந்தாலும், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் ஊழியர் ஒருங்கிணைப்பாளர், கள ஒருங்கிணைப்பாளர், இலக்கியத்துறை ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிதி ஒருங்கிணைப்பாளர் ஆகிய மத்திய ஒருங்கிணைப்பாளர்களுடன் (Coordinators) பகிர்ந்த கூட்டுத் தலைமையே (shared leadership) எனது பாணி. அவர்களிடம் ஒப்படைத்துச் செல்ல எதுவுமில்லை! கர்த்தத்துவம் ''அவர்'' தோள்மீது அல்லவா இருந்தது? (ஏசா 9:6,7). ஏற்கனவே 20 புத்தகங்கள் எழுதியிருந்தும், எனது திருமறைத் தியானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் குறிப்புகள் பல இன்னும் எழுத்து வடிவம் பெறவில்லையே என்ற ஒன்றுதான் எனக்கிருந்த கவலை. உயிருடன் பத்திரமாய் என்னை வெளியே கொண்டுவந்த தேவனைத் துதிக்கிறேன். தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து (ICU) பொது அறைக்குக் கொண்டுவரப்பட்ட நான்காம் நாளிலேயே *ஆசீர்வாதம்* பத்திரிகையின் அடுத்த இதழுக்கு அச்சுப்பிழை திருத்தம் செய்யத் தொடங்கினேன்! அன்று முதல் இன்று வரை எவ்வகை ஊழியத்தையும்விட எழுத்துப்பணியிலேயே அதிக நேரம் செலவழித்து வருகிறேன். கடந்த மூன்றாண்டுகளாகப் பிரசங்கப்பணியை ஏறத்தாழ நிறுத்தி

விட்டேன். நல்ல பலன். ஏதோவோர் இடத்தில் கூட்டங்களில் பிரசங்கிப்பதைவிட நான் எழுதி எனது இணையதளத்தில் வெளியிடும் கட்டுரைகள் மற்றும் புத்தகங்கள் மூலம் அகிலவுலக அளவில் கூடுதல் மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறேன். சுவாரஸ்யமானதொரு காரியம் என்னவெனில், ஐக்கிய நாடுகள் சங்கம் (UNESCO) ஏப்ரல் 23ஐ அகிலவுலகப் புத்தக நாள் (World Book Day) என்றறிவித்துள்ளது. புத்தகங்கள், நூலாசிரியர்கள் மற்றும் வாசகர்களுக்கான கொண்டாட்ட நாளாக இது அனுசரிக்கப்படுகிறது. மட்டுமல்ல, 1564இல் ஏப்ரல் 23 அன்றே ஷேக்ஸ்பியர் பிறந்தார்; 1616இல் ஏப்ரல் 23 அன்றே இறந்தார்! இதுவும் சாத்தியமா?!



# 5

# எனது பலவீனங்கள்

My Weaknesses

‘‘**தேவன் எனக்குப் பலமானவர்!**’’ தனிப்பட்டவரது இவ்வித அறிக்கை திருமறையில் பல இடங்களில் உண்டு. மோசேயின் பாடும் உதடுகளே இவ்வார்த்தைகளை முதலாவது உதிர்த்தன: யாத் 15:1,2, ‘‘கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார் ... **கர்த்தர் என் பலமும்** என் கீதமுமானவர்!’’ அடுத்து இவ்விதம் அறிக்கையிட்டவர் தாவீது: 2 சாமு 22:33, ‘‘தேவன் எனக்குப் **பலத்த** அரணானவர்!’’ இதனைச் சங்கீதம் 18:2; 28:7 மற்றும் 118:14இல் தாவீது திரும்பவும் சொல்லுகிறார். சங்கீதப் புத்தகத்தில் இக்கூற்றுள்ள பிற இடங்கள்: 19:14; 22:15,19; 27:1; 43:2; 46:1; 59:17; 62:7; 73:26; 81:1; 140:7; 144:1; முதலியன. சங்கீதப் புத்தகம் தவிர்த்து ஏசாயா 49:5; எரேமியா 16:19; ஆபகூக் 3:19 போன்ற இடங்களிலும் இவ்வறிக்கை தொனிக்கிறது. புதிய ஏற்பாட்டில் தனி நபர்கள் தங்கள் வாழ்வில் தேவனது **பலத்தை** அனுபவித்திருக்கிறார்கள்; ‘‘**கர்த்தரில் பலப்படுங்கள்**’’ என்ற அறிவுறுத்தல்களும் உண்டு; ஆனால் ‘‘கர்த்தரே என் பலம்’’ என்ற அறிக்கை இல்லை (எபே 6:10).

உடல் ரீதியான, பொருளாதார ரீதியான, மன ரீதியான மற்றும் ஆன் மீக ரீதியான பலக்குறைவுகளுக்கு நாம் அந்நியரல்ல. தங்களது பல வீனங்களை ஒரு சிலர்தான் வெளிப்படையாய் அறிக்கையிடுவர்; ஆனால் மக்கள் தங்களைக் குறைவாய் மதிப்பிட்டுவிடுவார்கள் என்றெண்ணிப் பலர் அமைதியாய் இருந்துவிடுவர். தங்களது பல வீனங்களைத் தேவனுக்குமுன் ஒத்துக்கொள்வோருக்கே பிறரைவிடத் தேவ பலம் அதிகமாய் அருளப்படுகிறது என்பதே நான் அனுபவத்தில் கண்டறிந்தது. நமது பலவீனங்களை ஒலிபரப்பவேண்டிய அவசிய மில்லை; ஆனால் தேவனிடமும் நம்மை முதுகில் குத்தமாட்டார்கள் என்பவர்களிடமும் நமது பலக்குறைவுகளைச் சொல்லுவதே தேவை யான பலத்தைப் பெற்றுக்கொள்ள வழி (சங் 6:2;29:11அ; எரே 31:25). தங்களது பலவீனங்களை எழுதிவைக்குமளவு அப்போஸ்தலரிடம் ஒளிவுமறைவின்மை இருந்தது. அவர்கள் தங்களைப் பலவீனருடன் அடையாளப்படுத்திக்கொண்டும் வாழ்ந்தனர் (2 கொரி 11:29அ). நாம் எல்லாருமே பலக்குறைவு உள்ளவர்கள்தான்; வெவ்வேறு பகுதிகளில் பலக்குறைவு அவ்வளவுதான். பல்வேறு பலவீனங்களுடன் போராடு வோரின் சார்பிலும் எனது சார்பிலும் இக்கட்டுரை எழுதுகிறேன். போராட்டத்தில் தவிக்கும் எங்களோடு சேர்ந்துகொள்ள உங்களையும் அழைக்கிறேன். ''**தேவன் எனக்குப் பலமானவர்**'' என்பதுதான் அனைத்துப் பலவீனங்களுக்கும் முடிவான பரிகாரம்! விவிலியத்தின் 40 புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள 200 வசனக் குறிப்புகளைக் கட்டாயம் எடுத்து வாசியுங்கள்.

### 1. ''எனது மாம்சம் பலவீனமானது.''

எனக்கிருப்பது உற்சாகமான ஆவி, ஆனால் பலவீன மாம்சம். தமது சீடரிடம் இயேசுவே இதனைக் கூறினார்: ''ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ **பலவீனமுள்ளது**'' (மத் 26:41; மாற் 14:38). ஆம், சோத னைகளிலிருந்து தப்பியோடிவிடவேண்டும் என்று நான் பல தீர்மானங்கள் எடுக்கிறேன்; ஓரிரு நாட்கள் அல்லது வாரங்கள் சமாளிக்கிறேன்; மறுபடியும் விழுந்துவிடுகிறேன். இவ்விதப் போராட்ட



அனுபவமிருந்த அப்போஸ்தலன் பவுல் கூறுவதை ஆமோதிக்கிறேன். தீயவற்றின் இழுப்பை மேற்கொள்ளுவதற்கு அவரது சாட்சி என்னை ஊக்குவிக்கிறது: ரோ 7:15,18,19, ''நான் செய்வது எனக்கே சம்மத மில்லை; நான் விரும்புவதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன் ... நல்லது செய்யவேண்டும் என்ற விருப்பம் என்னிடம் உண்டு, நல்லது செய்வதோ என்னிடம் இல்லை. ஆதலால் நான் விரும்பும் நல்லதைச் செய்யாது, விரும்பாத தீயதையே செய்கிறேன்.'' இந்நோய்க்குப் பரிகாரம் கண்டுபிடித்த பவுலுக்கு நன்றி: ''எனக்குள் குடிகொண்டிருக்கும் **பாவம்**'' (வச 20). பாவ சுபாவம் (sin principle) இன்னும் எனக்குள் இருக்கத்தான் செய்கிறது; அது என்னிலிருந்து நீக்கப்படவில்லை. இயேசு என்னை இரட்சித்தபோது, பாவத்தின் *தண்டனையிலிருந்து* (penalty) நான் விடுவிக்கப்பட்டேன் (6:23). பாவத்தின் *வல்லமையோ* (power) இன்னும் எனக்கெதிராய்ச் செயல் பட்டுக்கொண்டேயிருக்கிறது; எனது இறுதி மூச்சுவரை இப்போராட்டம் தொடரும். இவ்வுண்மையை நான் மறுத்தால், என்னைத்தான் நான் ஏமாற்றிக்கொள்கிறேன் (1 யோ 1:8). அதாவது, பாவ சுபாவம் **ஒழிக்கப்படவில்லை** (eradication); பாவத்தின் வல்லமையிலிருந்து **விடுதலை** (emancipation) அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். இச்சத்தியத்தை நான் மறந்துவிட்டால், இரட்சிப்பின் மகிழ்ச்சியை இழந்து குற்றவுணர்வுடன் சுற்றுலா (guilt trip) வந்துகொண்டிருப்பேன்.

ரோமர் 7ஆம் அத்தியாயத்திலிருந்து மேலே குறிப்பிட்ட பவுலின் அறிக்கையை நான் சோதனைகளுக்கு இடங்கொடுப்பதற்கு மூடலாய்ப் பயன்படுத்திவிடக்கூடாது. தனது மனதிற்கும் உடலுறுப்புகளுக்கும் இடையில் தொடரும் போராட்டத்தை விளக்கிய பின்னர், விடுதலைக் காய் அப்போஸ்தலன் கதறுகிறார் (வச 23, 24). தனது ''நிர்ப்பந்த நிலைக்கு'' நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே பதில் எனக் கண்டுபிடிக்கிறார் (வச 25). இதன் பொருளென்ன? பாவத்திற்கு மறுப்பு சொல்ல என்னிலிருக்கும் ''கிறிஸ்துவின் ஆவி'' எனக்குப் பலம் தருகிறது (ரோ 8:2,9). இந்த உள்ளான பலம்தான் ''**கிருபை**'' என்பது; அதின்மீது சார்ந்திருந்தால்தான் பாவம் என்னை மேற்கொள்ள மாட்டாது

(6:14; தீத் 2:11,12). ''உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, வாழ்வுச் செருக்கு'' ஆகிய முப்புரிப் பாவங்களை **''எழுதியிருக்கிறதே''** என்று பிசாசின் முகத்தில் அறைந்தாற்போல் இயேசு கூறி வெற்றி கண்டதை நான் எனக்கு நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கவேண்டும் (மத் 4:1-10; 1 யோ 2:16). பாவத்தை மேற்கொள்ள உதவியாக எழுதியிருக்கும் திருவார்த்தைகளால் நான் என்னை நிறைத்துக்கொள்ளவேண்டும் (சங் 119:9,11). இறைவார்த்தை என்னில் வேர்கொள்ள இடமளிக்கும் போதுதான் நான் **பலம்** பெறுகிறேன் (1 யோ 2:14). விபசாரத்திற்கு யோசேப்பு எவ்விதம் விலகியோடினான் மற்றும் அனனியா, மிசாவேல், அசரியா ஆகியோர் விக்கிரகாராதனைக்கு எவ்விதம் விலகியோடினர் போன்ற திருமறை எடுத்துக்காட்டுகளை என் கண்முன் நிறுத்திக் கொள்ளவேண்டும் (ஆதி 39:1-12; தானி 3:13-19). விபசாரம், விக்கிரகாராதனை ஆகிய இரு பாவங்களுக்கும் ''விலகியோட'' வேண்டும் என்ற குறிப்பான எச்சரிப்புகள் எனக்குண்டு (2 தீமோ 2:22; 1 கொரி 10:14). தற்செயலான முதல் பார்வையைத் தொடரும் விரும்பிய இரண்டாம் பார்வைக்கு எதிரான இயேசுவின் எச்சரிப்பை நான் கவனத்திலிருத்தவேண்டும். தொடுதல் போலவே இரண்டாம் பார்வையும் பாவமே (மத் 5:28). மலைப்பிரசங்கத்தை அடிக்கடி தியானிப்பது வெற்றி வாழ்வுக்கான நடைமுறை ஆலோசனைகளை எனக்குத் தரும் (மத் 5,6,7).

என்னைப் போலவே வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் சோதிக்கப்பட்ட இயேசுவுக்கு எனது போராட்டங்கள் நன்றாகவே புரியும் என்பது எனக்குப் பேரூக்கம் (எபி 4:15). இளமைப் பருவம், வாலிபப் பருவம், நடுவயதுப் பருவம் ஆகியவற்றின் சோதனைகளைச் சந்தித்தே அவர் வாழ்ந்துவந்தார். எனது **பலவீனங்களைக்** குறித்து அவர் பரிதபிக்கிறார். மேற்கொள்ளமுடியாத அளவு சோதனை வலுத்தால் நான் அவரிடம் ஓடவேண்டும். இப்பொழுது அவர் அமர்ந்திருப்பது தீர்ப்பின் ஆசனம் அல்ல, ''கிருபையின்'' ஆசனம், கிருபாசனம்! (வச 16). என்னைக் ''குற்றப்படுத்த'' அல்ல, எனக்கு ''உதவவே'' அவர் அங்கு இருக்கிறார் (2:18). தேவனுக்குமுன் நான் ''உத்தமமாய் நடக்க'' அவர்



என்னை அழைக்கும்போது, தம்மைச் **''சர்வ வல்ல தேவன்''** என்று அறிமுகப்படுத்துகிறார் (ஆதி 17:1). அதாவது அவருக்குமுன் நான் உத்தமமாய் நடக்க அவர் வல்லமை தருவார்! திருமறையில் தேவன் அதிமுக்கியமாய் இரு பெயர்களால் அறியப்படுகிறார். ஒன்று ''எலோயீம்,'' அடுத்தது ''யேகோவா'' ''எலோயீம்'' என்பது அவரது வல்லமையையும், ''யேகோவா'' என்பது அவரது உடன்படிக்கையையும் குறிக்கும். ''எலோயீம்'' என்பது 2570 முறையும், ''யேகோவா'' என்பது 6823 முறையும் வேதத்தில் வருகிறது. இதன் பொருள் என்னவெனில், **''வல்லமையுள்ள தேவனே எனது தேவன்!''** ''எலோயீம்'' என்பதுதான் பைபிளில் வரும் தேவனது முதலாம் பெயர் (ஆதி 1:1). நான் சேவிக்கும் தேவன் எவ்வளவு வல்லவர், எவ்வளவு நல்லவர்! அல்லேலூயா!

நான் விழுந்துவிட்டால், விட்டுவிடக்கூடாது, எழுந்திருக்கவேண்டும் (நீதி 24:16அ). இயேசுவின் கரங்களிலும் பிதாவாகிய தேவனின் கரங்களிலும் நான் பத்திரமாயிருப்பதால் எந்தத் தோல்வியும் எனக்கு முடிவானதல்ல (யோ 10:28,29). எனக்குள் இருக்கும் விண்ணுலகத் தேவனானவர் எனக்கெதிராய் இருக்கும் மண்ணுலகத் தேவனானவனைவிட வல்லவர் (1 யோ 4:4). ஒவ்வொரு தோல்வியும் அடுத்த தோல்வியைத் தவிர்ப்பதற்கு எனக்குப் பாடம் புகட்டுகிறது. பிசாசோ எந்த மனிதனோ என்னைத் தீர்த்துக்கட்ட நான் அனுமதிக்க மாட்டேன்; ஏனெனில் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் எனக்கு **ஆக்கினைத் தீர்ப்பு இல்லை** (ரோ 8:1). நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன்; எனவே சாத்தான் என்னைக் குற்றம் சாட்டி அழித்துவிடமுடியாது (வச 33). நான் மனம் வருந்தி தேவனிடம் திரும்பிவரும்போது, தமது இரத்தத்தைச் சிந்தி இப்பொழுது எனக்காய்ப் பரலோகில் பரிந்து பேசிக்கொண்டிருக்கும் கிறிஸ்து மூலம் அவர் என்னை நியாயப்படுத்துகிறார் (வச 33,34; எபி 7:25; வெளி 12:10,11). தோல்விகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, ஜெபம் தரும் கவனம் மூலம் விழிப்பாயிருக்கிறேன் (மத் 26:41). விடமாட்டேன், படைக்கலன்களைக் களைய மாட்டேன் (எபே 6:11-17). கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்லமையிலும் **பலப்பட்டுக்கொண்டே** இருப்பேன் (வச 10).

## உ. ''எனது விசுவாசம் பலவீனமானது.''

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து சொந்த இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன். தேவனே எனது தந்தை என்றும் நான் அவரது பிள்ளை என்றும் அறிவேன். இயேசுவே எனது மேய்ப்பர் என்றும் நான் அவரது ஆட்டுக்குட்டி என்றும் அறிவேன். பரிசுத்த ஆவியானவரே என்னை நடத்துகிறவர் என்று அறிந்து அவரது வழிகாட்டுதலைப் பின்பற்றுகிறேன். ஆனாலும், எதிர்க்காற்றுகள் என்னை மோதிய டிக்கும்போது எனது இந்த அடிப்படை விசுவாசம் ஆட்டங்காணுகிறது. சில பிரச்னைகளை என்னால் சமாளிக்கவே முடியவில்லை. ஒவ்வொரு பிரச்னையும் முந்தியதைவிடக் கொடுமையாகவே இருக்கிறது. சீமோன் பேதுருவைக் கோதுமையைப்போலச் சாத்தான் புடைத்தது போலவே எனக்கும் நடக்கிறது (லூக் 22:31). கடல் அலைகள் போல பிரச்னை களும் இன்னல்களும் அடுத்தடுத்து விரைவாய் என்னை மோதி யடிக்கின்றன (யோபு 1:13-19). ஒரு சில மணி நேரங்களில் பூவுலக ஆசிகள் யாவும் தன்னை விட்டுப் பறிக்கப்பட்டபோது பக்தன் யோபு எப்படித்தான் விசுவாசத்தில் அவ்வளவு உறுதியாய் நின்றாரோ? இவ் விதப் பேரிழப்பின்போது அவரால் கர்த்தரைத் **''தொழுதுகொள்ளவும் துதிக்கவும்''** எப்படித்தான் முடிந்ததோ? (வச 20,21). ''தேவன் என் னைக் கொன்றுபோட்டாலும் அவர்மீது **நம்பிக்கையாய்** இருப்பேன்'' என்று அவரால் சொல்ல முடிந்ததின் இரகசியம் என்னவோ? (13:15). இறுதிவரை யோபுவைத் தாங்கிப் பிடித்த சர்வ வல்ல தேவனையே நான் நோக்கிப் பார்க்கிறேன் (42:2). பேதுருவுக்காய் ஜெபித்தது போலவே ''எனது விசுவாசம் ஒழிந்துபோகாதிருக்க'' என் அன்பர் இயேசு எனக்காய் வேண்டிக்கொள்ள அவரை நோக்கிப் பார்க்கிறேன் (லூக் 22:32).

எனது விசுவாசத்தைத் துவக்கியவர் இயேசுதான் என்றறிவேன்; அவர்தான் அதனை முற்றுப்பெறச் செய்பவராகவும் இருக்கமுடியும் (எபி 12:1). தேவன் என்னில் துவக்கியதைப் பிசாசு முடித்துவிட முடியாது. பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள், வீராங்கனைகளால் சவாலடை கிறேன். ஓடிக்கொண்டிருக்கும் என்னைக் கைதட்டியும், விசிலடித்தும்



உற்சாகப்படுத்த இவர்கள் மேகம்போல் என்னைச் சுற்றி நிற்கிறார்கள். ஆனாலும், பல வேளைகளில் எனது விசுவாசம் அலைக்கழிக்கப்படு கிறது; இதயம் கேள்விகளைக் கொட்டுகிறது. கருவறையில் இரட்டைக் குழந்தைகள் போல விசுவாசமும் அவிசுவாசமும் எனக்குள் மோதிக் கொள்ளுகின்றன! தேவனால் முடியும், ஆனால் செய்வாரா? ''ஆண்ட வரே, நான் விசுவாசிக்கிறேன்; என் அவிசுவாசம் நீங்க உதவிசெய்யும்'' என்றுதான் என்னால் ஜெபிக்க முடிகிறது (மாற் 9:24). இறைவார்த்தை மட்டுமே எனது விசுவாசத்தை வளர்த்துப் பலப்படுத்தமுடியும் (ரோ 10:17). திருவாக்குகளைத் திரும்பத்திரும்ப நான் தியானிக்கவேண்டும். ''என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் எதுவுமுண்டோ?'' என்று தேவன் என்னைப் பார்த்துக் கேட்கிறார் (ஆதி 18:14; எரே 32:27). **''உம்மால் கூடாதது ஒன்றுமில்லை''** என்று நான் பதிலளிக்க வேண் டும் (எரே 32:17; மத் 19:26; லூக் 1:37). இருள் சூழ்ந்த வேளையில் பிதாவானவரிடம் இயேசு இதைத்தான் அறிக்கையிட்டார்: ''அப்பா, பிதாவே, உம்மால் எல்லாம் கூடும்'' (மாற் 14:36அ; லூக் 22:53ஆ).

எதிரிகள் சூழ்ந்திருந்த வேளையில்தான் தாவீது அறிக்கையிட்டது: ''கர்த்தர் என் வாழ்வின் **பலமானவர்;** யாருக்குப் பயப்படுவேன்? யாருக்கு அஞ்சுவேன்?'' (சங் 27:1). அவரைச் சுற்றி வளைந்துகொண் டிருந்தோரைக் குறித்தே இச்சங்கீதம் பேசுகிறது. அதே கதறலை அவர் அடுத்த சங்கீதத்திலும் தொடர்கிறார் (சங் 28). மன்னன் எசேக்கியாவைப் போன்று எனது பலக்குறைவை நான் இதோ அறிக்கையிடுகிறேன்: ''இன்று துன்பமும் கண்டனமும் அவமானமும் மிக்க நாள்; பிள்ளை களைப் பெற்றெடுக்க நேரம் வந்துவிட்டது, பெற்றெடுக்கவோ **வலிமை** இல்லை'' (2 இரா 19:3). அரசன் யோசபாத்தைப் போன்று தேவனை நோக்கி நான் இவ்விதம் கதறுகிறேன்: ''எங்கள் தேவனே, எங்களுக்கு எதிராக வந்துள்ள இத்திரளான கூட்டத்திற்குமுன் நிற்க எங்களுக்குப் **பலம்** இல்லை; நாங்கள் செய்யவேண்டியது என்ன வென்று எங்களுக்குத் தெரியவில்லை; எனவே எங்கள் கண்கள் உம்மையே பார்த்துக்கொண்டிருக்கின்றன'' (2 நாளா 20:12). விசுவாச வீரர்கள் **''பலக்குறைவிலிருந்துதான்''** பலமடைந்தார்கள் (எபி 11:34).

எனது வாழ்வில் காரியங்கள் தாறுமாறாய் நிகழும்போது எனது இதயத்தை ஆராய்ந்துபார்க்கவேண்டும் என்று போதிக்கப்பட்டிருக் கிறேன். தேவனுக்குமுன் காரியங்களைச் சரி செய்ய நிச்சயமாகவே இது வழிவகுக்கிறது. என்னைத் தண்டிக்கவும் திருத்தவும் பிதாவாகிய தேவன் எனது இக்கட்டை ஒரு சிட்சையாய்ப் பயன்படுத்துகிறார் என் பதை அறிகிறேன் (எபி 12:4-6,10,11). ஆனாலும், வறட்டி வாட்டும் அனுபவம் வழியே கடந்துசெல்கையில், எனது கைகள் தளர்கின்றன, முழங்கால்கள் தள்ளாடுகின்றன, கால்கள் தடுமாறுகின்றன (வச 12,13). தேவன் ஒருவரே என்னைப் ''<u>பலப்படுத்தி</u>'' இயல்பு நிலைக்கு என் னைத் திரும்பக் கொண்டுவர முடியும் (வச 12). எனது தற்பரிசோத னையின்போது விரும்பப்படாத எதனையும் என்னில் கண்டுபிடிக்க முடியாத வேளைகளும் உண்டு (சங் 17:3; 1 கொரி 4:4). ஆனாலும் கடும் வேனிற்காலத்தைப்போல் எனது பலமெல்லாம் வற்றிப்போகிறது. ''முன்னால் போகிறேன், அவர் அங்கு இல்லை; பின்னால் செல்கிறேன், அவர் அங்கும் இல்லை; இடது பக்கம் அவர் செயல்படுகிறார், அவ ரையோ பார்க்கமுடியவில்லை; வலது பக்கம் அவர் செயல்பட்டாலும், அவர் எனக்குத் தென்படுவதில்லை'' (யோபு 23:8,9). தேவன் ஒளித்துக்கொள்ளுகிறாரோ? நான் செல்லும் வழியை ''அவர்'' அறிந் திருக்கிறார் என்று எனக்குத் தெரிந்தாலும், சுற்றிலும் இருள்தான் (வச 10அ). நான் என்ன செய்வேன்? அப்படியே தேவனை **''<u>நம்பி</u>''**, அவர்மீது **''<u>சாய்ந்து</u>''** கொள்வேன் (ஏசா 50:10). இந்த இருட்டடைப்பு (discipline of darkness) தாங்கமுடியாதது. எனவே நான் அவரைப் பார்த்து, ''என் மீது இரக்கமாயிரும், கர்த்தாவே; நான் <u>பலமில்லாது</u> போய் விட்டேன்; என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது; கர்த்தாவே, எதுவரை இரங்காமலிருப்பீர்?'' என்று கதறுகிறேன் (சங் 6:2,3).

### 3. ''எனது ஜெப வாழ்வு பலவீனமானது.''

எனது <u>ஜெப வாழ்விலுள்ள பலக்குறைவு</u> எனது நெருங்கிய ஜெபத் தோழர்களைவிடத் தேவனுக்குத்தான் நன்கு தெரியும். எனது மற்ற தியானப் பயிற்சிகளில் காணப்படும் தளர்வைவிட ஜெபத்தில் பலவீன



மாயிருப்பதே அதிகக் கவலைக்குரியது என்று அவர் அறிவார். இதை அறிந்துதான் என்னில் குடிகொண்டிருக்கும்படித் தூயாவியானவரை என் நேசர் அனுப்பிவைத்துள்ளார். நான் எதற்காய், எப்படி ஜெபிக்க வேண்டு மென்று எனக்குச் சரியாய்த் தெரியாது. நான் ஆவியானவரின் உதவி யோடு ஜெபிப்பது தவிர்த்து, அவரே எனக்காய் மன்றாடி வேண்டுதல் செய்கிறார். எனது உள்ளுணர்வுகளை தேவனுக்குமுன் வெளிப்படுத்த போதுமான வார்த்தைகள் கிடையாது நான் திணறும்போது, ஆவியான வரே எனக்காய்ப் பெருமூச்சு விட்டுப் பிதாமுன் புலம்புகிறார் (எபே 6:18; யூதா 20; ரோ 8:26). பிதாவாகிய தேவனுக்குமுன் இயேசுவானவரும் எனக்காய் வேண்டுதல் செய்கிறார் (எபி 7:25). இப்பூவுலகிலிருந்து பரிசுத்த ஆவியானவர் எனக்காய் வேண்டுகிறார்; அங்கு பரலோகில் கிறிஸ்து இயேசு எனக்காய் வேண்டுதல் செய்கிறார். இதனால்தான், நான் ''வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்'' மிகவும் அதிகமாய் தேவன் எனக்காய்க் காரியங்களைச் செய்கிறார் (எபே 3:20). இந்த நல்ல ஆண்டவரை நான் எப்படித் துதிப்பேன்! ஜெபத்தில் எப்பொழுதும் நான் பலப்படவேண்டுமானால் ஆவியானவரின் உதவியை நாடவேண்டும்.

*''என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்'' (Sweet hour of Prayer)* என்று நான் பாடினாலும், எனக்கு ''ஜெப வேளை'' என்று ஒன்றும் கிடையாது; அதனை ''வாஞ்சிக்கிறேன்'' என்றும் சொல்லமுடியாது. எனது ஜெபப் பழக்கத்தில் நிறைய ஏற்றங்களும் இறக்கங்களும் உண்டு. எனது ஜெப நேரத்தில் ஒரு நாள் அனல் பறக்கும்; அடுத்த நாளே அது பனிபோல் குளிர்ந்துவிடும். ஒரு நாள் மலையுச்சி, மறுநாள் படுகுழி. எனது ஜெபப் பலிபீடத்திற்குத் திரும்ப நெருப்பூட்ட சில வேளைகளில் வாரங்களோ மாதங்களோ பிடிக்கும். ''ஆண்டவரே, நான் ஏன் இப்படி யிருக்கிறேன்? ஏதாவது பாவத்தை என்னிதயத்தில் மறைக்கிறேனா? (சங் 66:18; ஏசா 59:1,2). உமது வார்த்தையை வேண்டுமென்றே எங்கேயாவது மீறியிருக்கிறேனா? (நீதி 28:9). பதிலளிக்கப்படாத ஜெபங்களும், தாமதமான பதில்களும் என்னை விரக்தியடையச் செய்துவிட்டனவா?''

எனது கிறிஸ்தவ வாழ்வின் துவக்க ஆண்டுகளில் சிறியதோ பெரியதோ எல்லாவற்றையும் ஜெபத்தில் தேவனிடம் எடுத்துச் சென்றேன். இப்பொழுதோ இக்கட்டான நேரங்களில்தான் அவரிடம் ஓடுகிறேன். கூட்டு ஜெபங்களில் மணிக்கணக்காய் நேரம் செல விடுவது எனக்குச் சிரமமாய் இல்லை; ஆனால் ஒரு மணி நேரம் தனித்து தேவனுக்குமுன் முழங்காலிடுவது அவ்வளவு கடினமாயிருக்கிறது. இரவு வேளைகளைத் **தனிஜெபத்தில்** கழிப்பதில் இயேசு தேறியிருந்தார் (மத் 14:23; லூக் 6:12; 21:37,38). ஜெபத்தில் எனது பலவீனத்திற்கு இன்னொரு காரணம் என்னவெனில், எனது தேவைகளைத் தேவ னுக்குமுன் பட்டியலிடுவதே ஜெபம் என்றாகிவிட்டது. அவர் சத்தம் **கேட்க** நான் போதுமான நேரம் அவருக்குமுன் காத்திருப்பதில்லை. பேசுவதற்குத் தீவிரமாகவும் கேட்பதற்கோ ஆர்வமின்றியும் இருக் கிறேன் (பிர 5:1,2; சங் 141:2,3). மட்டுமல்ல, இறையரசுக்கு அடுத் தவைகளைவிடப் பொருளாதாரம் மற்றும் உடலுக்கடுத்த தேவைகளே எனது ஜெபத்தில் முதலிடம் பெறுகின்றன (மத் 6:25-33). தன்னலம் நிறைந்த எனது ஜெபங்களில் தரித்திரர் மற்றும் தவிப்போர் இடம் பெறுவதில்லை. தேவனுக்கேற்ற துக்கத்தைவிட உலகப் போக்கிலான மனவருத்தமே எனக்குக் கண்ணீர் வரவழைக்கிறது (2 கொரி 7:10). உதட்டால் தேவனைத் தொழுதுகொள்ளுகிறேன், உள்ளமோ எங்கேயோ சுற்றுகிறது (மத் 15:8). இராஜாதி இராஜாவின் அரசவைக்குள் செல் லும்போது கேவலம் எனது கைபேசியைக்கூட அணைப்பதில்லை. செல்போனைவிட ஜெபத்தில் அதிக நேரம் செலவழிக்க இன்றே தீர்மானிக்கிறேன். ''முழு இதயத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு பலத்தோடும், முழு மனதோடும், தேவா, உம்மீது அன்பு செலுத்த முடியாதபடி, என்னை அடிமைப்படுத்தியுள்ள அத்தனையிலிருந்தும் என்னை விடுவியும்'' (மத் 22:37; 1 கொரி 6:12). அழியவிருக்கும் காரியங்கள் எவ்வளவு அருமையான மணி நேரங்களைப் பறிக்கின்றன! மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டுவிடுகிறேனே!

இறைவார்த்தையால் எனது இருதயத்தை நான் நிரப்பிக்கொள் ளாததால் எனது துதி ஆராதனையில் சோகையும் சோகமும் அதிகம்



(கொலோ 3:16; சங் 56:10; 138:2). தேவனுடன் நான் செலவழிக்கும் அமைதி வேளையை (Quiet Time) இறைவார்த்தைக்கும் இறைவேண்ட லுக்கும் சமமாய்ப் பங்கிடுவதில்லை (நெகே 9:3). ஏற்கனவே எவ் வளவோ ஆசிகள் பெற்றிருந்தும் இன்னும் வேண்டும் என்று தேவனிடம் கேட்பதிலேயே அதிக நேரம் செலவழிக்கிறேன் (சங் 103:1-5). தேவை களைச் சந்திப்பவரைவிடத் தேவைகள்மீது என் கவனம் பதிக்கப்பட்டு விடுவதே இதன் விளைவு. தேவனைக் கிறிஸ்மஸ் தாத்தாவாகத்தான் பார்க்கிறேன்! தேவனிடமிருந்து ஏதாவது கிடைக்காதா என்பதற்காகவே கொள்ளும் உறவைவிட அவருடன் நெருங்கிய பாசவுறவை வளர்க்க முயலுவேனாக! ''அவரிடமிருந்து'' பெறுவதற்காய் அல்ல, ''அவ ருடன்'' இருப்பதற்கு என்றே என் ஜெபவேளை மாறட்டும். அப்பப்பா, ஜெபத்தில்தான் எவ்வளவு பொய் பேசுகிறேன். பல்வேறு திசைகள் நோக்கிய இருதயத்தை வைத்துக்கொண்டு, ''நீரே என் இதய தெய்வம்'' என்கிறேன் (சங் 57:7; சங் 108:1). எனது புயபலத்தில் சார்ந்து கொண்டு, ''நீரே என் நம்பிக்கை'' என்கிறேன் (எரே 17:5,7). தெரிந்த இறைச்சித்தத்திற்கும் கீழ்ப்படியாமல் இருந்துகொண்டு, ''நீரே என் ஆண்டவர்'' என்கிறேன். (லூக் 6:46). இதுமட்டுமா, எவ்வளவு பொய் பாடுகிறேன்! *''அனைத்தும் கிறிஸ்துவுக்கே, எந்தன் அனைத்தும் அர்ப்பணமே!'' ... ''பொன் வெள்ளியுமோ, பெரும் பேர்ப் புகழோ, பண ஆசையும் வீணல்லவோ?''* ''என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும், உமது முன்னிலையில் பிரியமாயிருக்கட்டும்'' (சங் 19:14).

### 4. ''எனது சகோதர அன்பு பலவீனமானது.''

''அடுத்தவனையும் உன்னைப்போல் நேசி'' என்ற இறைக்கட்ட ளையை எத்தனை முறை வாசிக்கிறேன் (லேவி 19:18; மத் 19:19; 22:39)! தேவனிடம் முழு இதயத்துடன் அன்பு செலுத்த வேண்டும் என்ற முதலாம் கட்டளை போலவே இதுவும் சம முக்கியத்துவமுள்ளது என்று இயேசு சொல்லியும் அது எனது தலைக்குள் இன்னும் ஏறவில்லை. **சகவுறவுகளில்** நான் பலக்குறைவாயிருப்பதற்கு இதுவே காரணம்.

என்னைக் கண்டித்துணர்த்தும் அப்போஸ்தலன் யோவானின் சவால் இதோ: ''கண்கண்ட சகோதரனிடம் அன்புசெலுத்தாத நீ கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்புசெலுத்த முடியுமோ?'' (1 யோ 4:20).

''மனிதர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதனையே நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே திருச்சட்டமும் திருவாக்கினர்களும் கூறுவது'' என்று எனதாண்டவர் கூறியதும், அப்போஸ்தலர்களால் மறுபடி சொல்லப்பட்டதுமான ராஜரீகப் பிரமாணத்தை வசதியாய் ஓரங்கட்டிவிட்டேனே (மத் 7:12; 22:40; ரோ 13:8-10; கலா 5:14; யாக் 2:8). மக்கள் என்னைப் பாராட்ட எதிர்பார்க்கிறேனே; நான் அவர்களைப் பாராட்டுகிறேனா? மக்கள் என்னை அன்பாய் விசாரிக்க விரும்புகிறேனே; நான் அவர்களை விசாரிக்கிறேனா? எதற்கென்றாலும் மக்கள் எனக்கு நன்றிநவில ஆசிக்கிறேனே; எனக்கான அவர்களது இரக்கச் செயல்களுக்கு நான் நன்றிகூறுகிறேனா? மக்கள் என்னை மன்னித்துவிடத் துடிக்கிறேனே; நான் அவர்களை மன்னிக்கிறேனா? மக்கள் எனக்காய் ஜெபிக்க நாடுகிறேனே; நான் அவர்களுக்காய் ஜெபிக்கிறேனா? இப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். ''மக்கள் எதையெல்லாம் எனக்குச் செய்யக் கூடாது'' என்றொரு பட்டியலையும் தயாரித்துக்கொண்டிருக்கிறேன். அதை முடிக்கும் முன்னரே எனக்குக் கிடைக்கும் மதிப்பெண் என்னைத் தலைகுனிய வைக்கிறது. 40% மதிப்பெண்கூட கிடைக்கவில்லை. தேர்வில் தோல்வி!

என்னை நேசிக்கிறவர்களை மட்டுமே நேசிக்கிறேன். என்னைப் பிரியப்படுத்துகிறவர்கள்மீது மட்டுமே விருப்பம். ''சத்துருக்களான'' நமக்காகவும் தமது உயிரையே கொடுத்துவிட்ட இயேசுவின் சீடன் என்று என்னை நான் எப்படி அழைத்துக்கொள்ள முடியும்? (ரோ 5:10). எனக்கு ஆதாயமாயிருக்கும்வரைதான் பிறருடன் நட்பு வைத்திருப்பேன். ''சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இக்கட்டில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்'' என்று திருமறை சொல்லவில்லையா? (நீதி 17:17). ''எப்படியிருந்தாலும்'' (in spite of) அன்பு என்றில்லாது, ''இப்படியிருப்பதால்'' (because of) என்றே இருக்கும் எனது அன்பு மட்டரகமானது. கீழ்க்கண்ட நபர்களைப் போன்ற நட்புணர்வும், சகோதர பாசமும் எனக்கு வேண்டுமென்று எவ்வளவாய் வாஞ்சிக்கிறேன்: ஆபிரகாம் (ஆதி 14:14; 13:11), யோசேப்பு (ஆதி 45:5; 50:21), மோசே (யாத் 32:11-13; உபா 9:18, 25-29), யோனத்தான் (1 சாமு 20:32), பர்சிலா (2 சாமு 19:32), அகீக்காம் (எரே 26:24), எபெத்-மெலேக் (எரே 38:7-13), பவுல் (பிலே 12,20), பர்னபா (அப் 9:27), அரிஸ்தர்க்கு (அப் 19:29; 20:4; 27:2; பிலே 24; கொலோ 4:10), லூக்கா (2 தீமோ 4:11), எப்பாப்பிரோதீத்து (பிலி 2:25). இம்மனிதர் முன்னால் நான் எவ்வளவு குள்ளனாயிருக்கிறேன்! நான் சிநேகமாயிராவிடில் யார் என்னிடம் ஒட்டுவார்கள்? (நீதி 18:24). இரகசியங்களைப் பத்திரப்படுத்தாத ஓட்டை வாயன் நான் (நீதி 11:13). இப்படியிருந்தால் மக்கள் எப்படி என்னிடம் நெருங்கிவருவார்கள்?

சகோதர அன்பில் எனது பலவீனத்திற்கு இன்னொரு காரணம், எதிலும் எவரிலும் குற்றங்காணும் எனது தீயகுணமாகும். எனது கண்ணிலிருக்கும் மரக்கட்டையைக் கவனியாது எனது சகோதரன் கண்ணிலிருக்கும் மரத்தூளைப் பார்க்கிறேனே! (மத் 7:5). மற்றவர்மீது கடுபிடி, என் மீதோ கனிவு (ரோ 2:1-4). சுயநீதியால் வஞ்சிக்கப்பட்டுள்ள எனக்கு எல்லாருமே கொடும்பாவிகளாகவே தெரிகின்றனர் (லூக் 18:9). ''என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என்னில் பாவமில்லாது துப்புரவானேன் என்று சொல்லக்கூடியவன் யார்?'' என்று நீதிமொழிகள் 20:9இலுள்ள சவாலை மறந்துவிட்டேன். தேவ மனிதர் யாருமே அப்படிச் சொல்லாதிருக்க, அப்படி மார்தட்டும் நான் ஒரு முட்டாளுங்க! யோபு (யோபு 42:5,6), தாவீது (2 சாமு 12:13; சங் 51:1-7), சங்கீதக்காரன் (சங் 119:176), எஸ்றா (எஸ்றா 9:6), நெகேமியா (நெகே 9:33,34), ஏசாயா (ஏசா 6:5,6), தானியேல் (தானி 9:8), பேதுரு (லூக் 5:8), யோவான் (1 யோ 1:8), யாக்கோபு (யாக் 3:2) மற்றும் பவுல் (ரோ 7:18; 1 தீமோ 1:15) ஆகிய இவர்களில் யாருமே என்னில் குற்றமில்லை, பாவமில்லை என்று சொல்லவில்லையே! ''தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையா

யிரும்!'' (லூக் 18:13). என்னிடம் தேவன் காட்டும், காட்டிய, பொறுமையை மறந்து, மக்களை இவர்கள் தேறமாட்டார்கள் என்று தீர்த்துவிடுகிறேன். பரலோகில் எனக்கு மூன்று அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன: (1) நான் வெகுவாய் எதிர்பார்த்தோர் அங்கிருக்கமாட்டார், (2) வரவேமாட்டார்கள் என்று நான் நினைத்தோர் அங்கு அமர்ந்திருப்பர், (3) நான் அங்கிருப்பேன்! (மத் 8:11,12; லூக் 13:29,30). ''உன்னைவிட-நான்-மேல்'' என்ற எனது மனப்பான்மைதான் ஒழித்துக்கட்டப்பட வேண்டியது.

**தானதர்மத்திலும்** நான் பலவீனனாயிருக்கிறேன். கிறிஸ்துவின் முன்னோடியானவர் 50 சதவீதத்தை எளியவருக்குக் கொடுக்கச் சொல்லியிருக்க, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனாகிய நான் நலிந்தோரைத் தூக்கி நிறுத்த 10 சதவீதம்கூட கொடுக்காதிருக்கிறேனே (லூக் 3:11). சகேயுவின் கதையை விளக்கும்போது, எளியோரின் நலனுக்காய் அவர் 50 சதவீதத்தைத் தன்னார்வமாய்க் கொடுக்கவந்ததை எவ்வளவு புத்திசாலித்தனமாய்க் கடந்துசெல்கிறேன் (19:8). தங்களது தரித்திரத்திலும் மக்கெதோனியக் கிறிஸ்தவர்கள் அவ்வளவு களிப்பாய்க் கொடுத்தார்கள்; நானோ எனது நிறைவிலிருந்து கொடுப்பதில்கூட கணக்கு பார்க்கிறேனே (2 கொரி 8:1-3). உணவற்றவனையும் உடையற்றவனையும் பார்த்து அவனது தேவையைச் சந்திக்காமல், ''தைரியமாயிரு; உனக்காய் நான் ஜெபிக்கிறேன்'' என்று சொல்லியனுப்பும் எனது வறட்டு மார்க்கம் ஒழிக! இது செத்த விசுவாசம் மட்டுமல்ல, செத்து நாறிப்போன விசுவாசம்! (யாக் 2:16,17). பேச்சு பிரமாதம், ஆனால் செயல்? (1 யோ 3:17,18). இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்குச் சேர்த்துவைத்துள்ள நான் ''அன்றன்றுள்ள அப்பம்'' கேட்டு ஜெபிக்கிறேன்; ஆனால் அடுத்த உணவு எங்கிருந்து வருமென்று தெரியாத எளியவன் இரண்டாம் முறை என்னிடம் உதவி கேட்டுவிட்டால் எனக்கு எவ்வளவு எரிச்சல் வருகிறது! என் மீது தேவ கோபம் இன்னும் ஊற்றப்படாதிருப்பது எனக்கு ஆச்சரியம்தான்! (யோபு 31:16-23).



பொருளாதார ரீதியில் நான் கீழ்மட்டத்தினன் என்று வைத்துக்கொள்வோம். செல்வச் செருக்கில் மிதந்துகொண்டிருக்கும் இவ்வுலகில் இது பாதகமானதொரு நிலைதான் என்பது மறுக்கமுடியாதது. உலகம் என்னை அசட்டையாகவே பார்க்கும்; நானோ ''தமது அடிமையின் தாழ்மையை தேவன் நோக்கிப் பார்த்தார்'' என்ற மரியன்னையின் பாடலை அவர்களுடன் சேர்ந்து பாடுகிறேன் (லூக் 1:48). தீர்க்கதரிசி எவரும் செல்வந்தராயிருக்கவில்லை. அப்போஸ்தலர் எவரும் பணக்காரராயிருக்கவில்லை. என் தலைவர் இயேசுவும் பொருள்படைத்தவராயிருக்கவில்லை. தங்களது உணவின்மை, உடையின்மை, உறைவிடமின்மை போன்றவற்றைக் குறிப்பிட்டு, ''நாங்கள் **பலவீனர்**'' என்று அப்போஸ்தலர்கள் வெட்கப்படாமல் அறிக்கையிட்டார்கள் (1 கொரி 4:10,11). ''தேவன் உலகில் **பலவீனமானவற்றைத்** தெரிந்துகொண்டார்'' (1:27). *பரலோகத்தை இல்லாதவர் நிரப்புவார், துதியுங்கள்!* நான் ஏன் இப்படிப் பாடுகிறேன் தெரியுமா? செல்வந்தனது வாழ்க்கையில் ஆண்டவர் ஓர் அற்புதம் செய்யாவிட்டால் அவன் பரலோகில் நுழைவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிதாம் (மாற் 10:23-27). எனது அசவுகரியங்கள் அல்லது அசாதகங்களை நான் பொறுமையாய்ச் சகித்து நடக்கவேண்டும். பொருளாதாரக் குறைபாட்டைக் குறிப்பிட்டே பவுலடியார் சொன்னது: ''என்னைப் **பலப்படுத்தும்** கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு'' (பிலி 4:12,13). தேவனுக்குப் பிரியமான வகையில் நான் அவருக்கு ஊழியம்செய்யும்படி எனது அசாதகமான காரியங்களையே அனுகூலமாக்க தேவனால் கூடும். எனது தம்பியும் நானும் வளர்ந்த எங்கள் சொந்தவூராகிய நாசரேத்திலுள்ள எங்கள் வீட்டில் மச்சு ஒழுகியது, ஜன்னல்களுக்குக் கதவு கிடையாது, வாரந்தோறும் மாட்டுச் சாணத்தால் தரை மெழுகப்படவேண்டும், மின்சாரம் கிடையாது, இப்படிப் பல. செருப்பு கிடையாது, பள்ளி உல்லாசப் பயணங்கள் கிடையாது. சென்னை IITஇல் ஈராண்டு முதுநிலைப் பட்டப்படிப்பின்போது இரண்டே மேற்சட்டைகள், இரண்டே கால்சட்டைகளுடன் சமாளித்தேன். மடித்துவைத்த துணிகளைத் தேய்ப்பது எனது தலை

யணைதான். அசாதகங்களின் அனுகூலத்தை இன்று கொண்டாடுகிறேன். (I celebrate the advantage of disadvantages!)

### 5. ''எனது உடல் பலவீனமானது.''

அழிவுக்குரிய எனது இவ்வுடலில் எத்தனையோ உடல்நலக்கேடுகளும் பலக்குறைவுகளும் உண்டு. என் தேவனோ சுகமளிப்பவர். யேகோவா-ரப்பா என்பது அவரது பெயர் (யாத் 15:26இ). அவர் அற்புதங்களின் தேவன் (வச 11). அவரால் முடியாதது எதுவுமில்லை. அவரது வல்லமையால் அற்புத சுகம் பெற்றோரின் சரிதைகளால் அவரது வார்த்தையாகிய திருமறை நிறைந்திருக்கிறது. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13:8). எனது பாவங்களை மட்டுமல்ல, ரோகங்களையும் அவர் சுமந்து தீர்த்தார் (ஏசா 53:4,5; மத் 8:16,17). அவரது இரத்தம் என்னைச் சுத்தமாக்குகிறது; அவரது இரணங்கள் என்னைச் சுகமாக்குகின்றன. அவர் எனது அக்கிரமங்களையெல்லாம் மன்னிக்கிறார், எனது நோய்களையெல்லாம் குணமாக்குகிறார் (சங் 103:3). *தூயாதி தூயவரே, உமது புகழை நான் பாடுவேன்!*

உடல் சுகத்திற்கான திருவாக்குகள் பைபிளில் நிறைய இருந்தும், ஏனோ தெரியவில்லை, எனக்கு உடல்நலக் குறைவுகள் இருக்கத்தான் செய்கின்றன. முள்ளைப்போல் அவை என்னைக் குத்திக்கொண்டிருக்கின்றன. இதற்காய் நான் தேவனிடம் ஜெபிக்கையில் அவர் ஒரு சில முட்களைத்தான் எடுத்துவிடுகிறார், எல்லாம் எடுக்கப்படுவதில்லை. ''என் கிருபை உனக்குப் போதும்; உன் **பலக்குறைவில்** என் **பலம்** நிறைவாய் விளங்கும்'' என்று சொல்லிவிடுகிறார் (2 கொரி 12:8,9). என்மீது அமர்ந்திருக்கும் அவரது வல்லமையின் மூலம் எனது நோய்களைச் சமாளிக்க அவர் அருள்செய்கிறார் (வச 9இ). அந்தந்த நாளின் கடமைகளைச் செய்துமுடிக்கக் காலைதோறும் அவர் எனக்குப் புதிய கிருபை தருகிறார் (புல 3:22,23). உடல் ஆரோக்கியத்திற்காக எனக்குக் கிடைக்கும் மருத்துவ உதவிகளுக்காய் அவரைத் துதிக்கிறேன்



(மத் 9:12). ஆனாலும், நான் என் வாயைக் கட்டுவது போதாது. பிரியாணியைப் பார்த்ததும் பறக்கிறேனே! (நீதி 23:1-3). தொப்பையைக் குப்பைத் தொட்டியாக்கி விட்டேன்!

உடல்நலக் குறைவுகள் தங்களை முடக்கிட இடங்கொடாத பரிசுத்தவான்களின் சரிதைகளைத் திருச்சபைச் சரித்திரத்திலும் திருமறைச் சரித்திரத்திலும் வாசித்து ஊக்கமடைகிறேன். பிறந்து சில வாரங்களில் பார்வையை முழுவதும் இழந்தும், கிறிஸ்தவ உலகிற்கு 8000க்கும் கூடுதலான பாமாலைப் பாடல்கள் தந்துள்ள பேன்னி கிராஸ்பி (1823-1915) அம்மையாரை நினைத்துப் பார்க்கிறேன். *“Blessed assurance, Jesus is mine!” ''இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்''* என்ற பாடலை இயற்றியவர் அவர்தான்! ''பலக்குறைவான'' உடலுள்ள பவுலடியார் சத்தான கருத்துகளை முத்தான வார்த்தைகளால் தனது கடிதங்களில் கொட்டியதை எண்ணிப்பார்க்கிறேன் (2 கொரி 10:10). உடல் பலம் குறைவு என்றாலும் எவ்வளவு கடினமான மிஷனரிப் பயணங்களை மேற்கொண்டு விறுவிறுப்பான சபைகளை அவர் நிறுவினார்! (1 கொரி 2:3,4). காலரா போன்ற தொற்றுநோய் பரவியுள்ள மெலித்தா என்ற தீவில் அவரது கப்பல் கரையொதுங்கியது. தேவன் அவரைப் பத்திரமாய்க் காப்பாற்றி, அந்தத் தீவினருக்கு அவர் சுகமளிப்பு ஊழியமும் செய்ய அருளினார் (அப் 28:1,7-9). இன்று ஒன்று விட்டு ஒன்று என்று தேவ ஊழியருக்கு எத்தனைச் சுகவீனங்கள்! ஆனாலும், பரம வீட்டிற்குச் செல்லும்வரை தேவ சித்தத்தின்படி இத்தலைமுறையினரை ஆசீர்வதிக்கும்படி அவர்கள் முன்சென்றுகொண்டேயிருக்கின்றனர் (அப் 13:36). ''**பலவீனத்திலும்** பலம் பெறுகிறார்கள்'' (எபி 11:34). உடல் பலவீனங்களைச் சமாளிக்க அன்னாரது குடும்பத்தினருக்கும் ஆண்டவர் சாராளுக்குக் கொடுத்ததுபோன்ற பலம் தருகிறார்; அவர்களும் திருப்பணியில் தீவிரம் காட்டுகின்றனர் (வச 11). ''**பலவீனப்** பாத்திரங்கள்'' என்று கருதப்படும் பெண்மணிகளுக்கு அவர் கூடுதல் பலம் அருளுகிறார் (1 பேது 3:7; 1 கொரி 12:22).

எனக்கு இப்பொழுது (2020) வயது 74. எனக்கு இதய நோய், முதுகு வலி, குரல்வளை சேதம் இப்படி எத்தனையோ உண்டு! ஆனாலும்

தினமும் 8 மணி நேரம் அவருக்காய்ப் பணியாற்ற அனுதினக் கிருபை யருளுகிறார். நான்கு மணிக்கு எழுந்து, ஒன்பது மணிக்குப் படுக்கச் செல்லுகிறேன். நிறுவனத்திலிருந்துதான் ஓய்வு, ஊழியத்திலிருந்து அல்ல. தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் சாட்சியாயிருக்க அவர் என்னைப் **பலப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்** (அப் 1:8). எளிதில் உடையக்கூடிய இந்த ''மண் பானைக்குள்'' தேவன் வைத்துள்ள பரலோகப் பொக்கிஷத்தை உயிருள்ளவரை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்துக்கொண்டேயிருப்பேன் (2 கொரி 4:7). எனக்குக் ''கொஞ்சப் பலம்'' மட்டுமே இருந்தாலும் அவர் திறக்கும் வாசல்கள் வழியே அவரை உத்தமமாய்ச் சேவித்துக்கொண்டிருக்கிறேன் (வெளி 3:8). எனது கையில் அவர் தந்துள்ள பேனாவுக்காய் அவரைத் துதிக்கிறேன். கரோனா குறித்த பயம் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் மரண பயம் கொஞ்சமும் கிடையாது; ஏனெனில் என் இயேசு என்னை அதிலிருந்து விடுவித்துவிட்டார்; ''கர்த்தருடைய வீட்டில்'' நான் போய்ச் சேரும்வரை அவர் என் மேய்ப்பராய் என்னை நடத்திச்செல்வார் (எபி 2:14,15; சங் 23:4,6). இதோ எனது தினசரி ஜெபம்: ''தேவனே, என் சிறுவயது முதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரை உமது அதிசயங்களை அறிவித்துவந்தேன். இப்பொழுதும் தேவனே, இத்தலைமுறைக்கு உமது **வல்லமையையும்**, வரவிருக்கும் யாவருக்கும் உமது ஆற்றலையும் நான் அறிவிக்கும்வரையிலும், முதிர்வயதும் நரைமுடியுமுள்ளவனாகும்வரை என்னைக் கைவிடாதிரும் ... முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் **பலம்** ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்'' (சங் 71:17,18,9).

எனக்கு ஊக்க மருந்தாயிருக்கும் திருவார்த்தை இதோ: 2 கொரி 13:4, ''இயேசுவானவர் **பலவீனத்தால்** சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையால் பிழைத்திருக்கிறார்; அப்படியே நாமும் அவருக்குள் **பலவீனராய்** இருந்தும், தேவனுடைய வல்லமையால் பிழைத்திருப்போம்.'' காலத்திற்குமுன் நான் இறந்துவிடாதபடி, சாவுக்கேதுவான எனது உடலை நொடிதோறும் உயிர்ப்பித்துக்கொண்டிருக்கும் பரிசுத்த ஆவியானவருக்காய்த் தேவனைத் துதிக்கிறேன்



(ரோ 8:11). ''இனி மரணம் இல்லை, துக்கம் இல்லை, அலறுதல் இல்லை, வேதனை இல்லை'' என்றிருக்கப்போகும் நாளை எதிர்நோக்கி வாழ்கிறேன் (வெளி 21:4).

## முடிவுரை

போதுமான பலமின்றி நான் பலவீனமாயிருக்கும் பகுதிகள் எனது வாழ்வில் இன்னும் எத்தனையோ உண்டு. இக்குறைகள் யாவற்றிற்கும் இயேசு போதுமே! ''சோர்வுற்றவருக்கு வலிமையையும், வலிமையிழந்தவருக்கு ஊக்கமும்'' பெருகச் செய்யும் அவரிடம் அவ்வப்போது ஓடிவிடுகிறேன் (ஏசா 40:29). பாதை கரடுமுரடாகிக் கடினமாகும்போது எனது சொந்த பலம் என்று எதுவும் இருந்தாலும் அதுவும் பயனற்றுப் போகிறது (வச 30). தேவனுக்குமுன் அமர்ந்திருக்கும்போதோ, **எனது பலம் புதுப்பிக்கப்படுகிறது**; கழுகுபோல் பறக்கவும் குதிரைபோல் ஓடவும் தொடங்கிவிடுகிறேன் (வச 31). நான் பலமே இல்லாத ஒரு ''பூச்சி'' என்றாலும், தேவன் என்னைப் பூமி பிளக்கும் இயந்திரமாய் மாற்றுகிறார் (41:14,15). தாங்கமுடியாத ஏராளம் பிரச்னைகள் என்னை அதிர வைக்கின்றன. ஒரு முறை பவுலடியார் சொன்னதுதான் என் நினைவுக்கு வருகிறது: ''பிழைப்போம் எனும் நம்பிக்கை ஒழிந்து போகுமளவு எங்கள் **பலத்திற்கு மிஞ்சின** அதிகப் பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மீது நம்பிக்கையாயிராமல் இறந்தோரை எழுப்பும் தேவன்மீதே நம்பிக்கையாயிருக்கும்படி இப்படியாயிற்று'' (2 கொரி 1:8,9). கவலையைப்போல் எனது பலத்தை உறிஞ்சுவது எதுவுமில்லை. ஆனாலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே எனது **பலம்** (நெகே 8:10இ). இதோ எனது காதுகளில் விழும் கர்த்தரின் சத்தம்: ***''பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக!''*** *"Let the weak say, I am strong!"* (யோவேல் 3:10ஆ).

# 6

# பிறந்த நாள் பாக்கியம்

Birthday Blessing

பிறந்த நாட்களை ஒன்று அளவுக்குமீறிக் கொண்டாடுவோம்; இல்லையேல் அதைக் கவனிக்கவே மாட்டோம். வணிகமயமாகும் போது கொண்டாட்டங்கள் அத்துமீறுகின்றன. இதற்கு எதிர்ச்செயலாக, இறுக்க மனதுள்ளோர் நியாயமான அனுபோகங்களைக்கூட புறந் தள்ளுகின்றனர். பன்னிரு மாதங்களில் நான் மகிழ்வுடன் எதிர் நோக்குவது பெப்ருவரிதான். காரணம் தெரியாதா என்ன? நான் பெப்ருவரி 13 அன்றுதான் பிறந்தேன்; என் மனைவி லில்லியன் 22 அன்று பிறந்தார்கள்! உடல் ரீதியான பிறப்பு நாளைவிட (Birthday) ஆன்மீக ரீதியான மறுபிறப்பு நாளே (Rebirthday) அதிக முக்கியம் என்ற கருத்துடையவன் நான். எனினும், பிறப்பு இல்லாது மறுபிறப்பு எங்கே? பிறப்பு என்பது நம்மை இறைவனது அழகிய இவ்வுலகிற்குள் கொண்டு வருகிறது; மறுபிறப்பு என்பது நம்மை அருமையான இறையரசில் இணைத்துவிடுகிறது. ஆதாம், ஏவாள், மெல்கிசேதேக்கு ஆகிய மூவர் தவிர எல்லோருக்கும் பிறந்த நாள் உண்டு (எபி 7:3). பெப்ருவரி மாதம் பிறந்த பிரபலங்கள் யாரென்று பார்க்க ஏதோவோர் ஆசையில் கூகிளை (google)) உருட்டினேன். கிராமபோன், மின்சார விளக்கு, ஒளிப்படக்



கருவி போன்றவற்றைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் (11 பெப்ருவரி 1846); இயற்பியல் துறையில் அரியவற்றைக் கண்டுபிடித்த கலிலியோ கலிலே (15 பெப்ருவரி 1564); அமெரிக்க வரலாற்றில் உயர்ந்து நிற்கும் முதலாவது அதிபர் ஜார்ஜ் வாஷிங்டன் (22 பெப்ருவரி 1732). நீங்கள் பிறந்த மாதத்தின் சிறப்பை(?) அறிய கூகிளுக்குச் சென்று பாருங்கள்!

பிறந்த நாட்களின் முக்கியத்துவத்தையும், அவற்றை எவ்விதம் நினைவுகூரலாம் என்றும் சுருக்கமாக பைபிளிலிருந்து தெரிந்துகொள் வதே இக்கட்டுரையின் நோக்கம். இத்தலைப்பினைத் தழுவிய திருமறைப் பகுதிகளைக் கடந்த பத்து நாட்கள் தியானித்தேன். அது அற்புதமான பயிற்சியாயிருந்தது. இது உபதேசத்துக்கடுத்த கட்டுரை அல்ல. இதனை முழுமையாகவோ பகுதியாகவோ, ஏற்பதோ எதிர்ப் பதோ, உங்கள் விருப்பம். ***பிறந்த நாள் பாக்கியத்தை*** எவ்வளவாய் நாம் அனுபவித்து, திருநாமத்தைப் புகழலாம் என்று திருமறையிலிருந்து எனக்குப் புரிந்தவற்றையே இங்கு எழுதியுள்ளேன். பிறந்த நாள் கொண் டாட்டங்கள் வேண்டவே வேண்டாம் என்ற மனப்பான்மை உங்களுக் கிருந்தாலும், இச்செய்தியை வாசித்துப் பாருங்கள். ஏதோவொரு வகை யில் பயனடைவீர்கள். பைபிளில் வசனங்களை எடுத்துப்பார்க்கத் தவறாதீர்கள்.

## தேவனது திட்டம்

இவ்வுலகிற்குள் நம்மைக் கொண்டுவந்ததற்காய்த் தேவனைத் துதிப்பதற்குப் பிறந்த நாட்கள் ஒரு சிறந்த வாய்ப்பு. அடிப்படையில் நாம் எல்லாருமே ''தேவனது சந்ததியார்'' என்பதையும், அவருக்குள்ளேயே நாம் ''இருக்கிறோம்'' என்பதையும் மறந்துவிடக்கூடாது (அப் 17:27,28). நமது பிறப்பு என்பது தற்செயலாய் நிகழ்ந்ததல்ல; அது தேவனது நியமனம். நம்மைப் ''பெற்றெடுத்த'' கன்மலையானவரும் தந்தையானவருமான சர்வ வல்லவரை மோசேயின் பாடல் கொண் டாடுகிறது (உபா 32:18). அவரை நினையாது இருக்கக்கூடாது, அவரை

மறந்துவிடக்கூடாது என்று நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். தற் செயலாய் அல்ல, தேவனது அநாதி தீர்மானத்தின்படியே நாம் இவ் வுலகில் இருக்கிறோம் என்ற அறிக்கையினை ஒவ்வொரு பிறந்த நாளன்றும் நாம் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

## கருவறையிலிருந்து ...

நாம் பிறப்பதற்கு முன்னரே, ஏன், நாம் தாயின் கருவறையில் உருவாகும் முன்னரே தேவன் நம்மை அறிந்திருக்கிறார். தீர்க்கன் எரேமியாவைத் தேவன் அழைத்தபோது அவரிடம் கூறிய முதல் வார்த்தைகள் என்னவென்று கவனியுங்கள்: ''தாயின் வயிற்றில் நான் உன்னை உருவாக்குவதற்கு முன்னரே உன்னை அறிந்தேன்; கருவறையிலிருந்து நீ வெளிவருமுன்னரே நான் உன்னைப் பிரித்தெடுத்தேன்'' (எரே 1:4,5). சிம்சோனின் காரியமும் இப்படித்தான். அவரது தாயின் கருவறையிலிருந்து வெளிவரும் வேளை தொடங்கி அவர் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பார் என்று கர்த்தருடைய தூதனானவர் சிம்சோனின் தாயாரிடம் கூறினார் (நியா 13:5,7). இதோ, அப்போஸ்தலன் பவுல் கூறுவதைக் கேளுங்கள்: ''நான் எனது தாயின் வயிற்றில் இருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து, தமது கிருபை யினால் தேவன் என்னை அழைத்தார்'' (கலா 1:15). தலைமுறை தலை முறையாய் அடுத்தடுத்துப் பிறக்கவிருக்கும் சந்ததியாரும் பூவுலகில் தமக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும் என்பதே தேவனது இதய வாஞ்சை (சங் 78:6).

## நல்ல தோற்றம்

வாழ்வின் ஆசிகளில் எதையும் நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ''நல்லது என்ற எந்த ஈவும், நிறைவானது என்ற எந்த வரமும், விண்ணகத்திலிருந்து, ஜோதிகளின் பிதாவிடமிருந்து இறங்கிவரு கிறது'' (யாக் 1:17). உறுப்புகளில் எவ்விதக் குறைபாடுமின்றி நாம் பிறந்ததற்காய்ப் பணிவுடன் பராபரனைப் போற்றவேண்டும். தனது இருதயத்தைத் தேவனுக்கு நேராக உயர்த்தித் திருப்பாடகன் தாவீது



எவ்விதம் அவரைத் துதிக்கிறார் பாருங்கள்: ''ஆண்டவரே, எனது உள்ளுறுப்புகளை உண்டாக்கியவர் நீரே! எனது தாயின் கருவில் எனக்கு உருவம் தந்தவர் நீரே! அஞ்சத்தகு, வியக்கத்தகு முறையில் நீர் என்னைப் படைத்ததால் உமக்கு நன்றி நவில்கிறேன். உமது செயல்கள் அதிசய மானவை!'' (சங் 139:13,14). இப்படித் துதித்துவிட்டு அவர் தொடர்ந்து சொல்வது: ''இது எனது மனதுக்கு நன்றாய்த் தெரியும்!'' முடமாயிருந்த மேவிபோசேத் ஒவ்வொரு நாளும் தனது சாப்பாட்டு மேசைக்குத் தூக்கிக் கொண்டுவரப்பட்ட வேளைகளிலெல்லாம் தாவீது இதனை நன்றி யுணர்வுடன் நினைத்திருப்பார் (2 சாமு 9:10-13). பக்தன் யோபுவின் புரிதலும் இதுவே: ''என்னை வனைந்து வடிவமைத்து உண்டாக்கியது உமது கைகளே ... வாழ்வையும் இரக்கத்தையும் எனக்கு வழங்கினீர்; எனது உயிர் மூச்சை உமது கரிசனையே காத்தது'' (யோபு 10:8அ,12). இந்த அறிவுதான் அவரைக் ''குருடருக்குக் கண்களும், முடவருக்குக் கால்களும்'' ஆக்கின (29:15). மனித உடலின் அதிசயக் கூறுகளை விளக்க முடியாது. நமது கண்களுக்கு நிகரான கேமரா நவீன உலகில் உண்டோ? நமது மூளையுடன் போட்டியிடக்கூடிய கணினி உண்டோ? நமது இருதயம் போன்று இடைவிடாது, எவ்விதப் பராமரிப்புமின்றி, தளராது இயங்கக்கூடிய பம்ப் எதுவுமுண்டோ? கருவறையில் எப்படித் தான் எலும்புகள் உருவாகின்றன என்பது ஞானி சாலொமோனுக்கே வியப்புதான் (பிர 11:5).

## அங்கவீனக் குழந்தைகள்

உறுப்புகளில் எவ்விதக் கேடுபாடுமின்றி நான் பிறந்ததற்காய்த் தேவனை இடையறாது துதிக்கவேண்டுமென்ற உணர்வு வேலூர் CMC மருத்துவமனையில் 1971 முதல் 1975 வரை ஒரு கட்டிடப் பொறியியலராய்ப் பணியாற்றிய காலத்தில்தான் எனக்குள் உதித்தது. குறைபாடுகளுடன் பிறந்த தங்கள் சிசுக்களைச் சுமந்துகொண்டு பிரசவப்பிரிவிலிருந்து தாய்மார் கண்ணீர் வடித்தவண்ணம் வெளியே சென்றதைப் பார்த்த எனது இருதயம் நொறுங்கியது. பார்வையற்ற கண்கள், பிளந்த உதடுகள், சூம்பிய கைகள், திருகிய பாதங்கள், ஐயோ,

சொல்லவே விருப்பமில்லை! பெற்றோரது பக்தியினால்தான் குறை பாடற்ற குழந்தைகள், அல்லது தந்தை தாயின் அவபக்தியினால்தான் குறைபாடுகளுள்ள குழந்தைகள், என்றெல்லாம் சொல்லிவிட முடியாது. முட்டாள்தனமான இவ்வெண்ணம் நம்மில் பலருக்கு இருக்கத்தான் செய்கிறது. இதனை நமதாண்டவர் என்றோ திருத்திவிட்டார் (யோ 9:1-3). பிறவிச் சப்பாணி ஒருவன்மீதுதான் ஆதிச்சபையின் முதல் அற்புதம் நிகழ்த்தப்பட்டது (அப் 3:1-10). இன்னொரு பிறவிச் சப்பாணிக்குக் கிடைத்த அற்புத சுகம் முழு நகரையே அசைத்துவிட்டது (14:1-18).

## பரம்பரைச் சாபம்?

பரம்பரைப் பாவம் எனும் உபதேசத்திற்குத் திருவிவிலியத்தில் இடமேயில்லை. அடுத்த தலைமுறையினர் தேவனைப் ''பகைக்கிற வர்கள்'' என்றிருந்தால்தான் அவர்கள் தண்டிக்கப்படுவர் (யாத் 20:5). தந்தைக்காய்த் தனயன் தண்டிக்கப்படுவதில்லை; ஒவ்வொரு தனி நபரும் தனது பாவங்களுக்கு மட்டுமே பொறுப்பு (உபா 24:16; 2 இரா 14:6; 2 நாளா 25:4). மாங்காய் அல்லது புளியங்காய் சாப்பிட்டால் ''எனது'' பற்கள்தான் கூசும், எனது பிள்ளைகளது அல்ல (எசேக் 18: 1-4,19,20). புதிய உடன்படிக்கையின் ஆசிகளைக் குறைத்து மதிப் பிடாதீர்கள் (எரே 31:29-34; எபி 8:8-12; 10:16,17). நெறிகெட்ட லைந்த தாமாரும், ராகாபும் தாவீதின் பாட்டி, பூட்டி வரிசையிலிருந்தனர் (மத் 1:3,5). பரம்பரைச் சாபம் என்று உபதேசிக்கும் ஊழியர் எவரிடமும் கொஞ்சமும் நெருங்காதீர்கள். அவரிடம் இதுபோன்ற பலசரக்கு நிறைய இருக்கும். பெற்றோர் பக்தியற்றோராயினும் குழந்தைகள் பரிசுத்த மாகவே இருக்கிறார்கள் என்பதே திருமறையின் கூற்று (1 கொரி 7:14).

மூன்றாம் பாலினத்தவரையோ (transgenders) குள்ளர்களையோ (dwarfs) பார்க்கும்போது முகத்தைச் சுளிக்காதீர்கள். அவர்களது நிலையில் உங்களை வைத்துப் பார்த்து, அவர்களுக்குப் பரிவு காட்டுங்கள். தானியேல் ஓர் அண்ணகன் என்பது உங்களுக்குத் தெரியுமா? (தானி 1:3,7; மத் 19:12). ஆனாலும் காபிரியேல் தூதன்



அவரைப் பார்த்து, ''நீர் மிகவும் பிரியமானவன்'' என்றான் (தானி 9:23). சகேயு ஒரு குள்ளன். இயேசு அவரை எவ்வளவாய் நேசித்து, அவரை ''ஆபிரகாமின் குமாரன்'' என்றழைத்தார்! (லூக் 19:3,9). வகுப்பில் முதல் மாணவன் மற்றும் வகுப்புத் தலைவன் என்ற திமிரில் நான் கூனனாயிருந்த உடன் மாணவன் ஒருவனை அலட்சியமாய் நடத்தி னேன் (1960). நான் மறுபடி பிறந்தபோது (1962) அவனது வீட்டிற்குச் சென்று அவனிடமும் அவனது பெற்றோரிடமும் மன்னிப்பு கோரினேன். உயர் தலைமைப் பயிற்சிக்காய் உலகெங்கிலுமிருந்து பலரும் செல்லும் அமெரிக்க நிறுவனமான Haggai Institute நிறுவனர் Dr. John Haggai அவர்கள் மூளை பாதிக்கப்பட்டிருந்த தனது மகனை (1950-1974) சக்கர நாற்காலியில் முக்கிய நிகழ்வுகளுக்கு அழைத்து வருவார். Word for the World என்ற இயக்கத்தின் நிறுவனர் அண்ணன் அகஸ்டின் ஆசீர் அவர்களது 40-வயது மகன் சக்கர நாற்காலியில்தான். 1977இல் சென் னையில் நடந்த கூட்டத்தில் பண்டிதர் பில்லி கிரஹாம் அவர்களுக்கு அண்ணன்தான் தமிழாக்கம் செய்தார்கள். பார்வையற்றோர், காது கேளாதோர், ஊனமுற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர், அநாதைகள் போன்றோரது இல்லங்களுக்கு உங்கள் பிறந்த நாளன்று பலகாரங்கள் மற்றும் பொருட்கள் எடுத்துச்சென்று அங்குள்ளோரை மகிழ்வியுங்கள்; அந்த வேளையில் உங்களது ஆரோக்கியமான உடலுக்காய்த் தேவனைத் துதித்துத் திரும்புங்கள். எயிட்ஸ் நோயுடன் பிறக்கும் குற்றமில்லாப் பாலகரையும், அன்னை தெரசாவின் Missionaries of Charity போன்ற நிறுவனத்தாரால் குப்பைத்தொட்டிகளிலிருந்து மீட்கப்படும் சிசுக் களையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

## பிறப்பிலேயே குறைபாடுகள்

சிசு இறப்புகளை நான் பார்த்திருக்கிறேன்; இறந்தே பிறக்கும் குழந்தைகளின் அடக்க ஆராதனைகளில் பங்கேற்றிருக்கிறேன் (யோபு 3:16; சங் 58:8ஆ). அவ்வேளைகளில் கதறியழும் பெற்றோரைப் பார்த்துக் கண்ணீர் சிந்தாது இருக்க முடிவதில்லை. குறைப் பிரசவங் கள் அசாதாரணமல்ல. அப்போஸ்தலன் பவுலே ஒரு குறைப்பிரசவக்

குழந்தைதான் என்று தோன்றுகிறது (1 கொரி 15:8). இவ்விதக் குழந் தைகளை வளர்ப்பதற்குப் பெற்றோர் படும் பாடு கொஞ்சநஞ்சமா? கருச்சிதைவுகளால் கண்ணீரில் மிதக்கும் பெண்மணிகளுக்காகவும் பரிதபிப்போம்! சில ஆண்டுகளுக்குமுன் பிரசவங்களெல்லாம் தாதியர் மூலம் வீட்டில்தான்; மருத்துவமனைக்குச் செல்வது அரிதாயிருந்தது. ஒரு தாதியாக மணமாகாது பணியாற்றிய எனது பெரியம்மா (1911-1989) விருதுநகரில் ஆயிரக்கணக்கான பிரசவங்கள் நடத்தியிருப் பார்கள். அன்றைய முதல் மந்திரி திரு. K. காமராஜ் அவர்களது உறவினர் பலருக்கும் பெரியம்மாதான் தாதியாயிருந்தார்கள். பெருமளவில் மருத்துவர்களைக் கொண்டிருந்த எனது மனைவியின் குடும்பத்தார் அவளது பிரசவத்தை வீட்டிலேயே வைத்துக்கொள்ளத் தீர்மானித்தனர். கடினமாயிருந்த அப்பிரசவத்தின்போது எங்கள் மகள் இவாஞ்சலினின் வலது கை பாதிக்கப்பட்டது. இன்று வரை அவளது வலது கை குட் டையாகவும் பலக்குறைவாகவுமே இருக்கிறது. எங்களது மன வேத னையை விளக்க முடியாது. எனது மனைவி ஒரு குழந்தை நல மருத்து வர்! திருமறையிலிருந்து கற்றது தவிர்த்து, வாழ்க்கையில் அனுபவித்த மற்றும் கண்ட பல காரியங்கள் எனது அங்கவீனமற்ற உடலுக்காய் எவ்வளவாய், அதிலும் குறிப்பாய் எனது பிறந்த நாளன்று, தேவனைத் துதிக்கவேண்டுமென்று சொல்லித் தந்துள்ளன. நல்ல நிறமோ கருப்போ, உயரமோ குள்ளமோ, மெல்லியதோ தடித்ததோ, எப்படியிருந் தாலும், தேவன் உங்களை உருவாக்கிய விதத்தில் திருப்தியாயிருங்கள். உங்களுக்கு எது சிறந்தது என்று தேவன் அறிவார். பிறருடன் உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அழகெல்லாம் தோலாழம்தான்!

## பிரசவ வேதனை

நமது தாய்மாரை நன்றியுடன் நினைக்கவும் பிறந்த நாட்கள் ஏற்ற வேளையாகும். பிரசவ வேதனை போன்று கொடுமையானது எதுவு மில்லை. ''விழுகையின் சாபம்'' என்பதின் ஒரு பகுதியான இதிலிருந்து இன்னும் நாம் விடுவிக்கப்படவில்லை (ஆதி 3:16). ''நியாயப்பிர மாணத்தின் சாபம்'' என்பதிலிருந்து மட்டுமே நாம் இப்பொழுது மீட்கப்பட்டுள்ளோம் (கலா 3:10,13; ரோ 8:19-23). பைபிளில் பல



இடங்களில் பிரசவ வேதனை குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசா 13:8; 21:3; 42:14; எரே 13:21; 22:23; ஓசி 13:13; மீகா 4:10; கலா 4:19). வரவிருக்கும் மகா பெரிய உபத்திரவத்தை (Great Tribulation) இயேசு வானவர் (பிரசவ) வேதனைக்கு ஒப்பிட்டார் (மத் 24:8; மாற் 13:8; யோ 16:21). இதுவே பவுலின் புரிதலாகவுமிருந்தது (1 தெச 5:2,3). தேவனது மட்டற்ற கிருபையே நமது தாய்மாரைப் பிரசவத்தில் காப் பாற்றிற்று (1 தீமோ 2:14,15). தங்களது அன்புக்கரங்களில் நம்மை ஏந்திக்கொண்டு, மார்பில் அணைத்தவண்ணம் எத்தனை இரவுகள் கண் விழித்திருப்பார்கள்! ஓரிரு பிரசவங்களைத் தொடர்ந்து கருவறை சம்பந்தமான எத்தனை நிரந்தரப் பிரச்னைகளுடன் அவர்கள் வாழ வேண்டியதிருக்கிறது! ''ஆண்கள்தான் பிள்ளை பெறவேண்டும் என்றி ருந்தால், அடுத்த பிள்ளை வேண்டவே வேண்டாம் என்றிருப்பார்கள்'' என்றார் ஒருவர்! பால் கொடுக்கும் தாயைப் போன்றதே தமதன்பு என்றார் தேவன் (ஏசா 49:15). எனது தாயாருக்காய் அவரைத் துதிப்பதற்காய், எனது பிறந்த நாளில், முடிந்த வேளைகளிலெல்லாம், வேலூரிலிருக்கும் அவர்களது கல்லறைக்குச் சென்று வருவேன். இவ்வித ஞாபகார்த்த உணர்வுகள் ஆன்மீகத்திற்கு எதிரானவை அல்ல (அப் 2:29). கல்ல றைக்குச் சென்று வருவதைக் கண்டனம் செய்பவர்கள்தான் ''காலி'' கல்லறையைப் பார்த்துவர இஸ்ரவேல் நாட்டிற்குப் பயண வரிசையில் முன் நிற்பார்கள்!

## அம்மா, அப்பா

தங்களைப் பெற்ற தாயைப் பார்த்திராத குழந்தைகள் உண்டு தெரியுமா? (ஏசா 37:3). பிரசவத்தின்போது இறப்புகள் என்பது நமது நாட்டின் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் இன்னும் அதிகம்தான். அப்போஸ்தலன் பவுலின் பூட்டனார் பெஞ்சமினின் தாயார் ராகேல் பிரசவத்தின்போது இறந்தார்கள் (ஆதி 35:18). உங்கள் பெற்றோர், அதிலும் குறிப்பாய் உங்கள் தாயார், உயிரோடிருந்தால், உங்கள் பிறந்த நாளன்று அவர்களைச் சந்தித்து அல்லது தொலைபேசியில் அவர் களுடன் தொடர்புகொண்டு, உங்களை இந்த நிலைக்கு வளர்த்துக்

கொண்டுவந்ததற்காய் வாயார நன்றி சொல்லுங்கள். அவர்களை இவ் விதம் கனப்படுத்துவது உங்கள் வாழ்நாட்களை நலமாக்கும் (எபே 6:1-3; யாத் 20:12). பாராட்டத் தவறுவது சபிப்பதற்குச் சமமாகிவிடலாம் (ஏசா 45:10). அவர்களோடு உட்கார்ந்து நீங்கள் பிறந்த விதத்தை விளக்க மாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நமது பிறப்பிற்காய் அவர்கள் எவ்வளவோ ஜெபித்திருப்பார்கள். ரெபெக்காள் கருத்தரிக்கவேண்டு மென்று கர்த்தரிடம் ஈசாக்கு மன்றாடி வேண்டினார் (ஆதி 25:21). தனக்குப் பிள்ளை வேண்டுமென்று அன்னாள் மனம் கசந்து, மிகவும் அழுது, கர்த்தரிடம் விண்ணப்பம்பண்ணினார்கள் (1 சாமு 1:10,20). பிள்ளை பெறும் வயதைத் தாண்டிய பின்னரும் சகரியாவும் எலிச பெத்தும் குழந்தை வேண்டுமென்று ஜெபித்துக்கொண்டேயிருந்தனர் (லூக் 1:5-7,13,36). இன்று போல் இல்லாது, அன்றைய நாட்களில், ஒவ்வொரு பிள்ளையும் ''தேவன்'' தந்த ஈவு என்றே பெற்றோர் கருதினர். ''தேவனே'' ஆபிரகாமுக்கு ஈசாக்கைக் கொடுத்தார் (யோசு 24:3). சிரிப்புக்கு ஆளாகியிருந்த அக்குடும்பத்திற்குச் சிரிப்பைக் கொண்டு வந்தான் ஈசாக்கு (= சிரிப்பு) (ஆதி 21:6). ''தேவனே'' ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும் கொடுத்தார் (யோசு 24:4). யாக்கோபு தனது பிள்ளைகளைத் ''தேவன்'' அருளின பிள்ளைகள் என்று ஏசாவிடம் அறிமுகம் செய்தார் (ஆதி 33:5). ''இவர்கள் **தேவன்** எனக்கு அருளின குமாரர்'' என்று தனது மகன்களை யோசேப்பு யாக்கோபிடம் கூறினார் (48:9). பிள்ளைகள் ''கர்த்தரால்'' வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி ''அவரால்'' கிடைக்கும் பலன் (சங் 127:4). *"Happy Birthday to you"* என்ற பிரபல வாழ்த்துப் பாடல் Mildred Hill (18591916) மற்றும் Patty Hill (18681946) என்ற இரு அமெரிக்க சகோதரிகளால் இயற்றப்பட்டது. இவர்களிருவரும் பாலர் பள்ளி ஆசிரியைகள், இசை வல்லுனர்கள். அவர்களது இரு கவிகளுடன் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ள கவி: "We are glad God made you, We are glad God made you; We are s-o-o-o glad God made you; Happy Birthday to you!" நீங்கள் பிறக்கு முன் அல்லது பிறக்கும்போது தேவனுக்கு உங்கள் பெற்றோர் செய்த வாக்கு(கள்) என்னவென்று கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். இதனை



வாசிக்கும் தங்காய், நீ கருவுற்றிருந்தால், உனது கருவறையில் வளர்ந்து கொண்டிருக்கும் சிசுவைத் தேவன் தொட்டு ஆசீர்வதிக்கும்படி வேண டிடு. தனது தாயின் வயிற்றிலிருக்கும்போதே யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார் (லூக் 1:15).

## இயேசுவின் பிறந்த நாள்

பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மாம்சீகமானவை என்று கருதும் மிஞ்சிய பரிசுத்தவான்கள் சிலருண்டு. தமது மகனின் பிறந்த நாளைத் தேவன் எவ்வளவாய்க் கொண்டாடினார் பாருங்கள். பாலகனைப் பார்த்துவர எத்தனைபேரை அனுப்பிவைத்தார்! மேலிருந்து தூதர்கள்! வயலிலிருந்து மேய்ப்பர்கள்! தொலைவிலிருந்து ஞானிகள்! ''மிகுந்த மகிழ்ச்சி உண்டாக்கும் நற்செய்தி'' என்று தேவதூதன் அப்பிறப்பினை அறிவித்தான் (லூக் 2:9,10). ''உன்னதத்திலிருக்கும் தேவனுக்கு மகிமை'' என்று திரளான சேனையினர் ஆர்ப்பரித்தனர் (வச 13,14). தமது மகனை முத்தமிட்டுத் தந்தையானவர் சொன்னது: ''நான் இன்று உம்மைப் பெற்றெடுத்தேன்!'' பிதாவானவரின் இப்பிறந்த நாள் வாழ்த்து விவிலியத்தில் நான்கு இடங்களில் வருகிறது (சங் 2:7; அப் 13:32; எபி 1:5; 5:5). பிறந்த நாள் பரிசாக மகனுக்கு அப்பா வாக்களித்தது என்ன வென்று பாருங்கள்: ''நீர் எனது மைந்தர்; இன்று நான் உம்மைப் பெற் றெடுத்தேன். நீர் விரும்புவதை என்னிடம் கேளும்; மக்களினங்களை உமக்கு உரிமைச் சொத்தாக்குவேன்; பூவுலகை அதன் கடையெல்லை வரை உமக்கு உடைமையாக்குவேன்'' (சங் 2:7,8). தமது அப்பாவின் இந்தப் பிறந்த நாள் வாக்கினை மனதிற்கொண்டிருந்ததாலேயே அலகையின் வார்த்தைகளை இயேசு தூக்கியெறிந்தார் (மத் 4:8-10).

## வாழ்த்துக்களும் வெகுமதிகளும்

பிறந்த நாட்கள் மற்றும் முக்கிய நாட்களைக் கொண்டாடுவது விவிலியத்திற்கு விரோதமானதல்ல. திருமுழுக்கினன் யோவானது பிறந்த நாளானது உறவினருக்கும் அயலகத்தாருக்கும் பெரு மகிழ்ச்சி யும் பேருவகையும் தந்தது (லூக் 1:14,57,58). ஈசாக்கு பால் மறந்த

நாளில்கூட ஆபிரகாம் ''பெரிய விருந்து'' பண்ணினார் (ஆதி 21:8). தங்கள் பிள்ளைகள் பிறந்த நாள் முதல் அவர்களது வாழ்வில் தேவன் நிகழ்த்தியுள்ள பெரிய காரியங்களை அவர்களுக்கு ஆன்மீகச் சிந்தையுள்ள பெற்றோர் நினைவுபடுத்தலாம். பிறந்த நாள் பரிசுகள் விரும்பாத வயதை எவரும் எட்டிவிடுவதில்லை. தனது 85ஆம் பிறந்த நாளன்று யோசுவாவிடம் காலேப் ஒரு மலை நாட்டைக் கேட்டார் (யோசு 14: 10-12). வம்ச வரலாற்றினை நினைவுபடுத்திக்கொள்வது சரித்திரச் சங்கிலியை அறுந்துபோகாது காக்கும். தீமோத்தேயுவுக்கு அவரது பாட்டியம்மாவைப் பவுல் நினைப்பூட்டினார் (2 தீமோ 1:5). உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களை அவர்களது பிறந்த நாளன்று மனப்பூர்வமாய் வாழ்த்த மறவாதீர்கள். SMS, WhatsApp, E-mail போன்றவை மூலம் அனுப்பப்படும் வாழ்த்து வரிகள் பிறந்த நாள் வாழ்த்து அட்டைகளை (Greeting Cards) நெருங்க முடியாது. வாழ்த்து அட்டையில் உங்கள் பெயரும் பிறந்த நாள் கொண்டாடுபவரின் பெயரும் உங்கள் கையால் எழுதப்பட்டு அனுப்பப்படுவது உறவை நெருக்கமாக்கும். நீங்களே வாழ்த்து அட்டைகளைத் தயாரிப்பது இன்னும் மேல். கடந்த ஆண்டுகளில் நண்பர்கள் எனக்கு அனுப்பிவைத்த வாழ்த்து அட்டைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். இன்றைய உலகில் உறவுகள் வறண்டுவருகின்றன: ''சுபாவ அன்பின்மை'' (ரோ 1:31; 2 தீமோ 3:3). சமுதாயத்தில் நட்புறவு (Friendship) இல்லை! சபையில் சகோதரப் பாசம் (Fellowship) இல்லை! இப்போக்கிற்கு நாம் எதிர்நீச்சல் போட்டு நமது சகவுறவுகளை இனிதாக்குவோம். கையால் எழுதும் கடிதங்களையும்விட நேரடிச் சந்திப்புகளையே அப்போஸ்தலர் விரும்பினர் (2 யோ 12; 3 யோ 13,14). நண்பரே, நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோமோ?

## பிறந்த நாள் விருந்துகள்

வாழ்வின் அனுபவங்களைச் சாட்சியாய்ச் சொல்லப் பிறந்த நாள் விருந்து வேளைகளைச் சாதகமாய்ப் பயன்படுத்தலாம். உங்கள் உறவினர் தவிர அயலகத்தார், நண்பர் மற்றும் உடன் அலுவலர்களையும் அழையுங்கள். தேவன் உங்களை இதுவரை எவ்விதம் மேடுகள்



பள்ளங்கள், திரட்சி வறட்சி, இன்பம் துன்பம், இப்படிப்பட்டவை வழியாக நடத்தி வந்திருக்கிறார் என்று அவர்களுக்குச் சுருக்கமாய்ச் சொல்லுங்கள். மறுபடியும் பிறக்கவேண்டியதின் அவசியத்தையும் விளக்கிக் கூறுங்கள். நமது பிறப்பு நாளன்று நாம் ''பாவத்தில்'' பிறந்தோம்; அதாவது முதல் மனிதன் ஆதாம் துவக்கி நமது மூதாதையர், பெற்றோரிடமிருந்து நாம் பாவ சுபாவத்தை உள்வாங்கினோம் (சங் 51:5; ரோ 5:19). நமது மறுபிறப்பு நாளன்று நாம் ''பாவத்திலிருந்து'' மீட்கப்படுகிறோம். அதுவே சரித்திரத்திலேயே இணையற்ற பிறந்த நாளாம் கிறிஸ்து ஜெயந்தியின் செய்தி (மத் 1:21). பிரசங்கம்பண்ண வேண்டாம், உங்கள் சரிதையை எளிய நடையில் பேசிப் பகிர்ந்துகொள்ளுங்கள். திருமறைச் சரித்திரத்தில் விருந்துகள் சுப காரியங்களாகவே இருந்திருக்கின்றன (ஆதி 29:22; நியா 14:10; எஸ்தர் 2:18). கல்யாண விருந்தொன்றில்தான் இயேசுவானவர் தமது முதலாம் அடையாள அற்புதம் செய்தார் (யோ 2:1-11). முழுநேர ஊழியத்தில் நுழைவதற்காக வரித்துறை அலுவலகத்திலிருந்து தனது வேலையை ராஜினாமா செய்தபோது மத்தேயு ஒரு விருந்து நடத்தினார். தண்டல் வசூலிப்பதை விட்டுத் தச்சர் ஒருவரோடு இணைந்துகொண்டது ஏன் என்று தனது உடன் அலுவலர்க்கு நிச்சயம் விளக்கியிருப்பார் (லூக் 5:27-29). நமதாண்டவருக்கு விருந்து என்றால் ரொம்பவே பிடிக்கும். எனவேதான் அவரைச் ''சாப்பாட்டு ராமன்'' என்று மக்கள் பகடி பண்ணியிருக்கலாம் (மத் 11:19). விண்ணகத்திலும் நமக்கு ஒரு விருந்து ஆயத்தம் பண்ணப்படுகிறது; அதுதான் இதுவரை எவரும் கண்டிராததாய் இருக்கும் (வெளி 19:9; ஏசா 25:6).

## எளியவர்க்கு விருந்து

உங்கள் பிறந்த நாளையொட்டி இன்னொரு விருந்தும் நடத்தலாம். ஏழை எளியோர் மற்றும் நசுக்கப்பட்டோருக்கென்றே அதனை நடத்துங்கள். தம்மை விருந்துக்கு அழைத்த ஒருவரிடம் இயேசு கூறியதைக் கவனியுங்கள்: ''நீர் பகல் விருந்தோ இரவு விருந்தோ கொடுக்கும்போது, உம் நண்பர்களையோ, சகோதர சகோதரிகளையோ,

உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்கவேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு ஆகிவிடும். மாறாக, நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகள், ஊனமுற்றோர், பார்வையற்றோர் போன்றோரை அழையும். அப்பொழுது நீர் பேறு பெற்றவர் ஆவீர். ஏனெனில் உமக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள் உயிர்த்தெழும்போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும்'' (லூக் 14:12-14). நண்பர்களுக்குப் ''பதிலாக'' நலிந்தோருக்கு விருந்து என்று அல்ல, அதைத் ''தவிர'' இன்னொன்று என்றே நான் இதனைப் புரிந்துகொள்ளுகிறேன். இதனை வழக்கத்திற்குள் கொண்டுவருவோம்.

## பிரபல மனிதர்

ஆன்மீக உலகிலோ பொது உலகிலோ சிறந்து வாழ்ந்து பணியாற்றிய நபர்களது பிறந்த நாட்களை நினைவுகூருவது வாழ்வுக்குப் புதிய பரிமாணம் கூட்டும். மார்ட்டின் லூத்தர் பிறந்த நாள் 10 நவம்பர் 1483; பில்லி கிரஹாம், 7 நவம்பர் 1918; வில்லியம் கேரி, 17 ஆகஸ்டு 1761; சாது சுந்தர்சிங், 3 செப்டம்பர் 1889; அன்னை தெரசா, 26 ஆகஸ்டு 1910; இவை போன்றவை. மகாத்மா காந்தி பிறந்த நாள், 2 அக்டோபர் 1869, அகிலவுலக அமைதிப் போராட்ட நாள் (International Day of Non-violence) என்று அனுசரிக்கப்படுகிறது; Dr. S. ராதாகிருஷ்ணன் பிறந்த நாள், 5 செப்டம்பர் 1888, ஆசிரியர் தினம்; ஜவஹர்லால் நேரு பிறந்த நாள், 14 நவம்பர் 1889, சிறுவர் தினம்; சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள், 23 ஜனவரி 1897, தேசப்பற்று தினம் (National Day of Patriotism); Dr. அப்துல் கலாம் பிறந்த நாள், 15 அக்டோபர் 1931, உலக மாணவர் தினம்; இப்படிப் பல. இவ்விதத் தேசிய விடுமுறை நாட்களில் நாம் ஜெபக் கூடுகைகள் அல்லது சிறப்புக் கூட்டங்கள் நடத்தும்போது இந்தப் புகழேந்திகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூடச் சொல்லத் தவறுவது வருந்தற்குரியது. மண்ணுலகிற்குச் சற்றும் பயன்பட முடியாத அளவு விண்ணுலகச் சிந்தைக்குள் வந்துவிட்டோமோ?!



## வம்ச வரலாறு

வம்ச வரலாற்றுக்கும் தங்களுக்கும் எவ்வித இணைப்பும் இல்லாமல்தான் பெரும்பாலான நமது பிள்ளைகளும் வாலிபர் நங்கையரும் வளருகின்றனர். பிள்ளைகளது பிறந்த நாட்களின்போது பெற்றோர் அவர்களுடன் உட்கார்ந்து முன்னோர்களின் வாழ்க்கையிலிருந்து நன்மை பயக்கக்கூடிய தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டும். நாசரேத்திலுள்ள தச்சுப்பட்டறை வீட்டில் தமது 30 பிறந்த நாட்களைக் கொண்டாடிய இயேசுவுக்கு மரியன்னை இதனைக் கட்டாயம் செய்திருப்பார்கள் (லூக் 3:23). அம்மையாருடைய பாடலில் பொங்கியெழுந்து வந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்: *''தலைமுறை தலைமுறையாய் ... நமது மூதாதையர் ... ஆபிரகாமுக்கும் அவரது சந்ததிக்கும்''* (லூக் 1:46-55). புதிய ஏற்பாட்டின் முதல் பக்கத்திலும் லூக்கா மூன்றாம் அத்தியாயத்திலும் நாம் காணும் வம்ச வரலாறு மரியன்னைக்குத் தண்ணீர்ப் பாடமாக இருந்திருக்கும். (மத்தேயு தருவது யோசேப்பின் வம்ச அட்டவணை; லூக்கா தருவது மரியாளின் வம்ச அட்டவணை. எனவேதான் இரண்டிற்குமிடையில் சில வேறுபாடுகள்.) தனது செல்லப் பிள்ளை சாமுவேலை ஆண்டுதோறும், ஒருவேளை அவனது பிறந்த நாளையடுத்து, சந்திக்கச் சென்றபோதெல்லாம் தலைமுறை தலைமுறையாகத் தேவன் காட்டிய இரக்கத்தைப் பற்றிய குறிப்புகளை அன்னாள் சொல்லியிருப்பார்கள். அவர்களே தைத்த புத்தாடையை அவனுக்குக் கொடுத்துவரும்போது இது நடந்திருக்கும் (1 சாமு 2:1-10,19). ஆம், பிரியமானவர்களே, ''நமது தாழ்வில் நம்மை நினைத்தவராகிய'' ஆபிரகாம்-ஈசாக்கு-யாக்கோபின் தேவனைப்பற்றிய அறிவை நமது பிள்ளைகளுக்குக் கடத்திவிடுவதே தலைசிறந்த பிறந்த நாள் பரிசாகும் (சங் 136:23).

## போட்டோ ஆல்பங்களும் நாட்குறிப்பேடுகளும்

குடும்ப உறுப்பினர்கள் உட்கார்ந்து போட்டோ ஆல்பங்களைப் புரட்டிப் பார்ப்பது பெரும் பயனளிக்கும். மறக்க முடியாத நிகழ்வுகள் உங்களைப் புத்துணர்வடையச் செய்யும். டிஜிட்டல் செயலிகளில்

சேர்த்து வைப்பது வசதிதான்; ஆனால் அது ஆல்பங்களுக்கு ஒருபோதும் பதிலாக முடியாது. உங்கள் கைபேசி அல்லது கணினியிலிருந்து கலர் படங்களைப் பிரிண்ட் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். நாட்குறிப் பேடு (diary) எழுதும் பழக்கத்தை நீங்கள் கைவிட்டிருந்தால் அது பேரிழப்புதான். நண்பர் மற்றும் உறவினர் வருகைகள், நிகழ்வுகள், தேவனது இடைபாடுகள் போன்றவையெல்லாம் உங்களைக் கடந்தகால நினைவுக்குள் எடுத்துச் சென்று உங்களைப் பரவசப்படுத்தும், தேவ னுக்குத் துதி பாட வழிவகுக்கும் (சங் 103:1.2). ஆல்பங்களும் நாட் குறிப்பேடுகளும் பிறந்த நாள் கொண்டாட்டங்களை மிகுந்த அர்த்த முள்ளவையாக்கும். இவ்வாண்டில் வரும் பிறந்த நாளன்று நீங்கள் எடுக்கும் தீர்மானங்களை நாட்குறிப்பேட்டில் எழுதி வையுங்கள். அடுத்த ஆண்டு அதனைத் திருப்பிப் பார்ப்பது உங்களது அர்ப்பணிப்பைப் புதுப்பிக்க ஏதுவாயிருக்கும். ஆப்பிரிக்காவிற்கு முன்னோடி மிஷனரி யாய்ச் சென்ற டேவிட் லிவிங்ஸ்டன் (1813-1873) அவர்கள் தேவ னுடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் பிறந்தநாள்தோறும் புதுப்பித்துக்கொள்வாராம். தமது பிறந்த நாளன்று இயேசுவானவர் தமது தந்தையானவரிடம் செய்துகொண்ட உடன்பாட்டிலிருந்து அவர் பின்வாங்கவே இல்லை (எபி 10:5,6; சங் 40:6-8). ஒவ்வொரு பிறந்த நாளும் இங்கிருந்து நாம் புறப்படவேண்டிய நாளுக்கு ஓராண்டு நம்மைச் சமீபமாய்க் கொண்டுவருவதால், நமது அர்ப்பணிப்பை ஆழப்படுத்தவும், வேலையைத் துரிதப்படுத்தவும் அது ஏற்ற சந்தர்ப்ப மாயிருக்கும் (சங் 39:4,5; யோ 9:4).

## நாட்டுப்பற்று

இந்தியாவில், அதிலும் குறிப்பாய் இயேசுவானவர் வளர்ந்த ஊரின் பெயரையே கொண்டுள்ள சிற்றூரில், பிறப்பதற்கு எனக்குக் கிடைத்த பாக்கியத்திற்காய்த் தேவனைத் துதிக்கிறேன் (லூக் 2:51,52). தனது ரோமக் குடியுரிமை குறித்துப் பவுலடியார் பெருமிதம் கொண்டதுபோல் நானும் எனது இந்தியக் குடியுரிமை குறித்து மகிழுகிறேன் (அப் 22:27,28). உலகின் பல நாடுகளுக்கு எனது பைபிளுடன் தேவன்



என்னை எடுத்துச்சென்றிருக்கிறார். அனைத்து நாடுகளின் மக்களையும் நான் நேசிக்கிறேன்; ஆனால் எப்பொழுது தாயகம் திரும்புவோமென்ற ஏக்கம் யூதருக்கும் இலங்கையினருக்கும் போல எனக்கும் உண்டாகி விடுகிறது (சங்கீதம் 137:1-4ஐ ஒப்பிடுக.). நாம் பிறக்குமிடம், வளருமிடம், பணியிடம் போன்றவை குறித்து தேவன் ஏற்கனவே திட்டமிட்டிருப்பதை நாம் சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது (சங் 87:5,6). ஆன்மீகத்திலும் பருவ நிலையிலும் வறட்சி மிகுந்த நகராகிய காரைக்குடியிலேயே துவக்கக்கால (1963-1968) ஆவிக்குரிய வளர்ச்சியடைந்தேன். உருவாகவிருந்த தேசிய அளவிலான திருப் பணிக்காய் அந்த வனாந்திரத்தில்தான் தேவன் என்னைப் பயிற்று வித்தார். குறைசொல்லிக்கொண்டேயிருப்பதற்குப் பதிலாக, நமது நாட்டில் ''இல்லாத'' பிரச்னைகளுக்காய் ஆண்டவரைத் துதித்தவண்ண மிருக்கிறேன். அக்கரைப் பச்சை நாடி இந்தியாவிலிருந்து சிறந்த ஊழியத் தலைவர்கள் பலர் மேலைநாடுகளுக்கு இடம்பெயர்ந்துவிட்டது இந்தியத் திருச்சபைக்கும் மிஷனரிப்பணிக்கும் பேரிழப்பு.

## வரங்களும் தாலந்துகளும்

நமக்கு தேவன் அருளியுள்ள இயல்பான தாலந்துகள் மற்றும் ஆன்மீக வரங்களுக்காய்க் குறிப்பாய் நமது பிறந்த நாட்களன்று நாம் அவருக்கு நன்றி நவிலவேண்டும். பிறப்பிலேயே ஓவியர், ஆசிரியர், தலைவர், பேச்சாளர் என்றெல்லாம் உண்டல்லவா? (ஆதி 25:27; யாத் 2:2; நியா 3:15; 1 நாளா 12:2). நம்மெல்லாருக்கும் நமது பிறவிக்குணங்கள் என்றுண்டு; அவற்றில் சில விரும்பத்தக்கவை, மற்றவை விரும்பத் தகாதவை என்றிருக்கும். நமது தீய குணங்களைவிட நல்லவையே நமக்கு அதிகம் தெரியும். நமக்கிருக்கும் சிறந்த காரியங்கள் யாவும் தேவனது சுத்தக் கிருபையினாலேயே பெறப்பட்டவை என்றிருப்பதால் தம்பட்டம் அடித்துக்கொள்ள இடமேயில்லை. தேவன் விடும் சவால் இதோ: ''உன்னைச் சிறந்தவனாக்குகிறவர் யார்? உனக்கு உள்ளவற்றில் நீ பெற்றுக்கொள்ளாதது எது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன்போல் ஏன் பெருமை பாராட்டுகிறாய்?'' (1 கொரி 4:7).

தேவனிடமிருந்து பெற்ற தாலந்துகளையும் வரங்களையும், அவை சிறியவையோ பெரியவையோ, உத்தமமாய்ப் பயன்படுத்தியிருக் கிறோமா என்று கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். நமது வாழ்வின் மாலைப்பொழுதிற்கு வந்திருந்தால், மோசே தனது 120ஆம் பிறந்த நாளன்று செய்ததுபோல, தொடரோட்டக் கட்டையை (baton) அடுத்த வரிசையினருக்கு மனப்பூர்வமாய்க் கடத்திவிட ஆயத்தமாயிருக்க வேண்டும் (உபா 31:1-6).

## பெயர் முக்கியமா?

பிறப்பில் நமக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களுக்காகவும் ஆண்ட வரைத் துதிக்கவேண்டும். ''பெயரில் என்ன இருக்கிறது?'' என்று கேட்காதீர்கள். திருமறையில் பலருக்குக் கொடுக்கப்பட்டவை காரணப் பெயர்களாம். பிறக்குமுன்னரே சிலருக்குப் பெயர்கள் சொல்லப்பட்டு விட்டன: இஸ்மவேல் (ஆதி 16:11), ஈசாக்கு (17:19), யோசியா (1 இரா 13:2), சாலொமோன் (1 நாளா 22:9), கோரேசு (ஏசா 44:28), யோவான் (லூக் 1:13), இயேசு (மத் 1:21). தனி நபர்களின் பெயர்களைத் தேவன் மாற்றிவிட்டதும் உண்டு: ஆபிராம் → ஆபிரகாம் (ஆதி 17:5), சாரா → சாராள் (வச 15), யாக்கோபு → இஸ்ரவேல் (32:27,28), சீமோன் → பேதுரு (யோ 1:42). அதிமுக்கியமானதொன்றை அறிவிக்கவேண்டு மானால் தேவன் இருமுறை பெயர் சொல்லிக் கூப்பிடுவார்: ஆபிரகாம் (ஆதி 22:11), யாக்கோபு (46:2), மோசே (யாத் 3:4), சாமுவேல் (1 சாமு 3:10), மார்த்தாள் (லூக் 10:41), சீமோன் (22:31), சவுல் (அப் 9:4). நாசரேத்திலுள்ள புனித லூக்கா மருத்துவமனையின் முன்னோடிகளில் ஒருவராகிய Dr. Mrs. வேதபோதகம் (1896-1949) அவர்கள் எனக்கு ஞானத்தாயாயிருந்து எனக்கு ஸ்டான்லி என்று பெயரிட்டார்கள். Dr. E. ஸ்டான்லி ஜோன்ஸ் (1884-1973) போல ஒரு பிரசங்கியாகவும், இங்கிலாந்தின் படையதிகாரிகளில் தலைசிறந்து விளங்கிய Dr. E. ஸ்டான்லி மாடே (1864-1917) போல ஒரு படைவீரனாகவும் விளங்க வேண்டும் என்ற விருப்பத்துடன் அப்பெயரை எனக்குத் தெரிந் தெடுத்தார்கள். எனது அப்பா போர்க்களம் சென்றவர், பிரசங்கபீடம்



ஏறுபவர். “Stanley” என்ற பெயருக்கு “Stony Meadow,” அதாவது, ''பாறைநிலப் புல்தரை,'' என்று பொருள். கர்த்தரில் பலம் கொண்ட வனாகவும், மக்களிடம் பரிவு கொண்டவனாகவுமே என்னை எப்பொழு தும் காத்துக்கொள்ளும் என்று ஆண்டவரிடம் வேண்டி வாழ்கிறேன். திருப்பணியைப் பொருத்தவரையில், இறைமக்களைப் பசும்புல் வெளிகளில் மேய்த்து, கற்பாறையான அடித்தளங்களில் அவர்களை நிலைப்படுத்துகிறேன். எனக்கு இருவயது இளைய தம்பி மட்டுமே என்னுடன் பிறந்தவன். அவனுக்கு என் பெற்றோர் ''கிறிஸ்டோபர்'' (Christopher) எனப் பெயரிட்டனர். அதற்குப் பொருள், ''கிறிஸ்துவைச் சுமப்பவர்'' (Christ-bearer) என்பதாகும். சுவிசேஷப்பணியில் (Evan-gelism) எனக்கும் என் மனைவிக்கும் இருக்கும் வேட்கையினால் எங்களது ஒரே பேறான குமாரத்திக்கு ''இவாஞ்சலின்'' (Evangeline) என்று பெயர் வைத்தோம். ஜெபத்துடன் பிள்ளைகளுக்குப் பெயர்களைத் தெரிந்தெடுக்கும்படி பெற்றோர்களைக் கேட்கிறேன்.

## தனி நபர் விருப்பம்

நமது வாழ்நாள் ஒவ்வொன்றும் முக்கியம்தான். ஆனாலும், நமது பிறந்த நாளன்று சங்கீதம் 118:24 கூடுதல் அர்த்தம் பெறுகிறது: ''இது கர்த்தர் தோற்றுவித்த நாள்; இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம்!'' தாவீதுடன் சேர்ந்து துதியுடன் தேவனிடம் இவ்விதம் அறிக்கை யிடுவோம்: ''ஆண்டினை உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர்; உமது பாதைகள் நெய்யாய் வளம் கொழிக்கின்றன!'' (சங் 65:11). மட்டுமல்ல, ''கர்த்தாவே, நான் கருவறையில் உருவாகியது முதல் உம்மால் ஆதரிக் கப்பட்டேன்; என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்'' (71:6). பிறந்த நாள் கொண்டாட்டம் என்பது ''சிறுபிள்ளைத்தனம்'' (childishness) என்று வயதானவர்கள் நினைக்கலாம்; இல்லை, அது விரும்பத்தக்க ''சிறு பிள்ளைக் குணம்'' (childlikeness). குழந்தைகள், பாலகரது கொண் டாட்டங்கள் பெரியவர்களும் மகிழும்படித் துதி ஸ்தோத்திரச் சூழலை உண்டாக்கும் (மத் 21:15,16). இக்கட்டுரையை வாசித்த பின்னரும்,

பிறந்த நாட்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கத் தேவை யில்லை என்று நீங்கள் கருதலாம். உங்கள் கருத்தை நான் மதிக்கிறேன்; ஏனென்றால் அப்போஸ்தலன் பவுல் அப்படித்தான் நமக்குப் போதித் திருக்கிறார்: ''ஒரு நாள் மற்றொரு நாளைவிடச் சிறந்தது எனச் சிலர் கருதுகின்றனர்; வேறு சிலர் எல்லா நாளையும் ஒன்று போலவே கருதுகின்றனர். இத்தகையக் காரியங்களில், ஒவ்வொருவரும் தனது மனத்தில் செய்துகொண்ட முடிவின்படி நடக்கட்டும்'' (ரோ 14:5). தேவனைத் துதித்து உங்கள் பிறந்த நாளைக் கொண்டாட விரும்பினால், கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள் —

## பிறந்த நாள் ஜெபம்

*''உலகங்கள் தோன்றும் முன்பும், எனது தாயின் வயிற்றில் நான் உருவாகும் முன்பும் என்னை அறிந்தவரே, எனது வாழ்வில் இன்னொரு ஆண்டைத் துவங்கும் இந்நன்னாளில் உமது பாதங் களில் பணிகின்றேன். சென்ற ஆண்டுகளிலெல்லாம், அதிலும் குறிப்பாய்க் கடந்த ஆண்டில், நீர் எனக்குப் பாராட்டிய இரக்கத்திற் காகவும் காட்டிய அன்பிற்காகவும் நான் உம்மை எப்படிப் போற்றுவேன்? நான் இன்றுவரை அழிந்து போகாதிருப்பது உமது கிருபையினாலேயே. உமது இரக்கங்களுக்கு முடிவே இல்லை. காலைதோறும் அவை புதியவையாயிருக்கின்றன.*

*''நீர் என்னிடம் எதிர்பார்த்த அளவு கீழ்ப்படிதலும் தூய்மையும் எனது வாழ்வில் காணப்படவில்லை என்பதை வெட்கத்துடன் உம்மிடம் சொல்லுகிறேன். என்னை மன்னியும், ஆண்டவரே! எத்தனை தடவை உமது மென்மையான குரலுக்கு எனது காதுகளை அடைத்துக்கொண்டேன்! உமது எச்சரிப்புகளைக் கவனியாது விட்டேன். போதுமான நேரம் உமது திருவசனத்தைத் தியானிப் பதில் செலவிடவில்லை. அனுதின ஜெபம் அவசர பூசையாகி விட்டது. உமது திருப்பணியில் எனது ஈடுபாடு போதாது. நான் பேசிவிட்ட தேவையற்ற வார்த்தைகள்தான் எத்தனை, அப்பா! இப்படி என் பாவங்களை எண்ணி முடியாது. விண்தந்தாய், என்னை மன்னியும்; கழுவும்; என்மேல் கோபமாயிராதேயும்.*



*''தேவா, இன்னொரு முறை என்னை உம்மிடம் அர்ப்பணிக் கிறேன். உமக்குக் கீழ்ப்படிவதில் துரிதப்படவும், சிந்தையிலும் சொல்லிலும் செயலிலும் தூய்மையைக் காத்துக்கொள்ளவும், சக மனிதரோடுள்ள உறவுகளில் அன்பைக் காட்டவும், ஜெப தியானத்தில் கிரமமாயிருக்கவும், திருப்பணிக்கு அடுத்த காரியங் களில் தீவிரம் காட்டவும் இன்று தீர்மானிக்கிறேன். இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை என்றைக்கும் காத்திட ஆவியை அருளும். உமக்கும் எனக்கும் இடையில் எதுவும் என்றுமே வராமல் காத்திடும், ஆண்டவா!*

*''எனது வாழ்க்கையில் அன்றும் இன்றும் ஆசீர்வாதமா யிருக்கும் எனது குடும்பத்தினர், ஆசிரியர், திருத்தொண்டர், மூத்தோர் மற்றும் நண்பர் யாவருக்காகவும் உம்மைத் துதிக் கிறேன், ஆண்டவரே! அவர்கள் எனக்குச் செய்த நன்மைகளுக் காய் அவர்களை ஆசீர்வதியும். என்னைப் பெற்றெடுத்தோருக் காய்த் துதிக்கிறேன், வேண்டுகிறேன். அவர்களை என்றும் கனம் பண்ண என்னை உணர்த்தும்.*

*''நேசத் தந்தையே, எனது எதிர்காலத்தைப் பொறுப் பெடுத்துக்கொள்ளும். என்ன நோக்கத்திற்காக நீர் என்னை இவ்வுலகில் பிறக்கச் செய்தீரோ, அதை முழுமையாய் நிறை வேற்றும். நீர் செய்த சகல உபகாரங்களையும் நான் என்றும் மறவாதிருக்கச் செய்யும். இந்த நாளை எனக்கு மகிழ்ச்சியும் உமக்குப் புகழ்ச்சியும் ஆக்கும்.*

*இயேசு கிறிஸ்துவின் பெயரால் வேண்டுகிறேன், பிதாவே! ஆமென்!''*

# 7

# யார் குருடன்?

## Who is Blind?

இந்தியாதான் உலகிலேயே பார்வையற்றோர் அதிக எண்ணிக்கை யுள்ள நாடு. உலகிலுள்ள ஏறத்தாழ 4 கோடி பார்வையற்றோரில் 1 கோடிக்குமேல் நமது நாட்டில்தான் வாழ்கின்றனர். அப்படியானால், உலகில் பார்வையற்றோரில் 25 சதவீதத்தினர் இந்தியர்தான்! பார்வை யற்றோரின் பள்ளிகள் மற்றும் கண் மருத்துவமனைகள் நிறுவி, பார்வை யற்றோருக்கு மறுவாழ்வு தர பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்காய்க் கர்த்தரைத் துதிப்போம். அவர்களது தொண்டு உன்னதமானது. பார்வையற்றோரைப் பார்க்கும் போதெல்லாம் நாம் அவர்களுக்காய்ப் பரிதபிக்கிறோம். எவ்வளவு துர்ப்பாக்கியசாலிகளென்று நமக்குள்ளே சொல்லிக்கொள்கிறோம். ஆம், பார்வையின்மை படுமோசமானதுதான். ஆனால் பார்வையின்மையை பைபிள் வேறுவிதமாய்ப் பார்க்கிறது.

கடவுள் முதலாவது ''**ஒளியைத்தான்**'' படைத்தார் (ஆதி 1:3). இது பார்க்கக்கூடிய பௌதீக ஒளியானாலும், புதிய ஏற்பாடு இதற்கு வேறுவித விளக்கம் தருகிறது: 2 கொரி 4:6, ''இருளிலிருந்து ஒளி தோன்றுக!



என்று சொன்ன கடவுளே எங்கள் **உள்ளங்களில்** அவரது **ஒளியை** வீசச் செய்தார். அது கிறிஸ்துவின் திருமுகத்தில் வீசும் கடவுளின் மாட்சி யாகிய அறிவொளியே!''

தமது பொதுவுலகப் பணியைத் துவங்குவதற்காய் நாசரேத்தைவிட்டு இயேசு நப்தலிக்கு வந்தார். இது ''ஆன்மீக'' ஒளியைக் குறித்த தீர்க்க தரிசன நிறைவேறுதலாகும்: மத் 4:13-16, ''காரிருளில் இருந்த மக்கள் **பேரொளியைக்** கண்டனர்!''

பார்வையற்றிருந்து இயேசுவானவரால் சுகம் பெற்ற ஒருவனது சரிதைக்காய் 41 வசனங்களுள்ள ஒரு முழு அத்தியாயமே திருமறையில் ஒதுக்கப்பட்டுள்ளது (யோவான் 9). ''போதகரே, இவன் பார்வையற்ற வனாய்ப் பிறக்கக் காரணம் இவன் செய்த பாவமா? இவன் பெற்றோர் செய்த பாவமா?'' என்பதே சீடரின் முதல் கேள்வி (வச 2). இயேசு அவர் களைத் திருத்தியதைப் பாருங்கள்: வச 3, ''இவன் செய்த பாவமுமல்ல, இவன் பெற்றோர் செய்த பாவமுமல்ல; கடவுளின் செயல் இவன் மூலம் வெளிப்படவே இப்படிப் பிறந்தான்.'' நாமும் இன்று இதே தவற்றைச் செய்கிறோம். பார்வையற்ற எவரையும் பார்த்தவுடன், இது பரம்பரைப் பாவத்தின் விளைவு (Generational Curse) என முடிவுகட்டிவிடு கிறோம். பிரியமானவரே, இப்படி ஒன்றும் கிடையாது. ஒவ்வொருவரும் முன்னோரது பாவங்களுக்கல்ல, தங்களது பாவங்களுக்கே பொறுப்பு (எசேக் 18:1-3,19,20).

மக்களை ஆசீர்வதித்ததோடு இயேசுவானவர் தமது அற்புதங்கள் மூலம் படிப்பினைகளையும் போதித்தார். யோவான் 9இலுள்ள நீண்ட சரிதை ஓர் அதிமுக்கிய சத்தியத்தைத் தருகிறது: வச 5, ''நானே உலகின் **ஒளி!**'' இயேசுவிடம் வரும்வரை யாவரும் குருடர்தான். உடலுக் கடுத்ததல்ல, ஆன்மீகக் குருட்டுத்தனமே நிசமான குருட்டுத்தனம் (வச 38-41).

அப்படியே, விபசாரத்தில் பிடிபட்ட ஒரு மாதுவை மன்னித்த பின்னரே, இயேசு சொன்னது, ''உலகின் **ஒளி** நானே. என்னைப்

பின்தொடர்பவன் இருளில் நடக்கமாட்டான்; வாழ்வுக்கு வழிகாட்டும் **ஒளியைக்** கொண்டிருப்பான்'' (யோ 8:11,12). இனிச் சிவப்பு விளக்குப் பகுதி வேண்டாம், சிலுவை ஒளியிடம் வாருங்கள்!

எனவேதான், ஒருவேளை மங்கலான பார்வை கொண்டிருந்த, அந்தச் சிமியோன் என்பவர் பாலகன் இயேசுவைக் கையிலேந்திக்கொண்டு இவ்விதம் சொன்னார்: லூக்கா 2:30, ''ஆண்டவரே, உமது மீட்பை என் **கண்கள்** பார்த்துவிட்டன!'' அவர் இயேசுவை ''அனைத்து மக்களுக்கும் மீட்பின் வெளிப்பாட்டை அருளும் **ஒளி**'' என்றழைத்தார் (வச 31,32). ''மண்ணுலகு விட்டு விண்ணுலகு செல்ல நான் இப்பொழுது ஆயத்தம்'' என்று சொல்லுமளவு அவர் பரவசமடைந்தார் (வச 29). ஆம், கடவுள் தமது இரட்சிப்பை நமக்குக் ''**காண்பிப்பதுதான்**'' முடிவான, முழுமையான ஆசீர்வாதம் (சங் 91:16).

இப்படியிருப்பினும், உடல் ரீதியாகப் பார்வையற்றோர்மீது இயேசுவுக்குத் தனிக்கரிசனை இருந்தது. இயேசுதான் வரவிருப்பவரா அல்லது இன்னொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா என்று விசாரித்துவர அவரிடம் திருமுழுக்கினன் யோவான் தனது இரு சீடரை அனுப்பிவைத்தபோது, இயேசு கொடுத்த மறுமொழியைக் கவனியுங்கள்: ''நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள்; **பார்வையற்றோர்** பார்வை பெறுகின்றனர்; கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர் ... தொழுநோயாளர் ... காது கேளாதோர் ... இறந்தோர்'' (மத் 11:2-5). பார்வையற்றோரைத்தான் இயேசு முதலில் குறிப்பிடுகிறார் பாருங்கள்! சிலுவையிலறையப்படுவதற்குமுன், பாடனுபவிப்பதற்காய் எருசலேமிற்குப் போகும் வழியில், இயேசு இறுதியாய்க் கொடுத்த அற்புத சுகம் பார்வையற்ற இருவருக்குத்தான் (மத் 20:17,18,29-34). பார்வையற்ற இவர்களின் கூக்குரலை மக்கள் கூட்டத்தினர் அலட்சியப்படுத்தி அவர்களை அதட்டினர். ஆம், பார்வையற்றோரை இப்பாழுலகு அலட்சியப்படுத்துகிறது. மார்க்கவுலகும் இப்படித்தான். எந்தச் சுகமளிப்புக் கூட்டத்தில் பார்வையற்றோர் முன் வரிசையில் அமர்த்தப்படுகின்றனர்? ஆனால் அவர்கள்மீது இயேசு ''மனதுருகினார்'' (வச 34).



பார்வையற்றோர் மீதுள்ள கடவுளின் கரிசனை பழைய ஏற்பாட்டிலேயே தெளிவு. லேவி 19:14. ''**பார்வையற்றோரை** இடறச் செய்யாதே! உன் கடவுளுக்கு அஞ்சி நட. நான் ஆண்டவர்!'' உபா 27:18. ''**பார்வையற்றோரை** வழி தவறச் செய்பவர் சபிக்கப்படட்டும்; உடனே மக்கள் அனைவரும் ஆமென் சொல்லட்டும்!'' இந்த அத்தியாயத்தில் 12 முறை ''ஆமென்'' வருகிறது! இந்நாட்களில் நாம் எவற்றிற்கு ''ஆமென்'' என்று கத்துகிறோம்? யேகோவா தேவனின் பரிவுள்ளம் நமதாகட்டும்!

பார்வையற்ற நண்பரே, பார்வையுள்ளோர்மீது பொறாமை கொள்ளாதீர்! அவர்கள் கண்களின் இச்சையினால் எவ்வளவு பாடுபடுகிறார்களென்பது உங்களுக்குத் தெரியாது. மரங்களைக் கடவுள் படைத்தபோது, இரு காரணங்களை நினைவிற்கொண்டிருந்தார்: முதலாவது அவை ''**பார்வைக்கு** இன்பமாயிருக்க'' விரும்பினார் (ஆதி 2:9). நமது இறைவன் எவ்வளவு இனியவர், பாருங்கள்! கலையுணர்வு மிகுந்தவர்! சாத்தானோ இதே காரியத்தில்தான் மனுக்குலத்தைச் சோதித்தான். அவன் ஏவாளிடம் சொன்னது, ''உங்கள் **கண்கள்** திறக்கப்படும்!'' (ஆதி 3:5). அவள் அச்சோதனையில் விழுந்தாள் (வச 6). உலகில் எல்லாவற்றையும் உள்ளடக்கியுள்ள முக்கோணப் பாவத்திற்கு அடிப்படைக் காரணம் இதுதானே? ''ஊனியல்பின் துராசை, கண்களின் இச்சை, வாழ்வின் பெருமை'' (1 யோ 2:16). இம்மூன்றில் நடுவிலிருப்பது ''**கண்களின்** இச்சையே!''

எனவே, பௌதீகக் குருட்டுத்தனத்தைவிட ஆன்மீகக் குருட்டுத்தனமே படுமோசம் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். அப்படியே, உடல் சுகத்தைவிட ஆன்மீக ஆரோக்கியமே முக்கியம். பார்வையற்ற ஒருவன் மீட்கப்பட்டிருந்தால் சொர்க்கம் போய்விடுவான்; ஆனால் உடலில் எவ்விதக் குறைபாடு இல்லாதவனும் மீட்கப்படாவிடில் அங்கு நுழைய முடியாது (மாற் 9:47,48).

ஆன்மீகக் குருட்டுத்தனத்திற்கு இதோ சில எடுத்துக்காட்டுகள்: (அ) பண ஆசையிலிருந்தும் பொருட்கள் மீதுள்ள பைத்தியத்திலிருந்தும்

நீங்கள் விடுபடாவிடில் நீங்கள் ஆன்மீகக் குருடர்தான். பொருளாசைக்கு நீங்கள் அடிமையாயிருந்தால் நீங்கள் இன்னும் இருட்டில்தான் இருக்கிறீர்கள் (மத் 6:22-24). (ஆ) நீங்கள் உங்கள் சகோதரனைப் பகைத்தால் இருளில் இருக்கிறீர்கள், இருளில் நடக்கிறீர்கள், எங்கே செல்லுகிறீர்களென்று உங்களுக்குத் தெரியாது. இது குருட்டுத்தனம் தானே? (1 யோ 2:11). (இ) உங்கள் தவறுகளைக் கவனியாது விட்டு, பிறரது குறைகளைப் பெரிதுபடுத்தினால் நீங்கள் குருடர்தான். உங்கள் கண்ணிலிருப்பது ''மரக்கட்டை,'' உங்கள் சகோதரன் கண்ணிலிருப்பதோ ''மரத்தூள்தான்!'' (லூக் 6:41,42). (ஈ) பாரம்பரியங்களையும் சடங்குகளையும் நீங்கள் திருச்சத்தியத்திற்கு மேலாக உயர்த்தி, இரக்கமின்றி வெறும் சட்டம் பேசுகிறவராய், உள்ளான அழகைவிட வெளிக்காரியங்களில் அதிகக் கவனம் செலுத்துகிறவராய் இருந்தால், நீங்கள் குருடர்தான் (மத் 23:16-27). இவ்விதக் குணங்களோடு நீங்கள் தலைமைத்துவத்தில் இருந்தால், நீங்கள் ஒரு குருட்டுத் தலைவன். நீங்களும் உங்களைப் பின்பற்றுவோரும் குழிக்குள்தான் விழுவீர்கள்! (மத் 15:14).

உங்கள் ஆன்மீகக் கண்கள் திறக்கப்படுவது எங்ஙனம்? அது மறுபிறப்பினால் மட்டுமே சாத்தியம். நீங்கள் மறுபடி பிறக்கும்போதுதான், நீங்கள் இறையரசைக் ''**காண**'' முடியும் (யோ 3:3). நமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை நமது பாவங்களைச் சுமக்கிறவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளுவதாலேயே மறுபிறப்படைகிறோம். பார்வையற்றிருந்த பர்திமேயுவைப்போல் உங்கள் சுய நீதியாகிய கந்தலாடைகளை உதறியெறிந்துவிட்டு இயேசுவிடம் வாருங்கள். அவர் தமது நீதியின் பொன்னாடையை உங்கள்மீது போர்த்தி உங்களது ஆன்மீகக் குருட்டாத்தைப் போக்கிவிடுவார் (மாற் 10:50; ஏசா 64:6; 61:10). மூன்று நாள் பார்வையில்லாதிருந்தபோது அப்போஸ்தலன் பவுல் பெற்ற அனுபவம் இதுவே (அப் 9:8,9; 22:11-14; பிலி 3:4-9). எனவேதான் மக்களுக்கு ஆன்மீகக் கண்திறப்பு வேண்டுமெனப் பிரார்த்தித்தார் (எபே 1:19).



அறிவும் ஞானமும் பெருகுவதற்காய் நீங்கள் எத்தனையோ புத்தகங்களை வாசிக்கலாம். ஆனால் நீங்கள் **பைபிளை** (BIBLE) வாசித்து அதைத் தியானிக்கும்வரை உங்களுக்கு ஞானப் பிரகாசம் கிடைக்காது. அது கடவுளது வார்த்தை. இதைக் குறித்துத் திருப்பாடகன் எழுதியது: ''உமது சொற்களைப் பற்றிய விளக்கம் **ஒளி** தருகின்றது'' (சங் 119:130). இறைவார்த்தைக்குமுன் தாழ விழுந்தபோது தனது **கண்கள்** திறக்கப்பட்டன என்று பழம் தீர்க்கன் ஒருவர் சாட்சிபகர்ந்தார் (எண் 24:4). இருள் நிறைந்த இவ்வுலகில் இறைவார்த்தையே வழிகாட்டும் **ஒளி!** (2 பேது 1:19). அதுவே நமது ''பாதைக்கு **வெளிச்சம்**, பாதங்களுக்குத் **தீபம்**'' (சங் 119:105).

ஒருவேளை நீங்கள் ஏற்கனவே மறுபடி பிறந்திருக்கலாம். உங்கள் விசுவாசத்தோடு நற்பண்பையும், நற்பண்போடு அறிவையும், அறிவோடு தன்னடக்கத்தையும், தன்னடக்கத்தோடு மனவுறுதியையும், மனவுறுதியோடு இறைப்பற்றையும், இறைப்பற்றோடு சகோதர நேயத்தையும், சகோதர நேயத்தோடு அன்பையும் கூட்டிக்கொண்டு தேவ கிருபையில் கவனமாய் வளர்ந்துகொண்டிருக்கிறீர்களா? இல்லையேல், நீங்கள் பின்வாங்கிவிடுவீர்கள். ''கிட்டப் பார்வை,'' அதைத் தொடர்ந்து ''**குருட்டுத்தனம்**'' என்ற நிலை வந்துவிடும் (2 பேது 1:5-9). தேவனிடம் திரும்பி வாருங்கள்! உங்கள் நிலையைப் புரிந்துகொள்ள நீங்கள் விழித்து, பாவ இருட்டுச் செயல்களைத் தூக்கியெறிந்து, தூசியைவிட்டு எழுந்திருக்கும்போது, ''கிறிஸ்து உங்களை **ஒளி** வீசச் செய்வார்'' (எபே 5:11-14).

பார்வையற்ற நண்பரே, உங்களுக்கு என்னிடம் ஒரு நற்செய்தி உண்டு. கிறிஸ்து சீக்கிரம் திரும்ப வருகிறார்! அவர் திரும்ப வரும்போது, பார்வையின்மையோ, எவ்வித ஊனமோ, வியாதியோ இல்லாத மகிமையான ஓர் உடலை உங்களுக்குத் தருவார் (1 கொரி 15:42-44). உங்களுக்கு ஒரு பரு அல்லது சுருக்கம் கூட இல்லாது போகும்! நாசரேத்தின் 33-வயது தச்சன் போலாவீர்கள்! (1 யோ 3:2). பூரண வடிவு! அவரது வருகை குறித்து இதோவொரு தீர்க்க வாக்கு: ஏசா 35:4,5, ''உள்ளத்தில்

உறுதியற்றவர்களைப் பார்த்து, அஞ்சாதிருங்கள்; இதோ, உங்கள் கடவுள் வருவார் ... அப்போது **பார்வையற்றோரின் கண்கள்** பார்க்கும்; காது கேளாதோரின் செவிகள் கேட்கும். அப்பொழுது, காலூனமுற்றோர் மான்போல் துள்ளிக் குதிப்பர்; வாய் பேசாதோர் மகிழ்ந்து பாடுவர்.'' இப்பட்டியலில் முதலில் வருவது யாரென்று பாருங்கள்! பார்வையற்றோர்! இன்னொரு திருவாக்கு: ஏசா 42:16, ''**பார்வையற்றோரை** அவர்கள் அறியாத பாதையில் நடத்திச் செல்வேன்; அவர்கள் பழகாத சாலைகளில் வழிநடத்துவேன்; அவர்கள்முன் இருளை ஒளியாக்குவேன்; கரடுமுரடான இடங்களைச் சமதளமாக்குவேன்; இவை நான் அவர்களுக்காய்ச் செய்யவிருப்பன; நான் அவர்களைக் கைவிடமாட்டேன்.''

பிறவியிலேயே நீங்கள் பார்வையற்றவர்களாய் இருந்திருக்கலாம். இதுவரை நீங்கள் எதையும், எவரையும் பார்த்ததில்லை. கவலை வேண்டாம், உங்கள் கண்கள் திறக்கப்படும்போது நீங்கள் பார்க்கும் முதலாம் நபர் **இயேசு!** JESUS! (யோபு 19:25-27; வெளி 22:4). அல்லேலூயா!

*(எனது இணையதளத்தில் Online Letter 145இன் இணைப்பாய் இச்செய்தி ஒளி வடிவிலும் ஒலி வடிவிலும் உண்டு.)*



# 8

# "20/20 VISION"
# ''20/20 கண் பார்வை''

*(அப்போஸ்தலர் 20:20இன் அடிப்படையில் 2020 புத்தாண்டுச் செய்தி)*

''**20/20 கண் பார்வை**'' என்பது தெளிவான, கூரிய பார்வையைக் குறிக்கும் சொற்களாகும். தரமானதொரு பரிசோதனை இதனையே குறைவற்ற பார்வை எனக் காட்டும். மூக்குக் கண்ணாடி தேவையில்லாத நல்ல பார்வையையே இது குறிக்கும். வாசிப்பவருக்கும் வாசிப்புப் பலகைக்கும் இடையிலுள்ள 20 அடி தூரத்தையே ''20'' எனும் எண் குறிப்பிடுகிறது.

நாளுக்கு நாள் இருளாகிக்கொண்டிருக்கும் இக்காலத்தில், கிறிஸ்துவின் வருகைக்கு முன்னுள்ள இவ்வாண்டிலும், இனி வரும் ஆண்டுகளிலும், 2020ஆம் ஆண்டிற்குள் நுழையவிருக்கும் கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரின் அதிமுக்கிய தேவை இதுவே என்பதே எனது கணிப்பு. **அப்போஸ்தலர் 20:20**ஐத் தழுவிய செய்தி இது. தனது வாழ்விலும் பணியிலும் நெடுகவே பவுலடியார் தனதாக்கிக்கொண்ட தெளிவான தரிசனத்தை இவ்வேதப்பகுதி விளக்குகிறது. தமஸ்கு சாலையில் அவருக்குக் கிடைத்த ''பரம தரிசனம்'' அவரது ஆன்மீகப் பயணத்தின் துவக்கமாய் அமைந்தது (அப் 9:1-6). பரம் செல்லும்வரை

இந்தப் பரம தரிசனத்திற்கு அவர் நெடுகவே கீழ்ப்படிந்து வாழ்ந்தார் (26:19). எபேசு சபைத் தலைவர்களுக்கு அவர் அளித்த பிரிவுரையில்தான் அப்போஸ்தலர் 20:20 எனும் நமது தலைப்பு வசனம் வருகிறது (20:17-35). இத்தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள இப்பகுதி முழுவதையும் கவனமாய் வாசியுங்கள்.

அனைத்து மக்களுக்கும் நற்செய்தியைப் ''பிரசங்கிக்கவும்,'' நற்செய்தியை விசுவாசிப்பவர்களுக்குத் திருமறையை ''உபதேசிக்கவும்'' வேண்டும் என்பதே கிறிஸ்துவின் சீடர் யாவருக்கும் அவர் கொடுத்துள்ள பேராணை. இதைத்தான் அப்போஸ்தலர் 20:20இல் பவுலடியார் சாட்சி பகருகிறார்: ''பிரசங்கித்தேன் ... உபதேசித்தேன்.'' இதை ''வீதிகளிலும் வீடுகளிலும்'' செய்தார். பொதுவிடங்களில் பிரசங்கிக்கும் வாய்ப்பும் வாய்மையும் எல்லாருக்கும் கிட்டுவதில்லை. எல்லா நாடுகளிலும் திறந்தவெளிப் பிரசங்கம் செய்வது சாத்தியமுமில்லை. ஆனால் தனி நபர்களைச் சந்தித்துப் பணியாற்றுவது எவருக்கும், எங்கும், எப்பொழுதும் சாத்தியம். ஆதிச்சபையின் அமோகப் பெருக்கத்திற்குத் தனியாள் ஆத்துமாதாயப்பணிதான் காரணம். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைச் சந்தித்தனர்! (Each one reached one!) சுவிசேஷத்தைப் பரப்பும் பணி முழுநேர ஊழியருக்கு மட்டும்தான் என்ற நிலை அன்று இல்லாதிருந்தது.

இத்தரிசனத்துடன் நாம் செயல்பட்டால், பெயர்க் கிறிஸ்தவரைக் குறிக்கும் ''யூதருக்கும்,'' கிறிஸ்தவரல்லாதோரைக் குறிக்கும் ''கிரேக்கருக்கும்'' நாம் நன்மை விளைவிப்போம் (அப் 20:21). வேறு வார்த்தைகளில் சொன்னால், இவ்விதம் ஒவ்வொரு விசுவாசியின் ஈடுபாட்டினால் திருச்சபைக்கு உள்ளிருப்போரும் வெளியிருப்போரும் ஆசி பெறுவர். சபையில் எழுப்புதல், சபை மூலம் நற்செய்திப்பணி என்பது நிறைவேறும். இந்த ''20/20 தரிசனம்'' செயல் வடிவம் பெற வேண்டுமானால் குறைந்தது ஏழு தத்துவங்கள் கையாளப்படவேண்டும். பவுலின் மேற்குறிப்பிட்ட உரையில் இவை வரையறுக்கப்படுகின்றன (அப் 20:17-35) —



## 1. ஒளிவுமறைவின்மை / Transparency

*வச 18, ''நான் ஆசியா நாட்டில் வந்த நாள் முதல் எல்லா வேளைகளிலும் உங்களுடன் எவ்விதம் இருந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும்.''*

ஒளிவுமறைவின்றி உண்மையாய் வாழ்வதிலிருந்துதான் நாம் துவங்கவேண்டும். இல்லையேல் நமது வாழ்விற்கும் வார்த்தைக்கும் முரண்பாடு தீராது. வாயினால் இயேசுவுக்குச் சான்று பகர்ந்து, ஆனால் வாழ்வில் அவருக்குச் சான்றாயிராதவனைப் பிசாசுக்கு அதிகம் பிடிக்கும். வெறுமனே வாழ்வில் காட்டினால் மட்டும் போதாது; அப்படியே வார்த்தையினால் மட்டும் கொட்டினாலும் போதாது. விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்கும் வல்லமையுடையது சுவிசேஷந்தான் என்றாலும், நாம் எப்படி வாழ்கிறோம் என்பதே அதற்கு நிரூபணமாய் அமையும். கூந்தல் தைல விளம்பரத்திற்கு வழுக்கைத் தலையனா? நாம் பிரசங்கிப்பது ''ஜீவ'' வசனம் என்பதால் நமது ஜீவியத்திலிருந்து அதனைப் பிரிக்க முடியாது (1 யோ 1:1). அவருக்குச் சான்றுகளாய் ''இருப்பதற்காகவே'' கிறிஸ்து நமக்குப் பரிசுத்த ஆவியை அருளியுள்ளார் (அப் 1:8).

ஆவிக்குரிய தலைவர்களுக்குமுன் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும் என்பதையே ஒளிவுமறைவற்ற தனது வாழ்க்கையை முன்மாதிரியாக எபேசு சபை மூப்பர்களுக்கு அவர் கூறியது வலியுறுத்துகிறது. மேய்ப்பர்களின் அளவுக்குமீறிய கட்டுப்பாடு (over-shepherding) திருமறைக்கு ஏற்புடையதல்ல எனினும் தலைவர்களின் ஆரோக்கியமான மேற்பார்வை நமக்குத்தான் பாதுகாப்பு. சபைக்கு உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் வந்து மந்தையைக் குதறிப் பீறும் ஓநாய்களைக் குறித்து மேய்ப்பர்கள் எவ்வளவு விழிப்பாயிருக்கவேண்டுமென அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார் (அப் 20:29,30). இறைவார்த்தையின் ஆரோக்கியமான உபதேசத்தில் வேரூன்றி வழிவிலகலிலிருந்து தங்களை விசுவாசிகள் காத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்டவரது உரிமைக்காய்ப் போராடும் காலமிது. அடங்கியிருத்தலும் பிறரது மேற்பார்வைக்கு அடிபணிதலும் பொதுவாக இன்று விரும்பப்படுவதில்லை. ஒவ்வொருவனும் ''தன் தன் வழியே'' போக

விரும்புகிறான். பாவத்தில் வாழ்வதற்கு அதனை மூடலாய்ப் பயன் படுத்தாதவரை, தனி நபர் உரிமைக்குப் பைபிள் எதிரல்ல. மகிபனோடும் மனிதரோடும் ஒளியில் வெளிப்படையாய் மாய்மாலமின்றி வாழ்ந்தால் இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவிக்கொண்டேயிருக்கும் என்பது இறைவாக்கு (1 யோ 1:7).

## 2. மென்மை / Tenderness

*வச 19அ, ''மிகுந்த மனத்தாழ்மையுடன் கர்த்தரைச் சேவித்தேன்.''*

பவுலுக்குக் கிடைத்த பரம தரிசனம் அவரது அகம்பாவத்தைத் தகர்த்தது. மேலிருந்து வந்த ஒளியும் ஒலியும் குதிரை மீதிருந்து அவரைக் கீழே தள்ளின (அப் 9:8; 22:7; 26:14). இனம், குடியுரிமை, கல்வி, மார்க்கபக்தி போன்றவற்றைக் குறித்த அவரது செருக்கு செருப்பெனத் தூக்கியெறியப்பட்டது (அப் 22:3; பிலி 3:4-7). முன்னர் அவர் தம் பட்டம் அடித்துக்கொண்டிருந்த யாவும் தவிடுபொடியானது (பிலி 3:8). தாழ்மை என்பது எவருக்கும் இயல்பாக வந்துவிடுவதில்லை. தாழ்மையாயிருப்பதும் நொறுங்கியிருப்பதும் ''நமது'' பொறுப்பு (யாக் 4:10).

அகங்காரமும் அளவுக்குமீறிய சுதந்திரமும் நிறைந்த நாளிது. இப்படித்தானிருக்குமென ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டுள்ளது (2 தீமோ 3:1-4). மார்க்கவுலகும் இதற்கு விதிவிலக்கல்ல. சொல்லப்போனால், சபைக்குள் வராதோரைவிடச் சபையினருக்குத்தான் அகந்தையும் அகம்பாவமும் அதிகம். மலைப்பிரசங்கத்தின் எட்டு பாக்கிய வசனங்களில் முதல் வசனமே கூறுவது: ''ஆவியில் எளிமையுள்ளோர் பாக்கியவான்கள்; விண்ணரசு அவர்களுடையது'' (மத் 5:3). மூன்றாம் பாக்கிய வசனம்: ''சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் பூவுலகைச் சுதந்தரிப்பர்'' (வச 5). ஆவியில் எளிமை வாக்களிப்பது ''விண்ணரசு'' (வச 3). சாந்தகுணம்தான் விண்ணக ஆட்சியை ''பூவுலகிற்குக்'' கொண்டுவரும் வழி (வச 5). சாந்தம், எளிமை, கனிவு போன்றவற்றைத்தான் பிரதானமாய் நமதரசர் இயேசுவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும் (மத் 11:29; 21:4).



2020ஆம் ஆண்டில் நுழையும் இவ்வேளையில் கடவுளுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்னரும் தாழ்மையாய் நடப்போம் எனத் தீர்மானம் எடுப்போம் (மீகா 6:8). மேட்டிமையான பார்வையைக் கடவுள் அருவருக்கிறார் (நீதி 6:17; 21:4). மக்களோடுள்ள இடைபாடுகளில் நாம் மென்மையாய் நடந்துகொள்வோம். தேவையான இடத்தில் கண்டிப்பு அவசியம், ஆனால் முரட்டுத்தனம் கூடாது. எல்லாரும் புண்பட்டுத்தானிருக்கின்றனர். நெறிந்த நாணலை நாம் முறிக்கக்கூடாது; மங்கியெரியும் திரியை அணைக்கக்கூடாது (ஏசா 42:3). புத்தாண்டைத் துவங்கும் நாம் மக்களைச் சொல்லாலும் செயலாலும் கட்டுவோம், தகர்க்கமாட்டோம் என அர்ப்பணிப்போம். எவரையும் தீர்த்துக்கட்டாதீர்கள் (மத் 7:1; 1 கொரி 4:5).

## 3. கண்ணீர் ததும்பல் / Tearfulness

*வச 19, ''மிகுந்த கண்ணீருடன் கர்த்தரைச் சேவித்தேன்.''*
*வச 31, ''மூன்று ஆண்டுகள் இரவும் பகலும் கண்ணீருடன் இடைவிடாது ஒவ்வொருவருக்கும் புத்திசொல்லி வந்தேன்.''*

இறைவனுக்கும் இறைமக்களுக்கும் கண்ணீருடன் பணியாற்றியதைப் பவுலடியார் இங்கு குறிப்பிடுகிறார். பிரார்த்திக்கும்போதும் பிரசங்கிக்கும்போதும் கண்ணீர்! அவரவரது தலைமுறையில் கடவுளால் குறிப்பிடத்தகு வகையில் பயன்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் நொறுங்குதலின் அனுபவமுள்ளவர்களே என்பதுதான் சபைச் சரித்திரத்திலும் உலகச் சரித்திரத்திலும் நாம் நெடுகவே காண்பது. நமது பார்வையும் தரிசனமும் தெளிவாயிருக்கும்படி நமது கண்களைக் கழுவுவது கண்ணீர்தான். மன்னன் எசேக்கியாவின் கண்ணீர் தேவனை அசைத்தது (2 இரா 20:5). சீர்திருத்தவாதி நெகேமியா கண்ணீர் நிறைந்தவர் (நெகே 1:4). யோபுவின் கண்ணீர் அவரது கசப்பான வாழ்விலும் கர்த்தர் நல்லவர் என்ற விசுவாசத்தைத் தக்க வைத்தது (யோபு 16:20). தனது கண்ணீர் தேவனது தோற்பையில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது என்ற நிச்சயம் தாவீதுக்கு இருந்தது (சங் 56:8). பின்வாங்கிப்போன இறைமக்களுக்காய் எரேமியா மறைவிடங்களில் கண்ணீர் வடித்தார்

(எரே 9:1). தனது பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்காகவே கண்ணீரை மரியாள் நன்றிக் காணிக்கையாக்கினாள் என்றார் இயேசு (லூக் 7:38,47). பொருளாதாரக் கண்ணோட்டத்திலேயே செயலாற்றிய பிரசங்கிமாருக்காய்ப் பவுல் கண்ணீர் வடித்தார் (பிலி 3:18). கண்ணீருக்குப் பெயர் பெற்ற தீமோத்தேயுவின் விசுவாசத்தைப் பவுல் பாராட்டினார் (2 தீமோ 1:4,5). இயேசுவின் மன்றாட்டு வாழ்வில் கண்ணீர் சாதாரணம் (எபி 5:7). ''புலம்புவோர் பேறுபெற்றோர்'' என்று அவர் சும்மாவா சொன்னார்? (மத் 5:4).

புலம்பல் எழுப்புதல் வராதா? அங்கலாய்ப்புக் கண்ணீருமுண்டு, ஆனந்தக் கண்ணீருமுண்டு. ஆழ்ந்த உணர்வுகளின் வெளிப்பாடே கண்ணீர். இறைவார்த்தையைத் தியானிக்கையிலும், இறைவேண்டல் செய்கையிலும், இறைச்செய்தி அறிவிக்கையிலும் நமது கண்கள் குளமாகத் தேவன் அருள்புரிவாராக! கல்லான இதயமும் வணங்காக் கழுத்துமுள்ள இச்சமுதாயம் வேறெப்படித்தான் அசையுமோ? மன்றாட்டு ஜெபவீரரான ஒரு பிரசங்கியார் தனது சபையாரைப் பார்த்து, ''நீங்கள் உங்களுக்காய் அழாவிடில் நானே உங்களுக்காய் அழுவேன்'' என்றார்! திருச்சபையை அது இருக்குமிடத்திலிருந்து இருக்கவேண்டிய இடத்திற்குக் கொண்டுவரப் புலம்பல் தீர்க்கர்கள் எழும்பியே ஆகவேண்டும் (எசேக் 21:6). பாடுவது (singing) பரவசமாயிருக்கலாம்; பெருமூச்சு விடுவதோ (sighing) இடுப்பு வலி உண்டாக்கும். எம்பெருமான் வாழ்வில் பெருமூச்சு நிறைய இருந்தது (மாற் 7:34; 8:12).

## 4. திட மனது / Toughness

*வச 19, ''யூதரது சூழ்ச்சிகளால் எனக்கு நிகழ்ந்த சோதனைகளுடன்*
*கர்த்தரைச் சேவித்தேன்.''*
*வச 22-24, ''தூயாவியாருக்குக் கட்டுப்பட்டு நான் எருசலேம்*
*செல்கிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடும் என்பது தெரியாது.*
*சிறைவாழ்வும் சித்திரவதைகளும் எனக்காய்க் காத்திருக்கின்றன என்று*
*தூயாவியானவர் நகர்தோறும் எனக்குத் தெரிவிக்கிறார்.*
*என்னைப் பொறுத்தவரையில் எனது உயிரை ஒரு பொருட்டாக*



*நான் மதிக்கவில்லை.*
*இறையருளைப்பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு*
*ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி*
*என் வாழ்வின் ஓட்டத்தை முடிப்பதே எனது ஒரே நோக்கு.''*

மலர்ப்படுக்கை நாடுவோர்க்குக் கிறிஸ்தவ வாழ்க்கை பொருந்தாது. சீடத்துவத்திற்கான பிரதான நிபந்தனையே சிலுவை சுமத்தல்தான். ''அநேக உபத்திரவங்கள்'' வாயிலாகத்தான் இறையரசுக்குள் நுழைகிறோம் (அப் 14:22). இறைப்பற்றுடன் வாழ ''விருப்பம்'' இருந்தாலே துன்பங்கள் துணையாகிவிடும் (2 தீமோ 3:12). ஒன்றுமே செய்ய வேண்டாம், ஆனால் எல்லாமே கிடைத்துவிடும் என்று பறைசாற்றும் இன்றையப் பிரசங்கப்பீடங்கள் ஒலிப்பது சுத்த சுவிசேஷம் அல்ல. அது வேறு சுவிசேஷம். அது வேறு இயேசு. அது வேறு ஆவி. கிறிஸ்துவின் வருகைக்கும் உலக முடிவுக்கும் ஓராண்டு நெருக்கமாய் 2020ஆம் ஆண்டு நம்மைக் கொண்டுவருகிறது. தனக்குச் சிறிது காலமே மிஞ்சியுள்ளது என்றறிந்த பிசாசு கொதித்தெழுந்துகொண்டிருக்கிறான் (வெளி 12:12). வரும் ஆண்டுகளில் துன்புறுத்தப்படல் கூடிக்கொண்டேயிருக்கும். சிறையடைப்பும் சிரச்சேதமும் ஆபூர்வமாயிராது. ஆனாலும் நமக்குத் தேவன் தந்துள்ளது பயம் அல்ல, பலம் (2 தீமோ 1:7). அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள ஏற்றங்கள் நம்மை அச்சுறுத்தி எளிய சுவிசேஷத்தை அறிவிக்க முடியாதபடி நம்மை முடமாக்கிவிடக்கூடாது. மார்க்கவாதியாயிருக்கட்டும், தத்துவ ஞானியாயிருக்கட்டும், தொழில் வல்லுனராயிருக்கட்டும், அவர்களை இரட்சிக்க ஆற்றலுள்ளது கிறிஸ்துவின் சுவிசேஷம் மட்டுமே (ரோ 1:16; 1 கொரி 1:18-25).

## 5. முழுப் போதனை Totality / Thoroughness

*வச 20, ''பயனுள்ளவற்றில் ஒன்றையும்*
*நான் உங்களுக்கு மறைத்து வைக்கவில்லை.''*
*வச 26, ''தேவனது ஆலோசனையில் ஒன்றையும்*
*மறைத்துவைக்காது எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.''*

கிறிஸ்துவின் பேராணையின் முதல் பகுதி வலியுறுத்தப்படுமளவு அடுத்த பகுதி பேசப்படுவதில்லை (மத் 28:19,20). முதல் பகுதி: சீடரைச் ''சேர்ப்பது.'' அடுத்த பகுதி: நமக்குக் கிறிஸ்து கட்டளையிட்ட அனைத்தையும் அவர்களுக்கு ''உபதேசிப்பது.'' கிறிஸ்தவத்தில் சுவிசேஷப் பிரசங்கங்களுக்குப் பஞ்சமில்லை; பக்திவிருத்திச் செய்திகள் கிடைப்பதோ அரிதாகிவிட்டது. அவிசுவாசிகளுக்குரியது சுவிசேஷப் பிரசங்கங்கள்; விசுவாசிகளுக்குத் தேவையானதோ பக்திவிருத்திச் செய்திகள். கிறிஸ்து இயேசுவும் அப்போஸ்தலன் பவுலும் இவ்விரண்டையும் சமநிலைப்படுத்தினர் (மத் 9:35; 1 தீமோ 2:7). இத் தலைமுறைக்காய் ஆண்டவர் எழுப்பியுள்ள சுவிசேஷகர்களுக்காய் அவரைத் துதிப்போம். ஆனால் போதுமான திருமறைப் போதகர்கள் இல்லையேல் திருச்சபையினரின் வளர்ச்சி குன்றும். விசுவாசிகள் நிறைந்த சபைகளிலும் பக்திவிருத்திச் செய்திகளைவிடச் சுவிசேஷப் பிரசங்கங்களே ஞாயிறு ஆராதனைகளிலும் கேட்கப்படுகின்றன என்பது வருந்தற்குரியது. இதனால் கூட்டம் பெருகலாம்; ஆனால் இறைமக்கள் பக்தியடையார், பக்குவமடையார், பயிற்சியடையார். ''இயேசுவிடம் வாருங்கள்'' என்பதல்ல, ''இயேசுவைப் பின்பற்றுங்கள்'' என்பதே ஞாயிறு ஆராதனைப் பிரசங்கங்களின் அறைகூவலாயிருக்கவேண்டும். இயேசுவின் வல்லமை மற்றும் அற்புதங்களைவிட அவரது வாழ்க்கை மற்றும் போதனைகளைத் தியானிப்பதிலேயே கூடுதல் நேரம் செலவழிக்கப்படவேண்டும். இல்லையேல், சபை மக்கள் நெடுகவே குழந்தைகளாய்த்தானிருப்பர் (எபே 4:12-15). ஆதாயத்திற்காகவே ஆண்டவருடன் உறவு என்றாகிவிடும்.

வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' பயனுள்ளவை (2 தீமோ 3:16,17). தேவனது ''முழு'' ஆலோசனையைத் தேவ மக்களுக்குப் பவுலைப் போல அறிவிக்கும்படிச் சபை மேய்ப்பர்களும் பிரசங்கிமாரும் முழு வேதாகமத்தையும் போதிக்கவேண்டும் (அப் 20:20,26). இப்படித்தான் இறைமக்கள் முதிர்ச்சியடைந்து அனைத்து நற்செயல்களைச் செய்யப் பக்குவமடைய முடியும் (2 தீமோ 3:16). சபையினருக்குப் பிரசங்கிமார் சத்தான போதனை கொடுக்கவேண்டுமானால் அவர்கள் பைபிளைத்



தியானிக்கவும் படிக்கவும் தரமான நேரம் செலவழிக்கவேண்டும். நியாயமான சில காரியங்களுக்கும் அவர்கள் மறுப்பு தெரிவிக்காது இது சாத்தியமாகாது. ''இறைவார்த்தைப்பணியிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருப்பதற்காக'' விதவைகளுக்கு உணவளிக்கும் பொறுப்பைக்கூட ஏற்க அப்போஸ்தலர் மறுத்துவிட்டனர் அல்லவா? (அப் 6:2-4). இந்த அப்போஸ்தலத் தத்துவம் இன்று மீறப்பட்டதாலேயே ஆயர் கொழுத்துவிட்டனர், ஆடுகள் மெலிந்துவிட்டன (எசேக் 34:2,3).

வேத வாசிப்பு அட்டவணை ஒன்றை வைத்துக்கொண்டு ஓராண்டு அல்லது ஈராண்டு காலத்தில் பைபிளை முழுமையாய் வாசித்து முடிக்கக் கிறிஸ்தவ நண்பர்கள் யாவரையும் வற்புறுத்துகிறேன். நான் வெளியிட்டுள்ள ஓர் அட்டவணையின்படி நீங்கள் பழைய ஏற்பாட்டை ஒரு முறையும், புதிய ஏற்பாடு மற்றும் சங்கீதங்களை இரு முறையும் ஈராண்டுகளில் வாசித்து முடிக்கலாம். இலவசப் பிரதி கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள். வசனத் தியானத்திற்கு ஆராய்ச்சி வேதாகமம் ஒன்று வைத்துக் கொள்ளுங்கள். *Unless someone guides me* என்ற எனது 36-பக்க ஆங்கிலக் குறுநூல் நம்பகமான ஆராய்ச்சி நூல்களைத் தெரிந்தெடுக்க உங்களுக்குதவும். இதுவும் இலவசம்தான். 2020ஆம் ஆண்டில் திருவசனத்தின் மூலம் உயிர்மீட்சி அடைவோம் (சங் 119:25,107,154).

## 6. நேரம் / Time

*வச 31, ''நான் மூன்று ஆண்டுகள் இரவும் பகலும் கண்ணீருடன் இடையறாது ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தி வந்ததை நினைத்து விழிப்புணர்வுடனிருங்கள்.''*

நமது உக்கிராணத்துவப் பொறுப்பு மூன்று காரியங்களில் உண்டு: தருணம், தாலந்து, தனம் (Time, Talent, Treasure). அறிவாளிகளிலும் திறமைசாலிகளிலும் பலர் அதிகம் சாதிக்காதிருப்பதற்கு முக்கிய காரணம் நேரத்தைக் கையாளத் தெரியாததே. படித்தவனோ படியாதவனோ, தரித்திரனோ தனவானோ, ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் போதும் என்பதே தேவனது ஞானம். சரியான

காரியங்களைச் சரியான நேரத்தில் சரியான முறையில் நாம் செய்ய வேண்டும். இதுதான் ''காலம் பொன்னானது'' என்பதின் பொருள் (எபே 5:15-17). இவ்வித ஒழுங்கு இல்லையேல் நம்மைக் குறித்த இறைச் சித்தம் நமக்குப் புலப்படாது. எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. பரசியடிக்கக்கூடாது. அவரவரது அழைப் பில் நிற்கவேண்டும் (1 கொரி 7:20,24). புத்தாண்டு 2020இல் நுழையும் இவ்வேளையில் தினசரிக் கால அட்டவணை (daily time-table) ஒன்று தயாரித்துக்கொள்ளுங்கள்; அசாதாரணச் சூழல் தவிர்த்து மற்ற நாட்களில் இந்த ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள். பழுத்துக் கொட்டும் மரங்களாவீர்கள்!

உங்களது அனுதினக் கால அட்டவணையில் கடவுளுடன் நேரம் செலவழிப்பதற்கு முன்னுரிமை கொடுங்கள். வசனமில்லா நாள் சுத்த வேஸ்ட்! துயிலெழுவோரது தியான வாழ்வு பிறரதைவிட ஆழ்ந்ததா யிருக்கும். அதற்குப் பிந்தினால் உலகம் சந்தடியாகிவிடும். தேவனுடன் நேரம் செலவழிக்கையில் கைபேசியை (mobilephone) அணைப்பதின் மூலம் அவரை மதியுங்கள் (மத் 6:6). குடியரசுத் தலைவரையோ பிரதம மந்திரியையோ பார்க்கச் செல்லும்போது கைபேசியை அணைக்க மாட்டீர்களோ? நமது நேரத்தைக் களவாடும் நவீனத் திருடன் கைபேசி தான்! அது உங்கள் தலைவனாய் அல்ல, உதவியாளனாய் இருக்கட்டும். தொலைக்காட்சியும் தொல்லையாகிவிடாதபடிப் பார்த்துக்கொள்ளுங் கள். ''சீக்கிரம் தூங்கு; சீக்கிரம் எழுந்திரு'' என்பது இன்னும் பொன் மொழிதான் (Early to bed, Early to rise!). நாட்குறிப்பேடு (diary) எழுதுவது பயன்நிறை பழக்கம். வேலை வேலை என்று குடும்பத்தை மறந்துவிடாதீர். களைத்து இளைத்துப்போனதால் அல்ல, நமக்கு ஒரு தத்துவத்தைப் படிப்பிக்கவே கடவுள் ஓய்வெடுத்தார் (ஆதி 2:23; யாத் 20:8-11; ஏசா 40:28).

''தேவனோடு'' தினமும் நேரம் செலவழிப்பதுடன், வாரமொரு முறையாவது ''தேவனுக்காய்'' நேரம் செலவழிக்க உங்களுக்குப் பிரியமானதொரு திருப்பணி முயற்சியில் ஈடுபடுங்கள். அவரது



தோட்டத்தில் எப்பொழுதுமே வேலையாள் பற்றாக்குறைதான் (மத் 9:37). அவரது வேலையில் சேர எந்த நேரமும் பிந்தியதல்ல (20:1-7). அவருக்கான பணி எதுவும் குறைந்ததல்ல (1 கொரி 12:18-22). நற்செய்திப்பிரதிகள் விநியோகித்தல், சிறுவர் சிறுமியர் ஊழியம், கிராமப்புற நற்செய்திப்பணி, சந்திப்பு ஊழியங்கள், நலிந்தோருக்குத் தானதர்மம் மற்றும் நிவாரணப்பணிகள் போன்றவை எப்பொழுதும் திறந்திருக்கும் கதவுகள். ''எனக்குத் தொண்டாற்றுபவனை என் தந்தை உயர்த்துவார்'' என்பது இயேசுவின் வாக்கு (யோ 12:26).

## 7. செல்வம் / Treasures

*வச 33-35, ''எவரது பொன்னுக்கோ வெள்ளிக்கோ ஆடைக்கோ*
*நான் ஆசைப்பட்டதில்லை.*
*எனது தேவைகளுக்காகவும் என்னோடிருந்தோரின் தேவைகளுக்காகவும்*
*எனது இந்தக் கைகளே உழைத்தன என்பது உங்களுக்குத் தெரியும்.*
*இவ்விதம் பாடுபட்டு உழைத்து நலிவுற்றோருக்குத்*
*துணை நிற்கவேண்டுமென*
*அனைத்திலும் உங்களுக்கு வழிகாட்டினேன்.*
*அத்துடன், 'பெற்றுக்கொள்வதைவிடக் கொடுத்துவிடுதலே பேறுடைமை'*
*என்ற இயேசுவின் கூற்றை நினைவில் வையுங்கள் என்றும் கூறினேன்.''*

''கொடிய காலங்கள்'' என்று பவுல் குறிப்பிட்ட கடைசி நாட்களில் தலையோங்கி நிற்பது ''பண ஆசை'' என்பதை எவரும் மறுக்க முடியாது (2 தீமோ 3:1,2). செல்வச் செழிப்பு எனும் கானல் நீரைத் துரத்திச் செல்லாத நாடே கிடையாது. பொதுவுலகில் மட்டுமல்ல, மார்க்கவுல கிலும் இந்நோய் பரவியுள்ளது. தீர்க்கன் எரேமியாவின் நாட்களிலேயே இந்நிலைதான். இதோ அவரது புலம்பல்: ''சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் கொள்ளை இலாபம் தேடுகின்றனர்; இறைவாக்கினர் முதல் குருக்கள் வரை அனைவரும் ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர்'' (எரே 6:13). வணிக நோக்கிலேயே மூழ்கிக்கிடக்கும் இவ்வுலகம் நமக்கு நோவாவின் நாட்களை நினைப்பூட்டுகிறது (மத் 24:37). தொலைக்காட்சி விளம்பரங்கள் நம்மை அடிமைப்படுத்தி விட்டன.

பிரிய நண்பரே, எச்சூழலிலும் பண ஆசை உங்களில் வேர் கொள்ள இடமளிக்க மாட்டீர்கள் என்று புத்தாண்டு 2020 துவக்கத்திலேயே திட்டமாய்த் தீர்மானித்துவிடுங்கள். ஏற்கனவே பொருளாசை உங்கள் உள்ளிலும் மனதிலும் இடம் பிடித்திருந்தால் எப்படியாவது அதனை உங்கள் இரத்த நாளங்களிலிருந்து கழிவுநீர் போல் அகற்றிவிடுங்கள். 'காசேதான் கடவுளடா' எனும் வாசனை வீசும் இடங்களிலிருந்து ஓடோடி விடுங்கள் (1 தீமோ 6:10). ''நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்தகுணம்'' ஆகியவையே பண ஆசைக்கு மாற்று மருந்து (வச 11). ஆன்மீகப் பயிற்சிகளைத் தவறாது மேற்கொண்டு தூயாவி யானவரின் இக்கனிகளை உங்கள் வாழ்வில் விளைவியுங்கள். பணப் பித்தர்களின் கண்கள் கெட்டுவிடும் என்பதே இயேசுவின் போதனை. அது உங்கள் உடல் (வாழ்வு) முழுவதையும் இருளில் தள்ளிவிடும் (மத் 6:19-24).

ஊழியக்காரருக்கு ஒரு வார்த்தை: ஊழியத்திற்காகத்தான் பணமே தவிர, பணத்திற்காய் ஊழியம் அல்ல. ஊழியத் தேவைகளென்றாலும் வணிக முறைகளைக் கையாளாது கர்த்தரை நம்பியிருக்கப் பழகுங்கள். மக்கள்மீது ஆன்மீக ஆசிகளை அள்ளி வீசுவதிலேயே கவனம் செலுத்துங்கள். உங்களுக்கான பொருளாதார நலன்களை அறுவடை செய்வது இயல்பாகத் தொடரும் (1 கொரி 9:11). நீங்கள் சபை மேய்ப் பராயிருந்தால், ''புல்லுள்ள இடங்கள்'' மற்றும் ''அமர்ந்த தண்ணீர்கள்'' அருகே உங்கள் மந்தையைத் தொடர்ந்து நடத்திச் செல்லுங்கள் (சங் 23:1,2). உங்களது பொருளாதாரத் தேவைகளையும் உடலுக்கடுத் தவைகளையும் பிரதான மேய்ப்பராம் இயேசு பொறுப்பெடுப்பார். போதுமான நேரமும் சிரமமும் எடுக்காது நீங்கள் பிரசங்கப்பீடம் ஏறி னால் உங்கள் சபையாருக்குமுன் வைக்கோலைத்தான் வீசியெறி வீர்கள். அது குருடருக்குக் குருடர் வழிகாட்டும் நிலைக்குத்தான் கொண்டுபோகும்!

இயேசுவின் கண்கள் இரக்கம் நிறைந்தவையாக, அதிலும் குறிப்பாக எளியோர் பக்கம் திரும்பியவையாக, இருந்தன. ''பெற்றுக்கொள்வதை



விடக் கொடுத்துவிடுவதே பேராசீர்வாதம்'' எனும் அவரது கூற்று நற்செய்தி நூல்களில் இல்லை (அப் 20:35). ஆனால் அவரது செயல் பாடுகளில் இத்தத்துவத்தைச் சீடர்கள் நெடுகவே கண்டிருந்தனர். தனது மற்றும் தனது குழுவினரது தேவைகளுக்காய்ச் சம்பாதித்தது தவிர்த்து, எளியவரைத் தாங்குவதற்காகவும் அவர் கடினமாய் ''உழைத்தார்.'' 20-20 எனும் இவ்வாண்டு துவங்கி, தானதர்மத்திற்காய் நீங்கள் வழங்குவது 50-50 என்ற நிலையை (அதாவது, பாதி எமக்கு, பாதி எளியவர்க்கு என்ற விகிதத்தை) எட்டும்வரை கூடிக்கொண்டேயிருக்கட்டும் (லூக் 3:11; 19:8). இதுவே பூரணத்திற்குச் செல்லும் பாதை (லூக் 18:22). உபதேசம் மூலமாகவும் உதாரணம் வாயிலாகவும் ''சமத்துவம்'' என்பதைப் பைபிள் போதிக்கிறது என்றே நான் புரிந்துகொள்கிறேன் (2 கொரி 8:13,14; அப் 2:44.45; 4:34.35). எளியோரை நல்லவர் கெட்டவர் எனப் பிரிக்காதீர்கள் (மத் 5:45,48). பயனாளிகளைத் தெரிந்தெடுப்பதில் அளவுக்குமீறிக் கவனம் செலுத்துதல் தானதர்மத்தின் வாசனையைக் கெடுத்துவிடும்.

## முடிவுரை

2020ஆம் ஆண்டில் நுழைகையில் தேவனது அறுவை சிகிச்சை மேசைமீது படுத்துக்கொள்ளுங்கள்; அவர் உங்கள் கண்களிலுள்ள புரையை (cataract) நீக்கிவிடுவார். உங்கள் பார்வை இனி மங்கலா யிராதபடி கண் மருத்துவராகிய அவர் உங்கள் கண்களில் சொட்டு மருந்து போடுவார் (வெளி 3:18). தேவைப்படுமானால் ''இரண்டாம்'' அல்லது மூன்றாம் தடவையும் அவர் உங்கள் கண்களைத் தொட்டுப் பார்வையை முழுவதும் தெளிவாக்குவார் (மாற் 8:22-25). ''பிரகாசமான'' புத்தாண்டு வாழ்த்துக்கள்! “Bright” New Year!

# 9

# பொன் விழா

## Golden Jubilee

1950களின் பின்பகுதி, 1960 மற்றும் 1970 ஆண்டுக் காலத்தை இந்தியாவில், அதிலும் குறிப்பாய்த் தென் மாநிலங்களில், எழுப்புதல் காலம் எனலாம். இக்காலக்கட்டத்தில்தான் இன்றையப் புது மிஷனரி இயக்கங்கள் பல உருவாகின. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB), இந்திய அருட்பணி இயக்கம் (IEM), ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM) மற்றும் சுவிசேஷ எதிரொலி மிஷனரி இயக்கம் (GEMS) போன்றவையும் இவற்றில் சில. FMPB தனது பொன் விழாவை 2008இலும், IEM அதனை 2015இலும் கொண்டாடின. BYMஇன் பொன் விழா 2021 இலும் GEMSஇன் பொன் விழா 2022இலும் கொண்டாடப்படவிருக்கின்றன. மற்ற இயக்கங்களின் பொன் விழாக்கள் இவற்றைத் தொடரும். இந்திய மிஷனரிச் சங்கம் (IMS) மற்றும் சுதேச மிஷனரிச் சங்கம் (NMS) போன்ற பழைய இயக்கங்கள் தங்களது நூற்றாண்டு விழாக்களை முறையே 2003இலும் 2005இலும் கொண்டாடிவிட்டன. Campus Crusade for Christஇன் (CCC) பொன் விழா 2001இல் நடைபெற்றது. இவற்றின் மூலமாகவும் பல புதிய இயக்கங்கள் மூலமாகவும் தேவன் செய்துள்ள மகத்தான காரியங்களுக்காய் அவரைத் துதிப்போம். நவீன மிஷனரி



இயக்கங்களின் தந்தை வில்லியம் கேரி (1761-1834) அவர்களது முழக்கமே எப்பொழுதும் நமதாயிருக்கட்டும்: ‘‘தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; அவருக்காய்ப் பெரிய காரியங்களை முயன்றிடுங்கள்!’’

நாம் ஓர் உள்ளூர்ச் சபையோ, ஒரு மிஷனரி இயக்கமோ அல்லது ஒரு நிறுவனமோ எதுவாயிருந்தாலும் பொன் விழா எனும் யூபிலி ஆண்டில் (Golden Jubilee Year) நாம் என்ன செய்யவேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இங்குள்ள படிப்பினைகள் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கும் 50ஆம் பிறந்த நாட்கள், திருமண நாட்கள் இன்னும் இதுபோன்றவற்றிற்கும் பய னுள்ளவையாய் அமையும். யூபிலி கொண்டாட்டத்தில் காணப்பட வேண்டிய மனப்பான்மையைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ள ***லேவிய ராகமம் 25ஆம் அத்தியாயம்*** முழுவதையும் கவனமாய் வாசியுங்கள். ‘‘யூபிலி’’ என்ற சொல் இவ்வத்தியாயத்தில் 14 முறை வருகிறது. யூபிலி ஆண்டு என்பது விடுதலை ஆண்டு (Year of Liberty) என்றும் அழைக் கப்படும். யூபிலி எனும் சொல் ‘‘யோபெல்’’ (Yobel) எனும் எபிரெய பதத்திலிருந்து வருகிறது; எக்காளம் ஊதும் சத்தம் என்பதே அதின் பொருள். ஆட்டுக்கடாவின் கொம்பினால் செய்யப்பட்ட எக்காளமே யூபிலி ஆண்டில் விடுதலையை அறிவித்து முழங்கும் (வச 9). ஏழு ஏழு ஆண்டுகளாகிய நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்கு அடுத்ததாகிய ஐம்பதாம் ஆண்டுதான் யூபிலி ஆண்டு எனப்படும் (வச 10). யூபிலி ஆண்டில் மூன்று முக்கிய காரியங்கள் கட்டளையிடப்பட்டன: (அ) நிலத்திற்கு ஓய்வு தரப்படவேண்டும் (வச 11), (ஆ) விற்கப்பட்ட நிலங்கள் அவற்றை முதலாவது வைத்திருந்த சொந்தக்காரருக்குத் திருப்பித் தரப்படவேண்டும் (வச 10-34; 27:16-27), (இ) அடிமை களும் சிறைப்பட்டவர்களும் விடுதலையாக்கப்படவேண்டும் (25:39-46). பாவ நிவாரண நாளின் (Day of Atonement) பயபக்தியான காரியங்கள் செய்து முடிக்கப்பட்டவுடன் அந்த நாளின் மாலையி லேயே எக்காளம் முழங்கி விடுதலை கூறப்படவேண்டும். ஆண்டவரது

ஞானத்தைப் பாருங்கள்! தேவன் நமது பாவங்களை மன்னித்துவிட்டது போலவே நாமும் பிறரை மன்னிக்கவேண்டும் என்ற செய்தியே இங்கு தெளிவாகிறது (வச 9,10).

இஸ்ரவேலரது கலாச்சாரத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு **புதிய துவக்கம்** கிடைப்பதற்கு ஏதுவாகச் சமநிலைப்படுத்தும் சாதனமாக யூபிலி ஆண்டு விளங்கியது. புதிய உடன்படிக்கையில் மேசியாவின் பணிக்கு இது முன்னடையாளம். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் இதோ: ''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மீது இருக்கிறார்; ஒடுக்கப்பட்டோருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார் ... சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும் ... கர்த்தரது அனுக்கிரக ஆண்டினை முழங்கவும் ... அழுவோரை ஆறுதல்படுத்தவும் ... என்னை அனுப்பியுள்ளார்'' (ஏசா 61:1-3). தமது ஊழியத்தின் துவக்கவுரையாக இயேசுதாமே ஏசாயா புத்தகத்திலிருந்து இப்பகுதியை வாசித்தார் (லூக் 4:16-20). வாசித்து முடித்ததும் ஆலயத்திலுள்ளவர்களிடம் அவர் கூறியது: ''உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்று நிறைவேறிற்று'' (வச 21). ஏசாயாவிலுள்ள இப்பகுதியை ஆண்டவர் வாசிக்கும்போது *''கர்த்தரது அனுக்கிரக ஆண்டு''* என்பதுடன் நிறுத்திக்கொண்டார்; *''நீதியைச் சரிக்கட்டும் நாள்''* என்பதை வாசிக்கவில்லை (ஏசா 61:2; லூக் 4:19). வேண்டுமென்றே இவ்விதம் செய்தார்; ஏனெனில், தமது முதல் வருகையில் அவர் இரட்சகராகவே வந்தார்; மறுவருகையில்தான் நீதியரசராய் வருவார்! இன்று ''இரட்சிப்பின் நாள்,'' நியாயத்தீர்ப்பின் நாள் அல்ல (2 கொரி 6:2).

இக்கருத்தை அனைத்து ஊழியங்களும் தங்களது யூபிலி கொண்டாட்டங்களுக்குள் கொண்டுசெல்ல வலியுறுத்துகிறேன். இல்லையேல், பழைய உடன்படிக்கையின்கீழ், அதிலும் குறிப்பாக லேவியராகமத்தில், நிழலாய் முன்னறிவிக்கப்பட்டு, மேசியாவின் பணி அறிக்கையில் (Messianic Manifesto) அவ்வளவு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சித்தத்தை நாம் தவறவிட்டுவிடுவோம்.



''தரித்திரர் ... ஒடுக்கப்பட்டோர் ... இருதயம் நொறுங்கினோர் ... சிறைப்பட்டோர் ... குருடர்'' ஆகிய வார்த்தைகளுக்கெல்லாம் ஆன்மீக அர்த்தம் கொடுத்து நீர்த்துப்போகச் செய்வதற்கு நமக்கு அதிகாரம் கொடுத்தது யார்? (லூக் 4:18,19). யூபிலி ஆண்டைக் குறித்த கருத்துதான் பெந்தெகொஸ்தே அனுபவம் பெற்ற ஆதி விசுவாசிகளின் உடனடி வெளிப்பாடாகும். அவர்கள் ''தங்களது நிலபுலன்களையும் உடைமைகளையும் விற்றுத் தேவையுள்ளோருடன் பகிர்ந்து கொண்டனர்'' (அப் 2:45; 4:34,35). அப்போஸ்தலர் யாரும் இதைக் கட்டளையிடவில்லையே! ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களின் தன்னார்வச் செயலிது. பழைய ஏற்பாடு தெரிந்திருந்த யூதராகிய அவர்களுக்கு லேவியராகமம் 25ஐப் பரிசுத்த ஆவியானவர் நினைப்பூட்டியிருப்பார். உலகப் பொருட்களோடு அவர்களுக்கிருந்த பிணைப்புக் கயிறுகளை அவர்கள்மீது வந்திறங்கிய தீக்கதிர் எரித்துப்போட்டது (2:3). இதனையே ஆவியின் அபிஷேகத்தின் ''மறுக்கமுடியா'' அடையாளம் என்பேன். **பொருளாதாரச் ''சமத்துவம்''** (2 கொரி 8:13-15) குறித்த பவுலின் உபதேசமானது நான்கு காரியங்களின் அடிப்படையிலானது: (அ) யூபிலி ஆண்டைக் குறித்த பழைய ஏற்பாட்டின் போதனை (லேவி 25), (ஆ) திருமுழுக்கினன் யோவானின் உபதேசம் (லூக் 3:10.11), (இ) மேசியாவின் பணி விளக்கம் (லூக் 4:18,19; ஏசா 61:1,2), (ஈ) திருச்சபையில் முதலாவது அங்கத்தினர்களானவர்களின் தன்னார்வச் செயல் (அப் 2:44-47). வாசக நண்பரே, நான் சொல்வது புரிகிறதா என்ன? கலக்குகிறதா? ஆம், நமது வசதிக்கேற்ப பைபிளைத் திரித்து இறைவார்த்தையை விட்டு எவ்வளவோ தூரம் போய்விட்டோம். யூபிலி ஆண்டின் ஆசிகளை அனுபவிக்கத் திருமறைக்குத் திரும்புவோம். பெந்தெகொஸ்தே என்றால் 50ஆம் நாள் என்று பொருள். ''பெந்தெகொஸ்தே நாள்'' என்றிருப்பதுபோல், யூபிலி ஆண்டைப் ''பெந்தெகொஸ்தே ஆண்டு'' என்று அழைத்தாலென்ன? நற்செய்தியறிவிப்பு மற்றும் மிஷனரி ஊழிய நிறுவனங்கள் அனைத்தும் யூபிலி ஆண்டு முதல் தங்களது தானதர்மத் திட்டங்களைக் குறைந்தது இரு மடங்காக்கக் கேட்கிறேன். இது தேவனது புன்முறுவலை நம் பக்கம் திருப்பும் (அப் 10:1-4).

பல்வேறு மிஷனரி இயக்கங்கள் தங்களது பொன் விழாக் கொண்டாட்டங்களைத் தேவனுக்கு நறுமணமாய் எவ்விதம் மாற்றலாம் என்பதற்கான சில நடைமுறை ஆலோசனைகளை, ஓர் இயக்கத்தை (BYM) நிறுவி அதனை 33 ஆண்டுகள் (1971-2003) தலைமை தாங்கி நடத்தியவன் என்ற வகையில், இங்கு வரிசைப்படுத்த விரும்புகிறேன். மேற்கண்ட பத்திகளில் நாம் கவனித்த திருமறைப் போதனையைச் சார்ந்தவையே இந்த அறிவுறுத்தல்கள் —

**(1)** ஏற்கனவே நாம் கவனித்தபடி, பாவ நிவாரண நாளை அடுத்தே யூபிலி ஆண்டு வருகிறது (லேவி 25:9,10). கிறிஸ்து நமக்காய்ப் பாவ நிவாரண பலியானதாலேயே நாம் மன்னிக்கப்பட்டுள்ளோம். அவரது சிலுவையின் மூலமாகவே நாம் தேவனுக்குச் சிநேகிதராகியுள்ளோம் (ரோ 5:10). கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்தது போலவே நாமும் பிறரை மன்னிக்கப் போதிக்கப்பட்டுள்ளோம் (எபே 4:32). யூபிலி ஆண்டை **மன்னிப்பின் ஆண்டு** (Year of Forgiveness) என அனுசரிப்போம். நாம் ஒருவரையொருவர் மனப்பூர்வமாய் மன்னிக்காவிடில், நாம் எவ்வளவுதான் கண்ணீருடன் ஜெபித்தாலும் தேவன் நமக்கு மன்னிப்பு அருள மாட்டார் (மத் 6:14,15). நிறுவனங்களிலுள்ள ஊழியர் ஒவ்வொருவரும் மனக்கசப்பு, எரிச்சல், வீண்விவாதம், அவதூறுப் பேச்சு போன்றவற்றைக் களைந்துவிடவேண்டும் (எபே 4:31). பணியாளர்களிடம் தலைவர்கள் கடுஞ்சொற்கள் பேசுவதைத் தவிர்க்கவேண்டும். திருப்பணியாளர்கள் உங்களால் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் (employees) அல்ல; அவர்கள் உங்களது சகோதர சகோதரிகள். அச்சுறுத்தல் கூடவே கூடாது (6:9). பிரிய தலைவர்களே, மிஷனரிகள் ''உங்கள்'' வேலைக்காரர் அல்ல; ''தேவனது'' ஊழியக்காரர் (லேவி 25:42,43,55). பாகுபாடு, பாரபட்சம் போன்றவை கூடாது (1 தீமோ 5:21). எவரையும் பழிவாங்காதீர்கள் (உபா 32:35; சங் 94:1; ரோ 12:19; எபி 10:30). நமது நிறுவனங்களிலிருந்து இனவெறி, இடவெறி போன்றவற்றை அறவே ஒழித்துவிட ஏற்ற காலமாக ஆண்டு விழாக்களைப் பயன்படுத்தவேண்டும். இந்திய மிஷனரி இயக்கங்கள் பல



தென்னிந்தியாவில் தோன்றியவை. நீங்கள் ஊழியரை நடத்தும் விதம் அவர்களுக்குச் சங்கடமாயிருக்கிறதாவென்று வட இந்திய ஊழியரிடம் கேட்டு விசாரியுங்கள். நிறுவனத்தின் உயர்மட்டத் தலைமைப் பதவிகளிலும், செயற்குழு மற்றும் பொதுக்குழுவிலும் சமமாய் இடம் தரப்படுகிறதா? உங்களது முக்கியக் கூடுகைகளில் தேசிய வாசனை வீசவேண்டும். விதவைகளுக்கும் தாய் தந்தை இழந்தோருக்கும் கூடுதல் கனிவு காட்டுங்கள். தங்களது பிரச்னைகள் அனைத்தையும் அவர்களால் சொல்லமுடியாது. பலக்குறைவானோரைப் பட்சமாய் நடத்துங்கள். தலைவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது ஊழியரிடமிருந்து அன்பினால் வரவேண்டும் (1 யோ 5:3). நமது இராஜா சாந்தமும் மனத்தாழ்மையும் நிறைந்தவர் (மத் 21:4; 11:29). இறைப்பணியாளராகிய நாம் இயேசு கிறிஸ்துவின் பொறுமையில் பங்காளிகளாயிருப்போம் (வெளி 1:9). அதிகாரத் தோரணை கிறிஸ்தவப் பண்பல்ல (லூக் 22:25,26; 1 பேது 5:3).

**(2)** யூபிலி ஆண்டிற்காய்த் தேவன் கொடுத்த மூன்று கட்டளைகளில் முதல் வருவது நிலத்திற்கு ஓய்வு (லேவி 25:11). அவர் கூறிய வார்த்தைகள் இதோ: ''அந்த ஐம்பதாம் ஆண்டு உங்களுக்கு யூபிலி ஆண்டாயிருக்கட்டும்; அவ்வாண்டில் விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளை கழிக்காமல் விடப்பட்ட திராட்சைச்செடியின் பழங்களைப் பறிக்காமலும் இருங்கள்!'' உங்கள் நிறுவன விதிமுறைகளின்படி ஊழியர் எடுக்கக்கூடிய விடுமுறை தவிர்த்து, அதிகம் உழைத்துக் களைத்துப்போனவர்கள் ஓய்வெடுத்துப் புத்துணர்வடையும்படி அவர்களுக்கு ஒரு சில வாரங்கள் **கூடுதல் விடுமுறை** கொடுங்கள். அளவுக்குமீறிப் பயிரிடப்பட்ட நிலங்களுக்குக்கூட தேவன் கட்டாய ஓய்வு கொடுத்து அவற்றைக்கூட மனரம்மியமாக்கினார் பாருங்கள்! (26:34,35). கடந்த ஆண்டுகளிலெல்லாம் வேலை மிகுதியினால் நியாயமான விடுமுறை நாட்களைக்கூட அனுபவிக்காதவர்களை நீங்கள் எளிதில் அடையாளம் காணலாம். களைத்துவிட்ட குதிரையை மேலும் அடிக்காதீர்கள்! இவ்வித ஊழியருக்கு இருவார அல்லது ஒருமாத விடுமுறை கொடுத்து ஊக்கு

வியுங்கள். முக்கியமான ஒரு சிலருக்கு ஓராண்டு ஓய்வுகூடக் கொடுக்கலாம். நேரம் காலம் பார்க்காமல் நோயாளிகளை நெடுகவே கவனித்து வரும் மருத்துவர்களுக்கும், அவர்களுக்கு உதவியாய்ச் செயல்படும் நிர்வாகிகளுக்கும் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (CMC) இவ்விதம் ஓரிரு ஆண்டுகள் Sabbatical Leave கொடுத்துவருகிறது. வேலை மிகுதியும் ஓய்வு குறைவும் மன ஆரோக்கியத்தைக் கட்டாயம் பாதிக்கும். மிஷனரிகள் நடுவில் மனத்தொய்வு (depression) அதிகரித்துக்கொண்டே வருகிறது. 200 மிஷனரிகளுக்கு மேல் இருக்கும் நிறுவனம் எதுவும் முறைப்படி பயின்று பயிற்சிபெற்ற இரு கிறிஸ்தவ ஆலோசகர்களையாவது (Christian Counsellors) கட்டாயம் வைத்திருக்கவேண்டும். எங்கள் மகள் 1996 முதல் 6 ஆண்டுகள் BYMஇல் மிஷனரி ஆலோசகராய்ப் பணியாற்றினாள். மிஷனரிகளின் பெயர்களைச் சொல்லாமல் அவர்களது கொடிய பிரச்னைகள் சிலவற்றை எங்களுடன் பகிர்ந்துகொள்வாள். திடுக்கிடும் தகவல்களாயிருக்கும்! நிர்வாகத் தீர்வுகள் போதாது. ‘‘மன அமைதியும் கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியும்’’ இல்லாது இயந்திரம் போல உழைத்துக்கொண்டிருப்போர் ஏராளம் (நெகே 8:10). இக்காரியங்களையெல்லாம் கவனிக்க யூபிலி ஆண்டில் முயற்சியெடுங்கள். ஊழியர் அனைவருக்கும் **புத்துயிரூட்டும் துவக்கம்** கொடுங்கள்.

**(3)** நிலத்தின் முதலாம் சொந்தக்காரருக்கு அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடுதல் அடுத்து வருகிறது (லேவி 25:10-34; 27:16-27). இதற்கு எவ்வளவு நீண்ட விளக்கம் தரப்பட்டிருக்கிறது பாருங்கள்! தரித்திரத்தின் காரணமாகவே மக்கள் தங்கள் நிலங்களை விற்றிருப்பர் (25:25). இவ்வசனப்பகுதியைப் பகுப்பாய்வு செய்யாமல், இச்சட்டங்களின் கருத்தை நாம் எவ்விதம், குறிப்பாக இந்திய மிஷனரி இயக்கங்களில், செயல்படுத்தலாம் என்று பார்ப்போம். **கடன் சுமையில்** அழுந்திக்கொண்டிருக்கும் மிஷனரிகளின் எண்ணிக்கை மிக மிக அதிகம். தங்களது மருத்துவச் செலவுகள், பிள்ளைகளது படிப்பு மற்றும் திருமணச் செலவுகள், பெற்றோரது அடக்கச் செலவுகள், இன்னும் குடும்பங்களில் வரக்கூடிய எதிர்பாரா காரியங்களுக்கான செலவுகளுக்காக தாங்



கள் பணியாற்றும் நிறுவனங்கள் அல்லது பிற அமைப்புகள் அல்லது வெளி நபர்களிடமிருந்து கடன் வாங்கியிருப்பர். வங்கிகள் அல்லது வெளியேயிருந்து வாங்கிய கடன்களைக் குறித்து நான் இங்கு பேச விரும்பவில்லை. **விவசாயிகளது** கடன்களை ரத்து செய்ய அரசு எத்தனையோ திட்டங்களைக் கொண்டுவருகிறது. இதை நாம் ஏன் ஒரு சவாலாய் எடுத்துக்கொண்டு நமது **அறுவடைப்பணியாளர்களது** கடன் சுமையைத் தீர்த்துவிடக்கூடாது? யூபிலி ஆண்டில் மிஷனரிகள் அனைவரது கடன்களையும் தள்ளுபடி செய்துவிடக்கூடாதா? அது சாத்தியமா? ஆம் என்று அடித்துச்சொல்வேன்! மிஷனரிகளைத் தாங்குவோரின் சராசரி மாதச் சம்பளம் எவ்வளவு? இயக்கங்களின் முழுநேர ஊழியரல்லாத தலைவர்கள் மற்றும் செயற்குழு (Board) உறுப்பினர்களின் சராசரிச் சம்பளம் எவ்வளவு? இவற்றை மிஷனரிகளின் சராசரி வருமானத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மயக்கமடைந்து விழுந்துவிடுவீர்கள்! தங்களது ஊழியரனைவரது கடன்களையும் கூட்டி ஒவ்வொரு நிறுவனமும் தங்களது ஆதரவாளர்கள் முன்னர் சமர்ப்பிக்கட்டும். பிரிய ஆதரவாளர்களே, நீங்களே உங்களுக்குள்ளிருந்து இதற்குப் போதுமான பணம் திரட்டி மிஷனரிகளின் கழுத்துக்கள் மீதுள்ள கடன் பாரத்தைத் தூக்கிவிடுங்கள். பணிக்களங்களிலுள்ள கடினமான நிலங்களில் உழுதுகொண்டிருக்கும் அவர்களது நுகம் ஏற்கனவே கனத்திருக்கிறது. ‘‘போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே’’ என்பது திருக்கட்டளை (1 தீமோ 5:18). கடன் சுமை என்பது ஓர் அடிமைத்தனம்தான். உங்களது நகை அல்லது சொத்து ஒன்றை விற்று மிஷனரிகளை விடுவித்து வெளிக்கொண்டு வாருங்கள் (எபி 10:34).

சரியாய்ச் சொன்னால், முன்னணியில் ‘‘திருவசனத்திற்காய்ப் பிரயாசப்படுகிறவர்களுடைய’’ வருமானம் அவர்களது ஆதரவாளர்களுடைய வருமானத்தைவிட ‘‘இரட்டிப்பாய்’’ இருக்கவேண்டும் (1 தீமோ 5:17); குறைந்த பட்சம் சமமாகவாவது இருக்க வேண்டும் (1 சாமு 30:24,25). நீங்கள் ஒரு தனி நபராக, அல்லது குடும்பமாக, அல்லது ஐக்கியமாக, அல்லது ஒரு சபையாக ஒரு மிஷனரியைத் தாங்குபவராக இருக்கலாம். நீங்கள் தாங்கும் மிஷனரிக்கு இருக்கும் கடன் தொகையை

நீங்களே அந்நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கலாம். தொகை எவ்வளவு என்று நிறுவனத்திடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். இம்முயற்சியை ஆறு ஆண்டுகளுக்கொரு முறை 7ஆம் ஆண்டு மேற்கொள்ளலாம் (லேவி 25:1-7). பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள மனப் பாரத்தை இவ்விதம் அகற்றி மிஷனரிகளுக்கு மனதில் ''இளைப்பாறு தல்'' கொடுக்கலாம். வேறு வழியின்றிக் கடன் வாங்குவோரைக் குறித்த தேவனது இதயக்கனிவைப் புரிந்துகொள்ள உபாகமம் 15ஐ வாசித்துப் பாருங்கள். இது சாத்தியந்தானா என்று விவாதித்துக்கொண் டேயிருப்பதைவிட, இறைக்கட்டளைக்கு இசைந்துள்ள இதனை ஒரு செயல்திட்டமாய் மேற்கொள்ளத் தலைவர்கள் இறைப்பிரசன்னத்தில் தீர்மானம் எடுக்கவேண்டும். இவ்வித மனப்பான்மை நமது நிறுவனங் களுக்குள் வருமானால் நமது வருமானத்தைத் தேவன் பன்மடங் காக்குவார் (வச 20). உங்களில் சிலருக்கு என்மீது இப்பொழுது எவ்வளவு கோபம் வருகிறதென்று எனக்கு நன்றாகவே தெரியும். ''இவருக்குக் கிறுக்கு பிடித்துவிட்டது'' என்று சிலர் கூறுவதும் என் காதுகளில் விழாமல் இல்லை! மார்க்கத்திற்கு ஒருபோதும் புரட்சி பிடிக்காது! மத்தேயு 6 மற்றும் லூக்கா 11இலுள்ள கர்த்தருடைய ஜெபம் முக்கியமாகக் ''குற்றங்கள்'' குறித்தல்ல, ''கடன்கள்'' குறித்தே பேசு கிறது. நாமோ கெட்டிக்காரத்தனமாய் நமது வசதிக்கேற்ப அதனை மாற்றிக்கொண்டோம்! ஜாக்கிரதை! (2 பேது 3:16).

நமது ஊழியங்களில் 25 அல்லது 50 ஆண்டுகள் நிறைவடையும் போது எழுப்புதல் (Revival), திரும்பக் கட்டுதல் (Rebuilding), ஆதிநிலையேகுதல் (Restoration) என்றெல்லாம் பேசுவோம். இவ்விதச் சமயங்களில் நமக்குமுன் பெரும்பாலும் நிறுத்தப்படும் நபர் நெகே மியாதான். எருசலேம் மதில்கள் கட்டப்படுவதற்கான ஆயத்தம், கட்டுமானப்பணி, பிரதிஷ்டை ஆகியவற்றைத் தியானிப்பதோடு நிறுத்திவிடுகிறோம். ஆனால் **நெருக்கப்பட்டோர்** மற்றும் **நசுக் கப்பட்டோருக்கு** (oppressed) அடுத்த காரியங்களைக் குறித்து அவர் என்ன செய்தார் என்று கவனிப்பதில்லை. நெகேமியா 5ஆம் அத்தி யாயத்தை வாசித்துப்பாருங்கள். அடிமைத்தனம், வட்டி மற்றும் மக்கள்



மீதிருந்த கட்டுகளை எவ்வளவு துணிச்சலாய் அவர் அறுத்தெறிந்தார் பாருங்கள். தளர்ந்த மிஷனரிகளைக் கட்டியெழுப்புவதைவிடக் கட்டி டங்களைப் புதுப்பிப்பதில்தான் சில வேளைகளில் நாம் அதிகம் கவனம் செலுத்துகிறோம்.

**(4)** அடிமைகளை விடுவிப்பதே யூபிலி ஆண்டிற்கான மூன்றாம் கட்டளையாகும் (லேவி 25:39-46). ஐம்பது வயதாகிவிட்ட எந்த ஊழியரும், அவர் கணிசமான ஆண்டுகள் அந்நிறுவனத்தில் உழைத் திருப்பாரானால், வேறுவிதமான பணியை அவர் மேற்கொள்ள விரும்பி னால், அவருக்கு **மனப்பூர்வமான விடுப்பு** கொடுக்கவேண்டும் (எ.கா., எண் 8:23-26). நற்சான்றிதழ்கள் மற்றும் சிபாரிசுக் கடிதங் களுடன் அவரை அனுப்பிவைக்கவேண்டும். எந்த ஊழியனும் ஓர் இயக்கத்திற்கல்ல, இறைவனுக்கே நித்தியமாய்க் கடமைப்பட்டுள் ளவன். அந்தியோகியா சபையிலேயே பவுலும் பர்னபாவும் மாட்டிக் கொள்ளவில்லை. உடன் தலைவர்களோடு பேசுமுன் தேவன் அவர்களோடு பேசிவிட்டார் (அப் 13:1-3). இது ஊழியத்தைவிட்டு ஓடிவிடுதல் (defection) அல்ல. எமில் அண்ணன் (1941-2013) FMPBஐ விட்டார்கள்; விஷ்வவாணி பிறந்தது. மைக்கல் ஆச்சாரி என்ற மிஷனரி BYMஐ விட்டார்; கர்நாடக மாநிலத்திலுள்ள ஹூப்ளி நகரில் 3000 அங்கத்தினரைக் கொண்ட அவரது சபைதான் அங்கு பெரியது. Gospel For Asia (GFA) நிறுவனரான Mr. K. P. யோஹன்னான், FMPB மற்றும் IMAஇல் தலைமைப் பொறுப்புகளிலிருந்த Mr. எபனேசர் சுந்தரராஜ், Quiet Corner India (QCI) நிறுவனரான Mr. தாமஸ் சாமுவேல் ஆகியோர் ஆப்பரேஷன் மொபிலைசேஷனில் (OM) பல நிலைகளில் தலைவராயிருந்தவர்களில் சிலராவர். சென்னை வேப்பேரி இம்மானு வேல் மெதடிஸ்ட் சபையில் பல ஆண்டுகள் Dr. சாம் கமலேசன் (1930-2021) அவர்கள் போதகராயிருந்து பின்னர் World Vision International இன் உபதலைவர்களில் ஒருவரானார். Christian & Missionary Allianceஇல் மிஷனரியாயிருந்த Dr. ரவி சகரியாஸ் அவர்கள் (1946-2020) RZIM என்ற தனது சொந்த ஊழியத்தை நிறுவினார். நான் 33

ஆண்டுகள் BYMஇன் தலைவனாயிருந்து 2003இல் ஓய்வுபெற்றபோது அதற்கு ஆயுள்காலத் தலைவராயிருக்கும்படி நிர்வாகக்குழு என்னைக் கேட்டுக்கொண்டது. தேவனோ StanleyOnBible என்ற பெயரில் விரிவான திருமறைப் போதகப்பணி ஒன்றை மேற்கொள்ள என்னை நடத்தினார். இவ்வித எடுத்துக்காட்டுகள் சபைச் சரித்திரத்தில் நிறையவுண்டு.

**(5)** இந்த இடத்தில் **ஓய்வுபெற்ற மிஷனரிகள்** சிலரது பரிதாப நிலையையும் குறிப்பிட விரும்புகிறேன். இவர்களில் பலர் தங்களது கல்லூரிப் படிப்பை முடித்தவுடன், சம்பாதிக்கத் துவங்குமுன், முழுநேரப் பணிக்கு வந்துவிட்டனர். தங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் வீடு கட்டிக்கொடுக்கும் வசதி எல்லாப் பெற்றோருக்கும் கிடையாது. ஓய்வு பெற்ற மிஷனரிகள் தங்களது மகன்கள் அல்லது மகள்களது வீடுகளிலும் நீண்ட நாட்கள் தங்கியிருப்பது சாத்தியமல்ல. தலைக்குமேல் வாடகை ஏறியிருக்கும் இந்நாட்களில் நிறுவனங்கள் தரும் ஓய்வூதியம் போதவே போதாது. சொந்த வீடு வசதியில்லாத ஓய்வு பெற்ற மிஷனரிகளுக்கு, ஒரு சில மிஷனரி நிறுவனங்கள் சேர்ந்து, முதியோர் இல்லங்கள் போன்று அடிப்படை வசதிகளுடன் குடியிருப்புக் காலனிகள் அமைத்துத் தரலாம். இங்கு மருத்துவ வசதியும் கட்டாயம் இருக்கவேண்டும். வீடு கட்டுவதற்கான கடன் வசதி அரசில் அல்லது தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு உண்டு; அவர்களது சம்பளத்திலிருந்தே இக்கடன்கள் தவணை முறையில் கழிந்துவிடும். இந்திய மிஷனரி இயக்கங்களில் இவ்வித வசதி கிடையாது. எனவேதான் எனது இந்த ஆலோசனை. இக்குடியிருப்புகளை **மிஷனரிகள் ஓய்வுக்கால இல்லங்கள்** (Missionaries Retirement Homes) என்றழைக்கலாம். அவ்விதமே, விதவைகளான மிஷனரிகளுக்கும் சிறப்பு நலத்திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். எல்லாக் காரியங்களிலும் அவர்களுக்குக் கூடுதல் கவனிப்பும் கரிசனையும் கிடைக்கவேண்டும். விதவைகளின் இதயங்களைத் துள்ளப்பண்ணுவது தேவனுக்குமுன் நறுமணமாயிருக்கும். இதுவே நடைமுறை நீதி வாழ்வு (யோபு 29:13,14).



**(6)** வெள்ளி விழா (25 ஆண்டுகள்) என்றாலும், பொன் விழா (50 ஆண்டுகள்) என்றாலும், வைர விழா (60 அல்லது 75 ஆண்டுகள்) என்றாலும், இவற்றை நமது **நிறுவனர்கள்** (Founders) மற்றும் **அடித்தளங்களைச்** (Foundations) சிறப்பாய் நினைவுகூருவதற்காய்ப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கான தேவ அழைப்பு இதோ தீர்க்கன் ஏசாயா மூலம் தொனிக்கிறது: ஏசா 51:1,2, ''நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுவோரே, எனக்குச் செவிகொடுங்கள்: நீங்கள் எந்தப் பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று தோண்டப்பட்டீர்களோ, அதனை நோக்குங்கள். உங்கள் தந்தை ஆபிரகாமையும், உங்களைப் பெற்றெடுத்த சாராளையும் நினைத்துப்பாருங்கள்; தனியாய் இருந்த அவனை அழைத்தேன்; அவனை ஆசீர்வதித்துப் பெரும் திரளாக்கினேன்.'' தியாகம் நிறைந்த கீழ்ப்படிதலுக்கு ஆபிரகாம் சான்றாய் விளங்கினார். கோபுரங்களை விட்டுக் கூடாரங்களுக்குச் சென்றார் (எபி 11:9,10). நம்மெல்லாருக்கும் ஆசீர்வாதமானார் (ஆதி 12:2). நிறுவனர்களின் ஆதித் தரிசனத்தையும் அவர்களது உயரிய பண்பாடுகளையும் கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் மிஷனரி இயக்கங்கள் பல மறந்துவிட்டாலும், அவை இன்னும் ஓரளவிலாவது ஊழியத்தில் தேவனது ஆசீர்வாதங்களை அனுபவித்துவருகின்றன. **அடித்தளமிட்ட நிறுவனர்களின் அர்ப்பணிப்பையும் தியாகத்தையும்** தேவன் கனம்பண்ணுவதே இதற்குக் காரணம். கட்டுவோர் பலர் இருந்தாலும் அடித்தளமிட்டது அவர்தான் எனக் கொரிந்து சபைக்கு அப்போஸ்தலன் பவுல் நினைவூட்டவேண்டியிருந்தது (1 கொரி 3:10-13). அவர்களுக்குப் போதகர்கள் பலர் இருந்தாலும் அவர்தான் அவர்களுக்குத் தந்தை (4:14-16). கானானுக்குள் நுழைய மோசேக்கு அனுமதி மறுக்கப்பட்டது அவருக்குப் பெரும் அதிர்ச்சியாயிருந்திருக்கும். அவரது தலைமைத்துவத்தை விரும்பாதிருந்தோர் இதைக் குறித்து எவ்வளவோ கிசுகிசுத்திருப்பர். யோசுவாவோ அதனைச் சாதக நோக்குடன் எடுத்துக்கொண்டு மக்களை முன்னடத்திச் சென்றார். ''நான் மோசேயுடன் இருந்தது போலவே உன்னுடனும் இருப்பேன்'' என்று தேவன் அவருக்கு வாக்களித்தார் (யோசு 1:5). ''நான் உன்னுடன் இருப்பேன்'' என்றல்ல, *''மோசேயுடன் இருந்தது போலவே* உன்னுடனும் இருப்

பேன்'' என்றார். அடுத்த வரிசையினருக்குத் தேவனிடமிருந்து இவ்விதம் தனிப்பட்ட முறையில் தெளிவான நிச்சயம் கிடைக்காவிடில், அவர்களால் எரிகோக்களை முறியடிக்கவோ, யோர்தான்களைக் கடக்கவோ முடியாது. ஊழியங்களும் நிறுவனங்களும் நிறுவனர்களின் பிறந்த நாட்களை ''நிறுவனர் தினம்'' (Founder's Day) என்று அனுசரிக்கலாம்; ஊழியரின் அவசரத் தேவைகளுக்காக ''நிறுவனர் நிதி'' (Founder's Fund) என்று சேகரித்துப் பிரித்து வைக்கலாம்; இவையெல்லாம் நிறுவனர்களைக் கனப்படுத்த சில வழிமுறைகள். இப்படிச் செய்தால் சரித்திரச் சங்கிலி அறுபடாதிருக்கும்.

நிறுவனர்கள் உயிரோடு இருந்தால், உயர்மட்டத் தலைவர்களும் மூத்தோர் சிலரும் ஆண்டுக்கொருமுறை அல்லது ஈராண்டுக்கொரு முறை அவர்களோடு உட்கார்ந்து, தேவன் தந்த ஆதித் தரிசனத்திலிருந்தும், திருமறைப்பாணியிலிருந்தும் இப்பொழுது வழிவிலகல்கள் இருக்கின்றனவா என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். யோபு 8:8-10இல் இதோவோர் அறிவுறுத்தல்: ''முன்னோரின் தலைமுறையைக் கேட்டுப் பாரும்; அன்னாரின் தந்தையர் ஆய்ந்ததை அறியும். நேற்றுத் தோன்றிய நாம் ஒன்றும் அறியோம்; இவ்வுலகில் நமது வாழ்நாள் நிழலைப் போன்றது. அவர்களன்றோ உமக்கு உபதேசித்து, உமக்குத் தெரிவித்து, தங்கள் இருதயத்திலிருக்கும் நல்வழிகளை வெளிப்படுத்துவர்?'' அறிவியலும் தொழில்நுட்பமும் புரட்சிகரமாய்ப் பெருத்துள்ள இக்காலத்தில், அவர்கள் சொல்லுபவை பொருத்தமற்றதாய்த் தோன்றலாம். ஆனாலும், தரை மட்டத்திலிருந்து அவ்வூழியத்தைக் கட்டியெழுப்பிய அவர்களது பல்லாண்டு ஞானமும் அனுபவமும் விலையேறப்பெற்றவை. ஐந்தாம் கட்டளையின் கருத்தும் இப்பயிற்சியில் வெளிப்படும். பத்துக் கட்டளைகளில் ''வாக்குத்தத்தமுள்ள'' ஒரே கட்டளை இதுதான்; இதுவே அதற்குக் கீழ்ப்படிகிறவர்களது காலத்தைப் பொன்மயமாக்கும் (எபே 6:2,3; உபா 5:16). இவ்விதம் நிறுவனர்களுடன் உட்கார்ந்து அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது நமது குருட்டுப்புள்ளிகள் (blindspots) நமக்குப் புலப்படும். பின்னர் அதன் அடிப்படையில் நாம் தேவனைத் தேடும்போது, அவர்



நமக்குச் ''சுத்தப் பொன்னும் பிரகாசமான பார்வையும்'' தந்தாசீர்வதிப்பார் (வெளி 3:17,18). அவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளையெல்லாம் அப்படியே பின்பற்றவேண்டுமென்பது கட்டாயமல்ல. ''நான் சொல்வதை நினைத்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருள்வார்'' என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறிய வார்த்தைகளையே உங்களுக்குச் சொல்லி ஆசீர்வதித்து அனுப்பிவைப்பார்கள் (2 தீமோ 2:7). 1996 அக்டோபரில் BYMஇன் வெள்ளி விழாவில் 1200 பேர் கூடியிருந்தபோது, அடுத்த தலைமுறையின் பிரதிநிதிகளாக 10 வாலிபரும் நங்கையரும் என்னிடம் நேர்காணல் ஒன்று நடத்தினர். *''நாம் செய்வதைச் செய்வதேன்?'' (Why we do What we do?)* என்ற தலைப்பில் அவர்களது கேள்விகளும் எனது பதில்களும் *ஆசீர்வாதம்* பத்திரிகையின் 1996 டிசம்பர் மாத இதழில் வெளிவந்தன. மிஷனரி நிறுவனங்களின் ஊழியர் நடுவிலும் ஆதரவாளர் நடுவிலும் பிளவுகள் ஏற்படுவதற்கு ஒரு காரணம் நிறுவனர்களின் மனப்பான்மையை அடுத்த வரிசையினர் பிடித்துக்கொள்ளாததே. யாவரிடமும் சாலொமோன் கடினமாய் வேலை வாங்குபவராயிருந்தாலும், அவரது பெயருக்கேற்ப அவர் காலத்தில் சமாதானம் நிலவியது. ஆனால் அவரது பக்குவம் அவரது மகனுக்கு இல்லாததால் இராஜ்யம் இரண்டாய் உடைந்தது (2 நாளா 9:22-10:19).

ஆண்டாண்டாக எவ்வளவோ சிரமப்பட்டுத் தாங்கள் கற்றுக்கொண்ட அருமையான படிப்பினைகளை நிறுவனர்களும் ஏதாவதொரு வகையில் இன்றையத் தலைவர்களுக்குக் கடத்திவிட முயலவேண்டும். எனது 50 ஆண்டுக்காலப் பொதுவுலகப்பணியில் நான் கற்றுக்கொண்ட 50 அடித்தளப் பாடங்களை பல்வேறு துறைகளிலும் ஊழியங்களிலும் இருக்கும் அடுத்த தலைமுறையினருக்குக் கடத்திவிட வேண்டும் என்ற பாரத்துடன் ''ஐம்பது அடித்தளங்கள் ஐக்கியம்'' (Fifty Foundations Fellowship) என்ற இருநாள் கூடுகையொன்றை 2020 ஆகஸ்டு மாதம் நடத்த எண்ணியிருந்தேன். ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்த காலக்கட்டத்தில் கரோனா தொற்றுநோய்ப் பரவலினால் ஏற்பட்ட பயணக் கட்டுப்பாடு மற்றும் ஊரடங்கு காரணத்தினால் அதனை ரத்து செய்ய

வேண்டியதாயிற்று. ஆனாலும் இப்பாடங்களைப் புத்தக வடிவில் வெளியிட்டு, கூடுகைக்கு வர விண்ணப்பித்தவர்களுக்கு இலவசமாய் அனுப்பி வைப்பதாக அறிவித்துள்ளேன். நிறுவனர்கள் இறந்த பின்னரும், அவர்கள் பேசிய, எழுதிய செய்திகளிலுள்ள **தீர்க்கதரிசனக் கருத்துக்களை** அடுத்த தலைமுறையினர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் (2 பேது 1:13-15). ‘‘நமது பிதாக்களின் தேவன்’’ என்ற பெயர் பழைய ஏற்பாட்டிலும் புதியதிலும் சேர்த்து ஏழு முறை சொல்லப்பட்டிருப்பதின் முக்கியத்துவத்தை நாம் கவனிக்கத் தவறக்கூடாது (உபா 26:7; 1 நாளா 12:17; 2 நாளா 20:6; எஸ்றா 7:27; அப் 3:13; 5:30; 22:14).

**(7)** எந்த நிறுவனத்திலும் அதின் நிறுவனர்களின் காலம் பொதுவாகப் **பொற்காலம்** என்று கருதப்படும். அடுத்து வருபவர்கள் மேற்கட்டிடத்தை ‘‘மரத்தினால்’’ அல்ல, **‘‘பொன்னினால்’’** கட்டிடச் சிரத்தை எடுக்க வேண்டும் (1 கொரி 3:12). தங்கம் ‘‘மங்கியும்’’விடக்கூடாது (புல 4:1). அது மங்கிவிட்டால், திரும்பத் துலக்கப்பட்டு மின்னச் செய்யவேண்டும். வெண்கலத்தில் திருப்தியாகிவிடுவதற்கான அபாயமும் உண்டு. தனது தந்தை சாலொமோன் செய்திருந்த பொற்கேடயங்களை எகிப்தின் அரசன் எடுத்துக்கொண்டு போய்விட்டதால் ரெகொபெயாம் அதற்குப் பதிலாக வெண்கலக் கேடயங்களைச் செய்துகொண்டார் (2 நாளா 12:9,10). கிட்டத்தட்ட தங்கம் போன்ற ஒருவித மஞ்சள் நிறம் வெண்கலத்திற்கும் உண்டு. எவ்வளவு எளிதாய் வஞ்சிக்கப்பட முடியும் பாருங்கள்! வெள்ளிக் காலம் அல்லது வெண்கலக் காலம் அல்லது இரும்புக் காலத்திற்குச் சரிந்துவிடாதபடிப் பொற்காலமாகவே தொடர நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்! ஒவ்வொரு உலோகத்திற்கும் பயனுண்டு; ஆனால் தங்கம் தங்கம்தான்!

பொன் என்பது **மகிமையைக்** குறிக்கும். உடன்படிக்கைப் பெட்டி பசும்பொன் தகட்டினால் மூடப்பட்டிருந்தது (யாத் 25:11). ஏழு பொன் குத்துவிளக்குகளே ஏழு சபைகளைக் குறிப்பவையாய் நின்றன (வெளி 2:3). பொற்குழாய் வழியே இறங்கிய பொன் நிறமான எண்ணெ



யினாலேயே அபிஷேகம் (சக 4:12-14). பொற்கிண்ணங்களில்தான் பரிசுத்தவான்களின் ஜெபங்கள் (வெளி 5:8; 8:3). மனுமகனின் தலையில் பொற்கிரீடம் (வெளி 14:14). இறைச்செய்திகள் பொற்பழங்களாம் (நீதி 25:11). சோதிக்கப்பட்ட விசுவாசம் பொன்னானது (யோபு 23:10; 1 பேது 1:7). புதிய எருசலேம் சுத்தப் பொன்னாய் இருக்கும் (வெளி 21:18). வீதியே சுத்தப் பொன்தான் (வச 21). நமது ஊழியங்களை விட்டு மகிமை விலகும்போது நாம் செய்வது: (1) சமுதாயத்தில் நமக்கு ஏற்கனவே இருக்கும் ‘‘பெயரை’’ வைத்துத் தம்பட்டம் அடித்துக்கொண்டிருப்போம் (வெளி 3:1); (2) பொருளாதாரச் செழிப்புதான் தேவனது அங்கீகாரத்தின் அடையாளம் என்று திருப்திகொள்வோம் (3:17); (3) ஆவியானவர் செயல்படாதிருப்பதை உணராது நமது கட்டமைப்பை வைத்துக்கொண்டே பணியாற்றிக் கொண்டிருப்போம் (2 தீமோ 3:5); (4) வெற்றிகளும் சாதனைகளும் நமது கண்களைக் குருடாக்கவே, நமது புள்ளி விவரங்களிலேயே பெருமையடித்துக்கொண்டிருப்போம்; (5) மக்களைக் கவர்ந்து நம் பக்கம் வைத்துக்கொள்ளப் பரவசக் காரியங்களைத் தேடுவோம்; (6) பயபக்தியைக் கொண்டுவரச் சடங்காச்சாரங்களை வலியுறுத்துவோம்; (7) நமது கூடுகைகளில் அசாதாரணமானது எதுவும் நிகழ எதிர்பார்க்க மாட்டோம். இக்கபோத்! (1 சாமு 4:21).

## முடிவுரை

மூன்று நாள் அல்லது ஒரு வாரக் கூட்டம் ஒன்று நடத்துவதிலும், பொன் விழா மலர் ஒன்று வெளியிடுவதிலுமே நேரம், பலம், பணம் யாவற்றையும் செலவழிக்காமல், இக்கட்டுரையில் நான் எழுதியுள்ள அறிவுரைகளை நீங்கள் பின்பற்றினால், நாத்தான்வேலுக்கு நமதாண்டவர் கொடுத்த வாக்கு உங்களுடையதாகும்: ‘‘இவைகளிலும் பெரிதானவைகளைக் காண்பாய்!’’ (யோ 1:50ஆ). பிந்தைய ஆலயமானது முந்தையதைவிட அதிக மகிமையுள்ளதாயிருக்கும் (ஆகாய் 2:9). பிந்தைய திராட்சை ரசம் முந்தையதைவிட அதிக ருசியாயிருக்கும் (யோ 2:10). அதிமேன்மையானது இனிதான்! மகிழ்கொண்டாடுங்கள்! Jubilant Jubilee!

# 10

# ஊழியங்களில் பொருளாதார நெருக்கடி

## Financial Crisis in Christian Ministries

பொருளாதார நெருக்கடி என்பது உலகளாவியது. இதனால் பாதிக் கப்படாத நாடு எதுவுமில்லை. தந்தையானவர் என்ற முறையில் தேவன் தமது பிள்ளைகளின் பொருளாதாரத் தேவைகளைப் பார்த்துக்கொள்வார் என்பதால் அளவுக்குமீறிய கவலை தேவையில்லை என்று இறைமக்க ளுக்குத் திருமறை போதிக்கிறது. இதுவே இயேசுவின் நேரடிப் போதனை (மத் 6:25-34). பொருளாதாரத் தேவைகளைக் குறித்த அளவுக்கு மீறிய கவலையானது பணத்தையே நமக்குத் தெய்வமாக்குகிறது (வச 24). அது அஞ்ஞானம் (வச 32அ). தேவனே நமது யேகோவா-யீரே என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்த விசுவாசம் இல்லாமல் வாழ் விலோ ஊழியத்திலோ அவரைப் பிரியப்படுத்த முடியாது. ஆனால் இன்று, குறிப்பாக இந்தியாவில், கிறிஸ்தவ ஊழியங்களின் முக்கிய மானதொரு பிரச்னை **பணப் பற்றாக்குறை** என்றாகிவிட்டது. இதனை நாம் எப்படி அணுகலாம்?

பொருளாதார வளமையைத் தேவனது தயவிரக்கம் என்றும், அது இல்லையேல் அது அவரது கோபம் என்றும் சொல்லிவிட முடியாது. ஓர்



ஆட்டுக்குட்டியைப் பலி செலுத்தக் கொண்டுவருமளவு வசதி மரியன் னைக்கு இல்லாததால் அவர்கள் ஒரு ஜோடிப் புறாக்குஞ்சுகளைத்தான் கொண்டுவந்தார்கள் (லேவி 12:6-8; லூக் 2:22-24). ஆனால் தேவ தூதனோ அவ்வம்மையாரைக் ''கிருபை பெற்றவளே, வாழ்க'' என்று வாழ்த்தினான் (லூக் 1:28). பாலும் தேனும் ஓடும் நாட்டிலேயும் எளிய வர் இருக்கத்தான் செய்தனர் (உபா 15:11-14). வறுமையைச் சாபம் என்று அழைத்தால் வறியவரை உண்டாக்கிய கடவுளையே இகழு கிறோம் (நீதி 17:5அ). அந்த விதவை அவ்வளவு வறுமையிலிருந் தாலும், தனக்கிருந்த இரண்டே காசுகளைக் காணிக்கையாய்ப் போட்டு விடுமளவு அவளுக்கு நிறைய விசுவாசம் இருந்தது (லூக் 21:1-4)! எளியவர் ஏராளமானோரை விசுவாசத்தில் வல்லவர்களாயிருக்கும்படித் தேவன் தெரிந்துகொண்டிருக்கிறார் (யாக் 2:5). எருசலேமிலிருந்த எத்தனையோ ''பரிசுத்தவான்கள்'' ஏழ்மையில் வாடினர் (ரோ 15:26). முதல் நூற்றாண்டுப் புதிய ஏற்பாட்டுச் சபையில் தங்க மோதிரம் அணிந் திருந்தோரும் இருந்தனர்; கந்தையுடைதான் அணிந்திருந்தோரும் இருந்தனர் (யாக் 2:2). அப்போஸ்தலன் பவுலும் அவரது குழுவினரும் தங்களது மிஷனரிப் பயணங்களில் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கத்தான் செய்தனர் (பிலி 4:15,16; 2 கொரி 6:10; 11:27).

அதே வேளையில், கிறிஸ்தவ ஊழிய நிறுவனங்களிலுள்ள பணப் பற்றாக்குறையைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. சில சமயங்களில் ஓடை வற்றிப்போக ஆண்டவர் அனுமதிக்கிறார் என்பது உண்மைதான் (1 இரா 17:7). ஆனாலும், நிறுவனங்களாய் இயங்கும் ஊழியங்களின் பொருளாதாரம் எத்தனையோ தனி நபர்களையும் குடும் பங்களையும் பாதிக்குமாதலால் இதனைக் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும். விலைவாசி உயர்வையும் பண வீக்கத்தையும் மட்டுமே காரணம் காட்டிக்கொண்டிருக்கக்கூடாது.

1971 முதல் 30 ஆண்டுகளுக்குமேல் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) முதல் தலைவனாய் (CEO) பணியாற்றும் பாக் கியமும் பொறுப்பும் எனக்குக் கிடைத்தன. ஆழ்ந்த அர்ப்பணிப்பும்

மிகுந்த திறமையுமுள்ள உடன் தலைவரும் உதவிப் பணியாளரும் எனக்கு இருந்தும், பணக்காரியங்களை நிர்வகிப்பதில் முடிவான தார் மீகப் பொறுப்பு என்மீதே இருந்தது. இறையருளால் பயணம் சுமூக மாகவே இருந்தது. பைபிளிலிருந்தும், அனுபவ வாயிலாகவும், பிற ஊழியங்களிலிருந்தும் நான் கற்றுக்கொண்டவற்றை இங்கு பகிர்ந்து கொள்கிறேன். பண நெருக்கடிக்கான காரணங்களில் **தவிர்க்கக்கூடிய வற்றை** இக்கட்டுரையில் சுட்டிக்காட்டுகிறேன்.

### 1. தரிசனத்தில் தடமாற்றம் (Deviation in Vision)

கிறிஸ்துவின் திருவுடலாம் சபையிலுள்ள ''வரங்களில் பல வகை உண்டு; ஊழியங்களில் பல வகை உண்டு; செயல்பாடுகளில் பல வகை உண்டு'' (1 கொரி 12:4-6). ஒவ்வொரு அவயவத்திற்கும் குறிப்பான செயல்பாடு நியமிக்கப்பட்டிருக்கிறது. சிறுநீரகங்கள் போல இருதயம் செயல்பட முயலக்கூடாது. கால்கள் போல கரங்கள் செயல்பட முயலக்கூடாது. மறைவான செயல்பாடுகளில் திருப்திகொள்ளாது உள் ளுறுப்புகள் வெளியுறுப்புகளைப்போலச் செயல்பட ஆசைப்படக் கூடாது. தேவன் அவர்களுக்கு ஆதியில் தந்த தரிசன அழைப்பில் ஒவ்வொரு ஊழியனும் ஊழியமும் நிலைத்திருக்கவேண்டும். கூடுதல் பிரபலமாகவேண்டுமென்று எழுப்புதல் ஊழியர் சுவிசேஷகராய் மாறிவிடக்கூடாது. எழுப்புதல் ஊழியர் பிரதானமாக விசுவாசிகளுக்குப் பணியாற்றுபவர்கள்; சுவிசேஷகரோ அவிசுவாசிகளுக்குப் பறை சாற்றுகிறவர்கள் (எ.கா. 1 கொரி 14:22).

குறிப்பான நமது அழைப்புக்குள் தரித்திருந்து செயல்பட்டால்தான் அதற்குத் தேவையான பலத்தையும் பணத்தையும் ஆண்டவர் தருவார். சபை மேய்ப்பராய் அழைக்கப்பட்ட பலர் அமெரிக்க டாலருக்குத் தங்கள் தரிசனத்தை விற்றுவிட்டு அனாதை இல்லங்களின் மேற்பார்வை யாளரானார்கள். இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் இவ்வூழியர்களை அனாதைகளாய் விட்டுவிட்டபோதோ இவர்கள் சிக்கலில் மாட்டிக் கொண்டனர். தடமாற்றத்தைத் திருத்தினால் தடுமாற்றம் தீரும்.



நிறுவிய தலைவர்களின் காலத்திற்குப் பின்னர்தான் ஊழியங்களில் தரிசன வழிவிலகல் பொதுவாக ஏற்படுகிறது. எனவேதான் நமது வேர்களை அடிக்கடி நாம் நினைவுபடுத்திக்கொள்வது அவசியம். இதோ ஓர் இறையழைப்பு: ஏசா 51:1,2, ''நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்: நீங்கள் எந்தப் பாறை யினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று தோண்டப் பட்டீர்களோ, அதை நோக்குங்கள். உங்கள் தந்தை ஆபிரகாமையும் உங்களைப் பெற்றெடுத்த சாராளையும் நினைத்துப் பாருங்கள்; தனிய னாய் இருந்த அவரை அழைத்தேன்; அவருக்கு ஆசீர்வாதம் வழங்கிப் பெரும் திரளாக்கினேன்.''

### 2. பேராசையினால் விரிவாக்கம் (Overambitious Expansion)

தேவன் தந்த தரிசனத்திற்குள் செயல்படும்போதும் தங்களது ஊழிய விரிவாக்கம் குறித்து நிறுவனங்கள் கவனமாயிருக்கவேண்டும். ''கர்த்த ருடைய பணியில் எப்பொழுதும் பெருகிக்கொண்டிருக்கவேண்டும்'' என்பது நம் ஒவ்வொருவரைக் குறித்தும் தேவ சித்தம் என்பது உண் மைதான் (1 கொரி 15:58). இதோ, கடவுள் தரும் அழைப்பு: ஏசா 54:2, ''உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு; உன் குடியிருப்புகளின் தொங்குதிரைகளைப் பரப்பிவிடு; உன் கயிறுகளைத் தாராளமாய் **நீட்டி விடு**; அத்துடன் உன் முளைகளை **உறுதிப்படுத்து**.'' வேறு வார்த் தைகளில் சொன்னால், எந்த அளவு உறுதிப்படுத்த முடிகிறதோ அந்த அளவுதான் நீட்டவேண்டும். இங்குதான் கிறிஸ்தவ நிறுவனங்கள் பல தவறுகின்றன.

இறைப்பணி என்றால் இறையரசைக் ''கட்டுதல்'' (building) ஆகும்; அதே வேளையில் இருட்டரசுக்கு எதிராகப் ''போரிடுதல்'' (battling) ஆகும். செலவையும் நமது பலத்தையும் முன்கூட்டியே கணிப்பது இவையிரண்டிற்கும் கட்டாயம் (லூக் 14:28-32). என்னைப் பொருத்த மட்டில், தலா 250 மிஷனரிகள் கொண்ட நான்கு நிறுவனங்களே 1000 மிஷனரிகள் கொண்ட ஒரே நிறுவனத்தைவிட மேல். ஊழியரை விசாரித்துக் கவனிப்பதை மேம்படுத்துவதும், மிஞ்சியப் பொருளாதாரத்

தேவைகளைத் தவிர்ப்பதுமன்றி, புதிதாய்ச் சில தலைவர்கள் உருவாகவும் இது வழி வகுக்கும். நிறுவிய தலைவர்களுக்கிருந்த கவர்ச்சி அடுத்த வரிசைத் தலைவர்களுக்கும் இருப்பதரிது. முதல் தலைவர்கள்போல் கிறிஸ்தவர்களுக்குச் சவால் விட்டுப் பணம் சேகரிக்க இவர்களால் முடிவதில்லை.

ஒரே மிஷனரி நிறுவனம் இந்தியாவிலுள்ள 212 பழங்குடி இனத்தவரையும் சந்தித்துவிடவேண்டும் என்றோ, இந்நாட்டின் 29 மாநிலங்களையும் நற்செய்திமயமாக்கிவிடவேண்டும் என்றோ தேவன் எதிர்பார்ப்பதில்லை. இந்திய இயக்கங்கள் அத்தனையும் இந்திய மாநிலங்கள் அத்தனையிலும் பணிக்களம் அமைக்க முயலுவதைவிட ஒவ்வொரு இயக்கமும் ஓரிரு மாநிலங்களைத் தெரிந்தெடுத்து அங்குள்ள மக்களுக்குத் தீவிர நற்செய்திப்பணியாற்றி அவர்களை ஆசீர்வதிக்கலாமே. இப்படிச் செய்யவேண்டுமானால் நமது தந்தையாம் ஆபிரகாமுக்கிருந்த பரந்த இதயமும் பலமான விசுவாசமும் தேவை. அவர் லோத்துவிடம் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''நாம் சகோதரர் ... நீ இடப்பக்கம் சென்றால் நான் வலப்பக்கம் செல்வேன்; நீ வலப்பக்கம் சென்றால் நான் இடப்பக்கம் செல்வேன்'' (ஆதி 13:8,9). திருமுழுக்கு பெறுவோரின் எண்ணிக்கை குறித்து ஒரு போட்டி எழ வாய்ப்புண்டாகிவிடக்கூடாதென்று யூதேயாவை விட்டு இயேசு கலிலேயாவுக்கு நகர்ந்தார் அன்றோ? (யோ 3:26; 4:1-3).

### 3. புல் போடாது பால் கறப்பது (Milking without Feeding)

நம்மைப்போலவே அப்போஸ்தலருக்குத் தங்களது ஊழியங்களுக்கான பணத்தேவை அதிகமாகவே இருந்தது. அவர்களுக்கு வறுமையிலும் வாழத் தெரிந்திருந்தது, வளமையிலும் வாழத் தெரிந்திருந்தது; வயிறார உண்ணவோ பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ, எதிலும் வாழ அவர்கள் பயிற்சி பெற்றிருந்தனர் (பிலி 4:12). ''என்னைப் பலப்படுத்தும் கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குத் திறனுண்டு'' என்று இந்த அனுபவத்தைத்தான் பவுல் சுட்டிக்காட்டினார் (வச 13). (இச்சூழமைவில் யார்தான் இவ்வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்கள் என்பது எனது கேள்வி!)



பண வரத்து கூடுவதோ குறைவதோ எவ்விதத்திலும் அப்போஸ்தலரது ஊழியத்தைப் பாதிக்கவில்லை. நடபடிகளிலும் நிருபங்களிலும் நாம் வாசிப்பவற்றிலிருந்து இது தெளிவு. இதன் இரகசியம் என்னவெனில், ஒரு புனிதமான தத்துவத்தின் அடிப்படையில் அவர்கள் செயல்பட்டார்கள். அது என்னவென்றால்: அவர்கள் மக்களுக்கு ஆன்மீக நன்மைகளை விதைத்து அவர்களிடமிருந்து பொருளாதார நன்மைகளை அறுவடை செய்தார்கள் (1 கொரி 9:11). இதை அவர்கள் ''நியாயமான உரிமை'' என்றழைத்தனர் (வச 12). அப்போஸ்தலர் எந்தச் சபைக்குச் சென்றாலும் அங்குள்ளவர்களிடமிருந்து எதையாவது ''பெற்றுக்கொள்ளவேண்டும்'' என்பதைவிட அவர்களுக்கு எதையாவது ''கொடுத்துவிடவேண்டும்'' என்றே கரிசனையாயிருந்தார்கள். இக்குறிப்பை வலியுறுத்தும் சில வேத வசனங்கள் இதோ —

ரோம் நகர்ச் சபைக்கு எழுதியது: ''நீங்கள் திடப்படுவதற்காய்ச் சில ஆன்மீக வரங்களை உங்களுக்கு வழங்க விரும்புகிறேன்'' (ரோ 1:10).

ரோம் நகர்ச் சபைக்கு மறுபடியும் எழுதியது: ''நான் உங்களிடம் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்துடன் வருவேன் என்று அறிந்திருக்கிறேன்'' (ரோ 15:29).

கொரிந்து சபைக்கு எழுதியது: ''நான் உங்களுடையதை அல்ல, உங்களையே நாடி உங்களிடம் வருகிறேன். பெற்றோருக்குப் பிள்ளைகள் அல்ல, பெற்றோரே பிள்ளைகளுக்குச் செல்வம் சேமித்து வைக்க வேண்டும். உங்களுக்காய் எனக்குள்ளவற்றையும், ஏன் என்னையுமே, மனமுவந்து அளித்திடுவேன்'' (2 கொரி 12:14,15).

சபைகளுக்குச் செல்லும்போது அங்குள்ள அங்கத்தினரை ஆன்மீக ரீதியில் ஆசீர்வதிப்பதே தங்கள் முதன்மையான நோக்கம் என்று மிஷனரித் தலைவர்கள் மற்றும் நற்செய்தியாளர்களில் எத்தனை பேர் சொல்ல முடியும்? தங்களது ஊழிய நிறுவனங்களை முன்னேற்றுவதில் அல்லவோ குறியாயிருக்கிறார்கள்? நிலைமை இப்படியிருக்கும்போது வந்துபோகும் பிரசங்கிமாரைச் சந்தேகக் கண்ணோடு ஆயர்கள் பார்ப்பது தவறா என்ன?

ஆசீர்வாத இளைஞர் இயக்கம் 1971 முதல் நடத்திவந்த வருடாந்திர முகாம்களில், நான் முக்கியச் செய்தியாளனாயிருந்தபோது, முகாமி யரைப் பக்திவிருத்தியடையச் செய்யவும் பக்குவப்படுத்தவும் திரு வசனத்தைப் போதிப்பதிலேயே பெரும்பகுதியான நேரம் செலவிடப் பட்டது. மூன்று நாள் முகாம் நடத்தி முடிவில் காணிக்கை எடுக்க மறந்த வேளைகளும் உண்டு! இயக்கத்தின் பத்திரிகையிலும் பணம் கேட்டு எழுதுவது மிக மிகக் குறைவு. இந்த நிலைப்பாட்டைத் தேவன் கனம் பண்ணினார். என்றும் எதுவும் குறைவுபட்டதில்லை. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ''முன்னேற்றப்'' பணியாளர் உண்டு. தாங்கள் சந்திக்கும் சபையினரின் ஆன்மீக வாழ்வை முன்னேற்றுவதிலேயே இவர்கள் கவனம் செலுத்தட்டும். பால் கறக்க அல்ல, தீனி போடச் செல்லுங்கள்! மக்களை ஆசீர்வதியுங்கள், ஆண்டியாக்காதிருங்கள்! பிரசங்கபீடச் செய்திகள், பிரசுரங்கள் மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் மூலம் மக்களை அபரிமிதமாய் ஆசீர்வதியுங்கள். ''சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்'' (2 கொரி 9:6).

### 4. பிறர் செய்வதையே செய்தல் (Duplication of Ministries)

எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முற்படுவது இறைச்சித்தம் அல்ல. செல்லவேண்டிய இடமோ, சந்திக்கப்படவேண்டிய இனமோ, அதற்கு ஆண்டவரது நடத்துதல் நாடவேண்டும். மிஷனரிப்பணியின் இயக்குனர் பரிசுத்த ஆவியானவரே (அப் 13:2-4). இவரது நடத்துதல் ஒவ்வொரு கட்டத்திலும் நாடப்படவேண்டும். கமிட்டிக் கூடுகைகளில் விவாதித்துக்கொண்டேயிருப்பது (discussion) போதாது; முக்கியத் தீர்மானம் ஒவ்வொன்றிற்கும் மேலிருந்து ஆலோசனை (direction) வரவேண்டும். கொர்நேலியுவின் இல்லத்திற்குச் செல்லப் பேதுருவை ஆவியானவர் நடத்தினார் (அப் 10:19,20). ஆசியாவிற்கும் பித்தி னியாவிற்கும் செல்லாதபடிப் பவுலையும் சீலாவையும் ஆவியானவர் தடுத்தார் (16:6,7). தேவன் நம்மை அனுப்புமிடத்திற்கு நாம் செல்லும் போதுதான் நமது தேவைகளை அவர் சந்திப்பார். இயேசு தமது சீடர்களை அனுப்பிவைக்கும்போது, எங்கே போகவேண்டும், எங்கே



போகக்கூடாது என்று அவர்களுக்கு அறிவுறுத்தினார் (மத் 10:5,6). அதைத் தொடர்ந்து அவர்களது பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப் படும் என்று உறுதி கூறினார் (வச 9-11). தேவனது பணியைத் தேவனது வேளையில் தேவனது வழியில் செய்யும் தேவனது மனிதருக்குத் தேவனது ஆதரவு இல்லாது போகாது.

''உலகமெங்கும்'' செல்லவேண்டும் என்பது திருச்சபைக்குப் ''பொதுவான'' கட்டளை. சந்திக்கப்படவேண்டிய மக்கள் கூட்டம் மற்றும் செல்லவேண்டிய பகுதி குறித்துக் ''குறிப்பான'' நடத்துதல் தேவை. பேதுருவை யூதருக்கு அப்போஸ்தலனாகவும், பவுலை யூத ரல்லாதோருக்கு அப்போஸ்தலனாகவும் தேவன் அழைத்தார் (கலா 2:7). அவரவரது அழைப்பின்படி செயல்பட்டால்தான் ஊழியம் கனி நிறைந்த தாயிருக்கும். தங்களுக்குத் தேவன் தந்த ''அளவு'' மற்றும் ''எல்லை'' ஆகியவற்றை மிஞ்சிப்போவதில்லை என்பது மிஷனரி பவுலின் சாட்சி (2 கொரி 10:13,14). பிறரது சாதனைகளைத் தங்களுக்குச் சொந்த மாக்கிக்கொள்ளக்கூடாது என்பதில் அப்போஸ்தலர்கள் உறுதியாயிருந் தார்கள் (வச 15,16). கன்னி நிலங்களே பவுலின் தரிசனம் (ரோ 15:20,21). நினிவேக்குச் செல்லும்படியான இறையழைப்பிற்குக் கீழ்ப்படியாது தர்ஷீசுக்கு விரைந்தால் நமது தேவைகளைத் தேவன் சந்திப்பாரென்று எதிர்பார்ப்பது நியாயமா (யோனா 1:1-3)? மீனை நமக்கு உணவாக்குவதற்குப் பதிலாக நம்மை மீனுக்கு உணவாக்கி விடுவார்!

### 5. செய்தியில் கலப்படம் (Adulteration of the Message)

ஊழியம் வளர்ந்து, பொருளாதாரத் தேவைகள் பெருகும்போது நமக்குமுன் இரு திசைகள் தென்படும்: ஊற்றாகிய தேவனை நோக் குவது அல்லது வாய்க்காலாகிய மக்களிடம் செல்வது. இரண்டாம் திசையையே பெரும்பாலான ஊழிய நிறுவனங்கள் தெரிந்துகொள் கின்றன. நமது பொருளாதாரத் தேவைகள் குறித்துத் தேவன் எவ் வளவாய்க் கரிசனை கொண்டுள்ளார் என்பதை மறந்துவிடுகிறோம். கர்த்தருடைய ஜெபத்தைக் கவனித்துப் பாருங்கள். முதல் மூன்று

வேண்டல்களில் அவர் மிஷனரிப்பணியை வரையறுக்கிறார்: இறைப்பெயர், இறையரசு, இறைச்சித்தம் (லூக் 11:2). மீதமுள்ள நான்கு வேண்டல்களும் நமது தேவைகளையடுத்தவை. இந்த நான்கில் முதலாவது வருவது ''நமது அனுதின ஆகாரம்'' (வச 3). தந்தை எனும் வகையில் தேவனது கரிசனையை ''அப்பம், மீன், முட்டை'' ஆகிய எடுத்துக்காட்டுகள் மூலம் இயேசு எவ்வளவு அழகாய்ச் சித்திரிக்கிறார் பாருங்கள் (வச 11-13)!

ஊற்றாகிய தேவனைச் சாராது வாய்க்காலாகிய மக்களைச் சாரும் போது நமது ஆதரவாளர்களைப் பிரியப்படுத்தி வசப்படுத்த இதையும் அதையும் செய்யத் தொடங்குகிறோம். முதலாவது நாம் செய்வது செய்தியைக் கலப்படமாக்குவது அல்லது உபதேசத்தைச் சாரமற்றதாக்குவது. நமது ஆதரவாளர்களைப் புண்படுத்திவிடக்கூடாதென்று சத்தியத்தைப் பிரசங்கிக்கத் தயங்குகிறோம். இப்பகுதியில் இயேசுவும் அப்போஸ்தலரும் சமரசம் பண்ணவேயில்லை. ஒரு முறை இயேசுவின் போதனையைத் தொடர்ந்து அவரது சீடர் அவரிடம் கேட்டது: ''பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்பதை அறிவீரோ?'' (மத் 15:12). எவ்வளவும் பதறாமல் அவர் எப்படிப் பதிலளித்தார் பாருங்கள்: ''என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும்'' (வச 13). இதே விதமாக மிஷனரி ஊழியத்தலைவர்கள் சொல்லவேண்டியது: ''எங்கள் பரம பிதா எங்களோடு சேர்க்காத ஆதரவாளரெல்லாம் போனால் போகட்டும்!'' அப்போஸ்தலன் பவுலை ஒரு காலத்தில் முழுக்க முழுக்க நேசித்தவர்கள் அவர் சத்தியத்தைப் பிரசங்கித்துவிட்டதால் அவரை முழுக்க முழுக்க வெறுத்தார்கள் (கலா 4: 13-16). அவரோ சத்தியத்தை உள்ளவாறே பிரசங்கித்துவந்தார். ஆதாயத்திற்காய்த் திருவசனத்தைக் கலப்படமாக்குவோர் பவுலின் நாட்களிலிருந்ததுபோலவே இன்றும் பெருகியிருக்கின்றனர் (2 கொரி 2:17). ஊழியங்களுக்குப் பணம் திரட்டுவோருக்கு இச்சோதனை கொடியதாயிருக்கும்.

''தீர்க்கதரிசனமான போதனை'' (prophetic teaching) மற்றும் ''அப்போஸ்தலப் பாணி நற்செய்தியறிவிப்பு'' (apostolic evangelism)



ஆகியவற்றிற்காகவே ஆசீர்வாத இளைஞர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இயக்கத்தின் முக்கியப் பிரசங்கபீடத்தினன் என்ற வகையில், திருமறைப் போதகன் என்ற அழைப்பில், நான் கடினமான தெரிந்தெடுப்பு செய்யவேண்டியதாயிருந்தது. இயக்கத்திற்குப் பிரசங்க பீடத்திலிருந்து பணம் திரட்டும் முக்கியப் பொறுப்பும் என்மீதுதான் இருந்தது! ஆரோக்கிய உபதேசம் போதிப்பது எனக்கிருந்த தவிர்க்க முடியாத பாரம். குழந்தை ஞானஸ்நானம் திருவசன ஆதாரமற்றது என்று நான் சுட்டிக்காட்டினால், ஆங்கிலிக்கன் திருச்சபையிலிருந்த ஆதரவாளர்கள் மனமடிவாகலாம். அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவத்தை நான் வலியுறுத்தினால், குருப்பட்டம் பெற்றோர்-பெறாதோர் (clergy-laity) என்று அதிக வேறுபாடுள்ள சபையினர் எதிர்க்கலாம். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் அவரது வரங்களின் தேவையை நான் அழுத்திச் சொன்னால், பிரதரன் போன்ற சபையினருக்குப் பிடிக்காது. புதிய ஏற்பாட்டில் தசமபாகப் பிரமாணம் எதுவும் கிடையாது என்றும், கர்த்தருடைய பணம் என்று விசுவாசிகள் பிரித்து வைக்கும் தொகையிலிருந்து தங்கள் உள்ளூர்ச் சபையைத் தாங்குவதையடுத்து, தகுதியுள்ள ஊழிய நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கலாம் என்றும் நான் சொன்னால், பெந்தெகொஸ்தேயினர் கொதித்தெழலாம். ஆசீர்வாத இளைஞர் இயக்கம் சபைப்பிரிவு பாகுபாடற்றது; எல்லாச் சபைப் பிரிவுகளிலிருந்தும் அதற்கு ஆதரவாளர்கள் உண்டு. ஆதரவாளர்கள் சேருகிறார்களோ விலகுகிறார்களோ செய்தியிலும் எழுத்திலும் திருவசனத்தை உத்தமமாய்ப் பிரசங்கிப்போம் என்று உறுதிபூண்டோம். மக்கள் ''விரும்புவதை'' அல்ல, அவர்களுக்குத் ''தேவையானதையே'' போதிப்போம் என்று தீர்மானித்தோம் (2 தீமோ 4:3,4). இந்த நிலைப்பாட்டை ஆண்டவர் கனம்பண்ணி எங்களது அனைத்துத் தேவைகளையும் அற்புதமாய்ச் சந்தித்தார். எப்பொழுதும் பன்னிரண்டு அல்லது ஏழு கூடைகள் மீந்தன! பிரியமானவர்களே, உயிர்த்தெழுதலின் காலையில் உங்கள் ஆதரவாளர்களில் எவரும் திடுக்கிடும் தகவல் கேட்க எழுந்திராதபடிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

## 6. பணம் திரட்ட மாம்சீக முறைகள்

(Carnal Fundraising Methods)

மார்க்கத்தை வணிகமயமாக்குவது இயேசுவின் நாட்களிலேயே இருந்தது. விதவைகளின் பணப்பையைக் காலிபண்ண ''நீண்ட ஜெபம்'' பண்ணிய பரிசேயரை அவர் கடிந்துகொண்டார் (மத் 23:14). சிறப்புக் காணிக்கைக்குச் ''சிறப்பு ஜெபம்'' வாக்களிக்கும் இன்றைய நட்சத்திரப் பிரசங்கிமாரின் பழக்கம் போன்றது அது. இதனை முன்னறிந்த ஆண்டவர் நற்செய்திப்பணிக்காய்த் தமது சீடரை அனுப்பிவைத்தபோது சொன்னது: ''இலவசமாய்ப் பெற்றீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்.'' சுகமளிக்கும் வரம் பெற்ற ஊழியர் இதில் கூடுதல் கவனமாயிருக்கவேண்டும் (10:8). தங்கள் ஆண்டவர் கொடுத்த இந்த அறிவுரையை அப்போஸ்தலர் நன்கு உள்வாங்கிக்கொண்டனர். ''எவன்மீது நான் கைகளை வைக்கிறேனோ அவனும் இவ்விதம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் வரத்தை எனக்குத் தாருங்கள்'' என்று அப்போஸ்தலரிடம் மாயவித்தைக்காரனாகிய சீமோன் பணத்தை நீட்டியபோது, பேதுரு அவனை எப்படித் திட்டினார் பாருங்கள்: ''உன் பணம் உன்னோடு நாசமாய்ப் போகட்டும்'' (அப் 8:18-20). அவனது இருதயத்தில் ''துர்க்குணம், கசப்பான நச்சு, பாவக்கட்டு'' ஆகியவை நிறைந்திருப்பதாகச் சீமோனைப் பேதுரு உணர்த்தினார் (வச 21-23).

தங்களது பத்திரிகைகள் மற்றும் சுற்றறிக்கைகளில் வெளியிடும் ஊழிய அறிக்கை குறித்துத் திருச்சங்கங்கள் மிகுந்த கவனமாயிருக்கவேண்டும். நாம் கொடுக்கும் ''தகவல்'' (information) என்னவென்பதைவிட மக்கள் மனதில் நாம் ஏற்படுத்தும் ''தாக்கம்'' (impression) என்ன என்பதுதான் முக்கியம். நமது உள்நோக்கங்களைத் தேவன் அறிந்திருக்கிறார். தனது மகன் சாலொமோனுக்கு இருக்கவேண்டுமெனத் தாவீது விரும்பியது இந்த அறிவே (1 நாளா 28:9). மிகைப்படுத்துதல் தேவனை மகிமைப்படுத்தாது. பொய்யப்பனாகிய சாத்தானுக்கு மகிழ்வூட்டும் பொய் அது. திருமறை எழுத்தர்கள் தாங்கள் கொடுத்த தகவல்களில் எவ்வளவு துல்லியமாயிருந்தனர் என்று பாருங்கள். நாசரேத்தில் இயேசு செய்த ஊழியத்தைக் குறிப்பிடுகையில், ''அவர்களது அவிசுவாசத்தினால் அவர் அங்கு அநேக அற்புதங்கள் செய்யவில்லை'' என்று மத்தேயு எழுதினார் (மத் 13:58). குருடனை இயேசு முதல் தடவை தொட்டபோது அவனுக்குப் பாதிப் பார்வைதான் கிடைத்தது என்றெழுத மாற்கு தயங்கவில்லை (மாற் 8:22-25). கிறிஸ்து இயேசுவின் சரிதையை வரிசைப்படுத்தி எழுதும்போது லூக்கா எவ்வளவு கவனமும் கிரமமுமாய் இருந்தார் என்றறிய அவரது துவக்க வரிகளைப் பாருங்கள் (லூக் 1:1-4). அற்புதமாய்ப் பிடிபட்ட 153 மீன்களை 160 மீன்கள் என்று யோவான் கூட்டிச் சொல்லவில்லை (யோ 21:11). தான் துன்புறுத்தப்பட்டதைப்பற்றிப் பவுல், ''யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்து தரம் அடிபட்டேன்'' என்றெழுதினார் (2 கொரி 11:24). ''ஒன்று குறைய'' எனும் சொற்களை அவர் சேர்த்திராவிட்டால் அவரை யார் குற்றப்படுத்த முடியும்? இதுதான் அறிக்கைகளில் நேர்மை என்பது. மிகைப்படுத்தப்பட்ட அறிக்கைகள் ஒரு சிலரிடமிருந்து கூடுதல் காணிக்கைகளைக் கொண்டுவரலாம். ஆனால் மிகைப்படுத்தலால் கோபப்படும் ஆண்டவர் தவறாது காணிக்கை அனுப்பிவரும் சிலரை நிறுத்திவிடலாமே! கவனம்!

பரிதாபம் நாடிப் பணம் கேட்பது (sympathy appeals) கூடவே கூடாது. இது தேவனை வெளிப்படையாய் அவமானப்படுத்துகிறது. பூவுலகும் அதின் நிறைவும், வெள்ளியும் பொன்னும், மலைகளில் ஆயிரமாயிரமாய்த் திரியும் மிருகங்களும் அவருடையவை எனும் உண்மையை இது மறுதலிக்கிறது (சங் 50:10-12; ஆகாய் 2:8). விக்கிரகத் தெய்வங்கள் மற்றும் தெய்வதைகளின் படங்களைக் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு தெருக்களில் பிச்சையெடுப்போர் நம் நாட்டில் ஏராளம். ஜீவனுள்ள தேவனை அந்த அளவுக்கு இறக்கிவிடாதீர்கள். பணம் வேண்டுமென்று மக்களிடம் பிரசங்கிமார் பிச்சை கேட்கக் கூடாது; காணிக்கை வாங்கிக்கொள்ளுங்களென்று பிரசங்கிமாரை மக்கள் கெஞ்சவேண்டும் (2 கொரி 8:4). மிஷனரிகளையும் களக் கனிகளையும் ஊழிய முன்னேற்றத்திற்கான காட்சிப் பொருட்களாய் முன்நிறுத்தாதீர்கள். அது மட்டரகச் செயல். அஞ்ஞானிகளிலிருந்து

விசுவாசிகளானோரை நமது கூடுகைகளுக்குக் கொண்டுவருவது பிரதானமாகத் ''தேவனை மகிமைப்படுத்தும்படி'' அவர்களைப் ''பலியாக'' ஏறெடுப்பதற்காகவே இருக்கவேண்டும் (ரோ 15:9,15).

ஆட்டைத் தூக்கிக் குட்டியிலும், குட்டியைத் தூக்கி ஆட்டிலும் போடும் பழக்கம் வரவு செலவு அறிக்கையில் கூடாது. கூடுதலா யிருந்தாலும் குறைந்துவிட்டாலும் அதை மக்கள்முன் உண்மையாய்ச் சொல்லுங்கள். மோசே சொன்னதுபோல், ''காணிக்கை போதும், நிறுத் துங்கள்'' என்று மக்களுக்குத் தலைவர்கள் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதாய் எனக்குத் தெரியவில்லை (யாத் 36:6,7). கூடுதல் பணம் அல்ல, கொடுத்தலில் இறைமக்களிடையே எழுப்புதலே இன்றையத் தேவை. திருமறையிலிருந்து கொடுத்தலின் தத்துவங்கள் தெளிவாய் நேரடியாய்ப் பிரசங்கிக்கப்பட்டு, ஆவியின் அருள்மாரிக்காய் மன்றாடும் போதுதான் இவ்வித எழுப்புதல் உருவாகும். பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து தங்கள் நிலபுலன்களைக்கூட மக்கள் விற்றுப் பணத்தை அப்போஸ்தலரது பாதங்களில் வைத்துவிட்டனர் (அப் 2:44,45; 4: 34-37). துங்கனின் மகிமையைக் கண்ட மக்கள் தங்கத்தின்மீதிருந்த தங்கள் பிடிப்பைத் தளர்த்திவிட்டனர். ''ஆண்டவரே, எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?'' (சங் 85:6)

ஏழைச் சிறுவர் சிறுமிகளைப் பராமரித்துவந்த Compassion International எனும் நிறுவனம் இந்தியாவில் செயல்படுவதை இந்திய அரசு தடுத்தாலென்ன? பாரதீய ஜனதா கட்சியின் கை இதில் இருக்கிறது என்று சொல்லாதீர்கள்; தேவனது கரமே இதைச் செய்தது என்பேன் நான் (யோபு 12:9). தலா ஒரு பிள்ளையைப் பராமரிக்கப் பொறுப்பேற்கும் கிறிஸ்தவக் குடும்பங்கள் நமது நாட்டில் தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றன.

### 7. வேறு காரியங்களுக்குச் செலவிடுதல் (Diversion of Funds)

பத்திரிகையிலோ கூடுகையிலோ ஒரு கிறிஸ்தவ நிறுவனம் தனது ஒரு குறிப்பிட்ட தேவையை அறிவிக்கும்போது, வாசகர்கள் அல்லது



கேட்டவர்கள் அதைக் குறித்து ஜெபிக்கிறார்கள்; தங்கள் குடும்பத் தினரோடும் அதைப் பகிர்ந்துகொண்டு சிந்திக்கிறார்கள். தேவன் அவர்களைப் பாரப்படுத்துகிறார்; அவர்கள் ஒரு தொகையைக் காணிக் கையாய் அனுப்பிவைக்கிறார்கள். எதற்காக அப்பணம் கொடுக்கப் பட்டதோ அதற்கென்றே செலவழிக்கத் தேவனுக்கும் கொடுத்தவர் களுக்கும் முன்பாக நிறுவனத்திற்குத் தார்மீகப் பொறுப்புண்டு. வேறு காரியங்களுக்கு இதனைச் செலவிட முடியாது. வேறு காரியங்களுக்கு இதனைச் செலவிட்டால், கொடுத்தவர்களை அகத்தூண்டிய தேவனை நாம் கனப்படுத்தவில்லையே. வேறு காரியங்களுக்குச் செலவிடும் பழக்கம் மிஷனரி இயக்கங்களிலும் சுவிசேஷ ஊழிய நிறுவனங்களிலும் அதிகரித்து வருகிறது. தேவனுக்குப் பிரியமில்லாத இக்காரியம் கொடுத் தவர்களைத் தூண்டிய பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது. இது உக்கிராணத்துவத்தில் உத்தமமின்மை, உண்மையின்மை. இப்படிச் செய்துகொண்டிருந்தால் மக்கள்முன் நாம் அடுத்தடுத்து வைக்கும் தேவைகளைத் தேவன் கனம்பண்ணமாட்டார்.

தானதர்மக் காரியங்களுக்காய் மக்கள்முன் நாம் வைக்கும் தேவை களை எளியவர்களின் தேவன் வெகுவாய்க் கனம்பண்ணிக் கொடுக் கும்படி மக்களை உந்தித்தள்ளுகிறார். தானதர்மத்திற்காய்ச் சேகரிக் கப்பட்ட காணிக்கையை, எவ்வளவுதான் நியாயமானதாயிருந்தாலும், வேறு காரியங்களுக்காய்ச் செலவிடுவது இரக்கங்களின் பிதாவை அவமதிப்பதாகும். பொதுக் காணிக்கையிலிருந்து தானதர்மக் காரியங் களுக்குப் பணம் எடுக்கலாம்; தானதர்மக் காணிக்கைகளை வேறு செலவினங்களுக்காய்த் திருடக்கூடாது. மிகுந்த உணர்வுடன் அப் போஸ்தலர் இக்காரியத்தைக் கையாண்டனர். கொடிய பஞ்சத்தில் வாடிக்கொண்டிருந்த விசுவாசிகளுக்காய் அப்போஸ்தலர் ''மிகுதியான தர்மப்பணம்'' சேகரித்தனர் (2 கொரி 8:20). இக்காரியத்தில் அவர்கள் கூறும் சாட்சியைக் கேளுங்கள்: ''இந்தப் பெருந்தொகையைக் கை யாளும் முறைபற்றி எங்கள்மீது எவரும் குறைகூறாவண்ணம் கவன மாயிருக்கிறோம். ஆண்டவருக்கு முன்னிலையில் மட்டுமல்ல, மனிதர் முன்னிலையிலும் கண்ணியத்தைக் கடைப்பிடிப்பதே எங்கள் நோக்

கம்'' (வச 20,21). வேறு காரியங்களுக்காய்ச் செலவிடப்பட்ட தர்மப் பணத்தை வட்டியோடு அந்தக் கணக்கில் திருப்பிச் சேர்த்துவிடும்படி நிறுவனங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். ஏழைகளின் தேவனது முகம் திரும்பவும் மலரட்டும்.

தானதர்மத் திட்டம் ஒன்றிற்குத் தேவைக்கும் மிஞ்சிப் பணம் வந்துவிட்டால், ஏழை எளியவர்க்குச் செலவழிக்கும்படிப் பற்றாக் குறையிலிருக்கும் வேறொரு உடன் ஊழிய நிறுவனத்திற்குக் கொடுத்து விடுங்கள். கூடாதா? இது ஒரு திருமறைத் தத்துவம். எடுத்துக்காட்டாக, கொரிந்தியக் கிறிஸ்தோருக்குப் பவுலடியார் எழுதியதைக் கவனியுங்கள்: ''மற்றவர்களின் சுமையைத் தணிப்பதற்காக நீங்கள் துன்புறவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக, எல்லாரும் சமநிலையில் இருக்கவேண்டும் என்றே சொல்கிறோம். இப்பொழுது உங்களிடம் மிகுதியாயிருக்கிறது; அவர்களது குறையை நீக்குங்கள். அவ்வாறே அவர்களிடம் மிகுதியாக இருக்கும்போது உங்கள் குறையை நீக்கு வார்கள். இவ்வாறு உங்களிடையே சமநிலை ஏற்படும்'' (2 கொரி 8:13,14). இத்தத்துவத்தை நிலைநாட்ட பழைய ஏற்பாட்டில் மன்னா சேகரித்த எடுத்துக்காட்டைப் பவுல் சுட்டிக்காட்டுகிறார் (வச 15; யாத் 16:18). இதைத்தான் இயக்கங்களிடையே ''செயல்பாட்டுறவு'' (networking) என்பேன். இல்லையேல் இது மாநாடுகளில் பேசப்படும் வறட்டு வார்த்தைதான்.

முடிந்த வேளைகளிலெல்லாம், முடிந்த வகைகளிலெல்லாம், கிறிஸ் தவ ஊழியச் சங்கங்கள் தங்களது பொருளாதார ஆசீர்வாதங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்ளவேண்டும். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் நான் தலைமைப் பொறுப்பில் இருந்தபோது ஒரு திட்டம் வகுத்தேன். அது என்னவெனில், இயக்கத்தில் முழுநேர ஊழியர் தங் களுக்குக் கிடைக்கும் மாதாந்திர உதவித்தொகையிலிருந்து கர்த்த ருக்கென்று எடுத்துவைக்கும் பணத்தில் ஒரு பகுதியை மொத்தமாகச் சேர்த்து அதிலிருந்து ஒரு தொகையை மற்ற நிறுவனங்களிலுள்ள ஊழியர் நலனுக்காய் அனுப்பிவைப்பது. அவ்விதம் காசோலையை



அனுப்பும்போது அத்துடன் வைக்கப்படும் கடிதத்தில் ஒரு வரி: ''ஒரே ஆண்டவரை ஒரே உடலாய் நாம் சேவிக்கிறோம் என்று சொல்லவே இச்செயல்!'' மிஷனரிக் கன்வென்ஷன்களில் *''மிஷனரிப்பணிக்குக் கொடுத்தல்''* எனும் எனது செய்தியை அடுத்து மக்களது ஆதரவுக்குத் தகுதியான சில இயக்கங்களைப் பட்டியலிடுவேன். முதலாவது FMPB, அடுத்து IEM, இப்படி வரிசைப்படுத்துவேன்; நான் தலைமை தாங்கி நடத்திவந்த BYMஇன் பெயரை அதற்கு அடுத்துதான் சொல்வேன்!

## 8. பிரம்மாண்ட கட்டிடங்களில் பண முடக்கம்

(Investment in Mega-structures)

பிரம்மாண்ட கட்டிடங்கள் கட்டவேண்டுமென்று கிறிஸ்தவத்தில் எழுந்துள்ள ஆர்வம் கவலையளிக்கிறது. பாபேலின் ஆவி திரும்ப வருகிறதோ என்று அஞ்சுகிறேன். சரித்திரத்தில் நெடுகவே பார்த்தால், பிரம்மாண்ட கட்டிடங்கள் தேவனது புன்முறுவலை ஈர்த்ததாய்த் தெரிய வில்லை. தமக்கென்று ஓர் ஆலயம் கட்டப்படவேண்டுமென்பது தேவ னது பூரண சித்தமல்ல (அப் 7:46-50). சீடர்கள் இயேசுவுக்குக் காட்டிய கட்டிடங்களைப் பார்த்து இயேசு அசந்துவிடவில்லை (மாற் 13:1,2). ஏராளம் ஜனமும் பணமும் சேர்ந்துகொண்டிருந்தபோதும் ஆராதிக்கக் கூடிவர ஆதிச்சபையினர் பெரிய கட்டிடங்களைக் கட்டியதாக நடபடி களில் நமக்குத் தகவல் இல்லை. இப்படிச் சொல்வதால், நமக்கு ஆலயக் கட்டிடங்களே தேவையில்லை என்று பொருள்படாது. ஆனால் பிரம் மாண்ட கட்டிடங்களில் பணத்தை முடக்குவது அநேகச் சுவிசேஷ ஊழியங்களையும் மிஷனரி நிறுவனங்களையும் சிக்கலில் மாட்டி விட்டது. சந்திக்கப்படாதோரைச் சந்திக்கவும், மந்தைக்கு வெளியி லிருக்கும் ஆடுகளை உள்ளே கொண்டுவரவும் நேரடியாகச் செல வழிக்கப்படவேண்டிய பணத்தைப் பிரபல ஊழியரது கட்டிடத் திட் டங்கள் உறிஞ்சிக் குடித்துவிட்டன. மந்தையில் சேரா ஆடுகளுக்காய் ''நம்மிடம் ஜெபிக்கக் கேட்கும்'' மிஷனரி இயக்கங்களைவிட ''நமக் காய் ஜெபிக்க வாக்களிக்கும்'' பிரசங்கிமாருக்குத்தான் நாம் பணத்தை அள்ளிக் கொட்டுகிறோம். உள்ளே பத்திரமாயிருக்கும் 99 ஆடுகளை

விடத் தொலைந்துபோன ஓர் ஆட்டின்மீதே அதிகக் கரிசனை காட்டும் நல்ல மேய்ப்பருக்குமுன் இது அநீதியான செயல் (லூக் 15:4-7). *''தேவன்-என்னிடம்-சொன்னார்''* எனும் சில பிரசங்கிமாரது பிதற்ற லுக்கு உத்தமக் கிறிஸ்தவர் பலரும் பலியாகிவிட்டனர்.

இவை போன்ற நாட்களில், இது போன்ற நாட்டில், ஒவ்வொன்றிலும் 1000 பேர் உட்காரக்கூடிய ஐந்து அரங்கங்களே 5000 பேர் அமரக்கூடிய ஒரே அரங்கத்தைவிட மேல். ஒரே கட்டிடத்தை இடித்துத் தள்ளுவதை விட ஐந்து கட்டிடங்களைத் தரைமட்டமாக்குவது கிறிஸ்தவத்திற்கு எதிரான சக்திகளுக்குக் கடினம். இரண்டாவது, இன்னும் நான்கு பகுதி களில் நற்செய்தியின் தாக்கத்தை ஏற்படுத்தலாம் (அப் 2:46,47). மூன்றாம் நன்மை இன்னும் மேலானது: நான்கு புதிய தலைவர்கள் எழுவர்! இன்னொரு காரியம்: விசுவாசிகளை விசாரித்துக் கவனிப்பதும் மேம்படும் (யோ 10:14; நீதி 27:23). நூறு ஆடுகளுள்ள ஒரு மந்தை யிலிருந்து ஓர் ஆடு காணாமற்போனதை அறிவதைவிட ஆயிரக் கணக்கான ஆடுகளுள்ள மந்தையிலிருந்து ஓர் ஆடு காணாமற்போன தென்று அறிவது கடினம் (லூக் 15:4). தொலைவிட மிஷனரிப் பணிக் களங்களிலுள்ள சில ஆராதனைக் கூடங்களுக்குச் சரியான கூரையே இல்லாதிருக்கும்போது கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி ஆலயக் கோபுரங்கள் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம். இவ்விதப் புத்தி மாறாட்டம் நமக்கு எப்படி வந்தது? இயேசு கிறிஸ்துவினால் உலகம் நமக்கும், நாம் உலகத்திற்கும் சிலுவையிலறையப்பட்டுள்ள செஞ் சிலுவையே நமது அந்தஸ்திற்கு அடையாளமாயிருக்கட்டும் (கலா 6:14). ''நம்மைக் கொன்றது செங்கற்கள்தான்'' என்றெழுதுகிறார் ஒரு திருச்சபைச் சரித்திராசியர்!

பெரிய வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்தப் பிரசங்கிமாருக்கு முடியவில்லையெனில் அவர்கள் தங்கள் ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் பிச்சையெடுக்கத் தொடங்கிவிடுகிறார்கள். திருவசனக் குறிப்பு ஒன்றுகூட திரையில் வருமுன் வங்கி விபரங்கள் திரும்பத் திரும்ப வருவது என்னே அவலட்சணம்! இது தொண்டா, தொழிலா?



## 9. அரசை ஏமாற்றுதல் (Cheating the Government)

''தசமபாகம்'' (tithes) கொடுப்பது குறித்து நமது சபைகளில் போதனை ஏராளம். அது நன்று. ஆனால் இதைவிட முக்கியத்துவத்தில் சற்றும் குறையாத ''வரி'' (taxes) செலுத்துவது குறித்துப் பேசப்படாதது ஏன்? மார்க்கவாதிகளான பரிசேயரிலும், அரசியல் பேச்சுத் தொடர் பாளர்களான ஏரோதியரிலும் சிலர் தந்திரமான கேள்வியொன்று கேட்டு இயேசுவிடம் வந்தனர்: ''இராயனுக்கு வரி கொடுப்பது நியாயமா, இல்லையா?'' (மாற் 12:13,14). இயேசு உடனே ஒரு நாணயத்தைக் கொண்டுவரச் சொன்னார். இது ஒரு நாள் கூலியான ரோமர் பணம். ''நியாயமில்லை'' என்று இயேசு பதில் கொடுத்தால், அரசியலில் ஈடுபாடுள்ள அந்த ஏரோதியர் அதனைத் தேசத் துரோகம் என்று சொல்லிவிடுவர். ''நியாயம்'' என்று சொன்னால், யூத நாட்டுப்பற்று இல்லாதவர் என்று பரிசேயர் அவரைக் குற்றம் சாட்டுவர். இயேசு கொடுத்த பதில் அரசியல் சார்ந்ததுமல்ல, மார்க்கம் சார்ந்ததுமல்ல; அது ஆன்மீகமானது: ''இராயனுடையதை இராயனுக்கும், இறைவனு டையதை இறைவனுக்கும் செலுத்துங்கள்'' (வச 17). இயேசுவைக் கேள்வி கேட்குமுன் அவரிடம் கூறிய முன்னுரை வார்த்தைகளை மூன்று சுவிசேஷங்களும் கூறுகின்றன: ''போதகரே, நீர் சத்தியமுள்ளவர் ... நீர் தேவனது மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர்'' (மத் 22:16; மாற் 12:14; லூக் 20:21).

ஆம், இதுதான் நம்மெல்லாருக்கும் தேவையான போதனை: ''கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை ... வரித்துறை அதிகாரிகள் தங்கள் பணியை ஆற்றும்போது கடவுளுக்கே ஊழியம் செய்கிறார்கள்'' (ரோ 13:1-7). பரிசேயருக்கும் ஏரோதியருக்கும் இயேசு தந்த பதிலில் இராயன் முதலாவது வருகிறார்! அதின் பொருள் என்ன வெனில், வரி ஏய்ப்பு செய்துவிட்டுத் தசமபாகம் செலுத்தும் எவரும் தேவனுக்குப் பிரியமானவரல்ல. இயேசுவானவர் முறைப்படி வரி செலுத்திவந்தார் (மத் 17:24-27). வருமான வரித்துறைக்குத் தங்களது வரவு செலவு விபரங்களைத் தெரிவிக்கும்போது திருப்பணி நிறு

வனங்கள் உண்மையாயிருக்கவேண்டும்; இச்சத்தியத்தைத் தங்கள் ஆதரவாளர்களுக்கும் நெடுகவே போதித்துவரவேண்டும். கருப்புப் பணத்தைக் காணிக்கையாய்க் கொண்டுவரக்கூடாதென்று மக்களை எச்சரிக்கவேண்டும்; ஏனென்றால் அது சபிக்கப்பட்டது. இப்படியெல்லாம் போதித்து நடந்தால்தான் நமது பொருளாதாரக் காரியங்களில் இறையாசியை எதிர்பார்க்கலாம். பெருமளவில் பணம் திரட்டுவதற்காய் வியாபாரிகளைக் குறிவைக்கும் ஊழியரும் ஊழியங்களும் இச்சத்தியத்தை மறைத்துவிடக்கூடாது. இறையாசியுடன் கூடிய கொஞ்சப் பணம் அது இல்லாத பெருந்தொகைகளைவிட மேல். தணிக்கையாளர்கள் (auditors) எப்படியோ மாற்றிப்போட்டு சரி செய்யலாம்; வரித்துறை அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கலாம்; ஆனால் கர்த்தருடைய கண்களுக்கு மறைவானது எதுவுமில்லை. நமது வரித்துறை அதிகாரிகள் பலர் உயர்குல இந்துக்கள். பல்வேறு கிறிஸ்தவ நிறுவனங்களின் ஓட்டைகள் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். இதனால்தானோ நமக்குக் கிடைக்கும் ஆத்துமாக்களெல்லாம் பெரும்பாலும் பின்தங்கிய ஆதிவாசிப் பின்னணியைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள்? ஆதித் திருச்சபையினரோ சாமானியரான திரள்களைக் கவர்ந்ததோடு சமுதாயத்தின் உயர்மட்டத்தினரிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தினர்: ''தேறிய கலாச்சாரமுள்ள கிரேக்கர், முதன்மையான மகளிர், மதிப்பிற்குரிய கிரேக்க மகளிர், ஆடவர் ... அநேகர்'' (அப் 17:4,12). வரித்துறை அதிகாரிகளை இரட்சிப்புக்குள் நடத்தும் நோக்குடன் இயேசு அவர்கள் பலருடன் நட்பை வளர்த்துக்கொண்டார் (லூக் 5:27; மாற் 2:15-17; லூக் 7:34; மத் 21:31; லூக் 15:1; 18:13,14; 19:2,9).

கிறிஸ்தவ ஊழியர் செலுத்தி முடிக்காத தொகைகள் குறித்து அச்சகத்தார், ஒலி-ஒளிபரப்பு நிறுவத்தினர், கட்டிடம் கட்டுவோர் போன்றோரில் பலர் புலம்புகின்றனர். ஒரு தீர்க்கதரிசியின் விதவைக்குப் பெருக்கல் அற்புதமொன்றை நிகழ்த்திய எலிசா அவளிடம் சொன்னது: ''முதலாவது உனது கடனைத் திரும்பச் செலுத்திவிட்டுப் பின்னர் மீந்ததை வைத்துப் பிழைத்துக்கொள்'' (2 இரா 4:7). பல மாதங்களாக



ஒலிபரப்புக்கான பணத்தைச் செலுத்தாத ஒரு தமிழ் ஊழியரோடு பேசும்படி தூர கிழக்கு வானொலி நிலைய (FEBA) இயக்குநர் ஒரு முறை என்னிடம் கேட்டுக்கொண்டார். அவ்வூழியரை வானொலி நிலைய அலுவலர்கள் நினைவுபடுத்தியபோதெல்லாம், தனக்கு இந்நிலையத்தார் அழுத்தம் கொடுக்கிறார்கள் என்று தனது பத்திரிகையில் எழுதிவந்திருக்கிறார். FEBA நிறுவனத்தினர் வேறென்னதான் செய்ய முடியும்?

## 10. தலைமைத்துவத்தில் குறைபாடுகள்

(Defects in Leadership)

உள்ளூர்ச் சபைகளுக்கோ ஊழிய நிறுவனங்களுக்கோ, ஆன்மீக ஆசிகளையோ பொருளாதார நன்மைகளையோ, தலைவர்கள் வழியாகவே தேவன் வழங்குகிறார். இச்சத்தியம் சங்கீதம் 133இல் வடிவாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆரோனின் ''தலையில்தான்'' தொடங்கிப் பின்னர் அவரது ''அங்கிகளுக்கு'' ஆசீர்வாதம் வழிந்து செல்கிறது (வச 2). மனிதர்களாலான தலைமைத்துவம் பூரணமானதல்ல; ஆனால் அது பூரணம் நோக்கி நடைபோடவேண்டும். சுத்திகரிப்பின் அனுபவத்திற்குப் பின்னரே தனது சகோதரருக்குப் பேதுரு பணியாற்ற முடிந்தது (லூக் 22:31,32). தலைமைத்துவத்தில் சரி செய்ய வேண்டிய முக்கியமான ஆறு குறைபாடுகளை இங்குச் சுருக்கமாய் விளக்குகிறேன் —

*அ) அரசியல் பண்ணுதல் (Politics)*

தலைவர்களைத் தெரிந்தெடுப்பதில் பல கிறிஸ்தவ நிறுவனங்களில் அரசியல் தந்திரங்கள் நுழைந்துள்ளன. மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பது நல்ல விருப்பந்தான்; ஆனால் தலைமைப் பதவியைப் பிடிக்கவேண்டும் என்ற வெறி நன்றல்ல. இந்த வெறியுள்ளவனுக்குத் தலைமைத்துவத் தகுதியே கிடையாது. மோசேயும் எரேமியாவும் தலைமைப் பொறுப்பிற்கு அழைக்கப்பட்டபோது எவ்வளவாய்த் தயங்கினர்! மண்ணுலக மாந்தரிலெல்லாம் மோசே சாந்தகுணமுள்ள

வர்; எப்பொழுதும் நொறுங்கிய இதயத்துடன் இருந்தவர் எரேமியா. திருக்கு முறுக்கு வழியில் நாம் நபர்களைத் தலைவர்களாக்கிவிடலாம்; அதைக் குறித்துத் தேவன் என்ன சொல்லுகிறார் பாருங்கள்: ''அவர்கள் ராஜாக்களை ஏற்படுத்திக்கொண்டார்கள், ஆனாலும் என்னால் அல்ல; அதிபதிகளை வைத்துக்கொண்டார்கள், ஆனாலும் நான் அறியேன்'' (ஓசி 8:4). முன்பெல்லாம் ''திருச்சபை அரசியல்'' (Church Politics) என்றிருந்தது; இப்போது ''திருச்சங்கங்களின் அரசியல்'' (Missions Politics) என்றாகிவிட்டது. துக்கம் தொண்டையடைக்கிறது!

*ஆ) நடத்தைக் கேடு (Character flaw)*

ஆன்மீகத் தலைவர்களுக்குக் குணம்தான் அதிமுக்கியமானது; கவர்ச்சி அடுத்ததுதான். தலைவர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளை 1 தீமோத்தேயு 3:1-13 மற்றும் தீத்து 1:5-11 ஆகிய பகுதிகளில் அப்போஸ்தலன் பவுல் வரிசைப்படுத்துகிறார். இவ்விரண்டு பட்டியல் களிலும் முதலில் சொல்லப்படுவது ''குற்றம் சாட்டப்படாத நிலை.'' அடுத்து இரு காரியங்கள் வலியுறுத்தப்படுகின்றன: ''மண வாழ்வில் உண்மை, பொருளாசையின்மை.'' ''பெண்களையும்'' (wives) ''பொன் னையும்'' (wealth) கூட்டிப் பெருகப்பண்ணக்கூடாது என்பது நியா யப்பிரமாணத்தின்கீழும் அரசர்களுக்கான தெய்வீக நியமனம் (உபா 17:17). நடத்தைக் கேடும், ஊழல் கரங்களுமுள்ள தலைவர்களுக்குச் சரியான நிதானிப்பும், ஆன்மீகப் பகுத்தறிவுக் கூர்மையும் இல்லாது போகும். தேவனது ஆசீர்வாதங்கள் இவர்களால் தடைபடும்; மட்டு மல்ல, ஊழிய ஆதரவாளர்கள் நம்பிக்கை இழப்பர். இவ்விதத் தலைவர் கள் மனந்திரும்பவேண்டும்; இல்லையேல் அகற்றப்பட வேண்டும். ''பாவியாகிய ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்'' (பிர 9:18ஆ; எரே 5:25). ஊழிய நிறுவனங்களில் பாவத்தைக் கண்டுங்காணாமலும் விட்டுவிட்டால், அங்குள்ள ஊழியர் மற்றும் ஊழியத்தாங்கிகள் நடுவில் ''நோவா, தானியேல், யோபு'' போன்ற பக்தர்கள் இருந்தாலும், தேவன் ''அப்பம் எனும் ஆதரவு கோலை'' முறிப்பார் (எசேக் 14:12-14).



*இ) பாரபட்சம் (Partiality)*

நியாயப்பிரமாணத்தின் விளக்கமே உபாகமம் ஆகும் (உபா 1:5). தலைவர்களிடம் காணப்படக்கூடாத பாரபட்சம் குறித்தே இப்புத்த கத்தில் மோசே முதலாவது எச்சரித்தார் (வச 15-17). தனது ஊழியக் காலம் முழுவதும் பாரபட்சமில்லாது செயல்பட்டதே தீர்க்கன் சாமு வேலின் இறுதியான சாட்சி (1 சாமு 12:3). பாரபட்சமின்மையே தாவீதின் ஆளுகையின் மகுடமாயிருந்தது (2 சாமு 8:15). தலைவர்களுக் கெல்லாம் தலைவரான நமது தேவனிடம் பாரபட்சம் கிடையாது (எபே 6:9). விபசாரம் மற்றும் கொலை போலவே பாரபட்சம் தேவனுக்குமுன் கொடிய ''பாவம்'' ஆகும் (யாக் 2:1, 2-4, 9-11). எதையும் பாரபட்சத் துடன் செய்யக்கூடாதென்று மூத்த அப்போஸ்தலன் பவுல் இளைய தலைவனான தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினார் (1 தீமோ 5:21,22). நமது தலைவர்களில் அநேகர் இடவெறி, இனவெறி, உறவு வெறி போன்றவற்றால் ஊழியத்தில் சமநிலை இழந்துள்ளனர். இப்படிப்பட்ட தலைமைத்துவத்தைத் தேவன் அங்கீகரித்து ஆசீர்வதிக்கமாட்டார்.

பல இலட்சங்கள் காணிக்கை கொடுப்போருக்குத் தனிக்கவனம் செலுத்துவதும் சில ஆயிரங்களும் நூறுகளுமே கொடுப்பவர்களைக் கவனியாது விடுவதும் தலைவர்களுக்கு இயல்பாகிவிட்டது. இவ்விதப் பாரபட்சம் ஆதிச்சபையிலும் இருக்கத்தான் செய்தது (யாக் 2:1-4). நாம் எவ்வளவு கொடுக்கிறோம், எவ்வளவு வைத்துக்கொள்கிறோம் என்ப தின் விகிதத்தையே கர்த்தர் கவனிக்கிறார். அன்று செல்வந்தர் போட்ட காணிக்கைகளையும் அந்த ஏழை விதவையின் காணிக்கையையும் இயேசு இவ்விதம்தான் ஒப்பிட்டுப் பேசினார் (மாற் 12:41-44). செல் வாக்குள்ளவர்கள் மற்றும் நிறைய காணிக்கை கொடுப்பவர்கள் பின் னால் மிஷனரிப்பணித் தலைவர்கள் அலைந்தால் எளியவரின் தேவன் அதை அருவருப்பார். செல்வந்தரைவிட எளியவரே அதிகம் நம்பத் தகுந்தவர் என்பதே எனது 48 ஆண்டுப் பொது ஊழியக்காலத்தில் (2018) நான் கண்டறிந்தது. செல்வந்தர்மீது இயேசு கடினமாகவே இருந்ததில் ஆச்சரியமில்லையே. ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கும்

ஒருவரைவிடத் தலா ஆயிரம் ரூபாய் கொடுக்கும் நூறு நபர்களே மேல் என்று அடிக்கடி எனது உடன் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் சொல்லிவந்திருக்கிறேன். ஒரே நபரைவிட நூறு பேர் ஜெபத்துடன் பணியில் ஈடுபாடு கொள்வது சிறந்ததுதானே? பெருந் தொகைகளைக் காணிக்கையாகக் கொடுக்கும் நபர்கள் தந்திரமாய்த் தங்களை ஆட்டிப் படைத்துவிடாதபடித் தலைவர்கள் விழிப்பாயிருக்கவேண்டும். தேவனது கோபத்திற்கு ஆளாகாதிருப்போம்.

*ஈ) அதிகாரத் தோரணை (Authoritarianism)*

மிஷனரி இயக்கங்களிலும் பிற ஊழிய நிறுவனங்களிலுமுள்ள தலைவர்கள் அங்குள்ள ஊழியர்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது. முதலாளி-தொழிலாளி (Employer-Employee) எனும் தத்துவம் ஊழியங்களுக்கு ஒவ்வாதது. தேவனே முதலாளி; நாமெல்லாரும் அவரது உடன் உழைப்பாளிகள் (1 கொரி 3:9). இயேசுவின் சீடரிடம் எத்தனையோ குறைபாடுகள் இருந்தன; அவரோடு எவ்விதத்திலும் அவர்களை ஒப்பிட முடியாது. ஆனாலும் அவர் அவர்களை ''நண்பர்'' என்றழைத்தார் (யோ 15:15). உங்களை வேலைக்காரர் என்ற அழைக்க ''மாட்டேன்'' என்று அவர்களிடம் கூறினார்! தனது மிஷனரி ஊழியக் குழுவின் தலைவராயிருந்த பவுல் தனது உடன் ஊழியர்மீது தந்தை போன்று கரிசனை காட்டினார். அதற்குப் பிரதிபலனாக அவர்களும் அவரை ஒரு தந்தையாய் மதித்தனர் (பிலி 2:22; 1 தெச 2:11). தலைவர்களை நியமிப்பது குறித்துத் தீமோத்தேயுவுக்கு முக்கியமான அறிவுரைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும்போதே, திடீரென அவனது வயிற்றுப் பிரச்னைக்கு நாட்டு மருந்தொன்று சொன்னார் பவுல் (1 தீமோ 5:23)! தனது பொறுப்பிலிருக்கும் ஊழியருக்கு ஒரு ''பணியாளனாய்த்'' தலைவன் செயல்படவேண்டும். இயேசு காட்டிய மாதிரி இதுவே (யோ 13:13-15). பணிவிடைக்காரன் எனும் பாணியில் தலைவர்கள் (servant-leadership) செயல்படும் நிறுவனங்களைத் தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பார். அதிகாரத் தோரணையில் தலைவர்கள் இறங்கும்போது அவர்கள் ஆன்மீக அதிகாரத்தை (spiritual authority) மட்டுமல்ல, ஆண்டவரது அருளாசியையும் இழப்பர்.



*உ) தியாகமின்மை (Lack of sacrifice)*

''நிறைய சம்பாதிக்கும் முழுநேர ஊழியரல்லாதோர் எங்களை ஆளுகிறார்கள்; எங்களது பிரச்னைகளும் வேதனைகளும் அவர்களுக்கு எப்படிப் புரியும்?'' என்பதே சில மிஷனரி நிறுவனங்களிலுள்ள முழுநேர ஊழியரின் இதயக் கதறல். அதே ரூபமெடுத்து அடையாளப்படுத்திக் கொள்ளுதல் (incarnational identification) என்பது இங்கு தவிர்க்க முடியாததால் அவர்கள் கேட்பது நியாயமே (எபி 2:17). C. T. ஸ்டட் தனது திரள் செல்வத்தையும் கிரிக்கெட் மட்டையையும் தூக்கியெறிந்துவிட்டு, World Evangelisation Crusade (WEC) எனும் ஊழியத்தை நிறுவி அதிலுள்ள ஊழியர்களுக்குத் தலைவராய்ச் செயல்பட்டார். பண்டிதர் பில்லி கிரஹாம் அவர்கள் Billy Graham Evangelistic Associationஇலுள்ள (BGEA) உடன் சுவிசேஷகரைப் போலவே சம்பளம் வாங்கிக்கொண்டு அவர்களோடு தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். Campus Crusade for Christ (CCC) எனும் அகிலவுலகப் பணியை நிறுவிய Dr. பில் பிரைட் அவர்கள் CCCயின் எந்த ஊழியனையும் போலவே தனக்குரிய மாதாந்திர உதவித் தொகைக்காய்ப் பணம் சேகரித்தார். இவ்வித உன்னத எடுத்துக்காட்டுகளால் சவால் பெற்று, நான் புகழ்பெற்ற தொழில்நுட்பக் கல்லூரியில் (IIT) முதுநிலைப் பட்டம் பெற்றிருந்தாலும், ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) முழுநேர மற்றும் தன்னார்வத் தொண்டர்களை வழிநடத்த 1975இல் எனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு, 2003இல் ஓய்வு பெறும் வரை எளிய மிஷனரிச் சம்பளத்திலேயே வாழ்க்கை நடத்தினேன். அவ்விதமே, குழந்தை நல மருத்துவரான எனது மனைவி தனது அரசு வேலையை 1975இல் ராஜினாமா செய்துவிட்டுச் சம்பளமே வாங்காது இயக்கத்தில் பணியாற்றினாள். இதைத் தொடர்ந்து சில சகோதரர்கள் சம்பாத்தியம் நிறைந்த வேலைகளை ராஜினாமா செய்துவிட்டு, எளிய வாழ்க்கைக்குத் தங்களை அர்ப்பணித்து, இயக்கத்தின் தலைமைப் பொறுப்புகளில் பங்கேற்றனர். உயர்மட்டத் தலைவர்கள் தங்களது நேரத்தையும் பணத்தையும் மட்டும் ''கொடுத்தால்'' (spare) போதாது; தங்கள் வாழ்க்கையையே ''முதலீடு'' (invest) செய்ய

வேண்டும். இப்படித்தான் பவுல் மற்றும் அவரது உடன் மிஷனரிகளின் தேவைகளைத் தேவன் சந்தித்து நடத்தினார். இராணுவத்தில் சாதாரண சேவகனே பகுதிநேரப் பணியாளனாய் இருக்கக்கூடாதென்று பவுல் போதித்தார் (2 தீமோ 2:4). அப்படியிருக்க, இராணுவத் தளபதி ஒரு பகுதிநேர அல்லது மீதிநேரப் பணியாளராய் (part-timer or spare-timer) இருக்க முடியுமோ? முதிர்ச்சியும் அனுபவமும் உள்ள பெரியவர்கள் ஆலோசகர்களாய் இருக்கலாம்; ஆனால் அவர்கள் முழுநேர ஊழியர்மீது அதிகாரிகளாய், ஆளுநர்களாய் இருக்க முடியாது.

*ஊ) திருச்சபையைப் புறந்தள்ளுதல்* (Neglect of the Church)

சில ஆண்டுகளுக்குமுன் இந்தியாவின் மூத்த மிஷனரித் தலைவராகிய டாக்டர் சாம் கமலேசன் அவர்கள் (1930-2021) என்னிடம் சொன்னதை அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ளுவேன்: ''தம்பி, நமது ஊழிய முயற்சிகள் யாவும் முடிவாகத் திருச்சபையுடன் இணைக்கப்பட வேண்டும்; அப்பொழுதுதான் நமது கனிகள் நிலைத்திருக்கும்.'' திருச்சங்கங்கள் (Para-church organisations) உள்ளூர்ச் சபைகளுக்குப் (Local Churches) பக்கபலமாகத்தான் (supplement) இருக்க வேண்டுமே தவிர அவற்றிற்குப் பதிலானவை (substitute) என்றாகிவிடக்கூடாது. திருச்சபையே கட்டிடம்; திருச்சங்கங்கள் சாரம்தான் (scaffolding). நாம் எடுக்கும் ஒரு தீர்மானம் நமது இயக்கத்திற்கு எப்படி இலாபகரமாயிருக்கும் என்பதைவிடத் திருச்சபைக்கு எவ்விதம் பயனளிக்கும் என்று நமது திட்டமிடு கூடுகைகளில் நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டும். இல்லையேல் இறையரசைக் கட்டுவதற்குப் பதிலாக நமது சொந்த சாம்ராஜ்யங்களையே கட்டியெழுப்பிக் கொண்டிருப்போம். மருத்துவ உதவிப் பணியாளர்கள் (paramedical staff) பிணியாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்வதில்லை; அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கு உதவி செய்வார்கள், அவ்வளவுதான். ரோம், கொரிந்து, எபேசு, பிலிப்பி மற்றும் கலாத்தியா போன்ற இடங்களிலிருந்த சபைகளோடு பவுல் மற்றும் அவரது குழுவினரின் மிஷனரிப்பணி இணைப்பு ஏற்படுத்தியிருந்தது. உள்ளூர்ச் சபைகள்



துடிப்பானவையோ, வெதுவெதுப்பானவையோ, செத்துக்கொண்டிருப்பவையோ, செத்துவிட்டவையோ, கிறிஸ்துவின் கடைசிக் கடிதங்கள் இவைகளுக்கே எழுதியனுப்பப்பட்டன. *''திருச்சங்கங்களுக்காய்த் திருச்சபை அல்ல, திருச்சபைக்காகவே திருச்சங்கங்கள்''* எனும் தத்துவத்தைத் தங்கள் நிறுவனங்களில் புரிதலுடன் தக்கவைத்துக்கொள்வது தலைவர்களது பொறுப்பே. *(சபைகளுக்காய்ச் சங்கங்களா, சங்கங்களுக்காய்ச் சபைகளா?* என்ற 21ஆம் அத்தியாயத்தை *ஊழியரும் மக்களும்* என்ற எனது நூலில் வாசியுங்கள்.) திருச்சபையை இயேசு நேசிக்கிறார்; அதனை மணக்கத் திரும்ப வருகிறார். தேவனது நித்திய திட்டத்திற்கேற்ப நம்மை அமைத்துக்கொள்ளாவிடில் நமது தேவைகளைச் சந்திக்க அவர் கடமைப்பட்டவரல்ல. நிறுவப்பட்ட நோக்கங்கள் நிறைவேறி முடிந்த பின்னரும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஊழிய நிறுவனங்களும் உண்டு. கட்டிட வேலை முடிந்ததும் சாரத்தை அகற்றிவிடுவதுபோல் இவ்வித நிறுவனங்கள் மூடப்படவேண்டும்.

## முடிவுரை

ஊழிய நிறுவனமொன்றில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது, தலைவர்களும் முக்கிய நபர்களும் பணம் திரட்டும் முயற்சியை இன்னும் தீவிரப்படுத்தவேண்டுமென்று நினைப்பது இயல்புதான். ஆனால் நான் இதை முதல் முயற்சியாய்ச் சிபாரிசு செய்யமாட்டேன். இது தற்காலிகமான நிவாரணம் தரலாம். ஆனால் இது ''வானத்தின் மழைத்தண்ணீரைப்'' பெறுவதற்குப் பதிலாகக் ''கீரைத் தோட்டத்திற்குக் காலால் நீர்ப்பாய்ச்சுவது'' போலத்தானிருக்கும் (உபா 11:10,11). மாறாக, தலைவர்கள் ஒரு சில நாட்கள் ஜெபத்திற்காய்க் கூடிவந்து, தடைகளுக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கத் தேவனுக்குமுன் தன்னாய்வு செய்தால், மறுபடியும் ''பெருமழை இரைச்சல்'' கேட்டு வெளிவருவார்கள் (வச 13-15). இக்கட்டுரை இதற்குதவும்.

# 11

# தேவ மனிதரே இன்றையத் தேவை!

The Need of the hour:
Men and Women of God

*இன்றிருக்கும் சபை அன்றிருந்த சபைபோல் இல்லை;*
*இன்றிருக்கும் சபை இருக்கவேண்டியபடியும் இல்லை.*
*சபை இன்றிருக்கும் இடத்திலிருந்து அதனை*
*இருக்கவேண்டிய இடத்திற்குக் கொண்டுவர*
*குணமும் மணமும் நிறைந்த தேவ மனிதர் தேவை!*

தேவனே, உமது மக்களது விடுதலைக்காய் அவர்களுடன்
பாடுபடுவதற்காய் உலக இன்பங்களுக்கு மறுப்பு தெரிவிக்கும்
*இன்னொரு **மோசே*** தாரும்.

தேவனே, தனது பரிசுத்த நிர்ணயங்களில் சமரசம் பண்ணாமல்
அநியாயத்தைப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளும்
*இன்னொரு **யோசேப்பு*** தாரும்.

தேவனே, உமது திருவார்த்தைமீது சாதக விசுவாசம் கொண்டு
உமது வெற்றிப் பிரசன்னத்துடன் எதிரியை வீழ்த்திடும்
*இன்னொரு **யோசுவா*** தாரும்.



தேவனே, காலத்திற்கேற்ற தலைவர்கள் எழும்பும்படி அவர்களை
உற்சாகப்படுத்தும் தீர்க்கதரிசன வார்த்தைகள் பேசும்
*இன்னொரு **தெபோராள்*** தாரும்.

தேவனே, தனது தாழ்வு மன்பான்மையிலிருந்து வெளிவந்து
பயத்தை மிதித்து உமது பலத்தால் முன்செல்லும்
*இன்னொரு **கிதியோன்*** தாரும்.

தேவனே, உமது மக்களை வழிநடத்தும்படி
உமது சத்தம் கேட்க உமக்குமுன் காத்துநிற்கும்
*இன்னொரு **சாமுவேல்*** தாரும்.

தேவனே, தனது கடந்தகாலத் தாழ்வு நிலையையும்
உமது கனிவிரக்கத்தையும் நினைத்து உமது இதயத்திற்கேற்ப நடக்கும்
*இன்னொரு **தாவீது*** தாரும்.

தேவனே, உமது வாரத்தையின்படித் துணிச்சலாய்ச் செயல்பட்டுக்
கள்ளத் தீர்க்கர்களையும் துன்மார்க்க அதிகாரிகளையும் வெட்கப்படுத்தும்
*இன்னொரு **எலியா*** தாரும்.

தேவனே, பக்தியுள்ள தனது முன்னோர்களைப் பின்பற்றிச்
சபையைத் துணிந்து சுத்தப்படுத்திச் சீர்திருத்தும்
*இன்னொரு **யோசியா*** தாரும்.

தேவனே, சரியான இதய ஆயத்தத்துடன் உமது வசனம் உபதேசித்துப்
பின்வாங்கிப்போனோருக்காய்க் கண்ணீர்விடும்
*இன்னொரு **எஸ்றா*** தாரும்.

தேவனே, எதிரிகளின் மிரட்டல்களைக் கவனியாது
தகர்ந்துபோன மதில்களைத் திரும்பக்கட்டும்
*இன்னொரு **நெகேமியா*** தாரும்.

தேவனே, உமது மக்களைக் காப்பாற்றிக் களிப்பாக்கிடத்
தனது உயிரையும் பணயம் வைக்கும்
*இன்னொரு **எஸ்தர்*** தாரும்.

தேவனே, உமது செய்தியை நாடுகளுக்கு அறிவிக்கும்படித்
தனது நாவில் சுத்திகரிப்பும் அபிஷேகமும் பெற்றுக்கொள்ளும்
*இன்னொரு* ***ஏசாயா*** தாரும்.

தேவனே, பின்வாங்கிய திருச்சபைக்காய்ப் புலம்பி மன்றாடிப்
பயமும் தயக்கமுமின்றி உமது நேரடி எச்சரிப்பை அறிவிக்கும்
*இன்னொரு* ***எரேமியா*** தாரும்.

தேவனே, கிறிஸ்தவத்திற்க்கான ஆட்சிகளுக்கு வளைந்துகொடுக்காது,
உம்மீதுள்ள விசுவாசத்தில் உறுதியாய் நிற்கும்
*இன்னொரு* ***தானியேல்*** தாரும்.

தேவனே, கிறிஸ்துவை உயர்த்தும்படி தன்னைத் தாழ்த்திக்கொண்டு,
அவரது வருகைக்கும் தீர்ப்புக்கும் மக்களை ஆயத்தப்படுத்தும்
*இன்னொரு* ***திருமுழுக்கினன் யோவான்*** தாரும்.

தேவனே, சுவிசேஷத்திற்காய் உயிர்விடத் துணிந்து உமது
மகிமையின் தரிசனம் பெற்றுத் துன்புறுத்துவோரையும் ஆசீர்வதிக்கும்
*இன்னொரு* ***ஸ்தேவான்*** தாரும்.

தேவனே, தனது உயிரைத் துச்சமாய் எண்ணி,
எதிரியின் பிடியிலிருக்கும் ஆன்மாக்களை விடுவிக்கச்செல்லும்
*இன்னொரு* ***பவுல்*** தாரும்.

தேவனே, இரட்சிப்பு கிருபையினாலும் விசுவாசத்தினாலும் மட்டுமே
என்ற திருமறைச் சத்தியத்திற்காய்க் குரல்கொடுக்கும்
*இன்னொரு* ***லூத்தர்*** தாரும்.

தேவனே, உலர்ந்த எலும்புகளைச் சேனையாய் எழுப்பிட
உலகை அசைக்கும் எழுப்புதலுக்காய் உழைக்கும்
*இன்னொரு* ***வெஸ்லி*** தாரும்.

தேவனே, மக்களைக் கண்ணீருடன் மனந்திரும்பச் செய்ய
உமது அனலான செய்திகளைப் பிரசங்கிக்கும்
*இன்னொரு* ***ஃபின்னி*** தாரும்.



தேவனே, உமக்காய்ப் பெரிய காரியங்களை முயற்சிக்கும்படி
ஒரு மிஷனரி எழுப்புதல் மூலம் எங்கள் சபைகளுக்குச் சவாலிடும்
*இன்னொரு* ***கேரி*** தாரும்.

தேவனே, கலப்படமற்ற சுவிசேஷத்தின் மூலம்
எங்கள் நகர்களையும் பிராந்தியங்களையும் அசைக்கும்
*இன்னொரு* ***பில்லி கிரஹாம்*** தாரும்.

தேவனே, செயல்படும் விசுவாசம் மூலம் அவதிப்படுவோருக்கு உதவி
கிறிஸ்தவமே தானதர்மம்தான் என உலகிற்குக் காட்டும்
*இன்னொரு* ***அன்னை தெரசா*** தாரும்.

தேவனே, சேவை பெற அல்ல, சேவை செய்யவே
அழைக்கப்பட்டுள்ளோம் என்று தியாகப்பணி மூலம்
எங்களுக்கு நினைவுபடுத்திக்கொண்டேயிருக்க
*இன்னொரு* ***ஐடா ஸ்கடர்*** தாரும்.

ஆம், ஆண்டவரே,
இத்தலைமுறையினரைத் திரும்பவும் உம்மிடம் கொண்டுவர,
அப்போஸ்தலத் தரிசனம், தீர்க்கதரிசனக் கண்ணோட்டம்,
சுவிசேஷகனின் தாகம், மேய்ப்பனின் இருதயம்,
மற்றும் போதகத் தெளிவு கொண்ட
இவ்வித மனிதரை இன்னும் அதிகமாய்த் தந்தருளும்!
இயேசுவின் பெயரால் வேண்டுகிறோம், ஆமென்!

# 12

# பில்லி கிரஹாம்: ஒரு தேவ மனிதன்

Billy Graham: A Man of God

1957ஆம் ஆண்டு பாளையங்கோட்டையில்தான் சுவிசேஷகர் பில்லி கிரஹாம் (1918-2018) பிரசங்கித்ததை முதன்முதலாகக் கேட்டேன். அவர் பிரசங்கித்தது பத்து வயது சிறுவனாயிருந்த எனக்குப் புரியாவிட்டாலும் அவ்வளவு திரளான கூட்டத்தில் இருந்தது பரவச மாயிருந்தது. ஆறடிக்குமேல் உயரமான அந்த அமெரிக்கருக்கு இந்தியர் ஒருவர் மாலையணிவிக்கும்போது அவர் எவ்வளவு குனிந்தார் என்பது இன்னும் நினைவிலிருக்கிறது! 1977இல் அவர் சென்னையில் பிர சங்கித்த போதும் அவரது பிரசங்கம் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டி யது. *Hour of Decision (தீர்மானிக்கும் நேரம்)* என்ற அவரது வானொலிச் செய்திகளை 1960களில் ஒரு கல்லூரி மாணவனாய்த் தவறாது கேட்டு வந்தேன். இந்த தேவ மனிதனுடன் கைகுலுக்கவேண்டும் என்பது எனது நெடுநாள் விருப்பம். 1983இல் ஹாலந்து நாட்டிலுள்ள ஆம்ஸ் டர்டாம் நகரில் நடந்த அகிலவுலகச் சலனச் சுவிசேஷகர் மாநாட்டில் (Amsterdam '83) எனது இவ்விருப்பம் நிறைவேறியது! இந்தியாவிலி ருந்து 200க்கும் சற்றுக் கூடுதலாக இறைப்பணியாளராக நாங்கள் இம் மாநாட்டில் கலந்துகொண்டோம். மறைந்த ஊழியர்களான Dr. பிரகாஷ்



ஏசுவடியான் (1944-2014), சுவிசேஷகர் சாமுவேல் கணேஷ் (1935-2017), பாஸ்டர் பாஸ்கர தாசன் (1929-1994), சுவிசேஷகர் N. ஜீவானந்தம் (1932-2006), மற்றும் சகோதரர் சாது செல்லப்பா (1934-2020) ஆகியோருக்கும் இச்சிலாக்கியம் கிடைத்தது. ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் எனது உடன் ஊழியராயிருந்த மிஷனரி மைக் கல் ஆச்சாரி அவர்களும் எங்களுடனிருந்தார்கள். ஒரு நாள் மாலைக் கூடுகையில் Dr. ரவி சகரியாஸ் (1946-2020) அவர்கள் பேசினார்கள். இன்னொரு நாள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து இம்மாநாட்டில் பங்கேற்ற 5000 ஊழியர் நடுவில் Dr. சாம் கமலேசன் (1930-2021) அவர்கள் *''எல்லாம் இயேசுவே''* என்ற தமிழ்ப் பாடலைப் பாடினார்கள்! தமிழ்நாட்டிலிருந்து சென்றிருந்த நாங்கள் குதூகலித்தோம்!

பண்டிதர் பில்லி கிரஹாமுக்கு ஏராளம் பட்டங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. என்னைப் பொருத்தவரை நான் அவரை ஒரு **''தேவ மனிதன்''** (A Man of God) என்றழைக்க விரும்புகிறேன். அவரது பத்து முக்கிய குணாதிசயங்களை இங்குச் சுருக்கமாய்க் கூறி அவருக்கு அஞ்சலி செலுத்துகிறேன் —

### 1. அவர் தேவ கிருபையையே சார்ந்திருந்தார்.

He depended on the Grace of God.

''கிரஹாம் அவர்களே, வேறெவரையும்விட இவ்வளவு அதிகமாய்த் தேவன் உங்களைப் பயன்படுத்துவதேன்?'' என்றொரு முறை அவரிடம் கேட்கப்பட்டது. அவரது உடனடிப் பதில்: ''தேவனைப் பரலோகில் சந்திக்கும்போது நான் கேட்கும் முதல் கேள்வி இதுவாகத்தானிருக்கும். இன்று என்னைப் பொருத்தவரை, அது தேவனது கிருபை என்றே சொல்லுவேன்!'' தனது எளிய பின்னணியைக் கிரஹாம் அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை. அவர் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நவீன இளைஞர் கூடுகையொன்றில் உரையாற்றியபோது நகைச்சுவையாய் அவர் சொன்னது: ''மின்சாரம் துண்டிக்கப்படுமானால், தம்பி தங்கையரே, உங்களால் ஒன்றும் செய்ய முடியாது போய்விடும்.

எனக்கோ மீன் பிடிக்கத் தெரியும், வயல் வேலை செய்யத் தெரியும், பால் கறக்கத் தெரியும், இப்படி எதையாவது செய்துகொண்டிருப்பேன்!'' உலகெங்கும் அவரது பெருங்கூட்டங்களில் அவர் பிரசங்கித்து முடித்து அழைப்பு கொடுக்கும்போது பாடப்பட்ட பாடல் *''நான் பாவிதான், ஆனாலும் நீர்''* *(Just as I am)* என்பதே. அவரது சுய சரிதை நூலின் தலைப்பும் இதுவே. கடந்த 70 ஆண்டுகளுக்குமேல் அவர் பறை சாற்றிய செய்தி: ''கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம்; இது நம்மால் உண்டாவதல்ல; இது தேவனுடைய ஈவு'' (எபே 2:8). ஆம்ஸ்டர்டாமில் நடந்த மாநாட்டில் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்த ஊழியர் ஒருவர் கேள்வி-பதில் நேரத்தில் பில்லி கிரஹாமிடம், ''நீங்கள் ஓர் அமெரிக்கராயிராதிருந்தால் இவ்வளவு பிரபலமாகியிருப்பீர்களா?'' என்று கேட்டார். மனத் தாழ்மையுடன் பவுலைப்போல், அவர் கூறிய பதில்: ''நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்'' (1 கொரி 15:10). முன்னாள் அதிபர் ஜார்ஜ் W. புஷ் அவர்களிடம் பில்லி கிரஹாம் சொன்னது: ''நாம் இன்னும் நல்லவர்களாகிட முயலவேண்டும்; ஆனால் அதே வேளையில், நாம் தேவனுடைய அன்பைப் பெறுவது நமது நற்செயல்களினால் அல்ல, அவரது கிருபையினாலேயே என்பதை மறந்துவிடக்கூடாது.'' இதைக் குறித்துப் பின்னர் புஷ் அவர்கள் சாட்சியிட்டது: ''இந்த உன்னதமான கருத்தை நான் அன்று புரிந்துகொள்ளவில்லை. ஆனால் அவர் என்னில் ஒரு விதை விதைத்துவிட்டார். அவரது அருமையான விளக்கம் நிலத்தை மிருதுவாக்கியது, முட்புதரின் அடர்த்தியைக் குறைத்தது!''

## 2. அவர் தேவனது வார்த்தையையே பிரசங்கித்தார்.

He preached the Word of God.

பில்லி கிரஹாம் அடிக்கடி பிரசங்கபீடத்தில் பயன்படுத்திய சொற்றொடர், *''பைபிள் சொல்லுவதாவது...'' (The Bible says ...)* என்பதாகும். தோல் கட்டுமான வேதாகமத்தைப் பெருமிதமாக உயர்த்திக் கொண்டு எத்தனை முறை வேண்டுமானாலும் சளைக்காமல் இச்சொற்றொடரை முழங்குவார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கலப்படமற்றுப் பிரசங்கித்தார். அதிலிருந்து அவர் வழிவிலகவேயில்லை. அவர் பிரசங்கிக்கும் மேடையில் எப்பொழுதும் தொங்கவிடப்பட்டிருக்கும் வாசகம்: ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார் இயேசு'' என்பதே (யோ 14:6). கதை பேசித் தனது பிரசங்க நேரத்தை அவர் வீணடிக்கமாட்டார். அவர் ஒரு பொழுதுபோக்கி அல்ல; உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஒரு சுவிசேஷகர்! கிறிஸ்துவின் சிலுவையே அவரது மையச் செய்தி (1 கொரி 2:2). ஒரேயொரு தடவைதான் சிலுவையைப்பற்றிப் பேசாதுவிட்டாராம்; அந்தப் பிரசங்கம் தோல்வியாம்! அவரது வார்த்தைகள் விசையும் அழுத்தமும் நிறைந்தவையாயிருந்தாலும் கேட்போருக்கு அது குற்றவுணர்வை (condemnation) அல்ல, பாவவுணர்வையே (conviction) கொண்டுவரும். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவருக்கென்றாலும் சரி, ஆப்பிரிக்க வனவாசிகளுக்கென்றாலும் சரி, அவரது செய்தி ஒன்றே! பில்லி கிரஹாமைப்பற்றி அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ் அவர்கள் கூறியுள்ளது: ''கிறிஸ்துமீதுள்ள அவரது அன்பும் மென்மையான அவரது மனப்பான்மையும் திருவார்த்தைக்கு மக்களது இதயங்களைத் திறந்துவிடுகின்றன; அதில் நானும் ஒருவன்!'' பில்லி எழுதிய 33 புத்தகங்களில் *“Peace with God”* என்ற நூல் துவக்கக் காலங்களில் எழுதப்பட்டு 1953இல் வெளியிடப்பட்டதாகும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ள வாலிபப் பருவத்தில் இந்நூல் எனக்குப் பெரிதும் உதவியது.

1983ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாமில் நடந்த அந்த 10 நாள் மாநாட்டில் நாங்கள் திரும்பத் திரும்பப் பாடிய பல்லவி —

| | |
|---|---|
| *Let’s talk about Jesus,* | *இயேசுபற்றிப் பேசுவோம்,* |
| *This King of kings is He;* | *இராஜாதி இராஜாவாம்,* |
| *The Lord of lords supreme* | *கர்த்தாதி கர்த்தராம்,* |
| *Through all eternity.* | *நித்திய நித்யமாய்.* |
| *The great I am the Way,* | *அவர்தானே ஒரே வழி,* |
| *The Truth, the Life, the Door;* | *சத்தியம் ஜீவனும்,* |
| *Let’s talk about Jesus more and more!* | |
| | *இயேசுவை மட்டுமே உயர்த்துவோம்!* |

## 3. அவர் தேவ சித்தத்திற்குள்ளேயே அடங்கியிருந்தார்.

He stayed in the Will of God.

தாவீதரசனைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகள்: ''தாவீது தன் காலத்தில் தேவனது சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்த பின்பு நித்திரையடைந்தார்'' (அப் 13:36). இது பில்லி கிரஹாமுக்கு முற்றும் பொருந்தும். அவரது நண்பரொருவர் பரந்த நிலப்பகுதியை அவருக்கு இனாமாகத் தருவதாகக் கூறி, அவரை ஒரு பல்கலைக்கழகம் நிறுவத் தூண்டினார். கண்ணியமாக அதற்கு மறுப்பு தெரிவித்து பில்லி கிரஹாம் சொன்னது: ''தேவன் என்னைக் கல்வி கற்பிக்க அல்ல, சுவிசேஷம் அறிவிக்கவே அழைத்துள்ளார்!'' தங்களது வாழ்க்கையில் தேவனது பிரதான அழைப்பிலிருந்து வழிவிலகிச் சென்று பலவிதப் பிரச்னைகளுக்குள் மாட்டிக்கொண்ட வல்லமையான ஊழியர் பலரது சரிதைகள் சபைச் சரித்திரத்தில் நிறையவுண்டு. ''நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் பிரசங்கிப்பதிலுமே தரித்திருப் போம்'' என்ற அப்போஸ்தலத் தத்துவத்தில் பில்லி கிரஹாம் செயல்பட் டார் (அப் 6:2-4). *''அமெரிக்காவில் மிகவும் விரும்பப்படுபவர்'' (America's Most Admired)* என்ற பட்டியலில் அவர் 61 தடவை இடம் பிடித்தார். (எலிசபெத் இராணி அவர்கள் 49 தடவை இவ்விதப் பட்டியலில் இடம்பெற்றார்.) ''அமெரிக்க அதிபராவதற்குப் போட்டி யிடுங்கள்; நீங்கள் போட்டியிட்டால் எவரும் உங்களை எதிர்த்துப் போட்டியிட மாட்டார்'' என்று கிரஹாமிடம் அவரது நல்ல நண்பர் சிலர் ஆலோசனை கூறினர். அவரது பதில் நெகேமியா அன்று கொடுத்த பதில்தான்: ''நான் பெரிய வேலையைச் செய்கிறேன்; நான் இறங்கி வரக்கூடாது'' (நெகே 6:3). எனதருமை இளம் பிரசங்க நண்பரே, இந்த உயர்ந்த மனிதனிடமிருந்து நாம் எவ்வளவோ கற்கவேண்டும்!

## 4. அவர் தேவனது திட்டங்களையே நிறைவேற்றினார்.

He fulfilled the Purposes of God.

ஆலோசனையும், திருத்துதலும், கடிந்துகொள்ளுதலும் நிறைந்த தமது செய்திகளை ராஜாக்களுக்கு அறிவிக்கத் தீர்க்கதரிசிகளைத்



தேவன் காலாகாலமாய்ப் பயன்படுத்தி வந்திருக்கிறார். தீர்க்கர்களாகிய எலியா, நாத்தான், ஏசாயா, தானியேல், திருமுழுக்கினன் யோவான் போன் றோர் இதற்கு எடுத்துக்காட்டுகள். நாடுகளையும் உலகையும் குறித்த இறைத்திட்டங்களை இவர்கள் ராஜாக்களுக்கு நினைப்பூட்டினார்கள். பில்லி கிரஹாமையும் தேவன் இந்தப் பாணியில் பயன்படுத்தினார். அமெரிக்க அதிபர் ஐசனோவரில் தொடங்கி 13 அதிபர்களுடன் பில்லி கிரஹாம் நெருங்கிப் பழகியிருக்கிறார். ''அதிபர்களுக்கு ஆயர்'' (Pastor to Presidents) என்று அவர் அழைக்கப்பட்டார்! நாட்டின் உயர்மட்டத் தலைவர்கள் பலர் அவரது ஆலோசனையையும் ஜெபத்தையும் நாடினர். மன்னிப்பு என்ற காரியத்தில் அவர் எலிசபெத் இராணி அவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார். ''ஞானத்தைப் போதிக்கும் வசனம்'' மற்றும் ''அறிவை உணர்த்தும் வசனம்'' ஆகிய வரங்கள் அவர் மூலம் சரளமாய் வெளிப்பட்டன (1 கொரி 12:8). யோசேப்பிடம் பார்வோன் இராஜா ஆலோசனை கேட்டார். தானியேலிடம் நேபுகாத்நேச்சார் இராஜா ஆலோசனை கேட்டார். நாட்டின் தலைவர்கள் ஆலோசனை கேட்கக் கூடிய கிறிஸ்தவத் தலைவர் எவரும் இந்தியாவில் உண்டா? பாரதத்தில் இப்படி ஒரு நாள் விடியுமா? பில்லி கிரஹாமுக்கு அதிபர் பராக் ஒபாமா செலுத்தியுள்ள அஞ்சலியில் குறிப்பிட்டுள்ளது: ''தலைமுறை தலைமுறையான அமெரிக்கர்களுக்கு நம்பிக்கையும் ஆலோசனையும் தந்த ஒரு தாழ்மையுள்ள ஊழியன்!'' அமெரிக்க அதிபர்களில் இத்தனை பேருக்குப் பில்லி கிரஹாம் நெருக்கமாயிருந்தும் அவர்களிடமிருந்து ஒருபோதும் தயவோ, உபகாரமோ அவர் நாடவில்லை!

## 5. அவர் தேவனது ஊழியர்களை மதித்தார்.

He respected the Servants of God.

உலகிலேயே மிக அதிக அளவில் மக்களைக் கூட்டக்கூடியவராய் இருந்தாலும், பில்லி கிரஹாம் ஒருபோதும் தன்னை உலகிலுள்ள மற்ற ஊழியரைவிடப் பெரியவரென்று நினைக்கவேயில்லை. ரஷ்யாவில் நடந்த சுவிசேஷக் கூட்டத்தையும் சேர்த்து 1947 முதல் 400க்கும்

மேற்பட்ட பெருங்கூட்டங்களில் 21 கோடிக்குமேல் மக்கள் அவர் பிரசங்கிக்கக் கேட்டிருக்கின்றனர். பில்லி கிரஹாம் சுவிசேஷ ஐக்கியக் குழுவிலுள்ள (Billy Graham Evangelistic Association) அவரது உடன் சுவிசேஷகர்மீது அவர் காட்டியுள்ள அன்பும் அவர்களைப் பாராட்டியுள் ளதும் கிறிஸ்தவ ஊழியரிடையே காணப்படவேண்டிய ஒருமனத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. Dr. Cliff Barrows (1923-2016) அவர்களும் Mr. George Beverly Shea (1909-2013) அவர்களும் பில்லியுடன் நெடுங் காலம் சேர்ந்து ஊழியம் செய்திருக்கின்றனர். அவர் தனது உடன் ஊழி யரை நண்பர்களாகவே பாவித்து நடத்தினார் (யோ 15:15). பிரபலப் பாடகரான Cliff Barrows அவர்கள் ஒரு முறை பில்லி கிரஹாமிடம் இப்படிச் சொன்னார்: ''பில்லி, பரலோகத்தில் உமக்கு வேலையிருக் காது; அங்குதான் பிரசங்கம் தேவையிருக்காதே! நானோ அங்கும் பாடிக்கொண்டேயிருப்பேன்!'' பிரசங்கிமார், இறையியலர்கள் மற்றும் திருச்சபைத் தலைவர்களின் கண்டனம் கிரஹாமிற்கு இருக்கத்தான் செய்தது. ஆனால் அவர்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டு அவர் தனது நேரத்தையும் பலத்தையும் வீணடிக்கவில்லை. ''தாக்கவும் வேண் டாம்; தடுக்கவும் வேண்டாம்'' என்பதே அவரது தத்துவம். அவர் இந்தியாவிற்கு வந்தபோது அவருடன் ஒத்துழைக்க மறுத்த பெரிய ஊழியரில் ஒருவர் சகோதரன் பக்தசிங் (1903-2000)அவர்கள். கூட்டங் களில் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து முன்வருவோரை மறுபடியும் ''செத்த'' சபைகளுக்குள் அனுப்பி வைப்பதில் பக்தசிங் அவர்களுக்கு உடன்பாடு இல்லை! ஆனாலும் பக்தசிங்கைச் சந்திக்கவும் அவரது ஜெபம் நாடவும் பில்லி கிரஹாம் பணிவுடன் அவரிடம் சென்றார்! 1967இல் துவங்கப் பட்ட பிரபல சுகமளிப்பு ஊழியர் ஓரல் ராபர்ட்ஸ் (1918-2009) அவர் களது பல்கலைக்கழகத்தில் (ORU) பில்லி கிரஹாம்தான் சிறப்பு விருந் தினராய்ப் பிரதிஷ்டைப் பிரசங்கம் செய்தார். முன்னாள் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் சொல்லியுள்ளது: ''பரந்த மனது, மன்னிப்புச் சிந்தை, பிறரிடம் தாழ்மை ஆகிய பண்புகளுடன் இயேசுவின் அடிச் சுவடுகளைப் பில்லி கிரஹாம் பின்பற்றியுள்ளார்!''



## 6. அவர் தேவனது குடும்பத்தை (சபையை) பக்திவிருத்தியடையச் செய்தார்.

He edified the Family (Church) of God.

பில்லி கிரஹாம் தனது நற்செய்திப்பணி முயற்சிகள் அனைத்திலும் ஏற்கனவே இருக்கும் திருச்சபைகளைப் பலப்படுத்துவதில் கருத் தாயிருந்தார். அவரது கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்காய் அவ்வூர் களுக்கு முன்னதாகச் செல்பவர்கள் ஆங்காங்குள்ள திருச்சபைகளின் ஒத்துழைப்பு பெறப் பல மாதங்கள் செலவிடுவர். சபைப்பிரிவுகளுக்குக் கிரஹாம் அப்பாற்பட்டவர். அவர் பாப்திஸ்து சபையைச் சேர்ந்தவரென் றும் அவரது மனைவியார் ரூத் (1920-2007) அவர்கள் பிரஸ்பிட் டேரியன் சபையைச் சேர்ந்தவரென்றும் உங்களுக்குத் தெரியுமா? சபைப்பிரிவு பாகுபாடற்றதோர் குடும்பம்! பாவிகளை மனந்திரும்பு தலுக்கும் இரட்சிப்பிற்கும் நடத்துவதற்காய் முயலுவது தவிர்த்து, திருச்சபையின் எழுப்புதலுக்காகவும் பில்லி தணியாத் தாகம் கொண் டிருந்தார். திருச்சபைகள் மறுமலர்ச்சி அடையாவிடில் நற்செய்திப் பணியின் கனிகளைப் பாதுகாக்க முடியாது என்பது அவரது நம்பிக்கை. 1974 ஜூலை மாதம் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற International Congress on World Evangelisation என்ற அகிலவுலக மாநாட்டிற்குக் காரணமாயிருந்தது பில்லி கிரஹாம் அவர்கள்தான். 150க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து கிறிஸ்தவத் தலைவர்கள் அதில் பங்கேற்றனர். அம் மாநாட்டின் முழக்கங்களில் ஒன்று: ''முழுச் சபையும் முழுச் சுவிசே ஷத்தை முழு உலகிற்கு எடுத்துச் செல்லவேண்டும். (The whole Church must carry the whole Gospel to the whole World!) பில்லி கிரஹாம் ஒருபோதும் அன்னிய பாஷையில் பேசியதில்லை எனினும், தீவிர பெந்தெகொஸ்தேயினரும் அவர் பேசுவதைக் கேட்பதற்காக உள்ளூர்க் கூட்டங்களிலும் அகிலவுலக மாநாடுகளிலும் திரளாய்க் கூடிவருவர். அவர் ஓர் எழுப்புதல் வீரர் (Revivalist) என்பதைவிடப் பிரதானமாக ஒரு சுவிசேஷகர் (Evangelist) எனினும், அவரது கூட்டங்கள் நடந்த நாட்களிலும் அதற்குப் பின்னரும் உள்ளூர்ச் சபைகளில் உயிர்மீட்சி உண்டானது.

## 7. அவர் தேவ ஆவியாலேயே நிரப்பப்பட்டிருந்தார்.

He was filled with the Spirit of God.

பில்லி கிரஹாமின் பிரசங்கங்கள் எளிமையாயிருந்தாலும் வல்லமையும் அதிகாரமும் நிறைந்தவையாயிருக்கும். அப்போஸ்தலன் பவுலின் அறிக்கையே பில்லி கிரஹாமிற்குப் பொருந்தும்: ''என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் வல்லமையினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தன'' (1 கொரி 2:5). அவர் பேசும்போது கூட்டத்தினர்மீது ஆவியானவரின் அசைவாட்டம் தெளிவாயிருக்கும். அதை யாரும் மறுக்க முடியாது. ''பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்க வேண்டிய'' அவசியத்தைக் கிறிஸ்தவர்களுக்கு அவர் எப்பொழுதும் வலியுறுத்தினார் (எபே 5:18). ஆம்ஸ்டர்டாம் '83 மாநாட்டில் ஒரு மாலைக் கூட்டத்தின் செய்தி பரிசுத்த ஆவியானவரைப் பற்றியது. அதைக் கொடுத்தவர் Campus Crusade for Christஇன் நிறுவனராகிய Dr. பில் பிரைட் (1921-2003) அவர்கள். அவரது பேச்சில் விளக்கங்கள் இருந்தன; ஆனால் போதுமான வழிமுறைகள் சொல்லப்படவில்லை. பில் பிரைட் உட்கார்ந்தவுடன் பிரசங்க பீடத்திற்குப் பில்லி கிரஹாம் சென்று நொறுங்கிய உள்ளத்துடன் அங்கு உட்கார்ந்திருந்த 5000 ஊழியக்காரருக்குச் சொன்னது: ''நண்பர்களே, உங்கள் விடுதி அறைகளுக்குச் சென்றதும் முழங்காலிடுங்கள்; ஒரு புதிய அபிஷேகத்தைத் தரும்படித் தேவனிடம் கேளுங்கள்; உங்களுக்கு அது கிடைத்துவிட்டது என்ற நிச்சயம் வரும்வரை முழங்காலிலிருந்து எழும்பாதீர்கள்!'' பில்லி கிரஹாம் ஒரு சிறந்த ஜெப மனிதராய்த் திகழ்ந்தார். ஆவியானவரது அபிஷேகம் தன்மீது இராமல் தன்னால் பிரசங்கிக்க முடியாதென்று பல முறை அவர் அறிக்கையிட்டிருக்கிறார். நடுக்கத்தின் காரணமாக வியர்வையால் நனைந்திருந்த தனது உள்ளங்கைகளைக் கூட்டத்தினரிடம் காட்டி, இதனால்தான் அவர் பரிசுத்த ஆவியானவர் மீதே முழுவதும் சார்ந்திருப்பதாகச் சாட்சியிட்டார். இதைக் கேட்டபோது ஊழியக்காரக் கூட்டத்தினராகிய நாங்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பினோம்! பிரசங்கியாராயிருப்பதற்குப் போதுமான தாலந்தோ, திறமையோ, சொல் வளமோ இல்லை



என்றெண்ணுவோர்க்கு என்னே ஊக்கம்! இன்று இயேசு சவாரி செய்வது கம்பீரமான குதிரைகள் மீதல்ல; கனிவான கழுதைகள் மீதே!

## 8. அவர் தேவனது ஊழியத்திற்கே தன்னை அர்ப்பணித்திருந்தார்.

He was devoted to the Ministry of God.

மொர்தெகாய் ஹாம் (1877-1961) என்ற பிரபல சுவிசேஷகரின் கூட்டத்தில் 1934ஆம் ஆண்டு தனது 16ஆம் வயதில் கிறிஸ்துவுக்குப் பில்லி கிரஹாம் தன்னை அர்ப்பணித்த நாளிலிருந்து, தனது வாழ்க்கையையே மாற்றிவிட்ட ஆண்டவரிடம் ஆத்துமாக்களை வழிநடத்துவதில் தீரா வாஞ்சை கொண்டிருந்தார். 1946இல் துவங்கப்பட்ட ''கிறிஸ்துவுக்கு வாலிபர்'' (YFC) என்ற இயக்கத்தில் அவரே முதல் முழுநேர சுவிசேஷகராய்ப் பணியாற்றினார். பில்லி கிரஹாம் சுவிசேஷ ஐக்கியம் (BGEA) 1950இல் நிறுவப்பட்டது. *Christianity Today* என்ற உலகப் புகழ்பெற்ற பத்திரிகை வெளியீட்டுக்கு முக்கிய காரணமாயிருந்தது பில்லி கிரஹாம்தான். கிறிஸ்தவர்களிடம் பக்தன் ஜான் வெஸ்லி (1703-1791) சொன்னது: ''உங்களுக்கு இப்பூவுலகில் ஒரே பணிதான்; அது கிறிஸ்துவுக்காய் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதே!'' வேறொரு சமயம் அவர் சொன்னது: ''உலகமே எனது திருச்சபை மக்கள்!'' இவ்விதச் சரித்திர நாயகர்களின் கூற்றுக்கள் பில்லி கிரஹாமின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. விவசாயப் பின்னணியிலிருந்து வந்திருந்த பில்லி கிரஹாமிற்கு ''உலகமே விளைநிலம்'' என்றாயிற்று (மத் 13:38). தான் நிறுவிய சுவிசேஷ ஐக்கியத்திலிருந்து அவர் சம்பளம் மட்டுமே பெற்றுக்கொண்டார். பிரசங்கிமாருக்குக் கொடுக்கப்பட்ட அன்பின் காணிக்கைகள் குறித்த புரளிகள் நிறைந்திருந்த காலத்தில் பில்லியும் இன்னும் சிலரும் சேர்ந்து Evangelical Council for Financial Accountability (திருப்பணிப் பணக் கணக்கு ஒப்புவிப்புச் சங்கம்) என்று ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். பணக்காரியங்களில் பில்லி கிரஹாமின் ஐக்கியக்குழுமீது எக்குற்றமும் சாட்ட முடியாது. *Decision* என்ற அதின் மாதப் பத்திரிகை, இப்பொழுதும்

தனது 58ஆம் ஆண்டில் (2018), உலகிலுள்ள கிறிஸ்தவப் பத்திரிகைகளின் நடுவில் உயர்ந்து நிற்கிறது.

கிரஹாம் அவர்கள் பிரசங்கிப்பதற்காக எத்தனையோ நாட்கள் வெளியூர் செல்லவேண்டியதிருந்தாலும், அவரது முழுக்குடும்பமும் கர்த்தரை அறிகிற அறிவிலும், அவருக்குப் பயப்படும் பயத்திலும் நெடுகவே வளர்ந்துவந்தது. மகிழ்ச்சியான 64-ஆண்டு மணவாழ்வுக்குப் பின்னர் மறைந்த திருமதி ரூத் கிரஹாம் (1920-2007) அவர்களுக்கே இதற்குரிய பாராட்டு தகும். கிரஹாம் தம்பதியரின் அத்தனை பிள்ளைகளும் (2 மகன்கள், 3 மகள்கள்) திருப்பணியில் இருக்கின்றனர். அவர்களது பேரப்பிள்ளைகள் இப்போது பத்தொன்பது, கொள்ளுப் பேரப்பிள்ளைகள் எத்தனையோ? பண்டிதர் கிரஹாமும் அவரது உடன் ஊழியரும் வேறொரு பெண்ணுடன் ஒருபோதும் தனியறையில் இருக்கக்கூடாது என்ற தீர்மானம் எடுத்திருந்தனர். என்னே கட்டுப்பாடு! அவரது நிர்வாகக்குழுவின் தீர்மானத்தின்படி இப்பொழுது அவரது மகன் பிராங்க்ளின் கிரஹாம் (65) இவ்வூழியத்தைத் தலைமை தாங்கி நடத்திவருகிறார். *Samaritan's Purse* என்ற அகிலவுலக நிவாரணப்பணி நிறுவனத்திற்கும் அவரே தலைவர். பில்லி கிரஹாமின் குமாரத்திகளில் ஒருவரான ஆன் லட்ஸ் என்பவர் திருமறையைப் போதிப்பதில் சிறந்தவர். அன்றைய யோசுவாவின் தீர்மானமே பில்லி கிரஹாமின் அறிக்கை: ''நானும் என் வீட்டாருமோ கர்த்தரையே சேவிப்போம்'' (யோசு 24:15).

### 9. அவர் தேவனது உலகில் பிரியமாயிருந்தார்.

He loved the World of God.

பில்லி கிரஹாம் அடிக்கடி மேற்கோள் காட்டிய வசனம் யோவான் 3:16, ''தேவன் இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்.'' பில்லியும் அவரது மனைவி ரூத்தும் உலகிற்காய்த் தவறாது ஜெபித்துவந்தனர். ''ஜெபக் கையேடு ஏதும் வைத்திருக்கிறீர்களா?'' என்று ஒரு முறை ரூத் அம்மையாரிடம் கேட்கப்பட்டது. அவர்கள் கொடுத்த பதில்: ''ஆம், தினசரிச் செய்தித்தாள்! அதை ஒரு கையிலும் திருவிவிலியத்தை மறு



கையிலும் வைத்துக்கொள்வேன்!'' உலகெங்குமுள்ள மனுக்குலத்தின் வேதனைகள் மற்றும் தவிப்புகளுக்காகப் பில்லி கிரஹாம் அடிக்கடி தேவனுக்குமுன் கண்ணீருடன் மன்றாடுவார். பல்வேறு நாடுகள் குறித்துப் பழங்காலத் தீர்க்கர்களைத் தேவன் இப்படித்தானே பாரப் படுத்தினார்! (ஏசா 13:1; 15:1; 17:1; ...). 1977இல் சென்னையில் மாபெரும் கூட்டம் நடந்துகொண்டிருந்த நாட்களில் பில்லி கிரஹாம் நேரமெடுத்து பெருவெள்ளத்தால் பேரழிவில் தவித்துக்கொண்டிருந்த ஆந்திராவுக்குச் சென்று வந்தார். பாதிக்கப்பட்ட மக்களின் கூக்குரலைத் தாங்க முடியாது அவர் கண்ணீர் விட்டார். அவரது நிறுவனத்திலிருந்து ஏராளம் பணவுதவி அனுப்பி இம்மக்களுக்கு உதவினார். இயற்கையின் சீற்றங்களினாலும் தொற்றுநோய்களினாலும் யுத்தங்களினாலும் இவ்விதம் உலகெங்கும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காய்த் தங்களாலியன்ற அத்தனை உதவிகளையும் இந்நிறுவனத்தினர் செய்துவருகின்றனர். ஆண்டுதோறும் சிறு பிள்ளைகளுக்குத் துணிகள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் அடங்கிய வெகுமதிப் பொட்டலங்களைப் பிராங்க்ளின் கிரஹாமின் Samaritan's Purse என்ற நிறுவனம் அனுப்பி வருகிறது. அதில் அதிகம் பயன்பெறும் நாடுகளில் இந்தியா ஒன்று. இயேசுவின் அற்புதங்களுக்கு, அதிலும் குறிப்பாக ஐயாயிரம் பேருக்கு உணவளித்த அற்புதத்திற்கு, பின்னணியில் இயேசுவின் ''மனதுருக்கம்'' இருந்தது. பல்வேறு வழிகளில் நடைமுறையாக பில்லி கிரஹாம் தனது மனதுருக்கத்தைக் காட்டியிருக்கிறார். வெள்ளையர்-கருப்பர் எனும் இனவெறிக்கு எதிராகக் குரல் கொடுத்த மார்ட்டின் லூத்தர் கிங் (1929-1968) என்பவர் பில்லி கிரஹாமுக்கு நெருங்கிய நண்பர். கிரஹாமின் பெருங்கூட்டம் ஒன்றில் வெள்ளையருக்கு ஓரிடமும் கருப்பருக்கு வேறிடமும் ஒதுக்கப்பட்டிருந்தன. மேடையிலிருந்து பில்லி கிரஹாம் கீழே இறங்கி வந்து இருவினத்தாரையும் பிரித்து நின்ற கயிறுகளை அவரே அறுத்துப்போட்டார்! அவரது சுவிசேஷகர் குழுவில் Dr. அக்பர் அப்துல் ஹக் (1920-2019) மற்றும் Dr. ராபர்ட் கன்வில் ஆகிய இரு இந்தியர் இடம்பெற்றிருந்தனர். பில்லி கிரஹாமை ''அகிலவுலகத்திற்குத் திருத்தூதுவர்'' (God's Ambassador to the World) என்று அதிபர் டொனால்டு டிரம்ப் வருணித்துள்ளார்.

## 10. அவர் தேவ இராஜ்யத்திற்காகவே வாழ்ந்தார்.

He lived for the Kingdom of God.

‘‘உமது இராஜ்யம் வருவதாக!’’ தனது வாழ்காலம் முழுவதும் பில்லி கிரஹாமின் வாஞ்சையும் ஜெபமும் இதுவே. தேவ மகிமையே அவரது ஒரே இலக்கு. இறையரசிற்காய்த் தொலைவிடங்களிலும் எதிர்ப்பு நிறைந்த பகுதிகளிலும் உழைத்துவரும் சுவிசேஷகர் மற்றும் மிஷனரிகளை உற்சாகப்படுத்த அவர் தன்னால் இயன்றதையெல்லாம் செய்தார். அவரது மாமனார் Dr. நெல்சன் பெல் (1894-1973) அவர்கள் சீனாவில் மருத்துவ மிஷனரியாகப் பணியாற்றியவர். ரூத் கிரஹாம் அம்மையார் இவ்விதம் ஒரு மிஷனரிக் குடும்பத்தில் வளர்ந்தவர்கள். பில்லி கிரஹாமின் முழுக்குடும்பமுமே மிஷனரிச் சிந்தையில் ஊறியிருப்பது ஆச்சரியமல்லவே! தனது அஞ்சலியின்போது Dr. ரவி சகரியாஸ் அவர்கள் (1946-2020) கூறியது: ‘‘இன்னொரு பில்லி கிரஹாம் இருக்க முடியாது!’’ உண்மைதான், இன்னொரு பவுல் இருக்க முடியாது; ஆனால் எத்தனையோ தீமோத்தேயுக்களும் தீத்துக்களும் எழும்ப முடியுமே! பில்லி கிரஹாமின் சால்வையிலிருந்து சில துண்டுகளாவது தங்கள் மீது விழவேண்டுமென்று தேவனிடம் கதறும்படி இந்தியக் கிறிஸ்தவ வாலிபருக்குச் சவால் விடுகிறேன். மனத்திடமும், நற்குணமும், ஆவியானவர் அருளும் கவர்ச்சியும் நிறைந்த சுவிசேஷகர்கள் நம் நாட்டிற்கு எவ்வளவாய்த் தேவை! அப்பொழுதுதான் கோடிக்கணக்கில் இந்தியர்களை ஜீவனுள்ள தேவனிடம் திருப்ப முடியும். இத்தலைமுறையின் இந்தியக் கிறிஸ்தவரே இத்தலைமுறையின் இந்தியக் கிறிஸ்தவரல்லாதோருக்குப் பொறுப்பு!

மரணத்திற்குப் பில்லி கிரஹாம் பயப்படவில்லை. ‘‘பூமி பின் வாங்குகிறது; வானம் வா வா என்றழைக்கிறது; இதுதான் நான் முடிசூட்டப்படும் நாள்; ஆ, மரணம் எவ்வளவு இனிமையானது!’’ என்று கூறி இறுதி மூச்சை விட்ட இன்னொரு பிரபல அமெரிக்க சுவிசேஷகராகிய D. L. மூடி (1837-1899) அவர்களைப் போலவே பில்லி கிரஹாமும் மரணத்தை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தார். பிதாவின் முகம் தரிசிக்க அத்தனை ஆசை! 2018 பெப்ருவரி 21 புதன் அதிகாலையில் பில்லி கிரஹாமை, ‘‘நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரனே!



உனது எஜமானனின் சந்தோஷத்திற்குள் பிரவேசி’’ என்ற வார்த்தைகளுடன் வரவேற்க இயேசுவானவர் எழுந்து நின்றிருப்பாரென்று கற்பனை செய்ய நான் விரும்புகிறேன் (மத் 25:21,23). எளிமையான மனிதனாய், எளிமையான செய்தியைப் பிரசங்கித்த பில்லி கிரஹாமின் உடலைச் சிறைக்கைதிகளால் செய்யப்பட்ட எளிமையான பெட்டியொன்றில், அவரது விருப்பத்தின்படி, நல்லடக்கம் செய்து வழியனுப்பிவைத்தனர்.

பில்லி கிரஹாம் அவர்களே, **‘‘தேவ மனிதன்’’** என்றால் யார் என்பதற்கு எங்களுக்கு ஒரு வரையறை தந்தமைக்காய் உங்களுக்கு நன்றி: ‘‘தேவ கிருபையையே சார்ந்திருந்து, தேவனது வார்த்தையையே பிரசங்கித்து, தேவ சித்தத்திற்குள்ளேயே அடங்கியிருந்து, தேவனது திட்டங்களையே நிறைவேற்றி, தேவ ஊழியர்களை மதித்து, தேவனது குடும்பத்தைப் பக்திவிருத்தியடையச் செய்து, தேவ ஆவியாலேயே நிரப்பப்பட்டு, தேவனது ஊழியத்திற்கே தன்னை அர்ப்பணித்து, தேவனது உலகில் பிரியமாயிருந்து, தேவ இராஜ்யத்திற்காகவே வாழுபவனே தேவ மனிதன்!’’



# 13

# கிரஹாம் ஸ்டெயின்ஸ்: மரித்தும் பேசுகிறார்!

Graham Staines: Dead, yet speaking!

மனுக்குலச் சரித்திரத்தில் இரத்தசாட்சியாய் இறந்த முதல் நபர் ஆபேல். மார்க்கம் சார்ந்த காரணத்திற்காகவே அவன் கொல்லப்பட்டான். இறைவனது வெளிப்பாட்டு மார்க்கத்திற்கும் மனிதனது கண்டுபிடிப்பு மார்க்கத்திற்கும் இடையேயுள்ள போராட்டத்திலேயே அவன் பலி யானான். தேவன் செய்துமுடித்ததின் மீதுள்ள ''விசுவாசம்'' என்பதே ஆபேலின் மார்க்கம்; அவனது கொலையாளியாகிய காயீனின் மார்க் கமோ ''கிரியைகள்'' மூலம் கடவுளைத் திருப்திப்படுத்த மேற்கொள் ளப்படும் முயற்சியாகும் (ஆதி 4:3-8; எபி 11:4). சிலுவையில் கிறிஸ்து முடித்ததை விசுவாசிப்பவர்களைச் சார்ந்த ஆபேல் ''நீதிமான்'' என்று அறிவிக்கப்பட்டான்; காயீனின் செயல்களோ ''பொல்லாதவை'' என்ற ழைக்கப்படக் காரணம் கிரியைகளாலோ சடங்குகளாலோ ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது (1 யோ 3:12; எபே 2:8,9). இந்த யுகம் முடியும்வரை இந்த மார்க்கப் போர் தொடரும். ஆபேல் (அஞுனுடீ) முதல் சகரியா (**Z**-echariah) வரை இரத்த சாட்சிகளாய் மடிந்தவர்களை இயேசு தமது இறுதிப் பிரசங்கத்தில் சுட்டிக்காட்டினார் (மத் 23:35). கிரஹாம் ஸ்டெயின்ஸ் (1941-1999) அவர்களது இரத்தசாட்சி மரணம்



இவ்வரிசையைச் சார்ந்ததே. இரத்த சாட்சிகளின் காலம் முடிந்துவிட வில்லை (வெளி 6:10,11). அதிமோசமானது இனிதான்! (2 தீமோ 3:1-4,13; யோ 16:2ஆ).

1999 ஜனவரி 23 அன்று ஒடிசா மாநிலத்தில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் (58) அவர்களும், பிலிப்பு (10) மற்றும் தீமோத்தேயு (6) ஆகிய அவரது இரு மகன்களும் உயிருடன் எரிக்கப்பட்டது கிறிஸ்தவர்களால் மட்டு மல்ல, கிறிஸ்தவரல்லாதவராலும் எக்காலமும் மனவேதனையுடனும் நன்றியுணர்வுடனும் நினைவிற்கொள்ளப்படும். நவீன வசதிகள் ஏதுமில்லாத தொலைதூரக் கிராமமொன்றில் இம்மூவரும் தங்களது வாகனத்திற்குள் அலுத்துத் தூங்கிக்கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது. ''உலகின் இருட்டுச் செயல்கள் பட்டியலில் இக்கொடூரச் செயல் இடம் பெறும்'' என்றார் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்களில் ஒருவராகிய K. R. நாராயணன் அவர்கள். ''நான் வெட்கித் தலைகுனிகிறேன்'' என்றார் முன்னாள் பிரதமர்களில் ஒருவரும், பாரதீய ஜனதா கட்சியில் ஒரு தலைவருமாகிய அ. ஆ. வாஜ்பாயி அவர்கள். இச்சம்பவத்தைத் தங்கள் தலையங்கக் கட்டுரை யாய் வெளியிட்ட *India Today* எனும் பத்திரிகை இச்செயலை ''இந்தியா மீது விழுந்த வெட்கக்கேடான கறை'' என்று குறிப்பிட்டது. ஜான் ஹஸ் (1369-1415), ஜெரோம் (1365-1416), ஜோன் ஆப் ஆர்க் (1412-1431), சவோனரோலா (1452-1498), வில்லியம் டின்டேல் (1494-1536), இன்னும் இவர்கள் போன்று தங்களது விசுவாசத்திற்காய்த் தீக்கிரையாக்கப்பட்டோரின் வரிசையில் இணைந்த கிரஹாம் ஸ்டெ யின்ஸ் அவர்களுக்கு இந்தியக் கிறிஸ்தவராகிய நாம் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

*இரத்த சாட்சிக் கூட்டம் சத்தியப் பாதையில்*
*நித்தம் தம்மைத் தத்தம் செய்து வீர சேவையில்*
*ஜீவன் சுகம் பலம் யாவையும் ஈந்ததால்*
*சுத்த சுவிசேஷம் ஓங்குதே!*

ஸ்டெயின்ஸ் அவர்கள் கொல்லப்பட்டு இப்பொழுது (2019) இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன. 1999இல் இந்திய மண்ணில்

நடந்த ஈரமற்ற செயலைச் சமீபத்தில் வெளியாகிய *"The Least of These: The Graham Staines Story" (''இந்தச் சிறியரில் ஒருவர்'')* என்ற திரைப்படம் நமது கண்களுக்குமுன் கொண்டுவந்துவிட்டது. வேலூரிலுள்ள திரையரங்கம் ஒன்றில் நாங்கள் குடும்பமாக இப்படத்தைப் பார்த்தோம். கண்கள் குளமாகாத எவரும் அவ்வரங்கத்தில் இல்லை. இறந்தவர்கள் மீதும் இருப்பவர்கள் மீதும் பரிதாபப்பட்டுவிட்டு வழக்கம்போல் நமது வேலையைப் பார்க்கப் போகிறோமோ? செயல்பாட்டிற்குப் பரிதாபம் பதிலாக முடியாது. தகுந்த செயல்பாடு தொடராவிடில் நாம் வடித்தது முதலைக்கண்ணீர்தான். ''அவன் மரித்தும் பேசுகிறான்'' என்று முதல் இரத்தசாட்சியாகிய ஆபேலைக் குறித்துத் திருவிவிலியம் அறிவிக்கிறது (எபி 11:4இ). இக்கட்டுரைக்கு இதனையே நான் தலைப்பாய்க் கொடுத்துள்ளேன். ஒரு மணி நேரப் பிரசங்கம் செய்வதற்கு ஸ்டெயின்ஸ் அவர்களை உயிரோடெழுப்பினால் நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் சொல்லுவார் என்பதனைக் கீழ்வரும் பத்திகளில் எழுதுகிறேன் —

## 1. மிஷனரிச் சரிதைகள் வாசியுங்கள்.

ஸ்டெயின்ஸ் அவர்கள் இறுதியாக வாசித்தது *"Jungle Pilot"* எனும் புத்தகம். 1956 ஜனவரியில் ஈக்குவடாரில் ஆக்கா இனத்தவரால் ஜிம் எலியட், ரோஜர் யோடெரியன், எட் மெக்கல்லி மற்றும் பேட் பிளேமிங் ஆகியோருடன் கொல்லப்பட்ட நேட் செயின்ட் என்பவரின் சரிதையே இப்புத்தகம். மிஷனரிகளின் தொடர்ந்த பணியினால் இந்த வனப் பழங்குடியினர் கிறிஸ்துவிடம் வந்துவிட்டனர். ''ஆண்டவரைச் சேவிக்க வேண்டும் என்ற தரிசனத்தைப் பைபிளுக்கு அடுத்து எனக்குத் தந்தது மிஷனரிகளின் சரிதைகளே'' என்பது கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் அம்மையாரின் சாட்சி. *"Burnt Alive!"* என்ற 240-பக்க நூலை ஆங்கிலத்திலும் *''உயிருடன் எரிப்பு''* என்று தமிழிலும் ஸ்டெயின்ஸ் சரிதையை 1999 ஏப்ரலில் வெளியிட்ட Gospel Literature Service (GLS) நிறுவனத்தைப் பாராட்டுகிறோம். விஷால் மங்கல்வாடி மற்றும் நால்வர் இதன் ஆக்கியோன்கள். இந்நூல் பெங்காலி, குஜராத்தி, இந்தி, கன்னடம்,



மலையாளம், மராத்தி, ஒடியா மற்றும் தெலுங்கு மொழிகளிலும் உண்டு. ஜெர்மானிய மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும் இந்நூல் வெளிவந்துள்ளது. சவால் நிறைந்த புத்தகமிது.

தங்களது பாடங்களில் மிஷனரிச் சரிதைகளைப் பொருத்தமாய் இணைக்கும் VBS மற்றும் SU போன்ற சிறுவர் ஊழியங்களுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். மிஷனரிகளின் சரிதைகள் மற்றும் சுய சரிதைகளைப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து வாசிக்கச் செய்யவேண்டும். இந்நூல்களிலுள்ள தகவல்களை அவ்வப்போது குடும்ப ஜெபங்களில் பகிர்ந்துகொள்ளவேண்டும். உங்கள் இல்லத்தின் விருந்தினர் அறையில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் குடும்பப் படம் ஒன்று தொங்கவிடலாம்; கிறிஸ்துவுக்காகவும் அவரது சுவிசேஷத்திற்காகவும் மக்கள் செய்யும் தியாகங்களை உங்கள் குடும்பத்தினருக்கும் வீட்டுக்கு வந்துபோகிறவர்களுக்கும் அது நினைப்பூட்டும். அல்லது அலுவலகத்தில் உங்கள் மேசைமீது ஒரு சிறிய photostandஇல் அப்படத்தை வைக்கலாம். சுவிசேஷத்தைக் குறித்து உங்கள் உடன் அலுவலரோடு ஓர் உரையாடலைத் துவக்க அது உதவும். திருமறைச் சரித்திரத்திலும் திருச்சபைச் சரித்திரத்திலும் உள்ள விசுவாச வீரரின் சரிதைகள் நமக்குச் சவாலிட்டு நம்மைச் செயல்வீரராக மாற்றுவதற்காகவே (எபி 11; 12:1,2). *"Foxe's Book of Martyrs"* மற்றும் *"Voices from the Edge of Eternity"* போன்ற நூல்களை வாசித்துவிட்டு நீங்கள் சும்மா இருக்கமுடியாது. இவ்வித மிஷனரிச் சரிதைகளில் சில ஒளித்தட்டுகளிலும் உண்டு. திருச்சபைகளும் ஜெப ஐக்கியங்களும் சுற்று நூலகம் அமைத்து மிஷனரிச் சரிதைகளை வாசிக்கும்படித் தங்கள் உறுப்பினர்களை ஊக்குவிக்கவேண்டும்.

ஏமி கார்மைக்கல் (1867-1951) அம்மையாரும், வில்லியம் கேரி (1761-1834) அவர்களும் இறையழைப்பிற்குக் கீழ்ப்படிந்து இந்தியா வந்தனர். டேவிட் லிவிங்ஸ்டனின் (1813-1873) கீழ்ப்படிதல் அவரை ஆப்பிரிக்காவிற்கு எடுத்துச் சென்றது. அதோனிராம் ஜட்சனின்

(1788-1850) கீழ்ப்படிதல் அவரைப் பர்மாவில் கொண்டுபோய் நிறுத்தியது. இறையழைப்பிற்குச் செவிமடுத்து சீனாவிற்கு ஹட்சன் டெய்லர் (1832-1905) கப்பற்பயணமானார். சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டு சாது சுந்தர்சிங் (1889-1929?) இந்தியாவெங்கும் அலைந்தார். இறையழைப்பை அசட்டை செய்திருந்தால் நரமாம்சம் உண்ணுவோரிடையே திருப்பணி செய்ய மேரி ஸ்லெசர் (1848-1915) அம்மையார் துணிந்திருக்கமாட்டார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தது ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு மகன்களின் உயிர்களைப் பறித்தது. ஈ. ஃ. மூடி, ஜான் வெஸ்லி, சார்லஸ் பின்னி, ஈவான் ராபர்ட்ஸ் மற்றும் இதுபோன்றோரின் சரிதைகளை வாசித்தது எனது கல்லூரி நாட்களில் (1963-1970) என்னில் எழுப்புதல் தீயைப் பற்றவைத்தது. அது இன்னும் அணைந்தபாடில்லை!

## ௨. மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்றுவாருங்கள்.

ஒடிஸாவிலுள்ள பாரிப்படா எனும் கிராமத்தில் வசித்து வந்த சந்தானு சத்பதி என்ற தனது இளவயது நண்பனைச் சந்திக்கவே 1965இல் கிரஹாம் ஸ்டெயின்ஸ் இந்தியாவிற்குள் நுழைந்தார். காலப்போக்கில் Evangelical Missionary Society of Mayurbhanj (EMSM) எனும் மிஷனரி இயக்கத்தில் அவர் இணைந்தார். 1983இல் பாரிப்படாவில் இவ்வியக்கத்தின் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்டார். மாயூர்பஞ்ச் என்ற பிராந்தியத்திலுள்ள தொழுநோயாளிகள் விடுதியை அவர் அரசில் ஒரு சங்கமாகப் பதிவுசெய்தார். பொதுவான தாதியர் பயிற்சியையும் பேறுகால மருத்துவப் பயிற்சியையும் முடித்திருந்த கிளாடிஸ் அம்மையார் குழந்தைநல மருத்துவப் பயிற்சியையும் எடுத்துக்கொண்டார். 1981இல் Operation Mobilisationஇல் (OM) சேர்ந்த இவ்வம்மையார் 18 மாதங்கள் இந்தியாவில் தங்கியிருந்து பீஹார், ஒடிஸா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலுள்ள கிராமங்களில் சந்திப்புப்பணி செய்து வந்தார். ஒடிஸாவிலுள்ள ஓஎம் குழுவொன்றில் இருந்தபோதுதான் கிரஹாம் அவர்களைச் சந்தித்தார்; 1983 ஆகஸ்டு 6 அன்று இவர்களது திருமணம் நடைபெற்றது.



‘‘புனித நாட்டுப் பயணம்’’ (Holy Land Tour) என்ற பெயரில் கிறிஸ்தவர்களில் ஏராளமானோர் இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்றுவருகின்றனர். மெக்காவிற்கு முகமதியர் புண்ணிய யாத்திரை செல்வது போன்றே கிறிஸ்தவர்கள் எருசலேமுக்குச் சென்றுவருவது ஆகிவிட்டது! மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கு எனது மனைவியும் நானும் பலமுறை ஊழியத்திற்காகச் சென்றிருந்தும், இஸ்ரவேல் நாட்டை எப்படியாவது பார்த்துவிடவேண்டுமென்று துடிக்கவில்லை. ஆனால் இங்கிலாந்தைச் சேர்ந்த உலகப்புகழ்பெற்ற வேதப் பண்டிதர் Rev. J. டேவிட் பாசன் (1930 2020) அவர்கள் எங்களை இலவசப் பயணமாக இஸ்ரவேல் நாட்டிற்குத் தன்னுடன் சென்றுவர அழைப்பு விடுத்தபோது அதனை 2008இல் ஏற்றுக்கொண்டோம். திருமறை அறிஞரான பாசன் போன்ற தேவ மனிதனை நடத்துனராய்க் கொண்ட அச்சுற்றுலா நிகரற்றது எனினும் வேதாகம அகராதிகளை (Bible Dictionaries) வாசித்தே வேதாகமப் பின்னணிகளை அதிகம் தெளிவாய் நான் விளங்கிக்கொண்டுள்ளேன். ‘‘புனித நாட்டுப் பயணம்’’ செல்லத் துடிப்பதற்குப் பதிலாக, சந்திக்கப்படாத, நாகரீகமற்ற, கவனிப்பாரற்ற மக்கள் நடுவில் மிஷனரிகள் பாடுபட்டு உழைக்கும் கன்னி நிலங்களைப் பார்வையிடப் ‘‘புதிய நாட்டுப் பயணம்’’ (Needy Land Tour) மேற்கொள்ள எனது கிறிஸ்தவ நண்பர்களைக் கூவியழைக்கிறேன். நேரில் பார்ப்பதற்கு எதுவும் இணையாகாது (மத் 9:35,36; நெகே 2:13-15). குடும்பமாக நீங்கள் இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்றுவரச் செலவாகும் பல இலட்சம் ரூபாய்களைத் தொலைவிடக் கிராமம் ஒன்றில் ஓர் ஆலயம் கட்டவோ அல்லது மிஷனரிப் பணிக்களம் ஒன்றிற்கு ஒரு வாகனம் வாங்கவோ அன்பளிக்கலாமே! இவ்வித முதலீடுகளை நித்தியம் பாராட்டும்.

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM) 1970களில் நான் தலைமை தாங்கி நடத்திவந்த துவக்கக் காலங்களில் இவ்விதப் புதிய நாட்டுப் பயணங்களை அறிமுகம் செய்தேன். தனிப்பட்ட முறையில் நான் எத்தனையோ தொலைதூர ஆதிவாசிக் கிராமங்களைச் சந்தித்தும், அவற்றில் தங்கியும் வந்திருக்கிறேன். எனது மனைவியும் நானும் 1987 முதல் கர்நாடகம், ஒடிஸா, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய

மாநிலங்களில் தலா ஈராண்டுகள் தங்கிக் கள நிலவரங்களையும் களப்பணியாளரின் பிரச்னைகளையும் நேரடியாகப் புரிந்துகொண்டோம். ‘‘இருளிலும் சாநிழலிலும்’’ உட்கார்ந்திருக்கும் மக்களைக் குறித்த தகவல்கள் எனது மிஷனரிச் சவால் செய்திகளுக்கு அழுத்தம் தருகின்றன (மத் 4:15,16). BYM நடத்தும் வேனிற்கால மிஷனரித் திட்டத்தின்கீழ் மிஷனரிக்களங்களுக்கு ஓரிரு வாரங்கள் சென்றுவந்த வாலிபர், நங்கையர் பலர் மிஷனரிகளாய் மாறியுள்ளனர். இவ்விதக் குழுக்களில் ஒன்றுதான் கொல்லி மலையிலுள்ள ஆதிவாசிகளுக்கு இறையன்பை அறிவிக்க வாழ்காலம் முழுவதையும் செலவழித்த தியாகச் செம்மல் பிராண்ட் அம்மையார் (1879-1975) அவர்களைச் சந்தித்தது. அக்குழுவினருக்குக் கிடைத்த சவால்தான் என்னே! இவ்வம்மையாரின் மகன் Dr. பால் பிராண்ட் (1914-2003) அவர்கள்தான் தொழுநோயால் உருக்குலைந்த உறுப்புகளுள்ளோர் பலருக்குக் கைதேர்ந்த அறுவை சிகிச்சை செய்து அன்னாருக்குப் புதுவாழ்வு அளித்தவர்! தனது அமெரிக்கப் பெற்றோருடன் இந்தியாவிற்கு வந்திருந்தபோதுதான் இளம் நங்கை ஐடா ஸ்கடர் அவர்கள் (1870-1960) வேலூரில் உலகப் புகழ்பெற்ற கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC) நிறுவுவதற்கான தரிசனம் பெற்றார்கள். எங்கள் மகள் எங்களுடன் பல பணிக்களங்களுக்கு வந்திருக்கிறாள். தன்னைப் போன்று பயிற்சி பெற்ற பல ஆலோசகப் பணியாளர்களைவிடக் கள மிஷனரிகளின் போராட்டங்களை அவள் கூடுதல் தெளிவாகப் புரிந்துகொள்வது பெற்றோராகிய எங்களுக்கு ஆச்சரியமாயில்லை. ஜவ்வாது மலையில் பணியாற்றிக்கொண்டிருந்த மூத்த மிஷனரி Rev. Dr. எலியாஸ் (1932- 2021) அவர்களுடன் 1974 ஜூலை மாதத்தில் நாங்கள் செலவிட்ட நாட்களை மறக்கவே முடியாது.

மத்திய கலால் மற்றும் சுங்கத்துறையிலிருந்து உயர் அதிகாரியாய் ஓய்வுபெற்ற எனது நண்பர் J. சாந்தகுமார், பாளையங்கோட்டை, அவர்கள் இந்தியாவின் பல மாநிலங்களுக்கு இதுவரை ஏறத்தாழ 130 புதிய நாட்டுப் பயணங்களை முன்னின்று நடத்திச் சென்றுள்ளார். காடு மேடு கடந்து சென்று கர்த்தர் அன்பைப் பகிர்ந்து அழகாய் நிற்கும் கள



மிஷனரிகளைப் பார்த்து வருவது என்னே அனுபவம்! (ஏசா 52:7). இப்பயணக்குழுக்களில் சென்றவர்கள் தீவிர மிஷனரிப்பணி ஆதரவாளர்களாக அல்லது முழுநேர மிஷனரிகளாக மாறியுள்ளனர். வாகனங்கள், சாதனங்கள், ஆலயங்கள் மற்றும் கட்டிடங்கள் போன்ற வசதிகளை இப்பணிக்களங்கள் அவைகளைச் சந்தித்துச் சென்ற குழுவினர் மற்றும் அவர்களது நண்பர்கள் மூலம் பெற்றுள்ளன. இக்குழுக்களின் விஜயத்தால் கள மிஷனரிகளும் புதிய சபைகளும் பெறும் ஊக்குவிப்பு கொஞ்சநஞ்சமல்ல. இந்திய மிஷனரிச் சங்கம் (IMS), நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB), இந்திய அருட்பணி இயக்கம் (IEM), சுவிசேஷ எதிரொலி மிஷனரி இயக்கம் (GEMS), ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM), இன்றும் இவை போன்ற மிஷனரிச் சங்கங்களின் முன்னோடிப் பணிக்களங்களுக்குத் தங்களது அங்கத்தினர்களடங்கிய ஒரு சில குழுக்களை அனுப்பிவைக்கும்படித் திருச்சபைகளை வருந்திக் கேட்கிறேன். இச்சங்கங்களின் தலைவர்களுடன் நீங்கள் தொடர்புகொண்டால் இவ்விதக் களச் சந்திப்புத் திட்டங்களை உங்களுக்கு அகமகிழ்வுடன் ஒழுங்குசெய்து தருவார்கள். களங்களுக்குச் சென்று திரும்பும் குழுக்கள் தாங்கள் கேட்ட, கண்ட, அனுபவித்த காரியங்களைச் சபையினருடன் பகிர்ந்துகொள்ளும்போது நடப்பது உங்களை வியப்பில் ஆழ்த்தும். கிரஹாம் ஸ்டெயின்ஸ் திரைப்படத்தைப் பார்க்கும்படி ஆவிக்குரிய சபைகள் எனப்படும் சில தங்கள் விசுவாசிகளை ஊக்குவிக்கவில்லை; ஏனென்றால், திரையரங்குக்குள் நுழைவதே பாவமாம்! ஐயகோ, இவ்வித ஆன்மீகக் குருட்டுத்தனத்திலிருந்தும் பின்தங்கிய நிலையிலிருந்தும் எப்பொழுதுதான் வெளிவருவோமோ?

வெளிநாடுகளில் வாழும் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு (மீஇஇ) ஒரு வார்த்தை: இந்தியாவிலுள்ள உங்கள் உற்றார், உறவினர்களுக்கு அன்பளிக்கும்படி விடுமுறையில் வருமுன் வெளிநாடுகளில் தின்பண்டங்கள் மற்றும் பொருட்கள் வாங்கச் செல்லும்போது தொலைவிடங்களில் பணியாற்றும் மிஷனரிகள் குடும்பங்களுக்கும் உசிதமான சில பொருட்களை வாங்க மறவாதீர்கள். வெளிநாடுகளிலிருந்து நீங்கள் கொண்டுவரும் பொருட்களால் உங்கள் சொந்த பந்தங்களை ஒரு

போதும் திருப்தி செய்துவிடமுடியாது என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறேன்! விடுமுறையின்போது ஒரு வாரமாவது மிஷனரிப் பணிக்களம் ஒன்றில் செலவிடவேண்டுமென்று இந்தியாவில் வந்திறங்குமுன் திட்டமிட்டுவிடுங்கள்; அதை மாற்றவே மாற்றாதீர்கள். பணிக்களங்களுக்கு உங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள். ஆதிவாசிப் பிள்ளைகளும் மிஷனரிக் குழந்தைகளும் உடைந்துபோன பொம்மைகளைக்கூட எவ்வளவு பிரியமாய் வைத்து விளையாடுகிறார்கள் என்பதை உங்கள் பிள்ளைகள் பார்க்கட்டும்! இந்தியாவிலேயே வேலை செய்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் விடுமுறைப் பயண உதவித் தொகையை (LTC) மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்று வரப் பயன்படுத்தலாமே.

### 3. எளியவரோடு அடையாளப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஒடிஸாவிலுள்ள ஆதிவாசிகளுக்கு ஏறத்தாழ 35 ஆண்டுகள் பணியாற்றி ஸ்டெயின்ஸ் அவர்கள் கடவுளுக்குத் தொண்டாற்றினார்கள். தரித்திரத்தில் வாடும், அதிலும் குறிப்பாகத் தீண்டப்படாத, தொழுநோயாளிகளான, பழங்குடியினரிடையே வாழ்ந்து அவர்களுக்குச் சேவை செய்தார். இந்தியாவில் தீண்டப்படாதவர் இருவகையினர்: ஒன்று ஜாதி அடிப்படையிலானது, அடுத்தது வியாதி சார்ந்தது. தொழுநோயாளிகளை ஸ்டெயின்ஸ் அவர்கள் ''தொட்டு'' அவர்களுக்குச் சிகிச்சையளித்தார். தாழ்மையான இப்பணியை அவர் தெரிந்துகொண்ட விதம் இதோ: வேரா ஸ்டீவன்ஸ் என்ற அம்மையார் மாயூர்பஞ்ச் பகுதியிலுள்ள தொழுநோயாளிகளுக்கென்றே தனது வாழ்க்கையை ஊற்றிவிட்ட ஓர் ஆஸ்திரேலிய மிஷனரி. இவ்விதச் சேவையின் அத்தியாவசியத்தை இவ்வம்மையார் ஸ்டெயின்ஸ் அவர்களுடன் பகிர்ந்துகொண்டார். ஒரு சில ஒளிப்படங்கள் மூலம் அவர் இதனைச் செய்தார். தனக்குத் தேவன் நியமித்தது இப்பணிதான் என்பது ஸ்டெயின்ஸ் அவர்களுக்கு ஒரு காலைத்தியானத்தின்போது உறுதியாயிற்று. அன்று அவர் வாசித்த பகுதி மாற்கு 1:40-42. இயேசு மனதுருகி ஒரு குஷ்டரோகியைத் ''தொட்டுச்'' சுகமாக்கியது ஸ்டெயின்ஸின் இதயத்தைக் கவ்வியது. இவ்விதப்பணி தன்னை வெகுவாய் வாட்டியெடுக்கும் என்று



அறிந்திருந்தும், நிறையப் பணம் சம்பாதிக்கக்கூடிய ஓர் உலக வேலை வாய்ப்பைத் துச்சமாய் எண்ணி, *''அன்பரே வந்தேன், அர்ப்பணித்தேன் எந்தன் வாழ்க்கையினை''* என்று கிரஹாம் ஸ்டெயின்ஸ் தேவனது பாதங்களில் விழுந்தார். அநித்தியமான சுகபோக வசதிகளை ஆஸ்திரேலியாவில் அனுபவிப்பதைவிட இந்திய மக்களோடு இன்னல்களை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டார் (எபி 11:25). இந்தியாவில் இன்னும் தொழுநோய் முழுமையாய் ஒழிக்கப்படவில்லை. தேசியத் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NLEP) தகவலின்படி 2017-2018இல் தமிழகத்தில் மட்டும் 4277 பேருக்குப் புதிதாய்த் தொழுநோய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதரன் சபைகளைச் சார்ந்த ஓய்வு நாள் பள்ளிகள், கடலோரக்குழு ஊழியங்கள், கிறிஸ்தவத் தாதிமார் ஐக்கியம் போன்றவற்றில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த கிளாடிஸ் அம்மையார் மகிழ்வுடனும் மனநிறைவுடனும் தனது கணவரின் அழைப்பை நிறைவேற்ற அவருக்கு முழு ஒத்துழைப்பு தந்தார்கள். இந்த மிஷனரித் தம்பதியர் தங்கள் மகள் எஸ்தரையும், மகன் பிலிப்புவையும் பாரிப்படாவிலிருந்து 2000 கி.மீ. தொலைவிலுள்ள ஊட்டிக்கு விடுதிப்பள்ளியில் தங்கிப் படிக்க அனுப்பி வைத்தனர். பெற்றோருக்கு இப்பிரிவு நிசமாகவே வேதனைதான். எஸ்தருக்கும், பிலிப்புவுக்கும் தொழுநோயாளிகளுக்கு ஆற்றப்படும் பணி வெகுவாய்ப் பிடித்திருந்தது. கடைசி மகன் தீமோத்தேயுவுக்குக் கிரிக்கெட் என்றால் அலாதிப் பிரியம். இம்மூன்று பிள்ளைகளும் ஆதிவாசிப் பிள்ளைகளோடும், தொழுநோயாளிகளின் பிள்ளைகளோடும் சரளமாய்ப் பழகி விளையாடுவதில் ஆனந்தம் கண்டார்கள்.

கிரஹாம் ஸ்டெயின்ஸ் திரைப்படத்தில் தீமோத்தேயுவிடம், ஒருவர் கேட்டது: ''நீ ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருக்கிறாயா?'' அதற்கு அவனது பதில்: ''இல்லை, நான் தூசியிலிருந்து வந்திருக்கிறேன்!'' தொடர்ந்து அவன் சொன்னது: ''சச்சின் தெண்டுல்கர் போல நான் இந்தியாவிற்காய் ஆடப்போகிறேன்!'' இப்படித்தான் மக்களோடு நாம் ஒன்றித்துவிடவேண்டும்! Total Identification! ஸ்டெயின்ஸ் தம்பதியர்

1997இல் சில நாட்கள் ஆஸ்திரேலியா சென்றிருந்தபோது ஒடிஸா விலிருந்த சொந்தவூர் உணர்வு அவர்களுக்கு இல்லையாம்!

மூத்த அப்போஸ்தலராகிய யாக்கோபும், பேதுருவும், யோவானும் முதல் வரிசை மிஷனரிகளாகிய பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஐக்கியத் திற்கு அடையாளமாய் வலது கை கொடுத்தபோது அவர்கள் சொன்ன ஒரே காரியம், ''தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்'' என்பதே (கலா 2:9,10). தானதர்மமே கிறிஸ்தவம் என்று சொல்லிவிடமுடியாது; ஆனால் **கிறிஸ்தவமே தானதர்மம்தான்!** Charity may not be Christianity; but Christianity is charity! மக்கள்மீது தமக்கிருந்த மனதுருக்கத்தினாலேயே கிறிஸ்து அநேக அற்புதங்கள் செய்தார். ஸ்டெயின்ஸ் அவர்களது மிஷனரிப்பணிச் செயல்பாடுகள் அத்தனையும் மதமாற்றத்தை மனதிற்கொண்டவை என்பதே அவர்மீது சாட்டப்பட்ட முக்கியக் குற்றச்சாட்டு. அவர் செய்த பணிகள் யாவும் மனதுருக்கம் மற்றும் மனவிரக்கம் சார்ந்தவை, மதமாற்றத்தைக் குறிவைத்தவை அல்ல என்பதே ஸ்டெயின்ஸ் அவர்களைப்பற்றி வெளிவந்த திரைப் படத்தின் முக்கிய செய்தியாகும். நமதாண்டவர் பத்து தொழுநோயாளி களைச் சுகப்படுத்தினார்; அவர்களில் ஒருவன்தான் அவரிடம் திரும்பி வந்து ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டான் (லூக் 17:11-19). மனம் மாறுவோரின் சதவீதம் இயேசுவுக்கே பத்துதான் என்றால் கருணையுள்ளத்துடனும் தானதர்மச் சிந்தையுடனும் பணியாற்றும் மிஷனரிகளுக்கு இந்தச் சதவீதம் இன்னும் எவ்வளவு குறைவாயிருக்கும்! கரிசனையும் கனிவும் நிறைந்த மிஷனரிகளின் தன்னலமற்ற சேவை யானது மக்களைக் கிறிஸ்துவின்பால் ஈர்க்குமானால் அது தவறா? மக்களை இழுக்கும்படிப் பொய்ப் பிரச்சாரம் செய்யும் பதவி நாட்டமும் பணப் பைத்தியமும் கொண்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக அல்லவோ தடைச்சட்டம் கொண்டுவர வேண்டும்? கொசுவை வடிகட்டி ஆனால் ஒட்டகத்தை விழுங்கும் குருட்டுத் தீவிரவாதிகளே, உங்களுக்கு வெட்கம்! (மத் 23:24).

தங்களது தானதர்மச் செயல்களை அதிகரிக்கும்படி எங்குமுள்ள கிறிஸ்தவருக்கு அழைப்பு விடுக்கிறேன். உங்கள் ஜெபங்களும்



தர்மங்களும் தேவனுக்குமுன் சம முக்கியத்துவம் பெறுகின்றன (அப் 10:2,4,31; எபி 13:15,16). இரத்தசாட்சி மரணமும் தானதர்மமும் அன்பின் வெளிப்பாடாய் இருக்கும்போது அவையிரண்டும் தேவ னுக்குமுன் சமமாக அருமையானவை (1 கொரி 13:3). தானதர்மம் செய்வதில் குறைவுபட்டால் வெட்டி எரிக்கப்படவேண்டிய கனியற்ற மரம்தான் நீங்கள் (லூக் 3:9-11). தானதர்மமற்ற உங்கள் உபவாச ஜெபங் களெல்லாம் அர்த்தமற்றவை (ஏசா 58:5-10; 1:15-17). தானதர்மத்தில் தவறியதே சோதோமின் பாவம் (எசேக் 16:49). இரட்சிப்பிற்குத் தான தர்மம் ஒரு நிபந்தனையல்ல என்பது உண்மைதான்; ஆனால் மெய்யான மனந்திரும்புதலுக்கு அது ஒரு நிரூபணமாகும் (லூக் 19:8,9). நமக் கிருப்பதில் பாதியைத் தானதர்மத்திற்காய்க் கொடுத்துவிடவேண்டும் என்பது தீர்க்கர்களிலெல்லாம் பெரியவனாகிய திருமுழுக்கினன் யோவானின் உபதேசம் (லூக் 3:11). இயேசுவைச் சந்தித்தவுடன் அவ்வுபதேசத்தைச் சகேயு மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டான் (19: 8,9). இது நமக்கு எட்டாத உயரமென்று எண்ணினால், திருச்சபைக்கும் திருப்பணிகளுக்கும் முதல் தசமபாகத்தைக் கொடுத்துவிட்டு, இன் னொரு தசமபாகத்தை ஏழை எளியவரைத் தூக்கியெடுக்கக் கொடுத் தாலென்ன? (உபா 26:12,13; 14:29; 16:14; 24:19-21; நெகே 8:10). இச்சவாலை மேற்கொண்டால் நம்மில் எத்தனை பேருக்குத் தினசரி உணவு இல்லாது போய்விடும்? எளியோர், தேவையிலிருப்போர் மற் றும் ஒதுக்கப்பட்டோருக்கு நாம் செய்வது அல்லது செய்யத் தவறு வது என்பதே நமது நித்தியத்தை நிர்ணயிக்கும் (மத் 25:31-46). எவ்வளவு பயங்கரம்!

*பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும் பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து, இயேசு கனிந்து திரிந்தனரே!*
*நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை, நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள், நிஷ்டூரத்துக்குள்,*
*படுகுழிக்குள் விழுந்தனரே!*

## 4. இறையழைப்பிற்குக் கீழ்ப்படியுங்கள்.

உடல் வேதனையில் அவதிப்படும் மக்களுக்கு அயராது தொண்டாற்றிக்கொண்டிருந்த ஸ்டெயின்ஸ் அவர்கள் அவரைச் சுற்றி வாழ்ந்துகொண்டிருந்த மக்களை மூடியிருந்த ஆன்மீக அந்தகாரத்தைக் குறித்தும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். ஆஸ்திரேலியாவில் வெளிவரும் *New Life Magazine*இல் 1977இல் நேர்முக உரையாடல் ஒன்றில் அவர் கூறியது: ''பேய்ப் பிசாசுகளிலிருந்து விடுதலை பெறுவதற்காய்ச் சிறுவர் சிறுமிகளின் வயிற்றில் பழுத்த இரும்புக் கம்பிகளால் மந்திரவாதிகள் போட்ட சூட்டின் தழும்புகளைப் பார்க்கும்போது இந்த மக்களை எப்படியாவது ஒளிக்குள் கொண்டுவரவேண்டுமென்று மிஷனரிகள் துடியாய்த் துடிப்பர். நரபலி இன்னும் பழக்கத்தில் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு அரசு தடை விதித்திருந்தாலும் ஆங்காங்கே அது நடந்துகொண்டுதானிருக்கிறது. எங்களது வீட்டிலிருந்து 80 கி.மீ. தொலைவில் ஒரு தடுப்பணை கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு நரபலி செலுத்தாவிடில் அணை உடைந்துவிடுமென்று மக்கள் நம்புகின்றனர். எனவே எப்படியாவது ஒருவரைக் கடத்திக்கொண்டுபோய்ப் பலி கொடுத்து கான்கிரீட்டில் புதைத்துவிடுகின்றனர்.'' மனுக்குலத்தை வாட்டி வதைக்கும் பிரச்னைகளுக்குக் கிறிஸ்துதான் பதில் என்று ஸ்டெயின்ஸ் அவர்கள் ஆணித்தரமாய் நம்பினார்கள். அவரது அழைப்பிற்கு உந்துவிசையாய் அமைந்தது இவ்வுணர்வே.

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் அவருக்காய் மனிதரைப் பிடிப்பவராய்த் திகழவேண்டும் (மத் 4:19). ''என் பின்னே வாருங்கள்; உங்களை ஆசீர்வதிப்பேன்'' என்ற வசீகர வார்த்தைகளை ஒருபோதும் இயேசு சொல்லவில்லை. மாறாக, ''என் பின்னே வாருங்கள்; உங்களைப் பிறர்க்கு ஆசீர்வாதமாக்குவேன்'' என்றே அவர் அழைத்தார். இங்குதான் நாம் தலைகீழாய்ப் புரிந்துவிட்டோம். சுவிசேஷக் கூட்டங்களில் இன்று கொடுக்கப்படும் அழைப்புகளில் இப்பரிமாணம் இல்லாது போயிற்று. கிறிஸ்துவுக்காகவும், யாருக்காய் அவர் உயிர் கொடுத்தாரோ அவர்களுக்காகவும் பணியாற்ற அழைக்கப்படாத கிறிஸ்தவன் எவருமில்லை. கிறிஸ்து இருக்கும் ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனரி விசை (missionary force); கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனரிக் களம் (mission field). நண்பரே, தனியாள் ஆத்துமாதாயப்பணிக்கும் அயலக நற்செய்தியறிவிப்புப்பணிக்கும் உங்களை அர்ப்பணியுங்கள். உங்கள் நண்பர், தொடர்புகள், உடன் பணியாளர் போன்ற யாவருக்கும் கிறிஸ்துவை அறிமுகம் செய்யுங்கள். அவரைக் குறித்து வெட்கப்படாதிருங்கள் (மாற் 8:38; ரோ 1:16). தெருமுனைகளிலும் சந்தைவெளிகளிலும் நற்செய்திப் பிரசுரங்களை விநியோகியுங்கள். கிராமங்களுக்கும் குடிசைப்பகுதிகளுக்கும் குழுக்களாய்ச் செல்லுங்கள். கணவன்-மனைவியே நல்லதொரு குழுதான் (ரோ 16:3,4). பாவிகள் இருக்குமிடத்திற்கே புறப்பட்டுச் செல்லுங்கள்! நசுக்கப்பட்டோரும் ஒதுக்கப்பட்டோரும் வாழும் பகுதிகளுக்குச் செல்லுங்கள். இறையன்பை அறிவிக்கத் துப்புரவுத் தொழிலாளர் வாழும் பகுதிக்கு எனது தாயார் (1924-1981) தனது சிநேகிதிகளுடன் வாரந்தோறும் செல்லுவார்கள். எங்கள் சொந்தவூராகிய நாசரேத்தில் இம்மக்கள் தீண்டப்படாதவர்கள்.

விவிலிய மொழிபெயர்ப்புச் சங்கங்களுக்கு உதவிக்கரம் நீட்டும்படி இலக்கியப் பட்டதாரிகளைக் கூவியழைக்கிறேன். ஹோ என்ற ஒடிஸா ஆதிவாசி மொழியொன்றில் பைபிளை மொழியாக்கம் செய்ய ஸ்டெயின்ஸ் உதவினார்; புதிய ஏற்பாடு முழுவதையும் அச்சுப்பிழை திருத்தமும் செய்தார். அவர் ஒடியா பேசுவதைப் பார்வையற்ற ஒருவன் கேட்பானானால் அவர் ஓர் ஆஸ்திரேலியர் என்று நினைக்கவே மாட்டான்! இந்தியரில் 40 சதவீதத்திற்குக் கூடுதலானோர் பேசும் இந்தி மொழியைக் கற்கும்படி உடன் கிறிஸ்தவரைக் கெஞ்சிக் கேட்கிறேன். தமிழகத்தைத் தவிர எந்த மாநிலத்திலும் இந்தி பேசிச் சமாளிக்கலாம். எனக்கு இந்தி பேசத் தெரியாதது வெட்கம்! எனது மனைவியும் நானும் ஒடிஸாவில் 1990 முதல் ஈராண்டுகள் தங்கியிருந்தும் ஒரு வாக்கியம் கூட என்னால் ஒடியாவில் பேசமுடியவில்லை. ஒடியா மொழியில் சிரிக்க மட்டும் கற்றுக்கொண்டேன்! பிரசங்கி என்ற வகையில் அந்தந்தப் பிராந்திய மொழிபெயர்ப்பாளர்களின் உதவியுடன் இந்தியாவெங்கும்

சமாளித்துவிட்டேன். எனது மனைவிக்கு ஒடியா, கன்னடம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் பேசமுடியும். அந்தந்தப் பிராந்திய மொழி களில் சரளமாய்ப் பேசப் பழகுவது மாற்றுக்கலாச்சாரச் சூழலில் பணியாற் றும் மிஷனரிகளுக்கு நாம் நினைப்பது போன்று அவ்வளவு எளிதல்ல. தமிழ்க் கிறிஸ்தவ நண்பரே, நீங்களாகவே வேலையிடமாற்றம் கேட்டு வட மாநிலங்களுக்குச் சென்று ஆங்காங்கே இறையரசிற்காய்த் தாக்கம் ஏற்படுத்துங்கள். தங்களது மகனோ மகளோ வட இந்தியாவிலிருந்து தமிழகம் திரும்பிவிட வேலையிடமாற்றத்தைப் பெற்றோர் கேட்டால் அதற்காய் ஜெபிக்காதீர்கள் என்று பிரசங்கிமாரை வேண்டிக்கொள் கிறேன்.

ஸ்டெயின்ஸ் அவர்களது இரு மகன்களாகிய பிலிப்புவும் (10) தீமோத்தேயுவும் (6) இன்று (2019) உயிரோடிருந்திருந்தால், அவர்களுக்கு முறையே 30 மற்றும் 26 வயதாகியிருக்கும்; இருவரும் இன்று 78 வயதாகியிருக்கக்கூடிய தங்களது அப்பாவின் அடிச்சுவடுகளில் இந்தியாவில் பணியாற்றும் மிஷனரிகளாய் மாறியிருப்பர் என்று முழுக்க முழுக்க நம்புகிறேன். எனது பிரிய வாலிபரே, நங்கையரே, இந்த வெற்றி டத்தை நிரப்ப முன்வருவீர்களா? பிரிய பெற்றோரே, ஒரு பிள்ளையை யாவது அன்பர் பணிக்கு அனுப்ப மாட்டீர்களா? (1 சாமு 1:27,28).

*பிள்ளைகளே, வாலிபரே, தேவனைத் துதியுங்கள்;*
*வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்;*
*பெரியவரே, பிரபுக்களே, தேவனைத் துதியுங்கள்;*
*செல்வங்களை இயேசுவுக்காய்ச் செலுத்தியே துதியுங்கள்!*

மதிப்பிற்குரிய கிறிஸ்தவ டாக்டர்களே, மருத்துவர் இல்லாத இடங் களுக்குச் செல்லுங்கள். திருச்சபைகள் மற்றும் பேராயங்களின் ஆதர வுடன் வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் (CMC) படிக்க நேர்முகத் தேர்வுக்கு வரும் வாலிபர் நங்கையரிடம் வழக்கமாய்க் கேட்கப்படும் கேள்வி, ''நீ ஏன் டாக்டராக விரும்புகிறாய்?'' அவர்கள் கொடுக்கும் உடன் பதில், ''நான் ஒரு மிஷனரி டாக்டராக விரும்பு கிறேன்'' என்பதே. இப்படித்தான் பதில் சொல்லவேண்டுமென்று பயிற்சி



பெற்றிருக்கிறார்கள் போலும்! ஆனால், CMCஇல் பட்டம் பெற்று மருத்துவ வசதியில்லாத இடங்களுக்குப் பணியாற்றச் செல்லும் டாக்டர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். எனவேதான் வட இந்தி யாவிலுள்ள 1200 கிறிஸ்தவ மருத்துவமனைகளில் 900க்கும் மேற் பட்டவை மூடப்படவேண்டியதாயிற்று. இன்னும் 300 மருத்துவமனை கள் மரணப்படுக்கையில் இருக்கின்றன. ஒருவேளை வெளிநாடுகளில் ஊழியம் செய்யப் பாரமும் அழைப்பும் உண்டானால் டாக்டர்களும் மருத் துவமனைகளும் பெருத்துள்ள அமெரிக்காவிற்குச் செல்வானேன்? ஆப்பிரிக்காவிற்குப் போனாலென்ன? தலைசிறந்த இந்தியப் பிரசங் கிமார் பலர் அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்து, அங்கிருந்து இந்தியா விற்கு வந்து ''மிஷனரிக்'' கன்வென்ஷன்களில் செய்தி கொடுப்பதை எனது குருவி மூளையால் புரிந்துகொள்ளமுடியவில்லை! நகைச் சுவைதான்! அமெரிக்காவிலிருந்து Dr. நெல்சன் பெல் (1894-1973) அவர்கள் சீனாவிற்கு மருத்துவ மிஷனரியாய்ச் சென்று, தங்கள் மகள் ரூத்தை ஒரு மிஷனரிப் பணிக்களச் சூழலில் வளர்த்து, அவர்களைப் பண்டிதர் பில்லி கிரஹாமிற்கு மணமுடித்தனர். பின்னர் நடந்தது சரித்திரம். இந்திய மிஷனரி இயக்கங்கள் MBBS டாக்டர்களைத் தேடி ஏமாற்றமடைகின்றன. தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பல் மருத்துவர் (28) கடந்த நான்கு ஆண்டுகளாக ஒடிஸாவிலுள்ள பின்தங்கிய கிராமங்களில் மிஷனரியாகப் பணியாற்றி வருகிறாள். அர்ப்பணிப்பு நிறைந்த பெற் றோரால் ஊழியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்நங்கைக்கு வாழ்க்கைத்துணைவராக ஒரு மிஷனரி டாக்டர் கிடைத்தபாடில்லை. குழந்தை நல மருத்துவரான எனது மனைவி ஒடிஸாவில் பல ஆண்டு கள் செலவழித்து, பட்டினிச் சாவுகளையும், வயிற்றுப் போக்கினால் கூட ஏற்படும் இறப்புகளையும் தடுக்கத் தன்னால் இயன்றதைச் செய்தாள். BYMஇன் சார்பில் 2001இல் அவள் துவக்கிய *''ஒடிஸா பசிப்பிணி நிவாரணத் திட்டம்'' (Feed Odisha)* நாதியற்றோருக்குத் தொடர்ந்து உதவி வருகிறது. தீர்க்கன் எரேமியா கேட்ட கேள்வியையே நானும் கேட்கிறேன்: ''இதையெல்லாம் குறித்து உங்களுக்குக் கவலை யில்லையா?'' (புல 1:12).

தமிழகத்திலும் அண்டையிலுள்ள தென் மாநிலங்களாகிய ஆந் திராவிலும், கேரளத்திலும் சுவிசேஷகர், பிரசங்கிமார் மற்றும் சபை மேய்ப்பர்களின் எண்ணிக்கை கணக்கில்லாமல் பெருகி வருகிறது. வட இந்தியாவில் மேய்ப்பனில்லாத ஆடுகள்; தென்னகத்தின் பல பகுதி களிலோ ஆடுகளில்லாத மேய்ப்பர்கள். என்னே அநியாயம்! சந்திக் கப்பட்டவர்களையே சந்திப்பதும், நற்செய்தியறிவிக்கப்பட்டவர் களுக்கே நற்செய்தியறிவிப்பதும், பிரசங்கிக்கப்பட்டவர்களுக்கே பிரசங்கிப்பதும், ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுப்பதும், ஆறுதல்படுத்தப்பட்டவர்களையே ஆறுதல்படுத்து வதும், கவனியாது விடப்பட்டோரையோ கவனியாது விட்டுவிடுவதுமே தென்னகத்தில் நமது வழக்கமாயிற்று! கிறிஸ்தவ ஊழியரிடையே, அப்பப்பா, போட்டிக்குப் பஞ்சமேயில்லை. கிறிஸ்தவர்கள் கொடுக்கும் காணிக்கையில் 95 சதவீதத்திற்கும் மேல் கிறிஸ்தவர்களுக்காகவே செலவிடப்படுகிறது. இதுதான் பாவங்களிலெல்லாம் பாவம். இளம் ஊழியரும் நடுவயது ஊழியரும் வடநாடு சென்று அங்கே கூடாரம் போடட்டும். தென்னகத்திலேயே பிரம்மாண்ட கட்டிடங்கள் கட்ட கல்லிலும் செங்கல்லிலும் பணத்தை முடக்காதீர்கள். ''மற்ற நகர்கள்,'' ''வேறே ஆடுகள்'' என்ற இயேசுவின் தரிசனம் எப்பொழுதுதான் நமது இரத்தத்தில் கலக்குமோ? (லூக் 4:42,43; யோ 10:16). சபை மேய்ப்பரே, மாதத்திற்கு ஒரு ஞாயிறு ஆராதனையிலாவது மிஷனரிச் சவால் செய்தி இருக்கட்டும். ஏழு சபைகளில் கிறிஸ்துவால் கடிந்துகொள்ளப்படாத இரு சபைகளும் மிஷனரிச் சிந்தையுள்ளவை (வெளி 2:8-10; 3:7-10).

## 5. இறக்கும்வரை உண்மையுள்ளவர்களாயிருங்கள்.

எதிர்ப்புகள், உபத்திரவங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் எவ்வளவோ இருந்தாலும் எளியோர் மற்றும் தேவையிலுள்ளோர் நடுவில் கர்த் தருக்குள்ளான மகிழ்ச்சியோடு ஸ்டெயின்ஸ் தம்பதியர் தங்கள் பணி யைத் தொடர்ந்தனர். கிளாடிஸ் அம்மையாரும் இளையவன் தீமோத்தே யுவும், விடுமுறைக்கு ஊட்டி பள்ளியிலிருந்து வந்திருந்த எஸ்தரோடும், பிலிப்புவோடும், கிரஹாம் அவர்களின் பிறந்த நாளை நான்கு



நாட்களுக்கு முன்னர்தான் (18 ஜனவரி) கொண்டாடினார்கள். தனது தந்தை மற்றும் தம்பிமாரின் சடலங்களருகே நின்ற 13 வயது எஸ்தர் சொன்னது: ''கடவுளுக்காய் மரிக்க எனது தந்தைக்குக் கிடைத்த தகுதிக் காய் நான் பெருமையடைகிறேன்!'' இயேசுவின் பெயருக்காய் அவ மானமும் பாடும் அனுபவிக்கப் பாத்திரமாய் எண்ணப்பட்டதற்காக அகமகிழ்ந்த ஆதி அப்போஸ்தலரின் மனப்பான்மை அவளுக்குக் கிடைத்தது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது (அப் 5:41). துக்கச் செய்தி கேட்டவுடன் கிளாடிஸ் அம்மையார் சொன்னது: ''எனது கணவர் மரிக்க வேண்டுமென்பது தேவனது ஏகாதிபத்தியச் சித்தமாயிருந்திருக் கிறது!'' அடக்க ஆராதனையில் கிளாடிஸ் அம்மையாரும் மகள் எஸ்தரும் சந்தாலி மொழியில் *"There's not a friend like the lowly Jesus"* என்ற பாடலைப் பாடினர்.

*உம்மைப்போல் யாருண்டு, எந்தன் இயேசு நாதா,*
*இந்தப் பார்தலத்தில் உம்மைப்போல் யாருண்டு?*

தீக்கிரையாக்கப்படும் ஒரு சில நாட்களுக்குமுன் சிறுவன் பிலிப்பு திரும்பத் திரும்பப் பாடிய பாடல்:

*"When the roll is called up yonder, I'll be there!"*
*பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி*
*பாடி மகிழ்ந்தாடி அங்கே கூடிட*
*பரமானந்த கீதமும் அங்கெழும்ப*
*நான் அங்கிருப்பேனே ... என் இயேசுவுடன்!*

அடக்க ஆராதனையில் தாயும் மகளும் பாடிய இன்னொரு பாடல்:

*Because He lives, I can face tomorrow;*
*Because He lives, all fear is gone;*
*Because I know He holds the future;*
*And life is worth the living, just because He lives!*

*என் மீட்பர் உயிரோடிருக்கையிலே*
*எனக்கென்ன குறையுண்டு, நீ சொல் மனமே!*

*கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,*
*கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்;*
*மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்,*
*மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும்!*

பெற்றோரே, இவ்விதப் பாடல்களையெல்லாம் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். பொருளாதாரக் கண்ணோட்டத்திலேயே சுழலும் இவ்வுலகில் அவர்கள் விண்ணகச் சிந்தையுடன் வளர இது உதவும். பத்து வயதே நிரம்பியிருந்த பிலிப்பு தனது பள்ளிக் கையேட்டில் ''தேவனுக்கு மகிமை செலுத்தவே வாழ விரும்புகிறேன்'' என்று எழுதி வைத்திருக்கிறான். பிள்ளைகள்மீது பெற்றோர் ஏற்படுத்தவேண்டிய பரிசுத்தத் தாக்கம் இன்று குறைந்துவருகிறது. விவிலியச் சத்தியங்களை உங்கள் குமாரருக்குள்ளும் குமாரத்திகளுக்குள்ளும் புகுத்த எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள்?

தனது செயலினால் அல்ல, தனது எதிர்ச்செயலினாலேயே கிறிஸ்தவன் அறியப்படுவான். முழுமனதுடன் கிளாடிஸ் அம்மையார் சொன்னது: ''எனது கணவரையும் மகன்களையும் கொன்றவர்களை நான் மன்னித்துவிடுகிறேன். எனது இருதயத்தில் எவ்விதக் கசப்புணர்வும் கிடையாது. ஆனால் அவர்களது பாவங்களை இயேசு மட்டுமே மன்னிக்க முடியும்.'' இச்சம்பவம் நடைபெற்றதால் இந்தியாவை விட்டுப் போய்விடுவீர்களா எனக் கேட்கப்பட்டபோது அம்மையார் அளித்த பதில்: ''இந்த நாட்டிற்காக எனது கணவரும் பிள்ளைகளும் தங்கள் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாதான் எனது இல்லம். இங்கிருக்கவே எனக்கு விருப்பம்!'' தொடர்ந்து அவர்கள் சொன்னது: ''எனக்கு ஒரே யொரு ஆசையுண்டு: நமது பாவங்களுக்காய்த் தமது ஜீவனைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவுடன் இந்நாட்டின் குடிமகன் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் உறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவைப் போன்று பரிவுணர்வுடன் பணியாற்றத் தங்கள் வாழ்க்கையை ஊற்றிவிட ஆயத்தமாயிருக்கும் பணியாளர்கள் திரளாய் எழும்பவேண்டும் என்பதே நமது ஜெபமாயிருக்கட்டும்.'' சில மாதங்கள்



கழித்து கிளாடிஸ் அம்மையாரை விமான நிலையம் ஒன்றில் சந்தித்தேன். எப்பொழுது பார்த்தாலும் சபைத் தலைவர்களாலும் பத்திரிகையாளர்களாலும் சூழப்பட்டிருப்பதால் தனித்துத் துக்கிக்கவே தனக்கு நேரமில்லை என்றார்கள். பிள்ளைகள் இறந்தபின் பெற்றோர் இருப்பதைப் போன்ற வேதனை எதுவுமில்லை. 2004ஆம் ஆண்டுவரை தொழு நோயாளிகளுக்குச் சேவை செய்துவிட்டுப் பின்னர் அம்மையார் ஆஸ்திரேலியா திரும்பினார்கள். இந்தியாவின் மிகவுயர்ந்த நான்காம் பட்டமாகிய *''பத்மஸ்ரீ''* (Padma Shree) என்பது அம்மையாருக்கு வழங்கப்பட்டது. சமூக நீதிக்கென்ற அன்னை தெரசா நினைவுப்பட்டமும் அவர்களுக்கு 2016இல் அளிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக தனது கணவரும் மகன்களும் இரத்தசாட்சிகள் என்ற வகையில் ஜீவ கிரீடம் அணிவிக்கப்பட்டுக் கிறிஸ்துவாலேயே சீக்கிரம் கவுரவிக்கப் படவிருக்கும் குதூகலம் நிறைந்த நன்னாளை எதிர்நோக்கியிருக்கிறார்கள் (வெளி 2:10). மகள் எஸ்தர் இப்பொழுது ஞூ. ஸ்காட் என்பவரை மணந்து, நான்கு குழந்தைகளுக்குத் தாயாகியுள்ளாள். பிலிப்புவைப் போலவே அவளது மகன் இருக்கிறான்! *"The Least of These"* என்ற கிரஹாம் ஸ்டெயின்ஸ் திரைப்படத்தை இம்மாதம் (மே 2019) தாயும், மகளும், மருமகனும், ஒரு பேத்தியுடன் ஆஸ்திரேலியாவில் பார்த்தார்கள். எஸ்தரும் பிலிப்புவும் படித்த ஊட்டி எபிரோன் பள்ளியின் கலையரங்கம் "Staines Memorial Hall" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முதலாம் இரத்தசாட்சியாகிய ஆபேல் கொலை செய்யப்பட்டபோது அவனது இரத்தத்தின் சத்தம் நிலத்திலிருந்து சிருஷ்டி கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது (ஆதி 4:10). இறைமகனாகிய இயேசு கொலை செய்யப்பட்டபோது, பூமி அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தன (மத் 27:51ஆ). ஸ்டெயின்ஸ் அவர்கள் தீக்கிரையாக்கப்பட்ட அதே ஆண்டில் பயங்கரமானதொரு சூறாவளி ஒடிஸாவைத் தாக்கியது. இப்பிராந்தியத்தில் இவ்வளவு கொடூரமான தாக்குதல் நடந்ததில்லை எனக் கூறப்படுகிறது. தமது ஊழியருக்கெதிரான கொடூரச் செயல்களை ஆண்டவர் கண்டும் காணாமலும் இருக்கமாட்டார்; ஆனால் பொறுமையாயிருப்பார் (உபா 32:43; 2 இரா 9:7; சங் 79:10; வெளி 16:6; 19:2). ''விண்ணகத்

தில் வீற்றிருக்கிறவர் எள்ளி நகைப்பார்; சதியாளர்களையும் சங்கடப் படுத்துவோரையும் ஆண்டவர் ஏளனம் செய்வார். தமது கோபத்தில் அவர்களுடன் பேசி, தமது கடுஞ்சினத்தால் அவர்களைக் கலங்கப் பண்ணுவார்'' (சங் 2:4,5).

தீவிரமாய் இயேசுவுக்குச் சாட்சி பகருவதால் சிறையிலடைக்கப் பட்டு முடிவில் இரத்தசாட்சியாய் மரிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண் டும் என்ற சூழமைவிலேயே ''மரணம்வரை உண்மையுள்ளவனாயிரு'' என்ற இயேசுவின் அழைப்பு வருகிறது (வெளி 2:10). விண்ணேறுமுன் கிறிஸ்து இறுதியாய்ப் பேசியதில் வரும் ''சாட்சிகள்'' எனும் சொல் ''இரத்தசாட்சிகள்'' என்றே பொருள்படும் (அப் 1:8). அதாவது, நமது தலை போனாலும் கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகருவதாகும். பன்னிரு அப்போஸ்தலரில் பத்துப்பேர் இரத்தசாட்சிகளாய் மரித்தனர். ஆண்டு தோறும் 1,60,000 கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சிகளாய் இறக்கின்றனர் என்று *International Bulletin of Missionary Research* நமக்குப் புள்ளி விபரம் தருகிறது. பெரிய வெள்ளியன்று கண்ணீர் வடிப்பதைவிட உலகெங்கும் துன்புறுத்தலுக்குள்ளிருக்கும் திருச்சபைகளுக்காய்த் தவறாது மன்றாடி ஜெபிப்போம்; அவைகளெல்லாம் நம்மையும் உள்ள டக்கிய கிறிஸ்துவின் உடலின் அங்கங்களல்லவோ? (லூக் 23:28-31; எபி 13:3). ''இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து'' என்ற புராதனக் கூற்றை மறவாதிருப்போம். *மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம்* என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட பீஹார் மாநிலம் இன்று *மிஷனரிப்பணிகளின் திராட்சைத் தோட்டம்* என்றாகிவிட்டது. ''எல் லாரும் இரத்தசாட்சிகளாய் மரிக்க அழைக்கப்படாதிருக்கலாம்; ஆனால் பாடனுபவிக்க நாமனைவரும் ஆயத்தமாயிருக்கவேண்டும்'' என்றார் பக்தன் வாட்ச்மேன் நீ (1903-1972). ''கிறிஸ்து எனக்காய் மரித்திருப் பாரானால், எனது தியாகம் எதுவும் பெரிதாயிருக்க முடியாது'' என்று அறிக்கையிட்டார் மிஷனரி C.T. ஸ்டட் (1862-1931). எனது நெருங் கிய நண்பர்களில் ஒருவராகிய BYM மருத்துவ மிஷனரி Dr. M. ஜெய் சங்கர் (1967-2013) அவர்கள் ஒடிஸாவில் இரத்தசாட்சி மரணம் எய்தி னார். அவரது மனைவி தனது மகன் (20) மற்றும் மகளுடன் (13)



திருப்பணியைத் தொடர்கிறார்கள். ஒரு பவுல் எழவேண்டுமானால் ஒரு ஸ்தேவான் விழவேண்டும் (அப் 7:57,58; 8:3; 9:1-6). 1975இல் என்னை 28ஆம் வயதில் முழுநேரத் திருப்பணிக்குள் உந்தித் தள்ளிய சுவர் வாசகம் ஒன்றைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன் —

*Only one life; it'll soon be past;*
*What's done for Christ alone shall last!*

*வாழ்வு ஒன்றே, கழியும் சீக்கிரமே;*
*கிறிஸ்துவுக்காய்ச் செய்ததே நிலைக்கும் என்றுமே!*

நீங்கள் எதற்காய் உயிர் வாழ்கிறீர்களோ
அது உயிர் விடுவதற்குத் தகுதியானதா?

**Is what you are living for worth dying for?**



# 14

# அடுத்தது யாரோ?

Who Next?

*‘‘அடுத்தது யாரோ?’’* தியோடர் வில்லியம்ஸ் (மிஷனரித் தலைவர்), எமில் ஜெபசிங் (மிஷனரிச் செயல் வீரர்), சாம் ஜெபத்துரை (கர்த்தரது எழுத்தாணி), பிரகாஷ் ஏசுவடியான் (எழுப்புதல் பிரசங்கியார்), ஜான் சாலொமோன் (சுவிசேஷகர்), ரவி சகரியாஸ் (கிறிஸ்தவத் தத்துவ ஞானி), ஐசக் மனோகரம் (கைவிடப்பட்ட பெண்பிள்ளைகள் ஆதர வாளர்), பேட்ரிக் ஜாஷ்வா (ஜெப வீரர்), Dr. சாம் கமலேசன் (மிஷனரிப் போதகர்) போன்ற தேவ ஊழியரும், சில முன்னனி மிஷனரிகளும் சமீப ஆண்டுகளில் அடுத்தடுத்து மறைந்தது கிறிஸ்தவ உலகில் எழுப்பியுள்ள கேள்வியே இது. இவ்வுலகில் தேவன் தமது ஊழியரது பணி முடிந்துவிட்டதாலேயே ஓய்வெடுக்கும்படி அவர்களை அடக் கம் பண்ணுகிறார் என்பதுதான் உண்மை (வெளி 14:13). இவர்கள் தாவீதைப்போல் தங்கள் தலைமுறையினருக்குத் திருச்சித்தத்தின்படி ஊழியம் செய்து முடித்த பின்னர் தூங்கச் செல்லுகின்றனர் (அப் 13:36). ஆனாலும், அவர்கள் விட்டுச்செல்லும் வெற்றிடம் அவ்வளவு சீக்கிரம் நிரப்பப்படுவதில்லை; சிலரைப் பொருத்தமட்டில் நிரப்பப்படுவதே யில்லை. ஒரு வகையில், தேவ மக்கள் யாவருமே தேவ ஊழியர்தான்;



ஆனால் முழுநேரத் திருப்பணியாளரை மனதில் வைத்தே இக்கட்டுரை எழுதப்படுகிறது. இம்மாமனிதரை ஒவ்வொருவராய் நாம் இழக்கும்போது *‘‘அடுத்தது யாரோ?’’* என்ற கேள்வி நமது மனதில் எழாதோ? எனக்கு இது பெரும் கவலை.

நமது காலங்கள் தேவனது கரங்களிலேயே இருக்கின்றன என்பது திருமறைப் போதனை (சங் 31:15). தன்னைச் சுற்றி அவதூறுகளும் அக்கிரமக்காரரின் அச்சுறுத்தல்களும் நிறைந்து காணப்பட்ட வேளை யில் தாவீதரசனின் அறிக்கையே இது (வச 13,14). தேவன் குறித்துள்ள நமது இறப்பு நாளை நாம் தள்ளிப்போட முடியாது என்பதே இங்கு தெளிவு. ஆனாலும், தேவ ஊழியரின் வாழ்காலத்தில் அவர்களைச் சந்தோஷமாய் வைத்துக்கொள்வது **தேவப் பிள்ளைகள் ஒவ் வொருவரது தலையாய கடமை** ஆகும். இறந்துபோனோருக்காய் அழுதுகொண்டு இருப்பதையும், அஞ்சலி செலுத்திக்கொண்டு இருப்பதையும்விட இருப்பவர்கள்மீது அக்கறை காட்டுவதே முக்கியம் (யோசு 1:2). ‘‘தேவனானவர் இறந்தோரின் கடவுளல்ல, இருப்போரின் கடவுள்’’ என்று இயேசு கூறியதின் பொருள் இதுவே (மத் 22:32ஆ). ஆபிரகாமின் தேவன் ஈசாக்கையும் நடத்திச் செல்வார்; ஈசாக்கின் தேவன் யாக்கோபையும் நடத்திச் செல்வார்; யாக்கோபின் தேவன் நம்மெல்லாரையும் நடத்திச் செல்வார். ‘‘யாக்கோபின் தேவன்’’ என்று பைபிளில் அவர் எத்தனை முறை அழைக்கப்பட்டிருக்கிறார் தெரியுமா?

தேவ ஊழியரது **தலை வலிகளையும் இதய வேதனைகளை யும்** இக்கட்டுரையில் எடுத்துக் காட்டவிருக்கிறேன்; அது ஏனென்றால் நாம் அவர்களையும், ‘‘தமது ஊழியக்காரரின் சுகத்தை விரும்பும்’’ அவர் களது தேவனையும் மகிழ்விக்கும்படி நம்மால் இயன்ற அத்தனையையும் செய்வதற்காகவே (சங் 35:27ஆ). முழுநேர இறைப்பணியில் 45 ஆண்டுகள் (2020) அனுபவம் பெற்றுள்ள நான் என்னைப் போல் போராட்டங்களிலும் பாடுகளிலும் இருக்கும் மற்ற தேவ ஊழியரோடு அடையாளப்படுத்திக்கொள்வது எளிது. எங்களுக்கு வேண்டியது உங்கள் பரிதாபம் அல்ல, பரிவுணர்வும் பக்கத்துணையுமே. களைத்

திருக்கும் எங்களுக்கு ''ஒரு தம்ளர் தண்ணீர்'' கொடுப்பதையும் விண்ணகம் கணக்கில் வைக்கும் (மத் 10:41,42). ''**மெய்யாகவே** உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று இதனை இயேசு நிச்சயப்படுத்துவதைக் கவனியுங்கள். ஓர் அப்போஸ்தலனாகவோ, ஒரு தீர்க்கதரிசியாகவோ, ஒரு சுவிசேஷகனாகவோ, ஒரு மேய்ப்பனாகவோ, ஒரு போதகனாகவோ, இப்படி எவ்வித அழைப்பில் இருந்தாலும் அவர் அடிப்படையாக ஒரு ''தேவ ஊழியர்.'' பேதுரு, பவுல், தீமோத்தேயு, யாக்கோபு, யோவான், யூதா, எப்பாப்பிரா ஆகியோரெல்லாம் இவ்விதம்தான் அழைக்கப்பட்டனர் (2 பேது 1:1; ரோ 1:1; தீத்து 1:1; பிலி 1:1; யாக் 1:1; வெளி 1:1; யூதா 1; கொலோ 4:12). மோசேயும் தானியேலும் அவ்விதமே அழைக்கப்பட்டனர் (எண் 12:7,8; தானி 6:20; 9:11).

### 1. உடலுக்கடுத்த பிரச்னைகள் (Health Problems)

தேவ ஊழியர் எவரும் காலத்திற்குமுன் இறப்பதில்லை என்பது எனது விசுவாசம். தேவனைப் பொருத்தமட்டில், அவர்களது பூவுலகப்பணி நிறைவடைந்தவுடன் அவர்கள் விண்ணகம் வர அவர் அழைப்பு மணி அடித்துவிடுவார். மோசேக்கு உடல் பலம் குறையாதிருந்தும், கண்ணில் புரை விழுவதற்கு முன்னரே, ஆண்டவர் அழைத்துக்கொண்டாரன்றோ? (உபா 34:7). ஆனால், நமது புரிதலின்படி, தேவ ஊழியர் அநேகரது வாழ்நாள் **உடல்நலக்கேட்டினால்** குறைந்துவிடுகிறது. இக்கட்டுரையின் முதல் பத்தியில் பெயரிடப்பட்டவர்களில் பெரும்பாலானோரின் கதை இதுதான். வேலைப்பளு, நேரம் தவறிய உணவு, தூக்கமின்மை, இன்னும் இவை போன்றவையே காரணங்கள். சபை மேய்ப்பர் பலரது அறிக்கை மேய்ப்பனான யாக்கோபைப் போன்றதே: ''பகலில் கொடும் வெயிலும், இரவில் கடும் குளிரும் என்னை வாட்டின; அதனால் என் கண்களுக்கு உறக்கமே இல்லை'' (ஆதி 31:40). மந்தை மேய்த்துவந்த சூலமித்தியாளின் புலம்பலே ஊழியர் பலருக்குப் பொருத்தமாயிற்று: ''கதிரவன் காய்ந்தான்; நான் கறுப்பானேன்'' (உன் 1:6அ). பிறரது நலனுக்காகவே தங்களைத் தாரைவார்த்துவிட்ட இவர்கள் தங்கள் சொந்த உடலைக் கவனிக்கத் தவறிவிட்டனர் (வச 6ஆ).



அற்புதங்கள் பல நிகழ்த்திய தீர்க்கன் எலிசா ஒரு தீரா வியாதியால் உயிரிழந்தார் (2 இரா 13:14அ). அவருக்கு இவ்வியாதி கண்டுபிடிக்கப்பட்டவுடன் அவர் என்னவெல்லாம் நினைத்திருப்பார் என்று கற்பனை செய்துபாருங்கள்: ''எலியாவின் இரட்டிப்பான ஆவி வரம் இதுதானோ? அவரை அழைத்துச் செல்ல அக்கினி இரதத்தையும் அக்கினிக் குதிரைகளையும் தேவன் அனுப்பினார், நல்லது! எனக்கு அவதியற்ற மரணமாவது தரக்கூடாதா?''

சாகும்வரைத் தன்னைக் குத்திக்கொண்டேயிருந்த முள்ளினால் அப்போஸ்தலன் பவுல் எவ்வளவாய்ப் பாடுபட்டார்! சுகம் நாடி எவ்வளவாய் ஜெபித்தார்! (2 கொரி 12:7-9). சிங்கம் போன்ற தைரியம் கொண்ட அவருக்கு உதவி ஊழியனாயிருந்த தீமோத்தேயு ஏற்கனவே பயந்தாங்கொள்ளி (1 கொரி 16:10). அவனுக்கும் எப்பொழுது பார்த்தாலும் வயிற்றுவலி (1 தீமோ 5:23). பவுலின் கைக்குட்டையே நோயாளிகளைக் குணமாக்கியதும் பிசாசுகளை விரட்டியதும் அவனுக்குத் தெரியும் (அப் 19:11,12). அப்போஸ்தலனது துணிகளை அவன் எத்தனை முறை துவைத்திருப்பான்! பவுலின் போர்வையைச் சிறைச்சாலைக்குக் கையில் எடுத்துவந்ததும் அவன்தானே? (2 தீமோ 4:13). பவுலுக்கு நெருக்கமாயிருந்த இன்னொரு ஊழியர் அளவுக்குமீறி உழைத்ததாலேயே செத்துப் பிழைத்தார் (பிலி 2:25-30). மணிக்கணக்கில் நின்றுகொண்டு திருமறையைப் போதித்ததால் எனது கால் நரம்புகள் வீங்கியுள்ளன. பல்லாண்டுகள் இறைச்செய்தியைக் கதறிப் பிரசங்கித்தது எனது குரல் நாண்களைப் பழுதாக்கிவிட்டது. **தேய்மானம்!** பிரியமானவர்களே, களைப்படைந்த தேவ ஊழியருக்குச் ''சூடான சப்பாத்தியும் தண்ணீரும்'' கொடுக்கும் தேவதூதராயிருங்கள் (1 இரா 19:5,6). ஒரு முறை கொடுத்துவிட்டால் போதாது (வச 7). உங்களது உதவியின்றி அவர் இன்னும் ''நாற்பது பகலும் நாற்பது இரவும்'' எப்படி நடக்க முடியும்? (வச 8).

திருச்சபைச் சரித்திரத்தை நான் வாசித்துக்கொண்டிருக்கும்போது, தலைசிறந்த தேவ ஊழியர் பலர் எவ்விதம் இறந்தனர் என்று பார்த்தது

என்னை அதிரவைத்தது. டேவிட் பிரெய்னார்டு 29ஆம் வயதில் காசநோய்க்குப் பலியானார். அவரது சரிதையை வாசித்த பலநூறுபேர் உலகெங்கும் மிஷனரிகளாய்ச் சென்றனர்; அவர்களில் வில்லியம் கேரியும் ஒருவர். புதிய ஏற்பாட்டை இந்துஸ்தானியில் மொழியாக்கம் செய்த இங்கிலாந்து நாட்டு மிஷனரி ஹென்றி மார்ட்டின் 31ஆம் வயதில் காசநோய் மற்றும் கடும் காய்ச்சலினால் இறந்தார். *My Utmost for the Highest* என்ற உலகப் புகழ் தினசரித் தியான நூலாசிரியர் ஆஸ்வால்டு சேம்பர்ஸ் 43ஆம் வயதில் குடல் வியாதியினால் மரித்தார். *''நான் பாவிதான்'' (Just as I am)* என்ற அரும்பெரும் பாடலை இயற்றிய சார்லட் எல்லியட் 30ஆம் வயதில் முடமாகி 82ஆம் வயதில் உயிர்நீத்தார். *''எந்தன் ஜீவன் இயேசுவே'' (Take my life and let it be)* என்ற பாடலாசிரியர் பிரான்சஸ் ஹேவர்கால் 43ஆம் வயதில் குடல் வியாதியினால் மரணமடைந்தார்.

சீனாவின் மிகப்பெரிய சுவிசேஷகர் ஜான் சுங் 43ஆம் வயதில் புற்றுநோய் மற்றும் காசநோய்க்குப் பலியானார். வெளிப்பிரசங்க வேந்தர் என்றழைக்கப்பட்ட ஜார்ஜ் விட்பீல்டு 56ஆம் வயதில் இறந்தார்; அவர் 18,000 பிரசங்கங்கள் செய்தவர். *''தூயா, தூயா, தூயா'' (Holy, Holy, Holy)* என்ற உருக்கமான பாடலை இயற்றிய கல்கத்தா பேராயர் ரெஜினால்டு ஹீபர் 43ஆம் வயதில் பக்கவாதத்தினால் மரித்தார். *''நீங்காதிரும் என் நேச கர்த்தரே'' (Abide with me)* எனற பாடலாசிரியர் ஹென்றி லைட் 54ஆம் வயதில் இழுப்பு நோய் மற்றும் காசநோயினால் மரணமடைந்தார். *''பாவ சஞ்சலத்தை நீக்க'' (What a friend we have in Jesus)* என்ற பாடலாசிரியர் ஜோசப் ஸ்கிரிவன் 67ஆம் வயதில் நீரில் மூழ்கிவிட்டார். பிரசங்க வேந்தன் எனப்பட்ட C. H. ஸ்பர்ஜன் 16 வயதில் பிரசங்கிக்கத் தொடங்கி 58ஆம் வயதில் மரித்தார். அவரது மனைவி 33ஆம் வயதில் முடமாகிவிட்டார்கள். ஜெபிக்கும் ஹைட் என்றழைக்கப்பட்ட ஜான் ஹைட் 47ஆம் வயதில் மூளைப் புற்று நோய்க்குப் பலியானார்; இவர் இந்தியா வந்த அமெரிக்க மிஷனரி.

பிரபல வேத வியாக்கியானி மேத்யு ஹென்றி முடக்குவாதத்தினால் 52ஆம் வயதில் இறந்தார். அப்போஸ்தலர் நடபடிகள் வரைதான் அவரால்



எழுதி முடிக்க முடிந்தது. (ஆங்கிலத்தில் எனது தினசரித் தியானங்களின் ஒலிப்பதிவை ஆகஸ்டு வரை முடித்திருக்கிறேன். இத்திட்டத்தை முடிக்கும்வரை எனக்கு ஜீவன் சுகம் தந்தாதரிக்க ஆண்டவரிடம் கேட்டிருக்கிறேன். ஜூலை 2020). *மோட்சப் பிரயாணம் (Pilgrim's Progress)* எழுதிய ஜான் பனியன் 60ஆம் வயதில் காய்ச்சலுக்குப் பலியானார். மார்டின் லூத்தர் 63ஆம் வயதில் மாரடைப்பால் காலமானார். எத்தனையோ அநாதைக் குழந்தைகளையும், ஏழை மாணவ மாணவியரையும் பராமரித்து வந்த அவரது மனைவி கேத்தரின் அம்மையார் கோர விபத்தொன்றில் 53ஆம் வயதில் இறந்தார். ஜெர்மனியிலிருந்து தரங்கம்பாடிக்கு மிஷனரியாய் வந்து, புதிய ஏற்பாட்டை முதல்முறை தமிழாக்கம் செய்த சீகன்பால்க் இந்திய வெப்பத்தைத் தாங்க முடியாது 37ஆம் வயதில் மரித்தார். எனது சொந்தவூராகிய நாசரேத்தின் தந்தை என்றழைக்கப்பட்ட ஆர்தர் மர்காஷிஸ் 56ஆம் வயதில் இழுப்பு நோயினால் இறந்தார். மலரத் துவங்கியிருந்த இரு தமிழ்ச் சுவிசேஷகர்களாகிய துதி சங்கர் அவர்களைச் சாலை விபத்தொன்றில் 32ஆம் வயதிலும், ஜஸ்டின் பிரபாகரன் அவர்களை மூளைப் புற்றுநோய்க்கு 41ஆம் வயதிலும் பறிகொடுத்தோம். நான் இங்கு நிறுத்தாவிடில் பைத்தியம் பிடித்துவிடும்!

## 2. குடும்பப் பிரச்னைகள் (Family Problems)

சுமூகமாய்ப் பயணிக்கும் குடும்பங்களைக் கொண்டுள்ள தேவ ஊழியருக்காய்த் தேவனைத் துதிப்போம். ஆனால் அநேகரது படகுகள் அலைமோதலால் தவிக்கின்றன. இது அவர்களது தேவ அழைப்பை எவ்விதமும் மாற்றுவதில்லை. **தோளோடு தோள் கொடுத்து நிற்கும் வாழ்க்கைத் துணைகள்** தேவ ஊழியர் அனைவருக்கும் கிடைத்து விட்டனர் என்று சொல்வதற்கில்லை. போராட்டங்கள் இல்லாத இல்லங்கள் அபூர்வமாகிவிட்டன. ஆதாமை ஏவாள் தவறாய் வசப்படுத்தினாள்; ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்தும் விளையாட்டு துவக்கிவைக்கப்பட்டது (ஆதி 3:6,12,13). ''நீதிமானாகிய லோத்துவின்'' மனைவி ஒரே உப்பு (2 பேது 2:8; ஆதி 19:26; லூக் 17:32). திருமதி யோபு

அம்மையார் ஒரு பைத்தியக்காரி (யோபு 2:10). ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் இடையில் பெரிய பிரச்னையொன்று வெடித்துக் கிளம்பியது; அது ஒருவாறு தீர்த்துவைக்கப்பட்டாலும் இன்றுவரை அதின் விளைவுகள் தொடரத்தான் செய்கின்றன (ஆதி 16:1-6; 1 பேது 3:6; கலா 4:22,29). மோசேயின் எத்தியோப்பிய மனைவியின் காரணமாக அவருக்கும் அவரது உடன் பிறந்தோருக்கும் இடையில் சச்சரவு (எண் 12). ‘‘எந்த இல்லத்திற்குள் நுழைந்தாலும், முதலாவது அதற்குச் **சமாதானம்** கூறுங்கள்’’ என்று இயேசு சும்மாவா சொன்னார்? (லூக் 10:5). அப்படியே ஊழியக்காரிகளுக்கு நல்ல ஒத்துழைப்பு தராத கணவன்மாரும் உண்டு. பிரிஸ்கில்லாளின் பெயர் அடிக்கடி முதலில் வந்தும், ஆணென்ற கர்வமில்லாது அவளுக்கு உறுதுணையாய் நின்ற ஆக்கில்லா போலிருங்கள் (அப் 18:18; ரோ 16:3; 2 தீமோ 4:19). ஆணாதிக்கத்தில் யூதக் கலாச்சாரம் நமதைவிடப் படுமோசம்!

**தம்பதியருக்கிடையே உத்தமமின்மை** (marital unfaithfulness) என்பது தேவ ஊழியர் நடுவில் மலிந்து வருகிறது. எந்தக் காரணத்தையும் நியாயப்படுத்த முடியாது. இதனால் ஏற்படும் காயங்கள் உடனே ஆறாது, ஆற்ற முடியாதவையும் அல்ல. தகுந்த மனந்திரும்புதலும் தயாள மன்னிப்புமே நிலைமையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியும். தேவைப்பட்டால் தரமான கிறிஸ்தவ ஆலோசகர்களிடம் உதவி பெற வேண்டும். பிசாசைத் தோற்கடிக்கத் தேவ ஊழியத் தம்பதியர் நடுவில் ஒருமனம் நிலவ விசுவாசிகள் தவறாது ஜெபிக்கவேண்டும் (பிர 4:11,12). மற்ற கிறிஸ்தவர்களோடு இருக்கவேண்டிய ஐக்கியத்தைவிடக் கணவன்-மனைவி உறவையும் ஒருமனத்தையுமே இவ்வசனங்கள் குறிப்பிடுகின்றன எனத் தோன்றுகிறது.

அடுத்தடுத்து தேவ ஊழியர் குடும்பங்களில் **முரட்டாட்டமுள்ள பிள்ளைகள்தான்**. அதுதானே இந்த யுகத்தின் ஆவி? (2 தீமோ 3:1,2; மல் 4:5,6; லூக் 1:17). 1 தீமோத்தேயு 3:4,5ஐச் சுட்டிக்காட்டி ஊழியர்களைத் தாக்குவது எளிது. கர்த்தருக்கு ஏற்ற பயத்திலும் கீழ்ப்படிதலிலும் பிள்ளைகளை வளர்ப்பதில் தந்தையருக்கு இருக்கும் பொறுப்பினையே



பவுலடியார் இங்கு வலியுறுத்துகிறார். இறையரசிற்காய் அதிகம் தியாகம்பண்ணாதோர்தான் பொதுவாக இவ்வசனத்தை ஓங்கியடித்துப் பேசுவார்கள். முரட்டாட்டமுள்ள குமாரரும் குமாரத்திகளும் உள்ள ஆயர்களும் பிரசங்கிமாரும் ஊழியத்தை விட்டு விலகவேண்டுமானால் நமது பிரசங்கபீடங்கள் பாதிக்குமேல் காலியாகிவிடும்! தீர்க்கதரிசி சாமுவேல் எவ்வளவோ ஊழியப்பயணங்களை மேற்கொண்ட வேளையிலும் தனது குடும்பத்தைக் கவனிக்கத் தவறவில்லை (1 சாமு 7:15-17). அவருக்கடுத்து ஊழியப் பொறுப்பெடுத்த அவரது குமாரரோ அவரது வழிகளில் நடக்காமல் ஊழல்வாதிகளாயினர் (8:1-5). தனது மகன்களைக் கண்டிக்காத ஆசாரியன் ஏலிக்கு எச்சரிப்பின் செய்தியைத் தேவனிடமிருந்து சுமந்துசென்றது அப்பொழுது இளைஞனாயிருந்த இதே சாமுவேல்தான் என்பது நினைவிருக்கிறதா? (3:11-18). நோவாவின் இரட்சிக்கப்பட்ட மகன்களில் ஒருவனுக்கு ஆபாசக்காட்சிகளில் ஆர்வம் (ஆதி 9:20-25; 1 பேது 3:20). யோபுவின் குமாரர் அவரைப் போல் உத்தமரல்ல; அவர்களது நடத்தை கேள்விக்குறியானது (யோபு 1:1,4,5). அம்னோன், அப்சலோம், அதோனியா ஆகிய தாவீதின் மூன்று குமாரர் அவருக்கு தலைவலிதான் என்பது நாமறிந்தது (2 சாமு 3:1-5).

**தேவ ஊழியரது பிள்ளைகளின் மணமுறிவு** இன்று அசாதாரணமல்ல. மற்றவர்களுக்கு அது ஒரு செய்தி; பெற்றோருக்கோ அது செம அடி. இவ்வித நிகழ்வுகளைக் கிண்டல் செய்யாதீர்கள். தலைவலியும் வயிற்றுவலியும் அவரவர்க்கு வந்தால்தானே தெரியும்? பண்டிதர் பில்லி கிரஹாமின் குமாரத்திகளில் ஒருவருக்கு இருமுறை விவாக ரத்து. எங்களது ஒரே பேறான குமாரத்தியின் மணவாழ்வு முறிந்தபோது, அப்பப்பா, என்னே பேச்சு! 1994இல் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) சார்பில் எனது மனைவியும் நானும் முன்நின்று நடத்திய *Love-Joy ’94* எனும் குடும்ப முகாமைச் சுட்டிக்காட்டி மக்கள் எங்களைப் பரிகசித்தனர். பங்கேற்ற 350 தம்பதியருக்கு அசாதாரண ஆசிகளை அள்ளி வழங்கிய அந்நிகழ்வில் நாங்களிருவரும் எங்களைப் பலியாடுகளாக்கினோம்.

கனி மரத்திற்குத்தானே கல்? பழ மரங்களை வெட்டிச் சாய்க்கக் கூடாது என்று தேவன் தமது திருச்சட்டத்தில் கட்டளையிட்டுள்ளார் (உபா 20:19,20). ''கனி தரும் செடியாய்'' விளங்குவோர்மீது அம்புகளை வில்வீரர் எய்து அவர்களை மனமடிவாக்குவது வழக்கம்தான் (ஆதி 49:22-24). ஊழியத் தோழர்களே, மக்கள் பேசும் வார்த்தைகளால் ஆக்கினைத்தீர்ப்படையாதீர்கள், ஆர்வமிழந்துவிடாதீர்கள். இயேசுவுக்கு உங்கள் வேதனை நன்றாகவே புரியும். அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில், **''மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள முடியவில்லையே''** என்று அவரை மதவாதிகள் கேலிசெய்தனர் (மத் 27:42). அவருடன் சிலுவையில் அறையப்பட்ட திருடரும் இதே வார்த்தைகளைச் சொல்லி ஏளனம் செய்தனர் (வச 44). எனது நண்பர் மோகன் C. லாசரஸ் தம்பதியருக்குக் குழந்தையில்லாததால், புத்திரபாக்கியமற்றவர்களுக்காக அவர் ஜெபிக்கும்போது எத்தனைக் கிறிஸ்தவர்கள் பகடிபண்ணுகிறார்கள் தெரியுமா? நமதன்புச் சகோதரன் D.G.S. தினகரனைப் பார்த்து, ''சுகமளிப்பு ஊழியனே, முதலாவது உன்னைச் சுகப்படுத்திக்கொள்'' என்று சவாலிட்ட கிறிஸ்தவர்கள் கொஞ்சநஞ்சமா? சாலை விபத்தில் தங்களது செல்ல மகள் ஏஞ்சல் பலியானதால் கண்ணீர்ப் பள்ளத்தாக்கில் சென்று கொண்டிருந்த இக்குடும்பத்தினரை இப்படியா புண்படுத்துவது? வாசக நண்பரே, மக்களுக்கு ஒரு சில பிரசங்கிமார் பழங்களாய்ப் பரிமாறப்படுவர்; மற்றவர்களோ பிழியப்பட்டுப் பழச்சாறாய் ஊற்றப்படுவர் (நியா 9:8-13).

எழுப்புதல் வீரர் ஜான் வெஸ்லியின் வீட்டை இங்கிலாந்து நாட்டில் பார்க்கச் சென்றிருந்தேன். என்னை நடத்திச்சென்ற முதியவரிடம் வெஸ்லியின் மனைவியைப்பற்றிக் கேட்டேன். ''அதைப்பற்றி எவ்வளவு பேசாதிருக்கிறோமோ அவ்வளவு மேல்'' என்று பதில் தந்தார்! தங்களது வாழ்க்கைத்துணை மற்றும் வீட்டாரால் எவ்வளவு அவமதிக்கப்படுகின்றனரென்று பல ஊழியர் என்னிடம் மனந்திறந்திருக்கின்றனர். இயேசுவின் வார்த்தைகளையே அவர்களுக்கு நான் நினைப்பூட்டுவேன்: ''சொந்தவூரிலும், சொந்தக்காரர் நடுவிலும், சொந்த வீட்டிலும்தான் தீர்க்கதரிசிக்கு மதிப்பு கிடையாது!'' (மாற் 6:4). மனம்போல் வாழும் ஊழியன் எவனுக்கும் இக்கூற்று பொருந்தாது என்பதனையும் நினைவிற்கொள்ளவேண்டும். குடும்பச் சிக்கல்கள் இல்லாத பிரசங்கிமாரும் ஆயர்களும் போராட்டங்களில் தவிக்கும் ஊழியரை அலட்சியப்படுத்தாது, தங்களால் இயன்ற வழிகளிலெல்லாம் அன்னாரைத் தூக்கிவிட முயலவேண்டும் (ரோ 15:1,2). **''அழுவாரோடு அழுங்கள்''** (12:15). கணவன்-மனைவி மற்றும் பெற்றோர்-பிள்ளைகள் ஆகியோருக்கிடையில் எழக்கூடிய முரண்பாடுகளைக் கரிசனையுடன் புரிந்துகொண்ட அப்போஸ்தலன் பவுல் நடைமுறை ஆலோசனைகள் பல தந்துள்ளார் (1 கொரி 7:7-9; 32-35; எபே 5:22-26; 6:1-4; கொலோ 3:18-21). காயப்பட்டுக்கிடப்பவனுக்கு உங்களால் உதவ முடியாவிடில், அந்த ஆசாரியனையும் லேவியனையும் போல தயவுசெய்து ஒதுங்கிப் போய்விடுங்கள். அவனது காயங்களில் உங்களால் எண்ணெய் ஊற்ற முடியாவிடில், ப்ளீஸ் ப்ளீஸ் அமிலம் ஊற்றாதீர்கள் (லூக் 10:30-34). நல்ல சமாரியனாய் இருக்க முடியாவிட்டால் பரவாயில்லை, கெட்ட சமாரியனாகிவிடாதீர்கள்! பிரமாணக் கொள்கையில் திளைத்த ஒரு சுயநீதிக்காரனிடம்தான் இயேசு இந்த உவமையைச் சொன்னார் (வச 25-29). கற்பனைக் கற்பலகைகளைப் பெட்டிக்கு மேலே அல்ல, உள்ளே வையுங்கள்; இரக்கத்தின் இருக்கையாகிய கிருபாசனமே மேலே இருக்கட்டும்! (யாத் 25:21; யாக் 2:13).

### 3. ஊழியப் பிரச்னைகள் (Ministerial Problems)

கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியே தேவ ஊழியனுக்குப் பலம் என்றிராவிடில் அவர் விரைவில் ஒன்றுமில்லாமலாகிவிடுவார் என்பதே எனது 50 ஆண்டுகளுக்கும் கூடுதலான ஊழிய அனுபவத்தில் நான் கண்டறிந்தது (நெகே 8:10இ). பாரமான நமது சுமையைக் கர்த்தரது இலகுவான நுகத்திற்காய் மாற்றிக்கொள்வதில் கிட்டுவதே இம்மகிழ்ச்சி (மத் 11:28-30). இந்த இரகசியத்தைத் தங்கள் ஊழியத்தின் துவக்கக் காலத்திலேயே கற்றுக்கொள்ளாதோர் ஊழியப் பாரத்தில் நசுங்கிப் போவர். தேவ ஊழியர் நடுவில் இப்படிப் பலியானோர் ஏராளம். இறைப் பணியில் எவ்வளவு பொறுப்புகள் இருந்தாலும், தேவனோடு தனித்துச்

செலவழிக்கவேண்டிய நேரத்தை ஊழியர் தவிர்த்துவிடக் கூடாது. **ஊழியமானது நமது ஆன்மீகப் பலத்தை உறிஞ்சும்.** தேவனுக்குக் காத்திருந்து நமது மின்கலன்களுக்கு விசையேற்றிக்கொள்ளாவிடில், நாம் களைப்படைந்து கரைந்துவிடுவோம் (ஏசா 40:29-31). ''அமரிக்கையும் நம்பிக்கையுமே நமது பலம்'' (30:15). இந்த ஒழுங்கைப் புறந் தள்ளிவிட்டு, பறக்கும் குதிரைகள்மீது ஏறி கிறுக்குப்பிடித்து ஓடும் இவ்வுலகுடன் நாமும் விரையத் துவங்கினால், மூச்சுத் திணறிக் கர்த்தர் மடியில் நாம் வந்து விழும்வரை அவர் நமக்காய்க் ''காத்திருப்பார்'' (வச 16-18). தேவ ஊழியர்மீது அழுத்தங்களையும் வற்புறுத்தல்களையும் அன்புத் தொல்லைகளாய்க் கொண்டுவந்து, ''முடியாது'' என்று அவர்கள் சொல்வதை ஏற்க மனமற்றவர்களே இக்கேட்டுக்குக் காரணம். எண்ணெய் ஊற்றாமல் எரிந்துகொண்டேயிருக்க முடியுமா? (லேவி 6:13).

இறைப்பணியில் செலவழிக்கப்படவேண்டியது பணம் மட்டுமல்ல, பணியாளன் தன்னையே செலவழிக்கவேண்டும். மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்காய் இது தன்னையே **தியாகச் சேவையில் தாரை வார்ப்பதாம்** (பிலி 2:17). இதற்குமேல் வார்த்துவிட எதுவுமேயில்லை என்ற நிலைக்கும் தேவ ஊழியன் வரலாம். இதுவே அவரது வாழ்வின் முடிவு என்று நம்புகிறேன். பவுல் கூறுவதைக் கேளுங்கள்: ''இப்பொழுதே நான் பானபலியாக வார்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறேன்; கூடுவிட்டு ஆவி போகும் வேளை நெருங்கிவிட்டது'' (2 தீமோ 4:6). அன்புடனும் நன்றியுணர்வுடனும் தேவ மக்கள் இதற்குக் கைமாறு செய்யும் வகையில் நடந்துகொள்ளாவிடில், இதயத்தை நொறுக்கும் இச்சோர்பை மேற்கொள்வது ஊழியனுக்குச் சுலபமல்ல. உயர் மதிப்பெண்களுடன் பவுலடியார் இப்பரீட்சையில் தேறினார்! கொரிந்து விசுவாசிகளுக்கு அவர் எழுதியது: ''உங்கள்மீது எனது அன்பு கூடுமளவு என்மீது உங்கள் அன்பு குறைந்தாலும், பேரார்வமாய் உங்களுக்காய்ச் செலவு பண்ணிடுவேன், செலவு ஆகிடுவேன்'' (2 கொரி 12:15). தனது தந்தையுள்ளத்தினாலேயே அவர் இவ்விதம் செய்ய முடிந்தது (வச 14ஆ). அருமை விசுவாசிகளே, தேவ ஊழியரை உங்கள் தந்தையராய்க் கருதி அன்பு செலுத்துங்கள், மதிப்பு கொடுங்கள் என உங்களை ஊக்கு



விக்கிறேன் (வச 14). தொடர்ந்து நீங்கள் வளருவதற்காய் உழைக்க வேண்டுமென்று, *''பரலோகமே, என் சொந்தமே, என்று காண்பேனோ''* என்ற தங்கள் தணியா விருப்பத்தையும் அவர்கள் ஒத்திப்போடுகிறார்கள், தெரியுமா? (பிலி 1:22-26; 2 பேது 1:12-15).

**விரக்தி** (frustration) என்பதைத் தேவ ஊழியர் தவிர்க்க முடியாது. எருசலேமின் மதில்கள் திரும்பக் கட்டப்பட்ட சரித்திரத்தை நாம் அறிவோம். நெகேமியாதான் அதில் முக்கிய நபர். தேவன் அவருக்குத் தந்த தரிசனம் மற்றும் ஞானத்தின்படிக் கிரமமாய்ச் செயல்பட்டார். சுயநோக்கு என்பது அவரிடம் சற்றும் கிடையாது. நியாயப்படி அவருக்கு வரவேண்டிய பொருளாதார ஆசிகளைக்கூட அவர் தியாகம்பண்ணினார் (நெகே 5:15). அவரது எதிரிகளின் அச்சுறுத்தல்களினால் அசையாது நின்று, வேலையை முடிப்பதற்குத் தனது அர்ப்பணத்திலிருந்து ''நான் இறங்கி வரமாட்டேன்'' என்று முழங்கித் தீவிரமாய்ச் செயல்பட்டார் (6:3). அவரது உயிருக்கே மிரட்டல்கள் வந்தன (வச 10,11). இப்படியெல்லாம் இருந்தும்கூட அவர் அடைந்த விரக்தியை நான்கு முறை வெளிப்படுத்தினார்: ''என் தேவனே, நான் இந்த மக்களுக்காகவும் உமது ஆலயத்திற்காகவும் செய்தது எல்லாவற்றிற்காகவும், எனக்கு நன்மை உண்டாக, என்னை நினைத்தருளும்'' (5:19; 13:14,22,31). இந்தப் பரிதாப ஏக்கத்துடனேயே இந்தப் புத்தகம் முடிகிறது (13:31). நெகேமியாவின் உள்ளுணர்வுகள் எனக்கு நன்றாகவே புரிகின்றன. நான் அவருக்குச் சொல்ல விரும்புவது: ''நெகேமியா அண்ணா, உங்களது சேவையையும் அன்பின் உழைப்பையும் மறந்துவிடுவதற்கு (மனிதரைப் போல) நமது தேவன் அநியாயக்காரர் அல்ல!'' (எபி 6:10). அப்போஸ்தலன் பவுலுக்கும் அவரது ஊழியத்தில் விரக்தியான அனுபவங்கள் பல இருந்தன. இயேசுவுக்கு அடுத்து தன்னலமின்மை உருவெடுத்தது பவுலில்தான் என்பேன். அவர் சுயநலத்தை அல்ல, பிறர் நலனையே கருத்தில் கொண்டிருந்தார் (1 கொரி 10:33). இக்குணத்தைக் குறிப்பிடும்போதுதான் தன்னைப் பின்பற்றும்படிக் கொரிந்து நகர்க் கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுத்தார் (11:1). அவர்களை ஓர் உள்ளூர்ச்

சபையாக நாட்டியவரும் நிறுவியவரும் அவரே (3:6,10). அவர்கள் கேட்ட எத்தனையோ கேள்விகளுக்கு அவர் பொறுமையாய்த் தெளிவான பதில்கள் தந்தார். திருச்சபை வாழ்க்கைக்குப் போதுமான நடைமுறை ஆலோசனைகள் கொடுத்தார். வேறெந்தச் சபைக்கும் இவ்வளவு விபரமாய் ஆவியின் வரங்களை அவர் விளக்கவில்லை. அவர் அவர்களுக்குப் போதகனாய் மட்டுமல்ல, தகப்பனாகவும் இருந்தார் (4:15). இப்படியெல்லாம் இருந்தும், காலப்போக்கில் அவர்கள் அவரை ஓரங்கட்டினர் (வச 8,9). நான் சந்தித்துள்ள எத்தனையோ ஊழியருக்கு நிகழ்ந்ததும் இதுவே. இவ்விதக் காயங்களையெல்லாம் பொருட்படுத்தாது, தங்களது முதிர்ச்சியின் காரணமாக, வரப்போகும் முடிசூட்டு விழாவிற்கு ஆயத்தப்படுவதிலேயே அவர்கள் கவனம் செலுத்துகின்றனர் (2 தீமோ 4:7,8).

எதிரிகள் இல்லாத தேவ ஊழியர் என்பது கேள்விப்படாத ஒன்று. ''ஒருவனது வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனது எதிரிகளும் அவனுடன் சமாதானமாகும்படிச் செய்வார்'' என்று நீதிமொழிகள் 16:7இல் வாசிக்கிறோம். தேவனோடு சமாதானமாயிருப்பவனோடு சமாதானமாயிருப்பது எளிது என்பதே இதன் பொருள். தாவீது தேவனுக்குகந்த இதயம் உள்ளவர்தானே? ஆனால் ஒன்று சொல்லட்டுமா? 150 சங்கீதங்களில் 77 தாவீது இயற்றியவை. இவற்றில் பாதிக்கு மேலானவற்றில் அவர் தனது எதிரிகளைக் குறித்தும் தனக்கு விடுதலையும் பாதுகாப்பும் வேண்டியே பேசுகிறார். தனது எதிரிகளை ''மாடுகள், நாய்கள், சிங்கங்கள்'' போன்றவற்றிற்கு ஒப்பிடுகிறார் (சங் 22:12,13,16,20,21). யாவருக்கும் பிரியமான 23ஆம் சங்கீதத்திலும் ''சத்துருக்கள்'' குறித்துப் பேசுகிறார். எபேசுவில் ''காட்டு மிருகங்களுடன்'' பவுல் போராடினாராம் (1 கொரி 15:32). ஒரு முறை ''சிங்கத்தின் வாயிலிருந்து'' தப்பினாராம் (2 தீமோ 4:17ஆ). கொல்லனாகிய அலெக்சந்தரின் சுத்தியலும் உளியும் அவரைப் பயமுறுத்தியவண்ணமிருந்தன (வச 14). தியோத்திரேப்பு போன்றோர் அன்பின் அப்போஸ்தலன் யோவான்மீது கெட்ட வார்த்தைகளைப் பொழிந்துகொண்டேயிருந்தனர் (3 யோ 9,10). உடன் ஊழியரே, ''போற்றலையும் தூற்றலையும், புகழலையும் இகழலையும்'' சமநிலைப்படுத்தப் பழகிக்கொள்வோம் (2 கொரி 6:8). இல்லையேல் நம்மை நாமே கொன்றுவிடுவோம். அடுத்தவரது நன்மதிப்பைக் கெடுத்துவிடவேண்டுமென்று துடிப்பவனின் வாசலில் படுத்திருப்பது பொறாமை எனும் பாம்புதான் (ஆதி 4:6,7).



பொருளாதார நெருக்கடி என்பது ஊழியத்தில் இன்னொரு பிரச்னை. தீர்க்கதரிசி எவரும் செல்வந்தராயிருக்கவில்லை. அப்போஸ்தலர் எவரும் செல்வந்தராயிருக்கவில்லை (1 கொரி 4:11). முழுநேரப் பணிக்குள் நுழைந்த வேளையில் பலர் தங்களது சொத்து மற்றும் சேமிப்பு யாவற்றையும் இறைப்பணிக்குக் கொடுத்துவிட்டார்கள். மிஷனரியாய் மாறிய புகழ்பெற்ற இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் C. T. ஸ்டட் (1862-1931) அவர்கள் தனது தந்தையிடமிருந்து பெற்ற திரள் செல்வத்தைத் திருப்பணிக்குக் கொடுத்துவிட்டார். 2020 ஜூன் 17 அன்று நம்மை விட்டுச்சென்ற அண்ணன் M. பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள் 1977இல் முழுநேரப் பணியில் இறங்கியபோது தனது சேமிப்பு மற்றும் வீட்டிலிருந்த நகைநட்டு யாவற்றையும் காணிக்கையாக்கினார். எனது நண்பர் K. பொன்ராஜ் ஐசக் அவர்கள் முழுநேர மிஷனரியாக மாறியபோது, தனக்கிருந்த இரண்டே உடைமைகளாகிய மோட்டார் சைக்கிளையும் கிட்டாரையும் ஊழியத்திற்குக் கொடுத்துவிட்டார். திருச்சபைச் சரித்திரத்தில் இவ்விதச் சான்றுகள் ஏராளம்.

தேவ ஊழியரில் வசதி படைத்தோரைவிட வசதி குறைந்தோரே மிக மிக அதிகம். 2003இல் நான் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திலிருந்து (BYM) ஓய்வுபெற்ற வேளையில் கிடைத்த சேமிப்புத் தொகை முழுவதையும் இயக்கத்தின் பல்லாயிர ஆதரவாளர்களுக்கு எனது 432-பக்க தினசரித் தியான நூலை அன்பளிப்பதற்காய்ச் செலவழித்துவிட்டேன். வங்கியில் சேமிப்பு ஒன்றுமில்லாமலேயே எனது ஓய்வு காலத்தைத் தொடங்கினேன். இன்றோ, எனது ஐம்பதாண்டுக்காலத் திருமறைப் போதகப்பணியின் பயனாளிகளிடமிருந்து வரப்பெறும் நன்றிக் காணிக்கைகளே எனக்குப் போதுமானதாகவும் கூடுதலாகவும் இருக்கின்றன (1 கொரி 9:11). அதனைத் தேவையிலிருக்கும் ஊழியங்களோடும்

ஊழியர்களோடும் முடிந்த வகைகளிலெல்லாம் பகிர்ந்துகொள்கிறேன். **ஏழை ஊழியரை** அடையாளங்கண்டு அவர்களை ஆசீர்வதிக்கும்படிக் கிறிஸ்தவ அன்பர் யாவரையும் வருந்திக் கேட்கிறேன். ஒரு ஸ்தேவானாய், ஒரு பொர்த்துனாத்துவாய், ஓர் ஒநேசிப்போராய்த் திருத்தொண்டர்களை முகமலர்ச்சியடையச் செய்யுங்கள் (1 கொரி 16:17,18; 2 தீமோ 1:16-18). இந்திய மிஷனரி நிறுவனங்களிலிருந்து ஓய்வு பெறும் மிஷனரிகள் பலருக்குச் சொந்த வீடு என்று எதுவும் கிடையாது. தேவையுள்ளோர் பற்றிய ஆலோசனைக்கு என்னுடன் தொடர்புகொள்ளலாம் (00 91 98437 07600, <stanleyonbible@hotmail.com>).

## 4. ஆன்மீகப் பிரச்னைகள் (Spiritual Problems)

''ஆயனை வெட்டு; ஆடுகள் சிதறும்'' — இது சாத்தானின் தொன்றுதொட்ட சதித்திட்டம் (மத் 26:31அ). ஊழியனது ஆன்மீகத்தின்மீதே பிரதானமாகச் சத்துரு தாக்குதல் நடத்துவான். ஊழியன் தனது சிந்தை, சொல், செயல் ஆகியவற்றில் **தனிப்பட்ட பரிசுத்தம்** இழந்தால் பிசாசுக்குக் கொண்டாட்டம். ஆயர்கள் மற்றும் பிரசங்கிமார் பின்வாங்கினால் அவ்வளவு சீக்கிரம் அது வெளிப்படையாய்த் தெரியாது. தங்களது ஆன்மீகத் தரித்திரத்தைக் காண முடியாதபடி அவர்களது பிரசங்கபீட வெற்றிகள் அவர்களைக் குருடாக்கிவிடும் (வெளி 3:17,18; நியா 16:20,21). உங்களுக்காக ஊழியக்காரர் ஜெபிக்க நீங்கள் விரும்புமளவு நீங்களும் அவர்களது ஆன்மீக ஆரோக்கியத்திற்காகவும் பலத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும். உங்கள் பாஸ்டர் தனது ஆன்மீகத் தரத்திற்கு மேல் உங்களை உயர்த்த முடியாது (யோ 17:19; லூக் 6:40). அண்மைக் காலத்தில் பொருளாதாரச் செழிப்பு அளவுக்குமீறி வலியுறுத்தப்படுவது அநேகரை, அதிலும் குறிப்பாக ஊழியக்காரரை, ஆன்மீக வறுமைக்குள் தள்ளிவிட்டது (பிலி 3:17-19). பாலைநிலத்தில் இஸ்ரவேலர் முறுமுறுத்துத் துராசை கொண்டபோது, அவர்கள் கேட்டதை ஆண்டவர் கொடுத்துவிட்டார்; அவர்களது ''ஆத்துமாக்களிலோ ஆயாசத்தை'' அனுப்பினார் (சங் 106:14,15). உங்கள் தலைவர்களது வாழ்க்கை குளிரத் தொடங்குவது தெரிந்தால் தீர்க்கன் சாமுவேல் போல அவர்களுக்காய் மறைவிடங்களில் புலம்புங்கள் (1 சாமு 15:35ஆ).



உங்கள் பாஸ்டர் அல்லது தலைவரது **நடத்தையில் விரும்பத்தகாத சீர்கேடு** காணப்படுமானால், அதைப் புறங்கூறாதீர்கள், பரப்பாதீர்கள். நோவா பின்வாங்கினார்; ஆனாலும் தான் கண்டதைக் குறித்து அவரது மகன் தனது சகோதரரிடம் போய்ப் பேசியது தேவனுக்குப் பிடிக்கவில்லை (ஆதி 9:20-25). பின்வாங்கிப்போன சவுலின் மரணத்தைக்கூடப் பிரபலப்படுத்தாதீர்கள் என்று மக்களுக்குத் தாவீது கட்டளையிட்டார்; ஏனெனில் ''பெலிஸ்தியரின் குமாரத்திகள் கும்மாளம் போட்டுவிடுவார்களாம்'' (2 சாமு 1:17-20). நமது நாட்டில் கிறிஸ்தவத்திற்கு எதிராய் வாய்பிளந்து காத்திருப்போருக்குத் தீனி போடாதீர்கள். திருச்சபை என்பது ஒரு குடும்பம்; எனவே உங்கள் சொந்தக் குடும்பத்தில் உருவாகும் பிரச்னைகளைக் கையாளுவது போலவே நடந்துகொள்ளுங்கள் (கலா 6:10; எபே 2:19). சமரசம் பண்ணாமல், அதே வேளையில் அந்த ஊழியனைத் தூக்கியெடுக்கும் மீட்பின் சிந்தையுடன் செயல்பட உடன் ஆயர்களுக்கும் உடன் தலைவர்களுக்கும் தேவன் தகுந்த ஞானமும் கிருபையும் தருவாராக (கலா 6:1). ''தேவன் அவரை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே'' (ரோ 14:4). அந்த ஊழியன் முதிர்வயதினரானால் உங்கள் ''தகப்பன்'' போல அவரை நடத்துங்கள் (1 தீமோ 5:1,2). தலைமைப் பொறுப்புகளிலிருந்து அவரை விடுவித்தால், தேவன்மீதும் அவரது வார்த்தைமீதும் தனது ''ஆதி அன்புக்கு'' அவர் திரும்பிவர அவருக்குப் போதுமான நேரம் கிடைக்கும் (வெளி 2:3-5; யோ 21:15-19). அவர் புத்துணர்வும் புத்துயிரும் பெற்றிட உங்கள் செலவில் எங்காவது சென்றுவரட்டும். கடந்த ஆண்டுகளிலெல்லாம் அவரைக்கொண்டு தேவன் செய்தவற்றை அவமதிக்கவோ அப்புறப்படுத்தவோ கூடாது. விக்கிரகாராதனைக்காரனாக மாறிவிட்ட சாலொமோனின் மூன்று புத்தகங்களைத் தலைமுறைகள் பயனடையும்படி பைபிளில் தேவன் சேர்த்துவிட்டார் (1 இரா 4:32; 11:3,4). அவற்றை வாசிக்கும்போது வெறுப்புணர்வு கூடாது; ஏனெனில் ''தேவன்'' அவருக்குக் கொடுத்திருந்த ஞானத்தினாலேயே அவர் எழுதினார் (4:29). 1 மற்றும் 2 இராஜாக்களின் புத்தகங்களின் ஆசிரியருக்குத் தகவல்கள் தந்து உதவியது ''சாலொமோனின் நடபடிப் புத்தகம்'' என்பதுதான் (1 இரா 11:41).

எந்த நிறுவனமும் சாராது, சுயாதீனமாய்ப் பணியாற்றும் ஊழியர்கள் தங்களது **ஆன்மீக நலனுக்காகவும் பொறுப்பாளிகளின் மேற் பார்வைக்காகவும்** முதிர்ச்சியுள்ள திருப்பணியாளர்களது ஐக்கியம் நாடவேண்டும் (பிர 4:9-12). தனித்தே இருக்காதீர்கள். எல்லாம் அறிந் தவர் எவரும் இல்லாததால், பிறரிடம் கற்றுக்கொள்ளத் தேவையில்லாத நிலையை நாம் என்றும் எட்டுவதில்லை (ரோ 12:3; 1 கொரி 8:2; 13:9). முதிர்வயதாகும்போது இன்னும் ஏன் படித்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற கேள்வி எழத்தான் செய்யும். பைபிளிலுள்ள சில கடினமான பகுதிகளைப் புரிந்துகொள்ள இத்தனை ஆண்டுகள் தேவனோடு நடை போட்ட அனுபவமானது உங்களுக்குதவும். வாழ்வின் இறுதிக் கட் டத்தை நெருங்கிய வேளையிலும் மேலங்கியோடு ''புத்தகங்களையும்'' எடுத்துவரத் தீமோத்தேயுவைப் பவுலடியார் பணித்தாரன்றோ? (2 தீமோ 4:6ஆ,13). ஆப்பிரிக்காவின் இருண்ட காட்டில் கைவிளக்கு ஒன்றை வைத்துக்கொண்டு, தள்ளாடிய C. T ஸ்டட் (1862 -1931) அவர்கள் மங்கிய பார்வையுடன் பழமையான வேதாகமப் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தாராம். ''என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?'' என்ற அவரது நண்பனது கேள்விக்கு அவர் கொடுத்த பதில்: ''எனது முடிவு நெருங்கிவிட்டது. கர்த்தரது கட்டளை எதையாவது தெரிந்தும் ஒதுக்கிவைத்திருக்கிறேனா என்று தேடிக்கொண்டிருக்கிறேன்!''

நமது பிறப்பைச் சூரிய உதயத்திற்கு ஒப்பிட்டால், நமது இறப்பைச் சூரிய அஸ்தமனம் எனலாம். நமது வாழ்வின் மாலைப்பொழுதிற்கு வரும்போது அதிமுக்கியமானதொன்று நமக்கு நினைவுபடுத்தப் படவேண்டும்: ''பொழுது சாயுமுன் உங்கள் சினம் தணியட்டும்'' (எபே 4:26). **R**est **I**n **P**eace (சங் 4:4). மாட்சிமிகும் மோட்ச நகர் செல்ல விருக்கிறோம். அங்குச் சென்றிருப்பவர்கள் காட்டிய அனுமதிச் சீட்டு ''மன்னிப்பு'' எனும் ஆதார் அட்டைதான்! நம்மைச் சொல்லால் அல்லது செயலால் அடித்தவர் எவரையாவது நாம் மன்னித்துவிடாமல் இவ் வுலகிலிருந்து விடைபெறலாமா? சீமேயி போன்றோரையெல்லாம் தாவீதைப்போல கவனியாது விட்டுவிடப் பழகுங்கள் (2 சாமு 16:5, 6,11,12). செஞ்சிலுவையில் நமது கர்த்தர் உதிர்த்த முதல் வார்த்தை **''மன்னிப்பு''** என்பதுதானே? (லூக் 23:34). முதலாம் இரத்தசாட்சியின்



இறுதி வார்த்தைகளும் மன்னிப்பை அடுத்தவையே (அப் 7:60). தனது சகோதரனுடன் ஒப்புரவாக யாக்கோபு தனது இறுதிக்காலத்தில் முதலடி எடுத்துவைத்தார் (ஆதி 32:3,6). மாற்குவைப் பற்றிய தனது மனப்பான் மையை ஊழியத்தின் முடிவுக்கட்டத்தில் பவுல் இணக்கமாக்கினார் (2 தீமோ 4:6,11; கொலோ 4:10). அடித்தளத்திலிருந்து மேற்தளத்திற்குச் செல்லச் செல்ல ஆலயக் கட்டிடம் அகலமாகிக்கொண்டே போனது போல், நமது இதயங்களும் விசாலமாகிக் கொண்டேயிருக்கவேண்டும் (எசேக் 41:7). ''உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக் கட்டும்; (ஏனெனில்) கர்த்தர் சமீபமாயிருக்கிறார்'' (பிலி 4:5; யாக் 5:8,9).

## முடிவுரை

இறைமக்கள் நடுவில் எத்தனையோ தீர்க்கதரிசிகள் இருந்தனர்; ஆனால் மோசே அல்லது எலியா போன்று எல்லாரும் சிறப்பெய்த வில்லை (மத் 17:3). இஸ்ரவேலில் நிறைய ஆசாரியர்கள் இருந்தனர்; ஆனால் ஆரோன் தனிதான் (எபி 5:4). சங்கீதக்காரர் பலரில் தாவீதுதான் இஸ்ரவேலின் ''இனிமைப் பாடகர்'' எனப்பட்டார் (2 சாமு 23:1). இயே சுவுக்குப் பன்னிரு அப்போஸ்தலரும் அநேக சீடரும் இருந்தனர்; ஆனால் மறுரூப மலைக்குப் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரை மட்டுமே அழைத்துச்சென்றார் (மத் 17:1). வரலாற்றாசிரியர்கள் எத்த னையோ பேர் இருந்த காலத்தில் ஆதிச் சபைச் சரித்திரம் எழுத லூக்கா வையே ஆண்டவர் தெரிந்தெடுத்தார் (லூக் 1:1-4; அப் 1:1-3). புதிய ஏற்பாட்டு மிஷனரிகளில் பவுல் உயர்ந்து நின்றார் (1 கொரி 15:9,10). இவர்கள் போன்று இன்றைய உலகிலும், குறிப்பாக நமது பாரத நாட்டில், பல்லாயிரக்கணக்கான தேவ ஊழியர் உண்டு. அவர்களில் **சிறந்து விளங்கும் பிரசங்கிமார், ஆயர்கள், போதகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தலைவர்கள்** ஒரு சிலரே. இந்த மனிதர் மற்றும் மாதரது எண்ணிக்கையும், இக்கட்டுரையின் முதல் பத்தியில் நான் குறிப்பிட் டுள்ளதுபோல், அவர்களது இறப்பால் விரைவாகக் குறைந்துகொண்டே வருவது வேதனையளிக்கிறது. மிச்சமிருப்போர் நடுவிலும் பலர் காயப் பட்ட வீரர்களாகவே இருக்கின்றனர். அபிஷேக அனலுடன் தீவிரமாய்ச் செயல்படுவோர் கையளவுதான். எனவேதான் நமது மனதை அரித்துக் கொண்டிருக்கும் கேள்வி, *''அடுத்தது யாரோ?''*

# 15

# திருச்சபையின் இன்றையத் தேவை

What the Church needs today

1

**கூடுதல்** கமிட்டிக் கூடுகைகள் அல்ல; **கூடுதல்** ஜெபக்கூட்டங்கள்!

2

**கூடுதல்** அமைப்பாளர் அல்ல;

**கூடுதல்** முழங்காலில் அழுது புலம்புவோர்!

3

**கூடுதல்** ஆதரவாளர் அல்ல; **கூடுதல்** ஆத்துமாதாயகர்!

4

**கூடுதல்** மேலாளர்கள்-நிர்வாகிகள் அல்ல; **கூடுதல்** தலைவர்கள்!

5

**கூடுதல்** மிஷனரியியலர் அல்ல; **கூடுதல்** மிஷனரிகள்!

6

**கூடுதல்** பணம் அல்ல; **கூடுதல்** பணியாளர்!

7

**கூடுதல்** திட்டமிடுதல் அல்ல; **கூடுதல்** தேவனுக்குமுன் காத்திருத்தல்!



8

**கூடுதல்** பிரசங்கங்கள் அல்ல; **கூடுதல்** இறைச்செய்திகள்!

9

**கூடுதல்** வேதக் கலாசாலைகள் அல்ல; **கூடுதல்** களப்பயிற்சி!

10

**கூடுதல்** அநாதை இல்லங்கள் அல்ல;

**கூடுதல்** திக்கற்றோரைத் தத்தெடுக்கும் குடும்பங்கள்!

11

**கூடுதல்** பொருளாதாரப் பெருக்கம் அல்ல; **கூடுதல்** தியாகம்!

12

**கூடுதல்** வைபவங்கள் அல்ல; **கூடுதல்** கண்ணீர்!

13

**கூடுதல்** பட்டம் பெற்ற குருக்கள் அல்ல;

**கூடுதல்** அபிஷேகம் பெற்ற தீர்க்கதரிசிகள்!

14

**கூடுதல்** சொத்துக்கள் அல்ல; **கூடுதல்** ஆன்மீக வல்லமை!

15

**கூடுதல்** கட்டிடங்கள் அல்ல; **கூடுதல்** அயலக நற்செய்திப்பணி!

16

**கூடுதல்** திட்ட மேலாளர்கள் அல்ல; **கூடுதல்** நல்ல சமாரியன்கள்!

17

**கூடுதல்** மிஷனரிப் பணிக்குக் கொடுப்போர் அல்ல;

**கூடுதல்** மன்றாட்டு வீரர்!

18

**கூடுதல்** பிரசங்க ரசிகர்கள் அல்ல; **கூடுதல்** வசனத்தின்படி நடப்போர்!

19

**கூடுதல்** சொற்கள் அல்ல; **கூடுதல்** செயல்கள்!

20

**கூடுதல்** விவாதங்கள் அல்ல; **கூடுதல்** விண்ணிலிருந்து நடத்துதல்!

21

**கூடுதல்** பரவசம் அல்ல; **கூடுதல்** உயிர்மீட்சி!

22

**கூடுதல்** அறிவு பெருத்த தலைகள் அல்ல;

**கூடுதல்** கீழ்ப்படியும் இதயங்கள்!

23

**கூடுதல்** நவீன யுக்திகள் அல்ல;

**கூடுதல்** திருமறையின் பூர்வ பாதைகள்!

24

**கூடுதல்** உபகரணங்கள் அல்ல; **கூடுதல்** உன்னத பலம்!

25

**கூடுதல்** பக்தகோடிகள் அல்ல; **கூடுதல்** சீடர்கள்!

26

**கூடுதல்** விருந்துகள் அல்ல; **கூடுதல்** உபவாசங்கள்!

27

**கூடுதல்** மார்க்க பக்தி அல்ல; **கூடுதல்** தானதர்மம்!

28

**கூடுதல்** ஆசீர்வாதம் பெறுதல் அல்ல;

**கூடுதல்** ஆசீர்வாதமாய் மாறுதல்!

29

**கூடுதல்** நிர்வாக மாற்றங்கள் அல்ல;

**கூடுதல்** தனி வாழ்வில் மாற்றம்!

30

**கூடுதல்** தாலந்துகள், திறமைகள் அல்ல;

**கூடுதல்** ஆவியின் வரங்கள்!



31

**கூடுதல்** சுகமளிப்புக் கூட்டங்கள் அல்ல;

**கூடுதல்** பரிசுத்தமாகுதலுக்கான மாநாடுகள்!

32

**கூடுதல்** ராஜ தந்திரம் அல்ல; **கூடுதல்** மாயமற்ற அன்பு!

33

**கூடுதல்** பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் அல்ல;

**கூடுதல்** காயப்பட்ட மருத்துவர்கள்!

34

**கூடுதல்** மிஷனரிப் பொறுப்பேற்போர் அல்ல;

**கூடுதல்** மிஷனரிப் பெற்றோர்!

35

**கூடுதல்** திறமையான கரங்கள் அல்ல;

**கூடுதல்** உத்தமமான இதயங்கள்!

36

**கூடுதல்** திறம்படப் பேசும் பேச்சாளர்கள் அல்ல;

**கூடுதல்** உண்மை உழைப்பாளிகள்!

37

**கூடுதல்** அமெரிக்காவுக்குக் குடிபோகிறவர்கள் அல்ல;

**கூடுதல்** ஆப்பிரிக்காவுக்கு மிஷனரிகள்!

38

**கூடுதல்** ஆங்கில வேதப் புது மொழியாக்கங்கள் அல்ல;

**கூடுதல்** புதிய மொழிகளில் மொழிபெயர்ப்பு!

39

**கூடுதல்** இறையிலர்கள் அல்ல; **கூடுதல்** தேவ பக்தியுள்ளோர்!

40

**கூடுதல்** கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அல்ல;

**கூடுதல்** மறுவருகைக்கு ஆயத்தம்!

# 16

# புத்தாண்டுத் தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும்

New Year Prophecies & Promises

ஒவ்வொரு ஆண்டின் இறுதி மாதங்களில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்ட ஆயத்தங்களில் திருச்சபைகள் தீவிர மாயிருக்கும். கிறிஸ்துமஸ் முடிந்ததும், டிசம்பர் 31 நள்ளிரவு ஆராத னைக்கான ஆயத்தங்களில் விறுவிறுப்பாயிருப்போம். ஆண்டின் இறுதி நாளன்று இரவு 12 மணிக்குத்தான் புத்தாண்டு துவங்குகிறது என்பது தான் பொதுவான கருத்து. ஆனால் சரியாய்ச் சொன்னால், திருமறை யின்படி, முந்திய நாள் சூரிய அஸ்தமனத்துடன்தான் அடுத்த நாள் துவங்குகிறது. சிருஷ்டிப்பின் முதல் நாளானது, ''விடியற்காலமும் சாயங்காலமும்'' அல்ல, ''சாயங்காலமும் விடியற்காலமும்'' ஆகும் (ஆதி 1:5). இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் நாட்களும் அப்படியே (வச 8,13,19,23,31). பஸ்கா என்பது முந்திய நாளின் மாலை யிலேயே துவங்கியது (யாத் 12:8). ஓய்வு நாளானது சாயங்காலம் துவங்கி மறுநாள் சாயங்காலம்வரை ஆசரிக்கப்பட்டது (லேவி 23:32). வாரத்தின் முதல் நாளையே ஆதிச்சபையினர் கர்த்தருடைய நாள் என்று அனுசரித்தனர்; அது ஏழாம் நாள் மாலையிலேயே துவங்கிற்று (அப் 20:7,11). எந்தவொரு நாளும் சூரிய அஸ்தமனத்திலேயே துவங்கி, சூரிய



அஸ்தமனத்திலேயே நிறைவடைகிறது. எனவேதான் சூரியன் அஸ்த மிக்குமுன் நமது எரிச்சல் தணியவேண்டும் என அறிவுறுத்தப்பட்டி ருக்கிறோம் (எபே 4:26). புதிய ஏற்பாட்டைப் பொருத்தவரை, அதில் ''பகலும் இரவும்'' என்பதைவிட ''இரவும் பகலும்'' என்றே அதிகமாய் இருக்கிறது (லூக் 2:37; அப் 20:31; 26:7; 1 தெச 2:9; 3:10; 2 தெச 3:8; 1 தீமோ 5:5; 2 தீமோ 1:3). இக்குறிப்பினைச் சபை மேய்ப்பர்கள் சிலருடன் நான் பகிர்ந்துகொண்டபோது, அவர்கள் தங்களது புத்தாண்டு ஆராதனையை டிசம்பர் 31 மாலை ஆறு மணிக்கு முன்தள்ளிக்கொண் டனர். ஆண்டின் முதல் நாளன்று நான் தூங்கிக்கொண்டிராது, விழிப் புடன் விறுவிறுப்பாயிருக்கும்படி, 31ஆம் தேதி மாலை 6 மணி ஆராத னையே எனக்கு அதிகம் பிடிக்கும்! புத்தாண்டுக் காலை வேளையில் ''சமாதானம்'' கூறி வாழ்த்தும்படிக் கிறிஸ்தவரல்லாத பத்துப் பன்னி ரண்டு இல்லங்களுக்குச் சென்று வருவேன் (மத் 10:11-13; லூக் 10:5,6).

இப்படியிருப்பதால் டிசம்பர் 31 அன்று இரவு 12 மணிக்குப் புத்தாண்டு ஆராதனை நடத்துவது தவறு என்று எவரும் சொல்லிவிட முடியாது. ஆனால், அந்தப் பன்னிரண்டு மணிக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் திருவிவிலியத்தைச் சார்ந்ததல்ல. புத்தாண்டு ஆராதனை நடத்தவேண்டிய வேளையைப்பற்றி விவாதிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல; ஆனால், புத்தாண்டின் விடியல் சம்பந்தமாகத் திருவச னத்திற்குப் புறம்பான பாரம்பரியங்களையும் செயல்பாடுகளையும் சுட்டிக்காட்டவே இங்கு நான் முனைகிறேன் —

## (A) புத்தாண்டுத் தீர்க்கதரிசனங்கள்

புத்தாண்டுக்கான தீர்க்கதரிசனங்கள் சொல்லப்போவதாக அறி வித்துப் பிரபலப் பிரசங்கிமார் தங்களது புத்தாண்டு ஆராதனைகளுக்குத் திரள்களைக் கவர்கின்றனர். அவர்கள் கூறும் தீர்க்கதரிசனங்களில் பெரும்பாலானவை நிறைவேறுவதேயில்லை. சொல்லப்போனால், நடப்பதெல்லாம் மாறாகவே இருக்கும். 2020ஆம் ஆண்டு பொன்னான ஆண்டாயிருக்கும் என்றார் ஒரு பிரசங்கியார். அது பொன்னாகவு மில்லை, வெள்ளியாகவுமில்லை! ஆவியானவரால் நிறைந்த வாலிபர்

நங்கையர் பலரை 2020இல் ஆண்டவர் உயர் அரசுப் பதவிகளில் அமர்த்துவார் என்றார் இன்னொருவர். இவ்வாண்டு அரசியல் களம் எப்படியிருந்தது என்று நாமறிவோம். அமெரிக்காவின் 2020 தேர்தலைக் குறித்துத் தீர்க்கதரிசிகள் எனப்படும் பலர் முன்னுரைத்தது பொய்யா யிற்று. கரோனா பரவத் துவங்கியது முதல் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்கள் பல நிறைவேறவேயில்லை. வேதத்தில் படிப்பறிவின்மை (Biblical illiteracy) என்பதற்கே பெயர்பெற்ற நவீனக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் எளிதில் வஞ்சிக்கப்பட்டுப்போகின்றனர். வஞ்சிக் கப்பட்டுப்போனவர்களுக்கு அவர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளதே தெரியாது என்பதுதான் வஞ்சகத்திலும் வஞ்சகம். பகுத்தறிந்து நிதானிக்கும் கலையில் விசுவாசிகளைப் பயிற்றுவிக்காத சபைப் போதகர்களையே இங்கு குற்றம் சாட்டவேண்டும். விசுவாசிகள் வளருவதற்காக அல்ல, கூட்டம் பெருகவே பெரும்பாலான ஞாயிறு ஆராதனைகள் கட்ட மைக்கப்படுகின்றன. பகுத்தறிந்து நிதானிக்கும் ''வரம்'' (gift) என்பது ஒரு சிலருக்கு மட்டுமே அருளப்படுகிறது; ஆனால் ஒரு ''கலை'' (art) என்ற வகையில் அதில் எல்லாரும் கற்றுத் தேறவேண்டும் (1 கொரி 12:10; எபி 5:14; 1 கொரி 2:14).

2020 டிசம்பர் 31 நெருங்க நெருங்க பிரபலமான பொய் உதடு களிலிருந்து பொய்த் தீர்க்கதரிசனங்கள் நிறைய வரும் என்று நான் தீர்க்கதரிசனம் உரைக்கிறேன்! ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளை மறுபடியும் சொல்லுவதே எனது தீர்க்கதரிசனம்: ***''அநேகம்*** கள்ளத் தீர்க்கதரிகள் எழும்பி ***அநேகரை*** வஞ்சிப்பார்கள்'' (மத் 24:11). அவர்கள் செய்யும் ஒரு சில அடையாளங்கள் அற்புதங்களினால் ''தெரிந்து கொள்ளப்பட்டவர்களும்'' வஞ்சிக்கப்படுவார்கள் (வச 24). ஆண்டவர் தரும் முன்னெச்சரிப்பு நாம் முன்னதாகவே ஆயுதம் தரித்து ஆயத்த மாயிருப்பதற்காகவே (வச 25). பொய்த் தீர்க்கதரிசிகளே மெய்த் தீர்க்கதரிசிகளைவிட அதிகமாயிருப்பர் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. ''அநேகர்'' என்ற சொல் திரும்பத் திரும்ப வரு வதைக் கவனியுங்கள் (மத் 7:15,22; 24:5; 2 கொரி 2:17; பிலி 3:18; 1 யோ 2:18). தந்திரத் தீர்க்கதரிசிகளின் மறைவான உள்நோக்கம் பண



ஆசையே (2 பேது 2:3,15). அவ்வப்போது ஏதோ ஒரு சில நல்ல தீர்க்கதரிசனங்களைச் சொல்லிக்கொள்ளும் இவர்களே நவீன பிலே யாம்கள் (யூதா 11; எண் 22:15-17).

**இறுதிக்காலத் தீர்க்கதரிசனம்** என்றால் என்ன என்ற அடிப் படை அறிவு நம்மைப் பெரும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கும். பைபிளே ''தீர்க்கதரிசன வசனம்'' என்றழைக்கப்படுகிறது (2 பேது 1:19). அது ''தீர்க்கதரிசன ஆகமங்கள்'' எனப்படுகிறது (ரோ 16:25). பழைய ஏற்பாடு என்றாலும், புதிய ஏற்பாடு என்றாலும், தீர்க்கதரிசனத்தின் மையக் கருத்து ''இயேசு கிறிஸ்துவே'' என்பதைக் கவனத்திலிருத்த வேண்டும். முழுக்க முழுக்க தீர்க்கதரிசனங்கள் அடங்கியுள்ள வெளிப்படுத்துதல் புத்தகம் கூறுவது: ''இயேசுவைப் பற்றிய சாட்சியே தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் (சாராம்சமாய்) இருக்கிறது'' (வெளி 19:10இ). பழைய ஏற் பாட்டுத் தீர்க்கர்கள் தங்களுக்குள் இருந்த ''கிறிஸ்துவின் ஆவியானவர்'' மூலமாகவே செய்திகளை முன்னறிவித்தனர் (1 பேது 1:10-12). கிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்து ஏறத்தாழ 100 தீர்க்கதரி சனங்களும், அவரது மறு வருகை குறித்துக் கிட்டத்தட்ட 300 தீர்க்க தரிசனங்களும் பைபிளில் உண்டு. அவரே பிதாவானவராகிய தேவனது இறுதியான தீர்க்கதரிசனக் குரல் (எபி 1:1,2). தீர்க்கதரிசிகளிலெல்லாம் தீர்க்கதரிசியாக அவர் வந்தார் (உபா 18:17,18; அப் 3:22,23; யோ 6:14; 7:40). எனவே, தீர்க்கதரிசனம் எதுவும் இன்று கிறிஸ்துவை மையப் படுத்தியதாகவே இருக்கவேண்டும். இந்தப் பாணியில்தான், நாமெல் லாரும் ஆவியின் அபிஷேகத்துடன் இந்த இறுதிக்காலத்தில் தீர்க்க தரிசனம் உரைக்க அழைக்கப்பட்டுள்ளோம் (அப் 2:16-18). அதிசீக்கிரம் நிகழவிருக்கும் இரண்டாம் வருகைக்காய் நடைமுறையில் நம்மை ஆயத்தப்படுத்துவதற்கு ஏதுவான நேரடிச் செய்திகளே (forthright messages) இன்றையத் தேவை. வெளிப்படுத்துதல் இரண்டாம், மூன் றாம் அத்தியாயங்களில், கிறிஸ்துவானவர் ஏழு சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் ''நான் சீக்கிரம் வருகிறேன்'' என்று ஐந்து முறை கூறி யுள்ளார் (வெளி 2:5,16,25; 3:3,11). ''மெய்யாகவே நான் சீக்கிரம் வரு கிறேன்'' என்ற வார்த்தைகளுடன் இப்புத்தகம் நிறைவுறுகிறது (22:20).

இப்புத்தகத்தில் அப்போஸ்தலன் யோவான் எழுதியுள்ள அறிமுக வாசகம்: ''இதோ, மேகங்களுடன் வருகிறார்!'' (1:7).

நமக்கென்ற தனித் தீர்க்கதரிசனங்கள் மற்றும் பரவசமான காரியங்களிலேயே நாம் அளவுக்கதிகமான ஆர்வம் காட்டுவது வருந்தத்தக்கது. இதுதான் இன்றையச் சபை யுகத்தைக் குறித்த தேவனது பிரதான திட்டத்திலிருந்து நம்மைத் திசைதிருப்பிச் சிக்கல்களில் கொண்டு சேர்க்கும். பொய்த் தீர்க்கதரிசனங்களில் ஏமாந்துபோன நிலையில், நமது உள்ளான மன நிர்ணயங்களில் நாம் ஆட்டம் காண்போம்; ஆனால் அதனை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டோம், அமைதிப்படுத்தி விடுவோம். ''பக்திவிருத்தி, புத்தி, ஆறுதல்'' ஆகியவற்றின் மூலம் இறைமக்களைக் கட்டியெழுப்புவதற்காக, எழுதப்பட்டுள்ள திருவசனத்திலிருந்து கொடுக்கப்படவேண்டிய அகத்தூண்டுதலான வார்த்தைகளே திருச்சபையில் வெளிப்படவேண்டிய தீர்க்கதரிசன வரத்தின் சாராம்சமாய் இருக்கவேண்டும் (1 கொரி 14:3). பவுலின் இப்போதனையைப் பேதுரு ஆமோதிக்கிறார்: ''ஒருவன் (தான் பெற்ற வரத்தின் படி) போதித்தால் (அல்லது பேசினால்), தேவனுடைய வாக்கியங்களின்படிப் போதிக்கட்டும்'' (1 பேது 4:10,11; 2 பேது 1:20,21). இதுவும்கூட ஆவியானவரின் மற்றும் திருவசனத்தின் நிறைவுடன், பிரதானமாக ''ஒருவருக்கொருவர்'' பேசிப் பக்திவிருத்தியடையச் செய்வதையே குறிக்கும் (1 பேது 4:10; எபே 5:18,19; கொலோ 3:16).

அடுத்த அதிபர் அல்லது பிரதம மந்திரி யாரென்று நாம் முன்னறிவிக்கத் தேவையில்லை. அது ஏரோது என்றாலென்ன, பிலாத்து என்றாலென்ன? அது நேபுகாத்நேச்சார் என்றாலென்ன, தரியு என்றாலென்ன? அது நெருப்பு என்றாலென்ன, சிங்கக்கெபி என்றாலென்ன? ஆவியினால் நிறைந்த இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளுக்கு எல்லாம் ஒன்றுதானே? யார் தெரிந்தெடுக்கப்படவேண்டும், யார் தள்ளப்படவேண்டும் என்று தேவனுக்குத் தெரியும் (தானி 5:21ஆ). நமது குருவி மூளையை வைத்துக்கொண்டு சர்வ ஞானியாகிய தேவனுக்கு ஆலோசனை சொல்லத் துணியாதிருப்போம் (ரோ 11:33,34). பொதுவிட ஜெபங்கள்



மற்றும் முன்னறிவிப்புகள் மூலம் ஏதோவொரு அரசியல் கட்சிக்கு ஆதரவளிக்கும்படி கிறிஸ்தவர்களைத் தூண்டிவிடுவது எதிர்க்கட்சியினரது தேவையற்ற பகையைச் சம்பாதிக்கும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பொது மேடைகளில் எவ்வகையிலும் வெளிப்படுத்தக் கூடாது. கிறிஸ்தவ நாடு எனப்படும் அமெரிக்காவில் இன்று நிலவும் அரசியல் சூழலானது திருச்சபையினரை ஜனநாயகக் கிறிஸ்தவர் (Democratic Christians) என்றும், குடியரசுக் கிறிஸ்தவர் (Republican Christians) என்றும் பிரித்துவிட்டது. ஏற்கனவே நமக்கிருக்கும் பிரிவினைகளும் பிளவுகளும் ஏராளம். அந்நாட்டிலுள்ள கிறிஸ்தவப் பேச்சுத் தொடர்பாளர்கள் திருவசன உபதேச அடிப்படையில் நடந்துகொண்டிருந்தால் இதனைத் தவிர்த்திருக்கலாம். சமீபத்திய தேர்தல்களின் விளைவு இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நம்மை எவ்வளவாய்த் தலை குனிய வைத்துவிட்டது! தமிழகத்தில் இப்பொழுது (டிசம்பர் 2020) தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் இதனைக் குறித்துச் சற்று அமைதி காக்கும்படிப் பிரசங்கிமாரைக் கெஞ்சிக் கேட்கிறேன். உள்ளூர்ச் சபைச் சூழலிலேயே தீர்க்கதரிசன வரம் வெளிப்படுவது எப்பொழுதுமே பாதுகாப்பு; ஏனெனில் உடன் தீர்க்கதரிசிகளின் நிதானிப்பு இருக்குமே (1 கொரி 14:29-33). இவ்விதப் பரிசோதனையானது கேடான விளைவுகளைத் தவிர்க்கப் பாதுகாப்பாய் அமையும். புதிய ஏற்பாட்டில் சூப்பர் ஸ்டார்களுக்கு இடமில்லை (அப் 13:1; 15:32). பிரபலங்களின் தீர்க்கதரிசனங்கள் பொய்த்துப்போகும்போது, தாழ்மையுடன் அவர்கள் மக்களுக்குமுன் சொல்ல வேண்டியது: ''உங்களைத் தவறாய் வழிநடத்தியதற்காய் என்னை மன்னியுங்கள். ஆம், நமது அறிவும் குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது என்று பவுலடியார் சொன்னதை நான் இப்பொழுது புரிந்து ஏற்றுக்கொள்ளுகிறேன். தேவனது வழிகளைக் குறித்த அறிவில் நான் இன்னும் வளர்ந்து தேறும்படி எனக்காய் ஜெபியுங்கள்'' (1 கொரி 13:9,11). இப்படி அறிக்கையிட்டால் அவர்கள் இன்னும் உயர்வர்.

நட்சத்திரப் பிரசங்கிமார் அடிக்கடி மேற்கோள் காட்டுவது ஆமோஸ் 3:7, ''கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தமது ஊழியக்கார

ருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல், ஒரு காரியத்தையும் செய்யார்.'' முழுச் சபையும் புதிய ஏற்பாட்டு யுகத்தில் இறைச்செய்தியை அறிவிக்கும் தீர்க்கதரிசனச் சமுதாயமாய்த் திகழவிருப்பதை முன்னறிவிப்பதே பழைய ஏற்பாட்டிலுள்ள இவ்வசனத்தின் நோக்கம் (அப் 2:17,18,21). ஆமோஸ் 3:8 என்ற அடுத்த வசனமே என்ன சொல்லுகிறது என்று கவனியுங்கள்: ''சிங்கம் கெர்ச்சிக்கிறது; யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார்; யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?'' இதுவே மோசேயின் தீர்க்கதரிசன எதிர்பார்ப்பு (எண் 11:29). பவுலின் ஏக்கமும் இதுவே (1 கொரி 14:1,5இ,31). யோவான் 15:15இல் நமதாண்டவர் தமது சீடரிடம் சொல்லியது இங்கு நமக்குக் கூடுதல் வெளிச்சம் தருகிறது. உள்ளூர்ச் சபை ஒவ்வொன்றும் தெசலோனிக்கேய சபை போலிருக்கவேண்டும் (1 தெச 1:8). சபையைக் கடந்து புறவழிப்பாதையில் சென்று தேவன் சமுதாயத்தை ஆசீர்வதிப்பதில்லை. மாறாக, மணப்பெண்ணாகிய அவளுடன் சேர்ந்து கொண்டு உயிரூட்டும் நீரூற்றுகளுக்கு ஆவியானவர் மக்களை அழைக்கிறார் (வெளி 22:17). எனவேதான் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வேல்ஸ் எழுப்புதலில் தேவனால் முக்கியமாய்ப் பயன்படுத்தப்பட்ட பக்தன் ஈவான் ராபர்ட்ஸ் (1878-1951) மன்றாடியது: ''ஆண்டவரே, சபையை வளைத்து உலகை வளமாக்கும்!''

2021ஆம் ஆண்டு எப்படியிருக்கும் என்றறிய ஆர்வமா? மத்தேயு 24-25ஆம் அத்தியாயங்களுக்குத் திருப்புங்கள். தமது சீடர்களின் மூன்று கேள்விகளுக்கு ஆண்டவர் கொடுத்த பதிலே இவ்விரு அத்தியாயங்களிலுள்ள 100 வசனங்கள். ''இவை எப்பொழுது நிகழும்? உமது வருகைக்கு அடையாளம் என்ன? உலகின் முடிவுக்கு அடையாளம் என்ன?'' (24:3). இருபது நூற்றாண்டுகள் பழமையான இக்கேள்விகள் நாம் கேட்பவையும்தானே? 2021ஆம் ஆண்டும் அடுத்து வரும் ஆண்டுகளும் எப்படியிருக்குமென்றும், நாம் எவ்விதம் வாழவேண்டுமென்றும் தெரிந்துகொள்ள அதிமுக்கியமான இவ்விரு அத்தியாயங்களையும் இரண்டு மூன்று முறை கருத்தூன்றி வாசியுங்கள். நாம் கவனத்திலிருத்த வேண்டிய காரியங்களை இங்கு வரிசைப்படுத்துகிறேன் —



**(1)** இயேசுவானவர் கொடுத்த நீண்ட 100-வசனப் பதிலின் முதல் வாக்கியமே என்னவென்று பாருங்கள்: ''ஒருவனும் உங்களை ***வஞ்சியாதபடி*** எச்சரிக்கையாயிருங்கள்'' (மத் 24:4). உபதேச வஞ்சகமே முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது (வச 11). தங்கள் சபையினருக்கும் நேயர்களுக்கும் கிரமமாக நெடுகவே ஆரோக்கிய உபதேசத்தைப் போதிக்கும்படி மேய்ப்பர்களையும் பிரசங்கிமாரையும் வருந்திக் கேட்கிறேன் (2 தீமோ 4:2-4; தீத் 2:1). பீறிப்போடும் ஓநாய்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு இது ஒன்றே வழி (அப் 20:27-31). நூதனமானவற்றிலும், கேள்விக்குரிய காரியங்களிலும் ஆர்வம் காட்டக்கூடாதென்று அவர்களை எச்சரியுங்கள். பைபிளுக்குக் கூடுதலானவைகளுக்கு இடமே தரக்கூடாது.

**(2)** நாடுகளுக்கிடையே ***சண்டை சச்சரவுகள்*** பெருகியவண்ணமிருக்கும் (மத் 24:6,7). சர்வதேச சமாதான முயற்சிகள் அதிகம் பயனளிக்காது. பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கைகுலுக்குவதும் கட்டிப்பிடிப்பதும் அர்த்தமற்றவையாயிருக்கும். எல்லைப் பிரச்னைகள் பெருகும். ஏழ்மையான நாடுகள் சூறையாடப்படும்.

**(3)** மதம் சாரா மற்றும் மதம் சார்ந்த இருவகை நாடுகளிலும் கிறிஸ்தவர்களுக்கு ***உபத்திரவம்*** கூடும் (மத் 24:9,10). சிறையடைப்பும் இரத்தசாட்சி இறப்பும் வாடிக்கையாகும். மிஷனரி இயக்கங்களும் நற்செய்தியறிவிப்பு நிறுவனங்களும் கடினமான பாதையில் செல்லவேண்டியதிருக்கும். ஆனாலும், திருச்சபை வளர்ச்சி அமோகமாயிருக்கும் (வச 13,14; 16:18). சபைக்கு இருக்கவேண்டிய, ஆனால் அது இழந்துவிட்ட, உவர்ப்பையும் பிரகாசத்தையும் திரும்பக் கொண்டு வரும் அசாதாரண எழுப்புதலை நாடி நாம் தேவனுக்குமுன் மண்டியிட வேண்டும் (மத் 5:13,14). உபத்திரவப்படுதலைப்பற்றிப் பேசும்போது தான் ஆண்டவர் உப்பையும் வெளிச்சத்தையும் குறித்துப் பேசினார் (வச 11,12). பிரசங்கிமாரும் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவத்திற்கு எதிரிகள் முன்னர் ஒருவரையொருவர் காட்டிக்கொடுப்பர் (மத் 24:10; லூக் 21:16).

**(4)** தம்பதியர், பெற்றோர்-பிள்ளைகள், உடன் பிறந்தோர், மற்றும் சக மனிதரிடையே இருக்கவேண்டிய ***சுபாவ அன்பு*** மங்கிக்கொண்டே போகும் (மத் 24:12; 2 தீமோ 3:1-5). சகவுறவுகள் மேலோட்டமாய்த் தானிருக்கும். சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் தன்னலம் தலைவிரித்தாடும். பொய் பேசுதலும் ஏமாற்றுதலும் சகஜமாகிவிடும்.

(5) உடல் சார்ந்த ***சிற்றின்பங்களே*** ஆடவருக்கும் பெண்டிருக்கும் பிரதான நாட்டமாயிருக்கும். பொருளாசையானது சபையையும் சமுதாயத்தையும் கொள்ளை கொள்ளும் (மத் 24:36-39). பாலியல் சீர்கேடுகள் தீவிரமாய்ப் பரவும் (யூதா 16-19). உல்லாசப் பொழுது போக்குக்கடுத்த வர்த்தகம் என்றுமில்லாத அளவு பெருகும். டிஜிட்டல் உலகானது நமது இளைஞரைத் திமிங்கலம்போல் விழுங்கிப்போடும். விசுவாசிகள்கூட தரமான நேரத்தை ஜெபத்திலும் வசன தியானத்திலும் செலவழிப்பதைவிட, கவர்ச்சியானதையெல்லாம் வாங்குவதிலும், கண்டதையும் சாப்பிடுவதிலுமே இன்பம் காணுவர் (லூக் 17:26-30; 21:34-36).

**(6)** வரவிருக்கும் ஆண்டுகளில் ***பஞ்சங்களும், கொள்ளை நோய்களும்*** இன்னும் அதிகமாகவே இருக்குமென எதிர்பார்க்கலாம் (மத் 24:7). இன்னும் கடுமையாகக் கரோனா நம்மை மறுபடியும் சந்திக்க வரலாம். புதுவிதமான தொற்று நோய்களை நாம் சந்திக்க நேரிடும். அறிவியலும், தொழில் நுட்பவியலும் நமக்குத் தேவைதான்; ஆனால் அவற்றை நாம் கும்பிடத் துவங்கினால் தேவன் சகிக்க மாட்டார். வரவிருக்கும் பாடுகள் நமது விசுவாசத்தை அசைத்துப் பார்க்கும் (லூக் 18:8). ஆனால் நமது சக்திக்கும் அவரது உதவிக்கும் மிஞ்சி நாம் சோதிக்கப்பட தேவன் இடங்கொடுக்க மாட்டார் (1 கொரி 10:12,13).

**(7)** தங்களது பொறுப்புகளை உணருவதைவிடத் தங்கள் சிலாக்கியங்களில் உற்சாகம் கொள்ளுவதிலேயே மனிதர் தேறியிருப்பர். தேவனருளிய ஆசிகள் மற்றும் நலன்கள் குறித்த ***உக்கிராணத்துவப் பொறுப்பு***, விசுவாசிகளோ அவிசுவாசிகளோ, எவருக்குமுண்டு. உக்கிராணத்துவத்தில் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வோர் தேவனுக்குப் பிரியம். வேலைக்காரர் குறித்த உவமை மற்றும் தாலந்துகள்



குறித்த உவமை இச்சத்தியத்தையே வலியுறுத்துகின்றன (மத் 24: 43-51; 25:14-30). செல்வந்தர் இன்னும் செல்வந்தராகுவது, எளியவர் இன்னும் எளியவராகுவது எனும் போக்கு தொடரத்தான் செய்யும். கிறிஸ்தோராகிய நாமோ நமது தானதர்மச் செயல்களைப் பெருக்கி, கஞ்சத்தனத்திலிருந்து மனந்திரும்பவேண்டும் (வச 31-46).

## (B) புத்தாண்டு வாக்குத்தத்தங்கள்

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கிறிஸ்தவர்களைப் பரவசப் படுத்தும் அடுத்த காரியம் புத்தாண்டு வாக்குத்தத்தங்கள் ஆகும். புத்தாண்டு முழுவதிலும் நாம் மலைகள் பள்ளத்தாக்குகள், மற்றும் தணல்கள் தண்ணீர்கள் வழியே கடந்து செல்லும்போது பிடித்துக்கொள்வதற்காகத் தேவனுக்குமுன் நமது தனித்தியான வேளையின்போது அமர்ந்து வாக்குத்தத்தம் ஒன்றைப் பெற்றுக்கொள்வது சரியே. ஆனால், இவ்வாண்டுக்குத் தேவன் தரும் வாக்குத்தத்தம் என்னவென்று அறிந்துகொள்ளப் பிரபலப் பிரசங்கிமாரை நோக்கிக்கொண்டிருப்பது நம்மைத் தவறாய் நடத்தும். ஒவ்வொரு பிரசங்கியாரும் ஒரு வாக்குத்தத்தத்தைச் சொல்லுவார். மூன்று நான்கு கூட்டங்களில் பங்கேற்றால் எந்த வாக்கு உங்களுக்குரியது என்று தெரியுமோ? ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் உங்களை இன்னும் குழப்பும். திருவாக்குகளை எப்படிப் புரிந்து கையாளவேண்டும் என்ற அடிப்படை அறிவு பல ஏமாற்றங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றும் —

புத்தாண்டிற்குப் பிரசங்கிமார் பெரும்பாலும் கூறும் வாக்குத்தத்தங்கள் பழைய ஏற்பாட்டிலேயே உள்ளவை. வாக்குத்தத்தங்களின் பல்வகையை வேறு பிரித்துப் பார்க்கத் தெரியாவிடில் நாம் தடம் புரளுவது எளிது. *(1) தனி நபர்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்கள்* (Personalised Promises). எடுத்துக்காட்டாக, ''உன்னைச் சபிக்கிறவர்களை நான் சபிப்பேன்'' என்று ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குப்பண்ணினார் (ஆதி 12:3ஆ). நற்செய்தியை ஏற்க மறுத்த சமாரியக் கிராமத்தின்மீது அக்கினியை இறக்க இயேசுவிடம் அனுமதி கேட்ட சீடரின் மனதில் இதுவே இருந்திருக்கலாம். ஆனால் அவர்களது மனப்பான்மை தவறானது என்று இயேசு கடிந்துகொண்டார் (லூக் 9:52-56).

தம்மைத் தூஷித்துச் சபித்தவர்களுக்காகவும் இயேசு ஜெபித்தார். நம்மைச் சபிக்கிறவர்களை நாம் ஆசீர்வதிக்கவேண்டும் என்றே அவர் நமக்குப் போதித்துள்ளார் (மத் 5:44,45). முதல் மிஷனரி ஆபிரகாம் தான் எனினும் அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்கினை இன்றைய மிஷனரிப்பணிச் சூழலில் நாம் எடுத்துக்கொள்ள முடியாது! அடுத்து, *(2) தேசிய அல்லது கோத்திர வாக்குத்தத்தங்கள்* (National / Tribal Promises). நப்தலி கோத்திரம் குறித்து மோசே தனது இறப்பிற்குமுன் பேசுகையில் மேற்கு நாட்டையும் கிழக்கு நாட்டையும் அவர்கள் சுதந்தரிப்பார்கள் என்றார் (உபா 33:23). இது வாக்குப்பண்ணப்பட்ட நாட்டில் அவர்களுக்குக் கிடைக்கவிருந்த பாகம் (யோசு 19:32). இஸ்ரவேலரைத் தேவன் சிதறடித்த பின்னர் மறுபடியும் அவர்களைத் தங்கள் நாட்டிற்குத் திரும்பிவரப்பண்ணுவதாக வாக்குப்பண்ணினார். இலங்கைக் கிறிஸ்தவர்களோ, திபெத்தியக் கிறிஸ்தவர்களோ தங்கள் தாயகம் திரும்புவதற்கு இவ்வாக்கினை உரிமை பாராட்டமுடியாது! இன்னொரு வகை, *(3) யுகங்களுக்கடுத்த வாக்குத்தத்தங்கள்* (Dispensational Promises). ஏசாயா 11:6-9இல் நாம் வாசிப்பது: ஆட்டுக்குட்டியுடன் ஓநாய் தங்கும்; வெள்ளாட்டுக்குட்டியுடன் புலி படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும் சிங்கமும் சேர்ந்து விளையாடும்; பசுவும் கரடியும் கூடி மேயும்; மாட்டைப்போல் சிங்கம் வைக்கோல் தின்னும்; பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின்மீது விளையாடும்; இப்படிப் பல! இது கிறிஸ்துவின் வரவிருக்கும் மண்ணுலக ஆட்சியைக் குறிக்கும். சபை யுகத்திற்கு இது பொருந்தாது. அடுத்து, *(4) மேசியாவிற்குரிய வாக்குத்தத்தங்கள்* (Messianic Promises). ‘‘அவனது எலும்புகளையெல்லாம் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவற்றில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை’’ என்று சங்கீதம் 34:20இல் நீதிமானுக்கு ஒரு வாக்குண்டு. இயேசு வானவர் இறந்துவிட்டாரென்ற பின்னரும் அவரது எலும்புகள் முறிக்கப்படாததற்கு இதுவே காரணமென்று யோவான் 19:36இல் இவ்வாக்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (யோ 19:33,36). நமது உடல் பாதுகாப்பிற்காகத் தேவனிடம் நாம் ஜெபிக்கலாம் என்றாலும், குறிப்பிட்ட இவ்வாக்கு முழுமையாக இறைமகனுக்கே உரித்தானது. ‘‘மன்னிக்கப்பட்ட’’ திருடனின் கால்களும் முறிக்கப்பட்டனவே (வச 32). அப்பப்பா, சாலை விபத்துகளிலும், சறுக்கும் குளியலறைகளிலும் எலும்பு முறிவடைந்த தேவ ஊழியர்தான் எத்தனை!



தங்களது பத்திரிகைகள் மற்றும் நாட்காட்டிகளில் பிரசங்கிமார் அதிகப் பிரியமாய்ப் பயன்படுத்தும் வாக்குத்தத்தங்களும் உண்டு. ■ ஒன்று ஏசாயா 25:8, ‘‘கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்.’’ கண்ணிரில்லாத பிரசங்கியாரோ விசுவாசியோ உண்டோ? கண்ணீரில் ‘‘கொஞ்சம்’’ மட்டுமே இன்று துடைக்கப்படுகிறது. கிறிஸ்து திரும்ப வரும்போதுதான் ஏசாயாவிலுள்ள இவ்வாக்கு நிறைவேறும் (வெளி 7:17; 21:4). ■ காலண்டரில், அதுவும் குறிப்பாக ஜனவரி மாதத்திற்கு, இன்னொரு பிரபல வசனம், ஆகாய் 2:19, ‘‘நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்!’’ பிரியமானவர்களே, ‘‘இன்று’’ என்பது கிறிஸ்துவின் மறுவருகையின்போது தேவன் வானுலகையும் மண்ணுலகையும் அசையப்பண்ணி, அரசுகளின் சிங்காசனங்களைக் கவிழ்த்து, ஆயிரமாண்டு அரசாட்சியை நிறுவும் நாளையே குறிக்கும் (வச 20-23). ஒரு மனிதன் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும் நாளன்றுதான் ஆசீர்வாதங்களிலெல்லாம் ஆசீர்வாதம் அவன் வாழ்வில் துளிர்க்கிறது (லூக் 19:9,10; 2 கொரி 6:2). ■ உபாகமம் 28:1ஐ ‘‘ஜாதிகள்’’ என்ற சொல்லுடன் அப்படியே காலண்டர்களில் அச்சடிக்கப்படுவதை என்னால் தாங்க முடிவதில்லை. அபத்தம்! நாடார் குலத்தைச் சேராத, கிறிஸ்தவரல்லாத, ஒருவர் நாடார் கிறிஸ்தவர் இல்லமொன்றில் இந்த நாட்காட்டி வாசகத்தைப் பார்த்தால் என்ன நினைப்பார்? நண்பர்களே, என்னைக் கோபித்துக்கொள்ளாதீர்கள். நமக்குப் பக்தி இருந்தால் போதாது, புத்தியும் வேண்டும்! இவ்விதக் காலண்டர் தாள்களை எரித்து விடுங்கள். திருமறையின் புது மொழியாக்கங்களிலிருந்து பொருத்தமான வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, ‘‘ஜாதிகள்’’ என்ற பழைய மொழியாக்கச் சொல் ‘‘மக்களினங்கள்’’ என அழகாகப் பொது மொழிப்பெயர்ப்பாகிய *திருவிவிலியத்தில்* தரப்பட்டுள்ளது. மொழி வளர்ச்சியில் தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய நாம் பின்தங்கியே இருக்கிறோம்.

திருமறையிலுள்ள வாக்குத்தத்தங்களில் இன்னொரு வகை *(5) சந்தர்ப்பம் சார்ந்த வாக்குத்தத்தங்கள்* (Situational Promises). நற்செய்தியைப் பறைசாற்றப் பன்னிருவரை ஆண்டவர் அனுப்பிவைத்த போது, பணப்பை எடுத்துச் செல்லவேண்டாம் என்று அவர்களிடம் கூறினார் (மத் 10:5-10). ''இஸ்ரவேல்'' நாட்டின் கிராமங்களுக்கு அவர்களை அனுப்பிவைத்த குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றில்தான் இவ்விதம் சொல்லியனுப்பினார் (வச 5,6). வேறொரு சந்தர்ப்பத்தில் அவர்களைப் பணப்பை எடுத்துச்செல்லச் சொன்னார் (லூக் 22:35,36). பவுலை எவரும் தாக்கமாட்டார்கள் என்ற பாதுகாப்பை அவர் கொரிந்து நகரிலிருந்தபோது ஆண்டவர் வாக்களித்தார் (அப் 18:9,10). ஆனால் அப்படி ஒரு வாக்கு எருசலேமில் அவருக்குக் கொடுக்கப்படவில்லை (அப் 22:17-21). மாறாக, அவரை அடித்து நொறுக்கினார்கள் (வச 23-25). பாதுகாக்கும் தூதர்கள் அப்பொழுது எங்கே? தாயகம் திரும்பி விட்டார்களோ? (சங் 34:7).

புத்தாண்டிற்கு மட்டுமல்ல, இன்னும் பல காரியங்களுக்கும் திருமறை வாக்குகள் தவறாய்ப் பயன்படுத்தப்படுகின்றன. தங்களது பிரமாண்ட ஆலயக் கட்டிடங்களுக்கும், ஜெபக் கோபுரங்களுக்கும் சபை மேய்ப்பர்களும் பிரசங்கிமாரும் திருவசன வாக்குத்தத்தங்களை உரிமை பாராட்டுவது ஓர் எடுத்துக்காட்டு. உபாகமம் 12:5,13 மற்றும் 2 நாளாகமம் 7:12,15,16 ஆகிய வசனங்களை மேற்கோள் காட்டி தங்களது கட்டிடங்கள் புனிதமானவை, விசேஷித்தவை என்றெல்லாம் மக்களிடம் கூறுவார்கள். யுகங்களின் அடிப்படையில் தேவனது செயல்பாடுகள் குறித்த அறிவு இவர்களுக்கு இல்லாதிருப்பது எனக்கு வருத்தம். ஜெப மலை என்று ஒன்றைக் குறித்துச் சமாரியப் பெண் கொண்டிருந்த பாரம்பரிய நம்பிக்கையை இயேசுவானவர் திருத்தினார் (யோ 4:20-24). கிருபையின் இந்த யுகத்தில், அவரது பெயரால் இருவர் அல்லது மூவர் ''எங்கு'' கூடினாலும் அவர்கள் ''நடுவில்'' அவர் இருக்கிறார் (மத் 18:20). இன்று தேவன் மண்டபங்களை அல்ல, மக்களையே புனிதமாக்குகிறார் (எபே 2:19-22). எந்த இடமும் மற்றதைவிடப் புனிதமானது அல்ல. திரைச்சீலை கிழிந்துவிட்டது (மத் 27:51; மாற் 15:38). அதனைத் திரும்பத் தைக்காதீர்கள்! ''உன்னதமானவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்'' என்று திருச்சபையின் முதல் இரத்தசாட்சியானவர் சரியாய்ச் சொன்னார் (அப் 7:48). இதனை இன்று ஓர் உயர் ஆங்கிலிக்கன் அல்லது ரோமன் கத்தோலிக்கனிடம் சொல்லிப்பாருங்கள்; ஸ்தேவானைப் போன்று உயிர் போய்விடும், கவனம்!



அப்படியானால், இன்னொரு கேள்வி எழுகிறது: ''தேவனது வாக்குகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கின்றன'' என்பதின் பொருளென்ன? (2 கொரி 1:20). ***''கிறிஸ்துவுக்குள் ... அவருக்குள்''*** என்ற வார்த்தைகள்தான் இங்கு முக்கியமானவை. அதாவது, எல்லா வாக்குகளும் என்று இங்கு குறிப்பிடப்படுவது ***மீட்பின்*** ஆசீர்வாதங்களை அடுத்தவையாகும்: (a) நித்திய ஜீவன் குறித்த வாக்குத்தத்தம் (தீத் 1:1-3; 1 யோ 5:13); (b) கிறிஸ்து மூலம் கிடைக்கும் இரட்சிப்பு குறித்த வாக்குத்தத்தம் (எபி 11:13,39, 40); (c) கிரியைகள் இல்லாமல் நீதிமானாக்கப்படுதல் குறித்த வாக்குத்தத்தம் (ரோ 4:3,6-8,13,14); (d) கிறிஸ்துவில் இளைப்பாறுதல் குறித்த வாக்குத்தத்தம் (எபி 4:1; மத் 11:28); (e) பரிசுத்த ஆவியானவர் குறித்த வாக்குத்தத்தம் (அப் 1:4,5; 2:33அ); (f) திவ்விய சுபாவத்தில் பங்கு குறித்த வாக்குத்தத்தம் (2 பேது 1:4); (g) கிறிஸ்துவில் நங்கூரமான பாதுகாப்பு குறித்த வாக்குத்தத்தம் (யோ 10:27-29); (h) உயிர்த்தெழுதல் குறித்த வாக்குத்தத்தம் (அப் 26:6-8). இவைதான் உன்னதங்களில் நாம் கிறிஸ்துவுடன் அனுபவிக்கும் ''ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்'' (எபே 1:3).

இன்னொரு கேள்வி: ''என்னை ஊக்குவிப்பதற்கும், எனக்கு உறுதியளிப்பதற்கும், என்னை விடுவிப்பதற்கும் ஏதுவான தனிப்பட்ட செய்தியொன்றைத் திருவசன வாக்கு ஒன்றின் மூலம் தேவன் எனக்குத் தர முடியாதா?'' தேவனால் முடியும். தேவன் அப்படிச் செய்கிறார். ஆனால் மீட்பின் ஆசீர்வாதங்களுக்குரிய வாக்குத்தத்தங்கள் போல நாம்

வேறெந்த வாக்கையும் பொதுவாக்கக்கூடாது. அங்கும்கூட மேற்கண்ட பத்திகளில் விளக்கியுள்ளபடி அதினதின் வரம்புகளுக்குள்ளேயே வாக்குத்தத்தங்கள் கையாளப்படவேண்டும். இல்லையேல், நாம் கானல் நீரை விரட்டிய கதையாகிவிடும். ஆரோக்கிய உபதேசக் கருத் தரங்கு-I (Sound Doctrine Seminar-I, 1997), கருத்தரங்கு-II (SDS-II, 2007) மற்றும் கருத்தரங்கு-III (SDS-III, 2012) ஆகிய கூடுகைகளில் நான் போதித்த பாடங்களைக் கேட்கும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். இவை தமிழாக்கம் இல்லாது ஆங்கிலத்தில் 2021இல் WhatsApp மற்றும் எனது Websiteஇல் வெளியாகும். ஏற்கனவே ஆங்கிலம்-தமிழில் இவை StanleyOnBible என்ற YouTubeஇல் உண்டு.

## பொறுப்புகள்நிறை பத்தாண்டு (Decade of Responsibilities)

2021-2030 என்ற பத்தாண்டினை எழுப்புதல் பத்தாண்டு (Decade of Revival) என்று அகிலவுலக அளவில் திருச்சபைகளும் திருச்சங் கங்களும் அறிவித்துள்ளன. அது ''எழுப்புதல்'' பத்தாண்டு என்றி ருக்கவேண்டுமா, ''பொறுப்புகள்'' பத்தாண்டு என்றிருக்கவேண்டுமா? ''எழுப்புதல், எழுப்புதல்'' என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கும்போது பளு முழுவதையும் தேவனது தோள்களில் சுமத்திவிடுகிறோம். ஏதோ தேவன் எழுப்புதலை அனுப்பத் தயங்குவது போலவும், அவரை நாம் கட்டாயப்படுத்தவேண்டுவது போலவும் நினைத்துவிடுகிறோம். தேவனது பங்கை அளவுக்குமீறி முக்கியப்படுத்தி, நமது பொறுப்பை போதுமான அளவு வலியுறுத்தாததே நமது கிறிஸ்தவ வாழ்விலும் பணியிலும் சமநிலை இல்லாது சரிவதற்குக் காரணம். எழுப்புதல் குறித்த திருமறைப் பகுதிகளில் பெரும்பாலானவை ''நமது'' பொறுப் பையே அழுத்திக் கூறுகின்றன (2 நாளா 7:14; ஓசி 6:1-3; ஏசா 57:15; யோவேல் 2:17-19,23; அப் 3:19,20). நமது பொறுப்பைப் போதுமான அளவு உணராதிருப்பதே எழுப்புதல் தாமதிப்பதற்கு ஒரு முக்கிய காரணம். பொறுப்புள்ள கிறிஸ்தவர்களாக, பொறுப்புள்ள இளைஞர் களாக, பொறுப்புள்ள பணியாட்கள் மற்றும் தலைவர்களாக, பொறுப் புள்ள தம்பதிகள் மற்றும் பெற்றோர்களாக, பொறுப்புள்ள பிரசங்கிமாராக,



பொறுப்புள்ள குடிமக்கள் மற்றும் அதிகாரிகளாக நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று பைபிளிலிருந்து கற்றுக்கொள்ளப் போது மான நேரம் வரும் ஆண்டில் எடுத்துக்கொள்வோம். புத்தாண்டுத் தீர்க்க தரிசனங்கள் மற்றும் புத்தாண்டு வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிறைய கேட்டுவிட்டோம். இப்பொழுது திடமான புத்தாண்டுத் தீர்மானங்கள் (Resolutions) எடுத்து அவற்றை நிறைவேற்ற முழுமூச்சாய் முயலு வோம் —

## (C) புத்தாண்டுத் தீர்மானங்கள்

நாம் ''திவ்விய சுபாவத்தில்'' பங்கேற்போம் என்பதே பைபிளிலுள்ள வாக்குத்தத்தங்களிலெல்லாம் வாக்குத்தத்தம் ஆகும். இதனை ''மகா மேன்மையும் அருமையுமான'' வாக்கு எனத் திருமறை அழைக்கிறது (2 பேது 1:3,4). இயேசுவை முகமுகமாய்ச் சந்திக்கும்போது தேவப் பிள்ளைகளாகிய நாம் அவரைப் போலவே மாறுவோம் என்ற நம்பிக்கை களிலெல்லாம் நம்பிக்கைக்கு நேரே இவ்வாக்கு நம்மை வழிநடத்து கிறது (1 யோ 3:1,2). மகிமையான இந்த இலக்கை மனதிற்கொண்டே நமது வாழ்வில் தேவன் எந்தக் காரியத்தையும் அனுமதிக்கிறார் (ரோ 8:28,29). இப்படியிருப்பதால், தேவனது ''திவ்விய சுபாவத்தின்'' வெளிப்பாடுகளை அவரது வசனத்திலிருந்து கூர்மையாய்க் கற்றுக் கொள்ளவேண்டும். தேவன் தமது பல்வேறு குணாதிசயங்களைக் குறிக்கும் பெயர்களால் பரிசுத்த வேதாகமத்தில் தம்மை வெளிப்படுத்தி யிருக்கிறார். ''தேவனைப் பின்பற்றுகிறவர்கள்'' என்றிருக்கும்படி நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (எபே 5:1). வாக்குகளிலெல்லாம் வாக்கு நமது வாழ்வில் நிறைவேறுவதற்கு ஏதுவாக, இந்தப் பெயர்களின் அடிப் படையில் நமது புத்தாண்டுத் தீர்மானங்களை எடுக்கலாம். இப்பெயர் களில் ஒரு சில ஒரே தடவையும், மற்றவை பல முறையும் வருகின்றன. இவற்றை ஆங்கில அகர வரிசையில் கீழே தொகுத்துள்ளேன். ஒவ் வொன்றும் எத்தனை முறை பைபிளில் வருகிறது என்பதும் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெயருக்கும் ஒரு சில வசனக் குறிப்புகள் மட்டும் தெரிந்தெடுத்துள்ளேன். அவற்றைக் கட் டாயம் எடுத்து வாசியுங்கள் —

**(1) <u>ஆறுதலின்</u>** தேவன் (1) God of COMFORT ... 2 கொரி 1:3-5

*பலவித இன்னல்கள் வழியே நான் சென்றபோது தேவனிடமிருந்து பெற்ற அதே ஆறுதலினால், துக்கங்களிலும் துன்பங்களிலும் உழலுவோரை ஆறுதல்படுத்தத் தீர்மானிக்கிறேன்.*

**(2) <u>பிதாக்களின்</u>** தேவன் God of the FATHERS

(அ) **<u>நமது</u>** பிதாக்களின் தேவன் (7) ... 2 நாளா 20:6,12

*அச்சுறுத்தும் சூழல்களைச் சந்திக்கும்போது எனது சொந்த பலத்தில் அல்ல, தேவனது வல்லமையிலும் சத்துவத்திலுமே சார்ந்திருக்கத் தீர்மானிக்கிறேன்.*

(ஆ) **<u>அவர்களது</u>** பிதாக்களின் தேவன் (20) ... 2 நாளா 36:15,16

*தேவனது கடுங்கோபத்திற்கு ஆளாகிச் சகாயமின்றி அழிக்கப் படாதிருக்க, தமது செய்தியாளர்கள் மூலம் அவர் கொடுக்கும் எச்சரிப்புகளைக் குறித்துக் கவனமாயிருக்கத் தீர்மானிக் கிறேன்.*

(இ) **<u>உனது</u>** பிதாவின் தேவன் (9) ... 1 நாளா 28:9

*தேவன் எனது இருதயத்தைத் துருவி ஆராய்ந்து, எனது எண்ணங்களின் தோற்றங்களையெல்லாம் அறிந்திருக்கிறார் என்ற உணர்வுடன் உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் அவருக்குச் சேவை செய்யத் தீர்மானிக்கிறேன்.*

(ஈ) **<u>உங்கள்</u>** பிதாக்களின் தேவன் (16) ... 2 நாளா 29:1-6

*தேவனுக்கு அருவருப்பான குப்பைக்கூளங்களையெல்லாம் தூக்கியெறிந்து எனது வாழ்வையும் எனது சபையையும் தூய்மைப்படுத்தத் தீர்மானிக்கிறேன்.*

**(3) <u>மனுவுடலுள்ள</u>** யாவருக்கும் தேவன் (3) God of all FLESH ... எண் 16:22

*ஒரு சில முரட்டாட்டக்காரரின் பொருட்டு, மக்களனை வரையுமே தேவன் அழித்துவிடாதபடி, அவருக்கு முன்பாக மன்றாட்டு ஜெபம் ஏறெடுத்து நிற்கத் தீர்மானிக்கிறேன்.*



**(4) <u>மகிமையின்</u>** தேவன் (2) God of GLORY ... அப் 7:2 (எபி 11:9,10)

*மகிமையான நித்திய காரியங்களில் எனது மனதைப் பதிக்கும்படி, நிலையில்லா இவ்வுலகப் பொருட்கள்மீதுள்ள எனது பிடிப்பைத் தளர்த்தத் தீர்மானிக்கிறேன்.*

**(5) <u>தேவர்களுக்கெல்லாம்</u>** தேவன் (5) God of GODS ... உபா 10:17,18

*வசதியுள்ளோருக்கும் வறியோருக்கும் இடையில் எவ்விதப் பாகுபாடும் காட்டாது, அனாதைகள், விதவைகள், உணவற்றோர், உடையற்றோர் போன்றோரை ஆசீர்வதிக்க என்னாலியன்ற அத்தனையும் செய்யத் தீர்மானிக்கிறேன்.*

**(6) <u>பரலோகத்தின்</u>** தேவன் (23) God of HEAVEN ... எஸ்றா 5:11; நெகே 1:4,5; 2:4,20

*தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் திருச்சபைகளின் உடைந்து போன நிலையை விமர்சிக்காமல், அவற்றைத் திரும்பக் கட்டி யெழுப்பும் முயற்சியில் தீவிரம் காட்டத் தீர்மானிக்கிறேன்.*

**(7) <u>நம்பிக்கையின் தேவன்</u>** (1) God of HOPE ... ரோ 15:13

*நிச்சயமற்ற சூழல்களில் தூயாவியானவரின் துணையுடன் சாதகச் சிந்தை கொண்டு, தேவன் மீதுள்ள விசுவாசத்தினால் சந்தோஷமாய், சமாதானமாய் இருக்கத் தீர்மானிக்கிறேன்.*

**(8) <u>சேனைகளின்</u>** தேவன் (4) God of HOSTS ... சங் 80:7,14,19

*எனது குறைபாடுகளை இவ்வுலக வழிமுறைகளினால் சரிசெய்ய முயலாது, நான் புத்துயிர் பெற்று, புதுப்பிக்கப்பட்டு, ஆதிநிலையேகும்படித் தேவனுக்குமுன் தினமும் காத்திருக்கத் தீர்மானிக்கிறேன்.*

**(9) <u>இஸ்ரவேலின்</u>** தேவன் (201) God of ISRAEL ... 1 இரா 8:23

*(வேறெந்தப் பெயரையும்விட இதுவே திருமறையில் அதிகம் வருகிறது.)*

*தமது உடன்படிக்கையைத் தேவன் காத்துக்கொள்வது போலவே அவருக்கும், எனது வாழ்க்கைத் துணைக்கும், குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், உடன் பணியாளர்களுக்கும் நான் கொடுத்த வாக்குகளை நிறைவேற்றத் தீர்மானிக்கிறேன்.*

**(10)** **நீதி செய்கிற** தேவன் (2) God of JUSTICE ... ஏசா 30:15-18
*தேவனே எனக்கு நியாயம் செய்வார் என்று அமைதியாகவும் நம்பிக்கையுடனும் அவர் மீதே சார்ந்திருந்து, அவரை மிஞ்சி ஓடாதிருக்கத் தீர்மானிக்கிறேன்.*

**(11)** **உயிருள்ளோரின்** தேவன் (3) God of the LIVING ...
லூக் 20:38 (அப் 17:28)
*தேவனுக்குள்ளேயே நான் பிழைத்து, அசைந்து, உயிர்வாழ்கிறேன் என்ற உண்மையை எனக்கு எப்பொழுதும் நினைவுபடுத்திக்கொள்ளத் தீர்மானிக்கிறேன்.*

**(12)** **அன்பின்** தேவன் (1) God of LOVE ... 2 கொரி 13:11
*கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவனது ஒப்புரவாகுதலின் அன்பின் மூலம் இல்லத்திலும், சுற்றத்திலும், சபையிலும், பணியிடத்திலும் ஒருமனத்தைக் காத்துக்கொண்டு யாவரோடும் சமாதானமாய் வாழத் தீர்மானிக்கிறேன்.*

**(13)** **பொறுமையின்** தேவன் (1) God of PATIENCE ... ரோ 15:5-7
*என்மீது தேவன் காட்டும் பொறுமைக்காய் அவருக்கு நன்றியுள்ளவனாய், அதற்குப் பிரதிபலிப்பாய் எனது உடன் விசுவாசிகளை அவர்கள் இருக்கும் நிலையிலேயே ஏற்றுக்கொண்டு, ஒருமனத்துடன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்பிடத் தீர்மானிக்கிறேன்.*

**(14)** **சமாதானத்தின்** தேவன் (5) God of PEACE ...
ரோ 16:20; 1 தெச 5:23; எபி 13:20,21



*தேவன் என்னை அமோக வெற்றிக்குள்ளும், முழுமையான பரிசுத்தத்திற்குள்ளும், நிறைவான பூரணத்திற்குள்ளும் முடிவில் நடத்துவார் என்ற குதூகல எதிர்பார்ப்புடன் வாழ்ந்திடத் தீர்மானிக்கிறேன்.*

**(15)** **இரட்சிப்பின்** தேவன் God of SALVATION

(அ) **எனது** இரட்சிப்பின் தேவன் (7) ... ஆப 3:17-19
*எனது இழப்புகள் மற்றும் உடல்நலக்குறைவுகள் நடுவிலும் நித்திய இரட்சிப்பாகிய ஈவை நினைத்துத் தேவனுக்குள் மகிழ்கொண்டாடிக்கொண்டிருக்கத் தீர்மானிக்கிறேன்.*

(ஆ) **நமது** இரட்சிப்பின் தேவன் (6) ... சங் 85:4-7
*எனது வாழ்விலும் பணியிலும் வறட்சி தோன்றும் காலங்களில், எழுப்புதல் ஆசிகளுடன் தேவன் என்னை மறுபடியும் சந்திக்கும்படி அவரையே நோக்கிக் கதறிடத் தீர்மானிக்கிறேன்.*

**(16)** **சத்திய** தேவன் (3) God of TRUTH ... ஏசா 65:16
*எனது வார்த்தைகள் தேவனுடைய பார்வையில் ஏற்புடையவையாய் இருக்கும்படி, எனது வாய்க்குக் காவல் வைத்து, பொய் சொல்லுதலையும் மிகைப்படுத்துதலையும் வெறுத்திடத் தீர்மானிக்கிறேன்.*

தற்பரிசோதனைக்காய் இத்தீர்மானங்களை அவ்வப்போது திரும்பவும் வாசித்துக்கொள்ளுங்கள். தோல்விகளால் மனந்தளர்ந்துவிடாதீர்கள். எழுந்து, மறுபடியும் தீர்மானியுங்கள். உங்களில் நற்செயலைத் தொடங்கிய தேவன் இயேசு கிறிஸ்துவின் நாள்வரை அதை நடப்பித்து நிறைவாக்குவார் என்று நிச்சயித்திருங்கள் (பிலி 1:5).

# 17

# இருமொழி வேதாகமங்கள்

Bilingual Bibles

பரிசுத்த வேதாகமத்திற்காய்த் தேவனைத் துதிப்போம்! உலகிலேயே *மிகக் கருத்து நிறைந்த* புத்தகம் பைபிள்தான்; ஏனெனில் அது தேவனது ஆழங்களை உள்ளடக்கியுள்ளது. உலகிலேயே *மிக எளிமையான* புத்தகம் பைபிள்தான்; ஏனெனில் அதனைப் புரிந்துகொள்ள முடியாத, அதிலுள்ள சுவாரஸ்யமான கதைகளில் மகிழ முடியாத சிறுவர், சிறுமியர் எவருமுண்டோ? அவ்வளவு பக்கங்கள் இருந்தும் உலகிலேயே *மிகவும் விலை குறைந்த* புத்தகம் பைபிள்தான்; இதன் ஒவ்வொரு பிரதிக்கும் வேறெந்தப் புத்தகத்தையும்விட அதிகப் பணம் செலவழிக்கப்படுகிறது. உலகிலேயே *அதிகம் விநியோகிக்கப்பட்டுள்ள* புத்தகம் பைபிள்தான்; ஏனெனில் இத்தனை மொழிகளில் வேறெந்தப் புத்தகமும் அச்சிடப்பட வில்லை. இவ்வுலகிற்கு *மிகப்பெரிய அளவில் நீதிநெறியைப்* புகட்டியுள்ளது பைபிள்தான்; ஏனெனில் அது மனிதனது மனச்சாட்சியைக் கூர்மையாக்கியுள்ளது, பெண்டிர்க்குரிய அந்தஸ்தைத் தந்துள்ளது, இல்லற வாழ்வைப் புனிதப்படுத்தியுள்ளது. எவ்வித நம்பிக்கை கொண்டவராயினும், எவ்வகை இனத்தவராயினும், அவர்களால் *அதிகம் மேற்கோள் காட்டப்பட்ட* புத்தகம் பைபிள்தான். அது தரும் ஞானம்,



அறிவு மற்றும் தாக்கத்தை எவரும் கவனிக்காது விட்டுச் செல்ல முடியாது. உலகிலேயே *அதிகம் வெறுக்கப்பட்ட* புத்தகம் பைபிள்தான்; அதனை அழிக்கவும் அகற்றவும், அப்பப்பா, எத்தனை முயற்சிகள்! அனைத்துத் தரப்பினர் மற்றும் நாட்டினர் நடுவில் *அதிகம் விரும்பப் படும்* புத்தகமும் பைபிள்தான். ஒரேயொரு பிரதியை வாங்கிடத் தங்க ளது உடைமைகளையெல்லாம் விற்றுவிட்டோரும், அது கிடைக்கு மிடத்திற்கு நெடுந்தூரம் கால்நடையாய்ச் சென்றோரும் எத்தனையோ பேர்! வெற்றி முரசு கொட்டுங்கள்!

### வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் (Bible Translators)

ஆம், விற்பனையின் அளவில் முதலிடம் பிடித்துள்ள பைபிள்தான் உலகிலேயே அதிகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புத்தகமாகும். முழு வேதாகமம் 704 மொழிகளிலும், புதிய ஏற்பாடு 1551 மொழிகளிலும், பகுதிகள் 1160 மொழிகளிலும் உண்டு. எழுத்து வடிவம் இல்லாத மொழிகள் தவிர்த்து, பைபிள் இல்லாத மொழிகள் இன்னும் 200 உண்டு. இந்தியாவைப் பொருத்தவரை, இங்குள்ள 526 மொழிகளில் முழு வேதாகமம் 79 மொழிகளிலும், புதிய ஏற்பாடு 105 மொழிகளிலும், பகுதிகள் 58 மொழிகளிலும் உண்டு. இன்னும் 170 மொழிகளில் மொழி யாக்கப்பணி நடந்துகொண்டிருக்கிறது. வேதாகம மொழிபெயர்ப்பு எனும் இவ்வுன்னதப் பணியில் ஈடுபட்டுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்காய்த் தேவனைத் துதிப்போம். சாதாரண மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழிகளில் பைபிளை மொழிபெயர்க்கத் துணிந்த தால் இரத்தசாட்சிகளாய் இறக்க நேர்ந்தோரை நன்றியுடன் நினைவு கூருவோம். லத்தீனிலிருந்து பைபிளை ஆங்கிலத்திற்கு ஜான் விக்ளிப் (1330-1384) மொழிபெயர்த்தார். அவர் அடக்கம்பண்ணப்பட்ட இடத் தைக்கூட எவரும் அடையாளங்காணக்கூடாது என்று அரசும் ரோமச் சபையும் அவரது எலும்புகளைக்கூட 1427ஆம் ஆண்டு எரித்துச் சாம்ப லாக்கிற்று. செக் (Czech) எனும் மொழியில் பைபிளை மொழி பெயர்த் ததால் ஜான் ஹஸ் (1369-1415) மரத்தில் கட்டிவைக்கப்பட்டு, வெட்டிக் கொலை செய்யப்பட்டு, எரித்துச் சாம்பலாக்கப்பட்டார்.

வில்லியம் டின்டேல் (1494-1536) என்ற இன்னொரு வேதாகம மொழி பெயர்ப்பாளர் மரத்தில் கட்டிவைக்கப்பட்டு, கழுத்து நெறிக்கப்பட்டு, எரித்துச் சாம்பலாக்கப்பட்டார். இப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவ்வித மனிதர் இல்லையேல் நமது மொழிகளில் நமக்கு பைபிள் கிடைத்திருக்காது என்பதால், அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இவ்வரிகளை வாசிக்கும்போது உங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்துவிட்டீர்களென்று நம்புகிறேன்! இரத்தசாட்சி மரணமடைந்த வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டிய எனது மிஷனரி நண்பர்கள் மற்றும் பிற பெற்றோரைப் பெரிதும் பாராட்டுகிறேன். ஒவ்வொருவருக்கும் அவரது தாய்மொழியில் பைபிள் கிடைப்பதற்காக, நூற்றுக்கணக்கான மொழியாக்கத் திட்டங்களை முன்னெடுத்துள்ள நிறுவனங்களுக்காய்த் தேவனைத் துதிப்போம். இந்தியாவிலுள்ள பன்னிரண்டு மொழியாக்கப்பணி இயக்கங்களுக்காய் ஜெபிப்போம். விபரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## பைபிள் மொழிபெயர்ப்புகள் (Bible Versions)

ஆங்கில மொழியில் மட்டுமே 100க்கும் கூடுதலான மொழி பெயர்ப்புகள் உண்டு. ''மொழிபெயர்ப்புகள்'' (versions) என்றால், பைபிள் எழுதப்பட்டுள்ள மூல மொழிகளாகிய எபிரெயு, கிரேக்கு, அரேமியம் ஆகியவற்றிலிருந்து செய்யப்பட்ட ''மொழியாக்கங்கள்'' (translations) என்று பொருள்படும். இவற்றில் சில முந்தைய மொழிபெயர்ப்புகள் ''திருத்தப்பட்டவை'' (revised), அல்லது ''காலத்திற்கேற்ப வார்த்தைகள் மாற்றப்பட்டவை'' (updated). இன்னும் சில ''விரிவாக்கப்பட்டவை'' (expanded) அல்லது ''விளக்கப்பட்டவை'' (paraphrased). வேதாகமத்தின் ஒரு வரிகூட இன்னும் கிடைக்கப் பெறாத எத்தனையோ மொழிகள் இருக்கும் நிலையில், ஆங்கிலத்திலேயே மாற்றி மாற்றி மொழிபெயர்ப்புகள் கொண்டுவரப்படுவதில் நேரம், பலம், பணம் செலவழிப்பதை நிறுத்தி, அவற்றை பைபிள் இல்லாத மொழிகளுக்காய்த் திருப்பிவிடவேண்டுமென்பதே எனது சொந்தக் கருத்து. கனடா நாட்டு மிஷனரித் தலைவரும் People's



Churchஇன் மேய்ப்பருமான Dr. ஆஸ்வால்டு J. ஸ்மித் (1889-1986) அவர்கள் விட்ட சவால்: ''ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் நற்செய்தியைக் கேட்குமுன்னர் ஏனொருவர் இருமுறை அதனைக் கேட்க வேண்டும்?'' இதே பாணியில் நாம் நம்மைக் கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி: ''பைபிள் மொழிபெயர்க்கப்படாத எத்தனையோ மொழிகள் இன்னும் இருக்கும்போது, ஒரே மொழிக்கு இத்தனை மொழிபெயர்ப்புகள் ஏன்?'' வேதாகம மொழிபெயர்ப்புப் பணித் திட்டங்களில் தங்களது சொத்துக்களைத் தாரைவார்த்துவிடக் கிறிஸ்தவர்களை வருந்திக் கேட்கிறேன். பைபிளை ''வியாக்கியானிப்பவர்கள்'' (interpreters) என்ற பிரசங்கிமாரும் பாஸ்டர்மாருமாகிய நாம் நமது கைகளில் பைபிள் கிடைக்கும்படி வேதாகம ''மொழிபெயர்ப்பாளர்கள்'' (translators) என்போரைத்தானே சார்ந்திருக்கிறோம்? திருமறையை ''விளக்குதல்'' (interpretation / exposition) என்பதைவிட அதனை ''மொழிபெயர்த்தல்'' (translation) என்பதுதான் அதிகக் கடினமான வேலை. திருமறை முழுவதையும் ஒரு புதிய மொழியில் கொண்டுவருவதற்குச் சில வேளைகளில் 50 ஆண்டுகளுக்கும் கூடுதலாகக் காலம் பிடிக்கிறது என்பதை அறிவோமா?

## இணை மொழியாக்க வேதாகமங்கள் (Parallel Bibles)

இறைவார்த்தையை ஆழ்ந்து தியானிக்க நான் பல்வேறு மொழியாக்கங்களைத் திருப்பிப் பார்க்கிறேன். King James Version (KJV) என்ற புராதன மொழியாக்கத்திற்கு இணையாக ஏறத்தாழ 26 மொழியாக்கங்களிலிருந்து வார்த்தைகளும் வாக்கியங்களும் தரும் பைபிள் ஒன்று என்னிடம் உண்டு! இரண்டு அல்லது நான்கு மொழியாக்கங்களை அடுத்தடுத்துத் தரும் ஆங்கில இணை மொழியாக்க வேதாகமங்களை (Parallel Bibles) வெளியிட்டுள்ளோருக்கு நன்றி. இறையியல் கல்லூரியில் சேர்ந்து எபிரெயு மற்றும் கிரேக்கு மொழிகளை முறைப்படி கற்காத என்னைப் போன்றோருக்கு இவையெல்லாம் ஒரு வரப்பிரசாதம். ஆங்கில வேதாகமம் வாசிக்கும் எனதன்பர்களுக்கு ஓர் ஆலோசனை: King James Version (KJV), Revised Standard Version (RSV), English

Standard Version (ESV) மற்றும் New American Standard Bible (NASB) போன்ற ''வார்த்தைக்கு வார்த்தை'' (word-for-word) மொழி யாக்கம் ஒன்றினைத் தனித் தியானத்திற்கும் மனனம் செய்வதற்கும் வைத்துக்கொள்ளுங்கள்; Good News Bible (GNB) மற்றும் New Living Translation (NLT) போன்ற ''கருத்துக்குக் கருத்து'' (thought-for-thought) மொழியாக்கம் ஒன்றினை ஆராய்ச்சிக்கு உதவியாக வைத்துக்கொள்ளுங்கள். New International Version (NIV) என்பது ''வார்த்தைக்கு வார்த்தை'' என்பதற்கும் ''கருத்துக்குக் கருத்து'' என் பதற்கும் இடைப்பட்ட மொழியாக்கமாகும். கூடுதல் விபரங்கட்கு, 36 பக்கங்கள் கொண்ட *Unless someone guides me ...* என்ற எனது ஆங்கிலக் குறுநூலைப் படியுங்கள். இதனை StanleyOnBible.com என்ற இணையதளத்தில், Booklets என்ற பிரிவிலிருந்து இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

## இருமொழி வேதாகமங்கள் (Bilingual Bibles)

மேற்கண்ட நான்கு பத்திகளும் இக்கட்டுரைக்கு முகவுரைதான். ***இருமொழி வேதாகமங்கள்*** (Bilingual Bibles) என்ற எனது தலைப் புக்கு இப்பொழுது வருவோம். ஒரே பக்கத்தின் இடது பக்கத்தில் தரமான ஓர் ஆங்கில மொழியாக்கமும், வலது பக்கத்தில் எபிரெய அல்லது கிரேக்க வரிகளும் கொண்டுள்ள வேதாகமங்கள் உண்டு. மூல மொழி கள் தெரிந்தவர்களுக்கு இது பேருதவி. ஆங்கிலமும் இந்தியப் பிராந்திய மொழி ஒன்றும் சேர்த்து இருமொழி வேதாகமங்கள் (Bilingual Bibles) என்று இந்திய வேதாகமச் சங்கம் (Bible Society of India) சமீப காலங் களில் வெளியிட்டுள்ளது. இன்று 17 துணைச் சங்கங்கள் (auxiliaries) கொண்டுள்ள இந்திய வேதாகமச் சங்கம் (BSI) முதலாவது 1811இல் கல்கத்தாவிலும், அடுத்து 1820இல் சென்னையிலும் நிறுவப்பட்டது. தற்போது டெல்லியில் இயங்கும் வடமேற்கு இந்தியத் துணைச் சங்கம் ஆங்கிலம்-இந்தி வேதாகமத்தையும், குண்டூரில் இயங்கும் ஆந்திரா துணைச் சங்கம் ஆங்கிலம்-தெலுங்கு வேதாகமத்தையும், கோட்ட யத்தில் இயங்கும் கேரளா துணைச் சங்கம் ஆங்கிலம்-மலையாளம்



வேதாகமத்தையும், சென்னையில் இயங்கும் தமிழ்நாடு துணைச் சங்கம் ஆங்கிலம்-தமிழ் வேதாகமத்தையும், பெங்களூரில் இயங்கும் கர்நாடகத் துணைச் சங்கம் ஆங்கிலம்-கன்னடம் வேதாகமத்தையும் வெளியிட் டுள்ளன. சங்கீதம் 23 காணப்படும் மாதிரிப் பக்கம் ஒன்றினை அடுத்த பக்கத்தில் காணுங்கள். இவ்விதம் பிற பிராந்திய மொழிகளிலும் இரு மொழி வேதாகமங்கள் விரைவில் வெளிவர எதிர்பார்க்கலாம். அகில வுலக ரீதியில், English-Spanish, English-Italian, English-Chinese மற்றும் English-Japanese போன்ற இருமொழி வேதாகமங்கள் உண்டு.

## English Standard Version (ESV)

இந்திய வேதாகமச் சங்கம் வெளியிடும் இருமொழி வேதாக மங்களுக்கு அவர்கள் தெரிந்தெடுத்துள்ள ஆங்கில மொழியாக்கம் English Standard Version (ESV) ஆகும். பல்வேறு சபைப்பிரிவுகளைச் சார்ந்த 100 வேத வல்லுநர்களடங்கிய குழுதான் ESV வேதாகமத்தைத் தயாரித்தது. இவ்வேதாகமத்தின் வெளியீட்டாளர்கள் தங்களது முக வுரையில் குறிப்பிட்டுள்ள முடிவு வரி என்னை அதிகம் கவர்ந்துள்ளது: *"Soli Deo Gloria!"* இதன் பொருள் ''தேவனுக்கே மகிமை'' என்பதாகும். 1517ஆம் ஆண்டின் திருச்சபைச் சீர்திருத்தக் காலத்தின் (Protestant Reformation) ஐந்து முழக்கங்களில் இதுவும் ஒன்று. KJV மற்றும் NKJV வேதாகமங்களைவிட ESV வேதாகமம் எழுத்தின்படியானது. அவ்விதமே *NKJV Study Bible* மற்றும் *NIV Study Bible* ஆகியவை போன்று *ESV Study Bible* நேர்த்தியானதொரு ஆராய்ச்சி வேதாகமமாகும். தமிழ் போன்ற பிராந்திய மொழியினரை இருமொழி வேதாகமம் Bilingual Bibleஒன்றை வாங்கிக் கிரமமாய்ப் பயன்படுத்த ஊக்குவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். நான் இவ்விதம் சிபாரிசு செய்து வலியுறுத்து வதற்கான காரணங்களைக் கீழ்வரும் பத்திகளில் எழுதுகிறேன்.

## ஆங்கில வேதாகமம்

பிராந்திய மொழிகள் பெரும்பாலும் ஒரு மாநிலம் அல்லது பிராந்தியத்திலேயே பேசப்படுபவை. நமது தாய் மொழியில் பைபிள்


Psalms 1264 சங்கீதம்

31 they shall come and proclaim
his righteousness to a
people yet unborn,
that he has done it.

23 A Psalm of David.
The LORD is my
shepherd; I shall not
want.
2 He makes me lie down in
green pastures.
He leads me beside still
waters.
3 He restores my soul.
He leads me in paths of
righteousness
for his name's sake.
4 Even though I walk through
the valley of the
shadow of death,
I will fear no evil,
for you are with me;
your rod and your staff,
they comfort me.
5 You prepare a table before
me
in the presence of my
enemies;
you anoint my head with oil;
my cup overflows.
6 Surely goodness and mercy
shall follow me
all the days of my life,
and I shall dwell in the
house of the LORD
forever.

24 A Psalm of David.
The earth is the LORD's
and the fullness
thereof,
the world and those who
dwell therein,
2 for he has founded it upon
the seas
and established it upon
the rivers.
3 Who shall ascend the hill of
the LORD?
And who shall stand in
his holy place?

31 அவர்கள் வந்து: அவரே இவைகளைச்
செய்தார் என்று பிறக்கப்
போகிற ஜனங்களுக்கு அவருடைய
நீதியை அறிவிப்பார்கள்.

23 (தாவீதின் சங்கீதம்.)
கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்;
நான் தாழ்ச்சியடையேன்.
2 அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில்
மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள்
அண்டையில் என்னைக்
கொண்டுபோய் விடுகிறார்.
3 அவர் என் ஆத்துமாவைத் தேற்றி,
தம்முடைய நாமத்தினிமித்தம்
என்னை நீதியின் பாதைகளில்
நடத்துகிறார்.
4 நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே
நடந்தாலும்
பொல்லாப்புக்குப்
பயப்படேன்; தேவரீர்
என்னோடே கூட இருக்கிறீர்;
உமது கோலும் உமது தடியும்
என்னைத் தேற்றும்.
5 என் சத்துருக்களுக்கு முன்பாக
நீர் எனக்கு ஒரு பந்தியை
ஆயத்தப்படுத்தி, என் தலையை
எண்ணெயால் அபிஷேகம்
பண்ணுகிறீர்; என் பாத்திரம்
நிரம்பி வழிகிறது.
6 என் ஜீவனுள்ள நாளெல்லாம்
நன்மையும் கிருபையும் என்னைத்
தொடரும்; நான் கர்த்தருடைய
வீட்டிலே நீடித்த நாட்களாய்
நிலைத்திருப்பேன்.

24 (தாவீதின் சங்கீதம்.)
பூமியும் அதின் நிறைவும்,
உலகமும் அதிலுள்ள
குடிகளும்
கர்த்தருடையது.
2 அவரே அதைக் கடல்களுக்கு
மேலாக அஸ்திபாரப்படுத்தி,
அதை நதிகளுக்கு மேலாக
ஸ்தாபித்தார்.
3 யார் கர்த்தருடைய பர்வதத்தில்
ஏறுவான்? யார் அவருடைய
பரிசுத்த ஸ்தலத்தில்
நிலைத்திருப்பான்?

**ஆங்கிலம்-தமிழ்**



தெரிந்திருப்பது நன்று. ஆனால் மகிமையான இறைச்செய்தியைப் பிற மொழியினருக்குப் பகிர்ந்துகொள்ள நமக்கு விருப்பமுண்டானால், அகிலவுலக மொழியாகிய ஆங்கிலத்திலாவது பைபிள் நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். இந்தியத் தேசிய மொழி இந்தி எனினும் நாட்டின் பல்வேறு மக்களிடையே அதிகம் பயன்படுத்தப்படும் மொழி ஆங்கிலம்தான். நம்மில் அநேகருக்கு நமது தாய் மொழியில் திருமறை நன்கு தெரிந்துள்ளதால், அதற்கு இணையான வசனப் பகுதிகளை ஆங்கிலத்திலும் தெரிந்துவைத்திருப்பது நம்மைக் கிறிஸ்துவுக்கு இன்னும் சிறந்த சாட்சிகளாக்கும். திருவசனத்தை ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் அறிந்து வைத்திருப்பது மாற்றுக் கலாச்சார நற்செய்திப் பணியில் (Cross-cultural evangelism) தேவனால் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. சபைகளில் நமது தமிழ் ஆராதனைகளிலும் திருவசன வாசிப்புப் பாடம் ஒன்றும், ஜெபம் ஒன்றும் ஆங்கிலத்தில் இருப்பது நன்று. நமது பிள்ளைகளில் பெரும்பாலானோர் ஆங்கில வழிமுறைக் கல்விதானே பயிலுகின்றனர்?

## பிற மொழிகள்

சிலுவையின் செய்தி முதலாவது அறிவிக்கப்பட்டதே பல மொழிகளில்தான் என்பது சுவாரஸ்யம்: ''எபிரெயு, கிரேக்கு, இலத்தீன்!'' (யோ 19:19,20). பெந்தெகொஸ்தே நாளன்று வெளிப்பட்ட பல பாஷை வரத்திலும் மிஷனரித் திட்டம் புலனாகிறது. ''தேவனது மகத்துவங்களை'' அனைத்து நாடுகளிலுமிருந்தும் வந்திருந்தோர் புரிந்துகொள்ளும் வகையில் ''கலிலேயரான'' சீடர்கள் பேசினர் (அப் 2:5-11). ''மெசொப்பத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, லீபியா, ரோம்'' ஆகிய நாடுகளின் பெயர்ப் பட்டியலை வாசிப்பது இயேசுவானவர் அப்போஸ்தலர் 1:8இல் வரையறுத்ததற்கேற்றதொரு மிஷனரி ஊழிய அறிக்கை போன்று ஒலிக்கிறது (2:9,10). பல பாஷைகளில் பேசுவதல்ல, பல பாஷையினரிடம் சென்று அவர்களோடு பேசுவதே பெந்தெகொஸ்தேயின் பிரதான நோக்கம்! மிஷனரி நோக்குடைய நமது யேகோவா தேவன் ''அனைத்து

நாட்டினர், கோத்திரங்கள் மற்றும் மக்களினங்களின்'' மொழிகளை ஆசீர்வதிக்கச் சித்தங்கொண்டுள்ளார் (வெளி 7:9,10). மொழித்தடங் கல்களைத் தாண்டிச் செல்வது மிஷனரிப்பணியில் பெருஞ்சவால். தொலைவிடங்களில் வாழ்வோரை ஆசீர்வதிக்கவேண்டுமானால் மிஷ னரிச் சிந்தையுள்ள இந்தியக் கிறிஸ்தவர் எவருக்கும் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் பைபிள் தெரிந்திருக்கவேண்டும். அவ்விதமே, இந்தியாவிலுள்ள ஆங்கிலத் திருச்சபைகளின் உறுப்பினர்கள் ஏதாவதொரு இந்தியப் பிராந்திய மொழியிலும் பைபிள் வாசிக்க முயலவேண்டும். அப்பொழுதுதான் பிற மொழியினருக்கு அவர்கள் இறைச்செய்தியைக் கடத்திவிட முடியும். ஆங்கிலச் சபையே எனது சொகுசுக்கூடமாகிவிடக்கூடாது. இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய மிஷனரிகளை நினைத்துப் பார்ப்போம். அவர்கள் நம்மை மட்டுமல்ல, நமது மொழிகளையும் நேசித்தார்கள். ஆங்கிலேயப் பேராயர் லெஸ்லி நியூபிகின் (1909-1998) அவர்கள் கன்னித் தமிழில் பேசுவதைக் கேட்டு ரசித்திருக்கிறேன்.

## யோசேப்பு, மோசே, தானியேல்

தேவனது மிஷனரித் திட்ட நிறைவேறுதலுக்காகவே பிற மொழி களைக் கற்றோரின் எடுத்துக்காட்டுகள் பல திருமறையில் உண்டு. எகிப்தியரின் மொழியில் உரையாட யோசேப்பு கற்றுக்கொண்டார் (ஆதி 42:23). எகிப்தியரின் கலைகள் மற்றும் மொழியில் மோசே கற்றுத் தேர்ந்தார் (அப் 7:22). இல்லையேல் 400 ஆண்டுகள் எகிப்தில் அடிமைகளாயிருந்த காலத்தில் எபிரெய மொழியை மறந்திருக்கக் கூடிய இஸ்ரவேலரோடு அவர் எப்படிப் பேசியிருக்க முடியும்? (ஆதி 15:13; அப் 7:6). பாபிலோனியரின் எழுத்து மற்றும் மொழியைக் கற்பதில் தானியேலும் அவரது நண்பர்களும் தேர்ச்சியடைந்திருந்தனர் (தானி 1:4). இவர்களையெல்லாம் தேவன் வைத்திருந்த அந்தந்த நாடுகளுக்கு இவர்களை ஆசீர்வாதமாக்கினார். அகதிகளாய் வந்த இலங் கையினருக்கு அடைக்கலம் தந்த ஜெர்மானியருக்கு ஆசீர்வாதமா யிருக்கும்படி ஜெர்மானிய மொழியில் ஆராதிக்கவும் சாட்சிபகரவும்



அங்குள்ள இலங்கைத் தமிழ் கிறிஸ்தவர்களுக்குப் பல முறை நான் சவால் விட்டிருக்கிறேன். அவ்விதமே சீனக் கிறிஸ்தவர்களோடு கலந்து அவர்களை ஆசீர்வதிக்கும்படிச் சிங்கப்பூரிலுள்ள தமிழ்க் கிறிஸ்தவர் களுக்குச் சவால் விட்டிருக்கிறேன். தமிழ் அல்லது மலையாளம் அல்லது தெலுங்கு கிறிஸ்தவர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், கனடா விலும், சிங்கப்பூரிலும், வட இந்தியாவிலும் தங்களுக்குள்ளேயே தமிழ்ச் சபைகள் அல்லது மலையாளச் சபைகள் அல்லது தெலுங்குச் சபைகள் எனக் கூடிக்கொண்டேயிருந்தால் தேவனது மிஷனரித் திட்டம் தோற் கடிக்கப்படுகிறதே! தென் மாநிலங்களிலுள்ள பிரசங்கிமார் இந் நாடுகளுக்கெல்லாம் செல்லும்போது இச்சவாலை மக்கள்மீது வீசிக் கொண்டேயிருக்கவேண்டுமென்று வருந்திக் கேட்கிறேன். இல்லை யேல் வெளிநாட்டு ஊழியங்கள் எனப்படுபவையெல்லாம் பணம் திரட்டும் சில்லறைத் திட்டங்களாகிவிடும். தென்னகத்திலுள்ள பெரிய சபைகள் இங்கு வாழும் வட இந்தியருக்காய் வாரந்தோறும் இந்தியில் ஆராதனைகள் நடத்தவேண்டும். வட இந்தியாவில் பணியாற்றி ஓய்வுபெற்று தென் இந்தியாவில் குடியிருக்கும் மிஷனரிகள் இங்கு நமக்கு உதவுவார்கள். நமது வழக்கமான ஆராதனைகள் மற்றும் கூடுகைகளிலும் தேசிய வாசனை வீசிட முடிந்ததையெல்லாம் செய்ய வேண்டும்.

## எபிரெயு & கிரேக்கு

அன்றைய ஜெபாலயங்களில் வேத வாக்கியங்கள் பழங்கால எபி ரெய மொழியில் வாசிக்கப்பட்டு அரேமிய அல்லது கிரேக்க மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன. அரேமியம் என்பது அசீரிய காலத்தில் எபிரெயு மொழியுடன் சம்பந்தப்பட்டது. அது எபிரெயு மொழிக்குப் பதிலானதாகி யூதரின் அன்றாடகத் தொடர்பு மொழியாகிவிட்டது. எஸ்றா 5:8-6:16; 7:12-26; எரேமியா 10:11 மற்றும் தானியேல் 2:4-7:28 ஆகிய பகுதிகள் அரேமியத்தில் எழுதப்பட்டவை. *''மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்''* என்று சுவரில் எழுதப்பட்ட கையெழுத்து அரேமிய மொழி யிலிருந்தது. ''எண்ணப்பட்டது, எண்ணப்பட்டது, நிறுக்கப்பட்டது,

பிரிக்கப்பட்டது'' என்பதே இவ்வார்த்தைகளின் பொருள் (தானி 5:25-28). எகிப்திலிருந்த யூதர்கள் பேசியது எபிரெயு அல்ல, கிரேக்க மொழிதான். எனவே இவர்களுக்கு கிரேக்கப் பழைய ஏற்பாடு தேவைப் பட்டது. 70 பேரடங்கிய ஒரு குழு இதனைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தது. அது எழுபது நபர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டதால் "Septuagint" அல்லது "LXX" என்றழைக்கப்பட்டது. ஆதிக் கிறிஸ்தவச் சபை பயன்படுத்திய பழைய ஏற்பாடு இதுதான். வளர்ந்துவந்த புற வினத்தாரது சபைக்கு இது அனுகூலமாயிருந்தது. பழைய ஏற்பாட்டு வசனங்களை மேற்கோள் காட்டும்போது புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இந்த கிரேக்கப் பழைய ஏற்பாட்டையே பயன்படுத்தினர்.

எவ்வித எபிரெயு அல்லது அரேமிய மொழியில் இயேசுவானவர் பேசினார் என்பது விவாதத்திற்குரியது. ஆனால் அவர் கிரேக்க மொழி யில் கட்டாயம் பேசியிருக்க வேண்டும் (மாற் 7:26,27; யோ 12:20,21). அவர் ''தூதர் பாஷைகளில்'' அல்ல, ''மனிதர் பாஷைகளிலேயே'' பேசி னார் (1 கொரி 13:1). விளங்காத ''பரதீசின் சொற்களை'' அல்ல, உலக வழக்கச் சொற்களையே பயன்படுத்தினார் (2 கொரி 12:3). வெளிப் படுத்தல் புத்தகத்தில் ஏழு சபைகளுக்குச் செய்திகள் அனுப்புகையில் அவர் தம்மைக் கிரேக்க மொழியின் அகர வரிசையில் முதலாவதும் முடிவானதுமான ''அல்பா'' மற்றும் ''ஓமேகா'' ஆகிய எழுத்துக்களையே தமது பெயரெனத் தம்மை அறிமுகம் செய்தார் (வெளி 1:8). கிழக்கு மத்தியத் தரைக்கடல் நாடுகளில் பெருவாரியாய்ப் பேசப்பட்டு வந்த கலாச்சார மற்றும் வணிக மொழியான கிரேக்க மொழியில்தான் நான்கு சுவிசேஷங்களும் முதலாவது எழுதப்பட்டன. இயேசுவின் போதனைகள் பெரும்பாலும் கிரேக்க மொழியிலேயே இருந்திருக்கவேண்டும் (யோ 12:20-22). தேவாலயத்திலிருந்த வேதப் பண்டிதரோடு அவர் உரை யாடியது அவரது தாய் மொழியாகிய எபிரெயு பாஷையில் இருந்திருக் கலாம் (லூக் 2:46). அரேமிய மொழியில் அவர் ஆழ்ந்த உணர்வுகளுடன் சொன்ன *''தலித்தா, கூமி''* மற்றும் *''எப்பத்தா''* போன்ற வார்த்தை களுக்கு மாற்கு தனது யூத வாசகர்களுக்காய் அர்த்தம் தந்துள்ளார் (மாற் 5:41; 7:34). அப்படியே *''கபத்தா''* மற்றும் *''கொல்கொதா''* எனும் எபிரெயப் பதங்களுக்கு யோவான் அர்த்தம் தந்துள்ளார் (யோ 19:13,17). மட்டுமல்ல, பாதாள தூதனது *''அபெத்தோன்''* என்ற எபிரெயப் பெயர் கிரேக்க மொழியில் *''அப்பொல்லியோன்''* எனப்படும் என்றெல்லாம் அவர் குறிப்பிடுகிறார் (வெளி 9:11). ''அப்பா, பிதாவே'' (Abba, Father) என்று இயேசுவானவர் தேவனை அழைத்தபோது, அதில் மூன்று மொழிகள் கலந்திருந்தன: ''அப்பா'' என்ற அரேமியப் பதம் ''அப்'' (AB) என்ற எபிரெயப் பதத்துடன் சம்பந்தப்பட்டது; ''பிதாவே'' என்பது "Pater" என்ற கிரேக்கப் பதத்திலிருந்து வருவது. சிலுவையில் தொங் கியபோது *''ஏலி, ஏலி, லாமா சபக்தானி''* என்று அரேமிய மொழியில் ஆண்டவர் கதறினார் (மத் 27:46,47). ''ஆமென்,'' ''அல்லேலூயா'' ஆகிய பதங்கள் எபிரெயச் சொற்கள். இவை தமிழுமல்ல, ஆங்கில முமல்ல; ஆனால் இவற்றை நாம் அப்படியே பயன்படுத்துகிறோம்!

## மாற்றுக் கலாச்சார நற்செய்திப்பணி

(Cross-cultural Evangelism)

தமஸ்கு சாலையில் சவுல் எனும் பவுலுடன் இயேசுவானவர் எபிரெயு மொழியில் பேசினார் (அப் 26:14,15). ஏனெனில் தன்னை ''எபிரெயரில் பிறந்த எபிரெயன்'' என்று அழைத்துக்கொள்வதில் பவுல் பெருமிதம் கொண்டிருந்தார் (பிலி 3:5). அதே வேளையில் கிரேக்க எழுத்தாளர் களது படைப்புகளும் அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தன (அப் 17:28; 1 கொரி 15:33; தீத் 1:12). எபிரெயு மற்றும் கிரேக்கு ஆகிய இரு மொழி களிலும் தனக்கிருந்த அறிவை அவர் சுவிசேஷத்தைப் பரப்பிடச் சாதகமாகப் பயன்படுத்தினார் (அப் 21:37-22:2). லத்தீன் என்பது ரோமில் பேசப்பட்டு வந்த மொழி. ரோமர் 16இல் லத்தீன் கிறிஸ்தவப் பெயர்கள் பலவற்றைப் பவுல் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவை விசுவாசித்த யூதரல்லாதோர் பெரும்பாலும் கிரேக்கர்தான் (அப் 6:1; 14:1,2; 17:4). தீமோத்தேயுவின் அம்மா ஒரு யூதப் பெண்மணி, அப்பா ஒரு கிரேக்கர் (அப் 16:1). எனவே தனது தாய் மொழியும் தந்தை மொழியும் தீமோத் தேயுவுக்கு நன்றாகவே தெரிந்திருந்தன! மாற்றுக் கலாச்சாரத் திரு

மணத்தின் நற்பயன்! தீத்து ஒரு கிரேக்கர் (கலா 2:3). பன்மொழி மற்றும் மாற்றுக் கலாச்சார நற்செய்திப்பணியினைத் தனக்குப் பின்னர் தொடர்ந்திட எவ்வளவு ஞானமாய் நபர்களைப் பவுலடியார் தெரிந் தெடுத்தார் பாருங்கள்! ''யூதேயா மற்றும் எருசலேமுக்கு'' அப்பால் சென்றிட! (அப் 1:8). நண்பரே, பல மொழிகளில், குறைந்தது இரு மொழிகளிலாவது, நமது வேத ஆராய்ச்சியும் அறிவும் இருக்கவேண் டும் என நான் வலியுறுத்துவதற்கு ஏதுவாகவே இக்கட்டுரையில் இவ்வளவு தகவல்களைச் சேர்த்துள்ளேன்.

## எனது சாட்சி

எனது தாய் மொழியாகிய தமிழில் தினமும் பைபிள் வாசிக்க வேண்டுமென்றும், வசனங்களை மனனம் செய்யவேண்டுமென்றும் என்னிடமும் என் தம்பியிடமும் அம்மா (1924-1981) கண்டிப்பா யிருந்தார்கள். நான் மறுபடி பிறந்த 1962ஆம் ஆண்டில் கல்லூரியில் நுழைந்தபோது எனக்கு ஒரு சிறிய ஆங்கில வேதாகமமும் கிதியோனியர் வெளியிட்டிருந்த புதிய ஏற்பாடும் கிடைத்தன. அதுமுதல் தமிழ் வேதாகமத்தையும் ஆங்கில வேதாகமத்தையும் சேர்த்தே பயன்படுத்தி வந்தேன். எனது பாலியப் பருவத்தில் நான் ஏற்கனவே தமிழில் மனனம் செய்திருந்த வசனங்களைப் பின்னர் ஆங்கிலத்திலும் மனனம் செய்வது எனக்கு எளிதாயிற்று (2 தீமோ 3:15). சொல்லப்போனால், இதுதான் எனது ஆங்கில மொழியறிவை மேம்படுத்திற்று. தவறே இல்லாது ஆங்கிலம் பேசுகிறேன், எழுதுகிறேன் என்று நான் சொல்ல மாட்டேன். எனது ஆங்கிலம் நடைமுறைக்கேற்றது, அவ்வளவுதான். இந்தத் தைரியத்துடன்தான் 1971ஆம் ஆண்டு எனது பொதுவுலகத் திருப் பணியைத் தொடங்குகையில், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத் துடன், ஆங்கிலத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்தேன். தமிழகத்தில் 1971இல் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) முதலாம் முகாம் துவக்கி, அனைத்து ஆண்டு முகாம்களிலும், திருச்சித்தத்தின்படி, நான்தான் கருப்பொருளின் முக்கியச் செய்தியாளராய் இருந்ததால், ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட எனது பிரசங்கங்கள்



தமிழல்லா மாநிலங்களிலிருந்தும் முகாம்களுக்கு மக்களைக் கவர்ந்தன. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு இவ்வியக்கம் விரைவாய்ப் பரவியதற்கு இது ஒரு காரணம். இன்று நான் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத முடியும், ஒன்றிலிருந்து அடுத்ததற்கு மொழியாக்கம் செய்யவும் முடியும் என்ற நிலைக்காய் என் தேவனைத் துதிக்கிறேன். இதனால் அந்தந்தப் பிராந்திய மொழிபெயர்ப்பாளர்களுடன் பல்வேறு மாநிலங் களின் பிரசங்கபீடங்களில் ஏறும் சிலாக்கியம் எனக்குக் கிட்டிற்று. ஜெர்மானிய, சிங்கள மற்றும் சீன மொழிபெயர்ப்பாளர்களுடன் பிரசங் கிக்கவும் ஏதுவாயிற்று. ஆங்கிலமும் தமிழும் கொண்டுள்ள இருமொழி வேதாகமம் அன்று எனக்குக் கிடைத்திருந்தால், இறையருளால் இன் னும் உயரங்களை எட்டியிருப்பேன்! இன்றைய இளைஞரே, உங்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேன்! இன்றிருக்கும் வசதிகளை நீங்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளாவிடில் உங்களை மன்னிக்கவே முடி யாது. தீமோத்தேயுவின் தாயார் அவருக்கு வேத வாக்கியங்களை எபி ரெய அல்லது அரேமிய மொழியில் கற்பித்திருக்கவேண்டும்; ஆனால் அவர் கிரேக்கப் பழைய ஏற்பாட்டிலும் தேர்ச்சி பெற்றிருந்ததால், கிரேக்க மொழி பேசும் சபையினருக்கும் ஊழியம் செய்யும்படி அவரைப் பவுல் அவர்களிடம் அனுப்பி வைக்க முடிந்தது (2 தீமோ 1:5; 3:15; 1 கொரி 16:10; பிலி 2:19; 1 தெச 3:2). சங்கீதப் புத்தகத்திலிருந்து ஆங்கிலத் தில் நான் மனனம் செய்த வசனங்கள் தமிழல்லா கூடுகைகளில் நான் சரளமாய் ஜெபிக்க எனக்குக் கை கொடுத்தன. அவ்விதமே, நீதிமொழி கள் புத்தகத்தை ஆங்கிலத்தில் அடிக்கடி வாசித்தது தமிழல்லா நபர்களுக்குத் தனித்து ஆலோசக ஊழியம் செய்யப் பேருதவியா யிருக்கிறது.

## வேத ஆராய்ச்சி நூல்கள் (Bible Study Aids)

இருமொழி வேதாகமங்களை நான் அதிகம் சிபாரிசு செய்வதற்கு இன்னொரு முக்கிய காரணமுண்டு: ஆராய்ச்சி வேதாகமங்கள், வேதா கமச் சொல்லகராதிகள், பொருளகராதிகள் மற்றும் வியாக்கியானங்கள் (Study Bibles, Bible Concordances, Dictionaries, Commentaries)

போன்ற எதுவாயிருந்தாலும், அவை பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உண்டு. உங்களது தாய் மொழிக்குள்ளேயே நீங்கள் அடைபட்டிருந்தால் இந்த உதவி நூல்களையெல்லாம் போதுமான அளவு நீங்கள் பயன் படுத்த முடியாது. English Standard Version (ESV) என்ற மொழியாக்கத் தையும் தமிழ் வேதத்தையும் ஒரே பக்கத்தில் கொண்டுள்ள இருமொழி வேதாகமத்தையும், *ESV Study Bible* என்பதனையும் நீங்கள் கிரமமாய்ப் பயன்படுத்தி வந்தால் அபார வளர்ச்சியடைவீர்கள். தேவைப்பட்டால் உங்கள் சொத்து ஒன்றை விற்றாவது இந்த ''முத்தை'' வாங்கிக்கொள் ளுங்கள் (மத் 13:44-46). உங்களது விலையுயர்ந்த புடவை ஒன்றை விற்றாவது இந்தப் ''பட்டயத்தை'' வாங்கிக்கொள்ளுங்கள்; ஏனெனில் துர்வுபதேசங்களுக்கு எதிராகப் போராட இப்பட்டயம் உங்களுக்கு இன்றியமையாதது (லூக் 22:36ஆ). ஆங்கிலத்திலும் தமிழிலும் வேத வாக்கியங்களை ஒரே பக்கத்தில் கொண்டிருந்து ஒப்பிட்டு வாசிப்பதும் தியானிப்பதும் இரு பைபிள்களைத் தனித்தனியே வைத்துப் பயன் படுத்துவதைவிட அதிக வசதியானது. 299ஆம் பக்கத்தில் படம் ஒன்று காண்க.

### தேசிய மொழி (National Language)

இந்தி மொழியையும் கற்றுக்கொண்டு ஆங்கிலம்-இந்தி இருமொழி வேதாகமத்தைப் பயன்படுத்தத் துவங்கும்படி எனது தென்னிந்திய நண்பர்களை ஊக்குவிக்கிறேன். நான் எனது பள்ளி இறுதியாண்டின் போது, இந்தியில் மூன்று தரப் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருந்த நிலையில், சொந்தமாக இம்மொழியில் கட்டுரைகள் எழுதக்கூடிய திறன் இருந்தும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காய் மிகவும் துக்கிக்கிறேன். தேசிய மொழி இல்லாது தேசத்தை ஆசீர்வதிக்க முடியாது. இரண்டாம் பாடமொழியாக பிரெஞ்சுக்குப் பதிலாக இந்தியைக் கற்க உங்கள் பிள்ளைகளை ஊக்குவியுங்கள். இந்தியாவின் எதிர்காலம் அவர்கள் கையில்தான். உங்கள் வேலையில் நீங்களே இடமாற்றம் (request transfer) கேட்டு வடக்கு நோக்கிச் செல்லுங்கள்! ஒருவேளை சூழ்நிலையின் காரணமாகத்தான் நீங்கள் வட இந்தியாவில் நடப்பட்



டிருப்பீர்களானால், எகிப்தில் யோசேப்பும் பாபிலோனில் தானியேலும் எவ்விதம் கனி தரும் செடிகளாய்த் திகழ்ந்தனர் எனப் படியுங்கள். தங் கள் பிள்ளைகள் மறுபடியும் தென்னகம் வந்துவிடவேண்டுமென்று ஜெபிக்கச் சொல்லி அரிக்கும் பெற்றோருக்குப் பிரசங்கிமார் காதடைத் துக்கொள்ளவேண்டும். மிஷனரிக் கன்வென்ஷன்களில் எனது சவால் செய்திகளைக் கேட்ட தம்பிமார் மன்னார்குடி ஜெயக்குமாரும், பூதலூர் சசிதரனும் முறையே குஜராத் மாநிலத்திற்கும் (1989) பஞ்சாப் மாநி லத்திற்கும் (2000) இடம் பெயர்ந்தார்கள். ''கூடாரத் தொழில் மிஷ னரிகள்'' (Tentmaking Missionaries) என்ற பாணியில் அவர்கள் இம் மாநிலங்களில் இறையரசிற்காய்த் தாக்கம் ஏற்படுத்தி வருகின்றனர். ''மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம்'' (Graveyard of Missionaries) என்றழைக்கப்பட்ட பீஹார் மாநிலத்திலேயே தன்னை ஊன்றிக் கொண்ட எனது பிரிய நண்பர் அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களுக்கு சல்யூட்! இச்சந்ததி பெருகட்டும்! எமில் அண்ணன் பாடியது கேட் கிறது —

*வட தேசம் செல்லும் வீரர் யார் நம்மிலே?*
*பல தேசம் செல்லும்படிக் கூறினாரே.*
*வட தேசம் செல்லும் வீரர் யார் நம்மிலே?*

*எத்தனைக் கூட்டங்கள் இங்கே!*
*எத்தனைக் கொள்கைகள் இங்கே!*
*ஒன்றும் அறியாதோர் அங்கே,*
*கோடி கோடியாக உண்டே;*
*யாருமில்லை, இன்று யாருமில்லை,*
*இயேசுவை அறிவிக்க யாருமில்லை!*

### மதிப்பிற்குரிய பாஸ்டர்களுக்கு ...

இறுதியாக, தமிழ் அல்லது பிற மொழி மேய்ப்பர்களுடன் பேச விரும்புகிறேன். இக்கட்டுரையின் குறிப்புகளை ஞாயிறு ஆராத னையொன்றில் உங்கள் சபையாருக்குப் பிரசங்கியுங்கள். ஒவ்வொரு

குடும்பமும் இருமொழி வேதாகமம் ஒன்றாவது வாங்கிட ஊக்கு வியுங்கள். இந்திய வேதாகமச் சங்கத் துணைச் சங்கங்களிலிருந்து பிரதிகளை மொத்தமாக வாங்கி உடனுக்குடன் உங்கள் சபையார் வாங்கிக்கொள்ள வகை செய்யுங்கள். கிறிஸ்தவப் புத்தகக் கடைகளுக்கு அவ்வப்போது சென்று புத்தகங்கள் வாங்கும் பழக்கம் அநேகக் கிறிஸ்த வர்களுக்குக் கிடையாது. வேதாகமங்கள் வாங்கும்போது விலையில் தள்ளுபடி கேட்கக்கூடாதென்று விசுவாசிகளுக்குச் சொல்லிக்கொடுங் கள். Raymond Showroom அல்லது KFCஇல் தள்ளுபடி கேட்பார்களா என்ன? இந்திய வேதாகமச் சங்கம் வெளியிடும் அனைத்து பைபிள் களின் விலையும் ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளது.

### வேதாகம ஞாயிறு (Bible Sunday)

தாமஸ் குரோன்லி என்ற ஆங்கிலப் பேராயர் ஒருவர் டிசம்பர் மாத முதல் ஞாயிற்றுக்கிழமையை ''வேதாகம ஞாயிறு'' என்று அனுசரிக்க ஒழுங்கு செய்தார். அதனை ஒரு நன்றிப் படைப்பு ஆராதனையாய்க் கொண்டாடவேண்டுமென அறிவுறுத்தினார். அதில் சேகரிக்கப்படும் காணிக்கையானது வேதாகம மொழிபெயர்ப்பு, வெளியீடு மற்றும் விநி யோகத்திற்காய்ச் செலவழிக்கப்படவேண்டுமென ஏற்பாடு செய்தார். உலகெங்கிலும், இந்தியாவிலும், புராதனச் சபைகள் இத்தினத்தை இவ் விதம் அனுசரிக்கின்றனர். உங்கள் சபையில் இது இடம்பெறவில் லையெனில் இதனை அறிமுகப்படுத்துங்கள். வேதாகமச் சங்கம் அல்லது மொழிபெயர்ப்பு நிறுவனம் ஒன்றிலிருந்து ஒருவரை அவ் வாராதனையில் பிரசங்கிக்க அழையுங்கள். பைபிளிலிருந்து ''அனுதின அப்பம்'' என்று நமக்குக் கிடைக்கும் ஆன்மீக உணவுக்கு நன்றி செலுத்தும் வகையில் நாளொன்றுக்கு ரூ. 1/- எடுத்து வைத்து ஒவ் வொரு உறுப்பினரும் இவ்வாராதனைக்கு வரும்போது காணிக்கை யாகக் குறைந்தது ரூ. 365/- கொண்டுவாருங்கள். அவ்வாராதனையில் சேர்க்கப்படும் மொத்தக் காணிக்கையை இந்திய வேதாகமச் சங்கத் திற்கு (BSI) அனுப்பிவையுங்கள்; அவர்கள் அதனை ''ஒன்றுமில்லா



தோர்க்குப் பங்குகளை அனுப்புவதற்காய்ச்'' செலவிடுவார்கள் (நெகே 8:10). செங்கற்களில் பணத்தைக் கொட்டுவதைவிட பைபிளுக்காய் முதலீடு செய்வதே ஞானம்!

### பிராந்திய இணை மொழியாக்க வேதாகமங்கள் (Vernacular Parallel Bibles)

ஆங்கிலத்தில் எத்தனையோ இணை மொழியாக்க வேதாகமங்கள் இருப்பது போலவே, பிராந்திய மொழிகளிலும் நமக்கு வேண்டும். வேதாகமத்தின் பிராந்திய மொழியாக்கங்கள் பல எத்தனையோ ஆண்டுகளாகத் தேவையான மொழித் திருத்தங்கள் செய்யப்பட வில்லை. பழைய மொழியாக்க வார்த்தைகளில்தான் தேவன் பேசி யுள்ளார் என்று நினைக்குமளவு அவற்றோடு மட்டும் நாம் ஒட்டிக் கொண்டிருக்கிறோம்; திருத்தப்பட்டவை யாவும் கலப்படம் என்றெண் ணிவிடுகிறோம். எடுத்துக்காட்டாக, தமிழ் வேதாகமத்தை எடுத்துக் கொள்வோம். நாம் பெரும்பாலும் பயன்படுத்தும் பழைய மொழி பெயர்ப்பு (OV) 150 ஆண்டுகளுக்கு முன்னர் 1871இல் வெளியிடப் பட்டது; இது 3ஆம் திருத்திய மொழிபெயர்ப்பு என்று நமக்குத் தெரியுமா? அப்படியானால், 4ஆம் திருத்திய மொழிபெயர்ப்பு கூடாதா? இருபத்தைந்து ஆண்டுகளில் எந்த மொழியும் பெரிதும் மாற்றமடை கிறதன்றோ? நமது பழைய மொழிபெயர்ப்பு வேதாகமம் வெளியிடப் பட்ட பின்னர் இன்னும் புராதனமான நகல்கள் (earlier manuscripts) நமக்குக் கிடைத்துவிட்டதல்லவோ? *திருவிவிலியம்* (Common Language) என்ற புது மொழிபெயர்ப்புக்காய்த் தேவனைத் துதிப்போம். இது ரோமன் கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டண்ட் சபைகளில் திரு மறையானது தேவனது வார்த்தை என்று முழுக்க முழுக்க விசுவாசிக்கும் இறையியலர்கள் மூல மொழியிலிருந்து செய்த மொழியாக்கம். இது ''கத்தோலிக்க'' பைபிள் அல்ல, ''பொதுவான'' மொழியாக்கம். நான் இம்மொழிபெயர்ப்பைத் தாராளமாய்ப் பயன்படுத்துகிறேன். மக்களை அவர்களது குருட்டு நம்பிக்கைகளிலிருந்து தைரியமாய் வெளிக்

கொண்டுவருவது ஊழியர்களின் பொறுப்பு. பழைய மொழிபெயர்ப்பையும் (OV) *திருவிவிலியத்தையும்* (CL) ஒரே பக்கத்தில் கொண்டுள்ள இணை மொழியாக்க வேதாகமம் விரைவில் வெளிவர ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். பிற பிராந்திய மொழிகளிலும் இது தேவை. சீகன் பால்க் (1682-1719) அல்லது பெப்ரீஷியஸ் (1710- 1791) போன்ற தனிநபர்களோ அல்லது ஒரு குழுவோ செய்த எந்த மொழியாக்கமும் குறைவற்றது அல்லது பூரணமானது என்று சொல்லவே முடியாது. முன்னேற்றத்திற்கான மாற்றத்தையும் எதிர்ப்பது கிறிஸ்தவப் பண்பல்ல.

## மேரி ஜோன்ஸ்

பலவித வேதாகமங்கள் வைத்திருக்கும் எனது இதயத்தை நொறுக்கிய ஒரு சம்பவத்தைக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன். வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த மேரி ஜோன்ஸ் (1784-1864) என்ற நங்கை காய்கறி, முட்டை, தேன், காலுறைகள், தொப்பிகள் போன்றவற்றை ஆறு ஆண்டுகள் விற்று ஒரு பைபிள் வாங்கப் பணம் சேர்த்தாளாம். 1800ஆம் ஆண்டு அவளது 16 வயதினிலே தனது வீட்டிலிருந்து 42 கிலோ மீட்டர் தொலைவில் வசித்து வந்த தாமஸ் சார்ல்ஸ் அவரிடம் ஒரு பைபிள் வாங்குவதற்காய் வெறுங்காலாய் மலைப்பாங்கான பாதையில் நடந்து சென்றிருக்கிறாள். தன்னிடமிருந்த பிரதிகள் எல்லாம் காலியாகிவிட்டன என்று அவர் கூறவே, அடுத்து பைபிள் பிரதிகள் வரும்வரை மேரி ஜோன்ஸ் அவரது வீட்டிலேயே தங்கியிருந்தாள். பிரதிகள் வந்ததும் அவர் மேரிக்கு ஒரு பிரதியின் விலைக்கு மூன்று பிரதிகள் கொடுத்தனுப்பினார். மேரியின் சந்திப்பும் அவள் கூறிய சாட்சியும் அவரைச் சிந்திக்க வைத்தன. சாதா மக்கள் வாங்கக்கூடிய விலையில் போதுமான பைபிள்கள் இல்லாத குறையை அவர் ஒரு சில கிறிஸ்தவத் தலைவர்களுடன் பகிர்ந்துகொண்டார். அவர்களில் ஒருவராகிய ஜோசப் ஹுயூஸ் என்பவர் கேட்ட கேள்வி: ‘‘வேல்ஸ் நாட்டிற்கு மட்டும் என்று ஏன் நினைக்கவேண்டும்? இங்கிலாந்து நாட்டுக்கு முழுவதும் என்று ஏன் நினைக்கக்கூடாது? அடுத்து உலகம் முழுவதற்கும் என்று ஏன் நினைக்கக்கூடாது?’’ இதன் விளைவாகவே



1804 மார்ச் 7 அன்று British and Foreign Bible Society (BFBS) பிறந்தது. இந்தியாவில் இதன் நீட்சியே இந்திய வேதாகமச் சங்கம் (BSI) ஆகும். BSIஇன் துணைச் சங்கங்கள் (Auxiliaries) கல்கத்தா (1811), மும்பை (1813), சென்னை (1820), லாகூர் (1829), ஆக்ரா (1845), பெங்களூரு (1875), அலஹாபாத் (1914) மற்றும் திம்மாப்பூர் (1985) ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. இன்று 17 துணைச் சங்கங்கள் கொண்ட BSIஇன் தலைமையகம் பெங்களூரில் உண்டு. தமது வசனத்தின்மீது ஒரு நபருக்கிருந்த தணியாத் தாகத்தைத் தேவன் எவ்வளவாய்க் கனப்படுத்தியிருக்கிறார் பாருங்கள்!

# 18

# உயிர்த்தெழுந்தார்! உன்னதமேறினார்! இடையில்?

Between Resurrection & Ascension

அளவுக்குமீறி கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறோம்; ஆனால் ஈஸ்டரை அவ்வளவு முக்கியப்படுத்துவதில்லை. மத்தேயு, லூக்கா ஆகிய இரு சுவிசேஷங்களில் மட்டுமே கிறிஸ்துமஸ் சரிதை உண்டு. ஆனால் நான்கு சுவிசேஷங்களும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை வெகுவாய் விவரிக்கின்றன. கிறிஸ்து பிறப்பு என்பது பவுலின் நிருபங்களில் ஓரிரு இடத்தில் மட்டுமே உண்டு (கலா 4:5; 1 தீமோ 3:16அ). அவரது உயிர்த்தெழுதலோ நடபடிகளிலும் நிருபங்களிலும் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்றது. பவுலைப் பொருத்தவரை சுவிசேஷமானது கிறிஸ்துவின் பிறப்பில் அல்ல, அவரது இறப்பிலேயே தொடங்குகிறது (1 கொரி 15:1-4). தொட்டில் அல்ல, தொழுமரமே கிறிஸ்தவத்தின் அடையாளச் சின்னம். நவீனக் கிறிஸ்தவம் மற்றும் அதன் செய்தியில் காணப்படும் பலக்குறைவுக்கு முக்கியக் காரணம் இங்குதானிருக்கிறது (1 கொரி 15:14,17).

ஈஸ்டருக்கு *முன்னர்* லெந்து காலம் என்று 40 நாட்களைக் கிறிஸ்தவர்கள் அனுசரிப்பதற்கு பைபிளில் எந்த ஆதாரமும் கிடையாது.



இது திருமறையின் அடிப்படையில்லாத ஒரு பாரம்பரியம், அவ்வளவுதான். இயேசுவானவர் தமது வாழ்வின் *இறுதிக்கட்டத்தில்* அல்ல, சிலுவையிலறையப்படுவதற்கு முந்திய அவரது மூன்றரை ஆண்டு ஊழியத் *தொடக்கத்தில்தான்* 40 நாட்கள் உபவாசம் பண்ணினார் (மத் 4:1,2,17). ஆனால் அவரது உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடைப்பட்ட காலமாகிய ***40 நாட்கள்*** தமது சீடருடன் செலவிட்டதுதான் திருமறையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (அப் 1:3). அக்காலக்கட்டத்தில் நிகழ்ந்த எத்தனையோ காரியங்களை பைபிள் வரிசைப்படுத்தியுள்ளது. அவற்றில் முக்கியமானது அவர் 10 முறை தரிசனமானதுதான் (மாற் 16:9-11; மத் 28:9,10; லூக் 24:13-32; 24:33,34; யோ 20:19-23; 20:24-29; 21:1-24; மத் 28:16-20; லூக் 24:44-49,50-53). இந்த 40 நாட்களின்போது *''இறையரசுக்கடுத்த* காரியங்களை'' ஆண்டவர் பேசிக்கொண்டிருந்தார். அவர் பத்து முறை காட்சியளித்தது ***இறையரசு வாழ்வு*** (Kingdom Life) என்பதற்கு உசிதமான படிப்பினைகளை நிறைய தருகிறது. ''பரலோக இராஜ்யம்'' (விண்ணரசு) அல்லது ''தேவனுடைய இராஜ்யம்'' (இறையரசு) குறித்துப் பிரசங்கித்து அவர் தமது மண்ணுலகப் பணியைத் தொடங்கினார் (மத் 4:17; மாற் 1:14,15). இப்பொழுதும் பிரதானமாகத் ''தேவனுடைய இராஜ்யத்துக்கு'' அடுத்த காரியங்களையே உபதேசித்து தமது பணியை நிறைவு செய்கிறார். இதனை இச்செய்தியில் தியானிப்போம் —

### 1. மகதலேனா மரியாளுக்குக் காட்சி

மாற்கு 16:9-11, ''வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியாளுக்கு *முதன் முதல்* தரிசனமானார். அவளிடமிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவருடன் இருந்தோர் துக்கத்துடன் அழுதுகொண்டிருக்கையில், அவர்களிடம் சென்று அச்செய்தியை அறிவித்தாள். அவர் உயிரோடிருக்கிறார் என்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபோது நம்பவில்லை.''

உயிர்த்த கிறிஸ்து தமது முதலாம் காட்சியையே பிசாசின் பிடியிலிருந்து விடுபட்டிருந்த ஒரு பெண்மணிக்குக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. பிசாசு பிடித்திருந்தவள் என்று அவள் எங்கும் அறியப்பட்டிருந்திருப்பாள். முழு விடுதலை அனுபவித்து இரண்டு மூன்று ஆண்டுகளாகியும் ''ஏழு பிசாசுகள் துரத்தப்பட்டவள்'' என்றே அழைக்கப்படுகிறாள் (லூக் 8:1,2). இவ்விதப் பின்னணியுள்ள ஒரு மாதுவுக்கு நமது உயிர்த்தெழுந்த மீட்பர் தமது முதலாம் காட்சியை அருளியதேன்? எனது பதில்: ***கிருபை!*** அவள் ஒரு பாடலாசிரியையாயிருந்திருந்தால் *"Amazing Grace"(கிருபையிதே, தேவ கிருபையிதே!)* என்ற பாடலை அவள்தான் இயற்றியிருப்பாள்! எனது கற்பனையைத் தவறு என்று பவுலடியார் சொல்லமாட்டார் என்பதே எனது கருத்து. அவரது அனுபவமும் இத்தகையதுதானே? இளைஞன் தீமோத்தேயுவுக்கு அவர் எழுதியது: ''பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகிற்குள் வந்தார் ... அவர்களில் பிரதான பாவி நான். ஆனாலும், நித்திய ஜீவனை அடையும்படி இனி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவிருப்பவர்களுக்கு மாதிரியாயிருக்கும்படியாகவே நான் ***இரக்கம்*** பெற்றேன்'' (1 தீமோ 1:15,16). நண்பரே, உங்களைப்பற்றி எனக்குத் தெரியாது; எனது கதையோ இதுதான். ஸ்டான்லியாகிய என்னைவிட மோசமானதொரு பாவி இருக்க வாய்ப்பில்லை. பெருமையடித்துக்கொள்ள என்னிடம் எதுவுமே இல்லை (எபே 2:8,9).

மகதலேனா மரியாளுக்கு இயேசு தரிசனமானதை அப்போஸ்தலன் யோவான் எழுதியுள்ளது இன்னொரு மகிமையான சத்தியத்தை நமக்குத் தருகிறது. யோவான் 20:11-18, ''இயேசு அவளைப் பார்த்து: 'நீ என் சகோதரரிடம் சென்று, நான் எனது பிதாவிடமும் உங்களது பிதாவிடமும், எனது தேவனிடமும் உங்களது தேவனிடமும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு' என்றார்.'' என்னே ***அடையாளப்படுத்துதல்!*** Identification! உலகைப் படைத்தவரும் உலக இரட்சகருமானவர் நம்மை அவரது ''சகோதரர்'' என்று எப்படித்தான் அழைக்கிறாரோ? சமூக அந்தஸ்து இல்லாததொரு சகமனிதனையே எனது சகோதரன் என்றழைக்கத் தயங்குகிறேனே! தேவனது ஒரே பேறான



குமாரனாகிய என் இயேசுவோ படுபாவிகளாகிய நம்மை அவரது சகோதர சகோதரிகள் என்றழைக்க ''வெட்கப்படவில்லை'' (எபி 2:11.12). அவரது பாதங்களை நான் முத்தம் செய்கிறேன்; அவற்றை எனது கண்ணீரினால் கழுவி, எனது குட்டை முடியினால் துடைக்கிறேன்! ''ஆண்டவரே, என்னைவிட அறிவிலும் அந்தஸ்திலும் குறைந்தோரை அசட்டை செய்யும் என் அகங்காரச் சிந்தையை மன்னியும். தாழ்ந்தவர்களுடன் கூடிக்கொள்ள எனக்குதவிடும்'' (எரே 9:23,24; ரோ 12:16).

## உ. கல்லறையிலிருந்து திரும்பிவந்துகொண்டிருந்த பெண்களுக்குக் காட்சி

மத்தேயு 28:9,10, ''அப்பெண்மணிகள் இயேசுவின் சீடர்களுக்கு அறிவிக்கப் போய்க்கொண்டிருக்கையில், இயேசுவே அவர்களுக்கு எதிர்ப்பட்டு, 'வாழ்க' என்றார். அவர்கள் அவருக்கருகில் வந்து அவரது பாதங்களைத் தழுவி, அவரைப் *பணிந்துகொண்டார்கள்.* அப்பொழுது இயேசு அவர்களைப் பார்த்து, 'பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரரைக் கலிலேயாவுக்குப் போகும்படிச் *சொல்லுங்கள்;* அங்கு அவர்கள் என்னைப் பார்ப்பார்கள்' என்றார்.''

சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ளவைகளின்படிப் பார்த்தால், உயிர்த்தெழுந்த கர்த்தரை முதலாவது தொழுதுகொண்டது ***பெண்கள்தான்!*** மட்டுமல்ல, அவரது உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக முதலாவது அனுப்பப்பட்டதும் ***பெண்கள்தான்!*** இது தற்செயலாய் நிகழ்ந்ததல்ல, இப்படி நடக்கவேண்டுமென தேவனே நியமித்திருக்கிறார். மிரியாம் ஒரு தீர்க்கதரிசனப் பாடகி. மற்ற சகோதரிகளை அழைத்து அவள் சொன்னது: ''கர்த்தரைப் பாடுங்கள்; அவர் மகிமையாய் *வெற்றி* பெற்றார்'' (யாத் 15:20,21). தெபொராள் இன்னொரு தீர்க்கதரிசனப் பாடகி. அவள் பாடியது: ''கர்த்தாவே, உம்மைப் *பகைக்கிற* யாவரும் அழியட்டும்; உம்மை நேசிக்கிறவர்களோ முழுவீச்சில் உதிக்கும் சூரியன்போல் இருக்கட்டும்'' (நியா 4:4; 5:1,31). அன்னாளது பாடலும் தீர்க்கதரிசனத் தொனியுடன் இருந்தது. அவள் பாடியது: ''கர்த்தரை எதிர்ப்போர் நொறுக்கப்படுவர்! ... தாம் அமர்த்திய *ராஜாவுக்கு* அவர் பலம் அளித்து, தாம்

அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார்'' (1 சாமு 2:10). கோலியாத்தைத் தாவீது முறியடித்தபோது அதற்காய் *வெற்றிப் பவனி* முன்னெடுத்தது பெண்மணிகள்தான் (1 சாமு 18:6,7). மரி யாளின் கீதம் அன்னாளின் பாடலைப் போன்றது. அவள் திரும்பத் திரும்பத் தேவனை ''வல்லமையுடையவர்'' எனப் போற்றினாள் (லூக் 1:46-55). பேன்னி கிராஸ்பி (1820-1915) மற்றும் பிரான்சஸ் ரிட்லி ஹேவர்கால் (1836-1879) போன்ற பாடலாசிரியைகளுக்குத் திருச்சபை என்றும் கடமைப்பட்டுள்ளது. தமிழ்க் கிறிஸ்தவராகிய நாம் சகோதரி சாராள் நவரோஜி (1938-2014) அவர்கள் இல்லையே என்று எவ்வள வாய் ஏங்குகிறோம்! அவர்கள் இன்று இருந்திருந்தால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் உன்னதமேறுதல் குறித்து இன்னும் எத்த னையோ பாடல்கள் தந்திருப்பார்கள்!

தங்களது பீடங்களிலிருந்து பெண்கள் பிரசங்கிப்பதை அநேக சபைகள் சகித்துக்கொள்ள முடிவதில்லை. தொழுகையையாவது அவர் கள் நடத்தட்டுமே! ஆடவரது குரலைவிட அவர்களது குரல் கூடுதல் இனிமையென்பதை யார் மறுக்க முடியும்? ஒன்றுவிட்டு ஒரு ஞாயிறு ஆராதனையிலாவது சகோதரிகள் நமது ஆலயங்களில் பாடல் நடத்த லாம். அப்பொழுது எஸ்றா மற்றும் நெகேமியா காலத்துச் சீர்திருத்தங்கள் நமது சபைகளில் உருவாக அது வழிவகுக்கும் (எஸ்றா 2:65; நெகே 7:67). சகரியா 9:9இலுள்ள தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகவே அன்று ''ஓசன்னா'' பவனி அமைந்திருந்தது: ''சீயோன் *குமாரத்தியே,* மிகவும் களிகூரு; எருசலேம் *குமாரத்தியே,* கெம்பீரி; இதோ, உன் இராஜா உன்னிடம் வருகிறார்'' (மத் 21:4,9). சீயோன் ''குமாரத்தி'' என்பது சீயோன் ''குடிமக்களையே'' குறிக்கும் என்று நீங்கள் வாதிடலாம். இருக்கலாம், ஆனால் சகரியா 9:13இல் உள்ளபடி சீயோனின் ''குமாரர்'' என்று இங்கு அழைக்காதது ஏனோ? எது எப்படியிருப்பினும், பெண் களை இறையரசில் இரண்டாந்தரக் குடிமக்கள் என்று கருதக்கூடாது (கலா 3:28). பாஸ்டர் ஐயா அவர்களே, 52 ஞாயிறுகளில் ஒன்றைத்தான் 'பெண்கள் ஞாயிறு' என்று அனுசரிக்கவேண்டுமோ? மாதத்திற்கு ஒரு ஞாயிற்றுக்கிழமையை அவ்விதம் கொண்டாடினாலென்ன? சொல்லப்



போனால், நமது சபைகளில் ஆண்களைவிடப் பெண்கள்தானே அதிகம்? ஒவ்வொரு சபையிலுமுள்ள பெண்கள் இக்கருத்தினைத் தலைவர்களிடம் முன்வைக்கவேண்டும். கவனத்திலிருத்தவேண்டிய ஒரு காரியம், திருச்சபையார்முன் சகோதரிகள் நிற்கும்போது, அரை குறையாயில்லாது, கண்ணியமா´ உடுத்தியிருக்கவேண்டும்.

பேசும் திறன் பெண்களுக்கு நிறையவே உண்டு. சுவிசேஷத் தையே உரையாடலாக்க அவர்களை ஊக்குவிக்கலாம். இந்தியக் கலாச் சாரத்தைப் பொருத்தமட்டில், பெண்கள்தான் பெண்களை எளிதில் சந்திக்க முடியும். கிராமப்புறங்களில் இது மறுக்க முடியாதது. கிராமங் களை நற்செய்தியுடன் சந்திப்பதற்குக் குழுக்களாய்ச் செல்ல நமது சகோதரிகளுக்குத் திருச்சபை உதவி செய்யவேண்டும். இந்தியரில் பாதிக்குக் குறையாமல் பெண்கள்தான். அக்கா, தங்கச்சி, அம்மா, நீங்கள் ஒரு யோவன்னாளாய், சூசன்னாளாய், பிரிஸ்கில்லாளாய், திரிபேனாளாய், திரிபோசாளாய், பெர்சியாளாய், யூலியாளாய் இருக்க மாட்டீர்களா? (லூக் 8:2,3; ரோ 16:3,12,15).

## 3. எம்மாவு சாலையில் இரு சீடருக்குக் காட்சி

மாற்கு 16:12,13, ''அதற்குப் பின்பு அவர்களில் இருவர் ஒரு கிராமத்திற்கு நடந்து போகையில் அவர்களுக்கு இயேசு மறுரூபமாய்த் தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித் தார்கள்; அவர்களையும் சீடர்கள் நம்பவில்லை.''

லூக்கா 24:13-32, ''அன்றே அவர்களில் இருவர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தொலைவிலுள்ள எம்மாவு எனும் கிராமத்திற்குப் போனார்கள். போகும்போது இந்நிகழ்வுகள் எல்லாவற்றையும் குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். அவர்கள் இப்படிப் பேசி உரையாடிக்கொண்டிருக்கும்போது, இயேசு தாமே சேர்ந்து அவர்களுடன் நடந்துபோனார் ... மோசே மற்றும் அனைத்துத் தீர்க்கர்களும் எழுதிய *வேத வாக்கியங்கள்* எல்லாவற்றிலும் *தம்மைக் குறித்துச்* சொல்லப் பட்டவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் ... அப்பொழுது அவர்களது கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள்; உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்.''

***பைபிள்*** பிரியர்களாகவும் ***பைபிள்*** படிப்பவர்களாகவும் மாற வேண்டுமென்ற அழைப்பு இங்கு அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் வருகிறது. வேலைப்பளு பெருகிக்கொண்டேயிருக்கும் இந்நாட்களில் பலியாவது திருவசனத் தியானத்திற்கான அமைதி வேளையே. ''ஆசீர் வாதம்'' (Blessing) பெறுவதைக் குறித்து எங்கும் பேச்சு; ஆனால் பைபிளிலுள்ள மிக நீண்ட புத்தகத்தின் முதல் அத்தியாயமே ''பாக் கியம்'' (Blessedness) பெறுவதற்கான வழிமுறையை வகையறுக் கிறது: சங்கீதம் 1:1,2, ''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதில் தியானமாயிருக்கிறவன் பாக்கியவான்.'' பூரணம், பசுமை, கனிநிறைவு ஆகியவை இதன் உடனடி விளைவு (வச 3). ''வேதமே இல்லாத நாளெல்லாம் நாளாகுமா?'' என்பது சுவிசேஷகர் D. L. மூடி (1837-1899) அவர்களது கேள்வி! பாலை நிலத்தில் 40 ஆண்டுகள் தேவ மக்கள் பயணித்தபோது அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய தலைசிறந்த பாடமென்று தேவன் எதிர்பார்த்தது: ''சாப் பாட்டினால் மட்டுமல்ல, தேவனது வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலேயே மனிதன் உயிர் வாழ்வான்'' (உபா 8:3,4). பிசாசுக்கு நமதாண்டவர் கொடுத்த முதல் அடி இதுதான் (மத் 4:4). தின்னுவதற்காய்ச் சம்பாதிக்க நாம் தினமும் எவ்வளவு நேரம் செல விடுகிறோம்? திருமறைத் தியானத்திற்காக?

திருவிவிலியத்தின் ஒவ்வொரு புத்தகத்திலும் திருமகன் ***இயேசுவைச்*** சந்திப்பதே பலன் மிகுந்த ஆராய்ச்சியாகும். ***''தம்மைக் குறித்து''*** வேத வாக்கியங்கள் ''எல்லாவற்றிலும்'' சொல்லப்பட்டி ருப்பவற்றையே அவர் எம்மாவூர் சீடருக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக் 24:27). திருமறையானது கிறிஸ்துவையே மையமாய்க் கொண்டது. *Open Bible* போன்ற ஆராய்ச்சி வேதமொன்றை வாங்கிப் படியுங்கள்; அறுபத்தாறு புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் கிறிஸ்துவைப் பார்க்க அது உங்களுக்கு உதவியாயிருக்கும். வேறு எந்தக் கோணத்தில் படித்தாலும் அது ஏட்டுச்சுரைக்காய்தான். இயேசுவைக் கொல்ல வழிதேடிக்கொண்டிருந்த யூதரின் பிரச்னையே இதுதானே? வேத வாக்கியங்களில் நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணித்தான் அவர்கள்



அவற்றை ஆராய்ந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இவரைத்தான் நித்திய ஜீவனைத் தருபவராய் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் முன்னுரைத்தன என்பதைக் காணத் தவறிவிட்டார்கள் (யோ 5:18,39,40). இயேசுவைத் தனிவாழ்வில் சந்திக்காது வெறும் தலையறிவு! இயேசுவை அறியாத அல்லது அவரால் அறியப்படாத எத்தனை இறையியல் பட்டதாரிகள் நமது பிரசங்கபீடங்களில் ஏறுகிறார்கள்! சிலுவையில் எழுதப்பட்ட எபிரெயு, கிரேக்கு, லத்தீன் ஆகிய மொழிகள்தான் அவர்களுக்குத் தெரி யும்; சிலுவையில் அறையப்பட்ட மகிமையின் கர்த்தரையோ அவர்கள் அறியார்கள் (யோ 19:19,20; 1 கொரி 2:8).

## 4. சீமோன் பேதுருவுக்குக் காட்சி

லூக்கா 24:33,34, அந்த இரு எம்மாவு சீடர்கள் எருசலேமுக்குத் திரும்பிப் போய், பதினொருவரிடமும் அவர்களுடனிருந்தவர்களிடமும், ''கர்த்தர் உண்மையாகவே உயிர்த்தெழுந்து *சீமோனுக்குத்* தரிசன மானார்'' என்றனர். 1 கொரிந்தியர் 15:4,5இல் அப்போஸ்தலன் பவுல் இதனையே குறிப்பிடுகிறார்: ''கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, *கேபாவுக்கும்,* பின்பு பன்னிரு வருக்கும் தரிசனமானார்.''

சீமோன் பேதுருவுக்குத் தனித் தரிசனம் ஏன்? வேத வியாக்கியானி எவரும் திருப்திகரமாக பதிலளிக்க முடியாத கடினமான கேள்வியிது. என்னைப் பொருத்தவரை, இதனைத் தேவனது ***தீர்மானம்*** அல்லது ***தெரிந்தெடுப்பு*** என எடுத்துக்கொள்கிறேன். தேவப் பிள்ளைகள் யாவரும் உலகம் தோன்றுவதற்கு முன்னரே கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளனர் எனத் திருமறை போதிக்கிறது (எபே 1:4; 2 தெச 2:13). தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நடுவிலிருந்து ஒரு சிலரைத் தேவன் குறிப்பிட்ட நோக்கங்களுக்காய்ப் பிரித்தெடுக்கிறார். புறவினத் தார், அரசர்கள் மற்றும் இஸ்ரவேலருக்குமுன் கிறிஸ்துவின் பெயரை எடுத்துச்சொல்ல ''தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம்'' எனப் பவுல் விளங்கினார் (அப் 9:15; கலா 1:1). திருமறையில் காரணம் குறிப் பிடாது ''கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்'' என்று ரூபஸ் அழைக்கப்பட்டார் (ரோ 16:13). அப்போஸ்தலன் யோவான் தனது

இரண்டாம் நிருபத்தை ''தெரிந்துகொள்ளப்பட்ட ஓர் அம்மாவுக்கு'' எழுதினார் (2 யோ 2). முதலாவது யூதருக்கும், அடுத்து புறவினத்தாருக்கும் இறையரசினைத் திறந்துவிடச் சீமோன் பேதுரு தெரிந்துகொள்ளப்பட்டார் (அப் 2:14,40,41; 10:17-20,44,45). இதற்காகவே ஆண்டவர் அவரிடம் ''விண்ணரசின் சாவிகளைக்'' கொடுத்தார் (மத் 16:19). குறிப்பிட்ட பணிப்பொறுப்புகளுக்காய்க் கர்த்தரால் பிரத்தியேகமாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை விசுவாசிகளாகிய நாம் மதிப்புடன் நடத்தவேண்டும். ஆரோன்-மிரியாம் போலவும், கோராகு-தாத்தான் போலவும் தேவனது தெரிந்தெடுப்பைக் கேள்வி கேட்டு தேவனது கோபத்திற்கு ஆளாகாதிருப்போம் (எண் 12:1,2,9; 16:1-3; யூதா 11இ).

தேவனது தெரிந்தெடுப்பு என்பது அந்த நபரின் தகுதியில் அல்ல, தேவனது இரக்கத்தின் அடிப்படையிலானது (ரோ 9:13-15). தமது சீடரில் பன்னிருவரை எந்த அடிப்படையில் அப்போஸ்தலர் என்று கிறிஸ்து தெரிந்தெடுத்தார்? சுவிசேஷங்களில் வாசிக்கிறபடி, அவர்களது திறன்களைவிடக் குறைபாடுகள்தான் கூடுதலாய்க் காணப்பட்டன: விசுவாசமின்மை, ஜெபமின்மை, தொழுகைக் குறைவு, மன்னியாமை, போட்டி மனப்பான்மை, பிறர் காரியங்களில் தலையீடு, கனிவின்மை, தைரியமின்மை, குறுகிய மனப்பான்மை மற்றும் மண்ணுலகச் சிந்தை. ஆண்டவரோ அவர்களைத் திருச்சபையை வழிநடத்த மட்டுமல்ல, வரவிருக்கும் விண்ணரசில் இஸ்ரவேலரை நியாயந்தீர்க்கவும் தெரிந்துகொண்டார் (லூக் 22:29,30). எவ்விதத் தெரிந்தெடுப்பிற்கும் பின்னணியாயிருக்கும் அவரது முன்னறிவைப் போற்றுவோம்!

## 5. மேலறையில் பத்து சீடருக்குக் காட்சி

லூக்கா 24:36-49, ''எருசலேமிலுள்ள சீடருக்கு இக்காரியங்களை எம்மாவு சீடர்கள் அறிவித்துக்கொண்டிருந்தபோது, இயேசு தாமே அவர்கள் நடுவில் நின்று, 'உங்களுக்குச் *சமாதானம்*' என்றார். அவர்களோ கலங்கி, பயந்து, ஓர் ஆவியைப் பார்ப்பதாக நினைத்தார்கள் ... அவர் அவர்களுக்குத் தமது கைகளையும் கால்களையும் காட்டினார் ... வேத வாக்கியங்களைப் புரிந்துகொள்ளும்படி அவர்களது மனதை அவர்



திறந்தார் ... மேலும் அவர்களிடம், 'மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் அனைத்து நாட்டினருக்கும் எனது பெயரால் பிரசங்கிக்கப்படவேண்டும் ... என் பிதா *வாக்குப்பண்ணியதை,* இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்; நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் *பலத்தினால்* ஆட்கொள்ளப்படும்வரை எருசலேம் நகரில் காத்திருங்கள்' என்றார்.''

யோவான் 20:19-23, ''வாரத்தின் முதல் நாளாகிய அன்று சாயங்காலத்தில், சீடர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததால் கதவுகள் பூட்டப்பட்டிருக்கையில், இயேசு வந்து நடுவில் நின்று, 'உங்களுக்குச் *சமாதானம்* ... பிதாவானவர் என்னை அனுப்பியுள்ளது போலவே நானும் உங்களை அனுப்புகிறேன்' என்றார். மேலும் அவர்கள் மீது ஊதி, *'பரிசுத்த ஆவியைப்* பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களது பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படும்; எவர்களது பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்' என்றார்.''

தமது சீடருக்குச் ''சமாதானம்'' கூறிய இயேசு எங்கும் சமாதானச் செய்தியை பரப்பிட அவர்களை அனுப்பிவைக்கிறார். அவரது பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். முன்பு நாம் கடவுளுக்கு எதிரிகளாய் இருந்தோம்; இன்றோ அவரது குமாரனின் இறப்பு மற்றும் உயிர்ப்பினால் அவருடன் ஒப்புரவாகிவிட்டோம் (ரோ 5:10). அவரை எதிர்த்துக்கொண்டிருந்த நாம் அவரது ஒப்புரவாகுதலின் செய்தியை எடுத்துரைக்கிறவர்களாகிவிட்டோம். ஒப்புரவாகுதலின் ஊழியத்தைத் தேவன் நமது கைகளில் தந்து, நம்மைக் கிறிஸ்துவின் ***அரசுத் தூதுவர்*** ஆக்கிவிட்டார் (2 கொரி 5:18,19). ஆத்துமாதாயம் என்றாலே தேவனுடன் சமாதானமாகும்படி மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதுதான் (வச 20). தேவனது பொறுப்புள்ள குமாரர் குமாரத்திகளாக நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கிறோம் (மத் 5:9). தேவ சமாதானத்தை அனுபவிக்கும்படி தேவனுடன் சமாதானம்! ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்கும்படி தேவனுடன் சமாதானம்! (நீதி 16:7).

*அமைதியைத் தேடி அலைந்து திரியும்*
*திரள்கோடி ஜனங்கள் நம்மில் உண்டு;*
*ஆறுகள் நதிகள் என்று தேடும்*
*பக்தகோடிகள் நம்மில் உண்டு;*
*உண்மைத் தெய்வத்தை அறிய*
*மலைகள் நாடும் ஜனம் நம்மில் உண்டு;*
*இலவச இரட்சிப்பை அருளும்*
*சிலுவைச் செய்தி சொல்ல நீ உண்டு!*

நாம் எவ்வளவுதான் திறமைசாலிகளாயிருந்தாலும் நமது சொந்த பலத்தினால் இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நிறைவேற்ற முடியாது. எனவேதான் உயிர்த்தெழுந்த இரட்சகர் தமது சீடர்கள் ***பரிசுத்த ஆவியைப்*** பெற்றுக்கொள்ளும்படி அவர்கள்மீது ஊதினார் (யோ 20:22). பெந்தேகொஸ்தே நாளில் அவர்கள் பெறவிருந்த ஆவியின் ஞானஸ்நானத்தின் முன்ருசியாயிருந்தது இவ்வனுபவம் (அப் 1:4,5).

## 6. தோமா உட்படப் பதினொருவருக்குக் காட்சி

யோவான் 20:24-29, ''இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்றழைக்கப்பட்ட தோமா அவர்களுடன் இருக்கவில்லை. மற்ற சீடர்கள், 'கர்த்தரைக் கண்டோம்' என்று அவரிடம் சொன்னார்கள். அதற்கு அவர், 'அவரது கைகளில் ஆணிகளறையப் பட்டதால் ஏற்பட்ட காயத்தை நான் பார்த்து, அந்தக் காயத்தில் என் விரலை விட்டு, என் கையை அவரது விலாவில் போட்டாலன்றி *விசுவாசிக்க* மாட்டேன்' என்றார். மறுபடி எட்டு நாட்களுக்குப் பின்னர் அவரது சீடர்கள் வீட்டிற்குள் இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடன் இருந்தார்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. அப்பொழுது இயேசு வந்து நடுவில் நின்று, 'உங்களுக்குச் சமாதானம்' என்றார். பின்பு அவர் தோமாவைப் பார்த்து, 'நீ விரலை இங்கு நீட்டி, என் கைகளைப் பார்; உன் கையை நீட்டி, என் விலாவில் போடு; அவிசுவாசியாயிராது *விசுவாசியாயிரு'* என்றார். தோமா அவருக்கு மறுமொழியாக, 'என் ஆண்டவரே! என் தேவனே!' என்றார். அதற்கு இயேசு, 'தோமாவே, நீ என்னைப் பார்த்ததினால் விசுவாசித்தாய்; பார்க்காதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்' என்றார்.''



கிறிஸ்தவ வாழ்க்கையே ***விசுவாச*** நடைதான். ''நாம் தரிசித்து நடக்காமல், விசுவாசித்து நடக்கிறோம்'' என்று தேவப் பிள்ளைகளின் சார்பில் அப்போஸ்தலன் பவுல் எழுதினார் (2 கொரி 5:6). ''கண்ணால் பார்க்க முடிந்தவற்றை அல்ல, பார்க்க முடியாதவற்றை'' நோக்குவதாலேயே இது சாத்தியமாகும் (4:18). இதே சத்தியத்தை அப்போஸ்தலன் பேதுரு எதிரொலிக்கிறார்: 1 பேதுரு 1:8, ''கிறிஸ்துவை நீங்கள் பார்க்காமலிருந்தும் அவரிடம் அன்பு செலுத்துகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடம் விசுவாசம் வைத்து, விவரிக்க முடியாததும் மாட்சிமையினால் நிறைந்ததுமாயிருக்கிற மகிழ்ச்சியுள்ளவர்களாய்க் களிகூருகிறீர்கள்.'' உணர்ச்சிவசமும் பரவசமுமே இன்றையக் கிறிஸ்தவத்தை ஆட்டிப்படைக்கின்றன. பரவச உணர்ச்சியையே மக்கள் நாடியலைகின்றனர். உணர்ச்சிகள் இருக்கலாம்; ஆனால் அவை விசுவாசத்தைப் பின்தொடரலாமே தவிர அதற்கு முந்தக்கூடாது. திருவார்த்தையின் *உண்மைத்துவம்* (fact) முதலில் வருகிறது; அடுத்து அதனை *விசுவாசம்* (faith) தொடர்கிறது; அடுத்து *உணர்ச்சிகள்* (feelings) வரலாம், வராமலுமிருக்கலாம். இவ்வரிசையை ஒருபோதும் மாற்றாதிருங்கள். அறிவியலும் தொழில்நுட்பவியலும் பெருகியுள்ள இக்காலத்தில் இது கடினம்தான். ஆனாலும், விசுவாசம் இல்லாமல் தேவனைப் பிரியப்படுத்தவே முடியாது (எபி 11:6). புலம்பல் தொனியுடன் ஆண்டவர் கேட்டது: ''மனுமகன் வரும்போது பூவுலகில் விசுவாசத்தைக் காண்பாரோ?'' (லூக் 18:8ஆ). இறுதிக்காலத்தின் இறுதிக் கட்டத்திற்குள் வந்துள்ள நாம் கன்னி விசுவாசத்தைத் தக்க வைத்துக் கொண்டு அதில் வளர்ந்து பெருக ஒருவரையொருவர் ஊக்குவிப்போம் (எபி 3:12,13). நாம் ''பிழைத்திருப்பதே'' (உயிர் வாழ்வதே) விசுவாசத்தினால்தான் என்றிருக்கவேண்டும் (ரோ 1:17; கலா 2:20). கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் நடபடிகள் புத்தகத்தில் *''விசுவாசித்தவர்கள்''* என்றழைக்கப்பட்டனர்! பாடுகள், பாரங்கள் எதுவாயிருந்தாலும் ''விசுவாசத்தில் தொடர்ந்தால்தான்'' இறையரசின் ஆசிகளை அனுபவிக்க முடியுமென்று இறைமக்களை அப்போஸ்தலர் ஊக்குவித்தனர் (அப் 14:22).

## 7. கலிலேயாக் கடலோரத்தில் ஏழு அப்போஸ்தலருக்குக் காட்சி

யோவான் 21:1-24, ''இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியா கடற்கரையில் மறுபடியும் சீடருக்குத் தம்மை வெளிப்படுத்தினார் ... சீமோன் பேதுரு, தோமா, நாத்தான்வேல், செபெதேயுவின் குமாரர் மற்றும் வேறிரு சீடர் அங்கிருந்தனர் ... விடியற்காலமானபோது, இயேசு கரையில் நின்றார்; அவரை இயேசு என்று சீடர்கள் அறியாதிருந்தார்கள் ... அவர் அவர்களைப் பார்த்து, 'படகுக்கு வலது பக்கமாக வலையைப் போடுங்கள்' என்றார். அப்படியே அவர்கள் போட்டு, ஏராளம் மீன்கள் அகப்பட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை ... அவர்கள் சாப்பிட்டபின், சீமோன் பேதுருவைப் பார்த்து இயேசு, 'யோனாவின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது *அன்பு செலுத்துகிறாயா?'* என்றார். அதற்கு அவர், 'ஆம், ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியுமே!' என்றார். இயேசு அவரிடம், 'என் ஆட்டுக்குட்டிகளை மேய்த்திடு' என்றார். இரண்டாம் முறை இயேசு அவரிடம், 'யோனாவின் மகன் சீமோனே, நீ என்னிடம் *அன்பாயிருக்கிறாயா?'* என்று கேட்டார். அவர் இயேசுவிடம், 'ஆம், ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்' என்றார். அவர், 'என் ஆடுகளை மேய்த்திடு' என்றார். மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், 'யோனாவின் மகன் சீமோனே, நீ என்னை *நேசிக்கிறாயா?'* என்று கேட்டார். மூன்று முறை இவ்விதம் கேட்டதால் பேதுரு வருத்த மடைந்து, அவரிடம், 'ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?' என்றார். இயேசு அவரிடம், 'என் ஆடுகளை மேய்த்திடு' என்றார்.'' பேதுரு எவ்விதமாய் மரணமடைவார் என்பதை அடுத்துள்ள வசனங்களில் ஆண்டவர் முன்னறிவிக்கிறார். மட்டுமல்ல, யோவானின் காரியத்தில் பேதுருவின் தேவையற்ற தலையீட்டை ஆண்டவர் கண்டிக்கிறார்.

இச்சீடரில் பலர் கைதேர்ந்த மீனவர். அன்றோ அவர்களது முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை. உயிர்த்தெழுந்த கர்த்தரின் எளிமையான ***நடத்துதலை*** அவர்கள் ஏற்றுக்கொண்டபோதோ, அசாதாரணமான மீன்



பிடிப்பு சாத்தியமாயிற்று (வச 6அ). பல சமயங்களில் நாம் ஆவியானவர் மூலம் தேவன் தரும் எளிய நடத்துதலைவிட நமது அறிவு மற்றும் அனுபவத்தையே அதிகம் சார்ந்துவிடுகிறோம். இராப்பகலாய் உழைத்தும் கனி காணாது விரக்தியடைந்திருக்கும் கள மிஷனரிகளுக்கு இங்கு உன்னதப் படிப்பினை ஒன்றுண்டு. ஒரு சில நாட்கள் உங்கள் பணிகளை நிறுத்திவிட்டுப் புதிய நடத்துதல் வேண்டி தேவனுக்குமுன் காத்தி ருங்கள். நமக்கு ஆலோசனை தந்து நம்மை நடத்த முடியாத துறை என்று தேவனுக்கு எதுவும் கிடையாது. மீன் பிடிப்பதைப்பற்றி ஒரு தச்சனுக்கு என்ன தெரியும் என்று சீடர்கள் நினைக்கவில்லை! கூடாரத் தொழிலாளியாகிய பவுல் இறைநடத்துதலின்படிச் சொன்னதை மாலுமி கள், எவ்வளவு அனுபவசாலிகளானாலும், கேட்டிருந்தால் பெரிய கப்பல் சேதத்தை அவர்கள் தவிர்த்திருப்பார்கள் (அப் 27:9- 11,21).

ஆண்டவர் நம்மை அழைத்துள்ள பணியை அவருக்கு ஏற்புடைய வகையில் நாம் செய்யவேண்டுமானால், அவர்மீது நமக்கு ***ஒப்புமை யற்ற அன்பு*** இன்றியமையாதது என்பதே அவரது இந்த ஏழாம் தரி சனத்திலிருந்து நாம் கற்கும் இன்னொரு முக்கிய பாடம் (யோ 21: 15-17). அதிலும் குறிப்பாக, சபை மேய்ப்பர்களுக்கு இது அதிமுக்கியம். பாஸ்டருக்கு அல்ல, இயேசுவுக்கே சபையார் சொந்தம் என்பதை அவர் *''என்''* ஆட்டுக்குட்டிகள், *''என்''* ஆடுகள், *''என்''* ஆடுகள் என்று திரும் பத் திரும்ப அழுத்திச் சொல்வதிலிருந்து நாம் புரிந்துகொள்ளவேண்டும் (வச 15-17). திருச்சபை என்பது அவர் தமது சொந்தத் திருரத்தத்தால் விலை கொடுத்து வாங்கியது (அப் 20:28). அவரது ஆடுகளைக் கவ னித்துக்கொள்ள அவரால் நியமிக்கப்பட்டவர்களே ஆயர்கள். ''பிரதான மேய்ப்பர்'' மீது நமது பற்று இருக்குமளவுக்குத்தான் நமது ஊழிய அர்ப்பணிப்பு இருக்கும் (1 பேது 5:4). பேதுருவிடம் ஒரே கேள்வியை ஆண்டவர் மும்முறை கேட்டார். ஆம், இரண்டாந்தர நோக்கங்களைத் தங்கள் மனதிலிருந்து அறவே ஒழித்துவிடும்படி மேய்ப்பர்கள் அடிக்கடி இவ்விதக் கேள்விகள் மூலம் தங்களைத் தற்பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இங்கு கவனிக்கவேண்டிய இன்னொரு காரியம்: இந்தத் தரிசனத்தின்போது மட்டுந்தான் ஆண்டவர் தமது மறுவருகையைக்

குறிப்பிட்டுள்ளார் (யோ 21:23). ஆம், அவர் மீது அடக்க முடியாத பாசம் கொண்டவர்கள்தான் அவரது வருகையை ஆவலாய் எதிர்நோக்குவர் (2 தீமோ 4:8). எனது நண்பர் அண்ணன் பொன்ராஜ் ஐசக் அவர்களது பாடல் என் நினைவுக்கு வருகிறது —

*இயேசுவே, என் இதய மன்னா, இறங்கி வாரும் துரிதமாய்;*
*நேசரே, என் அருமை நாதா, நித்தம் உம்மைத் தேடி வாடுகின்றேன்.*
*அன்பே, உம்மை நான் என்று காண்பேன்?*
*அன்பெந்தன் நெஞ்சத்தில் பொங்கிடுதே!*
*மாயமாம் உலகை விட்டு நான் சென்று*
*மகிமை அடைய வாஞ்சிக்கிறேன்!*

## 8. கலிலேயாவிலுள்ள மலையில் பதினொருவருக்கும் 500 விசுவாசிகளுக்கும் காட்சி

மத்தேயு 28:16-20, ''பதினொரு சீடரும், கலிலேயாவில் இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டனர்; சிலரோ சந்தேகப்பட்டனர். அப்பொழுது இயேசு அருகில் வந்து, அவர்களைப் பார்த்து, 'விண்ணிலும் மண்ணிலும் எல்லா *அதிகாரமும்* எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் புறப்பட்டுப்போய், அனைத்து மக்களினத்தவரையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்கு கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' என்றார்.''

1 கொரி 15:6, ''அதற்குப் பின்பு அவர் ஐந்நூறுக்கும் அதிகமான சகோதரருக்கும் ஒரே நேரத்தில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இன்றுவரை இருக்கிறார்கள்; சிலர் மட்டுமே இறந்துவிட்டனர்.''

இந்தத் தரிசனத்தின்போது ஆண்டவர் ***நற்செய்திப் பேராணையைத்*** தெளிவான வார்த்தைகளில் கொடுத்தார். தமது சீடரது விசுவாசம்



பூரணப்படவேண்டுமென்று அவர் காத்திருக்கவில்லை. இத்தனை முறை அவர் காட்சியளித்த பின்னரும், ''சிலர் சந்தேகப்பட்டனர்'' (மத் 28:17). இவர்களும் ''பதினொருவரில்'' உள்ளவர்கள்தான்! (வச 16). நாம் குறைவற்றவர்கள் என்பதால் அல்ல, நாம் குறைவுள்ளவர்கள் என்றாலும் தேவன் நம்மிடம் ஊழியப் பொறுப்புகளை ஒப்படைக்கிறார். அவர் நம்மை உண்மையுள்ளவர்கள் என்று ''கண்டு'' அல்ல, உண்மையுள்ளவர்கள் என்று ''கருதி'' ஊழியத்தில் நியமித்திருக்கிறார் (1 தீமோ 1:12). நாம் அவரை ஏமாற்றிவிடக்கூடாது.

திறந்த வாசல்கள் நிறைய இருந்தும் அகிலவுலகிலும் மிஷனரிப் பணிக்கு எதிர்ப்புகள் கூடிக்கொண்டேயிருக்கின்றன (1 கொரி 16:9). நமது தாய் நாடாம் இந்தியாவில் இது எவ்வளவு உண்மை! கிரஹாம் ஸ்டெயின்ஸ் (1941-1999) மற்றும் அவரது இரு மகன்களின் இரத்த சாட்சி மரணம் குறித்து 2019இல் வெளியான *Least of These* என்ற திரைப்படம் நமது கண்களைக் குளமாக்கிற்று. ஜனவரி 22 அன்றிரவு நடந்த சோகச் சம்பவம் போன்றது திரும்ப நடக்காது என்று யார் சொல்ல முடியும்? இதனால் நாம் நமது பணியை நிறுத்திட முடியுமா? முடியவே முடியாது! ஏனெனில், நமக்கு அதிகாரம் தந்துள்ளது அரசு அல்ல, அகிலாண்டவர்! ''எல்லா'' அதிகாரத்தையும் வைத்திருப்பது தளகர்த்தனாம் இயேசு! கர்த்தாதி கர்த்தர்! இராஜாதி இராஜா! கிறிஸ்தோரே, *'முன்னே செல்வோம்'* என்று பாடிவிட்டு முடமாய் உட்கார்ந்துவிட்டோமே! புறப்பட்டுப் போவோம், எழுந்து வாருங்கள்!

## 9. பதினொருவருக்கும் யாக்கோபுக்கும் காட்சி

மாற்கு 16:14, ''அதற்குப் பின்பு பதினொருவரும் பந்தியில் அமர்ந்திருந்தபோது அவர்களுக்கு இயேசு தோன்றினார். உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாததால் அவர்களது *அவிசுவாசத்தையும்* இருதயக் கடினத்தையும் அவர் கண்டித்தார்.''

லூக்கா 24:44-49, ''பின்பு இயேசு அவர்களைப் பார்த்து, 'மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைப்பற்றி எழுதியிருப்பவை யாவும் நிறைவேறவேண்டும்

என்று நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிவந்தவை இவையே' என்றார். அப்பொழுது வேத வாக்கியங்களைப் புரிந்துகொள் ளும்படி அவர்களது மனதை அவர் திறந்து, அவர்களைப் பார்த்து, 'மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேமில் தொடங்கி அனைத்து நாட்டினருக்கும் அவரது பெயரால் பிரசங்கிக்கப்படவேண்டும். இவற் றிற்கு நீங்கள் சாட்சிகளாயிருக்கிறீர்கள்; என் பிதா *வாக்குப்பண்ணி யதை*, இதோ, உங்களுக்கு அனுப்புகிறேன்; நீங்களோ உன்னதத்தி லிருந்து வரும் *வல்லமையினால்* ஆட்கொள்ளப்படும்வரை எருசலேம் நகரில் காத்திருங்கள்' என்றார்.''

ஆண்டவரது இந்த ஒன்பதாவது தரிசனத்தைக் குறிப்பிட்டே 1 கொரிந்தியர் 15:7இல், ''பின்பு யாக்கோபுக்கும், அப்போஸ்தலர் எல்லா ருக்கும் தரிசனமானார்'' என்று பவுல் எழுதினார்.

***அவிசுவாசத்தைக்*** கிறிஸ்து கண்டித்தார்; ஏனெனில் அது அதி மோசமானது. கானான் செல்ல எகிப்தை விட்ட இஸ்ரவேலரிடம் எத்த னையோ குறைபாடுகள் இருந்தன. ஆனால், அவற்றில் தலையோங் கியது அவிசுவாசமே (எபி 3:19). எவரையும் நரகத்திற்குத் தள்ளும் முடிவான பாவம் அவிசுவாசமே. பிறரது எந்தப் பாவமும் மன்னிக்கப்பட அவர்களுக்காய் ஜெபிக்கலாம்; ஆனால் ஜீவனுள்ள தேவனை விட்டு, விக்கிரகாராதனைக்குப் பின்னால் போக வழிவகுக்கும் அவிசுவாசம் எனும் பாவம் மன்னிக்கப்படும்படி ஜெபிக்க முடியாது (1 யோ 5:16,21; எபி 3:12). விசுவாசம் நம்மைக் கீழ்ப்படிதலுக்கு நடத்தும்; அவிசு வாசமோ கீழ்ப்படியாமைக்கு நடத்தும் (எபி 4:6,11). விசுவாசம் தேவ னைக் கனப்படுத்துகிறது; அவிசுவாசமோ அவரைக் கனவீனப்படுத்தி அவரை மட்டுப்படுத்துகிறது. இஸ்ரவேலரது உதடுகள் அடிக்கடி உதிர்த்த இரு வார்த்தைகள்: ''தேவனால் முடியுமா?'' (சங் 78:19,20,41). இதுவே தேவனுக்கு எரிச்சல் உண்டாக்கியது. நமது வாயிலிருந்து ''தேவனால் முடியும்'' என்ற வார்த்தைகளே வரட்டும். அப்படித்தானே திருமறையில் ''எழுதப்பட்டிருக்கிறது?'' தேவனால் கூடாத காரியம் எதுவுமுண்டோ? *''கூடாதது ஒன்றுமில்லையே, கூடாதது ஒன்றுமில் லையே''* என ஆர்ப்பரிப்போம்! நமது விசுவாசத்தின் அடித்தளமே ஆடிப்போகும் வேளைகள் நமது வாழ்வில் வரத்தான் செய்யும். எனவே தான், விசுவாசத்தைத் துவக்குகிறவரும் அதனை நிறைவு செய்கிற வருமாகிய இயேசுவிலிருந்து நமது கண்களைத் திருப்பவே கூடாது (எபி 12:1). பைபிளிலுள்ள ஒவ்வொரு திருவாக்கின்மீதும் விரல் வைத்து, ''ஆமென், ஆமென்'' என்று முழங்குங்கள்!



பாவமன்னிப்பின் செய்தியைப் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் எடுத்துச் செல்லவேண்டிய அவசரம் இருந்தாலும், ''உன்னதத்திலிருந்து வரும் ***வல்லமையினால்''*** சீடர்கள் ஆட்கொள்ளப்படும்வரை அவர் கள் வெளியே புறப்பட்டுச் செல்ல ஆண்டவர் அனுமதிக்கவில்லை (லூக் 24:49). இன்றோ, ஓர் ஆள்தத்துவத்தில் பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகிற்குள் ஏற்கனவே வந்துவிட்டதால், அவர் பரலோகத்திலிருந்து வரவேண்டுமென்று நாம் காத்திருக்க அவசியமில்லை. மாறாக, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட நிச்சயம் கிடைக்கும்வரை மறுபடி பிறந்த ஒவ்வொருவரும் இறைப்பிரசன்னத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும் (எபே 5:18). ''நான் நிரப்பப்பட்டுவிட்டேன்'' என்ற நிச்சயம் எவ்விதச் சந்தேகமுமின்றி இருதயத்தில் கிடைப்பதே ஆவியின் நிறைவுக்கு மறுக்க முடியாத நிரூபணம். நமக்கு மாதிரியாகவே நமதாண்டவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையிலேயே ஊழியம் செய்தார் (அப் 10:38; 1:8). நாம் சாட்சி பகரும்போது நம்மைப் பலப்படுத்தவே ஆவி யானவர் நமக்குத் துணைநிற்கிறார் (5:32).

## 10. ஒலிவ மலையில் பதினொருவருக்குக் காட்சி

லூக்கா 24:50-53, ''பின்பு பெத்தானியா வரை இயேசு அவர்களை அழைத்துக்கொண்டுபோய், தமது கைகளை உயர்த்தி, அவர்களை *ஆசீர்வதித்தார்*. அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த மகிழ்ச்சியோடு எருசலேமுக்குத் திரும்பி வந்து, தினமும் தேவாலயத்தில் தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண் டிருந்தார்கள். ஆமென்.''

மாற்கு 16:19, ‘‘இவ்விதம் கர்த்தர் அவர்களுடன் பேசிய பின்னர், பரலோகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு, *தேவனது வலது பக்கத்தில் உட்கார்ந்தார்.’’*

அப்போஸ்தலர் 1:1-3, ‘‘தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினால் கட்டளையிட்ட பின்னர், அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரை அவர் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கிய எல்லாவற்றையும் குறித்து, எனது முதலாம் நூலில் நான் எழுதினேன். அவர் பாடுபட்ட பின்பு, *நாற்பது நாட்களாக* அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, இறையரசுக் கடுத்தவற்றை அவர்களுடன் பேசி, பல தெளிவான சான்றுகளால் அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராய்க் காண்பித்தார்.’’

அப்போஸ்தலர் 1:9-12, ‘‘இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது, உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; மேகம் ஒன்று அவரை எடுத்துச்சென்று அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. அவர் செல்லும்போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அப்போது வெண்ணுடை அணிந்த இருவர் தோன்றி, ‘கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசுவானவர் எவ்விதம் உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்’ என்றனர். அப்பொழுது அவர்கள் ஒலிவ மலையிலிருந்து எருசலேமிற்குத் திரும்பினர்.’’

உன்னதமேறும்பொழுது நமதாண்டவர் காட்டிய பாவனை பரவசமளிப்பதாயிருக்கிறது. ‘‘அவர் தமது கைகளை உயர்த்திச் சீடர்களை *ஆசீர்வதித்தார்’’* (லூக் 24:50). விரிக்கப்பட்ட செட்டைகளுடன் ஒரு கழுகு அல்லது தேவதூதன் பறப்பதுபோல் அவர் உயரே சென்றார் எனக் கற்பனை செய்கிறேன்! தேவப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து அருளும் உன்னத ***ஆசீர்வாதங்களையே*** இது குறிப்பிடுகிறது. ‘‘தேவனது வலது பக்கத்தில்’’ கிறிஸ்து அமர்ந்தார் (மாற் 16:19). அனைத்து ஆசீர்வாதங்களும் நமதாகும்படி நாமும் அவருடன்



உன்னதங்களில் உட்காரவைக்கப்பட்டிருக்கிறோம் (எபே 1:3). கிறிஸ்து பரமேறியதால் நமக்குக் கிட்டிய ஆசிகள் எண்ணிலடங்கா. ‘‘இறைமக்களுக்கு அவர் அளிக்கும் உரிமைப்பேறு எத்துணை மாட்சிமிக்கது என்றும், அவர்மீது விசுவாசம் கொண்டுள்ள நம்மிடம் செயலாற்றும் அவரது வல்லமை எத்துணை ஒப்புயர்வு அற்றது என்பதனையும் அறிந்துகொள்ள நமது அகக்கண்கள் திறக்கப்படும்படி’’ நமக்காகவும் உடன் விசுவாசிகளுக்காகவும் தவறாது ஜெபிக்கவேண்டும் (எபே 1:18,19). கிறிஸ்துவைத் தேவன் எழுப்பி, தமது வலப்பக்கத்தில் அவரை அமர வைத்ததாலேயே இந்த ஆசிகளெல்லாம் நமக்குச் சொந்தமாயின (வச 21). கிறிஸ்துவானவர் இப்பொழுது உட்கார்ந்திருக்கும் உன்னதங்களிலுள்ள ஆசிகள்மீது கண்களைப் பதிக்காமல், உலகக் காரியங்களிலேயே நாம் உழன்றுகொண்டிருந்தால் நமது பார்வை மங்கிப் போகும் (கொலோ 3:1,2). உன்னதமேறிய பின்னர் பிதாவானவரிடமிருந்து கிறிஸ்து நமக்காகப் பெற்றுக்கொண்டதாலேயே பரிசுத்த ஆவியானவரும் அவரது ***வரங்களும்*** நமதாயின (எபே 4:7-11). இதைக் குறித்து அப்போஸ்தலன் பேதுருவுக்குக் கிடைத்த வெளிப்பாடும் தெளிவும் அபாரம்: அப் 2:33, ‘‘இயேசுவானவர் தேவனது வலது கரத்தினால் உயர்த்தப்பட்டு, பிதாவானவர் அருளிய வாக்கின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது பார்க்கிறதும் கேட்கிறதுமான இதனைப் பொழிந்தருளினார்.’’ கிறிஸ்து பரமேறியதைத் தொடர்ந்து, சீடர்கள் துதியிலும் தொழுகையிலும் எருசலேம் தேவாலயத்தில் பத்து நாட்கள் செலவிட்டனர் (லூக் 24:52,53). ஞா. சாமுவேல் ஐயரவர்களின் கீர்த்தனை காலத்தால் அழியாதது —

*மகிழ், மகிழ், மந்தையே, நீ; அல்லேலூயா!*
*பரன் மைந்தன் பரமேறினார், அல்லேலூயா!*

*வானமெல்லாம் நிரம்ப மனுஷ மைந்தன்*
*எல்லா வானங்கள் மேலேறினார், அல்லேலூயா!*
*தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவராயினார்,*
*ஞானமுடன் பாடுங்கள், அல்லேலூயா, இன்று!*

*தந்தை வலப்பாகத்தில் சத்திய கிறிஸ்து*
*எங்கள் சத்துருக்கள் மேற்சிறந்தார், அல்லேலூயா!*
*சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெபிப்பார்;*
*மந்தையே, உந்தனுக்காய், அல்லேலூயா, இன்று!*

உயிர்த்தெழுதலுக்கும் உன்னதமேறுதலுக்கும் இடைப்பட்ட 40 நாட்களில் நமதாண்டவர் கொடுத்த 10 தரிசனங்களிலிருந்து நாம் இக்கட்டுரையில் கற்றவற்றை ***இறையரசு வாழ்வுக்கு 10 பாடங்கள்*** என இங்கு வரிசைப்படுத்துவோம் —

1. இறையரசில் குடியுரிமை என்பது தேவனது கிருபையின் அடிப்படையில் மட்டுமே தரப்படும். தேவப்பிள்ளைகளாகிய நம்முடன் நமது அண்ணனாகக் கிறிஸ்து தம்மை அடையாளப் படுத்திக்கொள்ளுதல் நமது அறிவுக்கு எட்டாதது.
2. யூதர் நடுவில் ஆணாதிக்கம் ஓங்கியிருந்த அக்காலத்தில் பெண்டிரைக் கிறிஸ்து உயர் மதிப்புடன் நடத்தினார். கர்த்தருக்குள், பெண்ணில்லாமல் ஆணில்லை, ஆணில்லாமல் பெண்ணில்லை.
3. இறையரசின் வாழ்விற்கான சட்ட நூல் திருவிவிலியமே. அனுதின தியானத்தையும் சிரமமெடுத்து அதனை ஆராய்ந்து படிப்பதையும் அசட்டை செய்தால் வளர மாட்டோம், முதிர்ச்சியடைய மாட்டோம்.
4. தேவனது புகழை அறிவிக்க இறைமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாம். இக்குழுவிலிருந்து குறிப்பிட்ட, சிறப்பான, சில வேலைகளுக்காய்த் தேவன் சிலரைத் தெரிந்தெடுக் கிறார். அவரது தெரிந்தெடுப்பைக் கேள்வி கேட்க முடியாது.
5. இறையரசின் அடிப்படைத் தன்மையே சமாதானம்தான் (ரோ 14:17). கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஒப்புரவாகும்படி மக்களை அழைத்துவரும் சமாதானத் தூதுவர்களாகவே இறையரசுக் குடி மக்கள் செயல்படவேண்டும்.
6. இறையரசு வாழ்வு என்பது பார்வை அல்லது வேறெந்த புலனறி வினால் அல்ல, விசுவாசத்தினால் மட்டுமே சாத்தியம். துவக்கம் முதல் முடிவு வரை இப்படித்தான். உணர்வுகள் எதுவாயினும் அவை அடுத்துதான்.
7. தங்களது இராஜாவின் மீதுள்ள அன்பையும் பற்றையும் பாதிக்கும் எதற்கும் இறையரசுக் குடிமக்கள் இடந்தரக்கூடாது. இயேசுவில் நாம் அன்புகூரும் அளவுக்குத்தான் நாம் பிறருக்குப் பயன்படுவோம்.
8. சேனைகளின் தளபதியாகிய கிறிஸ்துவின் பேராணை நமக்குத் தரப்பட்டிருப்பதாலேயே கட்டாயமாக நாம் மிஷனரிப்பணியில் ஈடுபட்டுள்ளோம் (2 தீமோ 4:1,2). ஆடவர், பெண்டிர் யாவரையும் சந்திக்கவேண்டும் என்று நமக்குத் தரப்பட்டுள்ள கட்டளையே நமக்கு உந்துவிசை.
9. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இல்லாது நாம் இயேசு ராஜாவுக்குச் சாட்சிபகர முயலக்கூடாது. இருட்டுச் சக்திகளின் ஆதிக்கத்தில் அடைபட்டுக் கிடப்போரைக் கிறிஸ்துவுக்காய் விடு விக்கும் பணியென்பது ஓர் ஆன்மீகப் போர் (கொலோ 1:13).
10. நாம் கிறிஸ்துவுடன் இறந்தோம்; அவருடன் புதைக்கப்பட்டோம்; அவருடன் எழுப்பப்பட்டோம்; அவருடன் உன்னதங்களில் அமர்த் தப்பட்டுள்ளோம். கிறிஸ்துவுக்குள் நாம் இருப்பதாலேயே அனைத்து ஆன்மீக ஆசீர்வாதங்களும் நமதாகின்றன. அவரது நித்திய அரசில் என்றென்றுமாய் அவருடன் அரசாளுவதற்காக அவரது மறு வருகையை எதிர்நோக்கியிருக்கிறோம் (வெளி 3:21; 22:5ஆ).

*குதூகலம் நிறைந்த நன்னாள் நடுவானில் மின்னிடுமே,*
*இதுவரை இருந்த துன்பமில்லை, இனி என்றுமே ஆனந்தம்!*

# 19

# முதலாம் வருகையும் இரண்டாம் வருகையும்

## First Coming & Second Coming

பாரம்பரியக் கிறிஸ்தவத்தில் அதிகமாய்க் கொண்டாடப்படும் பண்டிகை கிறிஸ்துமஸ்தான். அது கிறிஸ்துவின் முதலாம் வருகையைப் பற்றியது. மனித சரித்திரத்தில் இது நிகரற்ற சம்பவம் என்பது மறுக்க முடியாதது. கடவுளது தீர்க்கதரிசன நாட்காட்டியில் அடுத்து நிகழவிருக்கும் அதிமுக்கிய சம்பவம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே. கிறிஸ்துவின் பூவுலக வாழ்வைச் சித்தரிக்கும் நான்கு சுவிசேஷங்களில் மத்தேயு, லூக்கா ஆகிய இரண்டு மட்டுமே கிறிஸ்துவின் பிறப்பை விவரிக்கின்றன. ஆனால் அவரது இரண்டாம் வருகையோ நான்கு சுவிசேஷங்களிலும் விரிவாய் எழுதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மத்தேயு 24,25; மாற்கு 13; லூக்கா 21; யோவான் 14:1-3 ஆகிய பகுதிகளைப் பாருங்கள். அது மட்டுமல்ல, நடபடிகளிலோ நிருபங்களிலோ கிறிஸ்துமஸ் குறித்த தகவல்கள் எதுவுமில்லை; இப்புத்தகங்கள் எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் மறு வருகை குறித்து எழுதப்பட்டவையோ ஏராளம். திருமறையில் முதல் வருகை குறித்து ஏறத்தாழ 100 தீர்க்கதரிசனங்களும், மறு வருகை குறித்தோ ஏறத்தாழ 300 தீர்க்கதரிசனங்களும் காணப்படுகின்றன. இப்படியிருப்பதால்



கிறிஸ்துமஸ் முக்கியமற்றது என்று சொல்லவில்லை; மாறாக, சரித்திரத்தின் இந்தக் காலக்கட்டத்தில் எதைக் குறித்து நாம் கூடுதலாகச் சிந்திக்கவேண்டுமென்று புரிவது அவசியம்.

### **கிறிஸ்துமஸ் பாடல் பவனி** (Carols)

நவம்பரிலேயே பாடல் பவனிகள் துவங்கிவிடுகின்றன! முந்திய பறவைக்குத்தான் புழு என்பது போல் இல்லங்களுக்கு எந்தக் குழு முதலாவது செல்லுகிறதென்று போட்டாபோட்டி! ஐயகோ, இந்த அளவுக்குக் கிறிஸ்துமஸ் பவனிகள் வணிகமயமாகிவிட்டன. கிறிஸ்து பிறந்தாரென்று சொல்லுவதற்காய்ப் படுக்கையில் தூங்கிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களை எழுப்புவானேன்? அதுதான் ஆண்டாண்டு காலமாய் அவர்களுக்குத் தெரியுமே! இது அர்த்தமற்ற சடங்கு. அப்படியே நீங்கள் பாடல் பவனி செல்ல விரும்பினால், கிறிஸ்து நிச்சயம் சீக்கிரம் வருகிறார் என்று கிறிஸ்தவர்களுக்குச் சொல்லி, அவர்கள் ஆயத்தப்படத் துரிதப்படுத்துங்கள். இரண்டாம் வருகை குறித்த நல்ல பிரசுரங்களை அவர்களிடம் விட்டுச்சென்று அவர்கள் ஆயத்தப்பட உதவுங்கள். (*''உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?''* என்ற எனது 20-பக்கக் கைப்பிரதி இதற்குப் பொருத்தமாயிருக்கும். 20ஆம் அத்தியாம்) ஆதிக் கிறிஸ்தவர் பயன்படுத்திய *''மாரநாதா''* (= கர்த்தர் வருகிறார்) என்ற வாழ்த்துச் சொல்லால் வீடுகளிலிருப்போரை வாழ்த்துங்கள் (1 கொரி 16:22). கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளிலும் இந்த வாழ்த்துச் சொல்லை எழுதி அனுப்புங்கள்.

தேவதூதர்கள்தான் பவனிக்குழுவாய் முதலாவது சென்றவர்கள் (லூக் 2:9-14), மேய்ப்பர்கள் அடுத்த குழுவினர். அவர்கள் அந்த மகிழ்ச்சியான செய்தியை எங்கும் பரப்பினர் (வச 17). இந்த மேய்ப்பரை நாம் முதல் சுவிசேஷகர் எனலாம். கிறிஸ்தவரல்லாத நமது அயலகத்தாரைச் சந்திப்பதற்குக் கிறிஸ்துமஸ் காலம் நல்லதொரு வாய்ப்பாகும். இந்தப் பண்டிகை நாட்களை இதற்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொள்ள கிறிஸ்தோரை நான் ஊக்குவிக்கிறேன். பண்டிகைகளை மார்க்க பக்தியுள்ள இந்தியா மதிக்கிறது. ஆனால் ஒரு காரியம், கிறிஸ்தவரல்லாதோர் இல்லங்களுக்குச் செல்லும்போது காணிக்கை பெட்டி எடுத்துச் செல்லாதீர்கள்!

## தேவ தூதர்கள்

கிறிஸ்துமஸின்போது தூதர்கள் முக்கிய பங்கு வகித்தனர். தூதன் முதலாவது தோன்றியது மரியாளுக்கு; அது காபிரியேல் (லூக் 1:26). அடுத்து யோசேப்புக்கு; இங்கு தூதனின் பெயர் குறிப்பிடப்படவில்லை (மத் 1:20). அடுத்து மேய்ப்பருக்குத் தூதர் தோன்றினர் (லூக் 2:9-13). அடுத்தடுத்து யோசேப்புக்குத் தூதர் தோன்றினர் (மத் 2:13,19). பிசாசினால் கிறிஸ்து கடுமையாய்ச் சோதிக்கப்பட்டபின் தூதர் அவருக்குப் பணிவிடை செய்தனர் (மத் 4:11; மாற் 1:13). கெத்செமனே தோட்டத்தில் ஒரு தூதன் அவரைப் பலப்படுத்தினான் (லூக் 22:43).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தூதர் மறுபடியும் முக்கிய பங்கு வகிப்பர். காலத்தின் முடிவில் கதிர்களாகிய இறைமக்களைப் பதர்களாகிய பிசாசின் மக்களிடமிருந்து பிரிக்கும் அறுவடையாளராய்த் தூதர் செயல்படுவர் (மத் 13:37-40). தானதர்மச் செயல்களின் அடிப்படையில் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாய்ப் பிரிக்க மனுமகன் தமது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும்போது அவருடன் தூதர் இருப்பர் (மத் 25:31-33). சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதோரைத் தண்டிக்க ஆண்டவர் வானத்திலிருந்து வரும்போது வல்லமை பொருந்திய தூதர் அவருடனிருப்பர் (2 தெச 1:7,8). முத்திரைகளை உடைப்பது, எக்காளங்கள் ஊதுவது, வாதைகளை அனுப்புவது, மற்றும் கடவுளது கோபத்தின் கலசங்களை ஊற்றுவது ஆகியவற்றால் தேவனது நியாயத்தீர்ப்பை அளிப்பதில் தூதர் வகிக்கும் பங்கினை வெளி 7 முதல் 18 அத்தியாயங்களில் வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில், அவரை விசுவாசித்து நித்திய இரட்சிப்பைச் சுதந்தரிக்கவிருப்போருக்குப் ''பணிவிடை ஆவிகளாய்த்'' தூதர் செயலாற்றுவர் (எபி 1:14). அவர்கள் நமக்குக் காவலாளிகளாயிருக்கின்றனர் (சங் 34:7); குறிப்பாய் நமது பிள்ளைகளைக் காக்கின்றனர் (மத் 18:30). அவர்கள் நம்மை வழிநடத்துகின்றனர் (அப் 8:26;



10:3-6,22), நம்மை ஊக்குவிக்கின்றனர் (அப் 27:23-25), இக்கட்டுகளில் நமக்கு உதவுகின்றனர் (மத் 28:2; மாற் 16:3-5; அப் 5:19). நமது நற்செய்திப்பணியின் கனிகளில் அவர்கள் விண்ணில் மகிழுகின்றனர் (லூக் 15:10). நமது சபைக் கூடுகைகளில் பயபக்தியான ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று கவனிக்கின்றனர். பெண்கள் முக்காடிட்டுக்கொள்வதைப்பற்றிப் பேசும்போது பவுல் இதைக் குறிப்பிடுகிறான் (1 கொரி 11:10). ஏசாயாவின் தரிசனத்தில், ஆண்டவரை ஆராதிக்கும்போது, சேராபீன்கள் தங்கள் முகங்களையும் பாதங்களையும் மூடிக்கொண்டனர் (ஏசா 6:1-3). சபைத் தலைவர்கள் பாரபட்சத்துடன் நடந்துகொண்டால் தூதர் அதற்கெதிராய்ச் சாட்சியாயிருக்கின்றனர் (1 தீமோ 5:21). நமது விருந்தோம்பலைச் சோதித்துப் பார்க்கத் தூதர் சில வேளைகளில் அன்னியர்போல் வருகின்றனர் (எபி 13:2; ஆதி 18:1-19:1; யோபு 31:32). நாம் மரிக்கும்போது அவர்கள் நம்மைப் பரலோகத்திற்குச் சுமந்து செல்கின்றனர் (லூக் 16:22). சர்வ வல்ல ஆண்டவரை ஆராதிக்கப் பரம எருசலேமில் எண்ணிலடங்கா தூதருடன் நாம் சேர்ந்துகொள்வோம் (எபி 12:22; வெளி 5:11). இவ்வளவு மகிமையான பணிகள் தூதருக்கு இருப்பினும், பக்திப் பரவசத்தில் நாம் அவர்களைத் தொழுதுவிடக்கூடாது (கொலோ 2:18; வெளி 19:10; 22:8,9). சொல்லப்போனால், திருச்சபையாகிய நாமே விழுந்துபோன தூதர்களை நியாயந்தீர்ப்போம் (1 கொரி 6:3; 2 பேது 2:4). இவ்விதம் தூதர் நமக்குச் சிலாக்கியமாகவும் சவாலாகவும் இருக்கின்றனர்!

## குடும்பம்

குழந்தையாயிருந்து சிறுவனாகவும், பின்னர் வாலிபனாகவும் வளர்ந்து வந்த இயேசுவுக்கு மரியாளும் யோசேப்பும் ஆரோக்கியமான குடும்பச் சூழலை உருவாக்கித் தந்தனர். கிறிஸ்துமஸ் சரிதை முழுவதிலும் மரியாளின் தெய்வ பக்தியான அருங்குணங்கள் தெளிவாய்க் காணப்படுகின்றன. பரிசுத்த ஆவியினால் அவள் கருத்தரிப்பாளென்று தூதன் சொல்லியது அவளுக்குப் புரியாவிடினும், இறைவார்த்தையின்

மீதுள்ள விசுவாசத்தால் தாழ்மையுடன் அதற்கு அடிபணிந்தாள்: ''இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை! உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்!'' (லூக் 1:38). அவசரப்பட்டு எதையும் பேசிவிடாமல் காரியங்களை இருதயத்தில் வைத்துத் தியானிக்கும் நற்குணம் அவளுக்கிருந்தது (லூக் 2:19,51). முதிர்ந்த தேவப் பிள்ளைகளது சகவாசத்தை அவள் நாடினாள். தூதன் அவளை விட்டுப்போனதும் எலிசபெத்தைச் சந்திக்க அவள் ''தீவிரமாய்ப்'' புறப்பட்டுப் போனாளாம் (லூக் 1:39,40). ஒரு மூத்த தாய் போன்ற எலிசபெத்து இல்லற வாழ்வு, பிள்ளை வளர்ப்பு போன்றவற்றிற்கான உயரிய பாடங்களை மரியா ளுக்குச் சொல்லிக்கொடுத்திருப்பாள் (தீத் 2:4,5). மரியாளின் கீதத்தில், அப்பப்பா, எத்தனை சத்தியங்கள்! (லூக் 1:46-55). நிறைகர்ப்பிணி யாயிருந்தாலும், அரசு கட்டளைக்குக் கீழ்ப்படிந்து குடிமதிப்பெழுதத் தன் கணவனுடன் பயணித்தாள் (லூக் 2:1-6).

ஆன்மீகத்தில் மரியாளைவிட யோசேப்பு எவ்வளவும் குறைந்தவ ரல்ல. அவள் மணமாகுமுன்பே கருத்தரித்ததால், சட்டப்படி, அவர் அந்த நிச்சயத்தை முறித்திருக்கலாம் (உபா 24:1). அது அவளுக்கு சமுதாயத்தில் அவமானமாயிருந்திருக்கும் (மத் 1:19). எவ்வளவு கனிவான மனிதன் அவர், பாருங்கள்! பைபிள் அவரை ''நீதிமான்'' என்றழைக்கிறது! திருக்குழந்தையை அவள் பெற்றெடுக்கும்வரை அவளுடன் பாலுறவு வேண்டாமென்று அவரே தீர்மானித்துக்கொண் டார் (வச 25). ஆவியின் கனிகளில் கடைசியான, ஆனால் முக்கிய மான, தன்னடக்கத்திற்கு என்னே எடுத்துக்காட்டு (கலா 5:23)!

மரியாள், யோசேப்பு ஆகிய இருவரும் பரிசுத்த வேத எழுத்துக்களை அப்படியே கடைப்பிடித்தவர்கள் (லூக் 2:22,27,39,42). இவர்கள் இயேசுவின் இளமைப் பருவத்தில் அவருக்குத் திருவசனத்தை நேர மெடுத்துப் போதித்தனர் என்பது தெளிவு. பன்னிரண்டு வயதிலேயே தமது வசன அறிவினால் ஆலய வேதப் பண்டிதர்களை ''வியக்க'' வைத்தாரே (லூக் 2:46,47). அவருக்கு அவ்வளவு அபூர்வ அறிவும் ஞானமும் இருந்தும், தமது பெற்றோருக்குக் ''கீழ்ப்படிந்திருந்தார்'' (வச



51). அவர்களை எப்பொழுதும் அவர் மதிக்கத் தவறியதில்லை. சிலுவையில் வேதனை அனுபவித்த வேளையிலும் விதவையான (?) தமது தாய்க்குத் துணையை ஏற்படுத்தினாரே (யோ 19:25-27).

கடைசிக் காலத்தில் வாழும் பெற்றோர் பிள்ளைகளுக்கு இதோ வொரு செய்தி வருகிறது. பத்துக் கட்டளைகளில் ''வாக்குத்தத்தம்'' அடங்கியுள்ள ஒரே கட்டளை ஐந்தாவது: ''பூவுலகில் உன் வாழ்நாள் நீடித்திருக்க உன் தந்தையையும் தாயையும் கனம்பண்ணு'' (யாத் 20:12). எபேசியர் 6:1-3இல் அப்போஸ்தலன் பவுல் இதைக் குறிப் பிடுகிறார். ''சாபம்'' எனும் வார்த்தையோடு பழைய ஏற்பாடு முற்றுப் பெறுகிறது — மல் 4:5,6, ''இதோ, கர்த்தரது பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன் நான் உங்களிடம் தீர்க்கன் எலியாவை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் ***சாபத்தால்*** அடிக்காதபடி, அவன் தந்தையின் இதயங்களைப் பிள்ளைகளிடமும், பிள்ளைகளின் இதயங் களைத் தந்தையரிடமும் திருப்புவான்.'' பெற்றோர்-பிள்ளைகள் உறவுப் பிரச் னைகளைக் கடவுள் எவ்வளவு கண்டிப்பாய்ப் பார்க்கிறார்! மாற்றுக் களைக் கண்டுபிடித்து இந்த 5ஆம் கட்டளையைக் கலப்படம் செய்த அக்காலத்தினரை இயேசு வன்மையாய்க் கண்டித்தார் (மாற் 7:9-13). பவுல் முன்னறிவித்தபடி, ''பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை'' என்பது கடைசி நாட்களில் அதிகரிக்கும் (2 தீமோ 3:1,2; ரோ 1:30). அனைத்து அதிகாரங்களும் முடிவில் தமக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட பின்னரும் கிறிஸ்து தமது விண்தந்தைக்குக் கீழ்ப்பட்டிருப்பாராம் (1 கொரி 15:24-28).

தமது முதல் வருகையின்போது, ஒரு மணவீட்டில்தான் இயேசு தமது முதலாம் அடையாள அற்புதத்தைச் செய்தார். கிறிஸ்துமஸ் காலத்தில் நிறைய கிறிஸ்தவத் திருமணங்கள் நடக்கும்! கலியாணங்களிலெல் லாம் கலியாணம் ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்தான் (வெளி 19:7). திருச்சபையே அவரது மணமகளாயிருக்கும் (2 கொரி 11:2; எபே 5:25-27,32). இதுவே அவளது ஆயத்தக் காலம். இயேசு இப்பொழுது அவளைத் தமது வசனத்தினால் பரிசுத்தப்படுத்தி, தமது ஆவியின்

கனிகளால் அலங்கரிக்கிறார் (கலா 5:22,23). இதற்கு அவர் தமது ஊழியரைப் பயன்படுத்துகிறார் (எபே 4:11-13). அவரது வருகையின் போது அவளுக்குப் ''பிரகாசமான மெல்லிய வெண்ணாடை'' கொடுக்கப்படும் (வெளி 19:8). அந்த ஆடை ''எந்தச் சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவு வெள்ளை வெளேரென ஒளி வீசும்'' (மாற் 9:3; வெளி 3:4,5). இச்சித்திரத்தை மனதிற்கொண்டு, கணவன்மார் தங்களது மனைவியரிடம் ''பாசமாய்'' இருக்கவேண்டும்; மனைவியர் தங்கள் கணவன்மாரிடம் ''பயபக்தியாய்'' இருக்கவேண்டும் (எபே 5:22,23). பரலோகில் கணவரும் மனைவியரும் தம்பதியராய் அல்ல, தூதர் போலிருப்பர் (மத் 22:30).

## திருமுழுக்கு

இயேசுவின் வாழ்வில் 12 முதல் 30 வயது வரையுள்ள காலத்தைப் பற்றிய விபரங்கள் நான்கு சுவிசேஷங்கள் எதிலுமில்லை (லூக் 3:23). இந்த 18 ஆண்டுக் காலத்தைப் பற்றிய ஒரே வாக்கியம்: லூக் 2:52, ''இயேசுவானவர் ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும், தேவ கிருபையிலும், மனிதர் தயவிலும் அதிகமதிகமாய்ப் பெருகினார்.'' சமநிலை வளர்ச்சி: அறிவாற்றல், உடல் வளர்ச்சி, ஆன்மீகம், சமூக வாழ்வு. அவர் தமது தந்தையின் தச்சுப் பட்டறையில் வேலை செய்தார் என்பது தெளிவு (மத் 13:55; மாற் 6:3). அவரது திருமுழுக்கில் அவரது வெளி ஊழியம் துவங்கிற்று (மத் 3:13). திருமுழுக்கினன் யோவானால் திருமுழுக்கு பெற, அவர் ஏறத்தாழ 70 மைல் பயணித்து, கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து யோர்தானுக்கு அருகிலுள்ள பெத்தாபராவிற்கு (பெத்தானி) வந்தார் (மாற் 1:9; யோ 1:28).

திருமுழுக்கு பெற இயேசுவுக்கு என்ன அவசியம்? யோவானிடம் திருமுழுக்கு பெற்ற மற்றவர்போல் அறிக்கையிட அவரிடம் பாவம் ஏதுமில்லை (மத் 3:6). பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்போல் மனந்திரும்பவும் அவரிடம் பாவம் ஏதுமில்லை (அப் 2:38). ஆம், இவ்வுலகில் திருமுழுக்கு பெறத் தேவையில்லாத ஒரு நபருண்டானால், அது இயேசு மட்டுமே! அப்படியானால் அவர் திருமுழுக்கு பெற



விரும்பியதேன்? தமது பரம பிதாவுக்குக் ***''கீழ்ப்படிவதற்காகவே!''*** மக்களுக்குத் திருமுழுக்கு கொடுக்கும்படி யோவானை அனுப்பியது இயேசுவின் பிதாவானவர்தானே (யோ 1:33). குமாரனின் கீழ்ப்படிதலில் அவ்வளவாய் அகமகிழ்ந்த பிதாவானவர் வானகத்தை உடனே திறந்து, ''இவரே என் ***அன்பார்ந்த*** மைந்தர்; இவர் பொருட்டு நான் ***பூரிப்படைகிறேன்''*** என அறிவித்தார் (மத் 3:16,17). அடுத்த முறை பிதாவானவர் இவ்விதம் அறிக்கையிட்டது மறுரூப மலையில் (மத் 17:5). துவக்க முதல் முடிவு வரை இயேசுவின் வாழ்க்கையே பிதாவுக்குக் கீழ்ப்படிதல் என்றிருந்தது. ''அவர் இறப்புவரை கீழ்ப்படிந்திருந்தார்'' (பிலி 2:8). ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் பாவிகளாக்கப்பட்டதுபோல, கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோ 5:19).

விண்தந்தையானவர் மனந்திரும்புவோரைத் திருமுழுக்காட்டும்படி யோவானைப் பணித்தது போல, விசுவாசிப்போரைத் திருமுழுக்காட்டும்படி இயேசு தமது சீடருக்குக் கட்டளையிட்டார் (மத் 28:19; மாற் 16:16). சுவிசேஷத்தின்மீது விசுவாசம் என்பதோடு கீழ்ப்படிதலை இணைக்காதிருப்பதே நமது செய்திகளில் கோளாறு. விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் இணைத்துப் பேசும் புதிய ஏற்பாட்டு வசனங்கள் ஏராளம் (அப் 6:7; ரோ 1:5; 16:26; 1 பேது 1:2; 2:7). தேவனுக்குக் ''கீழ்ப்படிகிறவர்களுக்கே'' நித்திய ஜீவன் வாக்களிக்கப்பட்டுள்ளது (எபி 5:9). இறைமக்கள் ''கீழ்ப்படிதலின் பிள்ளைகள்'' என்றும் மற்றவர்கள் ''கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்'' என்றும் அழைக்கப்படுகின்றனர் (எபே 2:2; 5:6; கொலோ 3:6). கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சுவிசேஷத்திற்குக் ''கீழ்ப்படியாதவர்'' மீது நியாயத்தீர்ப்பின் அக்கினி விழும் (2 தெச 1:7,8). ''கீழ்ப்படிதலுக்கு ஓர் அடையாளம்'' என்று ஞானஸ்நானம் எடுத்துரைக்கப்படும்போதெல்லாம் திரளாய் மக்கள் முன்வருவதைத் திரும்பத் திரும்ப நான் பார்த்திருக்கிறேன். கீழ்ப்படிதல் இல்லாத விசுவாசம் செத்தது! நண்பரே, இன்னும் தள்ளிப்போடாமல், உடனே திருமுழுக்கு பெறுங்கள் (அப் 22:16).

கீழ்ப்படியாதோர்மீது நியாயத்தீர்ப்பு என்று பேசுகையில், தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பேதுரு ஓர் எடுத்துக்காட்டாய்க் கையாளுகிறார் (1 பேது 3:20-22). தமது வாழ்க்கை முழுவதும் இயேசுவானவர் தமது பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்ததால், அவரது இரண்டாம் வருகையின் போது யாவரும் அவருக்குமுன் முழங்காலிடுவர் (பிலி 2:8-11). கீழ்ப்படிவோர் அவரோடு அரசாளுவர் (வெளி 3:20,21).

## சாத்தான்

திருமுழுக்கைத் தொடர்ந்து ''பிசாசினால் சோதிக்கப்பட ஆவி யானவரால் இயேசு வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்'' (மத் 4:1). அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார்; ஆனால் ஒருபோதும் அவர் சோதனையில் விழவில்லை (எபி 4:15). தொட்டில் முதல் தொழுமரம் வரை கிறிஸ்துவைப் பிசாசு விட்டா னில்லை (லூக் 4:13); ஆனால் அவர் வெளியுலகப்பணியைத் துவங் கியபோது போராட்டம் அதிகரித்தது. மக்களுக்குப் பணியாற்றும்போது அவர் பொல்லாத ஆவிகளோடு வெகுவாய் இடைபட்டார் (மத் 8:28-34; 9:32-34; 12:22; 15:21-28; மாற் 1:23-28; 9:14-29; லூக் 13:10-17). அவரது முதல் வருகையைக் குறிப்பிட்டு அப்போஸ்தலன் யோவான் எழுதியது: ''பிசாசின் செயல்களை அழிக்கும்படிக்கே இறைமகன் வெளிப்பட்டார்'' (1 யோ 3:8).

''பிசாசை'' அல்ல, அவனது ''செயல்களை'' அழிக்கவே இயேசு வெளிப்பட்டார் என்பதைக் கவனிக்க (1 யோ 3:8). சிலுவையில்கூட, இயேசு பிசாசை ''அழிக்க''வில்லை; அந்தகார சக்திகளை ''உரிந்து கொண்டார்'' (= பிடுங்கிக்கொண்டார்) (கொலோ 2:15). அவர் பிசாசையே அழித்திருப்பாரெனில், இன்று ஆன்மீகப் போராட்டம் குறித்துப் பேசுவானேன்? (எபே 6:12). என்றும்போல் பிசாசு விறு விறுப்பாயிருக்கிறான். அவன் மக்களை வஞ்சிக்கிறான் (அப் 5:3); அவர்களைக் குருடாக்குகிறான் (2 கொரி 4:4); இறைப்பணியாளரைத் தடுக்கிறான் (2 கொரி 12:7; 1 தெச 2:18); மக்களை விழுங்கச் சுற்றித்



திரிகிறான் (1 பேது 5:8); அவிசுவாசிகளைத் தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கிறான் (அப் 26:18); விசுவாசிகளைச் சோதிக்கிறான் (1 கொரி 7:5); கீழ்ப்படியாமைக்குள் மக்களை அடக்கிவைக்கிறான் (எபே 2:2); தனது பிரதிநிதிகள் மூலம் துர்வுபதேசத்தைப் பரப்புகிறான் (1 தீமோ 4:1); விசுவாசிகளை வஞ்சித்து வசப்படுத்துகிறான் (2 தீமோ 2:26); உலகைத் தனது ஆளுகைக்குள் வைத்திருக்கிறான் (1 யோ 5:19); ஒளியின் தூதன்போல் கிறிஸ்தவர்களை வஞ்சிக்கிறான் (2 கொரி 11:2,3,13-15).

தமது முதலாம் வருகையின்போது இயேசு பிசாசை அதட்டினார், பொல்லாத ஆவிகளைத் துரத்தினார்; ஆனால் ஒரு முறைகூட அவ னைச் ''சபிக்கவோ'' ''கட்டவோ'' இல்லை. தமது சீடருக்கு ஜெபிக் கக் கற்பித்ததெல்லாம், ''எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாது, தீயவனிடமிருந்து எங்களை *விடுவியும்''* என்பதே (மத் 6:13). இன்று பிசாசை நாம் என்னவெல்லாம் செய்யலாம் என்று விவிலியம் தெளி வாய் போதித்துள்ளது: அவனுக்கு எதிர்த்து நிற்கலாம் (யாக் 4:7); அவனை விரட்டலாம் (மத் 10:1,8); அவனுக்கு இடம் தர மறுக்கலாம் (எபே 4:27); அவனுக்கெதிராய் விழிப்புடனிருக்கலாம் (1 பேது 5:8). ஆனால் அவனை இன்று நாம் ''கட்ட'' (bind) முடியாது; ஆயிரமாண்டு ஆட்சியின்போது ஒரு தூதன் ஒரு பெரிய சங்கிலி கொண்டு அவனைக் கட்டுவான் (வெளி 20:1-3). பிசாசை இன்று நாம் உலகிலிருந்து ''வெளியேற்ற'' (banish) முடியாது; ஆயிரமாண்டு ஆட்சிக்குப் பின்னர் தான், சாத்தான் பாதாளத்திற்குள் தள்ளப்படுவான் (வெளி 20:7,10). அவனை இன்று நாம் ''எரிக்க'' (burn) முடியாது; தமது வருகையின் போது கிறிஸ்து அதைச் செய்வார் (2 தெச 2:8). பிசாசை இன்று நாம் ''தூஷிக்கவோ'' (blaspheme) சபிக்கவோ கூடாது; தேவதூதரும், மிகா வேலும்கூட, அதைச் செய்யத் துணியார்கள் (2 பேது 2:10ஆ,11; யூதா 8-10). திருமறையின் வரம்புகளை மீறாதீர். சாத்தானைக் ''கட்டும்'' திருமறைக்குப் புறம்பான பழக்கத்தில் சில பிரசங்கிமார் இருக்கின்றனர்; அதனால் மக்களும் தவறாய் வழிநடத்தப்படுகின்றனர். இயேசு சிலு வையிலறையப்பட்டபோது பழைய சர்ப்பம் அவரது ''குதிங்காலை''

நசுக்கிற்று; அவரது இரண்டாம் வருகையிலோ, இயேசு அதின் ''தலையை'' நசுக்குவார் (ஆதி 3:15ஆ). எனவேதான் ரோம் நகர்க் கிறிஸ்தவர்க்கு அப்போஸ்தலன் பவுல் இவ்விதம் எழுதினார்: ''சமாதானத்தின் தேவன் ***சீக்கிரம்*** சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போடு வார்'' (ரோ 16:20). ''சீக்கிரம்'' என்று பவுல் குறிப்பிட்டது இரண்டாம் வருகையாகும்; ஏனெனில் ஆதிக் கிறிஸ்தவர் கிறிஸ்துவின் வருகையை நொடிதோறும் எதிர்நோக்கி வாழ்ந்தனர்!

## வல்லமை

''உன்னதமானவரின் வல்லமை'' மரியாள்மீது நிழலிட்டபோது இயேசு அவளில் கருவானார் (லூக் 1:35). அவர் திருமுழுக்கு பெற்றுத் தண்ணீரிலிருந்து கரையேறியபோது புறா போல தூயாவியானவர் அவர் மீது வந்திறங்கினார் (மத் 3:16). 40-நாள் உபவாசத்தைத் தொடர்ந்து அவர் துவங்கிய ஊழியம் வல்லமை நிறைந்ததாயிருந்தது. அதைச் சரித்திராசிரியன் லூக்கா இவ்விதம் குறிப்பிடுகிறார்: லூக் 4:14, ''ஆவியானவரது பலத்தினால் இயேசு (வனாந்தரத்திலிருந்து) திரும்பினார்.'' அவரது ஊழியத்தை லூக்கா இரத்தினமாய்ச் சுருக்கினார்: அப் 10:38, ''நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவரோடு இருந்ததால் அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்.''

அவரது பிரசங்கம் வல்லமையோடும் அதிகாரத்தோடும் இருந்தது (லூக் 4:18,19,32). அவர் உபதேசித்துக்கொண்டிருக்கையில், ''நோயாளிகளைக் குணமாக்கும் கர்த்தருடைய வல்லமை வெளிப்பட்டது'' (லூக் 5:17). அவரது அற்புதச் செயல்களைக் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டு, ''மனிதருக்கு இவ்வித அதிகாரம் கொடுத்த தேவனை மகிமைப்படுத்தினர்'' (மத் 9:8). அசுத்த ஆவிகளைத் துரத்தவும் நோயாளிகளைக் குணமாக்கவும் அவர் தமது சீடருக்கு அதிகாரமும் வல்லமையும் கொடுத்தார் (மத் 9:1). அவர் மரித்தபோதும், அசாதாரண விதத்தில் வல்லமை வெளிப்பட்டது. தேவாலயத்தின் தொங்குதிரை



மேலிருந்து கீழாகக் கிழிந்தது; பூமி அதிர்ந்தது; குன்றுகள் பிளந்தன; பல கல்லறைகள் திறந்தன (மத் 27:50-52). அவரது உயிர்த்தெழுதலில் வெளிப்பட்ட வல்லமை நிகரற்றது (எபே 1:19,20). கர்த்தராகிய இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பிய தேவன் அதே வல்லமையினால் நம்மையும் எழுப்புவார் (1 கொரி 6:14; 2 கொரி 4:14; 1 தெச 4:14). எனவேதான், பவுலின் வாழ்க்கையின் ஒரே நாட்டம் கிறிஸ்துவையும் அவரது ''உயிர்த்தெழுதலின் வல்லமையையும்'' அறிவதாயிருந்தது (பிலி 3:10).

கிறிஸ்துவின் முதல் வருகையிலேயே தேவ வல்லமை இவ்வளவு வெளிப்பட்டிருக்குமானால் அவரது இரண்டாம் வருகையில் இன்னும் எவ்வளவு அதிகமாயிருக்கும்! கிறிஸ்துவானவரே சொன்னதைக் கேளுங்கள்: மத் 24:30, ''மனுமகன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மீது வருகிறதைப் பூவுலகின் அனைத்து இனத்தாரும் காணுவர்'' (மத் 26:64; மாற் 14:62; லூக் 21:27). ''இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனது இராஜ்யமும், அவரது கிறிஸ்துவின் அதிகாரமும் வந்துவிட்டன; நமது சகோதரர்மீது குற்றம் சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்'' என்று வானத்திலே ஒரு முழக்கம் உண்டாகும் (வெளி 12:10). அல்லேலூயா!

இரு வருகைகளுக்கு இடையில் வாழும் நாம் அதே வல்லமையை நமது வாழ்விலும் பணியிலும் அனுபவிக்கலாம். ''கடவுள் நமக்குப் பயமுள்ள ஆவியை அல்ல, பலமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (2 தீமோ 1:7). கிறிஸ்துவின் பரமேறுதலுக்குப் பின்னர் பரிசுத்த ஆவியானவரின் ''முன்மாரி'' பொழிந்தது (அப் 2:33; எபே 4:8); கிறிஸ்துவின் மறு வருகைக்கு முன்னர் ஆவியானவரின் ''பின்மாரியை'' எதிர்பார்க்கலாம் (ஓசி 6:3; யோவேல் 2:23; அப் 2:17-21). தேவனது வல்லமை காணப்படாத நமது நிகழ்ச்சிகளும் திட்டங்களும் அர்த்தமற்றவை. வல்லமையற்ற கிறிஸ்தவத்திற்கெதிராய் பைபிள் நம்மை எச்சரிக்கிறது (2 தீமோ 3:5). ''உன்னதத்திலிருந்து வரும் பலத்தால்'' ஆட்கொள்ளப்படும்வரை கர்த்தருக்குமுன் அடிக்கடி காத்திருங்கள் (லூக் 24:49; ஏசா 40:31). தேவ வல்லமைக்கு மாற்றே கிடையாது.

### பாடுகள்

''மிகுந்த சந்தோஷமுண்டாக்கும் நற்செய்தி'' என்று கிறிஸ்துமஸ் செய்தி மேய்ப்பருக்கு அறிவிக்கப்பட்டது (லூக் 2:10). ஆனால் அவரது பிறப்பையடுத்த 8ஆம் நாளில் நெஞ்சைப் பிளக்கும் ஒரு கூற்று மரியாளுக்குச் சொல்லப்பட்டது: லூக் 2:34,35, ''இக்குழந்தை அநேகரால் விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. உன் ஆன்மாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்.'' ஆசாரியன் கூறும் ஆசீர்வாதத்தில் இப்படி ஒரு கூற்று வருமானால் அந்தத் தாய் என்ன நினைத்திருப்பாள்? இயேசுவின் வாழ்க்கை துவக்க முதல் முடிவு வரை பாடுகள் நிறைந்ததாயிருந்தது —

- ☐ வசதியாக ஒரு வீட்டிலோ மருத்துவமனையிலோ, அல்லது ஒரு விடுதியில்கூட, பிறக்கும் சிலாக்கியம் அவருக்குக் கிட்டவில்லை; மாட்டுத் தொழுவத்தில்தான் பிறந்தார் (லூக் 2:7).
- ☐ அவரது கன்னிப் பிறப்பு மறைமுகமாய்த் தாக்கப்பட்டது (யோ 8:41).
- ☐ அவருக்கு வீட்டில் தங்கும் வசதி அடிக்கடி கிடைக்கவில்லை (மத் 8:19,20).
- ☐ சில இல்லங்களில் அவருக்கு விருந்தோம்பலின் அடிப்படையான ஆசாபாசங்கள்கூடக் காட்டப்படவில்லை (லூக் 7:36-46).
- ☐ அவர் சுற்றுப்பயணம் செய்து பிரசங்கித்து வந்ததால், வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைக்காமல், அவருக்கு அடிக்கடி பசியெடுத்தது. தமது வயிற்றுப்பசிக்கு அவர் சாப்பிட்டபோது அவரைப் பெருந்தீனிக்காரன் என்றழைத்தனர் (மத் 11:19).
- ☐ யூதர்கள் அவரைப் பார்த்து, ''உனக்குப் பிசாசு பிடித்திருக்கிறது'' என்றனர் (யோ 8:48). அவரது சொந்த மக்கள், ''அவர் மதிமயங்கியிருக்கிறார்'' என்றனர் (மாற் 3:21).
- ☐ தமது சொந்த நாட்டினர் மற்றும் இனத்தாராலேயே அவர் தள்ளப்பட்டார் (மாற் 6:3,4).
- ☐ தனிமையால் வாதிக்கப்பட்டார். அவருக்கு அவரது சீடரின் துணை கட்டாயம் தேவைப்பட்டபோது அவர்கள் தூங்கிவிட்டனர் (மத் 26:38,40).



- ☐ அவரது அடக்கம்கூட ஓர் இரவல் கல்லறையில்தான் (மத் 27:57-60).

இவையெல்லாவற்றையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக எபிரெய நிருப ஆக்கியோன் ''அவர் பட்ட பாடுகள்'' என்றழைக்கிறார் (எபி 5:8). ஏசாயா 53இல் சித்திரிக்கப்பட்டபடி, அவரது பாடுகள் சிலுவையில் உச்சத்தை எட்டின.

வெளிப்படுத்தல் புத்தகம் கிறிஸ்து வல்லமையுடனும் மகிமையுடனும் திரும்புதலைப்பற்றிப் பேசுகிறது. இப்புத்தகத்தின் மையப்பொருள் 1:7இல் உண்டு: ''இதோ, அவர் மேகங்களோடு வருகிறார்!'' இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தில் கிறிஸ்து குறைந்தது 26 முறை ''தேவாட்டுக்குட்டியானவர்'' என்றழைக்கப்பட்டுள்ளதைக் கவனித்திருக்கிறீர்களா? இது ஏன்? சிலுவையினாலேயே சிம்மாசனம் கிடைக்கிறது! பாடுகளினாலேயே மகிமை கிட்டுகிறது! அன்று தேவ ஆட்டுக்குட்டியென அறிமுகப்படுத்தப்பட்டவர் இன்று யூதா கோத்திரத்துச் சிங்கமாய் நிற்கிறார் (வெளி 5:5; ஆதி 49:9,10). கழுதையின்மீது பவனி வந்தவர் இப்பொழுது வெள்ளைக் குதிரையின்மீது வருகிறார் (வெளி 19:11). ''யூதருக்கு இராஜா'' என்று முட்கிரீடத்துடன் பகடிபண்ணப்பட்டவர் இப்பொழுது ''இராஜாதி இராஜாவாய், கர்த்தாதி கர்த்தராய்'' தங்கக் கிரீடம் அணிந்து நிற்கிறார் (மத் 27:29,37; வெளி 14:4; 19:16). அவரது வலது கையில் பிலாத்து ஒரு கோலைக் கொடுத்தான்; இப்பொழுது அவரைப் பிதாவானவர் தமது வலது பக்கத்தில் அமரச்செய்து அவர் கையில் ஒரு செங்கோலையும் அரிவாளையும் கொடுத்துள்ளார் (மத் 27:29; எபி 1:8; வெளி 14:14). அவரது முதல் வருகையில் அரசர்களும் அதிகாரிகளும் அவருக்கெதிராய்த் திட்டங்கள் தீட்டினர் (சங் 2:10-12; அப் 4:25-27); அவரது இரண்டாம் வருகையில் அவருக்குக் கீழ்ப்படியாத அரசர்கள் மற்றும் சேனைத்தலைவர்களுக்கு எதிராய் அவரது கோபக்கனல் பறக்கும் (வெளி 6:15-17).

நண்பரே, கிறிஸ்தவத்தில் பரவிவரும் ஒரு துர்வுபதேசம் குறித்து உங்களை எச்சரிக்கிறேன். அதாவது, ''கிறிஸ்து நமக்காய்ப் பாடுபட்டு

விட்டதால் நாம் பாடனுபவிக்கத் தேவையில்லை!'' சத்தியத்திற்குப் புறம்பானது இதுபோல் வேறொன்றில்லை. ரோ 8:17, ''கிறிஸ்துவுடன் நாம் பாடுபட்டால் அவருடன் மகிமைப்படுவோம்.'' 2 தீமோ 2:12, ''அவரோடு நாம் பாடுகளைச் சகித்தால், அவரோடு ஆளுகையும் செய்வோம்.'' ''இந்த வார்த்தை உண்மையுள்ளது'' என்று பவுல் அடித்துக் கூறுகிறார் (வச 11அ). உடலுக்கடுத்த இவ்வுலகப் பாடுகளைக் குறிப்பிட்டுப் பவுல் மேலும் எழுதுவது: 2 கொரி 4:17, ''வெகு விரைவில் நீங்கும் இலகுவான நமது உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது.'' வாழ்க்கையில் ''அநேக'' உபத்திரவங்கள் வழியாய் நாம் கடந்துவந்து முடிவில் வெண்ணாடைகள் உடுத்தித் தேவனது சிங்காசனத்திற்கு முன் அழகாய் நின்று என்றென்றும் அவரைச் சேவிப்போம் (யோ 16:33; அப் 14:22; வெளி 7:13-17). வெள்ளைக் குதிரையில் இயேசு ஏறி வருகையில் நாமும் வெள்ளைக் குதிரைகளில் அவர்பின் பவனி வருவோம் (வெளி 19:11,14). நமக்குக் கிரீடங்கள் தரப்படும்: ஜீவ கிரீடம் (யாக் 1:12; வெளி 2:10), நீதியின் கிரீடம் (2 தீமோ 4:8), மகிழ்ச்சியின் கிரீடம் (1 தெச 2:19; பிலி 4:1), மகிமையின் கிரீடம் (1 பேது 5:4; எபி 2:9). ''பரலோகில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்'' என்று இயேசு அடிக்கடி சொன்னாரல்லவா? (மத் 5:12; 10:41; லூக் 6:23,35). தமது முதல் வருகையில் இயேசு நமக்குப் பொறுப்புகள் தந்தார்; இரண்டாம் வருகையில் நமக்குப் பாராட்டுப்பரிசுகள் தருவார் (வெளி 22:12).

## எருசலேம்

இயேசுவின் பூவுலக வாழ்வில் எருசலேம் நகர் முக்கிய இடம் வகித்தது. அவர் பிறந்தது பெத்லகேம் எனினும், எருசலேமிலுள்ள தேவாலயத்தில்தான் அவர் பிரதிஷ்டைபண்ணப்பட்டார் (லூக் 2:22-38). நியாயப்பிரமாணப் போதகரோடு 12 வயதில் கலந்துரையாடியது எருசலேமில்தான் (லூக் 2:41-49). அவரது மூன்றாம் பெரிய சோதனை எருசலேமில்தான் வந்தது (லூக் 4:9-12). அவர் அடிக்கடி எருசலேம் தேவாலயத்தில் போதித்துவந்தார் (யோ 5,7,8; 18:20; லூக்



22:53). ஆயினும், இந்நகரைக் குறித்து அவர் இவ்விதம் புலம்பவேண்டியதாயிற்று: ''எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடம் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் செட்டைகளின் கீழ் கூட்டிச் சேர்ப்பதுபோல் நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்க்க மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று!'' (மத் 23:37; லூக் 13:34). முடிவில் அவர் அந்நகரைப் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுது சொன்னது: லூக் 19:41-44, ''உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உனது சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவை உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன. உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாது போனதால், உன் எதிரிகள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்குவர்.'' எருசலேம் நகருக்கு வெளியேதான் இயேசு சிலுவையிலறையப்பட்டார் (எபி 13:12). லத்தீன் மொழியில் ''கல்வாரி'' அல்லது எபிரெய-அரமிய மொழியில் ''கொல்கதா'' என்பது எருசலேமின் மதில்களுக்கு வெளியேயுள்ளதோர் இடம் (மத் 27:32,33; மாற் 15:22; லூக் 23:33; யோ 19:16,17).

''சமாதானபுரம்'' என்றிருக்கவேண்டிய எருசலேம் நகர் போராட்டங்களும் கலவரங்களும் நிறைந்ததாயிற்று. ''எருசலேமின் சமாதானத்திற்காய் வேண்டிக்கொள்ள'' நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (சங் 122:6). புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாக நாம் ''எங்கும்'' சமாதானம் நிலவ ஜெபிக்கவேண்டும். மேய்ப்பருக்குக் கிறிஸ்துவின் பிறப்பு அறிவிக்கப்பட்டபோது, தூதர் கூட்டம் பாடியது நினைவிருக்கிறதா? ''பூவுலகின் மேல் சமாதானம்!'' (லூக் 2:14). தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதுகையில் நாம் ''சமாதானமும்'' அமைதலுமுள்ள வாழ்க்கை நடத்துவதற்கேதுவாக ''எல்லா மனிதருக்காகவும்'' வேண்டுதல்கள் ஏறெடுக்கவேண்டுமென அறிவுறுத்தினார் (1 தீமோ 2:1,2).

''புனித நாட்டுப் பயணம்'' என்று சொல்லப்படுவதைக் குறித்த ஒரு சில வார்த்தைகள் இங்கு பொருத்தமாயிருக்கும். புதிய ஏற்பாட்டு உப

தேசத்தின்படி, அது நகராயிருந்தாலும், மலையாயிருந்தாலும், கட்டிட மாயிருந்தாலும் தேவன் ஓர் ''இடத்தைப்'' புனிதப்படுத்துவதே இல்லை (யோ 4:21-24). அவர் ''மனிதருக்குள்ளேயே'' குடிகொள்கிறார் (1 கொரி 6:19; 2 கொரி 6:16). அவர் ''மனிதரை'' மட்டுமே பரிசுத்தப்படுத் துகிறார் (எபி 13:12). திருச்சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் ஓரிடத்தில்கூட புனித யாத்திரை என்று பேச்சே கிடையாது. நாம் ஏற்கனவே இவ்வுலகில் யாத்திரிகர்தானே (1 பேது 2;11). நாம் மேலான பரம தேசத்தையே நாடவேண்டும் (எபி 11:13-15). இயேசு ''எங்கு'' நடந்தாரோ அங்கு அல்ல, அவர் ''எப்படி'' நடந்தாரோ அப்படி நடக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (1 யோ 2:6). நாம் ''மனித நீதியின்படி கிறிஸ்துவை'' அறியக்கூடாதாம் (2 கொரி 5:16). தங்களது விற்பனைப் பொருட்களை நீங்கள் வாங்காதுபோனால் நீங்கள் எதையோ இழந்துவிட்டீர்கள் என்று வியாபார விளம்பரதாரர் உங்களை ஏங்க வைப்பது போலவே, வாழ்நாளில் ஒரு முறையாவது இஸ்ரவேல் நாட்டிற்குப் போய்வரவில்லையெனில் நீங்கள் ஏதோ இழந்துவிட்டது போலக் கிறிஸ்தவப் பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் உங்களை நினைக்க வைக்கின்றன. நீங்கள் ஒரு முறை இஸ்ரவேல் நாட்டிற்குப் போய்வந்துவிட்டால் பைபிள் உங்களுக்கு நன்றாகப் புரிந்து விடும் என்பர். பைபிள் எழுதப்பட்ட பின்னணியை நன்கு விளங்கிக் கொள்ள இவ்விதப் பயணங்களைவிடக் கிரமமாய் ஒரு *வேதாகமப் பொருளகராதியை* (Bible Dictionary) பயன்படுத்துவது மேல் என்றே நான் அழுத்திச் சொல்வேன். இரு பகுதிகளாய் வெளிவந்துள்ள *IVP Bible Background Commentary*யும் சாலச் சிறந்தது.

பிரிய நண்பரே, இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்று வரும் அளவுக்கு உங்களுக்கு வசதியில்லையேல் கவலையே வேண்டாம். நீங்கள் ''பழைய'' எருசலேமுக்குப் ''போக'' வேண்டிய அவசியமில்லை; ''புதிய'' எருசலேம் நம்மிடத்திற்கே ''வரப்'' போகிறது (வெளி 21:2,3). ''மேலான'' பரம எருசலேமே ''நம்மெல்லாருக்கும் தாயானவள்'' (கலா 4:26). எபிரெயரில் எபிரெயனான பவுல் எழுதுவதைக் கவனியுங்கள்:



''புறத்தோற்றத்தில் யூதனானவன் யூதன் அல்ல ... உள்ளத்தில் யூத னானவனே யூதன்!'' (ரோ 2:28,29; கலா 6:15). கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நாமும், அதே அனுபவம் பெற்றவர்களும் மட்டுமே, ''ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய்'' இருக்கிறோம் (கலா 3:29; 4:28).

எவ்விதக் காரணத்தைச் சொன்னாலும், பிரபல பிரசங்கிமாரும் சுவிசேஷகரும் இஸ்ரவேல் நாட்டில் மேற்கொள்ளும் கட்டிடத் திட்டங் களில் பணத்தைக் கொட்டாதீர். ''கர்த்தர் சொன்னார், கர்த்தர் சொன் னார்'' எனும் மாய வலைக்குள் சிக்கிக்கொள்ளாதீர்! இஸ்ரவேல் நாட்டிற் காகவோ இந்தோனேஷியா நாட்டிற்காகவோ இந்திய நாட்டிலிருந்தே ஜெபிக்கலாமே (எரே 23:23). நாம் ''எங்கிருந்து'' ஜெபிக்கிறோம் என் பதல்ல, ''எவரிடம்'' வேண்டுகிறோம் என்பதே காரியம் (யோ 4:20, 21,24). மறுரூப மலையில் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பேதுரு முன் வைத்த வேண்டலைப் பரலோகம் அங்கீகரிக்கவில்லை (மாற் 9:5-8). வெளிப்படுத்தல் புத்தகத்தில் அப்போஸ்தலன் யோவான் அடிக்கடி சொல்லுவது, ''நான் கண்டேன் ... நான் கண்டேன்'' என்பதே. ஆனால் ஒரே ஒரு முறை ''நான் காணவில்லை'' என்கிறான். அது எதைப் பற்றியது தெரியுமா? வெளி 21:22, ''அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வ வல்ல தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியான வருமே அதற்கு ஆலயம்!'' இதைவிட இறைச்செய்தி தெளிவாயிருக்க முடியுமோ?

கிறிஸ்துமஸ் காலங்களில் நமது ஆலயக் கட்டிடங்களை அலங் கரிப்பதில் ஏராளம் பணமும் நேரமும் செலவிடுகிறோம். ஆனால், தனிப்பட்ட விசுவாசிகளாகவும், திருச்சபையாக ஒரு கூட்டமாகவும், நாமே ஜீவனுள்ள தேவனது ஆலயமாம் (1 கொரி 6:19; 2 கொரி 6:16; எபே 2:19-22). நடைமுறைப் பரிசுத்தத்தினாலும் நீதிநெறியினாலும் நாம் நம்மை அலங்கரிப்பதற்கு முக்கியத்துவம் தருவோம் (சங் 29:2; 96:9). இதுவே தேவாட்டுக்குட்டியானவரது கலியாணத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும் (வெளி 19:7,8).

## முடிந்தது!

கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து யோசேப்புக்குத் தூதன் மூலம் வந்த முதலறிவிப்பு: மத் 1:21, ''அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில், அவர் தமது மக்களை அவர்களது பாவங்களிலிருந்து ***இரட்சிப்பார்!''*** சிலுவையில் தொங்குகையில் இயேசு, ''முடிந்தது'' என்றார் (யோ 19:30). அதாவது, பரிசுத்த தேவனது நிபந்தனைகளைத் திருப்திபண்ணி இயேசு மீட்பின் செயலை முடித்தார் (எபி 9:14; 10:12-14). நமக்காய் அவர் இறந்ததையும் அவரது உயிர்த்தெழுதலையும் விசுவாசித்தபோது நாம் இரட்சிக்கப்பட்டோம் (ரோ 10:9,10). நம்மில் தேவன் துவங்கிய நல்ல செயல் இயேசு கிறிஸ்துவின் நாளில், அதாவது அவர் திரும்பி வருகையில், முற்றுப்பெறும் (பிலி 1:6). எனவேதான், ''நாம் (முதலில்) விசுவாசித்தபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைவிட இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது'' என்கிறோம் (ரோ 13:11).

கிறிஸ்துவின் முதல் வருகையும் மறு வருகையும் எபிரெயர் 9:28இல் அழகாய் வித்தியாசப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன: ''கிறிஸ்து அநேகரது பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காய்க் காத்துக்கொண்டிருப்போருக்கு இரட்சிப்பை அருள இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்!'' இரட்சிப்பை நாம் மூன்று காலங்களாகப் புரிந்துகொள்ளவேண்டும்: கடந்தகால இரட் சிப்பு, நிகழ்கால இரட்சிப்பு, எதிர்கால இரட்சிப்பு. கடந்தகால இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் தியாகப் பலியினால் பாவத்தின் *''தண்டனையிலிருந்து''* (penalty) கிடைத்த விடுதலையாகும். நிகழ்கால இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் பரிசுத்த ஆவியானவர் உள்ளில் வாசம் ஆகியவற்றால் பாவத்தின் *''வல்லமையிலிருந்து''* (power) கிடைக்கும் விடுதலையாகும். எதிர்கால இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவரைப் போலவே மாறி (1 யோ 3:2), சோதனையோ பாவமோ இல்லாத அவரது சந்நிதிக்குள் நுழையும்போது பாவத்தின் *''பிரசன்னத்திலிருந்தே''* (presence)



கிடைக்கவிருக்கும் விடுதலையாகும் (வெளி 21:27). இந்த மூன்றாவது கட்டம் நமது ''உடலின் மீட்பையும்'' உள்ளடக்கும்; அதற்குப் பின்னர் தான் ''மரணமோ, துக்கமோ, அலறலோ, வேதனையோ'' இருக்காது (ரோ 8:23; வெளி 21:4). இந்த முழுமையான இரட்சிப்பைக் குறித்துதான், ''இப் பொழுது ***இரட்சிப்பும்*** ... கிறிஸ்துவின் அதிகாரமும்'' வந்துவிட்டன என்று வானத்தில் ஒரு பெரிய சத்தமுண்டாகும் (வெளி 12:10). அன்று ***தீர்க்கதரிசியானவராய்*** பூவுலகிற்கு வந்தவர் (உபா 18:17,18; அப் 3:22,23; 7:37), இன்று பரலோகில் பிரதான ***ஆசாரியராய்*** நமக்காய் மன்றாடுபவர் (எபி 7:24-27), நாளை இராஜாதி ***இராஜாவாய்த்*** திரும்பி வருவார் (2 தீமோ 4:1; வெளி 17:14; 19:16). இவ்விதம் கிறிஸ்துவின் அபிஷேக முப்பணி நிறைவேறுகிறது! Propher-Priest-King!

வெளிப்படுத்தல் புத்தகத்தில் கிறிஸ்துவானவர் தம்மை அடிக்கடி ''அல்பாவும் ஓமெகாவுமானவர்'' என்று அறிமுகப்படுத்துகிறார் (வெளி 1:8,17; 2:8; 21:6; 22:13). ஆம், நமது விசுவாசத்தைத் துவக்குபவர் மட்டுமல்ல, அதை முடிப்பவரும் அவரே (எபி 12:2). முதலாம் வருகையில் கிறிஸ்து நமது விசுவாசத்தைத் துவக்குபவராயிருந்தார்; இரண்டாம் வருகையில் அவர் அதை முடிப்பவராயிருப்பார்! சிலுவையிலிருந்து அவர், ''முடிந்தது'' என்றார்; கடைசியில் சிம்மாசனத்திலிருந்து அவர், ''ஆயிற்று'' என்பார் (வெளி 21:5,6). ''சீக்கிரம் ... விரைவாக ... திடீரென'' எனும் சொற்கள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் அடிக்கடி வருகின்றன (வெளி 1:1,3; 2:16; 3:11; 11:14; 22:6,7, 10,12,20). தமது முதல் வருகையின்போது ''என்னிடம் வாருங்கள்'' என்று நம்மை இயேசு அழைத்தார்! அதற்குச் செவிமடுத்த நாம் இப்போது, ''கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' என்று அவரை அழைப்போம்! (வெளி 22:20).

# 20

# உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?

## Are you Ready to Meet your God?

பரிசுத்த வேதாகமமே கடவுளது வார்த்தை. அதில் ஏறத்தாழ 30,000 வசனங்களுண்டு. அவற்றில் 8000க்கும் மேற்பட்டவை எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்களாம். அப்படியானால், பைபிளில் ஏறத்தாழ 25% எதிர்காலத்தைக் குறித்துப் பேசுகிறது எனலாம். எனவேதான் விவி லியமானது ''தீர்க்கதரிசன வசனம்'' என்றும் ''தீர்க்கதரிசன ஆகமங்கள்'' என்றும் அழைக்கப்படுகிறது (2 பேது 1:19-21; ரோ 16:25).

திருமறையிலுள்ள தீர்க்கதரிசனங்களின் ஒட்டுமொத்தமான கருப்பொருளானவர் இயேசு கிறிஸ்துவே. ''இயேசுவைப் பற்றிய சாட் சியே தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் (சாராம்சமாய்) இருக்கிறது'' என்று திருமறையின் இறுதிப் புத்தகம் கூறுகிறது (வெளி 19:10). இத்தீர்க்க தரிசனங்களில் சில கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்தவை. மற்றவை அவரது இரண்டாம் வருகையைக் குறித்தவை. அவரது முதல் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் அவரது பிறப்பு, வாழ்வு, பணி, இறப்பு, உயிர்ப்பு, பரமேறுதல் ஆகியவற்றில் துல்லியமாய் நிறைவே றின. இதோ, சில எடுத்துக்காட்டுகள்: அவரது பிறப்பிடம் (மீகா 5:2; லூக் 2:4,5,7); அவரது கன்னிப் பிறப்பு (ஏசா 7:14; லூக் 1:26,27,



30,31); அவரது முன்னோடி (மல் 3:1; லூக் 7:24,27); அவர் ஊழியம் செய்த இடம் (ஏசா 9:1,2; மத் 4:13-16); உவமைகள் மூலம் அவரது போதனை (சங் 78:2-4; மத் 13:34,35); சொந்த மக்களாலேயே அவர் புறக்கணிக்கப்பட்டது (ஏசா 53:3; யோ 1:11); அவரது சீடனால் காட்டிக்கொடுக்கப்பட்டது (சங் 41:9; லூக் 22:47); அவருக்கு எதிரான பொய்ச்சாட்சிகள் (சங் 35:11; மாற் 14:58); இரு திருடர் நடுவில் சிலுவையில் அறையப்பட்டது (ஏசா 53:12; மாற் 15:27); செல்வந் தனின் கல்லறையில் அடக்கம் (ஏசா 53:9; மத் 27:57-60); அவரது உயிர்த்தெழுதல் (சங் 16:10; மாற் 16:6,7); அவரது பரமேறுதல் (சங் 68:18; எபே 4:8).

கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் இவ்வளவு துல்லியமாய் நிறைவேறியதுபோலவே, அவரது இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்களும் எழுத்தின்படி அப்படியே நிறைவேறித் தீரும். அவற்றில் இதோ ஒரு சில: (அ) கிறிஸ்துவானவரே முன்னறிவித்தவை (மத் 24:30; மாற் 13:24-26; லூக் 17:23,24; யோ 14:2,3); (ஆ) தூதர்கள் முன்னறிவித்தது (அப் 1:10,11); (இ) கிறிஸ்துவின் சீடர் முன்னறிவித்தவை (பிலி 1:5; கொலோ 3:4; 1 தெச 1:10; 2:19; 3:13; 4:16; 5:23; 2 தெச 2:8; தீத் 2:13; எபி 9:27,28; யாக் 5:7,8; 2 பேது 3:9-12; 1 யோ 2:28; 3:2; யூதா 14,15; வெளிப் படுத்தின விசேஷம் முழுவதும்).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு சம்பந்தப்பட்டுப் பல முக்கிய நிகழ்வுகள் நடக்கும் என்று இந்தத் தீர்க்கதரிசனப் பகுதிகளி லிருந்து அறிய முடிகிறது. அவையாவன: அவரது இரகசிய வருகையும் திருச்சபை எடுத்துக்கொள்ளப்படுதலும் (1 கொரி 15:51,52; 1 தெச 4:16-18); அந்திக் கிறிஸ்து தோன்றுதல் (2 தெச 2:1,7,8); கிறிஸ்து வின் நியாயாசனம் (1 கொரி 3:13-15; 2 கொரி 5:4,10; 1 பேது 5:4); மகா பெரிய உபத்திரவம் (தானி 12:1; மத் 24:4-26); கிறிஸ்துவின் பகிரங்க வருகை (தானி 7:9-14; மத் 24:27-30; வெளி 19:11-16); மண்ணுலகில் அவரது ஆயிரமாண்டு அரசாட்சி (ஏசா 11:4-10; வெளி

20:4-10); பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு (வெளி 20:11-14); பூவுலகு தீக்கிரையாக்கப்படல் (2 பேது 3:5-13; வெளி 20:11; 21:1); புதிய வானம், புதிய பூமி தோன்றுதல் (ஏசா 60:19-22; 65:17; 66:22; வெளி 21:1-22:5).

இந்நிகழ்வுகள் நடக்கும் காலக் கிரமம் (chronology), இந்நிகழ்வுகளின் தன்மை (character) ஆகியவை குறித்துத் திருமறைப் போதகர்களும் கிறிஸ்தவர்களும் தங்கள் கருத்துக்களில் வெகுவாய் வேறுபட்டுள்ளனர். அது காரியமல்ல. இரண்டாம் வருகைக்கான நமது ''ஆயத்தமே'' அதிமுக்கியம். இச்சம்பவங்கள் **''எப்பொழுது''** நடக்கும், **''எப்படி''** நடக்கும், **''எங்கு''** நடக்கும் என்பதையெல்லாம் நிர்ணயிப்பது தேவனது வேலை (அப் 1:6-8). நம்மைப் பொறுத்தவரை, அவரது தீர்க்கதரிசன நாட்காட்டியில் அடுத்து நிகழவிருக்கும் இச்சம்பவங்களுக்காக **''ஆயத்தமாய்''** இருக்கவேண்டும், அவ்வளவுதான். தங்களது ஆண்டவர் எந்த வேளையிலும் வரலாம் என்ற அனுதின எதிர்பார்ப்புடன் ஆதிச்சீடர் வாழ்ந்தனர். எனவே ''கர்த்தர் வருகிறார்'' என்று பொருள்படும் *''மாரநாதா''* என்ற அரமிய வார்த்தையைக் கூறியே ஒருவரையொருவர் வாழ்த்தினார்களாம்! நாம் ஆயத்தப்படவேண்டிய 10 முக்கிய பகுதிகள் இதோ —

### 1. மனந்திரும்புதலும் இரண்டாம் வருகையும்

''மனந்திரும்புங்கள்; விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'' என்று கிறிஸ்துவுக்கு முன்னோடியான திருமுழுக்கினன் யோவான் பிரசங்கித்தார் (மத் 3:2). இயேசு வந்தபோது அவரது செய்தியும், ''மனந்திரும்புங்கள்; விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'' என்றே இருந்தது (மத் 4:17). ''உமது அரசு வருவதாக'' என்று அவர் நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார் (மத் 6:10). அவரது வருகைக்கு முன்னான சம்பவங்களைக் குறிப்பிட்டு அவர் சொன்னது: ''இவைகள் நிகழுவதை நீங்கள் காணும்போது, இறையரசு நெருங்கி வந்துவிட்டதென்று அறியுங்கள்'' (லூக் 21:31).



நண்பரே, இப்பொழுதே உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள். அவற்றைக் கடவுளிடம் அறிக்கையிடுங்கள். அவர் உங்களை முழுவதுமாய் மன்னித்துவிடுவார். அவரது திருக்குமாரனின் இரத்தம் உங்களைக் கழுவிச் சுத்தப்படுத்தும் (1 யோ 1:7-9). கிறிஸ்து உங்களுக்காகவே உயிர்கொடுத்துப் பின்னர் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து அதை வாயால் சொல்லுங்கள்; தண்ணீரில் திருமுழுக்கு பெற்றுக்கொள்ளுங்கள்; நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் (ரோ 10:9,10; மாற் 16:16; 1 பேது 3:21,22). நீங்கள் தேவனுடைய பிள்ளை என்று உள்ளான மனதில் ஒரு நிச்சயம் பெறுவீர்கள் (யோ 1:12; ரோ 8:16). இதைத்தான் மறுபிறப்பு அல்லது புதுப்பிறப்பு என்று பைபிள் அழைக்கிறது. ''நீங்கள் மறுபடியும் பிறக்காவிட்டால் இறையரசைக் காணமாட்டீர்கள்'' என்றார் இயேசு (யோ 3:3-5). நீங்கள் உங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பிக் குணப்படும்போது மட்டுமே நீங்கள் தேவனைச் சந்திக்க ஆயத்தமாகுகிறீர்கள் (அப் 3:19,20). உங்கள் சுய நீதியாகிய கந்தையுடைகளைக் கழற்றியெறிந்துவிட்டு, கிறிஸ்துவின் நீதியாகிய பொன்னாடையை அணிந்துகொள்ளுங்கள் (ஏசா 64:6; லூக் 15:22; பிலி 3:4-9). அப்பொழுதுதான் மகாராஜாவின் விருந்தில் நீங்கள் பங்கேற்க முடியும் (மத் 22:11-13).

கடந்த காலத்தை மறந்துவிடுங்கள். ''அறியாமையின் காலங்களைக்'' கடவுள் கணக்கிலெடுக்க மாட்டார். இப்பொழுதோ, நியாயத்தீர்ப்பு நெருங்கிவிட்டதால், மனந்திரும்பவேண்டுமென்று ஒவ்வொருவருக்கும் கட்டளையிடுகிறார் (அப் 17:30,31). கிறிஸ்துவானவர் திரும்பி வரத் தாமதிப்பதைத் தவறாய்க் கணித்துவிடாதீர்கள். நீங்கள் மனந்திரும்புவதற்கென்றே பொறுமையுள்ள தேவன் உங்களுக்குக் கூடுதல் கால அவகாசம் தருகிறார் (2 பேது 3:9). இன்னும் தள்ளிப்போடாதிருங்கள் (நீதி 29:1). நாளை நாளை என்றால் காலம் கடந்துவிடும் (நீதி 27:1; 2 கொரி 6:2). இன்றே உங்கள் பெயரைத் தேவாட்டுக்குட்டியானவரின் ஜீவப் புத்தகத்தில் பதிவு செய்துவிடுங்கள் (வெளி 21:27; எபி 12:23). வெள்ளைச் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் கடவுளுக்குமுன் புத்தகங்கள் திறக்கப்படும்போது, உங்கள் பெயர் அங்கு

இல்லாவிட்டால், அப்பொழுது என்ன செய்வீர்கள்? (வெளி 20:11,12). ஜீவப் புத்தகத்தில் பெயர் எழுதப்படாத எவரும் தீக்கடலில் தள்ளப் படுவார் (வச 15).

## 2. திருமறைத் தியானமும் இரண்டாம் வருகையும்

தமது வருகையின் அடையாளங்களைத் தமது சீடருக்கு முன்னறிவிக்கையில், இயேசு அழுத்திச் சொன்னது: ‘‘வானமும் பூமியும் ஒழிந்துபோகும்; என் வார்த்தைகளோ ஒருபோதும் ஒழிவதில்லை’’ (மத் 24:35; லூக் 21:33). இன்று நாம் கண்களால் காணும் யாவும் தற்காலிகமானவை; ஒன்று மட்டும் விதிவிலக்கு. அதுதான் பைபிள்! கடைசிக்காலத்தின் கடைசிக் கட்டத்திற்குள் நாம் வந்துகொண்டிருக்கையில், துர்வுபதேச ‘‘வெள்ளங்கள்’’ நம்மீது மோதியடிக்கும். திருவசனமாகிய உறுதியான பாறையில் நமது வாழ்க்கை அடித்தளமிடப்பட்டிருந்தால் மட்டுமே நாம் பேரழிவுக்குத் தப்பலாம் (மத் 7:24-27). கடைசி நாட்களில் ஆரோக்கிய உபதேசிகளைவிடத் துர்வுபதேசிகளும் கள்ளத் தீர்க்கதரிசிகளுமே திரளாய்க் காணப்படுவர் (மத் 24:11; 2 தீமோ 4:1-4).

நண்பரே, வேத வாக்கியங்களால் உங்களை நிறைத்துக்கொள்ளுங்கள். அவசரப்படாமல் திருவசனத்தை நிதானமாய்த் தியானிக்கப் போதுமான நேரம் செலவிடுங்கள். வேத ஆராய்ச்சிக்கு ஆரோக்கியமான உதவி நூல்களைத் தெரிந்தெடுக்க நம்பகமான திருமறைப் போதகர்களோடு கலந்தாலோசியுங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு வசனங்களை மனனம் செய்யுங்கள். இவையெல்லாம் ‘‘பொல்லாத நாட்கள்’’ (எபே 6:13). சாத்தானும் அவனது தீய சக்திகள் யாவும் கடவுளுடைய பிள்ளைகளுக்கெதிராய்ப் போர் தொடுத்துள்ளனர் (வச 12). தாக்குவதற்காய்க் கடவுள் நமது கரங்களில் தந்திருக்கும் ஒரே போராயுதம் ‘‘தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்’’ மட்டுமே (வச 17). பைபிளில் சொல்லப்பட்டிராத வெளிப்பாடுகள், அனுபவங்களெல்லாம் வேண்டாம், எச்சரிக்கை! (1 கொரி 4:6). திருவிவிலியம் முதன்மையானது மட்டுமல்ல, முழுமையானது; அது பிரதானமானது மட்டுமல்ல, போதுமானது (2 தீமோ 3:14-17). தரிசனங்கள், சொப்பனங்கள், அடையாளங்கள் மற்றும் இவை போன்ற பரவசங்களுக்குப் பின்னால் அலையாதிருங்கள். இவையெல்லாம் எழுதப்பட்ட திருவார்த்தைக்கு மேல் உயர்த்தப்படக்கூடாது (எரே 23:28,29; 2 தெச 2:9-12; லூக் 17:20,21).

கிறிஸ்துவே ‘‘பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம்’’ (வெளி 22:16). அவர் திரும்பவும் தோன்றுமளவும், ‘‘இருள்’’ நிறைந்த இவ்வுலகில் இறைவார்த்தை தரும் ‘‘ஒளியிலேயே’’ நாம் நடக்கவேண்டும் (2 பேது 1:19-21). தினந்தோறும் திருமறையைத் தியானிப்பதின் மூலம் தினந்தோறும் நாம் கழுவப்பட்டுத் தூய்மையடையலாம். இவ்விதம்தான் தமது வருகையில் கிறிஸ்து நம்மைப் பரிசுத்தமுள்ளவர்களாய், பிழையற்றவர்களாய், தமது முன்னிலையில் நிறுத்திக்கொள்வார் (எபே 5:25-27). பரலோகில் அவரது பெயர்களில் ஒன்று ‘‘தேவனுடைய வார்த்தை’’ என்பது (வெளி 19:13).

## 3. பரிசுத்த வாழ்வும் இரண்டாம் வருகையும்

‘‘பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்க முடியாது’’ (எபி 12:14; மத் 5:8). ‘‘இரவில் திருடன் வருவதுபோல் கர்த்தர் வரும்போது’’ மண்ணுலகு தீக்கிரையாகும் (2 பேது 3:10). இந்த அகிலவுலகப் பேரழிவை முன்னறிவித்த பின்னர், அப்போஸ்தலன் பேதுரு நமக்கு விடும் சவால்: ‘‘இப்படி இவையெல்லாம் அழிந்துபோகவிருப்பதால் நீங்கள் எவ்வளவு பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்!’’ (வச 11). இதைத் தொடர்ந்து அப்போஸ்தலனது அறிவுறுத்தல்: ‘‘அவரது முன்னிலையில் கறையற்றவர்களும் பிழையற்றவர்களுமாய்க் காணப்படக் கவனமாயிருங்கள்’’ (வச 14).

வரவிருக்கும் ‘‘மரித்தோரின் உயிர்த்தெழுதலை’’ நினைவிற்கொண்டு தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாகக் குற்றமற்ற மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளுங்கள் (அப் 24:15,16). இந்த உயிர்த்தெழுதலில் விசுவாசிகள் ‘‘நித்திய மகிழ்ச்சிக்கும்,’’ அவிசுவாசிகள்

''நித்திய இகழ்ச்சிக்கும்'' விழித்து எழுந்திருப்பர் (தானி 12:2). நாம் கர்த்தரை முகமுகமாய்ச் சந்திக்கும்போது, அவரைப் போலவே மாறி விடுவோம். அவர் மீது இவ்வித நம்பிக்கை கொண்டுள்ள எவரும் அவர் தூயவராயிருப்பதுபோலத் தன்னையும் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும் (1 யோ 3:2,3). அசுத்தமானது எதுவும் பரலோகிற்குள் நுழைய முடியாது (வெளி 21:27; 1 கொரி 6:9,10; கலா 5:19-21). பரலோகில் எல்லாமுமே ''பரிசுத்தம்'' என்றிருக்கும்: ''*பரிசுத்த* தூதர்'' (வெளி 14:10), ''*பரிசுத்த* அப்போஸ்தலர்'' (18:20), ''*பரிசுத்த* தீர்க்கதரிசிகள்'' (18:20; 22:6), ''*பரிசுத்த* நகரம்'' (21:10). பரலோகில் இடையறாது பாடப்படும் பல்லவியும் ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்றே இருக்கும் (வெளி 4:8).

நண்பரே, நல்லதை விரும்புவதையும், தீயதை வெறுப்பதையும் ஒருபோதும் தளர்த்திவிடாதிருங்கள். பிசாசு உங்களைச் சோதிக்கலாம்; ஆனால் உங்களது ஒத்துழைப்பின்றி அவன் உங்களைத் தோற்கடிக்க முடியாது. ''உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு'' ஆகியவற்றிற்கு மறுப்புத் தெரிவித்துக்கொண்டேயிருங்கள்; அப்பொழுதுதான் நித்திய வாழ்வில் நீங்கள் நிலைத்திருக்க முடியும் (1 யோ 2:16,17). முழங்காலிட்டுக் கடவுளுக்குமுன் அடிக்கடி உங்களைத் தற்பரிசோதனை செய்துகொள்ளுங்கள். உங்களது பரிசுத்தத்தின் அளவில் ஒருபோதும் திருப்தியடையாதிருங்கள். காலம் செல்லச் செல்ல இவ்வுலகு இன்னும் கெட்டுப்போய்க்கொண்டேயிருக்கும். ஆனால், ''பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் ... இதோ, நான் சீக்கிரம் வருகிறேன்'' என்பதே திருமறையின் இறுதிப்பக்கங்களிலுள்ள அழைப்பு (வெளி 22:11,12). பெரும்பான்மையோர் நரகத்திற்குச் செல்லும் அகன்ற பாதையைத்தான் தெரிந்துகொள்வர் என்றும், வெகு சிலரே மோட்சத்திற்குச் செல்லும் இடுக்கமான வாயிலில் நுழைய முயற்சிப்பர் என்றும் இயேசு முன்னறிவித்துள்ளார் (மத் 7:13,14). ''தீயதாய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் ... சமாதானத்தின் தேவன் தாமே நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து வரும்போது உங்களை முழுமையாய்ப் பரிசுத்தமாக்குவார்'' (1 தெச 5:22,23). ''உங்களில் நற்செயலைத் தொடங்கியவர் இயேசு கிறிஸ்துவின் நாள் வரை அதைச் செய்து முடிப்பார்'' என்று அசையாத நம்பிக்கையுடனிருங்கள் (பிலி 1:5).



### 4. விழிப்புள்ள ஜெபமும் இரண்டாம் வருகையும்

ஜெபத்தில் விழிப்புடன் இருப்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான ஆயத்தத்தில் அடிப்படையானதாகும். தமது வருகைக்குமுன் வரவிருக்கும் வேதனையான நாட்களைக் குறிப்பிட்டபின் ஆண்டவர் சொன்னது: ''ஆகையால் இனி சம்பவிக்கவிருக்கும் இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுமகனுக்குமுன் நிற்கத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்'' (லூக் 21:36). நமது வாழ்விலிருந்து ஜெபத்தை நெருக்கித் தள்ளி விடக்கூடிய உலகக் காரியங்களுக்கெதிராய் அவர் நம்மை எச்சரித்துள்ளார் (வச 34).

ஜெபத்தில் விழித்திருப்பதென்றால், இறைப்பிரசன்னத்தில் அவசரப்படாமல் நிதானமாய் அமர்ந்திருப்பதாகும். நாளுக்கு ஒரு மணிநேர ஜெபம் குறைந்த பட்சமே. அதிகாலை வேளைக்கு நிகரே கிடையாது (சங் 63:1; மாற் 1:35). முழங்காலில் நிற்பது சர்வ வல்ல தேவனுக்குமுன் நமது பயபக்தியைக் காட்டுகிறது (சங் 95:6). பழைய ஏற்பாட்டுக் காலத்தினர் முழங்கால்படியிட்டு ஜெபித்தனர் (2 நாளா 6:13; தானி 6:10). இயேசுவானவர் முழங்கால்படியிட்டு ஜெபித்தார் (லூக் 22:41). அவரது சீடர்கள் முழங்கால்படியிட்டு ஜெபித்தனர் (அப் 9:40; 20:36; 21:5). முடிவாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, அவருக்குமுன் ''முழங்கால் யாவும் முடங்கும்'' (பிலி 2:10). முழங்காலிடும் பழக்கம் காலத்தால் அழிக்கப்பட முடியாதது.

தேவனைப் போற்றிப் பாடித் துதித்து நன்றி சொல்வது ஜெப ஆவியை விழிப்புடன் தக்கவைத்துக்கொள்ள உதவும் (கொலோ 4:12). இடைவிடா ஆராதனையினால் பரலோகம் நிறைந்திருக்கும் (வெளி 4:8; 7:11,12; 11:16,17; 15:3,4). அல்லேலூயா!

ஜெபத்தில் விழித்திருப்பதென்றால், ''கிறிஸ்து நம்மிலும், நாம் கிறிஸ்துவிலும்'' இருக்கிறோம் எனும் நிச்சயத்துடன் இறைப்பிரசன்னத்தை உணர்வதாகும் (அப் 2:25,26; யோ 17:21-33). கிறிஸ்து எப்பொழுது திரும்ப வருவாரென்று நாமறியோம். அது ''காலையிலோ, மாலையிலோ, இரவிலோ'' இருக்கலாம். எனவே நாம் எப்பொழுதும் விழிப்பாயிருக்கவேண்டும் (மாற் 13:35-37). ஜெபத்தில் அநேகர் மனம் தளர்ந்துகொண்டிருக்கின்றனர் (லூக் 18:1); எனவேதான், ''மனுமகன் வரும்போது மண்ணுலகில் உண்மையாகவே விசுவாசத்தைக் காண்பாரோ?'' என்று இயேசு புலம்பினார் (வச 8). நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கிறதோ இல்லையோ, தேவனோடு இனிமையாய் ஐக்கியங்கொள்வதே ஜெபத்தின் உன்னத நோக்காகும் (லூக் 6:12; 21:37). ''பரிசுத்தவான்களின் ஜெபங்களே'' பரலோகில் சிங்காசனத்திற்கு முன் தூபவர்க்கத்தின் வாசனையாய் எழும்பும் (வெளி 5:8; 8:3,4).

### 5. சகவுறவுகளும் இரண்டாம் வருகையும்

தமது வருகைக்கும் இந்த யுகத்தின் முடிவுக்குமான அடையாளங்களை இயேசு வரிசைப்படுத்தியபோது, முன்னறிவித்தது: ''அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகரது அன்பு குளிர்ந்துபோகும்'' (மத் 24:12). இதே பாணியில் அப்போஸ்தலன் பவுல் கூறியது: ''கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் ... மக்கள் சுபாவ அன்பில்லாதவர்களாயும் இணக்கமில்லாதவர்களாயும் இருப்பார்கள்'' (2 தீமோ 3:1-5). இன்றைய நிலை இதுதானே? இறைமக்களோ இந்த மனப்பான்மைக்கு இடந்தரக்கூடாது.

''நான் உங்களில் அன்புகூருவதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்புகூருங்கள் என்பதே எனது கட்டளை'' என்றார் இயேசு (யோ 15:12). நாம் ''யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமாயிருக்கவும் முயற்சிக்கவேண்டும்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' (எபி 12:14). ''உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும்; கர்த்தர் சமீபமாயிருக்கிறார்'' (பிலி



4:5). ''சகோதரரே, நீங்கள் தண்டனைத் தீர்ப்படையாதபடி ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்!'' (யாக் 5:9). ''கர்த்தர் வருமளவும், காலத்திற்கு முன்னர் எதைக் குறித்தும் தீர்ப்பு சொல்லாதிருங்கள்'' (1 கொரி 4:5). எவரையாவது நாம் வார்த்தைகளினால் பழித்தால் தண்டனைத் தீர்ப்புக்கும் எரிநரகத்திற்கும் ஆளாவோம் என்று இயேசு நம்மை எச்சரித்துள்ளார் (மத் 5:22). புறங்கூறுதல், கதை திரித்தல், அவதூறு பண்ணுதல், அரட்டையடித்தல் போன்றவற்றைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். மனிதர் பேசும் வீணான வார்த்தை ''ஒவ்வொன்றையும்'' குறித்து நியாயத்தீர்ப்பின் நாளில் கணக்குக் கொடுக்கவேண்டும் என்று ஆண்டவர் நம்மை எச்சரித்துள்ளார் (மத் 12:36). அடங்காத நாவு நரகம்தான் (யாக் 3:6).

தவறிழைக்கப்பட்டோரோடு ஒப்புரவாகுங்கள் (மத் 5:23,24). காரியங்களைச் சரிசெய்யுங்கள் (எசேக் 33:15). உங்கள் இருதயத்திலிருந்து எல்லாக் கசப்பையும் பிடுங்கி எறிந்துவிடுங்கள். கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்ததுபோல் யாவரையும் தாராளமாய் மன்னியுங்கள் (எபே 4:32). இன வெறி, இட வெறி போன்றவை உங்கள் வாழ்வில் ஒழியட்டும். பரலோகில் எவ்வித வேறுபாடுகளுமின்றி நாம் ''தூதர்கள் போல்'' இருப்போம் (மாற் 12:25). ''எல்லா நாடுகள், குலங்கள், மக்களினங்கள், மொழிகளைச் சார்ந்த அனைவரும் வெண்ணுடைகள் அணிந்து,'' நாமெல்லாரும் ஒரே ''குடும்பமாய்'' இருப்போம் (எபே 3:14; வெளி 7:9). கூடி வாழ இங்கேயே கற்றுக்கொள்வோம்!

சபையென்றாலும் சமுதாயமென்றாலும் குடும்பமே அடிப்படையானதால், சகவுறவுகளைப் பற்றிப் பேசுகையில் குடும்பச் சமாதானம் முக்கியமானது (லூக் 10:5). கிறிஸ்துவானவர் சபையில் அன்புகூருவதுபோல் மனைவியரிடம் கணவன்மார் அன்பு செலுத்தவேண்டும்; கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல் கணவன்மாருக்கு மனைவியர் கீழ்ப்படியவேண்டும் (எபே 5:22-28; கொலோ 3:18,19). மணவாழ்வில் உண்மையின்மையைக் கடவுள் நியாயந்தீர்ப்பார் (எபி 13:4). பெற்

றோருக்குப் பிள்ளைகள் கீழ்ப்படியவேண்டும்; பிள்ளைகளைப் பெற்றோர் எரிச்சலூட்டக்கூடாது (எபே 6:1-4; கொலோ 3:20,21). நமது பிள்ளைகளது காலம் நமது காலங்களைவிடக் கொடியதாயிருக் கப்போவதால், அவர்களுக்காய்க் கண்ணீரோடு ஜெபிக்கவேண்டும் (லூக் 23:28,29). கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி போன்ற பரிசுத்த ஆவியானவரின் பணிகளில் ஒன்று கர்த்தரது ''பெரிதும் பயங்கரமுமான நாள்'' வருமுன், ''தந்தையரின் இதயங்களைப் பிள்ளைகளிடத்தும், பிள்ளைகளின் இதயங்களைத் தந்தையரிடத்தும் திருப்புவதாகும்'' (மல் 4:5,6). ''கர்த்தருக்கென்று உத்தமமான ஒரு கூட்டம் மக்களை ஆயத்தப்படுத்துவதற்காகவே'' ஆவியானவர் இப்படிச் செய்வார் (லூக் 1:17).

## 6. திருச்சபை ஐக்கியமும் இரண்டாம் வருகையும்

திருச்சபையே கிறிஸ்துவின் திருவுடல். மறுபடி பிறந்த அனைவரும் அதில் அங்கங்கள் (1 கொரி 12:27). திருச்சபைக்குள் இன வாரியாகவோ கலாச்சார வாரியாகவோ ஒரு வேறுபாடும் இருக்கக்கூடாது (1 கொரி 12:13). திருச்சபையின் ஒருமனமே இயேசுவின் தணியா தாகம் (யோ 17:20,21). எனவேதான் புதிய ஏற்பாட்டு நிருபங்கள் அத்தனையும் ஒருமனத்தை வலியுறுத்துகின்றன (ரோ 12:10; 1 கொரி 11:33; கலா 6:2; எபே 4:2; 5:21; கொலோ 3;13; 1 தெச 5:11; எபி 3:13; யாக் 5:16; 1 பேது 4:10; 1 யோ 3:23). பரலோகில் சபைப்பிரிவு பாகுபாடுகள் இருக்காது! நீங்கள் ஆங்கிலிக்கன் சபையோ, பாப்திஸ்து சபையோ, லுத்தரன் சபையோ, மெதடிஸ்டு சபையோ, பெந்தெகொஸ்தே சபையோ, இப்படி எந்தச் சபையைச் சேர்ந்தவராயிருந்தாலும், கிறிஸ்துவின் இரத் தத்தால் கழுவப்பட்ட தேவப்பிள்ளைகள் யாவரும் சேர்ந்ததுதான் அவரது மணமகள் (2 கொரி 11:2; வெளி 19:6-8). வரவிருக்கும் இந்த மகிமை யானவற்றை நோக்குங்கால், நாம் ஒருவரோடொருவர் சமாதானமாய் வாழவேண்டியது எவ்வளவு பெரிய பொறுப்பு!

வெளிப்படுத்துதல் புத்தகத்திலுள்ள ஏழு சபைகளில் சில தேவ னுக்காய் எரிந்து பிரகாசித்துக்கொண்டிருந்தன; வேறு சில வெதுவெதுப்



பாயிருந்தன; இன்னும் சில சாகும் தருவாயிலிருந்தன (வெளி 2-3). கிறிஸ்துவோ எந்தச் சபையையும் முடியாது என்று விட்டுவிடவில்லை. பிரியமானவரே, எந்தச் சபையாயினும் அதில் உண்மையான ஒரு சில விசுவாசிகள் இருக்கத்தான் செய்வர் (வெளி 3:4). அவர்களையெல்லாம் கிறிஸ்துவின் அன்பினால் அணைத்துக்கொள்வோம். முடிந்த வேளை களிலெல்லாம் இறைமக்களோடு கூடிவாருங்கள். ''நாளானது நெருங்கி வருகிறதால் ... சபை கூடிவருகிறதை விட்டுவிடக்கூடாது'' என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (எபி 10:24,25). இவ்விதக் கூடுகைகள் ''ஆராதிக்க'' மட்டுமல்ல, ஒருவரையொருவர் கட்டியெழுப்ப ''ஐக்கியப் படவும்'' என்றிருக்கவேண்டும் (அப் 2:46,47). எந்தவொரு தனி நபருக்காகவோ நிறுவனத்திற்காகவோ அல்ல, திருச்சபைக்காகவே கிறிஸ்து திரும்ப வருகிறார்.

திருச்சபையில் ஒரு மேய்ப்பராய் நீங்கள் அழைக்கப்பட்டிருந்தால், உத்தமமாய் மந்தையை மேய்த்திடுங்கள்; மந்தையை மேய்ந்திடா திருங்கள் (எசேக் 34:2). தொண்டனாய்ச் செயல்படும் தலைவனா யிருங்கள். கட்டாயமாய் அல்ல, எல்லாவற்றையும் சபையினருக்குக் களிப்புடன் செய்யுங்கள். சபையாரின் வளத்திற்காகவும் வளர்ச்சிக் காகவும் செலவழியுங்கள், செலவழிக்கப்படுங்கள் (2 கொரி 12:14,15). மக்களுக்கு நீங்களே முன்மாதிரியாயிருங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் ஒவ்வொருவரையும் தேறினவனாய் நிறுத்த இரவும் பகலும் பாடு படுங்கள் (கொலோ 1:28,29). அவர்கள் எல்லாரையும் திருப்பணிக்காய்ப் பயிற்றுவியுங்கள், பக்குவப்படுத்துங்கள் (எபே 4:11-13). ''பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது நீங்கள் மகிமையின் கிரீடம் பெறுவீர்கள்'' (1 பேது 5:1-4). கட்டிடங்களில் பணத்தைக் கொட்டாதீர்கள். பிரமாண் டமான கட்டிடங்கள் கடைசிக் காலத்திற்குத் தேவனுடைய பரிபூரண சித்தமல்ல (மத் 24:1,2; லூக் 21:5,6). சபை வளர்ந்துகொண் டேபோனால், புதிய தலைவர்கள் பலர் எழுந்து வரும்படியாகவும், பரிபாலிக்க வசதியாகவும் சபையை இரண்டு மூன்றாய்ப் பிரித்து விடுங்கள். இரண்டாம் வரிசையினர் சபையை உடைக்கும் அவலத்

தையும் இது தடுக்கும். அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படுமளவு எளிய கட்டிடங்களில் திருப்தியடையுங்கள். உங்கள் நேரமும் பலமும் நேரடியாய் ''ஜீவனுள்ள கற்களுக்காய்ச்'' செலவிடப்படட்டும் (1 பேது 2:4,5). ''பரம தேசத்தை'' நாடிய பழங்காலத்து விசுவாச வீரர் ''கோபுரங்களை விட்டுக் கூடாரங்களுக்கு'' நகர்ந்தனர்; நாமோ ''கூடாரங்களை விட்டுக் கோபுரங்களுக்கு'' விரைகிறோம் (எபி 11:8-10). இதுவா விசுவாசம்?

## 7. உக்கிராணத்துவமும் இரண்டாம் வருகையும்

தேவன் நமக்குத் தருணம், தாலந்துகள், தனம் ஆகியவை தந்து ஆசீர்வதித்திருக்கிறார். இவற்றிற்கு நாம் சொந்தக்காரர் அல்ல; பொறுப்பாளிகள், அவ்வளவுதான். இவற்றை எவ்விதம் பயன்படுத்திக் கொண்டோம் என்பதற்குக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நமக்குப் பலாபலன் கிடைக்கும். தாலந்துகளின் உவமையில் கிறிஸ்து இதை அழகாய் விளக்கியுள்ளார் (மத் 25:14-30). தாலந்து இல்லாத தேவப் பிள்ளை எவருமில்லை (வச 15). கடவுள் நமக்குத் தந்துள்ள தாலந்துகளைப் பயன்படுத்துவதில் நமக்கு ''உத்தமம்'' வேண்டும் (வச 21,23). இல்லையேல், ''அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும் இருளில்'' நாம் தள்ளப்படுவோம் (வச 30). தலைவர்களாய் அழைக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்பு இன்னும் அதிகம் (மத் 24:44-51).

''சிறிய காரியங்களிலும்'' உத்தமமாய் இருக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். உங்கள் இல்லத்தில், அயலகத்தில், வேலைத்தலத்தில், திருச்சபையில், குடும்ப வாழ்வில் ''உத்தமமாய்'' இருங்கள். நீங்கள் வயலில் வேலை செய்தாலும் சரி, சமையலறையில் வேலை செய்தாலும் சரி, அது காரியமல்ல; கிறிஸ்து வரும்போது உத்தமமாயிருந்தவர் எடுத்துக்கொள்ளப்படுவார்; உத்தமமாயிராதவர் கைவிடப்படுவார் (மத் 24:40,41). ஆன்மீகக் காரியங்கள், உலகக் காரியங்களென்று அளவுக்கு மீறி கூறுபோட்டுப் பிரிக்காதிருங்கள். கடினமாய் உழைத்திடுங்கள். கவனமாய் வாழ்ந்திடுங்கள்.



இவ்வுலகு சீக்கிரம் முடிவுக்குள் வரவிருக்கிறது; எனவே நியாயமான ஆசீர்வாதங்களைக்கூட அளவுக்குமீறி அனுபவிக்கக்கூடாதென்று பைபிள் நம்மை எச்சரிக்கிறது: 1 கொரி 7:29-31, ''மனைவிகள் உள்ளவர் மனைவிகள் இல்லாதவர் போலவும், அழுகிறவர் அழாதவர் போலவும், சந்தோஷப்படுகிறவர் சந்தோஷப்படாதவர் போலவும், பொருட்களை வாங்குபவர் அவை இல்லாதவர் போலவும், இவ்வுலகை அனுபவிப்பவர் அதைத் தகாத முறையில் அனுபவியாதவர் போலவும் இருக்கவேண்டும்; இவ்வுலகு அழியப்போகிறதே!'' முற்காலத்து விசுவாச வீரரின் வாழ்க்கை முறை இப்படித்தானிருந்தது. அவர்களது குடியுரிமை மேலான நாடாகிய பரலோகத்தில்தான் இருக்கிறதென்றும், இவ்வுலகமோ அவர்களுக்கு வழியில் தற்காலிகமான தங்குமிடமே என்றும் அறிந்திருந்தார்கள் (எபி 11:9,10,13-16; பிலி 3;20). இவ்விதம் ''மண்ணுலகச்'' செல்வங்களைத் தேவன் விரும்பும் வகையில் நாம் பயன்படுத்தாவிடில், தமது ''விண்ணுலகச்'' செல்வங்களை அனுபவிக்க அவர் நம்மை எப்படி அங்கே அனுமதிப்பார்? (லூக் 16:11). வாழ்வின் எப்பகுதியிலும் பந்தாவோ பகட்டோ இல்லாது பார்த்துக்கொள்ளுங்கள். எளிய மனதுள்ளோருக்கே பரலோகம் சொந்தம் (மத் 5:3). பொருளாதார ஆசீர்வாதங்களையும் உடலுக்கடுத்த நன்மைகளையுமே பிரதானமாய்க் கொண்டுள்ள நவீன உபதேசம் ஒரு கொள்ளை நோய் போலக் கிறிஸ்தவத்தில் பரவியுள்ளது (பிலி 3:17-19). இது ''வேறொரு சுவிசேஷம்.'' இவ்வுலக வாழ்வுக்காக மட்டும் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால் ''நாம் எல்லா மனிதரையும்விடப் பரிதாபத்திற்குரியவர்கள்'' என்று திருமறை நம்மை எச்சரிக்கிறது (1 கொரி 15:19).

## 8. தானதர்மமும் இரண்டாம் வருகையும்

விண்ணரசராய் இயேசு திரும்ப வரும்போது, மக்களைச் ''செம்மறியாடுகள்'' என்றும் ''வெள்ளாடுகள்'' என்றும் இரு வகையினராய்ப் பிரிப்பார். செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திற்கும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திற்கும் அனுப்பிவைப்பார். வலது பக்கத்திற்கு அனுப்பப்பட்டவர்களைப் பார்த்து, ''வாருங்கள், என்

பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டாகுமுன் உங்களுக்காய் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் விண்ணரசைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்: ஏனென்றால், நான் பசியாயிருந்தேன், எனக்கு உணவு கொடுத்தீர்கள்; நான் தாகமாயிருந்தேன், எனக்குப் பானம் கொடுத்தீர்கள்; நான் ஆடையில்லாதிருந்தேன், எனக்கு ஆடை கொடுத்தீர்கள் ... என்பார். அப்பொழுது அந்த நீதிமான்கள் அவரிடம், 'ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராய் ... தாகமுள்ளவராய் ... ஆடையில்லாதவராய்க் கண்டோம்' என்று கேட்பர். அதற்கு விண்ணரசர், எனது சகோதரராகிய இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்பார்.'' இடது பக்கம் நிற்பவர்களையோ ''நித்திய தண்டனைக்குள்ளும் அக்கினிக்குள்ளும்'' அனுப்பிவைப்பார் (மத் 25:31-46). பிரிய நண்பரே, இறைச்செய்தி இதிலும் தெளிவாய் இருக்க முடியுமோ?

இன்னொரு சந்தர்ப்பத்தில் இயேசு சொன்னது: ''நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழைத்திடு. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குக் கைம்மாறு செய்ய முடியாது; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குக் கைம்மாறு செய்யப்படும்'' (லூக் 14:12-14). இல்லாதோரால் பரலோகம் நிரம்பி வழியும் (1 கொரி 1:26-29). ஏழைகளுக்கு உதவ முடியாத அளவுக்கு நம்மில் எவரும் ஏழையல்ல. உங்கள் தேவைக்கும் அதிகமாய்க் கடவுள் உங்களுக்குக் கொடுத்திருப்பாரானால் அது தேவையிலிருப்போரோடு பகிர்ந்துகொள்வதற்காகவே. நீங்கள் பரலோகத்திற்குப் பணத்தை எடுத்துச்செல்ல முடியாது; ஆனால் முன்னதாகவே அங்கு அனுப்பிவைக்கலாம்! விண்ணுலகில் செல்வம் சேர்க்க ஒரே வழி மண்ணுலகிலுள்ள எளியவரோடு அதைப் பகிர்ந்துகொள்வதே (மத் 6:19-21). கொழுத்த சம்பளம் வேண்டுமென்று பைத்தியமாய் அலையும் நமது இன்றைய வாலிபர், நங்கையர் காதுகளில் அன்று பணக்கார வாலிபன் ஒருவனிடம் இயேசு சொன்ன வார்த்தைகளை உரக்க ஒலிக்கவேண்டும்:



''உனது உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு; அப்பொழுது பரலோகில் உனக்குச் செல்வம் சேரும். பின்பு என்னைப் பின்பற்றி வா'' (மத் 19:21). லூக்கா நற்செய்தி நூலில் வாசிக்கும் இரு செல்வந்தரின் கதைகளை மறந்துவிடாதிருங்கள் (லூக் 12:16-21; 16:19-31). பரலோக வங்கியில் பணம் சேமிக்கத் துவங்கிவிட்டீர்களா? இப்பொழுது அங்கு உங்கள் கணக்கில் எவ்வளவு இருக்கிறது?

## 9. பாடுகளும் இரண்டாம் வருகையும்

இயேசுவானவரது கடைசிப் பிரசங்கம் யோவான் 14,15,16ஆம் அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளது. துன்பங்களும் துக்கங்களும் நிறைந்த இவ்வுலகிலிருக்கும் நம்மைத் தேற்ற இப்பிரசங்கத்தில் நிகரற்ற வாக்குகளுண்டு. யோ 14:1-3, ''உங்கள் இருதயம் கலங்கவேண்டாம் ... என் பிதாவின் வீட்டில் அநேக உறைவிடங்கள் உண்டு ... உங்களுக்காய் ஓரிடத்தை ஆயத்தம்பண்ணப் போகிறேன் ... நான் இருக்குமிடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்!'' யோ 16:33. ''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் தைரியமாயிருங்கள்; நான் உலகின்மீது வெற்றிகொண்டுவிட்டேன்!'' இவ்விரு பகுதிகளும் இப்பிரசங்கத்தின் முதலும் முடிவுமான வார்த்தைகள் என்பது எத்தனை ஊக்கம்!

இவ்வுலகில் பாடுகளே இல்லாதவர் எவருமில்லை. இறைமக்களுக்கு அவை கூடுதலாகவே இருக்கும். கிறிஸ்துவானவர் தமது சிலுவை மரணத்தின் மூலம் நம்மை ''நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து'' மீட்டுவிட்டார் (கலா 3:13). ஆனால், நோய்கள், வேதனை மற்றும் மரணம் போன்றவற்றை உள்ளடக்கிய ''மனித விழுகையின் சாபத்திலிருந்து'' நாம் இன்னும் முழுவதும் விடுவிக்கப்படவில்லை (ஆதி 3:16-19). கிறிஸ்து திரும்ப வரும்போதுதான் இந்த உடலின் மீட்பாகிய விடுதலை நமக்குக் கிட்டும். இதைக் குறித்து அப்போஸ்தலன் பவுல் எழுதியிருப்பதைக் கவனியுங்கள்: ''நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரை படைப்பு அனைத்தும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்

படுகிறது. படைப்பு மட்டுமல்ல, நாம் ஆவியின் முதற்கனிகளைப் பெற்றிருந்தாலும் நமது சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வருவதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்'' (ரோ 8:22,23). பவுல் மேலும் சொல்வது: ''இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடம் வெளிப்படவிருக்கும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவை அல்ல'' (வச 18). இப்பொழுது அல்ல, நாம் புதிய வானம் புதிய பூமிக்குள் நுழையும்போதுதான் ''தேவன் நமது கண்ணீர் யாவையும் துடைப்பார்'' (வெளி 21:1-4). அதுவரை, நமது ''உடலிலுள்ள முள்'' எதுவாயினும் அவர் ''கிருபை'' நமக்குப் போதும்; நமது பலக்குறைவில் அவரது ''பலம்'' நம்மைத் தாங்கும் (2 கொரி 12:7-10).

தேவ பக்தியாய் நடப்பது, கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றுவது ஆகியவற்றிற்காகவும் நாம் பாடுபடவேண்டியதிருக்கும் (அப் 14;22; 2 தீமோ 3:12; மத் 10:16-22). ஆனால், இவற்றையெல்லாம் நாம் பொறுமையாய்ச் ''சகித்தால்,'' கிறிஸ்துவோடு நாம் ''அரசாளுவோம்'' (2 தீமோ 2:11,12). இரத்தசாட்சிகளாய் மாளுவோர் ''ஜீவ கிரீடமும்'' ''வெண்ணுடையும்'' பெற்றுப் பாராட்டப்படுவர் (வெளி 2:10; 6:9-11).

மனுக்குலத்தின் படுமோசமான எதிரி மரணம்தான். உங்களுக்கு அருமையான எவரையேனும் நீங்கள் இழக்கக் கொடுத்திருக்கலாம். துக்கிப்பது இயல்புதான். ஆனால் ''நம்பிக்கையில்லாதவர்களைப் போல'' நாம் துக்கிக்கக்கூடாது (1 தெச 4:13). நாம் எதிர்நோக்கியிருக்கும் நாள் இதோ: ''கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் இறந்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல்... எடுத்துக்கொள்ளப்படுவோம்.'' இவ்விதம் நமக்கு அருமையானவர்களோடு இணைக்கப்பட்டு ''எப்பொழுதும் கர்த்தருடன் இருப்போம்.'' இந்த வார்த்தைகளால் நாம் நம்மையும் பிறரையும் தேற்றிக்கொள்வோம் (வச 16-18).



## 10. ஆத்துமாதாயமும் இரண்டாம் வருகையும்

ஒவ்வொரு கிறிஸ்தவனின் அடிப்படை அழைப்பு மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதே (மத் 4:19). பிறரைத் திருத்தவே நாம் திருத்தப்பட்டோம். பிறரை ஆறுதல்படுத்தவே நாம் ஆறுதல் பெற்றோம். பிறரை ஆசீர்வதிக்கவே நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம். தனது சக மனிதருக்கு மோட்சம் செல்லும் பாதையைக் காட்டுவதைவிட உயரிய பணி கிறிஸ்தவனுக்குக் கிடையாது! நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறோம்; அவருடைய முதல் வருகையைக் குறித்தே கேள்விப்படாத கோடா கோடி மக்கள் உண்டே. பிரிய கிறிஸ்தவ நண்பரே, இவர்களுக்கு யார் பொறுப்பு? நீங்கள் பொறுப்பாளிகள் இல்லையென்றால், வேறு யார்?

கிறிஸ்து இன்று ''இரட்சகர்'' (1 தீமோ 1:15). நாளை அவர் ''நியாயாதிபதியாய்'' வருவார் (2 தீமோ 4:1). இன்றே மக்களுக்குக் கிறிஸ்துவை அறிமுகம் செய்யுங்கள். திருவிவிலியம் கூறும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுப்பதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த அவபக்தியான செயல்களுக்காகவும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசிய கடுஞ்சொற்கள் எல்லாவற்றிற்காகவும், அவர்களைத் தண்டிப்பதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு கர்த்தர் வருகிறார்'' (யூதா 14,15). இவர்களை இந்த ''அக்கினியிலிருந்து இழுத்து இரட்சிக்கும்படி'' நாம் செயலில் இறங்குவோம் (வச 22,23). கிறிஸ்தற்றோர் அழிவர், அழிந்தே போவர். பரலோகம் செல்ல ஒரே வழி கிறிஸ்துவே (யோ 14:6; அப் 4:12).

நீங்கள் எத்தனை ஆண்டுக் கிறிஸ்தவர்? இதுவரை கிறிஸ்தவரல்லாதோர் எத்தனை பேரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவந்திருக்கிறீர்கள்? ஆண்டுக்கு ஒருவரையாவது? உங்கள் அயலகம், சந்தை வெளிகள், கிராமங்கள், மருத்துவமனைகள், சிறைச்சாலைகள் இதுபோன்று எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் சென்று மக்களுடன் கிறிஸ்து

வின் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளுங்கள். போதை மருந்துகள், சீர்கெட்ட பாலிய நடத்தைகள், ஆபாசமான படங்கள், போன்றவற்றால் தங்களை அழித்துக்கொண்டிருக்கும் வாலிபர் நங்கையருக்கு நற் செய்திப்பணியாற்ற இளைஞர் இயக்கங்களோடு இணைந்து செயல் படுங்கள். கிறிஸ்து மட்டுமே இவர்களை இப்பாவக் கட்டுகளிலிருந்து விடுவிக்க முடியும் (யோ 8:34,36). சந்திக்கப்படாதோர், மந்தையில் சேராதோர், பின்தங்கியோர், ஒதுக்கப்பட்டோர், நசுக்கப்பட்டோர் போன்றோர் நடுவில் அருட்பணியாற்றும் மிஷனரி இயக்கங்களுக்கு வாரி வழங்குங்கள். இவ்வித மக்களிடம் மிஷனரிகளை நாம் அனுப்பி வைக்காவிடில் அவர்கள் அங்கு எப்படிச் செல்லுவார்கள்? (ரோ 10: 13-15). மேய்ப்பனில்லாத கோடிக்கணக்கான ஆடுகள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து சேரும்படி அவர்களுக்காய் மன்றாடுங்கள் (மத் 9:36-38; யோ 10:16).

சுவிசேஷத்தை அறிவிப்பதில் உங்களுக்கிருக்கும் தயக்கங்களி லிருந்து வெளிவாருங்கள். கிறிஸ்துவையும் அவரது வார்த்தைகளையும் குறித்து வெட்கப்படாதேயுங்கள் (ரோ 1:16). அவரது எச்சரிப்பைக் கவனியுங்கள்: ''விபசாரமும் பாவமுமுள்ள இத்தலை»முறையில் என் னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படு வானோ, அவனைக் குறித்து மனுமகனும் தமது பிதாவின் மகிமை நிறைந்தவராய் பரிசுத்த தூதரோடு வரும்போது வெட்கப்படுவார்'' (மாற் 8:38). அதே வேளையில் அவர் தந்துள்ள வாக்கைக் கவனியுங்கள்: ''ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்'' (யோ 12:26). பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னர் கிறிஸ்துவின் சீடர் சரியான கோழைகளாயிருந்தனர். பரிசுத்த ஆவி யானவர் அவர்கள்மீது வந்திறங்கியபோதோ, சுவிசேஷத்தைத் தைரிய மாய் முழங்க அவர்கள் வல்லமை பெற்றனர் (அப் 1:8; 4:31). உங்களைப் பரிசுத்த ஆவியால் நிரப்பும்படி கடவுளிடம் கேளுங்கள் (லூக் 11:13). ஆவியின் நிறைவைப் பெற்றுள்ளோருடன் சேர்ந்து ஜெபியுங்கள். பரிசுத்தாவியானவரின் வல்லமை மற்றும் வரங்கள் மூலம் நீங்கள்



வெற்றியுள்ள ஆத்துமாதாயகராய்த் திகழலாம். கிறிஸ்து திரும்ப வரும் போது, நீங்கள் ஆத்துமாதாயகருக் குரிய ''கிரீடத்தைப்'' பெற்றுக்கொள்வீர்கள் (1 தெச 2:19). இதோவொரு திருவாக்கு: தானி 12:3, ''அநேகரை நல்வழிக்குக் கொண்டுவந்தவர்கள் என்றென்றும் சதா காலமும் நட்சத்திரங்கள்போல் பிரகாசிப்பார்கள்!''

**சுருங்கக் கூறின் —**

1. பாவங்களிலிருந்து உண்மையாய் மனந்திரும்புங்கள்.
2. திருமறையைக் கிரமமாய்த் தியானியுங்கள்.
3. பரிசுத்தத்தில் சமரசமின்றி வளருங்கள்.
4. ஊக்கமாய், விழித்திருந்து ஜெபியுங்கள்.
5. ஒருவரோடொருவர் அன்புடன் வாழுங்கள்.
6. இறைமக்களோடு தாராளமாய் ஐக்கியப்படுங்கள்.
7. கடவுள் தந்த தாலந்துகளை உத்தமமாய்ப் பயன்படுத்துங்கள்.
8. ஏழை எளியவருக்குத் தயாளமாய் உதவுங்கள்.
9. பாடுகளைப் பொறுமையுடன் சகித்திடுங்கள்.
10. கிறிஸ்துவுக்காய்த் தைரியமாய்ச் சாட்சி பகருங்கள்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தேவனது பார்வையில் அவ்வளவு அருமையாயிருப்பதால் அவரது பிரசன்னமாகுதலை ''விரும்பும்'' யாவருக்கும்கூட அவர் ''நீதியின் கிரீடத்தைத்'' தந்தருளுவார் (2 தீமோ 4:8). அவரது வருகையை ''விரும்புவதுதான்'' அதற்காய் ''ஆயத்தப்பட'' நம்மை ஊக்குவிக்கும்! ஒரு வாக்குத்தத்தத்தோடும் வேண்டுதலோடும் பைபிள் முற்றுப்பெறுகிறது: வெளி 22:20,''மெய்யாகவே நான் சீக் கிரமாய் வருகிறேன்!'' ''ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்!''

**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல் ...**




# நாளொரு மேனி

## BETTER EVERYDAY

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும்...***
***அனைத்து வயதினரும்...***
***அனைத்துத் துறையினரும்...***
***விரும்பி வாசிக்கும்***
***ஒரு புதிய படைப்பு***

ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம், குஜராத்தி,
பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.

432 பக்கங்கள்
விலை ரூ. 200/-; அனுப்பச் செலவு ரூ. 100/-

கிடைக்குமிடம்:


R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
<stanleyonbible@hotmail.com> <evangelinestanley1@gmail.com>




**Daily Prayers**
**for deepening our communion with God**




# PRAYER EVERYDAY

by

**R. Stanley**

***366 Bible-based Prayers comprising of***
***Adoration, Confession & Intercession***
***covering 26 Subjects, from Salvation to Second Coming***

*Bible References at the foot of each day's Prayer*

*First of its kind!*

**Regular users of this book**
**will become better Worshippers and Intercessors!**

Available in English only.
Vernacular translations underway.

*400 Pages*
*Price Rs. 200/-; Forwarding Rs. 50/-; 30% discount for 10 or more copies*


R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943 (WhatsApp)*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangelinestanley1@gmail.com>>*

# Bible Foundation

Brother Stanley's <u>handwritten</u> notes
of 4 weeklong Study Programmes
of 1977, 1978, 1979 & 1984

**Genesis to Revelation**

*Subjects include Bible Introduction,
Bible Study Methods, Dispensations,
Covenants, Church History, Trinitarian Godhead,
Gifts & Ministries, Personal Sanctification,
Last Things, etc.*

4 Volumes, totally 400 pages of A4 size paper,
spiral-bound, including a Master Index Card.
Cased in an attractive paded rexin pouch.

*Ideal for personal studies,
Bible Study groups and classroom teaching.*

Suitable for both new believers
and mature Christians.

Price Rs. 500/- per Pack; forwarding Rs. 100/-

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>   <evangelinestanley1@gmail.com>*



# ''பைபிள் புதையல்கள்''
## Bible Treasures




by **R. ஸ்டான்லி**

ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்; உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/-; அனுப்பச் செலவு ரூ. 100/-
*ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும்
*ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், நேரடியாக இந்தியிலும்* உண்டு.

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

□

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!



# பைபிள் முத்துக்கள்

**Bible Pearls**

50 ஆண்டுகளுக்கும் கூடுதலான (1963-2016)
பிரசங்கப்பணியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட
200 பிரசங்கக் குறிப்புகள்

**R. ஸ்டான்லி**

*இப்பிரசங்கக் குறிப்புகள் 14 தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளன —*

*1. மனந்திரும்புதல் & இரட்சிப்பு*
*2. திருமறை & திருவுபதேசம்*
*3. கிறிஸ்தவ வாழ்வு*
*4. ஜெபம் & தொழுகை*
*5. எழுப்புதல் & ஆதிநிலையேகுதல்*
*6. நற்செய்தியறிவிப்பு & மிஷனரிப்பணி*
*7. திருச்சபை*
*8. பிரசங்கித்தல் & ஊழியம்*
*9. வேலை, சகவுறவுகள் & தலைமை*
*10. சிலுவை & பாடுகள்*
*11. குடும்பம்*
*12. இளைஞர்*
*13. நபர்கள் வாழ்க்கை & பொதுவானவை*
*14. இறப்பு & இரண்டாம் வருகை*

வசன அட்டவணை, பொருள் அட்டவணை,
கதாபாத்திரங்கள் அட்டவணை & மேற்கோள் அட்டவணை

1200 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 1000/-; அனுப்பச் செலவு ரூ. 100/-
*10 அல்லது கூடுதல் பிரதிகளுக்கு 30% தள்ளுபடி*
*முழுநேர ஊழியருக்கு 50% தள்ளுபடி*

*ஆங்கிலத்திலும் இந்தியிலும் உண்டு.*
*தெலுங்கு, கன்னட மொழியாக்கம் ஆயத்தத்தில் உள்ளது.*

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>* *<evangelinestanley1@gmail.com>*





# வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**Youth Revival Letters**

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
**1970-1990**

by **R. ஸ்டான்லி**

*☐ 160 இதயம் பேசும் கடிதங்கள் ☐*
*☐ 800 புகைப்படங்களும் வரைபடங்களும் ☐*
*☐ 30 எழுப்புதல் அறிக்கைகள் ☐*
*☐ 50 சவால் நிறை கட்டுரைகள் ☐*
*☐ 33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள் ☐*
*☐ 8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள் ☐*

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>* *<evangelinestanley1@gmail.com>*

## ஆசிரியரது பிற நூல்கள்

❒ அறிவூட்டும் அகவுணர்வுகள் (பக்கங்கள் 42)
❒ ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி? (பக்கங்கள் 32)
❒ ஆனந்த அறுவடை (பக்கங்கள் 196)
❒ இரட்சிக்கப்படுவது எப்படி? (பக்கங்கள் 32)
❒ இயேசுவின் அடிச்சுவடுகள் (பக்கங்கள் 144)
❒ இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்! (பக்கங்கள் 60)
❒ இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி? (பக்கங்கள் 220)
❒ உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள் (பக்கங்கள் 120)
❒ எதிர்நீச்சல் வாலிபர் (பக்கங்கள் 140)
❒ எழுப்புதல் வரும்போது ... (பக்கங்கள் 256)
❒ ஐந்தப்பம் இருமீன் (பக்கங்கள் 112)
❒ கண் திறக்கும் கட்டுரைகள் (பக்கங்கள் 240)
❒ கரோனா கதறல் (பக்கங்கள் 196)
❒ காட்டுத் தேன் (பக்கங்கள் 112)
❒ கீழ்ப்படிதலே மேல்படி! (பக்கங்கள் 92)
❒ சமநிலைக் கிறிஸ்தவன் (பக்கங்கள் 80)
❒ சிறு நரிகள் (பக்கங்கள் 56)
❒ திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்) (பக்கங்கள் 130)
❒ திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்) (பக்கங்கள் 160)
❒ தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா (பக்கங்கள் 112)
❒ நான் நிற்கும் கன்மலை (பக்கங்கள் 64)
❒ நெஞ்சில் நெருப்பு (பக்கங்கள் 136)
❒ பூர்வ பாதைகள் (பக்கங்கள் 148)
❒ பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்! (பக்கங்கள் 148)
❒ பொற்பழங்கள் (பக்கங்கள் 60)
❒ பைபிள் கேள்விகள் (பக்கங்கள் 228)
❒ பைபிள் பதில்கள் (பக்கங்கள் 256)
❒ பைபிள் பரிசுத்தம் (பக்கங்கள் 220)
❒ பைபிள் வல்லமை (பக்கங்கள் 356)
❒ பைபிள் வெற்றி (பக்கங்கள் 432)
❒ மாணவ மணிகளுக்கு ... (பக்கங்கள் 60)
❒ வல்லமை தேவனுடையது! (பக்கங்கள் 160)
❒ விசுவாச வாழ்வு (பக்கங்கள் 128)

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள். இப்புத்தகங்கள் ஆசிரியரிடம்
அல்லது கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும் —


Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*




# WWW

Word of God | Worship in Spirit | Work for Christ

**www.StanleyOnBible.com**

Here's a website that teaches you

*How to Study the Word of God*
*How to Worship God in the Spirit*
*How to Work for Christ*

through
Daily Devotionals, Letters, Articles, Books
and Audio & Video Talks,
in English, Tamil and several vernaculars.

All FREELY downloadable!

Rich in Biblical Content!
Sound in Doctrine!
Balanced in Emphasis!
Down-to-earth Practical!

***Visit today!***

YouTube: StanleyOnBible

# Sound Doctrine

With a burden to establish believers
in the Sound Doctrine of God's Word
and to help them
escape the floods of false doctrine,
**R. Stanley**
led a 5-day Sound Doctrine Seminar in 1997
and another two 3-day Seminars,
one in 2007 and the other in 2012.
These were in English with simultaneous translation
into Tamil, Hindi and a few other vernaculars
in various Indian cities.
The beneficiaries are standing firm in God's Word
against adverse winds of unbiblical stuff.
The total bilingual teaching hours were 50.
The ENGLISH track of these Lessons in the AUDIO format
is now separated to bless global listeners.
They are divided into 100 segments of
approximately 10 to 15 minutes each.
Beginning with 1 July 2021,
these Sound Doctrine Lessons will be sent
as one segment per day, through WhatsApp,
to those who send their numbers to —
00 91 98430 11943 or 88610 69962.

**(The complete Videos of Sound Doctrine Seminar I, II & III, English-Tamil, are available inYouTube: StanleyOnBible.)**



*முடிவு வரிகள் ...*

- ☐ இப்புத்தகத்திலுள்ள சத்தியங்களை நன்கு புரிந்துகொள்ளவும், அவற்றை உங்கள் வாழ்வில் பயிற்சிக்கவும் இதனை இரு முறையாவது வாசியுங்கள்.
- ☐ மொத்தமாய்ப் பிரதிகள் வாங்கி உங்கள் நண்பர்களுக்கு அன் பளியுங்கள். புரட்சியாளரான இயேசுவின் வாழ்க்கையைப் படிப்ப தன் மூலம் வாலிபர், நங்கையர் பெரும் சவாலடைவர். உங்கள் இல்லத்திற்கு வரும் கிறிஸ்தவ நண்பர்களை ஆசீர்வதிக்க இப்பிரதிகள் எப்பொழுதும் உங்கள் கைவசம் இருக்கட்டும்.
- ☐ ஆங்கிலத்திலும் தமிழிலும் முழுமையாக இப்புத்தகம் ஆசிரியரின் StanleyOnBible.com என்ற இணையதளத்தில் உண்டு. இலவ சமாய்ப் பதிவிறக்கம் செய்து உங்கள் நண்பர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.
- ☐ மாதிரிப் பிரதிகளை உங்களூரிலுள்ள கிறிஸ்தவப் புத்தகக் கடை களில் கொடுத்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இது கிடைக் கும்படிச் செய்ய அவர்களை ஊக்குவியுங்கள்.
- ☐ இப்புத்தகத்தின் மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொண்டால் ஆசிரியரும் அவரது குழுவினரும் ஊக்கமடைவர்.
- ☐ ஆசிரியர் எழுதி வெளியிடவிருக்கும் நூல்களுக்காய் ஜெபியுங்கள். 10 மொழிகளில் அவர் செய்யும் இலக்கியப் பணிக்காய் அவரது கரங்களை உங்கள் காணிக்கைகளினால் தாங்குங்கள். வங்கி விபரங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.